கடிதம் மூலம்

சமண தத்துவ அறிமுகம்

ஹிந்தி மூலம்
டாக்டர். **உஜ்வலா ஷா,** M.B.B.S., D.C.H., D.G.P.

தமிழாக்கம்
து. பூபாலன், B.E.,

கடிதத்தின் மூலம்

சமண தத்துவ அறிமுகம்

ஹிந்தி மூலம்

திருமதி. உஜ்வலா ஷா M.B.B.S., D.C.H., D.G.P.

தமிழாக்கம்

து. பூபாலன் B.E.,

வெளியீடு

ஸ்ரீ அகளங்கர் அநேகாந்த மன்றம்

5/82, 4வது தெரு, எஸ். ஆர். பி. காலனி

சென்னை 600082

முதல் பதிப்பு : ஜூலை 2019 - 1000 பிரதிகள்

விலை: ₹ 100

சாஸ்திர தானம் அளித்தவர்கள்:

1.	திரு.D.ஜீவா, திருமதி.ஜான்சி ஜீவா, சென்னை.	₹ 5000
2.	திரு.J.தேவசந்திரன், திருமதி.அனுராதா தேவசந்திரன். சென்னை.	₹ 5000
3.	திரு.மனோகரன், திருமதி.எஸ்ஸ்வதி, சென்னை.	₹ 2501
4.	சௌ.உமா சீமந்தராஜன், சென்னை.	₹ 2500
5.	திரு.V.A.பிரபாகரன், சென்னை.	₹ 2500
6.	திரு.K.A. சிம்மசந்திரன், திருமதி.சாந்தி சிம்மசந்திரன். சென்னை.	₹ 2000
7.	திரு.நாபிராஜ், திருமதி.விஜயலக்ஷ்மி நாபிராஜ். சென்னை.	₹ 1000
8.	திரு.விருஷபதாஸ், திருமதி.நாகசுந்தரி விருஷபதாஸ். சென்னை.	₹ 1000
9.	திரு. A.D.பூர்ணசந்திரன், திருமதி.கௌரி. பூர்ணசந்திரன் சென்னை.	₹ 500
10.	திரு. G.அப்பாண்டராஜன், திருமதி.மல்லிகா, சென்னை.	₹ 500
11.	திரு.பிருத்விசந்திரன், சென்னை.	₹ 500
12.	திருமதி. ஹேமமாலினி யூகிபிரசாத், சென்னை.	₹ 250
13.	திரு.கனகதாஸ், சென்னை.	₹ 250

அச்சிட்டோர்:
ஸ்ரீ பாலாஜி ஆஃப்செட்,
40, கார்த்திகேயன் சாலை,
பெரியார் நகர், சென்னை-600082.
போன்: 25505566, 94446 75566.

மூல நூலாசிரியரின் முகவுரை

சுருத பஞ்சமியின் மங்கல திருநாளில், ஸ்ரீ பூபாலன் ஜெயின் அவர்கள் **சமண தத்துவ அறிமுகம்** மற்றும் **ஜினாகமத்தில் காரண காரிய இரகசியம்** ஆகிய இரு நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு வேலையை சுருதபஞ்சமியான இன்று முழுமையாக முடித்து விட்டேன் என்ற நல்ல சுபச்செய்தியை தெரிவித்தார். அதோடு மட்டுமல்லாமல் அந்த நூல்களை அச்சிட்டு வெளியீடு செய்ய இருப்பதாகவுமான மகிழ்ச்சி தரும் செய்தியை கேட்டு என் உள்ளம் மகிழ்ந்தேன்.

இதுவரை நான் மராத்தியில் எழுதிய இந்த நூல்கள் இரண்டும் ஹிந்தி, குஜராத்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளிவந்து விட்டன. அந்த வெளியீடுகள் இதுவரை 10-10 முறை மீண்டும் மீண்டும் பதிப்பாகி விட்டன. இன்றும் இந்த புத்தகங்களுக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு அதிகரித்து கொண்டுதான் இருக்கிறது.

நம் இளம் வயது பெண்களுக்கு கடிதம் மூலம் சுவாத்யாயம் செய்யும் பொருட்டு தொடங்கிய இந்த நன் முயற்சியானது இவ்வளவு பிரம்மாண்டமான அளவில் உருவெடுத்தது இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஜெயினர்கள் மத்தியில் அதிக விருப்பத்துடனும் மிகுந்த உற்சாகத்துடனும் படிக்கும் அளவிற்கு இந்த நூல்களுக்கு வரவேற்பு இருக்கும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. இந்த நூல்கள் இன்றும் நூற்றுக்கணக்கான ஜெயின் ஸ்வாத்யாய வகுப்புகளில் படிக்கப் படுகின்றன. இதை படிப்பவர்கள், நாங்கள் சுயமாகவே இந்நூல்களை படித்த போதிலும், அவரவர்களுடைய அம்மாவே வந்து அவர்களுக்கு ஜினதர்மத்தை போதிப்பது போலவும், அதனால் அவைகளில் சொல்லப் பட்டிருக்கும் ஜெயின சித்தாந்த கருத்துக்களை அடித்தளத்திலிருந்தே எங்களால் எளிதாகப் புரிந்து கொள்ள முடிகிறது என்றும் கூறுகிறார்கள். இந்த புத்தகத்தை பட்டப்படிப்பு படித்தவர்கள் படித்துவிட்டு ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி போன்ற அறிவியல் புத்தகங்களை படிப்பது போல் இருகிறது என்று சொல்கின்றனர். உண்மையில் இந்த நூல்கள் வீதராக விஞ்ஞானத்தை நமக்கு போதித்து, நம்மை வீதராகி சர்வஞ்ஞனாக ஆக்க வல்ல ஆன்மீக அறிவியல் நூல்களே யாகும்.

1975-ல் நாங்கள் தர்ம சக்கர யாத்திரையில் இந்தியா முழுவதும் பயணம் செய்து அநேக வித்வான்களின் தொடர்பு கொண்டு தினமும் அவர்களின் சொற்பொழிவுகளின் லாபத்தை அடைந்தோம். அப்போதிலிருந்தே எங்களுடைய ஜெயின தத்துவ ஞான யாத்திரை தொடங்கியது. வெறும் கிரியாகாண்டம்-உடலால் செய்யும் செயல்களால், பூஜை, அர்ச்சனைகளால் மட்டுமே முக்தி மார்கம்-தர்மச்செயல்-அறச்செயல் தொடங்கி விடாது. ஆனால் உண்மையான தத்துவ உபதேசம் கேட்டு அவைகளை புரிந்து கொண்டு ஆத்மஞானம் பெருவதால்தான் தர்மலாபம் கிடைக்கத் துவங்குகிறது. உயிர் உண்மையான ஜெயினனாக ஆகிறது என்று ஞானிகளால் சொல்லப்பட்ட கருத்துக்களை புரிந்து கொண்டோம். பலமுறை பூஜ்ய காண்ஜி ஸ்வாமிகளின் கம்பீரமான சொற்பொழிவுகளையும் கேட்கும் பாக்கியம் பெற்றோம். மற்றும் பல அவருடைய சீடர்களான வித்வான்களின் சொற்பொழிவுகளையும் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் பல தத்துவப் பயிற்சி முகாம்களிலும் பங்கு கொண்டோம். ஆத்ம கல்யாணம் ஒன்றே மனித வாழ்க்கையில் சிறந்ததும் மற்றும் சாதிக்க வேண்டியதுமாகும். இதை நாங்கள் உறுதியாக ஏற்றுக் கொண்டோம். 1992-ல் நானும் என் கணவரும் தத்தம் தொழில்களை விட்டுவிட்டு முழு ஓய்வு பெற்றோம். தினமும் 8.30 மணி நேரம் சாஸ்திர ஸ்வாத்யாயங்களை செய்து வந்தோம். ஜின ஆகமங்களின் நூற்றுக்கணக்கான சாஸ்திரங்களை முழுமையாக ஸவாத்யாயம் செய்தோம்.

அப்போது ஒரு சிந்தனை உதித்தது. உலக வாழ்க்கையில் இளங்கலை, முதுகலை (bachelor and master degrees) படிப்பு பயிலும் இளைஞர்களுக்கு ஜெயின தர்ம சம்பந்தமான சொற்பொழிவு கேட்பதில் வெறுப்பும், நேரத்தை வீண் செய்வது போன்ற உணர்வும் இருப்பதை காண முடிகிறது. இது வயதானவர்களின் பொழுதுபோக்கு என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களுடைய நேரமில்லாத கல்லூரி வாழ்க்கையில், தர்ம விஷயங்களை கற்க நேரம் ஒதுக்குவது அவர்களுக்கு முட்டாள் தனமாகத் தெரிகிறது. அதனால் உண்மையான சாஸ்திர கருத்துக்களை கேட்பதற்கான வாய்ப்பை அவர்கள் இழக்கிறார்கள். அவர்கள் ஜின தருமத்தின் பெருமையையும், உண்மையான இன்பத்தை அடையும் வழியையும் தெரிந்து கொள்ள தவறி விடுகிறார்கள். அதனால்தான் நான் அவ்வாறான இளம் பெண்களை முக்கியமாக என் மகள்களை கவனத்தில் கொண்டு அவர்கள் மனமுவந்து தத்துவங்களை கற்கும் வகையில் கடிதம் மூலமாக புரிய வைக்கும் முயற்சியில் இறங்கினேன். இந்த முயற்சி எதற்கென்றால் பெரும்பாலும் தர்ம சபைகளில் வித்வான்களால் நடத்தப்படும் சொற்பொழிவுகளில் தான் சாஸ்திரங்களில் சொல்லப்படும் உயர்ந்த கருத்துக்கள் கேட்கக் கிடைக்கின்றன. ஆன்மீக சம்பந்தமான அடிப்படையான சொற்களின் அர்த்தங்களை புரிந்து கொண்டிராத நிலையில், பொதுவாக இளைஞர்கள் அந்த சபையில் அமர்ந்து அறம் கேட்க விரும்பாமல் அங்கிருந்து போய்விடுகின்றனர், அல்லது அங்கு செல்வதே யில்லை.

அதோடு மட்டுமல்லாமல் தாமாகவே சாஸ்திரங்களை படிக்கும்போது, அதில்வரும் பரிபாஷை சொற்களுக்கு சரியான அர்த்தம் புரியாததால், படிப்பவர்களுக்கு குழப்பம் வருகிறது. இக்குழப்பம் அதிகமாகும்போது சாஸ்திரத்தை மூடி வைத்து விட்டு படிப்பதையே நிறுத்தி விடுகிறார்கள். எனவே இந்த குழப்பங்களைத் தீர்க்க ஆகமங்களை A,B,C,D-ல் தொடங்கி படிப்படியாக நிலையை உயர்த்தி ஜெயின சித்தாந்தங்களை புரியவைக்கும் முயற்சியில் இறங்கினேன். முதலில் நான் எழுதும்போது சொற்கள் எல்லோரும் புரிந்து கொள்ளும் எளிய முறையில் வரத் தடுமாறின. ஆனாலும் விடாமுயற்சியுடன் முதலில் எழுதியவைகளை மீண்டும் திருத்தி எளிமையான சொற்களாக மாற்றி கடித வடிவமாக மாற்றம் செய்தேன். ஆனாலும் நான் ஒன்றும் பெரிய சாதனை செய்தாற்போல் எனக்கு தோன்றவில்லை. கட்டுரைகளை கடித வடிவில் எழுதியதால் எனக்குத்தான் பெரிய லாபம் கிடைத்தது. தனிமையில் தத்துவ சிந்தனைகள் இடைவிடாது என்னில் நிகழ்ந்தன. என்னுடைய அறிவானது நுணுக்கமாகவும், ஒருநிலை சிந்தனையும் வளர்ந்தது. தத்துவ நிர்ணயம் உண்டாகி சுபானுபவம் பெற்ற பிறகுதான் நான் எழுத/எழுதியவைகளை எளிமை படுத்த தொடங்கினேன். ஆகையால் அதில் எங்கும் சந்தேகமோ அல்லது முன்னுக்குபின் முறனான கருத்துக்களோ இல்லாமல் இருந்தன.

உலகப் புகழ்பெற்ற ஆன்மீக சிந்தனையாளர் டாக்டர். ஹுகும்சந் ஃபாரில் ஜினாகமத்தில் காரண காரிய இரகசிய நூல் வெளியீட்டு விழாவில் இவ்வாறு கூறினார் “இப்போது பெரும்பாலான எழுத்தாளர்கள் அனேக புத்தகங்களின் கருத்துக்களை அப்படியே எடுத்து தொகுத்து தன்னுடைய புத்தகமாக மாற்றி விடுகிறார்கள். ஆனால் டாக்டர். உஜ்வாலா ஷா என்பவரோ சாஸ்திரங்களை படித்து விட்டு அதன் மூல கருப்பொருளை தன் ஆத்ம சிந்தனையாக மாற்றி, எளிய முறையில் கடித வடிவில், தன் சொற்களின் மூலமாக இந்த நூலை உருவாக்கி யிருக்கிறார்கள்” என்று கூறினார்.

வணக்கத்திற்குறிய பண்டிட் ஹிதோஷீ என்பவரும் தம் “சன்மதி சந்தேஷ்” என்ற மாத இதழில் இப்புத்தகத்தின் விமர்சனத்தில் டாக்டர் உஜ்வாலா ஷா என்பவர் தம் நூலை தம் ஞாதா ஸ்வபாவ ஆன்மாவில் தோய்ந்து, அதிலிருந்து வந்த கருத்துக்களையே கடித வடிவில் இந்நூலை உருவாக்கி யிருக்கிறார் என்று எழுதி யிருக்கிறார்.

எது நடக்க வேண்டியதோ அது சகஜமான முறையில் நடந்து விடுகிறது. நான் தமிழ் மொழி அறியாதவள், ஆனாலும் ஸ்ரீ பூபாலன் ஜெயின் என்பவரின் நிமித்தத்தால், தமிழ் பேசும் பவ்யர்களான ஜெயின சமுதாயத்துடன் இணையும் வாய்ப்பு கிடைத்து விட்டது. தென்னிந்திய ஜெயின சமூகத்தில் குந்தகுந்தர், அகளங்கர், சமந்தபத்திரர், பூஜ்யபாதர் போன்ற மஹான் ஆசார்யர்கள் தோன்றியுள்ளார்கள். அவர்களுடைய அரிய நூல்களை அச் ஜெயின் சமூகம் நமக்கு காப்பாற்றி பாதுகாத்து இந்த காலத்தில் நம் கைகளில் கிடைக்கும்படி செய்துள்ளார்கள்.

அவ்வாறான மாஹா ஆகமங்களின் கருத்துகளைத்தான் இந்த கடிதம் மூலமாக இந்த நூல்களில் பிணைத்துள்ளேன். ஆகவே பரமாகமங்களை படிக்க என் புத்தகங்கள் உதவி புரியட்டும் என்பதே என் பாவனையாகும். ஒவ்வொரு உயிரும் தன் இயலபினை அறிந்து தத்துவ நிர்ணயத்துடன் தன் ஆத்மானுபவத்தை பெறவேண்டும் என்னும் தூய எண்ணமுமாகும்.

ஆன்ம நலம் விளைக !

உங்கள் அம்மா
டாக்டர். உஜ்வலா ஷா 11-06-2019

மூலநூல் பதிப்பாளர் முகஉரை

இரண்டு வார்த்தைகள் !

உண்மையில் நான் எதையும் எழுத விரும்பவில்லை, ஆனாலும் அனேகமுறை எழுதுமாறு திரு. பூபாலன் ஜீ ஜெயின் அவர்கள் பணிவுடன் கேட்டுக் கொண்டதால் எனக்கு எழுதும் எண்ணம் வந்து விட்டது. சமண தத்துவ அறிமுகம் மற்றும் ஜினாகமத்தில் காரண காரிய இரகசியம் ஆகிய இரண்டு நூல்களையும் என் மனைவி டாக்டர் உஜ்வலா ஷா எழுதினார்கள். அந்த புத்தகங்களை அச்சிட்டு வெளியிடும் பொருப்பு என்மீது வந்தது. இதை நான் ஜினவாணிக்கு சேவை செய்யும் ஒரு நல்ல வாய்ப்பாகவும் மற்றும் என் மனைவியின் மீதான மோஹத்தால் உண்டான பாசத்தின் காரணமாகவும் புத்தகங்களை அச்சிடும் பொருப்பை ஏற்றுக் கொண்டேன்.

புத்தகத்தை அச்சிட என்னென்ன வேலைகள் செய்யவேண்டும் என்பதை நான் கொஞ்சம்கூட ஆறியாமலிருந்தேன். ஆனால் எடுத்துக்கொண்ட வேலையை செவ்வனே செய்து முடிக்கவேண்டும் என்று ஒரு ஆவேசம் எனக்கு எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை. ஒரு பழமொழி சொல்வார்களே “தண்ணீரில் இறங்கினால்தால் நீச்சல் கற்றுக்கொள்ள முடியும்” என்று அதுபோல, புத்தகங்களை அச்சிட்டு வெளியிடும் நுணுக்கங்கள் எதுவும் தெரியாதவனாக இருந்த நான், அவ்விரண்டு நூல்களையும் நல்ல முறையில் அச்சிட்டு வெளியிடும் வேலையை மிகச் சிறப்பாக செய்து முடித்தேன். இந்த நூல்களை யார் படிக்கப் போகிறார்கள் என்று முதலில் நான் நினைத்தேன். ஆனால் நீங்கள் நம்ப மாட்டீர்கள், அந்த நூல்களை பார்த்துக் கொண்டிருக்கும்போதே சில வருடங்களில் மராத்தி, ஹிந்தி, குஜராத்தி, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளில் பல முறை ஆயிரக்கணக்கான நூல்கள் அச்சிடப்பட்டு விற்றுப் போயின.

நான் இங்கு விஷேசமாக கூறிக்கொள்வது யாதெனில் இந்த நூலை மாராத்தியிலும், ஹிந்தியிலும் எழுதியவர் என் மனைவி உஜ்வலா, ஆனால் யாரும் கேட்காமலேயே மற்ற இரு மொழிகளில் இந்த நூல்களை மொழிபெயர்ப்பு செய்ய வேறுவேறு நண்பர்கள் முன்வந்தனர். அவர்கள் செம்மையாக மொழிபெயர்த்து கொடுத்ததால், அந்த மொழிகளிலும் அச்சிட்டு புத்தகமாக வெளியிடும் காரியத்தை நானும் என் மனைவியுமாக இருவரும் செய்தோம். ஆனால் இங்கே என்ன வென்றால் யாரும் கேட்டுக்கொள்ளாமல் அவராகவே இந்த நூல்களை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்து அதனை அச்சிட்டு வெளியிடும் இரண்டு வேலைகளையும் செய்தவர் திரு. பூபாலன் ஜி ஜெயின் ஒருவரே என்பதை நாம் மறக்க வியலாது.

இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன், அதாவது என் மனைவி சௌ.உஜ்வலா ஷா அவரே மராத்தி மற்றும் ஹிந்தியில் சுயமாக எழுதினார். ஆனால் நாங்கள் எவரிடமும் கூறாமலேயே, மக்கள் தாமாகவே முன்வந்து குஜராத்தி மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து உதவினார்கள். அதுபோலவே தான் திரு. பூபாலன் ஜெயின் அவர்களும் தமிழில் அவராகவே மொழிபெயர்ப்பு செய்து அதை ஸ்ரீ அகளங்கர் அனேகாந்த மன்றம் வாயிலாக வெளியிட எங்களிடம் அனுமதி கேட்டுக் கொண்டார். இந்த நல்ல காரியத்திற்கு நாங்கள் எப்படி முடியாது என்று சொல்ல முடியும்? இந்த நூல்களை அச்சிட்டு வெளியிடும் copyright பதிப்புரிமை எங்களிடம்தான் இருக்கிறது என்று அவர் நினைத்தார் போலும்!

ஆனால் இதில் என் கருத்து யாதெனில் உண்மையான copyright உரிமை என்பது சர்வங்ஞ பரமாத்மாவிடம் தான் உள்ளது, ஏனெனில் அவருடைய ஓம்கார திவ்யத்தொணி வாயிலாகத்தான் இவைகள் வந்தன. அது அனேக ஆசார்யர்கள், வித்துவான்கள்-பண்டிதர்கள் மூலமாகவும், முக்கியமாக பூஜ்ய காண்ஜீ ஸ்வாமி அவர்களின் வழியாக இந்த ஜினதர்ம தத்துவங்கள் எங்களிடம் வந்து சேர்ந்தன. ஜினவாணியின் மீது-சாஸ்திரங்கள் மீது எங்களுக்கு மிகுந்த மதிப்பும், பணிவும், அன்பும் இருப்பதால் என் மனைவி உஜ்வலா எங்கள் இரண்டு பெண்களும், மற்றும் ஜினவாணியை தெளிவாக தெரிந்துகொள்ள ஆர்வமுள்ள பவ்யர்களும் படித்து தெளிவடையும் முறையில் எளிமையாகவும், சரளமாகவும் புத்தக வடிவில் இன்நூல்களை எழுதினார்கள். அவர் வித்திட்ட விதைதான் இப்போது ஆலமரம் போல் படர்ந்து விரிவாகி வளர்ந்திருக்கிறது,

நாங்கள் இருவரும் திரு.பூபாலன், இஞ்சினியர் அவர்களுக்கு எந்த மறுப்பும் கூறாமல் நூல்களை அச்சிட்டு வெளியிடும்படி கூறியதோடல்லாமல் அவரை பாராட்டவும் செய்கிறோம். அவர் எங்களிடம் இந்த நூல்களை பதிப்பித்து வெளியிட எந்த விதமான உதவி கேட்டாலும் நாங்கள் தக்க உதவிகளை அவசியம் செய்வோம். அவர் செய்து முடித்த வேலைகளின் பயனாக இந்த நூல்கள் இரண்டும் இப்போது தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் உங்கள் கைகளில் கிடைத்திருக்கின்றன. இவைகளை படித்து பயன் பெருவது இனி உங்களிடம்தான் இருக்கிறது.

பண்டிட். தினேஷ்பாய் ஷா 11-6-2019

157 / 9, நிர்மலா நிவாஸ்,
சயன்-கிழக்கு,
மும்பய் - 400022
போன்: 022 24073581
e-mail ujwaladinesh@yahoo.com
web site: www.jainsiddhant.org
YouTube id: dr ujwala shah
Facebook id: Dr Ujwala Shah

மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பாளர் முகவுரை

பொதுவாகவே நான் என் இளம் வயதிலிருந்தே ஜினதர்மத்தின் மேல் ஈடுபாடு கொண்டிருந்தேன். என் 40-தாவது வயதில் துந்துபி, மலர்மழை அஞ்சல்வழி தத்துவ கல்வி மூலம் ஜின தத்துவங்களை ஆழமாக தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டேன். என் பணி ஓய்வுக்கு பிறகு அதிக நேரம் ஆகமங்களை ஆழப் பயில்வதிலும், இருந்த இடத்திலிருந்தே நவீன தொழில் நுட்ப சமூக ஊடங்களான YouTube, மற்றும் Facebook உதவியோடு மஹான் ஆசாரியர்கள் மற்றும் தலை சிறந்த பண்டிதர்களின் தத்துவ சொற்பொழிவுகளை தேடித்தேடி கேட்பதிலும் சென்று கொண்டிருக்கிறது.

அதிஷ்டவசமாகவும் என் புண்ணிய உதயத்தின் காரணத்தாலும் இரண்டு வருடங்களுக்கு முன் பண்டிட். தினேஷ்பாய் ஷா மற்றும் டாக்டர் உஜ்வலா ஷா அவர்களின் பிரவசனங்கள் என் கண்களில் பட்டன. அன்றிலிருந்து அவர்களின் பிரவசனங்களை கேட்டல் என் தினசரி செயல்களில் முக்கியமானதாக இருக்கின்றது. அவர்களிடம் நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட அனைத்து நூல்களையும் வரவழைத்து அவைகளையும் ஸ்வாத்யாயம் செய்யத் தொடங்கினேன். அந்த சமயத்தில் ஜினாகமத்தில் காரண காரிய இரகசியம் தொடர் சொற்பொழிவு பண்டிட் தினேஷ்பாய் ஜீ பிரதி ஞாயிறு மாலை 3 மணி முதல் 4.30 வரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அந்த பிரவசனங்களை கேட்டு தமிழில் குறிப்பு எடுக்கத் துவங்கினேன். அதை கேட்கும்போது பலமுறை அவர் ஜெயின் தத்துவ பரிச்சயம் புத்தகத்தில் வரும் கருத்துக்களை மேற்கோள் காட்டுவார். அதனால் அந்த புத்தகத்தையும் அவ்வப்போது படித்து தமிழில் குறிப்புகள் எடுப்பது தினசரி வழக்கமானது.

அந்த குறிப்பெடுப்பதால் எனக்கு தத்துவ சிந்தனை செய்யவதும் அதைப்பற்றியே அடிக்கடி நினைவு கூறுவதும் என்னில் நிகழ்ந்து கொண்டிருந்தது. அந்த இரண்டு புத்தகங்களை படித்து குறிப்பு எடுக்கும் காரியம் சில நாட்களுக்கு முன் முடிந்தது. இதை புத்தகமாக கொண்டு வந்தால் சந்தேகம் வரும்போதெல்லாம் அடிக்கடி எடுத்து பார்க்க உதவியாக இருக்கும் என்று எண்ணி, இந்த புத்தகங்களை வெளியிட அனுமதியும், அவர்களின் முகவுரைகளையும் கேட்டு திரு. தினேஷ்பாய் ஷா மற்றும் டாக்டர் உஜ்வலா ஷா அவர்களிடமும் இந்த வருட சுருதஞ்சமி அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். இப்போது அந்த இரு மஹான் தம்பதிகளையும் உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன், வாருங்கள்!

திரு. தினேஷ்பாய் ஷா M.A., L.L.B. மற்றும் டாக்டர் உஜ்வலா ஷா M.B.B.S. , D.C.H., D.G.P. தம்பதிகள் இருவரும் பம்பாய் சயானில் வசிக்கும் மராட்டிய திகம்பர சமணர்களாவர். அவர்கள் 1972-ல் கும்போஜி பாஹுபலிக்கு புகைப்பட தொகுப்பு எடுக்கச் சென்றபோது பரம பூஜ்ய ஆசார்யஸ்ரீ சமந்தபத்திரர் இவர்களை ஆகம ஸ்வாத்யாயம் செய்யும்படி ஊக்கமளித்தது ஆசிர்வதித்தார். பின்னர் 1975-ல் பண்டிட் பாபுபாய் ஜீ மேதா ஏற்பாடு செய்த 100 நாட்கள் சித்த சக்கர யாத்திரையில் கலந்து கொள்ளும் பாக்கியம் இவர்களுக்கு கிடைத்தது. அந்த யாத்திரையில் தினந்தோறும் வித்வான்களின் பிரவசனம் கேட்கும் பாக்கியத்தையும் இவர்கள் பெற்றனர். அப்போதுதான் இவர்கள் தாங்கள் இருவரும் மூன்று டிகிரிகள் பெற்ற லௌகிக கல்வியறிவு தங்களுக்கு இருந்தும், ஆகம அறிவில் அவர்கள் அஞ்ஞானிகளாக இருப்பதை உணர்ந்தனர். தத்துவ கல்வியின் முன் நாம் படித்த லௌகீக கல்வி எம்மாத்திரம் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. முறையான தத்துவ ஞானம் பெற வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு வந்தது.

1992-ல் அவர்கள் இருவரும் தங்களுடைய மிக லாபகரமான Photography மற்றும் Doctor தொழில்களிலிருந்து அவர்களாகவே கட்டாய ஓய்வு எடுத்துக் கொண்டு, முழு நேரமும் ஸ்வாத்யாயத்தில் ஈடுபட்டனர். அந்த சமயம் அவர்களின் இரண்டு மகள்களில் மூத்தமகள் ரீனா திருமணம் செய்துகொண்டும் மாமியார் வீட்டுக்கும், இளையமகள் மோனா கல்லூரி படிப்புக்காக ஹாஸ்டலுக்கும் சென்றுவிட்டனர். இது அவர்களுக்கு சுவாத்யாயம் செய்ய மேலும் வசதியாக அமைந்தது. அவர்கள் இருவரும் ஸ்வாத்யாயம் செய்து கொண்டு இருக்கும்போதே ஷோலாபூரில் இருந்து வெளிவரும் ஸ்ராவிகா என்ற மாராட்டிய பத்திரிக்கைக்கு தத்துவம் விஷயமாக உஜ்வலா ஷா அவர்கள் ஒரு கடிதம் எழுதினர். அது அந்த பத்திரிக்கையில் பிரசுரமானது. அப்போது பிரம்மசாரிணி வித்துல்லதா ஜி அவர்கள் தொடர்ந்து எழுதும்படி ஊக்கிவித்தார்கள். இந்த கடிதங்கள் பலராலும் வரவேற்கப் பட்டன. பின்னர் இந்த கடிதங்கள் ஜெயின் தத்துவ பரிச்சை(அறிமுகம்) மற்றும் ஜினாகமத்தில் காரண காரிய இரகசியம் என்ற இரண்டு புத்தகமாக மராத்தி மொழியில் வெளிவந்தன. இது இரண்டும் மேலும் ஹிந்தி, குஜராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்து பெரும் வரவேற்பைப் பெற்றன.

இப்போது நம் விஷயத்திற்கு வருவோம். இந்த இரண்டு புத்தகங்களையும் தமிழில் வெளியிட அவர்கள் எனக்கு அனுமதி கொடுத்ததோடு மட்டுமல்லாமல் இருவரும் சிறப்பாக முகவுரைகளையும் எழுதி அனுப்பினர்கள். என்னுடைய இந்த முயற்சியை பாராட்டியதோடு அல்லாமல் இந்த நூல் வெளியிடுவதில் எந்த உதவி வேண்டுமானாலும் செய்ய தயாராக இருப்பதாக கூறினார்கள். அவர்களுடைய இந்த பெருந்தன்மையையும், தாராள மனதையும் பார்த்து எனக்கு அளவிலா ஆனந்த முண்டானது. எனக்கு இந்த நூல்களை வெளியிட அனுமதித்து, முகவுரைகள் எழுதி அனுப்பியதற்கு அவர்கள் இருவருக்கும் என் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் கூறி பிரசுரிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

இதை கேள்வியுற்ற என் நண்பர்கள் பலர் இந்த நூல்களை பதிப்பிடும் முயற்சியில் அவர்களுடைய பங்கும் இருக்க வேண்டும் என்று கூறி சாஸ்ரதானமாக அவர்கள் பங்குகளை அனுப்பி என்னை ஊக்கப்படுத்தினர். அவர்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த சாஸ்திர தானத்தையும் நூல்களில் அச்சிட்டுள்ளேன். கேட்காமலே சாஸ்திர தானமளித்த எல்லா நண்பர்களையும் பாரட்டுவதோடு என் மனமார்ந்த நன்றியையும் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூல்களின் மொழிபெயர்ப்பின் போது எனக்கு பேருதவியாக இருந்த என் மனைவிக்கும் (என்னை விட அவர்களுக்கு ஹந்தி நன்றாக தெரியுமாதலால்), மூல நூலாசிரியர் மற்றும் மூல பதிப்பாளர் ஹிந்தி முகவுரைகளை ஒரே நாளில் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து உதவிய முனைவர் வி.தனகுமார் ஜெயின் சாஸ்திரியார் அவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூல்களின் அட்டைப்படத்தை அருமையாக அமைத்துத்தந்து, நூல்களை மிகச் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் அச்சிட்ட ஸ்ரீ பாலாஜி ஆப்செட் நிறுவனராகிய திரு.சுப்பையா அவர்களுக்கும் என் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூல்களின் மொழிபெயர்ப்பு முழுக்க முழுக்க டாக்டர் உஜ்வாலா ஷா அவர்களின் கருத்துக்களும், மொழிநடையும் அப்படியே இருக்குமளவுக்கு மிகுந்த கவனத்துடன் செய்திருக்கிறேன். எங்கு மேலும் கொஞ்சம் விளக்கினால் நன்றாக புரியும் என்று தோன்றிய இடத்தில் இந்த [ ] குறியீட்டுக்குள் சிறிய எழுத்துக்களில் என் ஷயோபசம ஞானத்திற்கு தெரிந்த அளவில் கொடுத்திருக்கிறேன். இந்த நூலில் பவ்யர்கள் ஏதாவது தவறு கண்டால் எனக்கு தெரியப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், திருத்தி வாசித்துக் கொள்ளவும் என்று

பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அருமுயற்சியின் காரணமாக வெளிவந்துள்ள இந்த நூலை தமிழ் பவ்ய சமணர்கள் படித்து ஆன்ம நலம் பெற வேண்டும் என்ற பாவனையுடன்,

து. பூபாலன்
5/82, 4வது தெரு,
எஸ் ஆர் பி காலனி,
சென்னை.
போன்: 984 044 8643

30-06-2019

பொருளடக்கம்

1. தத்துவ அறிமுகம் 13
2. உண்மையான கடவுளின் வடிவம்-ஸ்வரூபம் 18
3. தத்துவப் பயிற்சியின் பெருமை 24
4. ஜினாகமங்களில் பொருள் காணும் வழிமுறை 30
5. பிரபஞ்சத்தின் வடிவம்-ஸ்வரூபம் 38
6. திரவியத்தின் ஸ்வரூபம்-பொருளின் தன்மை 45
7. குணத்தின் இயல்பு-பண்பின் தன்மை 53
8. பர்யாயத்தின் ஸ்வரூபம் 58
9. புத்கலத்தின் ஸ்வரூபம் 63
10. அஸ்தித்வ குணம் 67
11. வஸ்த்துத்வ குணம் 72
12. திரவ்யத்வ குணம் 76
13. பிரமேயத்வ குணம் 81
14. அகுருலகுத்வ குணம் 88
15. பிரதேசத்வ குணம் 95
16. புத்கலத்தின் விஷேச குணங்களும், பர்யாயங்களும் 102
17. உயிரின் விஷேச குணங்களும், பர்யாயங்களும் 107
18. உயிரின் ஒழுக்க-சாரித்ர குணமும், பர்யாயங்களும் 114
19. உபயோகமுள்ள தத்துவம் 120
20. ஏழு தத்துவங்களின் ஸ்வரூபம் -1 126
21. ஏழு தத்துவங்களின் ஸ்வரூபம் - 2 131
22. ஏழு தத்துவங்கள் பற்றிய தவறான நம்பிக்கை-1 136
23. ஏழு தத்துவங்கள் பற்றிய தவறான நம்பிக்கை-2 142
24. ஏழு தத்துவங்களில் உண்மையான நம்பிக்கை-1 147
25. ஏழு தத்துவங்களில் உண்மையான நம்பிக்கை-2 153
26. ஏழு தத்துவங்கள்-பேதவிஞ்ஞானம் 159
27. ஏழு தத்துவங்கள்-ஆத்மானுபூதி 166

கடிதம்-1 11-5-1993

தத்துவ அறிமுகம்

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நீங்கள் இருவரும்-ஒருவர் திருமணம் செய்து கொண்டும் ஒருவர் கல்லூரியில் மேல் படிப்பிற்காகவும் எங்களை விட்டு சென்று விட்டீர்கள். மோனா, நீ கல்லூரி விடுதிக்கு சென்ற பிறகு முதன்முதலில் உன்னுடைய உணவு பற்றி, நீ வீட்டை விட்டு தனிமையில் வாழ வேண்டிய நிலை பற்றி, நீ அங்கு எப்படி உன்னை மாற்றிக் கொள்ளப் போகிறாய் என்பது பற்றி எனக்கு பலவிதமான கவலைகள் இருந்தது. இப்போது அந்த கவலை இருக்கவில்லை. இப்பொழுதெல்லாம் நீங்கள் இருவரும் இருக்குமிடத்தில் பல தர்மத்தை நம்புபவர்கள், மற்றும் பல மதத்தை சார்ந்தவர்களுடன் பழக சந்தர்ப்பம் இருப்பதால், உண்மை எது என்பதை தெரிந்து கொள்வதில் நீங்கள் தெளிவாக இருக்கிறீர்களா என்று ஒரே சிந்தனையாக இருக்கிறது. அவர்களின் நம்பிக்கை, அவர்களின் பக்தி மற்றும் மூட பழக்கங்கள் முதலியன உங்களின் மேல் தாக்கத்தை, பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

இந்த நிலையில் சனாதன சத்ய தர்மம் எது? என்பதை உங்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற எண்ணம் வருகிறது. நம் குடும்ப மரபு, கொஞ்சம் தத்துவம் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கு குழந்தை பருவத்திலிருந்தேயே இருந்தது. இதன் மூலம் நமது தர்மம், நமது கடவுள், நமது குல ஒழுக்கம் இப்படித்தான் என்று தெரிந்து கொண்டு அவைகளே மதிக்கத் தக்கது மற்றும் மேன்மையானது என்று உங்களுக்கு தோன்றியிருக்கும். ஆனால் இப்போது அவைகள் உண்மையில் தகுதியுள்ளதா, ஏற்புடையதா இல்லையா, தத்துவ ஞாயத்திற்கு உட்பட்டதா இல்லையா என ஆராய்ந்து தெளிவாக புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். உங்கள் இருவரின் நிமித்ததால் இதை எழுத தொடங்கி இருக்கிறேன். எந்த தர்ம லாபம் எங்களுக்கு கிடைத்ததோ மற்றும் கிடைத்துக் கொண்டு இருக்கிறதோ அது உங்களுக்கும் உங்களைப் போன்றே தெரிந்து கொள்ள அதிக ஆர்வமுள்ளவர்களுக்கும் கிடைக்கட்டும் என்பதே என் விருப்பமாகும்.

எல்லாவற்றிற்கும் முதலில் ஈஸ்வரன் அதாவது பகவானின்-கடவுளின் இயல்பு பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு தெய்வ தன்மையுள்ள சக்தி இருக்கிறதா அல்லது சக்தி வாய்ந்த மனித தோற்றமுடைய யாராவது இருக்கிறார்களா? என்பதை தெரிந்து கொள்ள கொஞ்சம் அடிப்படையான விஷயங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். உயிர்-ஆத்மா-ஜீவன் எல்லாம் பொதுவாக ஒரு பொருள் கொண்ட சொற்களே. நீ, நான், மற்றும் எல்லா உயிர்களும் தெரிந்து கொள்ளக் கூடிய காரியத்தை செய்கின்றன. சுக துக்கங்களை அனுபவம் செய்கின்றன. எது தகுதியானது, எது தகுதியற்றது என்பதை உறுதி செய்கின்றன. இது எனக்கு புரியவில்லை அல்லது இது எனக்கு புரிகிறது என்று சொல்கின்றன. இவ்வாறு பல விஷயங்களை எது தெரிந்து கொள்கிறதோ அதுவே உயிராகும்.

இந்த உயிருக்கு உடலுடன் என்ன சம்பந்தம் இருக்கிறதோ அல்லது எந்த இரண்டிலும் ஒரே நேரத்தில் சம்பவம் நிகழ்கிறதோ இந்த ஒன்றியத்தை (உயிர், உடல் கலப்பை) உயிருடைய பிராணி என்று சொல்கிறோம். இங்கே பாருங்கள் உயிரியல் வல்லுனர்கள் கூட இதை உயிருடையது என்றே கூறுகின்றனர், உயிர் என்று சொல்ல வில்லை. எது உயிர்

உடன் இருக்கிறதோ அது உயிருடையது. உயிர் சேதனம்-அறியும் தன்மை உடையதாகும். அதாவது எந்த பொருளுக்கு அறியும் தன்மை இருக்கிறதோ அதை உயிர் என்று சொல்கிறோம். உடல் அறியும் தன்மை இல்லாதது-அசேதனமாகும்-ஜடமாகும். உடலில் அறிவு இல்லை, உடலால் சுக துக்கத்தை அனுபவம் செய்ய முடியாது, இன்ப துன்ப உணர்வை பெறுவது உயிரே. உயிர் உடல் தொடர்பின் ஆரம்பத்தை பிறப்பு என்கிறோம். இந்த உயிர் உடல் தொடர்பு ஒரு குறிப்பிட்ட காலம்வரை மட்டுமே இருக்கிறது. இந்த சம்பந்தம் முடிவுக்கு வரும்போது அதை நாம் மரணம் என்று சொல்கிறோம். பாருங்கள், உயிர் உடல் சம்பந்தம் முடிவடைந்தாலும், உயிருக்கு முடிவு வரவில்லை, அசேதனமான உடலின் பரமாணுக்களுக்கும் முடிவு வரவில்லை. மரணத்திற்கு பிறகு இந்த உயிருக்கு வேறு புதிய உடலுடன் சம்பந்தம் உண்டாகிறது, அதை வேறு பிறவியில் பிறத்தல் என்கிறோம். பிறந்ததிலிருந்து மரணம் வரை வாழ்க்கை அதாவது ஆயுள் இருக்கிறது, இதை பவம் அல்லது பிறவி என்கிறோம். மனித நோக்கில் நாம் இதை **மனித பவம்** அல்லது **மனித பிறவி** அல்லது **மனித பர்யாயம்** என்கிறோம்.

பர்யாயம் என்றால் அவஸ்தை அல்லது நிலை எனலாம். இது உண்மையில் உயிரின் அவஸ்தை இல்லை, ஆனால் **உயிர்+உடல்** தொடர்பின் சம்பந்தத்தால் உண்டான அவஸ்தை. இந்த கலப்பு நிலையின் இயல்பு, தூய உயிர் திரவியத்தின் இயல்பிலிருந்து வேறானது. இத்த கலவையில் உள்ள உயிர் இருக்கிறதே அது தான் அறியும் தன்மை உடையது, தெரிந்து கொள்ளும் வேலையை செய்வது. இந்த உயிர் தன் தனித் தன்மையை அதாவது இதன் சிறப்பான தூய குண இயல்பை தெரிந்து கொள்ளாமல், தொடர்பின் நிலையையே தன் நிலையாக எண்ணுகிறது, உயிர் உடல் கலவையின் தன்மையையே தன் தன்மையாக எண்ணுகிறது. கவனமாக பாருங்கள், அது நம்புகிறது ஆகையால் அப்படியே ஆகிறது என்பதில்லை, ஆனால் அதன் தவறான-விபரீதமான நம்பிக்கைக்கு உகந்தார்போல் அதன் அறியும் தன்மையும் விபரீதமாக மாறிவிடுகிறது, அதன் ஒழுக்கமும் விபரீதமாக ஆகிவிடுகிறது. இதைத்தான் சாஸ்திரத்தில் **மித்யாதர்சனம்**, **மித்யாஞானம்**, **மித்யாசாரித்ரம்** (மூடநம்பிக்கை, தீயஅறிவு, தீயஒழுக்கம்) என்று கூறுகின்றனர். அந்த காரணத்தால் நுணுக்கமான கார்மண பரமாணுக்கள் ஆத்மாவிடம் வந்து பந்தித்துக் கொள்கின்றன. இந்த கர்ம சித்தாந்தம் பற்றி உங்களுக்கு புரியும்படி பின்னர் சொல்கிறேன்.

அஞ்ஞானி உயிர், உயிர்-உடல் சம்பந்த நிலையையே தான் என்று நம்புகிறது, ஆனால் கண்ணுக்கு தெரியக்கூடிய உடலையே தான் என்று எண்ணுகிறது. இந்த தவறான கற்பனை, உயிருக்கு பிறவியிலிருந்தே இருக்கிறது. உடல் சிகப்பாக இருந்தால் தான் சிகப்பாக இருப்பதாகவும், உடல் உயரமாக இருந்தால் தான் உயரமாக இருப்பதாகவும், உடல் ஒல்லியாக இருந்தால் தான் ஒல்லியாக இருப்பதாகவும், உடலில் நோய் இருந்தால் தான் நோயாளி எனவும், உடலின் தொடர்பால் தான் பிறந்ததாகவும், உடலின் தொடர்பு விடுபடுவதை தன் மரணமாகவும், உடலுக்கு சாதகமான பொருளில் சுகம் இருப்பதாகவும் பலவிதமான மூட கற்பனைகளின் வாழ்கிறது. இந்த காரணத்தால் உயிர் உடலுக்கு சாதகமானதாக சொல்லப்பட்ட சுகபோக பொருள்களை அடைவதில் பெருமுயற்சி செய்கிறது. இதனால் பணம் சம்பாதிக்க இரவும், பகலும் கடினமான உழைப்பை ஏற்று துன்பப் படுகிறது. நீங்கள் இருவரும் விஞ்ஞானம் படிக்கும் மாணவர்கள் ஆகையால் உங்களுக்கு இரசாயணத்தில்-chemistry-ல் ஒரு உதாரணத்தின் சொல்கிறேன். விஞ்ஞானம் படிக்கும் மாணவர்களும் மற்றும் அறிவார்ந்த புத்திசாலிகளும் தத்துவ கோட்பாடுகளை சுலபமாகவே புரிந்து கொள்கிறார்கள். அவர்கள் மேலும் அதை ஆழமாக தெரிந்து கொள்ளவதில் ஆர்வம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஜின தர்மம் உண்மையில் நிலையான பொருள்களின்-திரவியங்களின் விஞ்ஞானமாகும், அதாவது நிலையான பொருள்களின் உண்மையான இருப்பு பற்றிய அறிவு தருவதாகும். பௌதீக விஞ்ஞானத்தில் நாம் கண்களுக்கு புலப்படும் பொருள்களை, matter-ஐ அதாவது புத்கலத்தை பற்றி மட்டுமே ஆராய்ந்து தெரிந்து கொள்கிறோம். ஆனால் ஜின தர்மத்தில் கூறப்படும் ஆறு மெய்ப் பொருள்களில் புத்கலம் என்பது ஒரு திரவியம் மட்டுமே. ஆறு திரவியங்களில் உயிரும் ஒரு திரவியமாகும். சமண தத்துவ விஞ்ஞானத்தில் இந்த ஆறு திரவியங்களின் இயல்பு-ஸ்வரூபம்-வடிவம் பற்றி தெளிவாக சொல்லப் பட்டிருக்கிறது. முக்கியமாக உயிர் திரவியத்தின் இயல்பு மிக விரிவாக விளக்கப்பட்டு, நமது தூய உயிரின் இயல்பை-ஸ்வரூபத்தை எப்படி அனுபவம் செய்ய வேண்டும் என்பதும் சொல்லப் பட்டிருக்கிறது. நான் தானாகவே, யார் உதவியும் இல்லாமல் இயங்குகிற தனி உயிர் பொருளாகும் ஆகையால், என்னுடைய இயல்பு அல்லது வடிவம் எது என்பதை அறிந்து கொள்வதில் எனக்கு அதிக ஆவல் இயல்பாகவே இருக்கிறது. குழந்தை பருவத்தில் அனாதை ஆசிரமத்தில் விடப்பட்ட ஒருவருக்கு தன் அம்மா, அப்பா கிடைத்தால் எவ்வளவு ஆனந்தம் அடைவாரோ அவ்வளவு ஆனந்தமும் உற்சாகமும் நம்முடைய இயல்பை பற்றி படிப்பதிலும், கேட்பதிலும் நமக்கு வருகிறது.

இப்போது நாம் ஒரு உதாரணம் மூலம் இதை புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம். தண்ணீர் H2O என்பது மூலப் பொருளான ஹைடிரஜன் வாயு இரண்டு பங்கும் ஆக்ஸிஜன்-ப்ராணவாயு ஒரு பங்கும் கொண்ட இரசாயண முறையில் சேர்த்த ஒரு தனிப் பொருளாகும். இதில் ஆக்ஸிஜனின் குணமும்-தர்மமும் தண்ணீரின் குணமும்-தர்மமும் வேறு வேறாக இருப்பதை நம்மால் உணர முடிகிறது. நாம் ஆக்ஸிஜனின் குணத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்றாலும் அதை தண்ணீரில் இருந்து பிரித்து எடுக்க வேண்டும் என்றாலும் முதன்முதலில் அவைகள் தனித்தனி குணங்கள் கொண்டவை என்பதிலும், அதை பிரிக்க முடியும் என்பதிலும் நமக்கு முழு நம்பிக்கை இருக்க வேண்டியது அவசியம். தண்ணீரில் இருந்து ஆக்ஸிஜனை பிரிப்பது எப்படி என்பதையும் அதன் குணங்கள் பற்றியும் இரசாயண வல்லுனர்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். சுத்த ஆக்ஸிஜன் கிடைக்க எந்த மாதிரி செயல் முறையை செய்ய வேண்டும் என்பதை அறிந்து அதில் பயிற்சி செய்ய வேண்டும். மேலும் அந்த செயல் முறைப்படி சரியாக செய்தால் சுத்த ஆக்ஸிஜனை நம்மால் பெறமுடியும்.

அதேபோல உயிர்+உடல் இரண்டும் சேர்ந்த கலவையே உயிருள்ள பொருள் ஆகும். அந்த உயிருள்ள பொருளின் குணமும், தூய உயிரின் குணமும் வேறு வேறாகும். இந்த உயிர் பொருளில் இருந்து தூய உயிர் தனியாக ஆக முடியும். எந்த உயிர் அப்படி பிரிந்து முழு சுத்தமானதோ அப்படிப்பட்ட தூய உயிரின் வழிகாட்டுதலின்படி (தற்கால நிலையில் அவர்களினின் வழி வந்த ஆகமங்கள் படி) முதலில் சுத்த உயிர் பதார்தத்தின்-பொருளின் குண தர்மங்களையும் அதாவது இயல்புகளையும் அதை எப்படி அடையாளம் காண வேண்டும் என்பது பற்றியும் ஆகமங்களில் படித்து அறிந்து கொள்ள வேண்டும். தூய உயிரை, உயிர் பொருளிலிருந்து பிரிக்க முடியும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆகமங்கள் காட்டும் வழியில் பயிற்சி செய்து நம் தூய உயிரை அறிந்து அனுபவம் செய்ய வேண்டும். இதை ஒவ்வொரு உயிரும் தானே சுயமாகவே செய்ய வேண்டும், வேறு ஒரு உயிர் நம் உயிரை சுத்தம் செய்ய முடியாது. எப்பொழுது இந்த அனுபவம்-மெய்யாக உணர்தல் நிகழ்கிறதோ அதையே சம்யக்த்வம் அடைதல் அதாவது நற்காட்சி-யதார்த்த சிரத்தை-உண்மையான ஈடுபாடு, நன்ஞானம், நல்லொழுக்கம் அடைதல் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட உயிர், தானாகவே எப்போதும் அது வசிக்கும் உடம்பிலிருந்து வேறானது என்பதை தெளிவாகவும், உறுதியாகவும் அறிந்து தன் உயிரை அனுபவிக்கும், மேலும் தன் ஆன்மாவிலேயே நிலையாக இருப்பதை மீண்டும் மீண்டும் செய்த வண்ணம் இருக்கும்.

ஆத்மாவில் நிலைத்தல் அதிகரித்து ஸ்ராவக நிலை அல்லது முனி நிலைகளை ஏற்று ஆன்ம முன்னேற்ற மடையும்.

மேலே கூறிய இந்த நிலை ஒரு கூட்டு நிலையாகும், கூட்டு நிலை அசுத்த நிலையாகும். இந்த கூட்டு நிலையிலும், உயிருக்கு (தனக்கு) அதன் தூய நிலையில் முழு நம்பிக்கை மற்றும் மெய் உணர்தல்-self Realization ஏற்பட்டு விட்டது. எப்படி ஒரு திருமண நிச்சயமான பெண் தன் அம்மாவின் வீட்டில் இருந்தாலும், நிச்சயமாகும் முன் இது என் வீடு என்று நினைத்தது போல இப்போது நினைக்க மாட்டாள் அல்லவா அதுபோல, அல்லது வாடகை வீட்டில் வசிக்கும் ஒருவர், அந்த வீட்டில் இப்போது வசித்தாலும், அந்த வீட்டை தன் சொந்த வீடாக நினைக்க மாட்டார் அல்லவா அதுபோலவே, பேத விஞ்ஞானம் அடைந்த பிறகு, உடலில் உயிர் வசித்துக்கொண்டு இருந்தாலும், அந்த ஞானி உயிர் தான் வசிக்கும் உடலை தன்னுடையதாக எண்ணம் கொள்வதில்லை, உடலும், தானும் ஒன்றே என்ற ஏகத்துவ புத்தி அவருக்கு இருப்பதில்லை. உயிரில் மீண்டும் மீண்டும் தோய்தல் மற்றும் அதிலேயே நிலைத்தல் ஆகிய செயல்களை செய்து, எட்டு கர்மங்களில் நான்கு காதி கர்மங்களை முழுவதும் அழிக்கும் நிலையை அப்படிப்பட்வர் அடைகிறார். அவருக்கு பூரண சுத்த ஆத்மாவின் அனுபவம் தொடர்ந்து இருக்கிறது. அறிவு பூரண பிரகாசமடைந்த அவரை **சர்வஞ்ஞன்** என்று சொல்கின்றனர். கஷாயங்கள்-துவர்பசை உணர்வுகள் முழுவதும் இல்லாது போனதால், அவரை **வீதராகி** என்றும் சொல்கின்றனர். அப்படிப் பட்ட வீதராக, சர்வஞ்ஞ உயிருக்கு நான்கு காதி வினைகள் முழுவதும் அழிந்து விட்டன, ஆனாலும் கூட இப்போதும் உடலுடன் சம்பந்தம் இருக்கிறது, இந்த நிலை அடைந்தவரை **அரஹந்தர்** என்று சொல்கின்றனர். அவர் ஹிதோபதேசம் செய்கிறார், அதாவது எந்த விதியின்படி-by which process, எந்த வழியில் அவர் தான் தன் ஆத்ம அனுபவம் செய்து நற்காட்சி அடைந்து, ஸ்ராவக நிலை மற்றும் முனி நிலைகளை ஏற்று மேலும் மேலும் அதிக அளவில் தன் உயிரில் ஆழ்ந்து அரஹந்தர்(அரிஹந்தர், அருஹந்தர்) அதாவது கடவுள் ஆனார் என்பது பற்றி, அதாவது மோக்ஷமார்கம் பற்றி உபதேசம் கொடுக்கிறார். அரஹந்தருக்கு உயிரின் குணங்கள் முழு பிரகாசமடைந்து விட்டது. அதாவது அவரிடமிருந்து இதுவரை வெளிப்படாத பூரண தூய உயிரின் நிலையை இப்போது அவர் வெளிப்படுத்தி விட்டார்.

ஈஸ்வரன் அல்லது கடவுள் என்று ஒரு சக்திவாய்ந்தவர் இருக்கிறாரா? என்ற கேள்வியுடன் நாம் ஆரம்பித்தோம் அல்லவா. இப்போது மேலே விளக்கப்பட்ட அரஹந்தர், உடலுடன் கூடிய ஈஸ்வரன் அல்லது பரமாத்மா ஆவார். ஆகையால் அவரை சகல-உடலுடன் கூடிய பரமாத்மா என்று சொல்கின்றனர். அரஹந்த நிலைக்கு பிறகு இந்த உயிருக்கு சித்த-உடலிலிருந்து நீங்கிய அதாவது உடல் இல்லாத நிலை கிடைக்கிறது. அப்போது உடல் மற்றும் மீதமிருந்த நான்கு அகாதி கர்மங்கள் கூட அழிந்து விடுகின்றன. அந்த உயிர் பூரண தூய நிலையை அடைந்து விடுகிறது. இந்த நிலையில் எந்த கலப்பும் இல்லாமல் முக்தி-பிறவி சுழற்சியிலிருந்து விடுதலை அடைந்து விடுகிறது. இனி அது மீண்டும் பிறவி எடுக்க வேண்டியதில்லை, பிறப்பு இறப்பு சுழற்சி இன்றி தூய நிலையில் அனந்த காலம் வரை உலக உச்சியில் நிலைத்து இருக்கிறது. இவ்வாறு அரஹந்தர் மற்றும் சித்தர் ஆகிய இரண்டு நிலைகளில் எந்த உயிர்கள் இருக்கின்றனவோ அவர்களை உண்மையான தேவர்-கடவுள் அல்லது பரமாத்மா என்று சொல்கின்றனர்.

தேவகதி, மனிதகதி, விலங்குகதி மற்றும் நரககதி ஆகிய நான்கு கதிகளிலும் உள்ள உயிர்கள் நற்காட்சியை அடைய முடியும். ஆனால் மனித கதியில் ஆண் பிறவியில் பிறந்தவரே அதே பிறவியில் நிர்வாணம் ஏற்று முனியாகி, அரஹந்தர் மற்றும் சித்தராக ஆக முடியும். அதற்கு பிறகு அவர் மறு அவதாரம் எடுக்க வேண்டியதில்லை, மீண்டும் அவர் மனிதனாக அவதரிக்க வேண்டியதில்லை. ஈஸ்வரன் யார் என்பதை தெரிந்து கொண்ட பிறகு

அப்படிப்பட்ட கடவுளின் இயல்பு-குணங்கள் யாது என்பதை அடுத்த கடிதத்தில் தெரிந்து கொள்ள இருக்கிறோம். உனக்கு ஏதாவது கேள்வி அல்லது சந்தேகம் இருந்தால் அவசியம் கேட்டு விடு. நாம் விவாதிக்கும் விஷயத்தை அனுசரித்து உன் கேள்விகளுக்கு முன்னர் அல்லது பின்னர் சரியான இடத்தில் விளக்கம் அளிக்கிறேன். மற்றபடி எல்லாம் நலம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-2 15-6-1993

உண்மையான கடவுளின் வடிவம்-ஸ்வரூபம்

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாம்.

நீங்கள் உண்மையான தர்மத்தை தெரிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்திற்கு உகந்தார்போல் முதல் கடிதத்தில் ஆத்மா-ஸ்வயம் நான் யார்? என்பது பற்றி தெரிந்து கொள்ள முயற்சி செய்தோம். ஒவ்வொரு உயிரும் தன் உயிரின் தூய இயல்பில் நம்பிக்கை கொண்டு, அதை பற்றிய அறிவு பெற்று அதில் தோய்தல்-நிலைத்தல்-ஆழ்தல் அதாவது அதில் ஒழுகுதல் செய்து தானே பரமாத்மாவாக ஆக முடியும் என்பதையும் தெரிந்து கொள்ள முயற்சி செய்தோம்.

நாம் யாரை பரமாத்மா, பகவான், ஈஸ்வர், பரமேஷ்வர், உண்மையான கடவுள், தேவாதிதேவன் முதலான பெயர்களால் சொல்கிறோமோ அப்படிப்பட்ட பரமாத்மாவின் இயல்பை விரிவாக அறிந்து கொள்வது அவசியமாகும். தேவ கதியில் இருக்கும் (பவன, வியந்தர, ஜோதிஷ்க, வைமானிக) உயிர்களை கூட தேவன் என்று சொல்கிறோம், ஆனால் அவர்களை இங்கு பாகவான் என்று சொல்லப்படும் அந்த தேவன் நோக்கில் எடுத்து கொள்ளக்கூடாது.

நாம் நம் தூய உயிரின் வடிவை தெரிந்து கொள்ள, யார் சுத்தாத்ம வடிவை வெளிப்படுத்தினாரோ, அப்படிப்பட்ட வீதராகி மற்றும் சர்வஞ்ஞரே நமக்கு அதை தெரிவிக்க வல்லவராவார். அந்த உண்மையான கடவுளை-தேவனை தெரிந்து கொள்ளுதல் மிகமிக அவசியமாகும். அப்படிப்பட்ட வீதராகத்தை கொஞ்ச அளவு வெளிப்படுத்தக்கூடிய திகம்பர ஜெயின முனியின் வடிவத்தையும் மற்றும் சுத்த வடிவின் பிரதிநிதி மற்றும் முத்தி மார்கத்தை விளங்கும் உண்மையான சாஸ்திரத்தையும் அறிவது கூட மிகமிக அவசியமாகும். **இரத்தின கிரண்டக ஸ்ராவகாசாரம்** பெயர்கொண்ட கிரந்தத்தில்-ஆகமத்தில் ஆரம்பத்திலேயே ஸ்லோகத்தில் உண்மையான ஆப்தன்-அரஹந்த பகவான், ஆகமம்-ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட உபதேசம் மற்றும் தபஸ்வி-திகம்பர ஜெயின் சாது முதலானவை பற்றி தெளிவாக தெரிந்து கொள்ளுதல் நற்காட்சி பெற காரணம் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

இந்த நற்காட்சி பெருவதில் இருந்துதான் தர்மத்தின் தொடக்கம் நிகழ்கிறது. நம்பிக்கை சிரத்தை உண்மையாக இருந்தால்தான் ஞானமும், ஒழுக்கமும் உண்மையானதாக நன்ஞானம், மற்றும் நல்லொழுக்கமாக இருக்கும். நற்காட்சி இல்லாமல் செய்யப்படும் விரதம், தபம், கட்டுப்பாடுகள் எல்லாம் “எண் இல்லாத பூஜ்ஜிங்கள்” அதாவது மதிப்பற்றது என்று சொல்லப்படுகிறது. அதாவது நாம் முதலில் ஒன்று போடாமல் எத்தனை பூஜ்ஜியங்கள் போட்டாலும் அதன் மதிப்பு வெரும் பூஜ்ஜியம் மட்டுமே. முதலியேயே தவறு இருந்தால் பிறகு எல்லாமே தவறாகத்தான் இருக்குமல்லவா? நான் ஒரு ஆத்மா. நான் என்னுடைய இயல்பை அதாவது என் தூய ஆன்ம வடிவை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் முதலில் பரமாத்மாவை தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையான தேவனின்-கடவுளின் வடிவத்தை தெரிந்து கொள்வதில் தவறு நேர்ந்தால் பிறகு தூய உயிரின் வடிவை தெரிந்து கொள்வதிலும் தவறு நிகழவே செய்யும். **பகவானின் உன்மையான வடிவை தெரிந்து கொள்ளாமல், அவரை நினைத்தல்-ஞாபகப்படுத்திக் கொள்ளுதல், அவரை பற்றி சிந்தித்தல், அவருக்கு பூஜை செய்தல், அவரிடம் பக்தி கொள்ளுதல் முலானவைகளால் எந்த லாபமும் இல்லை.**

நாம் எப்படி சிறு குழந்தையை கண்ணாடியின் முன் காட்டி **பார், இதுதான் நீ** என்று கற்றுக் கொடுக்கிறோம். அவன் புகைப்படத்தை காட்டிக்கூட **இதுதான் நீ** என்று அவனுக்கு கற்றுக் கொடுக்கிறோம். அதேபோல பகவானின் முன் சென்று அவரை பார்த்து **நான் பார்ப்பது என்னுடைய தூய உயிரின் வடிவம் வெளிப்படுத்தப் பட்டால் இப்படித்தான் இருக்கும், அதன் பிரதிபிம்பம் தான் இது** என்று சிந்திக்க வேண்டும். [தற்காலத்தில் அசுத்த நிலையில் இருக்கும் நான், என் சுத்த நிலையை வெளிப்படுத்தினால் இப்படித்தான் இருப்பேன் என்ற சிந்தனை வரவேண்டும். அசுத்த உயிருக்கு தூய உயிரின் வடிவத்தை காட்டி, இது தான் தூய உயிரின் வடிவம் என்று நாமாகவே கற்றுக் கொள்ள வேண்டும்.]

பாருங்கள்! நமோக்கார மஹாமந்திரத்தில் அரஹந்தர், சித்தர், ஆசார்யர், உபாத்யாயர் மற்றும் சாதுக்களுக்கு வணக்கம் சொல்கிறோம், எந்த குறிப்பிட்ட ஒருவருக்கும் வணக்கம் சொல்லவில்லை. அரஹந்தர் மற்றும் சித்தர் உண்மையான கடவுள் ஆவார்கள். உண்மையான கடவுளின் லக்ஷணம்-அடையாளம் யாது என்பதை தெரிந்து கொள்வது மிகமிக-அதீத-உச்சகட்ட அவசியமாகும். எப்படி தங்கத்தின் தூய்மையை கல்லில் தேய்த்து அதன் தூய்மையை அறிந்து கொள்கிறோமோ அதுபோல, கடவுளின் தூய்மையை வீதராகம், சர்வஞ்ஞன் என்ற தன்மைகளுடன் ஒப்பிட்டு, ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும். அரஹந்தர்கள் வீதராகி, சர்வஞ்ஞர் மற்றும் ஹிதோபதேசி ஆவர்கள். சித்த பகவான்கள் வீதராகி மற்றும் சர்வஞ்ஞர் ஆவார்கள். வீதராகி என்றால் ஆசையை வென்றவர் என்று பொருள். தீவிர கோபம் மற்றும் தீவிர ஆசை, பிறவி உயிரிடம் இல்லாமல் போகப்போக, மிகக் குறைந்த ஆசை மட்டும் கடைசியில் மிஞ்சியிருக்கும். அதையும் இல்லாமல் செய்து உயிர் முழு வீதராக நிலையை அடைகிறது. அந்த நிலையை அடைந்த உயிரைத்தான் **வீதராகி** என்று சொல்கிறோம்.

ஆசை மற்றும் கோபம் இவைகளின் வேறு பெயர் **கஷாயம்** ஆகும். கஷாயத்தை நான்கு விதமாக சொல்ல வேண்டும் என்றால் கோபம், மானம்-அஹங்காரம், மாயை-கபடம், லோபம்-பொருள் மேல் உள்ள பற்று என்று சொல்லலாம். எந்தெந்த கஷாயங்கள் உதயம் இல்லாமல் போகிறதோ அந்தந்த அளவுக்கு வீதராக தன்மை வளர்ச்சியடைகிறது. நற்காட்சி அடைந்த பிறகே வீதராக தன்மையின் தொடக்கம் நிகழ்கிறது, ஏனெனில் அந்த நிலையில் தான் உயிரில் அனந்தானுபந்தி-அனந்த காலம் வரை கர்மங்களை உடன் வைத்துக்கொள்ளும் கோபம், மானம், மாயை, லோபம் ஆகிய நான்கு கஷாயங்களும் இல்லாத நிலை தோன்றுகிறது. உயிரின் வடிவத்தை பார்த்த பிறகு, அதில் அரஹந்தர், சித்தர்களுக்கு சமமாக பார்த்தல்-தர்சனம், அறிதல்-ஞானம், நம்பிக்கை-சிரத்தை, சுகம், வீரியம் முதலான அனந்த குணங்கள் வெளிப்படாத நிலையில் இருக்கின்றன என்று அறிய வேண்டும். எப்போது இத்த உயிரில் இந்த குணங்களின் தூய தன்மை கொஞ்சம் வெளிப்படுகிறதோ அப்படிப்பட்ட அந்த உயிரை **சாதகர்** என்று சொல்கிறோம். மேலும் எப்போது பூரண-முழு தூய்மை நிலையை வெளிப்படுத்துகிறதோ அப்போது அந்த உயிரை பகவான்-பரமேஷ்வர் என்று சொல்கிறோம். வீதராக தன்மை, ஒழுக்க-சாரித்ர குணத்தின் தூய நிலை-அவஸ்தை யாகும். கஷாயம் அந்த சாரித்ர குணத்தின் அசுத்த நிலை-அவஸ்தை யாகும். சுப பாவம்-சுப உணர்வு மற்றும் அசுப பாவம்-அசுப உணர்வு இரண்டும் அசுத்த அவஸ்தையின் இரண்டு கிளைகள்-பிரிவுகளாகும். இதை அடுத்த பக்கத்தில் உள்ள விளக்கப் படத்தைப் பார்த்து புரிந்து கொள்ளலாம்.

ஜின தர்மத்தை தவிர உலகில் உள்ள வேறு எந்த தர்மத்திலும்-மதங்களிலும் இந்த சுத்த அவஸ்தை-நிலை பற்றி விவரிக்கப் படவில்லை மற்றும் அதை அடையும் வழியும் சொல்லப் படவில்லை. நற்காட்சி-நம்பிக்கை குணத்தின் சுத்த நிலை, நன்ஞானம்-அறிவு குணத்தின் சுத்த நிலை அதாவது அதீர்திரிய- இந்திரிய தொடர்பு அற்ற நேர் அறிவு, நல்லொழுக்கம்-ஒழுக்க குணத்தின் ஓரளவு தூய்மை அதாவது ஓரளவு வீதராக நிலை ஆகிய மூன்றும் ஒன்றாக நிகழ்கிறது. அந்த சமயத்தில் கஷாயத்தின் நான்கில் ஒரு பகுதி அதாவது அனந்தானுபந்தி

கோபம், மானம், கபடம், லோபம் ஆகியவைகளின் உதயம் இல்லாமல் போகிறது. அதாவது தீவிர கஷாயம் வெளிப்படாமல் போகிறது. வீட்டில் வாழும் நிலையில் கூட இந்த காரியம் நிகழ முடியும். [திரவ்யலிங்கி ஸ்ராவகர் மற்றும் திரவ்யலிங்கி முனி நிலையிலும் கூட இந்த காரியம் நிகழ முடியும்.]

இந்த கட்டத்தில் மேலும் அதிகமாக ஆன்மாவில் நிலைத்தலின் ஆர்வ மிகுதியால் வீதராக தன்மை மேலும் அதிகமாகி, விரதம் ஏற்க வேண்டும் என்ற ஆசை வடிவ உணர்வு ஏற்படுகிறது. அந்த நிலையில் இவரை **விரதி ஸ்ராவகர்** என்று சொல்கிறோம். இந்த சமயத்தில் கஷாயத்தின் அடுத்த நான்கில் ஒரு பகுதி அதாவது அப்ரத்யாக்யான கோபம், மானம், கபடம், லோபம் ஆகியவைகளின் உதயம் இல்லாமல் போகிறது. வீட்டில் வாழும் நிலையை துறந்து, முனி விரதத்தைக் கைக்கொள்வதால் வீதராக தன்மை மேலும் பல மடங்கு அதிகரிக்கிறது. மேலும் மூன்றாவதாக கஷாயத்தின் அடுத்த நான்கின் ஒரு பகுதியான ப்ரத்யாக்யான கோபம், மானம், கபடம், லோபம் ஆகியவைகளின் உதயம் இல்லாமல் போகிறது. இந்த நிலையில் அவ்வுயிரை **பாவலிங்கி முனி** என்று சொல்கிறோம்.

அப்படிப்பட்ட முனி எப்போது தன் அந்தரங்கத்திலேயே முழுமையாக ஆழ்ந்து விடுகிறாரோ அப்போது அவர் பூரண **வீதராகி நிலையை** அடைகிறார். இந்த நிலையில் கஷாயத்தின் ஒரு சிறு பகுதிகூட அந்த உயிரிடம் இல்லாமல் அழிந்து போகிறது. பூரண வீதராக நிலை அடைந்த அவர் பிறகு **சர்வஞ்ஞர்** நிலையை அடைகிறார். இந்த நிலையில் அவருடைய ஞானம் முழுமையாக வெளிப்பட்டு விட்டதால் அந்த ஞானத்தை **கேவலஞானம்** என்று சொல்கிறோம். இந்த வீதராக, சர்வஞ்ஞ அவஸ்தை-நிலை உடையவரை **அரஹந்தர்** என்கிறோம். அவருக்கு இப்போதும் கூட உடலுடன் சம்பந்தம் இருந்தபோதிலும், அவர் தன் ஆன்மாவிலேயே முழுமையாக தோய்ந்திருக்கிறார். அரஹந்தரிடமிருந்து ஓம்கார வடிவ **திவ்யத்தொனி** விழுகிறது, அது அவருடைய இச்சை அதாவது விருப்பம் இன்றியே விழுகிறது. அதில் மோக்ஷ மார்கத்தின் உபதேசம் இருக்கிறது ஆகையால் அவரை **ஹிதோபதேசி** என்று அழைக்கிறோம். அவர் பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு, பசி, தாகம், வியர்வை, மூத்திரம், மலம், விருப்பு, வெறுப்பு, மயக்கம், வியப்பு, பயம், கர்வம், வருத்தம், துக்கம், தூக்கம் முதலிய பதினெட்டு குறைபாடுகள் அற்றவர். அவர் ஹிதோபதேசி ஆனதால் அவரை **ஆபதர்** என்றும்

கூறுவர். யாரிடம் போரிடும் ஆயுதங்கள், பகைவரை தாக்கும் ஏவுகணைகள், துணிமணிகள், ஆபரணங்கள், அலங்காரம், அருகில் பெண் முதலியன இருக்கிறதோ அவர்கள் பகவான் ஆக மாட்டார்கள், ஏனெனில் வீதராகி பகவானுக்கு ஆசை, கோபம், இச்சை, பக்தர்களை காத்தல், எதிரிகளை சம்ஹாரம்-வதைத்தல் முதலான செயல்களை செய்யும் எண்ணமே வருவதில்லை. நமக்கு நம் நிஜ கல்யாணம்-உண்மையான நலன் நிகழ வேண்டுமானால் முதன்முதலில் **நான்** யார்? என்பதை அடையாளம் கண்டு கொள்ள வேண்டியது அவசியம்.

மேலும் உண்மையான கடவுளை தெரிந்து கொள்வதால்தான் நம் தூய முழு வடிவம் நம் எண்ணத்தில் வரும். எப்படி யாராவது புளியை காண்பித்தால் வாயில் எச்சில் உறுகிறதோ, தாய், தந்தையரின் நினைவு வந்தவுடன் கண்ணில் கண்ணீர் வருகிறதோ, தாத்தா, பாட்டியின் படத்தை பார்த்ததும் அவர்கள் காட்டிய அளவு கடந்த அன்பும், அதிக பரிவுடன் உணவூட்டியதும், செல்லம் கொடுத்து கொஞ்சியதும் நினைவுக்கு வருகிறதோ அதுபோல அரஹந்தர், சித்தர்களின் நினைவு வந்ததும் நம் அந்தரங்கத்தில் விதாராக தன்மை மற்றும் சர்வஞ்ஞ தன்மையின் எண்ணம்தான் வரவேண்டும். யாருக்கு அதுபோல எண்ணம் வரவில்லையோ, அவர் பகவானின்-வீதராக சர்வஞ்ஞரின் வடிவை இன்றும் சரியாக தெரிந்து கொள்ளவே இல்லை என்பதாகும்.

பகவானுக்கு முன் கை கூப்பி வணங்குதல், தரையில் விழுந்து நமஸ்காரம் செய்தல், ஜபம் செய்தல் உண்மையான பக்தி இல்லை. ஆனால் அவருடைய குணங்களின் மேல் அன்பு-மகிமை வருதலும், அந்த குணங்களின் மேல் மரியாதை உணர்வு கொள்ளுதலும் தான் உண்மையான பக்தியாகும். அவருடைய குணங்களைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ளவே இல்லை என்றால் எப்படி அந்த குணங்களின் மேல் அன்பும், மஹிமையும் மரியாதையும் உணர்வும் உண்டாகும்?

நமக்கு கஷாயங்களே அதாவது கோபம், மானம், கபடம், பற்று முதலியவைகளே மிகவும் பழக்கப்பட்டதாகும், ஏனெனில் அதைத்தான் நாம் தினமும் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் வீதராக தன்மையின் அனுபவம் இதுவரை நமக்கு ஏற்படவில்லையாகையால் அதன் மஹிமை நமக்கு தெரியவில்லை. ஆனால் யாருக்கு கொஞ்சம் வீதராக தன்மை வெளிப்பட்டுள்ளதோ அப்படிப்பட்ட ஞானிகளுக்கே பகவானின் மேல் உண்மையான பக்தி வருகிறது. கஷாயங்களை அடக்குவதால் வீதராக தன்மை தோன்றுவதில்லை. ஆனால் வீதராக தன்மை வெளிப்படுவதால் கஷாயங்களின் உற்பத்தியே இருப்பதில்லை. இந்த உற்பத்தி இல்லாமல் இருப்பதையே கஷாயம் அழிந்து விட்டது என்று சொல்கின்றனர்.

நற்காட்சியின் வழியில் சென்று முனி நிலையும், முனி நிலையில் சென்று கடவுள் நிலையும் அடையப்படுகிறது என்று இதுவரை நாம் பார்த்தோம். எப்போது முனிக்கு பரிகிரஹம் முதலான எந்த பாபங்களும் இல்லாமல் போகிறதோ அப்போது அவரால் அஹிம்சை முதலான மஹாவிரதங்களை பாலிக்க முடிகிறது. முக்கியமாக முனிவர் எப்போது தன் ஞானத்திலும், தியானத்திலும் ஆழ்ந்திருக்கிறார் என்றால்; அவரைவிட சிறந்த அரஹந்தர் பதவியை அடைந்தவர் அவரை விட மேலும் சிறப்பாகத்தான் இருக்க வேண்டும் அல்லவா? அரஹந்தர்களுக்கு பரிகிரஹம் (அஸ்தரம், வஸ்த்ரம், சஸ்த்ரம், தனம், தான்யம், வேலைக்காரன், வேலைக்காரி, அலங்காரம் முதலியன) எப்படி இருக்க முடியும்? எப்போதும் இருக்க முடியாது. அதாவது அவருடைய பிம்பம் கூட வீதராக தன்மையை காட்டுவதாகவே இருக்க வேண்டும்.

சர்வஞ்ஞரின் சுருக்கமான விளக்கம் இவ்வாறாகும். **ஞ்ஞ** என்றால் அறிதல். யார் ஒன்று கூட விடாமல் எல்லாவற்றையும் அறிகிறாரோ அவர் சர்வஞ்ஞர் ஆவார். சர்வ என்றால்

உலகத்தில் உள்ள உயிர் திரவியம், புத்கல திரவியம், தர்ம திரவியம், அதர்ம திரவியம், ஆகாச திரவியம், மற்றும் கால திரவியம் முதலான ஆறு திரவியங்கள். இவைகளின் எண்ணிக்கை உணக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா! உயிர் அனந்தம், புத்கலம் அனந்தானந்தம், தர்ம, அதர்ம, ஆகாசம் தலா ஒவ்வொன்று, காலம் அசங்க்யாதம். இந்த எல்லா திரவியங்களையும், ஒவ்வொரு திரவியத்தின் அனந்த குணங்களையும், ஒவ்வொரு குணத்தின் கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால எல்லா பர்யாயங்களையும், ஒவ்வொரு பர்யாயத்தின் பிரிக்க முடியாத மிகச்சிறிய அம்சத்தையும் (அவிபாக பிரதிசேத் பர்யாய சக்தியின் அளவுகோலான சக்தியின் மேலும் பிரிக்க முடியாத மிகச்சிறிய அளவை -smallest unit of measurement அளவு கொண்டதையும்) ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாகவும், நேரடியாகவும் அறியக்கூடிய சாமர்த்தியம் கேவலஞானத்தில் உள்ளது. அப்படிப்பட்ட அனந்த ஞானத்தை யார் வெளிப்படுத்தி இருக்கிறாரோ, அவரை சர்வஞ்ஞர் என்று சொல்கிறோம். இந்த கேவலஞானம் இந்திரிய (புலன்கள்) சம்பந்தம் இல்லாதது. எப்போது உயிர் உயிரிலேயே ஆழ்ந்த நிலையில், தன்னையே முழுமையாக அறிகிறதோ, அதிலேயே நிலை கொண்டு விடுகிறதோ அப்போது அந்த உள்நோக்கு நிலையிலேயே கேவலஞானம் வெளிப்படுகிறது. அந்த கேவலஞானத்தில் மேல் சொன்ன உலகில் உள்ள எல்லா பதார்தங்களும் கண நேரத்தில் அறியக்கூடிய அளவில் (எப்படி கண்ணாடிக்கு முன் உள்ள எல்லா பொருள்களும் ஒரே சமயத்தில் அதில் பிரதிபலிக்கிறதோ அதுபோல) பிரதிபலிக்கின்றன. அதில் அந்த எல்லா பொருள்களின் கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால நிலைகளும் கூட துணியில் வரைந்த ஓவியம்போல ஒரே சமயத்தில் அறியும் வகையில் தெரிகின்றன.

தத்துவக்கல்வி பயில்வதின் மஹிமையை பற்றி அடுத்த கடிதத்தில் புரியவைக்கிறேன். வீதராக தன்மை, மற்றும் சர்வஞ்ஞ தன்மை இவைகளை தெளிவாகத் தெரிந்து கொண்ட பிறகு உண்மையான பகவானின் வடிவத்தை அறிந்து கொள்ள நமக்கு அதிக நேரம் தேவையில்லை. உங்களுக்கு தேவ ஸ்துதி ஞாபகமிருக்கும், அதில்கூட சர்வஞ்ஞர், மற்றும் வீதராகியின் வர்ணனை இவ்வாறு இருக்கிறது.

“சகல ஞ்ஞேய-ஞாயக்-சர்வஞ்ஞ; ததபி நிஞானந்த ரசலீன்-வீதராகி,
ஜிஸ்நே ராக-த்வேஷ காமாதிக் ஜீதே-வீதராகி,
சப் ஜக ஜான்லியா-சர்வஞ்ஞ; சப் ஜீவோ கோ மோக்ஷமார்க கா
நிஸ்ப்ருஹ் ஹோ உபதேஷ் தியா-ஹிதோபதேசி.”

இதன் பொருள்: எல்லா பார்க்கக் கூடிய பொருள்களையும் பார்ப்பவர் சர்வஞ்ஞர்; அப்போது கூட நிஜ ஆனந்த ரசத்தில் மூழ்கி இருப்பவர் வீதராகி. யார் ராக த்வேஷ மோகத்தை வெற்றி கொண்டாரோ வீதராகி, எல்லா இடத்திலுள்ளதையும் தெரிந்து கொண்டார் சர்வஞ்ஞர். எல்லா உயிர்களுக்கும் மோக்ஷ மார்கத்தை தெளிவாக உபதேசம் செய்தார் ஹிதோபதேசி.

முழுமையாக வீதராக தன்மை வெளிப்பட்டவுடனே சர்வஞ்ஞ நிலை அதாவது முழுதுணர் நிலை வெளிப்படுகிறது. இது எவ்வளவு தன்னிச்சையான, இயல்பான அழகான, இயற்கையான விதி என்பதை பார். விருப்பு, வெறுப்பு உடைய எந்த உயிருக்காவது இந்த முழுதுணர் அறிவு வெளிப்பட்டால் என்ன நிகழும் என்பதை நினைத்து கூட பார்க்க முடியாது. இன்று உலகில் புத்தியை அதிகமாக தன் சுயநலத்திற்கும், பிறரை அழிப்பதற்குமே பயன்படுத்தப் படுவதை நாம் தினசரி பத்திரிக்கையின் ஒவ்வொரு பக்கத்திலும் பார்க்க முடிகிறது. இன்று நாம் யார் வீதராகி மற்றும் சர்வஞ்ஞரோ அவரையே உண்மையான கடவுளின் வடிவம் என்று நிச்சயம் செய்துள்ளோம். நாம் இனி வேறு எவரையும் கடவுள் நிலையில் அதாவது ஈஸ்வரர் நிலையில் பார்க்கப் போவதில்லை. ஆசையுடன் கூடிய தேவ கதியில் உள்ள தேவ தேவதைகளை

குதேவர் என்று சொல்கின்றனர், ஏனெனில் அவர்களை பூஜிப்பதால் நமக்கும் அவர்களிடம் இருக்கும் விருப்பு வெறுப்புதான் உண்டாகும், மேலும் நம்மிடம் உள்ள மூட நம்பிக்கைதான் வலிவடையும். சிலர் கடவுள் அல்லாதவர்களை (அதேவர்களை) கூட , அதாவது மரம், கல், மலை, நதி, செல்வம் (லக்ஷ்மி), பாம்பு, பசு முதலானவைகளை கடவுள் என்று நம்புகின்றனர், இவைகளை வணங்குவது தேவமூடம் என்று சொல்லப்படுகிறது.

குதேவர் மற்றும் அதேவர்களை உண்மையான கடவுள் என்று நம்புதல், அவர்களை பூஜைக்குரியவர் என்று பாராட்டும் எண்ணம் வருதல் மூடநம்பிக்கை மற்றும் தத்துவமில்லாதவற்றில் நம்பிக்கை என்ற குற்றம் வருகிறது. ஆனால் சிலர் வீதராக சர்வஞ்ஞரையே உண்மையான கடவுள் என்றுதான் நம்புகின்றனர், ஆனால் அவருடைய இயல்பை விபரீதமாக நம்புபவர்களாக இருக்கின்றனர். அப்படிப்பட்வர்களுக்குக்கூட மூடநம்பிக்கை குற்றம் வருகிறது. எப்படி என்றால் வீதராக கடவுளிடம் வேண்டுதல் வைத்தல், அவரிடம் செல்வம், குழந்தை, புகழ் முதலியன வேண்டுதல், அவரை வணங்கி இவைகளை அடைய விரும்புதல், நோய் குணமாக வேண்டி பூஜை-விதானம் செய்தல் இவைகள் எல்லாம் மடமை (foolishness) மற்றும் அஞ்ஞானத்தின் அடையாளமாகும். ஆம், ஞானிகள் கூட சங்கட காலத்தில் கடவுளிடம் பக்தி, பூஜை செய்கின்றனர், ஆனால் கடவுள் என்னை சங்கடத்திலிருந்து காப்பாற்றுவார் என்ற எண்ணத்தில் அவர்கள் அவ்வாறு செய்வதில்லை, ஆனால் தன் சிந்தனையை வீதராகத்தின் பக்கம் செலுத்தி அசுப உணர்விலிருந்து-பரிணாமத்திலிருந்து தன்னை காப்பற்றிக் கொள்ளவே அப்படி செய்கிறார்கள்.

பகவான் சில காரியங்களை செய்பவர் என்று நம்புதல், இச்சை உடையவர் என்று நம்புதல், காப்பாற்றுவார் என்று நம்புதல், கடவுளின் விருப்பத்திற்கு முன் வேறு எந்த உபாயமும் இல்லை என்று நம்புதல் எல்லாம் அஞ்ஞானமாகும். பகவானின் உண்மையான இயல்பை அறியாததால் தான் இது போன்ற அஞ்ஞானம் உற்பத்தியாகிறது. பகவானின் இயல்பை அறிந்து வீதராகி, அரஹந்தர், சித்தர்களை பூஜிப்பதால் நம்முடைய வீதராக வடிவ சுத்தாத்ம இயல்பு நமக்கு தெரிய வருகிறது, மேலும் நம் பார்வை முக்காலத்திலும் சுத்த (தூய்மையை இழக்காத) ஆத்ம இயல்பை எதிர்கொள்கிறது. இவ்வாறு ஆன பிறகுதான் கடவுளின் மீது உண்மையான பக்தி, பூஜை ஆரம்பமாகிறது.

இந்த கடிதத்தில் பலவாறான புதிய சொற்களை உபயோகப் படுத்தியிருப்பதால், அதன் பொருள் உங்களுக்கு இப்போது தெரியாமல் கூட இருக்கலாம் என்று எனக்கு தோன்றுகிறது. ஆனால் கொஞ்சம் பொருமையாக இருங்கள், இன்னும் இரண்டு கடிதங்களுக்குப் பிறகு மூல விஷயங்கள் பற்றி எழுத ஆரம்பிப்பேன் அப்போது இந்த புதுப்புது சொற்கள் எல்லாம் மிக சுலபமாக உங்களுக்கு புரிந்து விடும். நல்லது, அடுத்த கடிதத்தில் சந்திக்கும் வரை,

ஜெய் ஜிநேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா

கடிதம்-3 12-7-1993

தத்துவப் பயிற்சியின் பெருமை

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

முன் இரண்டு கடிதங்களை படித்தவர்களின் கருத்து பரிமாற்றம் மற்றும் மேலும் அதிகமாக தெரிந்தது கொள்வதில் உங்களுக்கு உள்ள ஆர்வம் இவைகளைப் பார்த்த பிறகு நான் இந்த கடிதத்தை எழுதுகிறேன். பரமாத்மாவின்-கடவுளின் இயல்பு எப்படி இருக்கிறது என்பதை நாம் முன் கடிதத்தில் பார்த்தோம். ஒவ்வொரு உயிரும் பரமாத்மாவாக ஆக முடியும் என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். அதற்கு **நான் ஒரு உயிர் பொருள்** என்பதை முதன் முதலில் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். நான் இப்போது மனித பிறவியில் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் உடல், மனம், சொல் இவைகளிலிருந்து நான் வேறானவன் மற்றும் என்னுடைய அதாவது தூய ஆன்மாவினுடைய இயல்பு பற்றி சாஸ்திர பயிற்சியால் அறிந்து, அதில் சொன்னபடியே முயன்றால் என் ஆத்மாவை நானே உறுதி செய்து அதை அனுபவிக்க முடியும் என்று நூற்றுக்கு நூறு சதவிகிதம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

எவ்வளவு சந்தோஷமான விஷயம் பார். இன்றய நவீன விஞ்ஞான யுகத்தின் கண்டுபிடிப்புக்கள், முன்னர் கற்பனையாக இருந்தவைகளைக்கூட நிஜமாக்கிக் கொண்டிருக்கின்றன. இது எவ்வாறு முடிகிறது எனில் அவைகளில் திடமான நம்பிக்கை மற்றும் தன்நம்பிக்கையுடனும், பெருமுயற்சியுடன் முயன்று தேடித்தேடி அவைகளை இப்போது முடியும் என்று நிரூபிக்கப் படுகின்றன. அதேபோல ஆத்மா-பரமாத்மா பற்றி எப்படி ஜினவாணியில் கூறப்பட்டுள்ளதோ, திவ்யத்தொனியில் எவ்வாறு வந்துள்ளதோ, அது முக்காலத்திலும் உண்மையாகும். மேலும் அதில் திட நம்பிக்கை கொள்வதே உண்மையில் உயிரை பகவானாக ஆக்குவதில் திறமை வாய்ந்ததாகும். ஜிநேந்திரரின் வாணியே இந்த உண்மையை நமக்கு தெரியப்படுத்துகிறது, வேறு எவருடைய வாணியும் இல்லை, ஏனென்றால் ஜிநேந்திரரின் இயல்பே வீதராக மற்றும் சர்வஞ்ஞ நிலையாகும். வீதராகி அதாவது யாரிடம் ஆசை, வெகுளி, மயக்கம் இவைகளின் வாசணைகூட இல்லையோ அவர் பொய் சொல்லுவாரா என்ன? சர்வஞ்ஞர், அதாவது எல்லாம் தெரிந்தவர் எப்படி பொய் சொல்ல முடியும்? யார் எல்லாம் அறிந்தவரோ, அவர் கூறுவது யதார்த்தமாகத் தானே இருக்கும். இந்த நம்பிக்கையின் பலத்தால் நாம் ஏன் பகவானாக ஆக முடியாது?

தீர்த்தங்கரரின் இந்த திவ்யத்தொனி ஓம்கார சப்தத்தில் அவருடைய உடல் முழுவதிலுமிருந்து-சர்வாங்கத்திலுமிருந்து அவருடை விருப்பமின்றி அது தானாகவே வெளிப்படுகிறது. சமவசரணத்தில் அமர்ந்துள்ள உயிர்கள்-மனிதர்கள், விலங்குகள், தேவகதி உயிர்கள் அவரவர்களுடைய சக்திக்கு உகந்தார்போல் திவ்யத்தொனியில் கூறப்பட்டுள்ளதன் பொருளை புரிந்து கொள்கிறார்கள். கணதர ஆசார்யர்கள் இந்த உபதேசத்தை கேட்டு, பன்னிரண்டு அங்காமங்களை தொகுக்கிறார்கள். இதையே நாம் ஜினாகமம் என்று கூறுகிறோம். இந்த ஆகமம் ஆசார்யர்களின் பரம்பரையில் கேள்வி-செவிவழி ஞானமாகவே தீர்தங்கரர்களுக்கு பிறகு பல காலங்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. அவைகளில் சில பகுதி இன்று கிரந்த வடிவில் கிடைக்கிறது. முற்காலத்திலிருந்தே அனேக மாஹான் ஆசார்யர்கள் அவர்களுக்கு பரம்பரையாக கிடைத்த குருக்களின் உபதேசத்தாலும், ஆகம பயிற்சியாலும், தங்களின் சுய அனுபவத்தின் மூலமும் கிடைத்த அப்படிப்பட்ட ஞான பொக்கிஷத்தை கிரந்தங்கள் வடிவில் எழுதி வைத்து, இன்று நமக்கு கிடைக்கும்படி செய்து, நமக்கு பெரிய உதவி செய்திருக்கிறார்கள். நம் முன்னோர்கள் கூட நம்மேல் மிகுந்த கருணை கொண்டு ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகள்

பழமையான கிரந்தங்களை நமக்காக இன்றுவரை பாதுகாத்து, நமக்கு இன்று கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள். பழங்காலத்தில் எல்லா கிரந்தங்களும் கையால் எழுத்தாணி கொண்டு பனை ஓலையில் ஓலைச்சுவடிகள் வடிவில் எழுதப்பட்டு வந்தன. அதிக பிரதிகள் அந்த காலத்தில் இல்லை. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தற்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் கிரந்தங்கள் கிடைக்கும் வசதி வந்துவிட்டது.

தேவன், குரு, சாஸ்திரம் இவை மூன்றும் வந்தனைக்குறியவை; ஏனெனில் அவர்களின்-அவைகளின் காரணத்தால் தான் நமக்கு தர்மத்தை பற்றிய, வஸ்துவின் இயல்பு பற்றிய உண்மையான அறிவு கிடைக்கிறது. அரஹந்தர், சித்தர், சாது இவர்களை நாம் லோகுத்தமா அதாவது உலகில் எல்லாவற்றையும் விட உத்தமம் என்று கூறுகிறோம், மங்கலம் என்று கூறுகிறோம், உத்தமமாக இருப்பதும், மங்கலமாக இருப்பதும் அவர்களுக்கு வீதராக விஞ்ஞானத்தின் மூலம் கிடைத்திருக்கிறது. நாம் கடவுளின் முன் தலை வணங்குகிறோம், அவர் திருவடிகளை-வழியை பின்பற்றுகிறோம், ஆனால் அவர்கள் யார் வழியில் சென்றார்கள்? அவர்கள் வீதராக விஞ்ஞான வடிவ நிஜ சுத்த ஆத்மாவில் ஆழ்ந்து அதிலேயே மூழ்கி விட்டனர். நாமும் அவரைப்போல் கடவுளாக ஆகவேண்டும் என்ற இலட்சியத்தை முன் வைத்து, அவர் எந்த வழியை தன் வழியாகக் கொண்டார் என்பதை தெரிந்து கொள்ளத்தான், நாம் அவரை தினமும் சென்று வணங்குகிறோம், வெருமனே அவருடைய பக்தனாக ஆவதற்கு மட்டுமேயல்ல.

கல்லூரிக்கு சென்று பேராசிரியர்களுக்கு வெரும் வணக்கம் சொல்வதால் மட்டும், அவர்களுக்கு பணிவு காட்டுவதால் மட்டும் உங்களுக்கு பட்டம் கிடைக்காது. பேராசிரியர்களின் வழிகாட்டுதலின்படி நமே பயின்று, திரும்பத்திரும்ப பயிற்சி செய்துதான் அந்த கல்வித்தகுதி, கலைத்தகுதி, மற்றும் பதவிகளைப் பெறமுடியும். இங்கு மட்டும் இப்படித்தான் செய்கிறோம். ஆனால் அரஹந்தர், சித்தர், சாதுக்களை மட்டும் வெரும் நமஸ்காரம் செய்வதால் மட்டும் நமக்கு காரியம் பூர்த்தி அடைய வேண்டும் என்று நினைத்து அதை மட்டுமே செய்கிறோம். ஆனால் கேவலிகளால் சொல்லப்பட்ட தர்மத்தை சரணடைந்து அதாவது கேவலிகளால் உபதேசிக்கப்பட்ட தர்ம வழியில் சென்று, அவர்கள் சாதித்தது போல நாமும் சாதனை செய்ய வேண்டும் என்ற உறுதி கொள்ள வேண்டும்.

தர்மத்தை கடைபிடிப்பதில் மட்டும் மக்களுக்கு பலவிதமான கருத்துகள் அல்லது அபிப்ராயங்கள் காணப்படுகின்றன. சிலர் நாம் தர்மத்தை பாதுகாக்க அல்லது இரட்சிக்க வேண்டும் என்கின்றனர். தர்மத்தை அடிப்படையாக கொள்வதால் துக்கப்படுபவரும் மற்றும் அறிவில்லாதவரும் வாழ்க்கையில் காப்பாற்றப் படுகிறார்கள் என்பது அவர்களுக்கு தெரியாமலிருக்கலாம். தர்மம் யாராலும் காப்பாற்ற வேண்டிய நிலையில் இல்லை ஆனால் ஒவ்வொருவரும் தர்மத்தின் வழியில் சென்று தங்களை காப்பற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வரவேண்டும். பொருளின் இயலபே தர்மம். இங்கே பொருள் என்பது திரவியத்தை குறிக்கும். தர்மம் என்னவோ முக்காலத்திலும் இருக்கிறது, அதுவும் அப்படியே இருக்கிறது. எப்படி என்றால் நெருப்பின் தர்மம் சுடுதல். ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்னாலும் நெருப்பு சுடுவதாகவே இருந்தது, இப்போதும் சுடுவதாகவேதான் இருக்கிறது. இந்தியாவிலும் நெருப்பு சுடுகிறது, அமெரிக்காவிலும் நெருப்பு சுடாகவே இருக்கிறது. இதிலிருந்து பொருளின் தர்மம் முக்காலத்திலும் மூவுலகத்திலும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது, எப்போதும் மாற்றமடைவதில்லை என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

பொருளின் இயல்பு பற்றி ஜின சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அதை நாம் தகுதியானவருடைய வழிகாட்டுதலின்படி பயில வேண்டும். அப்படி இல்லாமல் நாமே படித்து, நம் அறிவுக்கு எட்டிய வண்ணம் தவறான அர்த்தம் செய்து கொண்டு, தவரான வழியில்

செல்லக்கூடிய வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது. நாம் எப்படி பள்ளியில் முதல் வகுப்பில் இருந்து எண், எழுத்துக்களை முறையாக கற்று, படிப்படியாக மேல் வகுப்புகளில் சென்று கற்றதுபோல; தர்மத்தை கூட அடிப்படை விஷயங்களை முதலில் கற்று, பிறகு படிப்படியாக முன்னேற வேண்டும். பெரும்பாலும் அதிகமான மக்கள் தத்துவ அறிவு பெருவதிலும் அடிப்படை பயிற்சி இல்லாமலே சாஸ்திரங்களை தாங்களாகவே பயில்பவர்களாக இருக்கிறார்கள்.

பலரும் தத்துவப் பயிற்சி ஒரு விஞ்ஞான பூர்வமான கல்வி என்பதை இன்னமும் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். மற்றவர்கள் என்ன, நான் கூட என் இளமை பருவத்தில் அப்படித்தான் இருந்தேன். நம் கடவுளும், குருக்களும்-முனிவர்களும் நிர்வாணமாக-பிறந்த மேனியாக இருக்கிறார்கள், நம் தர்மத்தில்-மதத்தில் உண்ணாமை நோன்பு-உபவாசம் இருக்க வேண்டும், கடுமையான விரதங்களை கைகொள்ள வேண்டும், பூஜை, அர்ச்சனை, பொருள் தானம் முதலியன செய்ய வேண்டும், தீர்த்த யாத்திரைகள் செய்ய வேண்டும், இவைகளை கடைப்பிடித்தால் தான் நாம் தர்ம வழியில் செல்கிறோம் என்று எண்ணினேன். உண்மையை சொல்ல வேண்டும் என்றால் தத்துவ ஞானத்தில் அதாவது வீதராக விஞ்ஞானத்தில் பயிற்சி இல்லாமல், தர்மம் எங்கே ஆரம்பிக்கிறது? என்பதைகூட நம்மால் புரிந்து கொள்ள முடியாது. பிறகு எப்படி நாம் தர்ம வழியில் நடக்க முடியும்? அதில் எவ்வாறு முன்னேற முடியும்? இந்த நிலையில் நாம் நற்காட்சி பெருவதில் இன்னும் வெகு தொலைவில் இருக்கிறோம் என்ற உணர்வே இல்லாமலிருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பணம் சம்பாதிப்பதே குறிக்கோளாக இருக்கும் இந்த காலத்தில், அதிஷ்ட வசமாக சிலர் செல்வந்தர்களாகவும், சுக போகங்களை அனுபவிப்பவர்களாகவும் இருந்து விட்டால், நமக்கு தத்துவ அறிவு தேவையில்லை என்றும், யாருக்கு வேண்டும் இந்த தத்துவப் பயிற்சி? என்றும் நினைக்கிறார்கள். மோக்ஷம் அடைய செய்யப்படும் முயற்சியால் இப்போது கிடைத்துள்ள இந்திரிய சுகங்களை அதாவது புலனின்ப சாதனங்களை அனுபவிக்காமல் ஏன் விடவேண்டும்? என்று நினைக்கின்றனர். அதனால் நமக்கு மோக்ஷமும் வேண்டாம், தத்துவ பயிற்சியும் தேவையில்லை என்று நினைக்கிறார்கள்.

கொஞ்சம் சரியாக யோசித்துப் பாருங்கள், எந்த சுகம் தத்துவஞான பயிற்சியால் இல்லாமல் போகுமோ அதை எப்படி உண்மையான சுகம் என்று சொல்ல முடியும்? உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் உங்கள் இளமை பருவத்தில் தூக்கத்தில் கண்ட கனவுகளை, காலையில் என்னிடம் வந்து விரிவாகச் சொல்வீர்கள். அதை விபரித்துக் கொண்டே சில சமயம் பயப்படுவீர்கள், சில சமயம் சிரிப்பீர்கள். நான் அவைகளை கேட்கும்போது என்னிடம் எந்த பயமோ, சந்தோஷமோ வராததைப் பார்த்து உங்களுக்கு எனமேல் கோபம் கூட வந்திருக்கிறது. கனவில் பார்த்த நிகழ்வுகளும், அதனால் உண்டான உணர்வுகளும், தூக்கத்திலிருந்து விழிப்பு அடைந்த பிறகு எந்த மதிப்பும் இல்லாததாக இருப்பதை இப்போது உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா!

நாம் எதை சுகம் என்று நம்புகிறோமோ, அந்த சம்சார சுகம் உண்மையில் கவலை-வியாகூலம், பதட்டம், anxiety, தவிப்பு, கலக்கம் இல்லாமல் இருக்கிறதா என்ன? என்னிடம் இந்த செல்வம் நிலையாக இருக்குமா? என்னுடைய பிரியமான மனைவி, குழந்தைகள், தாய், தந்தை, மற்ற உறவுகள் என்னை அனாதையாக விட்டுவிட்டு செல்லாமல் இருப்பார்களா? எனக்கு தீர்க்கமான ஆயுள் இருக்குமா? என்னுடைய குடும்பத்தார் நோய்வாய் படாமல் இருப்பார்களா? இவ்வாறாக ஒன்று இரண்டல்ல அனேக கவலைகளால் நாம் எல்லா நேரமும் சங்கடத்தில் தான் மூழ்கி இருக்கிறோம் அல்லவா!

உங்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நான் வைத்தியம் செய்யும் டாக்டர் ஆகையால் சமூகத்தில் வசதியானவர்கள், வசதியற்றவர்கள், செல்வந்தர்கள், ஏழைகள், இளமை பருவத்தினர், வயது முதிர்ந்தவர்கள் என பலவிதமான மக்கள் என்னிடம் தினமும் வருகிறார்கள். அவர்களுடைய துக்கம் அவர்களுடைய உடல் நோய் பற்றியதாக மட்டுமே இருப்பதில்லை. அவர்கள் அன்புக்குரிய குடும்பத்தாருடன் கூட அவர்களுடைய துக்கங்களை பகிர்ந்து கொள்வதில்லை, ஆனால் குடும்ப வைத்தியரானதால் என்னிடம் அவர்கள் மனம் விட்டு பேசுகிறார்கள். செல்வந்தர்கள், மிக பாக்கியவான்கள் மற்றும் சுகமாக இருப்பதாக தெரிபவர்கள் கூட, அவர்கள் மனம் திறந்து என்னிடம் அவர்களுடைய துக்கத்தை பகிர்கிறார்கள். அவர்களின் துக்கங்களுக்கு காரணமும் அதற்கு மருந்தும்-உபாயமும் தத்துவ ஞானத்தாலேயே கிடைக்கின்றன. தத்துவப் பயிற்சி செய்வதால் நமக்கு உண்மையான விழிப்புணர்வு உண்டாகிறது. உண்மையான சுகமும், ஆனந்தமும் நம்முள்ளேயே இருக்கிறது, அது வெளிப் பொருள்களில் இல்லை என்பது புரியவருகிறது. சுகமும், ஆனந்தமும் நம் உயிரிடமிருந்து பிரிக்க முடியாத குணம் என்பதை உணர முடிகிறது. அப்போது தான் தத்துவ பயிற்சியின் அவசியம் மற்றும் அதன் மஹிமை மேலும் அதை ஆழமாக கற்க வேண்டும் என்ற உணர்வும் மேலிடுகிறது.

தத்துவ பயிற்சி செய்வதால் மக்கள் மத வெறியர்களாக religious fanatic-ஆக ஆகி விடுகிறார்கள் என்று நினைப்பதும், நம்புவதும் மிகத் தவறானதாகும். தத்துவ பயிற்சியால் சத்தியம் எது? உண்மை எது? தவறு எது? என்பதை அறியவும், உண்மை அல்லாத மற்ற மதக் கொள்கைகள் ஞாயமான தர்க நோக்கில் கண்டனத்திற்குறியது என்பதும், உண்மையான தர்மம்-திகம்பர ஜைன தர்மம்-கேவல ஞானியால் உபதேசிக்கப் பட்ட தர்மம் எவ்வாறு உண்மையானதும், தலை சிறந்ததும் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த உண்மை மோக்ஷ மார்கப் பிரகாசம், இரத்தின கிரண்டக ஸ்ரவகாசாரம், ராஜவார்த்திகம் முதலான பல ஆகமங்களின்- நூல்களின் வழி அதை எழுதிய ஆசார்யர்கள் மிக விரிவாகத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

எங்களுக்கு எல்லா தர்மமும்-மதமும் ஒன்றே, எல்லாமே எங்களுக்கு சம்மதம் என்று சொல்லும் பலரை இந்த காலத்தில் அதிகமாக காணமுடிகிறது. 1. நாங்கள் எல்லா மத கோட்பாடுகளையும் படிக்கிறோம், 2. எல்லா மத கடவுளர்களையும் வணங்குகிறோம், 3. நமோக்கார மந்திரத்தில் கூட நமோ லோயே சவ்வ சாஹூணம் என்று உலகிலுள்ள எல்ல துறவிகளுக்கும் வணக்கம் சொல்லப் படுகிதல்லவா? என்று தர்கம் செய்யும் பலரை பார்க்க முடிகிறது. அப்படிப்பட்வர்கள் அபிப்ராயத்திற்கு நான் ஒவ்வொன்றாக விளக்கமளிக்கிறேன், கேளுங்கள்.

1. எல்லா மதங்களின் தத்துவ நூல்களை யாரும் படிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. மேலே கூறிய திகம்பர ஜின தர்ம நூல்களை எழுதிய ஆசாரியர்கள், மற்ற எல்லா தர்ம நூல்களையும் ஆழமாக படித்திருக்கிறார்கள். இதுவரை நாம் பெயர் கூட கேட்டிறாத பல தர்மங்களை பற்றி எல்லாம் இந்த ஆசார்யர்கள் படித்து நியாய சாஸ்திரங்களின்படி மிக நுணுக்கமாகவும், தர்க்க ரீதியாகவும் ஆராய்ந்து அந்த தத்துவங்கள் எவ்வாறு தவறானது என்று விளக்கி, அதற்கு கண்டனமும் அவர்களுடைய நூல்களில் தந்திருக்கிறார்கள். ஜின தர்மமே மற்ற எல்ல தர்மங்களையும் விட தலை சிறந்தது என்று நிரூபித்திருக்கிறார்கள். சாதாரணமாக நாம் ஒவ்வொருவரும் எல்லா மத கோட்பாடுகளையும் படித்து அவைகளை தெரிந்து கொண்டு பிறகு சிறந்தது எது என்று உறுதி செய்ய தேவையான நீண்ட ஆயுளும், அதற்கு தேவையான அறிவும் பெற்றிருப்பது மிகவும் அரிதான ஒன்றாகும்.

2. எல்லா கடவுளையும் வணங்குபவர்கள், அதாவது குதேவ, அதேவர்களையும் வணங்குபவர்கள், தர்க்க ரீதியிலான பகுத்தறிவு இல்லாதவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஒரு சாதாரண மண் பானை வாங்குவதாக இருந்தால் கூட, தரமானதா என்று தட்டி பார்த்து சோதித்த பிறகே வாங்குகிறோம், ஆனால் நாம் வணங்கும் கடவுளை, அவர் உண்மையிலேயே கடவுள்தன்மை உள்ளவரா? வணங்கத் தகுதியானவரா? என்று கூட யோசிக்காமல், யாரெல்லாம் வணங்கப்படுகிறார்களோ அவர்கள் எல்லோரும் கடவுள்களே என்றும், எல்லா கடவுளும் சமமானவர்களே என்றும் முடிவுக்கு வருவது எப்படி ஒரு சரியான முடிவாக இருக்க முடியும்?

நமக்கு உடம்பு சரியில்லை என்றால் டாக்டர் என்று பெயர் பலகை மாட்டி வைத்திருக்கும் யாரிடம் வேண்டுமானாலும் சென்று வைத்தியம் செய்து கொள்வோமா? நல்ல ஸ்பெஷலிஸ்ட் யார், அதில் அனுபவமும், திறைமையும் வாய்ந்தவர் யார் என்று பார்த்து தானே செல்கிறோம். கடவுள் விஷயத்தில் மட்டும் எப்படி எல்லோரும் சமம் என்று நினைக்கலாம்? பல தலைமுறைகளாக உள்ள சில மூட பழக்கத்தாலும், மற்ற மதத்தவர்களோடு அதிகமாக பழகும் தோஷத்தாலும், கடவுள்களை பற்றி எந்த விதமான ஆய்வும் செய்யத் தவறியவர்களே அப்படிப்பட்ட எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றனர். கடவுள் யார் என்று சோதித்து ஏற்பவர்களை அவர்கள் நாகரீகம் அற்றவர்கள் என்றும் இன்னும் பழங்கலத்திலேயே வாழ்பவர்கள் என்றும் கேலி பேசுகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் தங்களை தாங்களே நாகரீகமானவர்கள் most modern என்றும் **சர்வ தர்ம சமபாவிகள்** என்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்கின்றனர். உண்மையில் சமபாவம் என்பதன் பொருள் ஆசை, கோபம் இல்லாமல் இருப்பது, மாற்று கருத்து உடையவிரிடத்தில் நடுநிலைமை வகிப்பது. இது ஒரு பொது கருத்து. இதை விட ஆழமான ஒரு கருத்து அத்யாத்மத்தில் இருக்கிறது. அதை விவரித்தால் இப்போது உங்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் அவர்கள் வணங்க விரும்பும் எல்லா கடவுள்களும், உண்மையான கடவுளுக்கு அவசியம் இருக்க வேண்டிய வீதராகத்துவம்-இராக, த்வேஷம் அற்ற தன்மை கொண்டவர்களாகவா இருக்கிறார்கள்? இப்படிச் கண் மூடித்தனமாக எல்லா கடவுளுக்கும் வந்தனை செய்வதை **வினைய மித்யாத்வம்** என்றும் **லோக மூடம்** என்றும் சொல்லப் படுகிறது.

3. நமோக்கார மந்திரத்தில் **ணமோ லோயே சவ்வ சாஹூணம்** என்று சொல்வதன் பொருள் உலகில் உள்ள எல்லா சாதுக்களுக்கும் வணக்கம் செய்வதாகும். சாது என்பது திகம்பர ஜெயின் முனிவர்களையே குறிக்கும். அதாவது ஆசாரியர், உபாத்யாயர், சாது-முனி இந்த மூவகையினரைத்தான் சாஹூ என்ற ப்ராக்ருத மொழியில் சொல்கிறார்கள். நமோக்கார மந்திரத்தை மட்டுமே படித்தவர்கள் அர்த்தத்தை அனர்த்தமாக, எல்லா சமயத்திலும் உள்ள முனிவர்களையும் திகம்பர சாதுக்களுக்கு சமமாக எடுத்துக் கொள்வார்களானால், அவர்கள் சாஸ்திரங்களை படித்து என்ன என்ன அர்த்தம் கொள்வார்களோ என்று கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. சாஸ்திரங்களை படித்து பொருளை புரிந்து கொள்ளும் முறை பற்றி அடுத்த கடிதத்தில் விரிவாக சொல்கிறேன்.

ஒரு சிலர் இப்படி சொல்கிறார்கள், நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் தத்துவப் பயிற்சி செய்யுங்கள், நாங்கள் உங்களுடைய ஸ்வாத்யாயத்திற்கு எல்லா விதத்திலும் உதவியாக இருக்கிறோம், ஆனால் நாங்களும் தத்துவப் பயிற்சி செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்காதீர்கள். இவ்வாறு ஒவ்வொருவரும் செயல் பட்டால், எந்த தத்துவ அறிவையும் நம் சந்ததியர்களுக்கு நம்மால் கொடுக்க முடியாமல் போகும்.

இத்த காலத்தில் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை 2-3 வயதிலேயே மிகச் சிறந்த பள்ளியில் சேர்த்து விடுகின்றனர். இதற்கு அவர்கள் பல லட்சங்களைக்கூட நன்கொடையாகத் தர தயாராக உள்ளனர். பெயர் பெற்ற பள்ளியில் சேர அனுமதி கிடைத்து விட்டால் அதையே ஒரு பெரிய சாதனையாக கருதுகின்றனர். முதலில் குழந்தைகள் பள்ளிக்கு செல்ல அழுது அடம் பிடிக்கிறார்கள், ஆனால் அவர்கள் மேல் எந்த கருணையும் காட்டாமல், அழுது புரளும் குழந்தையைக்கூட பள்ளியில் விட்டுவிட்டுத்தான் வருகின்றனர். ஏனெனில் அவர்களுக்கு கல்வியின் அவசியம் புரிந்திருக்கிறது. நன்கு படித்து பட்டம் பெற்றால்தான் அவர்கள் வாழ்க்கையில் நல்ல வேலையிலும், சமூகத்தில் நல்ல அந்தஸ்துடனும், பிற்காலத்தில் வசதியாக வாழ முடியும் என்று நினைக்கிறார்கள். அழியும் இந்த உடலுக்கு மட்டுமே நன்மை செய்யும் லௌகீக கல்விக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோர்கள், அழியாத தன் ஆன்மாவுக்கு நன்மை செய்யும் தத்துவக் கல்வியை அவர்கள் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும் என்பதில் மட்டும் கவலையின்றியே இருக்கிறார்கள். அவர்களுக்கு தத்துவக் கல்வியின் அவசியம் புரிந்தால் தானே, அவர்களும் உரிய காலத்தில் அதை பயின்றால் தானே, தன் ஆன்மனுக்கு நன்மை செய்து கொள்ள முடியும், பிறகு சந்ததியர்களுக்கும் அதை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்.

மேலும் இக்காலத்தில் தாய் மொழி அல்லாத ஆங்கிலத்தில் மாணவர்கள் கல்வி பயிலுவதால், மேலும் நம் தத்துவ அறிவு பெருவதிலிருந்து வெகு தூரம் சென்று விடுகிறார்கள். இந்த நிலையில் நம் சந்ததிகளுக்கு தத்துவக் கல்வி கொடுப்பதில் நம் பொறுப்பு தான் அதிகமாகிறது. அவர்களுக்கு இந்த விலை மதிப்பற்ற ஜினவாணியில் சொல்லப்பட்ட தத்துவக் கல்வியை கொடுப்பது நம் தலையாய கடமையாகும். இந்த காலத்தில் ஜினவாணி எல்லா மொழிகளிலும், ஏன் ஆங்கிலத்திலும் கூட கிடைக்கிறது. நான் இதை கருத்தில் கொண்டு எடுத்திருக்கும் இந்த உண்மையான முயற்சியின் வடிவமே இந்த கடிதம் மூலம் சமண தத்துவ அறிமுகம் என்றால் மிகையாகாது. என்னுடைய முதல் கடிதத்தை படித்ததும் என் தங்கை, ரேஷ்மா இவ்வாறு கூறினாள் “ஒரு சில வார்த்தைகளும் அதன் பொருளும் உடனடியாக எனக்கு புரியவில்லை, என்றாலும் அதையே 3-4 முறை ஆழ்ந்து படித்ததும் அதன் பொருளை புரிந்து கொள்ள முடிகிறது. முன்னர் நான் என் உயிரும், உடலும் ஒன்றே என்ற எண்ணத்தில் இருந்தேன் ஆனால் அது அவ்வாறு இல்லை என்பதை இப்போது உணர்கிறேன். அதன் உண்மை நிலைகளை இப்போதுதான் நான் சரியாக புரிந்து கொள்கிறேன்.”

இன்றய பொருள் சார்ந்த உலக வாழ்க்கையில் நாம் பணம் சம்பாதிக்க உகந்த பல விஷயங்களை பற்றிய அறிவை பெறுவதில் முழு முயற்சி செய்கிறோம். ரீனா, உன்னுடைய மாமனார், திரு. சசிகாந்த் ஜீ அவர்களைப் பார். அவர் நவீன தொழில் நுட்பம், மருத்துவம், திரைப்படத்துறை முதலான பல்வேறு துறைகளில் மிகுந்த அறிவு பெற்றிருப்பது மிகவும் வியப்பாக இருக்கிறது. அவ்வளவு விஷயங்களில் அவர் நேரத்தை செலவு செய்தாலும், தத்துவ அறிவு பெருவதில் அவர் எடுத்துக் கொள்ளும் முயற்சியும் பாராட்டத் தக்கதாக இருக்கிறது. அவரைப் போன்று திறந்த மனதுடன் புதியதான எதையும் கற்க முற்பட்டால், அதை கற்பதிலும் அதை புரிந்து கொள்வதிலும் எந்த சிரமமும் இருக்காது. அமிர்தசந்திர ஆசாரியர் அவருடைய “ஆத்மக்யாதி” என்ற நூலில் “अयि कथमपि मृत्वा तत्त्वा कौतूहली सन्” என்று கூறியிருக்கிறார். இதன் பொருள் “ஒருவர் தத்துவ ஞானத்தை பெறவும் அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளவும் தன் உயிரையும் துச்சமாக நினைத்து எந்த விலையையும் கொடுக்க தயாராக இருக்க வேண்டும்” என்பதாம். சந்திக்கும் வரை,

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-4 15-8-1993

ஜினாகமங்களில் பொருள் காணும் வழிமுறை

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நீங்கள் என் அடுத்த கடிதத்தை எதிர்பார்த்து காத்துக்கொண்டு இருப்பதையும், என் பழய கடிதங்களை மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பதையும் அறிவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் அவைகளை திரும்ப எடுத்து படிக்கவும், அதில் கூறப்பட்டுள்ள மர்மங்களின் ஆழமான அர்த்தங்களை புரிந்து கொள்ளவும் அக்கடிதங்கள் உங்களுக்கு பேருதவியாக இருக்கும். ஆரம்பத்தில் அதில் வரும் புதுப்புது சொற்களும், சாஸ்திர சம்பந்தமான கலைச்சொற்களும் உங்களை சற்று குழப்பத்தில் ஆழ்த்தலாம், ஆனால் மீண்டும் மீண்டும் வாசிக்கும்போது இச்சொற்கள் பரிச்சயமாகி உங்கள் நினைவில் நிற்கும். எப்படி என்றால், நாம் தொலைகாட்சியில் (TV-ல்) தொடர்கள் பார்க்கும் போது முதல் இரண்டு மூன்று நாட்களில் (in first few episodes) யார், யார் என்னென்ன மாதிரியான பாத்திரங்கள் என்பது புரியாமல் இருப்போம், ஆனால் சில தினங்கள் அத்தொடரின் ஒளிபரப்பை பார்த்த பிறகு, யார் யார் எந்த மாதிரியன பாத்திரங்கள் என்பது நமக்கு தெரிந்து விடுகிறது அல்லவா! அது போலத்தான்.

சமண தத்துவத்தில் முழுமையான அறிவு பெருவது ஒவ்வொருவருக்கும் மிகவும் அத்யாவசியமானது என்று முன் கடிதத்தில் கூறியிருந்தேன். ஜின தர்மத்தில் பல சாஸ்திரங்கள் இருப்பதால், தத்துவப் பயிற்சி செய்தல் என்றால் உண்மையில் நாம் என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வி நம் மனதில் சகஜமாகவே எழும். சாஸ்திரங்களை நமக்கு நாமே வாசிக்கும்போது, அதில் கூறியிருப்பதை நம்மால் எளிதாக புரிந்து கொள்ள முடிவதில்லை. ஜெயின் சாஸ்திரங்களை வாசிப்பதில் மட்டும் இவ்வாறு இல்லை, எந்த துறையை சார்ந்த புத்தகமானாலும், நமக்கு நாமே சுயமாக படிக்கும் போது, அதில் கூறியுள்ள கருத்துக்கள் நமக்கு சரியாக புரிவதில்லை என்பது உணமைதான். மருத்துவவியல் மற்றும் இயந்திரவியல் சார்ந்த துறையில் பல கைதேர்ந்த நிபுணர்கள் எழுதிய புத்தகங்கள் சுலபமாக கிடைத்த போதிலும், அந்த கல்வி சம்பந்தமான கல்லூரிகளில் சேர்ந்து, அங்கு உள்ள பேராசிரியர்களின் வழிகாட்டுதலின் படி படித்துத்தான் மாணவர்கள் மருத்துவம் மற்றும் இஞ்சினியரிங் பட்டங்களை பெறுகிறார்கள் அல்லவா. யார், யார் எந்தெந்த துறையில் அறிவும், அனுபவமும் பெற விரும்புகிறோமோ, அவரவர்கள் அந்தந்த துறை சார்ந்த வல்லுனர்களின் துணையை கொண்டுதான் அதை பெற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தன் ஆத்மாவை அறிந்து, அனுபவிக்கும் குருக்கள் மற்றும் ஞானிகள் தான் முறையாகவும் மற்றும் மிகச்சரியாகவும் ஜினாகமங்களில் கூறியுள்ள மர்மங்களின் பொருள்களை எடுத்துச் சொல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள். யார் வீதராக தன்மையை தன்னில் வெளிப்படுத்தியுள்ளாரோ அவரே ஆழ்ந்த தத்துவ கருத்துக்களை தெளிவாக தெரிந்தவரும் மற்றும் அவைகளை விரிவாக விளக்குபவராகவும் இருக்கிறார். சாஸ்திரங்களின் மறைந்துள்ள மர்மங்களை வெளிப்படுத்துவதில், அந்த சாஸ்திர சொற்களின் அகராதி அர்த்தத்தை-literally translated meaning-ஐ தெரிந்து கொள்வதால் மட்டுமே முடியாது. அகராதி அர்த்தத்துடன், அதன் உட்பொருள் intended meaning, ஆகமப் பொருள்-particular book intended meaning, நயப்பொருள்-meaning according to the reasoning, மத-சமய-தர்ம பொருள்-meaning according to religious interpretation முதலான ஐந்து வகை அர்த்தங்களையும் தெரிந்து கொள்ளுதல் மிகமிக அவசியமாகும்.

ஒரு சாதாரண உதாரணத்தின் மூலம் இதை விளக்குகிறேன். ஒரு அறியாத சிறு பெண்ணிடம் அவள் அம்மா “இங்கே பார், இந்த பாலில் வெண்ணெய் இருக்கிறது, அதை பிரித்து எடு” என்றால், அந்த சிறுமி தன் தாய் சொன்னதைக் கேட்டு பாலில் வெண்ணெய் தெரியாததால் குழம்பித்தான் போவாள். அல்லது இந்த கால அதி புத்திசாலியான பெண்ணாக இருந்தால், “அம்மா! என்ன என்னிடம் விளையாடுகிறார்களா? இந்த பாலில் எங்கே வெண்ணெய் இருக்கிறது? எனக்கு அப்படி எதுவும் தெரிய வில்லையே” என்று கூறுவாள். ஆனால் யாருக்கு பாலிலிருந்து வெண்ணெய்யை பிரித்தெடுக்கும் கலை தெரியுமோ அவர், அந்த குழந்தைக்கு “பாலை காச்சி, பொறைமோர் இட்டு, தயிராக மாற்றி, அந்த தயிரை மத்தால் கடைந்தால் வெண்ணெய் அதில் திரண்டு வரும், அப்போது நமக்கு தேவையான வெண்ணெய்யை அதிலிருந்து எடுக்கலாம்” என்று தெளிவாக புரியும்படி, அதாவது பாலிலிருந்து வெண்ணெய்யை பிரித்தெடுக்கும் கலையை, அந்த செயல் முறையை தெளிவாக எடுத்துச் சொல்லுவாள். அதுபோல சாஸ்திரங்களை நன்கு தெரிந்த ஆசாரியர்கள்-ஞானிகள், நமக்கு சாஸ்திரத்தில் இருந்து அர்த்தத்தை எப்படி புரிந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகளை தெளிவாக புரியும்படி சர்ச்சை செய்து நமக்கு விளக்குகிறார்கள். இப்போது மேற்கூறிய ஐந்து அர்த்தங்கள் ஒவ்வொன்றையும் பற்றி மேலும் விரிவாக சொல்கிறேன், கேளுங்கள்.

சொற்பொருள்: இதுதான் சாதாரணமாக எல்லோராலும் எடுத்துக் கொள்ளும் அர்த்தமாகும், அதாவது அகராதியில் கொடுக்கப் பட்டுள்ள அர்த்தமாகும். நம்முடைய ஆகமங்கள் சூத்திரங்களாகவோ அல்லது சொற்றொடர்களாகவோ இருக்கின்றன. சொற்றொடர்களுக்கான நேரான அகராதி அர்த்தத்தை சப்தார்த்தம் அல்லது சொற்பொருள் என்று சொல்கிறோம். சொல்லின் அகராதி அர்த்தத்தை வைத்து அதனுடைய உட்பொருளை (நூலாசிரியர் உணர்த்த வரும் கருத்தை) அறிந்து கொண்டோம் என்று சொல்ல முடியாது. உதாரணமாக, ஒரு சிறிய குழந்தை “எனக்கு காதல் வந்தது...” என்ற ஒரு திரைப்பட பாடலை பாடினால், அதற்கு அதன் உண்மையான அர்த்தம் என்ன என்று தெரியாது அல்லவா. சாஸ்திரங்களில் உள்ள மர்மங்களை தெரிந்து கொள்ள சொற்பொருளுடன் அதன் உட்பொருளையும் (ஆசாரியார் என்ன சொல்ல வருகிறார் என்பதையும்) தெரிந்து கொள்வது மிக அவசியமாகும்.

உட்பொருள்: சொல்லின் உள்ள மர்மத்தை தெளிவுபடுத்தி கூறுவதை பாவார்த்தம் அல்லது உட்பொருள் என்பர். நம்முடைய ஆகமங்கள் பெரும்பாலும் ப்ராக்ருத மற்றும் சமஸ்கிருத மொழியில் உள்ளன, ஆனாலும் இந்த மொழி வல்லுனர்கள் எல்லோரும் உட்பொருளை எடுத்துக் கூற வல்லவர்கள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. சொற்பொருளுடன் அதில் மறைந்துள்ள உணர்வுப் பொருளை (உட்பொருளை) அறிந்தவராக இருத்தல் வேண்டும். உதாரணமாக ஒரு பாலகன், தன் தாயிடம் அனுமதி பெறாமல் ஒரு திரைப்படத்தை பார்த்து விட்டு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தால், அந்த அம்மா இவ்வாறு சொல்லுவார் “நீ பெரியவனாகி விட்டாய், போ, போ இன்னுமொரு படம் பார்த்துவிட்டு வா”. அவன், தன் அம்மா சுற்றி வளைத்து கூறியதை சரியாக புரிந்து கொண்டால், அந்த சிறுவனுக்கு தான் செய்தது தவறு என்று உணருவான். ஆனால் அவன் தாயார் கூறியதை மேலோட்டமாக வெரும் சொற்பொருள் நோக்கில் மட்டும் எடுத்துக் கொண்டால், அவன் தன் செயலால் அம்மா இன்று மகிழ்ச்சி அடைந்து விட்டார்கள், அதனால் தான் இன்னுமொரு திரைப்படம் பார்த்து விட்டு வா என்று சொல்கிறார்கள் என்று நினைப்பான். அவ்வாறு எண்ணி இன்னுமொரு திரைப்படம் பார்க்க சென்றால், அவனை மூர்கன் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்.

ஆகம பொருள் அல்லது நூற்பொருள்: ஜின ஆகமத்தை அதாவது முழுமையான ஜின நூலை நாம் சாஸ்திரம் என்று சொல்கிறோம். அந்த சாஸ்திரங்கள் நான்காக பகுக்கப் பட்டுள்ளன. அவைகள் அத்யாத்ம நூல்கள் (திரவியானுயோகம்), ஆசரண நூல்கள் (சரணானுயோகம்), உலக அமைப்பு மற்றும் கர்ம சித்தாந்தத்தை விளக்கும் நூல்கள் (கரணானுயோகம்), மற்றும் தத்துவ சம்பந்தமான கதைகளை கூறும் நூல்கள் (பிரதமானுயோகம்) என்பனவாகும். நாம் வாசிப்பது எது சம்பந்தமான நூல் என்பதை கருத்தில் கொண்டு அதில் கூறப்பட்ட பொருளை புரிந்து கொள்ளுதல், மற்றும் அவ்வாறு கூறுவதன் நோக்கத்தை தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். அவ்வாறு செய்யாவிட்டால் நம் சாஸ்திரங்களில் ஒரே விஷயம் வேறு வேறு விதமாக பொருள் கொண்டதாக இருப்பதாக, ஒன்றில் கூறப்பட்டது வெரொன்றில் மாறான கருத்து கொண்டதாக, தவறாக புரிந்து கொள்ளும் அபாயம் நேரிடும்.

நயார்த்தம் : சம்யக் சுருத ஞானத்தின் ஒரு பகுதியை நயம் என்று சொல்கிறோம். ஒரு பொருள், பல கோணங்களில்-நோக்கில் அறியப் படுகிறது. எந்த நோக்கில் சொல்லப் படுகிறதோ அதே நோக்கில் பொருளை அறிந்து கொள்வதை நயார்த்தம் என்று சொல்கிறோம். எப்படி என்றால், எப்போது **நெய் குடம்** என்று சொல்லும் போது எந்த **குடத்தில் நெய் வைக்கப் பட்டுள்ளதோ அந்த குடம்** என்று நெய்யும், குடமும் ஒன்றாக இருக்கும் நோக்கில், மண்ணால் செய்த குடத்தை, நெய் குடம் என்று சொல்லப் படுகிறது என்பது போன்று யதார்த்தமான அர்த்தத்தை கொள்ள வேண்டும்.

உடலுடன் இருக்கும் உயிரை, எந்த உடலுடன் இருக்கிறதோ அந்த நோக்கில் மனித உயிர், விலங்கு உயிர் என்று சொல்கிறோம் என்று முன் கடிதத்தில் எழுதியிருந்தேன். நிகழ்காலத்தில் உயிர் எந்த நிலையில் இருக்கிறதோ அந்த நிலையின் இயல்பு நோக்கில் எடுத்துச் சொல்வது நயத்தின் வேலையாகும். ஒரு **குறிப்பிட்ட நோக்கில்** என்று சொல்ல **கதன்சித்** அல்லது **ஸ்யாத்** என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது. ஜின சாஸ்திரங்களில் சொல்லப்படுவதெல்லாம் இந்த ஸ்யாத்வாத முறையிலேயே சொல்லப்படுகிறது, அதனால் ஜினதர்மத்தை **ஸ்யாத்வாத மதம்** என்று சொல்கிறார்கள். சாஸ்திரத்தில் ஒவ்வொரு விளக்கத்திலும் **ஸ்யாத்** என்ற சொல்லை கூறியே எந்த நோக்கத்தில் கூறப்படுகிறது என்று சொல்ல வேண்டிய கட்டாயம் இல்லை, ஆனாலும் ஏதாவது ஒரு நோக்கிலேயே ஜினவாணியில் விளக்கங்கள் கூறப்படுகின்றன. ஆகையால் எங்கு எத்த நோக்கில் கூறப்படுகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். **நய சக்கரம்** என்பதே மிகப் பெரியதும் மற்றும் ஜின சாஸ்திரங்களை சரியான முறையில் புரிந்து கொள்ள அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயமுமாகும். இப்போது இந்த இடத்தில் விரிவாக அதை விளக்க இயலாது என்பதால் அதிகமாக உபயோகப் படுத்தப்படும் மூன்று நான்கு பெயர்களை மட்டும் இங்கு கூறுகிறேன். அவைகளாவன **நிச்சய நயம், வியவஹார நயம், திரவ்யார்திக நயம், பர்யாயார்திக நயம்** என்பன. இதன் பெயர்களை மட்டும் இப்போது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், இதை பிறகு ஒரு சரியான சந்தர்ப்பத்தில் உங்களுக்கு விளக்குகிறேன்.

மதார்த்தம்: சாஸ்திரத்தில் சொல்லப்படுவது, அதாவது வீதராக சர்வஞ்ஞரால் சொல்லப்படுவது எவ்வாறு உண்மையானது என்று பல தர்கங்கள் மற்றும் யுக்திகள் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது. ஏதாவது ஓரிரண்டு வரி ஸ்லோகமாக இருந்தாலும் அதில் ஒவ்வொரு சொல்லும் மற்ற மதங்களின் கருத்து எவ்வாறு தவறானது என்று விளக்கம் செய்வதாக இருக்கிறது.

ஜின சாஸ்திரம் சர்வஞ்ஞரால்-முழுதுணர் அறிவனால் சொல்லப்பட்டது. ஓம்கார வடிவில் திவ்வத்தொனி வெளிப்படுகிறது. கணதரர்கள் இந்த திவ்வயத்தொனியை கேட்டு பன்னிரண்டு அங்கங்களாக தொகுத்திருக்கிறார்கள். பல ஆசார்யர்களின் பரம்பரையில் இவை செவி வழியாகவே கேட்கும் வகையில் சொல்லப் பட்டு வந்தது. காலப்போக்கில் ஞாபகமறதி அதிகமானதால், ஆத்மானுபவி-தன் ஆன்மனில் ஆழ்ந்து அனுபவித்த வீதராகி திகம்பர ஜெயின் முனிவர்கள் அந்த உபதேசங்களை ஆதாரமாக கொண்டு பல சஸ்திரங்களையும், அதற்கு தெளிவுரைகளையும் எழுதியுள்ளார்கள். ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு இதை எடுத்துச் செல்ல மட்டுமே அவர்கள் இதை செய்ய வில்லை, ஆனால் அவர்கள் தாங்களே அறிந்த்தை தங்கள் ஆன்மனில் ஆழ்ந்து அனுபவித்து, அவர்களுடைய சிஷ்யர்களுக்கு உபதேசித்துள்ளார்கள். இவ்வாறு சமண கொள்கைகளை பல யுக்திகளால் நிஜமானவை என்று ஸ்தாபிப்பதும், மற்ற மத கொள்கைகளின் குற்றங்களை வெளிப்படுத்தி அவைகள் தவறானவை என்று நிராகரிப்பதும் மதார்த்தத்தில் அடங்கும்.

ஜின ஆகமங்களில் எந்தெந்த விஷயம் சர்ச்சை செய்யப்படுகிறது, எவை விபரிக்கப் படுகிறது என்பதை கருத்தில் கொண்டு, அவைகளை நான்காக பிரித்துள்ளனர். இந்த முறை பிரிவுகளை அனுயோகம் என்று கூறுகிறோம். **பிரதமானுயோகம், சரணானுயோகம், கரணானுயோகம்** மற்றும் **திரவ்யானுயோகம்** என அனுயோகங்கள் நான்காகும். அவைகளை பற்றி இப்போது ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

பிரதமானுயோகம்: உயிர்களுக்கு தர்மத்தில் ஆர்வமும், விழிப்புணர்வும் மேலிடும் வகையில் கதை வடிவில் தீர்த்தங்கரர்கள், சக்ரவர்த்திகள் முதலானவர்களைப் பற்றிய வர்ணனை எந்த நூல்களில் சொல்லப்பட்டுள்ளதோ, மேலும் எதில் கதைகளின் வாயிலாக தத்துவ உபதேசம் கொடுக்கப்பட்டுள்ளதோ அப்படிப்பட்ட நூல்களை பிரதமானுயோகம் என்று சொல்கிறோம்.

முதன்முதலில் தத்துவ பயிற்சி செய்யும் உயிர்களுக்கு புண்ணியம் சம்பாதிப்பதின் மேலும், புண்ணியத்தின் பயனால் அடையப்படும் செல்வ சிறப்புகளின் மேலும் அதிகமாக ஈர்ப்பு உண்டாகிறது. ஆகையால் புண்ணியத்தின் மஹத்துவத்தை சொல்லி உயிர்களுக்கு உண்மையான தர்மத்தின் மீது ஈடுபாடும், ருசியும் தோன்றும் வகையில் பிரதமானுயோகத்தில் கதைகள் சொல்லப்படுகின்றன. சிறுவர்களுக்கு இனிப்பின் மேல் ஆசை இருப்பதை கருத்தில் கொண்டு, இனிப்புகள் வாங்கித்தந்து அவர்களை பள்ளிக்கு அனுப்ப தயார் செய்வது போலத்தான் இது என அறிதல் வேண்டும். நமோக்கார மந்திரத்தின் மஹிமையை கூறி, கடவுளை தரிசித்தல், நமோக்கார மந்திரம் ஜபித்தல், பூஜை செய்தல், ஸ்வாத்யாயம் செய்தல் முதலியவைகளில் ஈடுபாடு ஏற்பட வகை செய்யப்படுகிறது. அதற்கு பிறகு தர்மத்தின் மேல் அவர்களுக்கு உள்ள ஈடுபாட்டையும், ஆர்வத்தை பார்த்து, அப்படிப்பட்ட உயிர்களுக்கு அரஹந்தர், சித்தர்களின் இயல்பு, தீர்த்தங்கரர்களாலால் உபதேசிக்கப்பட்ட மோக்ஷ மார்கம் பற்றி ஞானேபதேசம் செய்யப் படுகிறது.

நமோக்கார மந்திரத்தின் மஹிமை பற்றி ஒன்று என் நினைவுக்கு வருகிறது. ஒரு அறிஞரும் சிவாஜி பல்கலைகழக முன்நாள் துணைவேந்தருமான திருவாளர். சிவாஜிராவ் போஸ்லே இந்த மந்திரத்தின் பெருமையை பற்றி அவருடைய சொற்பொழிவுகளில் பலமுறை பேசியிருக்கிறார். அவர் பேசியதை 1984-ல் நான் கூட கேட்டிருக்கிறேன். அவர் பிறந்த வளர்ந்த ஊரான பல்டனில் ஒரு மூதாட்டி தேள் கொட்டியவர்களுக்கு மருந்து எதுவும் கொடுக்காமல் மனதுக்குள் ஏதோ மந்திரம் சொல்லி அந்த விஷம் விலக வைத்தியம் செய்து வந்தாராம். தேள் கொட்டிய பலர் இதற்காக இந்த மூதாட்டியிடம் வருவார்களாம். இளமையில் சிவாஜிராவ் போஸ்லே இதை பார்த்து ஆச்சர்யப் படுவாராம். இவர் பெரியவராக ஆன பிறகு அந்த மூதாட்டியிடம் சென்று எப்படி தேள் கொட்டிய விஷத்தை

குணப்படுத்துகிறீர்கள் என்று கேட்டாராம். அதற்கு அம்மூதாட்டி பஞ்ச நமோக்கார மந்திரத்தை என் மனதில் ஜபித்தே இவ்வாறு செய்கிறேன் என்று கூறினாராம். இதை கேட்ட அவர், பஞ்ச நமோக்கார மந்திரத்திற்கே இவ்வளவு சக்தி இருக்கிறதென்றால், அந்த மந்திரத்தை கடவுள் வாழ்த்தாக கொண்ட ஜினதர்மத்தின் மஹிமையும், சக்தியும் எவ்வளவு சிறந்ததாக இருக்கும் என்று சிந்தனை செய்து, ஜின ஆகமங்களை ஆழ்ந்து படித்து அவைகளை தெரிந்து கொண்டாராம். இது போன்று ஜின தர்மத்தில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையான நூல்களே பிரதமானுயோக நூல்களாகும்.

பிரதமானுயோக கதைகளின் மூலம் நமக்கு நல்லொழுக்க பண்பாடு கிடைக்கிறது. நம்மிடமிருந்து மூட பழக்க வழக்கங்கள் விலகி விடுகின்றன. நாம் என்னென்ன படிக்கிறோமோ, கேட்கிறோமோ, தொலைகாட்சி வழியாக படங்கள் பார்க்கிறோமோ, பாடல்கள் கேட்கிறோமோ அவைகளின் தாக்கம் அல்லது விளைவு நம் மனதில் உண்டாகவே செய்கிறது. இவைகளை பற்றி நாம் தெரிந்தோ தெரியாமலோ சிந்தனை செய்கிறோம். இது போன்றே நாம் பிரதமானுயோக கதைகளை படிக்கும்போது நாம் அடிக்கடி அதைப்பற்றி சிந்தனை செய்கிறோம்.

சிலருக்கு புராண கதைகளில் வருபவைகளின் மேல் இவ்வாறு கூட நிகழுமா? என்ற சந்தேகம் வருகிறது. பலர் இவைகளை படிப்பது ஒரு பொழுதுபோக்கு மற்றும் ஹாஸ்ய சம்பந்தமான-குழந்தைகள் கார்டூன் பார்ப்பது போல சந்தோஷமாக இருப்பதற்கான ஒரு விஷயம் என்று நினைக்கின்றனர். ஆனால் இன்றய விஞ்ஞான உலகில் முன்பு எதுவெல்லாம் கற்பனை என்று நினைத்தோமோ, அவைகள் எல்லாம் இப்போது நிஜமாகவே நம் உபயோகத்திற்கு வந்துவிட்டதை பார்க்கிறோம். ஆனால் நாம் பிரதமானுயோக கதைகளில் படிப்பவைகளை மட்டும் ஏன் அந்த காலத்தில் அவை நிஜமாக நடந்தவை என்று ஏற்க மறுக்கிறோம்? என்று யோசிக்க வேண்டியுள்ளது. பழங்காலத்தில் வாழ்ந்த மக்களிடம், மந்திரத்தால் பல காரியங்களை சாதிக்கும் சாமர்த்தியம் தெரிந்திருந்தது, இந்த காலத்தில் விஞ்ஞானத்தின் மூலமும், தந்திரம் செய்தும் காரியத்தை சாதிப்பது பிரபலமாகி விட்டது. ஆகையால் பிரதமானுயோக கதைகளில் வரும் நிகழ்வுகளை நாம் சரியான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

எந்த அனுயோகத்தை படித்தாலும், நான்கு அனுயோகங்களின் சாராம்சமும் **வீதராகத்துவம்** பற்றியதே யாகும். அவைகளை படித்து அந்த வீதராகத் தன்மையை தெரிந்து கொள்ளுதல், அந்த தன்மையை நம்மில் வெளிப்படுத்த முயலுதல் நிகழ்ந்தால் தான் உண்மையான நன்மை உண்டாகும். **பிரதமானுயோகம் வெரும் கதைகளை சொல்வதற்கு மட்டுமல்ல, நம்மிடம் வீதராக தன்மை வரவேண்டும் என்பதற்குத்தான் என்று அறிதல் வேண்டும்.** தீர்தங்கரர்களின் வாழ்க்கை வரலாற்றை படித்து எப்படி ஒருவர் ஆத்ம அறிவு பெற்று, முனியாகி, அரஹந்தர் மற்றும் சித்தர் நிலையை அடைகிறார் என்று நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. ஒரு உயிரின் பல பிறவிகள் சம்பந்தமான கதைகளைப் படிப்பதால், எனக்கு கிடைத்திருக்கும் இந்த மனித பிறவி மட்டுமே நான் இல்லை, நானும் முன்னர் பல பிறவிகள் எடுத்திருக்கிறேன் என்ற உண்மையை தெரிந்து கொள்ள முடிகிறது. மிக அதிக செல்வ செழிப்பில் வாழ்ந்த சக்கரவர்த்திகள் கூட எல்லா வைபவங்களையும் துறந்து முனியாகித்தான் முக்தி அடைந்தார்கள் என்பதை அறிகிறோம். இவைகளை தெரிந்து கொள்வதால் சொத்து, மனைவி, உறவுகள், வைபவம் மற்றும் அதிகாரம் முதலானவைகள் எதிலும் கொஞ்சம் கூட சுகம் இல்லை என்பதை நம்மால் உறுதி செய்ய முடிகிறது.

சரணானுயோகம்: விரதம் மற்றும் தபம் பற்றி எடுத்துக்கூறும் நூல்கள் சரணானுயோகம் எனப்படும். இந்நூல்களில் நற்காட்சியின் மஹத்துவம் மற்றும் அதன் இயல்பை-ஸ்வரூபத்தை முதன்முதலில் விளக்கிச் சொல்லி, பிறகு விரதம் மற்றும் தவம் பற்றிய வர்ணனைகள் சொல்லப்படும். நற்கட்சியை பெருவதே நாம் முதன்முதலில் செய்ய வேண்டிய காரியம் ஆகையால், இந்த நூல்களில் கூறப்பட்டுள்ள விரதமும், தபமும் அதாவது நன்னடத்தையும், நல்லொழுக்கமும் நற்காட்சியின் அடிப்படையில் அமைந்ததாகவே இருக்கும். நற்காட்சி பெருவதிலிருந்து தான் உண்மையான தர்ம வாழ்க்கை ஆரம்பிக்கிறது, மோக்ஷ மார்கம் தொடங்குகிறது. பிறகு முக்திப்பதையின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறது என்பதை இதில் முன்னேறுபவர்களிடம் வெளியில் காணப்படும் ஒழுக்க முறையை வைத்து வர்ணனை செய்யப்படுகிறது. சரணானுயோக நூல்களில் அப்படிப்பட்ட மோக்ஷ மார்கத்தில் இருப்பவர்களிடம் அந்தரங்கத்தில் வீதராகத்துவமும், அந்த வீதராக தன்மைக்கு உகந்தார்போல் ஒருங்கிணைந்த வெளி ஒழுக்க நிலையும் எவ்வாறு ஒன்றுக்கொன்று துணையாக இருக்கின்றன என்பது தெளிவாக விளக்கப்பட்டு இருக்கிறது.

யார் ஜெயின தத்துவ ஞானத்தை பெற விரும்புகிறார்களோ அவர்கள் கூட நல்லொழுக்கத்துடன் கூடிய வாழ்க்கை வாழ்வது அவசியமாகும். இல்லையென்றால் அவர்கள் தத்துவ ஞானத்தை கேட்ட மாத்திரத்தில் அமைதி அடைவதற்கு பதிலாக, கடும் கோபமும், கட்டுக்கடங்காத சீற்றமும் உடையவர்களாக ஆகி விடுவதை நம்மால் பார்க்க முடியும். கொதிக்கும் எண்ணெயில் ஒரு சொட்டு குளிர்ந்த தண்ணீர் விழுந்தால் பெரிய சப்தத்துடன் எண்ணெய் வெளியில் தெரித்து ஆபத்தை உண்டாக்கும் நிலை ஏற்படும் என்று உங்களுக்கே தெரியும். ஆனால் அந்த எண்ணெயில் உணவுப் பண்டங்களை போட்டு சுலபமாக பொரித்து எடுக்கலாம். தீவிர கோபம் முதலான கஷாயம் உடைய உயிர்கள், ஜினவாணியில் சொல்லப்படுவதை கேட்டு விரோதத்தை பெரிதாக காண்பிக்கிறார்கள், பயங்கர ஆவேசமடைந்து விடுகிறார்கள். தங்களுக்கே நன்மை செய்வதை சொல்லக் கேட்டு அவர்கள் கோபம் கொள்கிறார்கள் என்றால், அவர்கள் விமோசனம் அடைய (சம்சார துன்பத்திலிருந்து விடுபட) இன்னும் பல காலங்கள் இருக்கிறது என்றுதான் புரிந்து கொண்டு அவர்கள்மேல் பரிதாப்படுவதை விட வேறு என்ன செய்ய முடியும்?!

பொதுவாக ஒருவருக்கு நல்ல ஒழுக்கத்தையும், பழக்க வழக்கத்தையும் சிறு வயதிலேயே கற்றுக் கொடுக்க வேண்டியது அவரவர்களுடைய பெற்றோர், தாத்தா, பாட்டி, ஆசிரியர்கள் முதலியவர்களுடைய கடமையாகும். அப்படிச் செய்ய தவறிய பெற்றோர், உறவினர், ஆசிரியர்கள் உண்மையில் அவருடைய வாரிசுகளுக்கு மறைமுகமான எதிரிகள் ஆவார்கள். உலக சம்பந்தமான நற்குணம் மற்றும் நெறிமுறை இல்லாமல் ஒருவர் வெருமனே சாஸ்திர பயிற்சி செய்தால், அது அவதூறு பேசுவதற்கும் மற்றும் விதன்டா வாதம் செய்வதற்கும் தான் வழி வகுக்கும். தார்மீகப் பயிற்சி அல்லது தத்துவ ஞானம் பெருதல் என்பதன் பொருள் அதில் கூறியிருப்பவைகளை கண்மூடித்தனமாக நம்பிக்கை வைப்பதற்காக அல்ல; அவற்றில் உபதேசிக்கப்பட்டுள்ள விஷயங்களை தர்கம், விவாதங்கள் செய்து அதில் ஒளிந்து கிடக்கும் மர்மங்களையும், சரியான அர்த்தங்களையும் புரிந்து கொண்டு அவைகளை வாழ்க்கையில் தகுந்த முறையில் நடைமுறை படுத்துவதற்கேயாகும்.

கரணானுயோகம்: கரண் என்றால் கணித சூத்திரம் என பொருள் படும். உயிர்களின் அனேக விதமான உணர்வுகள், உடல்களின் வேறுபாட்டால் பிறவி உயிர்கள் பற்றிய வர்ணனை, குணஸ்தானம், மார்கணை, கர்மங்களின் விரிவான வர்ணனை, மூவுலக அமைப்பு முதலான அனேக விஷயங்களைப் பற்றி நுட்பமான வர்ணனை இந்த அனுயோகத்தில் செய்யப் பட்டுள்ளது. இதில் கணித சூத்திரங்கள், பலவிதமான எண்கள், எண்ணியல் சார்ந்த அளவைகள், அசங்யாதம், மற்றும் அனந்தம் முதலிய எண்ணிக்கை அற்றவைகளின் விபரம்

மற்றும் அவைகளின் அனேக வேறுபாடுகளை இந்த அனுயோகத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். இதுவரை நாம் அறிந்த லௌகீக கணிதத்தில் எண்ணிலடங்காதவைகளை innumerable quantities-infinity என்று கூறி முடிவிலியை பற்றி ஒரே சொல்லில் சொல்லப் படுவதை அறிந்திருக்கிறோம. ஆனால் கரணானுயோக கணிதத்தில் எண்ணில் அடங்காதவைகளைக் கூட மேலும் வகைப்படுத்தி **பல்யம், சாஹர், சூச்யாங்குலம், கணாங்குலம், ஜகத்ஸ்ரேணி, ஜகத்பிரதர், லோகம்** முதலான வெவ்வேறு அளவுகோல்கள் பற்றிய வர்ணனைகளை படித்துவிட்டு நாம் வியப்பிலும், ஒருவகையான குழப்பத்திலும் ஆழ்ந்து போவோம். அதற்கு மேலும் அனந்தம்-infinity பற்றியும் அதன் பலவகையான வேறுபாடுகள் பற்றியும் கூட கூறப்பட்டுள்ளது. இது மிகவும் சுவாரஸ்யமானதாகவும், இதுவரை கணித உலகமே அறிந்திராத பல விஷயங்களை பற்றிய அறிவு கொடுப்பதாகவும் இருக்கிறது. புத்திக்கு இது ஒரு சவாலாக இருப்பதோடல்லாமல் அனேக விசித்திரமான விஷயங்கள் பற்றிய அறிவு நமக்கு கிடைக்கிறது. மேலும் உண்மையை சொல்ல வேண்டும் என்றால் கரணானுயோக சம்பந்த நூல்களை படித்தபின் தான் கேவலஞானத்தின் அதாவது சர்வஞ்ஞ தன்மையின் ஸ்வரூபம் பற்றியும் அதன்முன் நம் சாதாரண அறிவின் தன்மை எம்மாத்திரம் என்பது பற்றியும் நம்மால் உணர முடிகிறது.

அனேக விதமான உயிர்கள், அவைகளின் 84 லட்சம் பிறப்பிடங்கள், காலத்தை அளவிடும் முறை, பரிணாமங்களின் விசித்திரம் முதலியவைகளை பார்த்த பிறகு நம் அறிவால் அளவிட முடியாத சம்சாரக் கடலின்-பிறவி சுழற்சியின் பிரம்மாண்டம் இந்த அனுயோகத்தை படிப்பதால் நமக்கு தெரிய வருகிறது. நமக்கு கிடைத்திருக்கும் இந்த மனித பிறவி எவ்வளவு குறைந்த ஆயுள் கொண்டது என்பதும் இதை நாம் எவ்வாறு சரியாக உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதும் அதாவது ஜின பகவானால் உபதேசிக்கப்பட்ட மார்கத்தை தெரிந்து கொண்டு அதை சரியாக உபயோகப் படுத்தி சம்சாரக்கடலை கடக்கும் வழியை தெரிந்து தப்பிக்க வேண்டும் என்பதும், இல்லையேல் பிறவி சுழற்சியில் சிக்கி தவிக்க வேண்டும் என்பதையும் நம்மால் அறிந்து கொள்ள இயலும். இந்த அனுயோகத்தை படிப்பதால் நம் அறிவு வளர்ச்சி அடைகிறது, புத்தி கூர்மையடைகிறது, உபயோகம் நுட்பமாகிறது, சர்வஞ்ஞ தன்மையின் மேல் மதிப்பும், நம்பிக்கையும் அதிகமாகிறது.

திரவ்யானுயோகம்: இதையே **பரமாகமம்** அல்லது **அத்யாத்ம சாஸ்திரம்** என்று கூறுகிறோம். இதில் ஆத்ம அனுபூதி அடைய வேண்டும் என்ற நோக்கில் ஆத்மாவை பற்றிய வர்ணனை, மற்ற திரவியங்களிலிருந்து இது எவ்வாறு வேறுபட்டது, பிரித்தறியும் அறிவு-பேதஞானம், ஆத்மாவின் சக்திகள் முதலியவைகள் பற்றிய வர்ணனை இந்த அனுயோகத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது. இதில் திரவ்யம், குணம், பர்யாயம் இவைகளின் ஸ்வரூபத்தை கூறி அதன் பிரிவு-உப பிரிவுகளையும் கூறி அபேத ஆன்மாவை-ஆன்ம திரவியத்தை பற்றிய வர்ணனை மற்றும் அதை அறியும் வழியும் கூறப்பட்டிருக்கிறது. பிரயோஜனமான **ஞேய, ஹேய, உபாதாதேய** அதாவது அறிய வேண்டிய, விட வேண்டிய, ஏற்க வேண்டிய தத்துவங்களை கூறி ஸ்வ தத்துவத்தை அடையும் வழியும் இதில் கூறப்பட்டுள்ளது.

ஜினவாணியின் அகண்ட-மிக விரிவான தன்மையை பார்த்து யாரும் குழப்பமடைந்து இதை ஒதுக்கி வைக்க வேண்டியதில்லை. இதில் உண்மையான தூய உயிரை பற்றிய விளக்கமும் அதை எப்படி அறிய வேண்டும், அதை எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதை பற்றிய வழிமுறையையும் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் படிப்பவர் இது என் தூய உயிரை பற்றிதான் எடுத்து சொல்கிறது என்று உணர்ந்து, என்னை நானே தெரிந்து கொள்ளவும், பிறகு அதில் ஆழ்ந்து முழுமையான அறிவையும் ஆனந்தத்தையும் அடையவும் இந்த அனுயோக நூல்களை ஆழமாகப் பயில ஆர்வம் கொள்ள வேண்டும்.

உதாரணமாக உங்கள் வெற்றிக்கு, உங்களை பெருமை படுத்த ஒரு விழா ஏற்பாடு செய்தால் அதில் எவ்வளவு மகிழ்ச்சியாக நீங்கள் பங்கு கொள்வீரகளோ அதுபோல; இத்த நூல்கள் நம்முடைய தூய ஆன்மா பற்றிதான் பேசுகிறது என்று உணர்ந்து இதை கற்பதில் ஆர்வமும் மகிழ்ச்சியும் கொள்ள வேண்டும்.

இப்போது நீங்கள் நான்கு அனுயோகங்கள் பற்றியும் தெரிந்து கொண்ட பிறகு இவைகளை பயில வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு வந்திருக்கிறது. நாம் இந்த சாஸ்திரங்களை எங்கிருந்து தொடங்கி எப்படி படிக்க ஆரம்பிக்க வேண்டும் என்பது பற்றி அடுத்த கடித்ததில் தெரியப்படுத்துகிறேன்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-5 2-10-1993

பிரபஞ்சத்தின் வடிவம் (ஸ்வரூபம்)

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

தசலட்சண நோன்பு சமயத்தில் தத்துவ சொற்பொழிவு செய்ய நாங்கள் இருவரும் ஔரங்காபாத் சென்றிருந்தோம். அங்கிருந்து வந்த உடனே நான் இந்த கடிதத்தை எழுதுகிறேன். மக்களிடம் நம் கடிதங்கள் பற்றிய அபிப்ராயம் நன்றாகவே இருக்கிறது. ஔரங்காபாத்தில் ஃபாட்குலே என்ற ஒரு பெண்மணி, மற்ற மகளிர்களுடன் சேர்ந்து ஸ்வாத்யாய வகுப்பு நடத்திக் கொண்டிருக்கிறார். அவர் உங்களுடைய **உண்மையான கடவுளின் வடிவம்** பற்றிய கடிதம் எங்களுக்கு ஸ்வாத்யாயத்தில் மிகவும் உபயோகமாக இருந்தது. உங்களுடைய கடிதங்களை நாங்கள் குழுவாக சேர்ந்து மிகுந்த ஆர்வத்துடன் படிக்கிறோம். இப்படியொரு அம்மாவும் இந்த காலத்தில் இருக்கிறார்களே! என்று உங்களை எல்லோரும் மெச்சுகிறார்கள், பாராட்டுகிறார்கள்! உங்களை நேரில் பார்த்ததில் அவர்கள் மிகவும் ஆச்சர்யமும், ஆனந்தமும் அடைகிறார்கள்” என்று கூறினார்.

குர்லா-மும்பயில் உள்ள திரு. ரமேஷ் மாமா உணக்கு தெரியுமல்லவா, அவர்கூட மிகவும் பாராட்டி இவ்வாறு கூறினார். அவருடைய குழந்தை பருவத்திலிருந்தே ஆகமங்களை மிகவும் புனிதமாக கருதவேண்டும் என்றும், மிகவும் பயபக்தியுடன் அவைகளை கையாள வேண்டும் என்ற கெடுபிடியும், கட்டுப்பாடும் அவர் வீட்டில் பெரியோர்கள் விதித்திருந்ததால், ஆகமங்களை தொடக்கூட அவர் பயந்ததாகவும், அதனால் கிரந்தங்கள் அலமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அலங்கார பொருளாகவே இருந்தன என்றும், சில தினங்களுக்கு முன்புதான் அவர் **மோக்ஷமார்க பிரகாசம்** மற்றும் **இரத்தின கிரண்டக ஸ்ராவகாசாரம்** இரண்டையும் எடுத்து கொஞ்சம் படித்ததாகவும், ஆனால் படித்தவைகளை புரிந்து கொள்ள மிகவும் கடினமாக இருந்ததால் அவைகளை அப்படியே மீண்டும் அலமாரியிலேயே வைத்து விட்டதாகவும் கூறினார். அவர் நம் கடிதங்களை படித்து மிகவும் ஆனந்தம் அடைந்ததாகவும், கடிதத்தின் நடை சரளமாகவும், தத்துவம் அறியாதவர்கள் கூட எளிமையாக படித்து அவற்றில் கூறியுள்ளவைகளை மிக சுலபமாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாக கூறி மிகவும் பாராட்டினார். உனக்குத்தான் தெரியுமே, அவர் ஒரு நேர்மையானவரும், உள்ளதை உள்ளபடியே சொல்பவரும் என்று, அதனால் அவருடைய பாராட்டுதல்கள் எனக்கு நல்வாழ்த்தாகவும் அதிக ஊக்கம் அளிப்பதாகவும் இருக்கிறது.

இதுவரை நாம் சாஸ்திர பயிற்சி பற்றிய அடிப்படை விஷயங்களை தெரிந்து கொண்டோம். சாஸ்திரங்களை படிக்கவும், அதில் உள்ள மர்மங்களை தெரிந்து கொள்ளவும் சாஸ்திரத்தில் காணப்படும் சொற்களையும், சொற்பொருள் விளக்கத்தையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இப்போது நம் நிலைமை எப்படி இருக்கிறதென்றால், பணக்குவியல், மற்றும் அரிய பொக்கிஷங்கள் நிறைந்த ஒரு கஜானாவின் சொந்தக்காரன், அதை திறக்கும் சாவியை தொலைத்து விட்டதால் அவைகளை பயன் கொள்ள முடியாத துர்பாக்கிய நிலையில் இருப்பது போல நாம் இருக்கிறோம் என்று தான் சொல்ல வேண்டும். நம்மிடம் பல ஆசார்யர்களால் எழுதப்பட்ட அனேக ஆகமங்கள் இருக்கின்றன, ஆனால் அதிலுள்ள சூத்திரங்களை எவ்வாறு பிரித்துப் படித்து பொருள் கொள்ள வேண்டும், அதில் காணப்படும் சொற்களுக்கு சரியான அர்த்தம் என்ன என்று தெரியாததாலும், அதில் கூறப்பட்டுள்ள தத்துவங்களை தெரிந்து கொள்ள முடியாத நிலையில், ஒரு மொழி தெரியத தேசத்தில் மாட்டிக்கொண்டவர் போல நாம் இருக்கிறோம். நம்முடைய இந்த அவல நிலையை பார்த்த திரு.கோபால்தாஸ்ஜி பரையா என்ற சென்ற நூற்றாண்டை சேர்ந்த ஒரு

பண்டிதர் சமண தத்துவ அறிமுகம் என்ற ஒரு புத்தகம் எழுதி அதில் ஜினாகமங்களில் வரும் இதுவரை நாம் கேள்விப்படாத சொற்களுக்கும், சூத்திரத்தில் வரும் சொற்களுக்கும் கேள்வி பதில் வடிவில் விளக்கம் எழுதி பேருதவி செய்திருக்கிறார்.

இந்த புத்தகத்தில் முதன்முதலில் பிரபஞ்சம்-உலகம் என்று எதை கூறுகிறோம்? என்ற கேள்வியுடன் தொடங்கியிருக்கிறார். நாம்கூட அதைப்பற்றி தெரிந்து கொள்ளலாம். பிரபஞ்சத்தை விஸ்வம், ஜகத், அண்டம், உலகம், cosmos, universe என்றெல்லாம் கூட சொல்கிறோம். பொதுவாக நாம் பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், தாரகை மற்றும் ஆகாயத்தில் என்னவெல்லாம் கண்கிறோமோ அவைகளை பிரபஞ்சம் என்கிறோம். ஆனால் பிரபஞ்சம் என்பதன் பொருள் மேல்கூறிய பொருள்கள் வரை மட்டுமே பரவியிருக்கவில்லை, இதற்கு மேலும் பரவியிருக்கிறது. ஆனால் இதன் விளக்கம் இவ்வாறு இருக்கிறது **திரவியங்களின் சமூகத்தை பிரபஞ்சம் என்கிறோம்.** உதாரணமாக சமுதாயம் என்பது ஒரே பொருள் அல்ல, பல மக்கள் சேர்ந்த ஒரு கூட்டத்தை-சமூகத்தை சமுதாயம் என்கிறோம். அதுபோல ஜினாகமத்தில் திரவியங்களின் சமூகத்தை-குழுமத்தை பிரபஞ்சம் என்று சொல்கிறார்கள். திரவியங்கள் ஒன்று சேர்ந்த இந்த குழுமம் எப்படிப்பட்டது என்று இப்போது பார்க்கலாம்.

திரவியங்கள் குணம் அல்லது பண்பு நோக்கில் ஆறு விதமாகும், மொத்த எண்ணிக்கை நோக்கில் அனந்தமாகும். அவைகளின் பெயர்களாவன **ஜீவ திரவியம், புத்கல திரவியம், தர்ம திரவியம், அதர்ம திரவியம், ஆகாச திரவியம் மற்றும் கால திரவியம்** என்பனவாகும். அவைகளின் எண்ணிக்கைகளாவன ஜீவ திரவியம்-அனந்தம். புத்கல திரவியம்-அனந்தானந்தம் (அனந்தம் X அனந்தம் X அனந்தம்...அனந்தமுறை), தர்ம திரவியம் ஒன்று. அதர்ம திரவியம் ஒன்று. ஆகாச திரவியம் ஒன்று. கால திரவியம்-ஒரு உலகளவு அசங்க்யாதம்.

ஸ்ரீ கார்த்திகேய ஆசார்யர் எழுதிய **கார்த்திகேயானு பிரேக்ஷா** என்ற நூலில் லோகானு பிரேக்ஷா என்ற பிரிவில் பிரபஞ்சத்தை பற்றியும், திரவியங்களின் இயல்பு-ஸ்வரூபம் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. மஹான் கார்த்திகேய ஆசார்யர் இது சர்வஞ்ஞரால் சொல்லப்பட்ட ஸ்வரூபம் என்று எழுதியிருக்கிறார். எந்த கிரந்தத்தை பார்த்தாலும் அதில் எந்த ஆசார்யரும் நான் இவ்வாறு கூறுகிறேன் என்று எழுதவில்லை. சர்வஞ்ஞரின் கேவல ஞானத்தில் திரவியங்கள் எப்படி தெரிந்ததோ, அவைகளை பார்த்து எப்படி வர்ணனை செய்தாரோ, அதையே ஆசார்யர்கள் அவர்களுடைய நூல்களில் எழுதியுள்ளார்கள். மருத்துவமோ அல்லது விஞ்ஞானமோ அல்லது வேறு எந்த துறையாக இருந்தாலும் அந்த நூல்களில் யாரும் எந்த ஒரு பிரச்சனைக்கும் தெளிவான விளக்கம் அளிப்பதில்லை. அந்த துறையை சார்ந்த வெவ்வேறு விஞ்ஞானிகள் வேவ்வேறு தத்துவங்களை-theories-ஐ முன் வைக்கின்றனர். அவர்கள் கூறும் தத்துவங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதாக இல்லை. புதிது புதிதாகவும் முறன்பாடாகவும் இருப்பதை பார்க்க முடிகிறது. ஆனால் சர்வஞ்ஞரால் கூறப்பட்ட ஆகமங்களில் உள்ள தந்துவங்களில் இவ்வாறு எந்த முறன்பாடுகளும் இல்லாமல் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதாகவே இருக்கின்றன, அவை பொருள்களின் உண்மை நிலையை விளக்கும் விஞ்ஞானமாக இருக்கின்றன.

முதலில் லோகாகசத்தின் வடிவம் எப்படி இருக்கிறது என்று கூறுகின்றனர். ஆகாசம் என்று சொல்லப்படும் திரவியத்தின் இடப்பரப்பு முடியுமிடம் எது என்று சொல்ல முடியாதபடி அனந்த பிரதேசமாக எல்லா பக்கங்களிலும் விரிந்து கிடக்கிறது. அந்த அகன்ட ஆகாசத்தின் நட்ட நடுவில் உலகம் அதாவது பிரபஞ்சம் இருக்கிறது. அதாவது எல்லா திரவியங்களும்-ஆறு திரவியங்களும் எங்கு ஒன்று சேர்ந்து இருக்கிறதோ அந்த ஆறு திரவியங்களின் சமூகம் இருக்கும் ஆகாச திரவியத்தின் நட்டநடு பகுதியை உலகம் என்று

சொல்கிறோம். இந்த உலகத்தை யாரும் உண்டு பண்ணவுமில்லை, தாங்கவுமில்லை. இதை காப்பவரும் யாரும் இல்லை. அழிப்பவரும் இல்லை. (கார்திகேயானுபிரேக்ஷை காதை-115). இதன் உட்பொருள்-பாவார்த்தம் என்னவென்றால் வேறு மதத்தினரின் கற்பனையான உலகத்தை பிரம்மா உண்டு பண்ணுகிறார், விஷ்ணு அதை காப்பாற்றுகிறார், சிவன் அதை அழிக்கிறார், ஒரு படமெடுத்த நாகபாம்பின் தலை அந்த உலகத்தை தாங்குகிறது. பிரளயம் நிகழும்போது பிரம்மா தவிற மற்ற எல்லாம் அழிந்து விடுகின்றன. பிரம்மா மீண்டும் எல்லாவற்றையும் அவரிலிருந்தே நிர்மாணம் செய்கிறார் என்பதெல்லாம் கற்பனையானது என்பதை நிரூபணம் செய்வது இந்த கார்திகேயானுபிரேக்ஷை காதை-115 தாகும். பிற மதத்தினரின் விபரீத நம்பிக்கையை கண்டனம் செய்து ஜின மதத்தின் கொள்கையை நிரூபிப்பது மதார்த்தம் என்று முன் கடிதத்தில் பார்த்ததற்கு இந்த காதை ஓர் உதாரணமாகும்.

கார்த்திகேயானுப்ரேக்ஷாவில் உலகத்தின் ஸ்வரூபம் பற்றி மேலும் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. உயிர்கள் முதலான ஆறு திரவியங்களும், அவைகளுக்குள் ஒன்றுக்கொன்று-பரஸ்பரம் ஒரே இடத்தில் நுழைந்து, ஏக ஷேத்ராவஹாக சம்பந்த வடிவில் அதாவது ஒன்றுக்குள் ஒன்று ஊடுருவி இருக்கும் நிலையை-அவஸ்ததையை பிரபஞ்சம்-உலகம் என்று கூறுகிறோம். ஆறு திரவியங்களின் சமூகம் உலகமாகும். இந்த எல்லா திரவியங்களும் தொடர்சியாக-இடைவிடாது-எப்போதும் நித்யமாக இருக்கின்றவைகள் ஆகையால் உலகமும் அழியாமல் எப்போதும் நித்யமாக இருக்கும், மேலும் தொடக்கமும், முடிவும் இல்லாமல் நிரந்தரமாகும். இங்கு ஏக ஷேத்ராவஹாக சம்பந்தம் என்ற சொல் வந்தது, அதன் பொருள் ஒரே இடத்தில் வசித்தல் அல்லது ஒரே இடத்தில் இருத்தல் என்று பொருள். அவைகள் ஒவ்வொன்றும் தனித்தனி பொருள்களாக அவைகளின் குணத்தை விடாமல் இருந்தாலும், இருக்கும் இடம் நோக்கில் அவைகள் எல்லாம் சேர்ந்தே இருக்கின்றன. எல்லா திரவியங்களும் ஒவ்வொன்றும் மற்றவைகளுக்கு இடம் கொடுக்கின்றன, ஒன்றில்ஒன்றாகி விடுகின்றன, சேர்ந்து விடுகின்றன. ஒரு கண அடி அளவு கண்ணாடியில் எப்படி வெளிச்சம் புகுந்து எல்லா திசையிலும் செல்வது போல அதாவது எந்த அளவு கண்ணாடியோ அதில் அதே அளவு வெளிச்சமும் இருப்பது போல என அறிக. இதை கண்ணாடியும் வெளிச்சமும் ஒன்றுக்கொன்று இடமளிக்கின்றன என்று கூறுகிறோம்.

இன்னும் ஓர் உதாரணம் பார்க்கலாம். ஒரு அறையில் மஞ்சள் நிற பல்பு எறிவதாக வைத்துக் கொள்வோம். அதன் பிரகாசம் அந்த அறை முழுவதும் பரவியிருக்கிறது. அதே அறையில் இரண்டாவதாக ஒரு நீல நிற பல்பை எறியவிட்டால் அதன் பிரகாசமும் அந்த அறை முழுவதும் பரவி விடுகிறது. இங்கு மஞ்சள் மற்றும் நீல பிரகாசம் ஒன்று மற்றொன்றுக்கு இடம் கொடுக்கிறது. நீங்கள் இன்னும் வேறு ஒன்றும் செய்து பாருங்கள். ஒரு டம்பலர் முழுவதும் தண்ணீர் நிறப்புங்கள். அதில் மேலும் தண்ணீர் விட்டால் வெளியில் போய்விடும். ஆனால் அதில் சாம்பலை போட்டால் அது தண்ணீரில் கலந்துவிடும். அதில் ஊசிகளை போட்டால் அதுவும் உள்ளே போய்விடும். இங்கு தண்ணீர், சாம்பல், ஊசி இவைகள் ஒன்றுக்கொன்று இடம் கொடுக்கின்றன. இதுபோல ஆறு திரவியங்களும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று இடம் கொடுக்கின்றன. எந்த ஆகாச பிரதேசத்தில் தர்ம திரவியம் இருக்கிறதோ அதே இடத்தில் அதர்ம திரவியமும் இருக்கிறது. அங்கேயே அசங்யாத கால திரவியமும் இருக்கின்றன. அங்கேயே அனந்த உயிர்களும் இருக்கின்றன. மேலும் அங்கேயே அனந்தானந்த புத்கல திரவியம் கூட இருக்கின்றன. எந்த திரவியமும் தனக்காக சுதந்திரமான தனி இடம் கேட்பதில்லை. எல்லா திரவியமும் ஒரே இடத்தில் ஏக ஷேத்தாவஹாகியாக இருந்தாலும் கூட, அதாவது ஒரே இடத்தில் வசித்தாலும் கூட, ஒவ்வொரு திரவியமும் சுதந்திரமாக இருக்கின்றன, ஒவ்வொன்றின் நிலையும்

தனித்தனியாகவே இருக்கிறது, ஒவ்வொரு திரவியத்திலும் அதனதன் குணங்கள் அதிலேயே எப்போதும் இருக்கின்றன.

ஒரு உயிர் வேறு உயிர்களுக்கு இடம் கொடுக்கிறது. ஒரு புத்கல பரமாணு கூட அனந்த பரமாணுக்களுக்கு அதன் இடத்திலேயே இடம் கொடுக்க வல்லதாக இருக்கிறது. இவ்வாறு எதுவரை சொல்ல முடியும்? தெரியுமா? ஒரே சித்த சிலாவில் அனந்த சித்த பகவான்கள் இருக்கின்றனர், ஆனாலும் ஒவ்வொரு சித்தரின் இருப்பும் அதாவது நிலையும் தனித்தனியாகவே இருக்கிறது. அதாவது ஒரே இடத்தில் இருக்கும் பல சித்தர்கள் ஒன்றாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் அவரவர்களின் தனித் தன்மையை இழப்பதில்லை. நிகோதத்தில் ஒரு உடலில் அனந்த உயிர்கள் வாழ்கின்றன, ஆனாலும் ஒவ்வொரு உயிரும் அதனதன் தனித்தன்மையை இழப்பதில்லை. இதிலிருந்து உயிர் திரவியங்கள் ஒன்றுக்கொன்று உடனிருக்க இடம் கொடுக்கின்றன என்பதை உறுதி செய்ய முடிகிறது. நிகோதம் என்ற பெயர் சூட்சம ஒரு பொறி (தொடு புலன்) மட்டும் உடைய உயிர்களை குறிக்கும். மற்ற உயிர்களை பார்க்கும்போது, நிகோத உயிர்கள் பற்றிய விஷயம் முற்றிலும் வேறு பட்டதாக இருப்பதால் மேலும் அதப்பற்றிய இங்கே சர்ச்சை செய்யவில்லை.

அனாதி காலமாக இந்த ஆறு திரவியங்களும் சேர்ந்து வாழ்ந்தாலும் கூட இவை ஏழு திரவியங்களாகவோ அல்லது எல்லாம் சேர்ந்து ஒரே திரவியமாகவோ ஆகிவிடவில்லை. ஒரு உயிர் திரவியம், வேறு புத்கல திரவியமாகவோ அல்லது வேறு மற்ற எந்த திரவியமாகவோ, வேறு உயிராகவோ ஆகவில்லை. அதேபோல வேறு எந்த திரவியமும் உயிர் திரவிய வடிவ மாற்றம் அடையவில்லை. ஆகையால் மண்ணுடன், தண்ணீருடன், நெருப்புடன், காற்றுடன் உயிர் கலந்திருந்தாலும், அது மண்ணாகவோ, தண்ணீராகவோ, நெருப்பாகவோ, காற்றாகவோ உயிர் பிறக்கிறது என்ற நம்பிக்கை தவறு என்பது உறுதியாகிறது. [உயிர் மற்றும் அப் புத்கலப் பொருள்கள் இரண்டும் ஒன்றாக ஒரே இடத்தில் இருக்க இடம் கொடுத்துக் கொள்கின்றன என அறிய வேண்டும். இப்படி அறிந்தால் தான் உயிர் வேறு, உடல் வேறு என்பதை உறுதி செய்யலாம், இல்லையேல் உடலும் உயிரும் ஒன்றே என்ற பிரம்மையில்-மயக்கத்தில் தான் இருப்போம்.]

எல்லா திரவியங்களும் பரஸ்பரம் ஒன்றோடொன்று இருக்க இடம் கொடுக்கின்றன, ஆனாலும் இடம் கொடுக்கும் சக்தி ஆகாச திரவியத்தின் சிறப்பு குணம் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் ஆகாச திரவியம் எல்லாவற்றையும் விட மிகப்பெரிய திரவியமாகும், அதன் மிகச்சிறிய ஒரு பகுதியில் தான் மற்ற எல்லா திரவியங்களும் இருக்கின்றன, சேர்ந்து இருக்கின்றன. ஆகாசம் ஒரு முழுமையான பெரிய சம்பூரண அகண்ட திரவியமாகும், அதன் எந்த ஒரு சிறு பகுதியில் மற்ற ஐந்து திரவியங்களும் இருக்கின்றனவோ, அல்லது ஐந்து திரவியங்களும் எங்கு காணப்படுகிறதோ அந்த பரப்பளவு ஆகசத்தை **லோகாகாசம்** என்று கூறுகிறோம், அதற்கு வெளியே உள்ள ஆகாச திரவியத்தின் எந்த பொருளும் இல்லாத மற்ற பெரிய பகுதியை **அலோகாகாசம்** என்று சொல்கிறோம்.

ஒவ்வொரு திரவியத்தின் பரப்பளவு எவ்வளவாக இருக்கிறது என்பதை சொல்வதற்கு **பிரதேசம்** என்ற அளவைunit of measurement உபயோகப் படுத்தப்படுகிறது. பிரதேசம் என்பது ஆகாசத்தின் மிகச்சிறிய, மேலும் சிறிதாக ஆக்க முடியாத ஒரு மிக நுண்ணிய smallest unit of space இட வெளியாகும். ஒவ்வொரு திரவியமும் எவ்வளவு இடத்தில் பரவியிருக்கிறதோ அதை தெரியப்படுத்த, அந்த திரவியம் இத்தனை **பிரதேசி** என்று சொல்லப்படுகிறது. மேலும் பகுக்க முடியாத புத்கல பரமாணு மிகச் சிறியதாகும். இந்த **ஒரு பரமாணு பரவியிருக்கும் இடத்தை ஒரு பிரதேசம்** என்று சொல்கிறோம். இந்த பிரதேசம் என்ற அளவுகோலை கொண்டு ஒவ்வொரு திரவியமும் எவ்வளவு இடத்தில் பரவியிருக்கிறது என்று இப்போது பார்க்கலாம். எல்லாவற்றையும் விட மிகப்பெரிய திரவியமான ஆகாச திரவியம் அனந்த பிரதேசியாகும். அதில் பிரபஞ்சம் எனப்படும் உலகம் இருக்கும்

லோகாகாசம் இருக்கும் இடம் அசங்க்யாத பிரதேசமாகும். ஒவ்வொரு உயிரும் அசங்க்யாத பிரதேசமாகும். உயிர் திரவியத்தில் ஒரு சிறப்பு என்னவென்றால் அதன் பிரதேசம் சுருங்கி விரியும் தன்மை கொண்டதாக இருக்கிறது. உயிரின் மிக அதிகபடியான விரிந்த பரப்பு கேவலி சமுதகாத நிலையில் ஒரு முழு உலகளவாகும், மிக குறைந்த சுருங்கிய பரப்பு சூட்சம நிகோத உடலுடன் இருக்கும் உயிரின் அளவாகும். தர்ம திரவியம் லோகாகாசம் முழுவதும் பரவியுள்ள ஒரு திரவியமாகும், ஆகையால் அது அசங்க்யாத பிரதேசமாகும். அதர்ம திரவியம் கூட முழு லோகாகாசத்திலும் பரவியிருக்கிறது ஆகையால் அதுகூட அசங்க்யாத பிரதேசமாகும். கால திரவியம்-காலாணு ஒரு பிரதேசம் மட்டுமே பரவியிருப்பதாகும். லோகாகாசத்தின் அசங்க்யாத பிரதேசத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு காலாணு நிலையாக இருக்கிறது. சாஸ்திரங்களில் இதை லோகாகாசம் முழுவதும் இரத்தினக் குவியல் போல காலாணு நிரம்பி இருக்கிறது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

இப்போது புத்கல திரவியத்தை பற்றி பார்க்கலாம். உண்மையில் பார்க்க போனால் புத்கல பரமாணு ஒரு சுத்த திரவியமாகும், அது ஒரு பிரதேச பரப்பளவு கொண்டது. ஆனால் புத்கலத்தில் மட்டுமே இரண்டு, அல்லது அதற்கும் மேற்பட்ட அனேக-அனந்த புத்கல பரமாணுக்கள் ஒன்று சேர்ந்து ஒரே கலவையாக ஆகக்கூடிய சக்தி இருக்கிறது. அந்த கலவையை **ஸ்கந்தம்** என்றும், பொதுவாக **புத்கலம்** என்றும் சொல்கிறோம். இந்த நோக்கில் புத்கலத்தை, ஏக பிரதேசி, பகுப்பிரதேசி மற்றும் அனந்தப்பிரதேசி என்று சொல்கிறோம். **புத்** என்றால் **சேர்தல்** மற்றும் **கல்** என்றால் **பிரிதல்** என்று அர்த்தம். அதன் பெயரிலிருந்தே புத்கலம் என்றால் சேர்தலும், பிரிதலுமான விஷேச குணமுடையதை அறியலாம். மேலும் இன்னுமொரு விசித்திரமான விஷயம் என்னவெனில், ஒரு பிரதேச அளவு கொண்ட புத்கல பரமாணு இருக்கும் அதே ஒரு பிரதேசத்தில், அனந்த புத்கல பரமாணுக்கள் கூட சேர்ந்து இருக்க முடியும், அவைகள் ஒன்றுக்கொன்று இருக்க இடம் கொடுப்பவைகளாக இருக்கின்றன. இதனால்தான் அசங்க்யாத பிரதேச அளவுடைய லோகாகாசத்தில் அனந்தானந்த புத்கல திரவியங்கள் இருக்க முடிகிறது.

நமக்கு தெரிந்த லோகாகாசத்தின் உருவம் இரண்டு பரிமாணங்கள் மட்டும் உடையதல்ல, அது கன பரிமாணமாக three dimensional-லாக இருக்கிறது. லோகாகாசம் கன வடிமாக இருக்கிறது. இதன் உயரம் 14 ரஜ்ஜு, கிழக்கு மேற்காக 7 ரஜ்ஜு, மத்தியில் 1 ரஜ்ஜு, அதற்கு மேலே 5 ரஜ்ஜு, மற்றும் உச்சியில் 1 ரஜ்ஜு அளவுடையது. வடக்கு தெற்கில் அதன் கனம் 7 ரஜ்ஜு அளவுடையது. லோகாகாசத்தின் கன அளவு 343 கன ரஜ்ஜுவாகும். இங்கு பேசப்படும் விஷயம் வேறாகையால், இப்போது ரஜ்ஜு அளவை பற்றி விவரிக்கப் போவதில்லை. லோகாகாசத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆறு திரவியங்களின் பிரதேசங்களும் ஒன்றுக்கொன்று மற்றவைகளோடு சேர்ந்தே இருக்கின்றன. பாருங்கள்! லோகாகசத்தின் ஒவ்வொரு பாகத்திலும் ஆகாச திரவியத்தின் பிரதேசம் என்னவோ இருக்கவே இருக்கிறது, அதிலேயே ஜீவ திரவியங்களின் பிரதேசங்கள் இருக்கின்றன, அங்கேயே புத்கலங்களும் இருக்கின்றன, அங்கேயே தர்ம திரவிய பிரதேசமும், அதர்ம திரவிய பிரதேசமும், கால திரவியங்களின் பிரதேசங்களும் கூட இருக்கின்றன.

இந்த ஆறு திரவியங்களில் ஜீவ திரவியம் மட்டுமே அறியும் திறைமை கொண்டதாக இருக்கிறது, அதில் அறிவு-ஞானம் அதாவது தன்னையும், பிற பொருள்களையும் அறியும் சிறப்பு குணம் இருக்கிறது, ஆகையால் இதை சேதன திரவியம் என்று சொல்கின்றனர். ஜீவ திரவியத்தை தவிற மற்ற ஐந்து திரவியங்களும் அஜீவன்கள்-அசேதனங்கள்-ஜடங்கள், அதாவது தன்னையோ அல்லது பிற திரவியங்களையோ அறியும் சக்தி அவைகளுக்கு இல்லை. உயிரில் மட்டுமே தன்னையும், பிறவற்றையும் அறியும் சக்தி கொண்ட சேதன

குணம் இருக்கிறது. எந்த உயிர் சர்வஞ்ஞரோ அவருடைய அறிவு முழுமையாக வெளிப்பட்டிருக்கிற காரணத்தால் எல்லா திரவியங்களும் அவருடைய ஞானத்தில்-அறிவில் பிரகாசிக்கின்றன. அதாவது சர்வஞ்ஞர் எல்லா திரவியங்களையும் ஒரு சேர ஒரே சமயத்தில் அறிகிறார்.

இந்த ஆறு திரவியங்களில் புத்கலம் மட்டுமே உருவமுடையது, மற்ற ஐந்து திரவியங்களும் உருவமற்றவை. தொட்டறியக்கூடிய ஸ்பரிசம், சுவை-ரசம், மணம்-வாசனை, நிறம், சப்தம் ஆகியவை புத்கலத்தின் சிறப்பு குணங்கள். நம்மால் தொட்டு அனுபவிக்கப்படுவது, பார்க்கப்படுவது, சுவைக்கப்படுவது, முகந்தறிவது, கேட்கப்படுவது எல்லாம் புத்கலப் பொருள்களே என்பதை புத்கலத்தின் சிறப்பு குணங்களால் அறியலாம். ஐந்து இந்திரியங்களின் வழி அறியப்படுபவை எல்லாம் புத்கலங்களே. புத்கலம் ரூபி திரவியம் மற்ற ஜீவ திரவியம், தர்ம திரவியம், அதர்ம திரவியம், ஆகாச திரவியம், கால திரவியம் எல்லாம் அரூபி திரவியங்களாகும்.

மகள்களே! பிரபஞ்சத்தின் ஸ்வரூபத்தை நாம் இவ்வளவு கஷ்டப்பட்டு ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் சொல்வது உண்மைதான், இன்றய நம் மும்முரமான வாழ்க்கையில் நமக்கு எது லாபம் தரக்கூடியதோ அதைப்பற்றி தெரிந்து கொள்வதே நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கும். ஆனால் பிரபஞ்சத்தை பற்றி தெரிந்து கொள்ளாமல் தன்னைப்பற்றி கூட தெரிந்து கொள்ள முடியாது. ஆகையால் பிரபஞ்சம் பற்றி தெரிந்து கொள்வதும் அவசியமாகும். உதாரணமாக உங்கள் தாத்தாவுக்கு பெரிய சொத்து, தோட்டம் இருந்து அதை பல வாரிசுகள் பங்கு போட்டுக்கொள்ள வேண்டியிருந்தால், உங்களுக்கு வரும் பங்கின் மேல் தான் உங்கள் கண் இருக்கும் அல்லவா? அதுபோல இந்த பிரபஞ்சம் பற்றி தெரிந்து கொண்டு இதில் என்னுடைய இடம் எங்கு இருக்கிறது? என்னுடைய விஸ்தீரணம் எவ்வளவு பெரியது? என்னுடைய அதிகாரம் என்ன? இவைகளை நாம் உறுதி செய்ய வேண்டும் அல்லவா!

நான் யார்? பிரபஞ்சத்தில் உள்ள அனந்த ஜீவ திரவியங்களில் நான் ஒரு ஜீவ திரவியம். நான் வாழுமிடம் எங்கு இருக்கிறது? இந்த லோகாகாசம் முழுவதிலுமா? இல்லையென்றால் பிறகு எங்கு இருக்கிறது? நிகழ்காலத்தில் எந்த உடல் எனக்கு கிடைத்திருக்கிறதோ அதுதான் நான்- ஸ்வயம் ஆத்மா வாழுமிடமாக இருக்கிறது. அதுவே நான் நிலைகொள்ளும் இடமாகும். சற்று முன்பு தான் நாம் உயிர் எங்கு பரவியிருக்கிறதோ அங்கேயே அனந்த புத்கல திரவியம் (திரவிய கர்மம், உடல் முதலியன) கூட இருக்கிறது என்று தெரிந்து கொண்டோம். அதே இடத்தில் ஆகாச திரவியம், தர்ம திரவியம், அதர்ம திரவியம், கால திரவியம் கூட இருக்கின்றன. உயிர், தர்ம, அதர்ம, ஆகாச, கால திரவியங்கள் அரூபியாகையால் நமக்கு அவைகள் இருப்பது தெரியவில்லை. வெரும் புத்கல திரவியம் மட்டுமே தெரிகிறது, ஆகையால் அதுவே சுலபமாக நம் அறிவில் வருகிறது. ஆகையால் அதுவே நான் என்று எளிதாகவே கற்பனை செய்து கொள்கிறோம், கிடைத்த உடலே நான் என்ற குழப்பத்தை ஏற்றுக் கொள்பவர்களாக இருக்கிறோம்.

பண்டிட் தௌலத்ராம் சஹடாலாவில் உயிரின் இந்த தவறான எண்ணத்தைப்பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார், **தன் உபஜன் அப்பனி உபஜ் ஜான், தன் நஷத் ஆப்கோ நாஷ் மான்**. இதன் பொருள் தவறான நம்பிக்கை உடையவர்கள் உடலின் தோற்றத்தை உயிரின் பிறப்பு என்றும் உடலின் அழிவை உயிரின் இறப்பு என்றும் நினைக்கிறார்கள் என்பதாம். கொஞ்சம் சிந்தித்து பாருங்கள், உயிர் அனாதியாக புத்கலத்துடன் தொடர்பு கொண்டதாக இருக்கிறது, ஆனால் அது எந்த காலத்திலும் புத்கல வடிவமாக ஆகவில்லை. யார் தன் தவற்றால் புத்கலமாகிய உடலையே தான் என்று நம்புகிறார்களோ அவர்கள் துக்கத்தில்

இருக்கிறார்கள். பிறகு நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் பிற பொருள்கள் எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டுமா? இல்லை. நம்முடைய அதிகாரம் என்ன? என்பதை பார்க்க வேண்டும். நாம் யார்? மற்றும் நாம் என்ன செய்ய முடியும்? என்பதை பற்றி அறிவு பெற வேண்டும். நாம் அதை தெரிந்து கொண்டால் தான் நம்முடைய நம்பிக்கை தவறாக இருந்தால் அதை மாற்றிக் கொள்ள முடியும். எல்லாவற்றிற்கும் முதலில் இதுவே நாம் செய்ய வேண்டியதாகும்.

மோனா, சில தினங்களில் உனக்கு திருமணம் ஆன பிறகு, நீ உன் மாமியார் வீட்டுக்கு செல்வாய். முதலில் புது மணப்பெண்ணான உண்னிடம் அங்கு எல்லோரும் இப்படித்தான் சொல்வார்கள்-**இருக்கட்டும் விடு, நீ எந்த வேலையும் செய்ய வேண்டாம்**. இதற்கு பின்னால் ஒரு இரகசியம் இருக்கிறது. வீட்டு வேலைகளை விட்டு விட்டு டீவி பார், மற்ற வேலைகள் செய்ய வேண்டாம் என்பதற்காக அவர்கள் அப்படி சொல்லவில்லை. ஆனால் வீட்டு வேலைகளை எந்த முறையில் செய்ய வேண்டும்-மாமியார் எப்படி செய்கிறார்கள், எவ்வாறு செய்கிறார் என்பதை கவனமாக பார்த்து தெரிந்து கொள்ளத்தான். இது ஒரு பயிற்சி காலம்-training period என்று நீ எடுத்துக் கொள்ள வேண்டும். நம் வேலையை என்னவோ செய்யத்தான் வேண்டும், நம் வேலையை நாம் செய்யாவிட்டால் பிறகு யார் செய்வார்கள்? ஆகையால் அதைப்பற்றிய அறிவு முதலில் பெற வேண்டியது அவசியம் அல்லவா. இவ்வாறு சொல்வதன் பொருள் என்னவெனில் நாம் தர்மத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றால் அதற்கு முதன்முதலில் நாம் தத்துவ அறிவு பெற வேண்டும், அந்த தந்துவ அறிவின்படி நம்மிடம் உள்ள தவறான நம்பிக்கைகளை-மூடநம்பிக்கைகளை முதலில் சரி செய்து கொள்ள வேண்டும். பிரபஞ்சம் எப்படி இருக்கிறது என்பது பற்றி சுருக்கமாக தெரிந்து கொண்டோம். மேலும் அது பற்றி விரிவாக அடுத்த கடிதத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-6 20-11-1993

திரவியத்தின் ஸ்வரூபம்-பொருளின் தன்மை

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

மகள்களே! **திரவியம், குணம், பர்யாயம்** என்ற இந்த சொற்கள் எல்லா ஜின சித்தாந்த கோட்பாடுகளுக்கும் அஸ்திவாரமாகும். It is like the foundation for the building. இவைகளை சரியாக தெரிந்து கொள்ளாமல் நேரடியாக சாஸ்திரங்களை படித்து எதுவும் தெரிந்து கொள்ள முடியாது. அதாவது நாம் முதலில் இவைகளைப் பற்றி தெரிந்து கொண்ட பிறகே சாஸ்திரங்களை ஸ்வாத்யாயம் செய்ய முடியும். இவைகளை பற்றி அடிக்கடி படித்து நன்கு பயிற்சி பெறவேண்டும். யாருக்கு திரவிய, குண, பர்யாயம் பற்றிய தெளிவு இருக்கிறதோ அவரால் எல்லா சாஸ்திரங்களிலும் கூறப்படும் தர்ம சம்பந்தமான விஷயங்களை சுலபமாக புரிந்து கொள்ள முடியும். அதாவது அவர்களுக்கு சாஸ்திரங்களில் எந்த அர்த்தத்தில் சொல்லப் பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்வதில் எந்த கஷ்டமும் இருக்காது. நாம் முன் கடிதத்தில் பிரபஞ்சம்-உலகம் பற்றி சுருக்கமாக தெரிந்து கொண்டோம். எங்கு உயிர் முதலான திரவியங்கள் காணப்படுகிறதோ அதுவே லோகம்-பிரபஞ்சம் ஆகும். **லோக்** என்ற சொல்லின் பொருள் இருப்பதைப் பார்ப்பது. **அவலோகன்** செய்தல் என்ற சொல் இந்த லோக் என்ற சொல்லில் இருந்துதான் தோன்றியது, அதற்கு கூட **பார்த்தல்** என்று தான் பொருள்.

எல்லா திரவியங்களும் என்றென்றும் இருப்பவை, இதை **நித்யம்** என்ற சொல்லால் சொல்கிறோம். இவைகளுக்கு என்றும் அழிவில்லை, மற்றும் இவைகள் எத்தனை இருக்கிறதோ அத்தனையே எப்போதும் இருக்கும், அவைகளின் எண்ணிக்கை குறைவதோ, கூடுவதோ இல்லை, புதியதாக வேறு எதுவும் தோன்றுவதுமில்லை. இதற்கு தொடக்கம் என்பதும் இல்லை அதாவது **அனாதி**, மேலும் இதற்கு அழிவும் இல்லை, முடிவு என்பதும் இல்லை அதாவது **அனந்தம்** என்றும் சொல்லலாம். எல்லா திரவியங்களும் அனாதிஅனந்தம் ஆகையால் அவைகளின் சமூகத்தால் ஆகிய இந்த பிரபஞ்சம்-உலகமும் கூட தோற்றமும், அழிவும் இல்லாத அனாதிஅனந்த மாகும். இதை தெரிந்து கொள்ளவதால் நமக்கு என்ன பெரிய லாபம் என்றால், அழிவின் பயம் நம்மை விட்டுப் போய்விடுகிறது, நாம் பயமற்றவர்களாக ஆகி விடுகிறோம். இந்த உலகம் அழிந்து விடும், சில கோடி வருடங்களுக்கு பிறகு இந்த பூமி அழிந்து விடும் என்றெல்லாம் சொல்லப் படுபவைகளைக் கேட்டு நமக்கு பயம் உண்டாகிறது. இந்த பயம் இப்போது நம்மை விட்டு அகன்று விடுகிறது. அய்யஹோ! நான் கூட இறந்து விடுவேன், எனக்கும் அழிவு ஏற்படும் என்ற சிந்தனையிலிருந்து நம் தூக்கம் கெட்டுப்போவது தடைபட்டுப் போகிறது; பிரபஞ்சம் அழிவில்லாதது-அவினாசி வடிவம் என்பதை அறிந்து நம்மிடமிருந்த தவிப்பு அல்லது கவலை-ஆகூலம் இல்லாமல் போகிறது. கொஞ்சம் யோசனை செய்து பார், உலகின் அழியாத தன்மையை தெரிந்து கொண்டதும் நமக்கு பெரிய லாபம் கிடைத்து விடுகிறது. நான் ஒரு அனாதிஅனந்த உயிர் பொருள்-ஜீவ திரவிய மாவேன் மேலும் எனக்கு எப்போதும் அழிவில்லை என்பதை தெரிந்து கொண்டதும் நாம் எவ்வளவு அமைதி அடைந்து விடுகிறோம். என்னை காப்பாற்றுபவரும் யாருமில்லை, என்னை அழிப்பவரும் கூட யாரும் இல்லை என்பதை அறிந்து நம்மிடமிருந்த எல்லா தாழ்வு மனப்பான்மைகளும் அழிந்து விடுகின்றன.

பிரபஞ்சத்தின் இயல்பை சர்வஞ்ஞர் தானே நேராக அறிந்து அதைப்பற்றி கூறியுள்ளார். அவர் கூறியதை சாஸ்திரங்களின் மூலம் நாமும் தெரிந்து கொள்கிறோம். இதன் பொருள்

சர்வஞ்ஞர் பிரத்யக்ஷமாக-நேராக தெரிந்து கொண்டார், அதையே நாம் பரோக்ஷமாக-மறைமுகமாக தெரிந்து கொண்டோம். அதாவது நாம் கூட அரஹந்த-சித்த ஜாதியின்-குலத்தின் சேத்தன மய, ஞான மய, அறிவு மய திரவியமே என்பது நிரூபணமாகிறது. அவ்வாறு ஆன பிறகு அறிவின் மஹிமையையும் மற்றும் அந்த அறிவை கொண்ட நம் மஹிமையையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

நவீன விஞ்ஞானத்தில் இப்படி ஒரு தத்துவம் இருக்கிறது. Matter can neither be created nor be destroyed. It only changes it form-பொருளை உற்பத்தி செய்யவும் முடியாது, மற்றும் அதை அழிக்கவும் முடியாது. அது தன் உருவத்தை மட்டுமே மாற்றிக் கொள்கிறது. இங்கு matter என்பது புத்கல திரவியத்தையே குறிக்கிறது. ஏனெனில் இதுவரை விஞ்ஞானிகள் புத்கலத்தை பற்றியே அறிந்திருக்கிறார்கள் மற்றும் அது பற்றிய ஆராச்சியையே செய்து கொண்டிருக்கின்றனர். இந்த ஒரு திரவியத்தை பற்றிய தத்துவம் உண்மை என்றால் அதுவே எல்லா திரவியங்களுக்கும் பொருந்தும் அல்லவா. அதாவது எல்லா திரவியமும் நித்யம், எந்த திரவியமும் எப்போதும் அழிவதில்லை அதன் அவஸ்தைகள்-பர்யாயங்கள்-அதாவது வெளிப்படும் விதங்கள் மட்டுமே மாற்ற மடைகின்றன.

ரீனா, நீ பள்ளியில் படிக்கும்போது கெலிடியோஸ்கோப் என்ற அழகாக கருவி ஒன்றை செய்தது ஞாபகம் இருக்கிறதா? அதில் பல நிற கண்ணாடித் துண்டுகளை போட்டு மூடிவிட்டாய். அதை சுற்றிசுற்றி பார்ப்பவர்கள் புதுப்புது வண்ண உருவங்களை அதில் பார்க்க முடிந்தது. அதனுள் இருந்த கண்ணாடி துண்டுகள் அப்படியே இருந்த போதிலும் ஒவ்வொரு நிலையிலும் அனேக விதவிதமான வெவ்வேறு உருவங்களை பார்க்க முடிந்தது அல்லவா! இதன் தாத்பர்யம் என்ன வென்றால், திரவியம் அதில் எத்தனை இருந்ததோ அத்தனையே இருந்தது-நித்யமாக அப்படியே இருந்தது ஆனால் அதில் காணப்படும் உருவங்கள்-பர்யாயங்கள் என்னவோ புதிது புதிதாக பலவாக இருக்கின்றன.

நம்மால் பார்க்கப்படும் பொருள்களின் பல்வேறு தோற்றங்கள், அதன் புதிய தோற்றம், மற்றும் அதன் அழிவு எல்லாம் அந்த திரவியத்திலேயே காணப்படுகிறது. அந்த தோற்றமும், அழிவும் அதன் பர்யாயங்கள் பற்றியது, திரவியம் பற்றியதில்லை. திரவியம் அழியாது அப்படியே நீடிக்கும் தன்மை கொண்டதாகவும், அதன் பர்யாயங்கள் சமயந்தோரும் தோன்றுவதும் அழிவதுமான அவஸ்தையை கொண்டதாகவும் இருக்கிறது.

திரவியங்களின் சமூகம் பிரபஞ்சம் என்று சொல்லப்படுகிறது என்று தெரிந்து கொண்ட பிறகு திரவியம் என்று எதை கூறுகின்றனர்? என்ற கேள்வி மனதில் தோன்றுகிறது அல்லவா. இதன் பதில் **குணங்களின் சமூகத்தை திரவியம்** என்று சொல்கின்றனர். மேலும் பதார்த்தம், வஸ்த்து, அர்த்தம், பொருள் என்ற பல வகையான பெயர்களும் திரவியத்திற்கு உண்டு. பிரபஞ்சம் பற்றிய வரையறையில் “திரவியங்களின் சமூகம் உலகம்” என்று சொன்னோம், அங்கு திரவியங்களுக்குள் ஒன்றுக்கொன்று **ஏகஷேத்ராவஹாக சம்பந்தம்** அதாவது ஒரே இடத்தில் இருக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று பார்த்தோம். இப்போது திரவியத்தின் வரையறையில் குணங்களின் சமூகம் என்று சொல்லப்பட்டதில் குணங்களுக்கு திரவியத்துடன் **நித்ய தாதாத்மிய சம்பந்தம்** இருக்கிறது மேலும் குணங்களுக்குள் ஒன்றுக்கொன்று **அவினாபாவி சம்பந்தம்** இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஏகஷேத்ராவஹாக சம்பந்தம் பற்றி நாம் முன் கடிதத்தில் தெரிந்து கொண்டோம். நித்ய தாதாத்மிய சம்பந்தம் என்றால் என்ன? என்பது பற்றி இப்போது தெரிந்து கொள்ளலாம். நித்யம் என்றால் நீடித்திருப்பது, எப்போதும் இருப்பது. தாதாத்மிய என்றால் ஒன்றாக இருப்பது அதாவது எப்போதும் பிரிந்து விடாமல் கூட்டாகவே இருப்பது. குணங்களுக்கு திரவியத்துடன் நித்ய தாதாத்மிய சம்பந்தம் இருக்கிறது அதாவது திரவியத்திலிருந்து குணம்

எப்போதும் வேறுவேறாக ஆவதில்லை. எப்படி நெருப்பின் குணமான வெப்பத்தை, நெருப்பிலிருந்து பிரிக்க முடியாதோ; வெல்லத்தின் குணமான இனிப்பை வெல்லத்திலிருந்து பிரிக்கமுடியாதோ அதுபோல திரவியத்திடமிருந்து அதன் குணத்தை பிரிக்க முடியாததாக இருக்கிறது.

குணங்களில் ஒன்றுக்கொன்று அவினாபாவி சம்பந்தம் கொண்டதாக இருக்கிறது. இதன் பொருள் எங்கு ஒரு குணம் இருக்கிறதோ அங்கேயே அந்த திரவியத்தின் மற்ற குணங்களும் இருக்கின்றன என்பதாம். எப்படியென்றால் சர்க்கரையில் வெள்ளை நிற குணமும், இனிப்பு சுவை குணமும் அவினாபாவி சம்பந்தம் கொண்டவைகளாக இருக்கின்றன. அந்த இரண்டையும் தனித்தனியாக பிரிக்க முடியாது. தங்கத்தில் பொன் நிறமும், பளு-weight குணமும் இருக்கின்றன, அவை இரண்டுக்கும் அவினாபாவி சம்பந்தம் இருக்கிறது. புத்கல திரவியத்தின் ஸ்பரிசம், சுவை, மணம், நிறம் முதலிய குணங்களுக்குள் ஒவ்வொன்றும் மற்றவைகளுடன் அவினாபாவி சம்பந்தம் கொண்டவைகளாக இருக்கின்றன. எங்கு ஒரு குணம் இருக்கிறதோ அங்கேயே அந்த திரவியத்தின் அனந்த குணங்களும் ஒன்றாக இருக்கின்றன. இதையே, இந்த பிரிக்க முடியாத சமூகத்தையே திரவியம் என்று சொல்கிறோம். குணங்கள் திரவியத்திலிருந்து தனியாக இருக்க முடியாது மேலும் முன்பே இல்லாத புதிய குணம் எதுவும் அதில் வந்து சேரவும் முடியாது. திரவியத்தில் எவ்வளவு அனந்த குணங்கள் இருக்கின்றனவோ அவைகளே அந்த திரவியத்திலேயே எப்போதும் இருக்கின்றன. எத்தனை அனந்த குணங்கள் அரஹந்தர்-சித்தர்களிடம் இருக்கின்றனவோ அத்தனை அனந்த குணங்களும் ஒவ்வொரு உயிர் திரவியத்திலும் இருக்கின்றன. உங்களிடமும், என்னிடமும் கூட அதே அனந்த குணங்கள் இருக்கின்றன. பரமாணுக்களில்கூட அதனதன் அனந்த குணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு திரவியமும் இயற்கையாகவே அதற்கு இருக்க வேண்டிய எல்லா குணங்களுடன் பரிபூரணமாக எந்த குறையும் இன்றி இருக்கின்றன.

இந்த குணங்கள் சாமான்யம் மற்றும் விஷேசம் என்று இரண்டு விதமாக இருக்கின்றன. **சாமான்யம்** என்றால் **பொது**, அதாவது அந்த குணம் எல்லா திரவியங்களிலும் இருக்கும், மற்றும் அந்த குணம் இல்லாத திரவியமே இருக்காது என்பதாம். ஒவ்வொரு திரவியத்திலும் அதனதன் பொது குணங்கள் சுதந்திரமாகவும், எந்தவிதமான குறையும் இன்றி அதிலேயே இருக்கின்றன. **அஸ்தித்வம், வஸ்துத்வம், த்ரவ்யத்வம், ப்ரேமேயத்வம், அகுருலகுத்வம், பிரதேசத்வம்** முதலான அனந்த பொது குணங்கள் எல்லா திரவியங்களிலும் இருக்கின்றன. எந்த குணம் எல்லா திரவியங்களிலும் இல்லாமல் ஒரு சில குறிப்பிட்ட திரவியங்களில் மட்டும் இருக்கிறதோ அதை விஷேச அதாவது சிறப்பு குணம் என்று சொல்கிறோம். பொது குணங்களை வைத்து இது திரவியம் என்று உறுதி செய்கிறோம். சிறப்பு குணங்களை வைத்து இது எந்த குறிப்பிட்ட திரவியம் என்று உறுதி செய்கிறோம். எப்படியெனில் ஸ்பர்சம், சுவை, மணம், நிறம் முதலியன புத்கல திரவியத்தின் விஷேச குணங்கள். எந்தெந்த திரவியங்களில் இந்த ஸ்பர்சம், சுவை, மணம், நிறம் முதலிய குணங்கள் காணப்படுகிறதோ அவைகள் எல்லாம் புத்கல திரவியங்களே என்று தெரிந்து கொள்ளலாம்.

தர்சனம்-பொதுவாக அறிதல், ஞானம்-விஷேசமாக அறிதல், சுகம், ஒழுக்கம், வீர்யம்-சக்தி, முதலியன ஜீவ திரவியத்தின் விஷேச குணங்கள். ஆகையால் எந்த திரவியத்தில் பார்த்தல் அறிதல் முதலான குணங்கள் இருக்கிறதோ அவை ஜீவ திரவியம் என்று நாம் தெரிந்து கொள்ளலாம். சுகம் கூட ஜீவ திரவியத்தின் சிறப்பு குணம். அது உயிரில் மட்டுமே இருக்கிறது, வேறு எந்த திரவியங்களிலும் இல்லை. புத்கலத்தில் சுகம் தரக்கூடிய குணம் இல்லவே இல்லை. ஆனால் அஞ்ஞானியாகிய நாம், புத்கல பொருள்களை தேடுவதிலும், அவைகளை அடைவதிலும் நம் வாழ்நாள் முழுவதும் பெருமுயற்சி செய்பவர்களாகவே

இருக்கிறோம், அந்த பொருள்களின் பின்னால் ஓடுகிறோம். செல்வத்தை குவித்தல், பெரிய பங்களா, அழகிய வீடு கட்டுதல், சுகபோக பொருள்களை சேர்த்தல், அழகிய மனைவி, குழந்தைகள், குடும்பம் மற்றும் நம் உடலை அழகு படுத்துதல் முதலானவைகளில் சுகம் நிறம்பி வழிவதாக நம்பி, அவைகளைப் பெருவதில் படும் கஷ்டங்களையே நாம் உண்மையான சுகம் என்று நினைக்கிறோம். இந்த பொருள்கள் எல்லாம் புத்கல பொருள்கள், இதில் சுகம் தரக்கூடிய குணமே இல்லை என்பதை இந்த பைத்தியக்கார ஓட்டத்தில் நாம் மறந்து விடுகிறோம் அல்லது அறியாதவர்களாக இருக்கிறோம். ஒரு பொருளில் இல்லாத ஒன்றை எப்படி அதிலிருந்து நாம் அடைய முடியும்? இதுவே இன்றய நம் எல்லா துன்பங்களுக்கும் காரணம் என அறிதல் வேண்டும்.

இந்த பிரபஞ்சத்தில் ஜாதி நோக்கில் ஆறு திரவியங்களே இருக்கின்றன, அவைகளின் ஸ்வரூபத்தை அதன் விஷேச குணங்களின் மூலம் இப்போது தெரிந்து கொள்ளலாம்.

ஜீவ திரவியம்: எதில் ஞானம், தர்சனம், ஒழுக்கம், சுகம், வீர்யம், க்ரியாவதி-இடம் பெயரும் சக்தி முதலிய சிறப்பு குணங்கள் இருக்கின்றதோ அவை ஜீவ திரவிய மாகும். மேலும் பல சிறப்பு குணங்களும் உயிரில் இருக்கின்றன, அவைகளைப் பற்றியெல்லாம் பின்னால் அதற்கு உகந்த சமயத்தில் தெரிந்து கொள்ளலாம்.

புத்கல திரவியம்: எதில் ஸ்பர்சம், சுவை, மணம், நிறம், க்ரியாவதி சக்தி முதலான சிறப்பு குணங்கள் இருக்கிறதோ அதை புத்கல திரவியம் என்கிறோம். உயிருக்கு ஸ்பர்சம், சுவை, மணம், நிறம் முதலிய குணங்களை அறியும் சக்தி இருக்கிறது, ஆனால் உயிரில் இந்த குணங்கள் எதுவும் இல்லை. உயிர், புத்கலம் இரண்டிலும் க்ரியாவாதி சக்தி இருக்கிறது, அந்த சக்தியால் அவை இரண்டும் பிரபஞ்சத்தில் இடம் விட்டு இடம் செல்கின்றன அல்லது எங்காவது நிலை கொள்கின்றன. இடம் பெயர்வதும், ஒரே இடத்தில் தங்குவதும் க்ரியாவதி சக்தியின் காரியமாகும். மற்ற நான்கு திரவியங்களில் இந்த குணம் இல்லை. அனாதி காலமாக மற்ற இந்த நான்கு திரவியங்களும் ஒரே இடத்தில் நிலை கொண்டுள்ளன. அவைகளில் இடம் பெயர்தலோ அல்லது அதற்குள்ளேயே அலையோ அல்லது சலனமோ ஏற்படுவதில்லை.

தர்ம திரவியம்: சுயமாகவே இடம் பெயரும் ஜீவ மற்றும் புத்கலங்களுக்கு இடம் பெயர்வதில் நிமித்தமாக இருப்பதை தர்ம திரவியம் என்று சொல்கிறோம். தர்ம திரவியம் ஜீவ புத்கலங்களை கட்டாயமாக இடம் பெயரச் செயவதில்லை, எது இடம் பெயர்கிறதோ அதற்கு அனுகூலமாக மட்டுமே இருக்கிறது. உதாரணமாக சுயமாகவே நீந்தும் மீனுக்கு தண்ணீர் அனுகூலமாக இருப்பது போல என அறிக. கிணற்று தண்ணீர் அதுவே நிலையாக இருந்த போதிலும், மீன் நீந்த அந்த கிணற்றுத் தண்ணீர் நமித்தமாக இருக்கிறது. அதுபோல தர்ம திரவியம் சுயமாகவே நிலையாக ஒரே இடத்தில் இருந்தாலும், உயிர், புத்கலம் இரண்டின் இடம் பெயர்தலுக்கு அனுகூலமாகவே இருக்கிறது. **கதி ஹேதுத்வம்** என்ற இந்த குணத்தை தர்ம திரவியத்தின் சிறப்பு குணம் என்று சொல்கிறோம்.

அதர்ம திரவியம்: இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் உயிர், புத்கல திரவியங்கள் சுயமாகவே ஒரே இடத்தில் நிலைத்து இருக்க எது நிமித்தமோ அதை அதர்ம திரவியம் என்று சொல்கிறோம். உதாரணமாக நடந்து சென்று கொண்டு இருக்கும் பயணிக்கு(for a traveller), மரத்தின் நிழல் நிற்பதற்கு நிமித்தமாக இருப்பது போல எனலாம். அதேபோல இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் உயிர் மற்றும் புத்கலங்கள் சுயமாகவே ஒரிடத்தில் நிற்கும்போது, அதர்ம திரவியம் அவைகள் நிலைத்திருக்க அனுகூலமாக இருக்கிறது. **ஸ்திதி**

ஹேதுத்வம் என்னும் இந்த குணத்தை அதர்ம திரவியத்தின் சிறப்பு குணம் என்று சொல்கிறோம்.

ஆகாச திரவியம்: ஒவ்வொரு திரவியமும் மூழ்கியிருக்க இடம் கொடுப்பது அதாவது தங்கியிருக்க இடம் கொடுப்பது ஆகாச திரவியத்தின் சிறப்பு குணமாகும். இதை **அவகாஹன ஹேதுத்வம்** என்று செல்கின்றனர். நாம் மேல்நோக்கி பார்த்தால் நீலமாக தெரிகிறதே அதுதான் ஆகாசம் அல்லவா? அது இல்லை, ஏனெனில் எதை பார்க்க முடிகிறதோ, எதில் வர்ண குணம் இருக்கிறதோ, அது புத்கல திரவியமாகும். புத்கல திரவியம் தவிற மற்ற திரவியங்கள் அரூபி, உருவமற்றவையாகும். நாம் எதை space என்று சொல்கிறோமோ, அதுவே ஆகாச திரவியமாகும். அதன் விஸ்தீரணம் அனந்தமாக-அளவிட முடியாததாக இருக்கிறது, அதற்கு விளிம்பு-எல்லை-கடைசி பகுதி என்பதே இல்லை. ஆகாச திரவியத்தின் நட்ட நடுவில் எங்கு ஆறு திரவியங்களும் இருக்கின்றனவோ, அதை **லோகாகாசம்** என்று சொல்கிறோம். அதன் எல்லா பக்கத்திலும்-பத்து திசைகளிலும் அனந்த அனந்த **அலோகாகாசம்** இருக்கிறது. நிகழ்காலத்தில் விஞ்ஞானிகளால் அறியப்படும் சூரியன், சந்திரன், கிரஹம், தாரை, நட்க்ஷத்திரம் எல்லாம் லோகாகாசத்தின் ஒரு சிறிய பகுதியில் இருப்பவைகளேயாகும்.

ஆகாச திரவியம் மற்ற திரவியங்களுக்கு இடம் கொடுக்கிறது என்பதன் பொருள், அந்த திரவியங்களின் விளிம்பை மட்டும் அது தொட்டுக்கொண்டு இருக்கவில்லை, அந்த திரவியங்களுக்குள்ளும் ஆகாசம் ஊடுருவி இருக்கிறது. அது நாம் கெட்டியானதாக நினைக்கும் புத்கல திரவியத்தின் உள்ளும் ஊடுருவி இருக்கிறது. அதாவது ஆகாச திரவியம் கெட்டியான புத்கலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பிளவின்றி ஒரே திரவியமாக இருக்கிறது. உண்மையை சொல்ல வேண்டும் என்றால் ஆறு திரவியங்களும் ஒன்றுக்குள் ஒன்று இருக்க இடம் கொடுப்பதாகவே இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஒரே இடத்தில் இருப்பதற்கு அவைகளுக்குள் ஏகக்ஷேத்ராவகாஹ சம்பந்தம்-உறவு இருப்பதே காரணமாகும்.

கால திரவியம்: லோகாகாசத்தில் அசங்யாத-எண்ணிக்கையால் சொல்ல முடியாத பிரதேசங்கள் உள்ளன. இவைகளின் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு கால திரவியம் இருக்கிறது. எல்லா திரவியங்களிலும் மாற்றம்-காரியம் நிகழ நிமித்தமாக இருப்பது கால திரவியத்தின் **பரிணமன ஹேதுத்வம்** எனும் சிறப்பு குணத்தால் ஆகும். நம்மால் செகண்டு-மணித்துளி, நிமிடம், மணி, நாள், மாதம், வருடம் என்று காலத்தை கணக்கிடுவதை **வியவஹார காலம்** என்று சொல்கின்றனர். கால திரவியத்தின் ஒரு பர்யாயத்தை **சமயம்** என்று சொல்கிறோம். காலத்தை கணக்கிடும் அளவையான-unit ஒரு பாராம்பரிய செகண்டு second என்பது, அசங்யாத சமயங்கள் கொண்டதாகும்.

இவ்வாறு சிறப்பு குணங்களின் வழியாக நாம் திரவியங்களை அடையாளம் காண்கிறோம் அல்லது தெரிந்து கொள்கிறோம். தத்துவ மொழியில் **குணம்** என்பது **லட்சணம்**, **திரவியம்** என்பது **லட்சியம்**. உதாரணமாக ஞானம் என்பது லட்சணம் அதை உடைய உயிர் லட்சியம் என அறியலாம். எதில் ஞானம் இருக்கிறதோ அது உயிர். உயிரை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதன் லட்சணத்தின் வழியே தான் அதை தெரிந்து கொள்ளலாம், அனுபவம் செய்யலாம், அதற்கு வேறு எந்த வழியும் இல்லை. பகவானுக்கு பூஜை செய்வதால், உபவாசம் இருப்பதால், லட்ச கணக்கில் பணம் தானம் செய்வதால் இன்னும் இதுபோன்ற பல புண்ணிய காரியங்களில் ஈடுபடுவதால், நம் உயிரின் அனுபவம் நமக்கு கிடைக்காது. ஆனால் எங்கு ஞான லட்சணம் இருக்கிறதோ அங்கே நம் பார்வையை கொண்டு செல்வதால், அங்கே உபயோகத்தை நிலை நிறுத்திவதால், உள்நோக்கு முகம்-அந்தர்முஹ் கொண்டு சேதன (ஞான, தர்சன) லட்சணத்தின் மூலம் அறிவதாலேயே ஆத்மானுபூதி-உயிரின்

அனுபவம் வருகிறது. தத்துவங்களைப் பற்றி இவ்வாறு சொல்வதை கேட்பதால் நம் மனதில் நாம் செய்யும் பூஜை, தானம், விரதம் முதலியனவெல்லாம் வீண்தானா? இவைகளை எல்லாம் விட்டு விட வேண்டுமா? என்ற எண்ணம் தோன்றலாம். யாருக்கு தத்துவத்தில் பயிற்சி இருக்கிறதோ அவருக்கு என்னவோ தத்துவத்தை தன் கேவலஞானத்தால் நேரடியாக பார்த்து உறுதி செய்யும் சர்வஞ்ஞ பகவானின் மேல் பக்தி உணர்வு வராமல் இருக்காது.

எனவே அதற்கு பதில் என்னவென்றால், பூஜை, ஸ்வாத்யாயம், தானம் முதலியவைகளை விடவேண்டுமா?என்ற கேள்வியே இங்கு எழவில்லை. தத்துவ பயிற்சி செய்பவருக்கு மேலும் அதிகம் பக்தி உணர்வே உண்டாகிறது. அவர்கள் அதில் அதிக நேரத்தையும், பொருளையும் செலவு செய்து கொண்டு இருப்பதையே நம்மால் பார்க்க முடிகிறது. இன்றய நவீன உலகில் பொருள் செலவு செய்தல் என்னவோ மிக சுலபமாகவே இருக்கிறது, ஆனால் நேரம் ஒதுக்குவதுதான் மிகவும் கடினமாக ஒன்றாக இருக்கிறது, ஏனென்றால் பூஜை, சுவாத்யாயம் முதலிய செயல்களுக்கு நேரம் ஒதுக்க நம்மிடம் நேரம் எங்கே இருக்கிறது? ஆனாலும்கூட தத்துவத்தில் ருசி உள்ளவர்கள் பொருள் மற்றும் நேரம் இரண்டையுமே ஒதுக்கி பூஜை, தத்துவ பயிற்சி முதலியன செய்வதில் ஆர்வமாகவே ஈடுபடுகின்றனர்.

ஆரம்ப கட்டத்தில் ஆகம பயிற்சி செய்யும்போது அதில் கூறியுள்ளவைகளை புரிந்து கொள்வதில் குழப்பம் இருக்கவே செய்கிறது. உயிர் பொருளின் இயல்பு குணம் எது என்பதை தெரிந்து கொள்ளும் அதேசமயம், மனிதர்கள் உலகியலில் செய்யும் பூஜை, தானம் முதலான செயலை செய்ய வேண்டுமா? கூடாதா? என்ற கேள்வி எழவே செய்கிறது. ஆனால் இதுபோன்ற கேள்வி ஒரு கேலிக்குரியதாகவே இருக்கிறது. எப்படியெனில் நாம் பிராணவாயு பற்றி படிக்கும்போது அது வாயுவாக இருக்கிறது, எறிவதற்கு உதவி செய்கிறது என்று அறிகிறோம். இதை படித்த ஒருவர் தண்ணீரில் பிராணவாயு இருக்கிறது, அது திரவிய வடிவில் இருக்கிறது மேலும் அது தீ அணைப்பானாக எப்படி இருக்கிறது? அது பிராணவாயு போல எறிவதற்கு உதவியாக அல்லவா இருக்க வேண்டும்? என்று கேட்பாரானால் அது கேலிக்குறியதாகத்தானே இருக்கும்! அது போலவே தான் பூஜை, விரதம், தானம் முதலியவைகளை விடவேண்டுமா என்ற கேள்வியும் கேலிக்குறியதாகும். **நாம் நம்மை ஒரு உயிர் திரவியம் என்று எண்ணாமல் நான் ஒரு மனிதன், மனித பிறவியில் இருக்கும்வரை மட்டுமே நான் இருப்பேன் என்ற எண்ணம் கொண்டிருப்பதாலேயே இந்த மாதிரியான கேள்விகள் எழுகிறது.** ஆனால் யார் தத்துவ அறிவு பெற்று தன் உண்மையான உயிரை அறிந்து, புரிந்து கொண்டுள்ளாரோ அவருடைய எண்ணம் முழுவதும் தான் சம்சார சுழற்சியிலிருந்து விடுபட்டு முக்தி அடைவதையே தன் குறிக்கோளாக கொண்டிருப்பார். அப்படிப் பட்டவர் தன் தனியான இருப்புத் தன்மையை அறிந்தவராக இருக்கிறார். தன் உயிரையும் உடலையும் பிறித்தறிந்தவராக இருக்கிறார். அவர் தன்னையும்-ஆத்மாவையும் தன் உடல் செய்யும் பூஜை, விரதம் முதலான செயலையும் பிறித்து அறிகிறார். அவர் தத்துவ அறிவு பெற்றதால் அவருடைய உடலின் கிரியைகள் அவருடைய உயிரில் வீதராக தன்மையை உண்டு பண்ணாது என்று உணர்ந்தவராக இருக்கிறார். ஆனாலும் அவருடைய உடலின் கிரியைகள் தானியங்கியாக பூஜை முதலிய செயல்களில் ஈடுபடவே செய்கிறது.

முக்தி பாதையின் ஆரம்ப கட்டத்தில் பாப உணர்வுகளான கோபம், கபடம், அகந்தை, பற்று முதலியன குறையத் தொடங்குகிறது. புண்ணிய உணர்வுகளான பூஜை, விரதம், தானம், நேர்மை, உண்மை, நல்லொழுக்கம் முதலியன அதிகரிக்கிறது. அதனால்தான் அந்த ஆரம்ப காலகட்டத்தில் ஒருவருடைய செயல்கள் பூஜை, விரதம், பக்தி, தயை, தானம் ஆகிய செயல்களில் அதிக நாட்டம் இருக்கிறது. **ஆகம அறிவும் அதனால் வீதராக தன்மையும் வளர வளர, ஜின பகவான் உபதேசித்த முக்தி பாதையை உண்மையாக அறிந்து, புண்ணிய செயல்களும் தன்னை பிறவியில் ஆழ்த்துவதே என்றும், அதையும் கொஞ்சம் கொஞ்சமாக**

விட்டுவிட்டு தன் தூய உயிரில், தன் அறிவின் உபயோகத்தை செலுத்தவே அதிக நேரம் செலவிட முயற்சி செய்கிறார். ஆகமத்தில் கூறப்பட்ட தத்துவங்களை நாம் நன்கு படித்து முதன் முதலில் அதை கவனமாகவும், அறிவுப் பூர்வமாகவும் பரிசோதித்து, சர்வஞ்ஞரால் கூறப்பட்ட தத்துவம் இவ்வாறே இருக்கிறது என்று நம் அறிவினால் உறுதியான முடிவுக்கு வரவேண்டும். இந்த முடிவை நம் அறிவில் சிந்தித்தே செய்ய வேண்டும், இதுவே அறிவின் செயலாகும். ஷோடசகாரண பூஜையில் இவ்வாறு எழுதப்படிருக்கிறது.

"ஞானாப்யாஸ் கரே மன்மான்ஹி |
தாகோம் மோஹ மஹாதம் நஹீ||"

இதன் பொருள் யார் எப்போதும் ஜைன தத்துவங்களை சோதித்து ஆய்வு செய்கிறார்களோ அவர்கள் எப்போதும் பொறுப்பில்லாதவராகவோ, பகுத்தறிவற்றவர்களாகவோ, அல்லது விரும்பி பாபச்செயலை செய்பவர்களாகவோ நடந்து கொள்ள மாட்டார்கள் என்பதாம். நாம் உண்மையான தர்மம் என்றால் என்ன? புண்ணியம் என்பது யாது? பாபம் என்பது எது? என்று சரியாக தெரிந்து, புரிந்து கொள்ளவில்லை என்றால் நாம் செய்யும் காரியம் சரியா தவறா என்பதையும், அதன் பலன் என்னவாக இருக்கும் என்பதையும் நம்மால் தெரிந்து கொள்ள இயலாது.

ஆகமத்தின் வழி, அதாவது ஆகமப் பயிற்சியின் வழி நாம் நம்மை அடையாளம் காண வேண்டும். உலகில் அனந்த திரவியங்கள் இருக்கின்றன, அவைகளில் நான் சுதந்திரமான, பரிபூரணமான ஒரு திரவியம், மேலும் என்னிடத்தில்-ஒவ்வொரு திரவியத்திடமும் அனந்த குணங்கள் இருக்கின்றன என்று நாம் தெரிந்து கொண்டுள்ளோம். ஆனால் இங்கே கவனமாக பாருங்கள், உயிர் உருவமற்தாகையால் அதன் அனந்த குணங்களும் கூட அருவமாகவே இருக்கின்றன, எனவே அவைகளை நம்மால் நேரடியாக பார்க்க முடிவதில்லை என்றாலும் அதைப்பற்றி பதட்டம் அடைய வேண்டியதில்லை. ஏனென்றால் அவைகள் அரூபியாக இருந்த போதிலும் அது ஒரு **சேத்ன** திரவியமாகும், அறிதல் அதன் குணமாகும். பார்த்தீர்களா! இந்த சொல்லை கேட்டு யார் அறிந்து கொள்கிறார்கள்? என்று சொல்லுங்கள் பார்க்கலாம்-உயிர். பதினைந்து வருடங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி பற்றிய நினைவு எதன் மூலமாக வருகிறது? ஞானத்தின் மூலமாக அல்லவா! அந்த ஞானம் யாருடையது?- உயிரினுடையது. எத்தகைய குறிப்பிட்ட விஷயம் தெரிந்து கொள்ள மிகவும் கடினமாக இருந்தாலும் அதை அறிவது யார்? ஞானம் அதாவது உயிர்.

இந்த அறிவு குணம் ஒவ்வொரு சமயமும் அறியும் செயலை செய்து கொண்டே இருக்கிறது. தூக்கத்தில் கூடவா? என்று நீங்கள் கேட்கலாம். ஆம் தூக்கத்தில் கூடத்தான் அறிவு செயல்பட்டுக் கொண்டே இருகிறது. இன்று நான் சரியாக தூங்கவில்லை என்றோ அல்லது இன்று எனக்கு ஆழ்ந்த உறக்கம் வந்தது என்றோ நீங்கள் சொல்கிறீர்கள் அல்லவா? இதை யார் தெரிந்து கொண்டது? - உங்களுடைய ஞான குணம் தானே தெரிந்து கொண்டது. நான் இங்கே இருக்கிறேன் என்று ஞான குணம் நமக்கு இரவும், பகலும் சொல்லிக் கொண்டே இருக்கிறது. **அவினாபாவி சம்பந்த காரணத்தால் எங்கு ஞான குணம் இருக்கிறதோ அங்கேயே மற்ற அனந்த குணங்களும் இருக்கின்றன. எங்கு ஞானம் முதலான அனந்த குணங்கள் இருக்கிறதோ அதையே உயிர் திரவியம் என்று சொல்கிறோம். இப்போது உங்களை நீங்களே அதாவது உங்கள் உயிரை நீங்களே உறுதி செய்து விட்டீர்களா இல்லையா?** நாம் பிரபஞ்சம் மற்றும் திரவியம் பற்றியும் தெரிந்து கொண்டோம். குணம் மற்றும் அதன் பர்யாயங்களை அதாவது அதன் காரியங்களை பற்றித் தெரிந்து கொண்ட பிறகு, திரவியத்தின் ஸ்வரூபம் பற்றி மேலும் தெளிவு பெரலாம்.

மோனா, ஜெய்ப்பூரில் நாங்கள் பங்கு பெற்ற ஷிபீர்-தத்துவ முகாம்-பயிற்சி பட்டறை பற்றி நீ தெரிந்து கொள்ள விரும்பினாய் அல்லவா. அங்கு நாங்கள் காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை 8-10 மணி நேரம் பிரவசனம் கேட்டல், தத்துவ வகுப்பில் பாடம் கேட்டல், பூஜை செய்தல், பக்தி செய்தல் முதலியவைகளை பயிற்சி செய்தோம். கடைசியில் தேர்வும் எழுதினோம். வெளி ஊர்களிலிருந்து 850 பேர்களும், ஜெய்ப்பூரில் வசிப்பவர்கள் மட்டுமே சுமார் மூவாயிரம் பேர்களும் இதில் கலந்து கொண்டார்கள். இந்த முகாமில் பல வித்துவான்களும் மற்றும் ஆன்ம அனுபவம் மிக்க பல சகோதர சகோதரிகளும் கூட பங்கு பெற்றனர். தத்துவங்களை பற்றி நுணுக்கமான பயிற்சியும் இங்கு அளிக்கப்பட்டது. நான் தத்துவஞான பாடமாலா, நய சக்கரம் மற்றும் குணஸ்தானம்-முதல் நிலை ஆகிய மூன்று விஷயங்களில் தேர்வு எழுதினேன். அதில் 96%, 96%, 100% மதிப்பெண்கள் பெற்று மூன்றிலும் முதலாவதாக வந்தேன். எல்லோரும் என்னை பாராட்டியும் வாழ்த்து கூறியும் உற்சாகப் படுத்தினார்கள். எனக்கு அப்போது என் கல்லூரி நாட்கள்தான் நினைவுக்கு வந்தது. அடுத்த கடிதத்தில் மற்றவைகளைப் பற்றி எழுதுகிறேன்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்
உங்கள் அம்மா.

கடிதம்-7 18-04-1994

குணத்தின் இயல்பு - பண்பின் தன்மை

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

மோனா, உனக்கு திருமணம் நடந்து இரண்டு மாதங்கள் ஓடிவிட்டது. உன் திருமணத்தின்போது நாம் எல்லோருக்கும் மராத்தி மொழியில் அச்சிடப்பட்ட சன்ஸ்கார், பிதாயி கி பேலா, ஆப் குச் பீ கஹோ, நமோக்கார் மஹாமந்த்ர, சாமான்ய ஸ்ராவகாசார் முதலிய புத்தகங்களை பரிசாக வழங்கினோம். அவைகளை நீ படித்தாயா இல்லையா? உன் அப்பா மேலும் நான்கு-ஐந்து புத்தகங்களை மராட்டியில் மொழிபெயர்ப்பு செய்து ஜெய்ப்பூர் அனுப்பி வைத்துள்ளார்கள். அவைகள் அச்சாகி வந்தவுடன் உங்கள் இருவருக்கும் அனுப்பி வைக்கிறேன்.

கடிதம் 5, 6 ல் நாம் பிரபஞ்சம் மற்றும் திரவியம் இவைகளின் ஸ்வரூபம் பற்றி பார்த்தோம். கல்யாண கோலாகலத்தில் பல நாட்கள் உருண்டோடி விட்டதால் அவைகளை கொஞ்சம் நினைவு படுத்திக் கொள்ளலாம். ஆறு திரவியங்களின் சமூகத்தை பிரபஞ்சம் அல்லது உலகம் என்று கூறுகிறோம். இந்த பிரபஞ்சத்தில் ஒரு ஆகாய திரவியம், ஒரு தர்ம திரவியம், ஒரு அதர்ம திரவியம், அனந்த ஜீவ திரவியங்கள், அனந்தானந்த புத்கல திரவியங்கள் மற்றும் அசங்க்யாத- எண்ணிக்கையால் சொல்லமுடியாத கால திரவியங்கள் இருக்கின்றன. ஆகாச திரவியத்தின் நட்ட நடுவில் எந்த இடத்தில் எல்லா திரவியங்களும் இருக்கின்றனவோ அதையே உலகம் அல்லது பிரபஞ்சம் என்று சொல்கிறோம். இந்த எல்லா அனந்தானந்த திரவியங்கள் ஒவ்வொன்றும் சுதந்திரமானதாக எப்போதும் இருக்கும் தன்மை-அஸ்தித்வம் கொண்டவைகளாக இருக்கின்றன. இரண்டு திரவியங்கள் ஒன்று சேர்ந்து ஒரு திரவியமாகவோ அல்லது ஒரு திரவியத்திலிருந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட திரவியங்களோ உருவாவதில்லை. இந்த எல்லா திரவியங்களும் ஏகஷேராவஹாகியாக-ஒரே இடத்தில் இருப்பவையாக இருக்கின்றன, அதாவது ஒரே இடத்தில்-space-ல் இருப்பவையாக இருக்கின்றன. ஒன்று மற்றவைகளுக்கு இருக்க இடம் தருகின்றன ஆனாலும்கூட அவைகள் கலந்து ஒன்றோடொன்றாக ஆகி விடுவதில்லை. இந்த எல்லா திரவியங்களும் ஆரம்பமும் முடிவும் இல்லாததாக அனாதிஅனந்தமாக இருக்கின்றன. எந்த திரவியமும் எந்த காலத்திலும் அழிவதில்லை மேலும் எதுவும் புதிதாக உற்பத்தியாவதும் இல்லை.

குணங்களின் சமூகத்தை திரவியம் என்று சொல்கிறோம். ஒவ்வொரு திரவியமும் அனந்த குணங்களை கொண்டதாக இருக்கிறது. திரவியம் குணம் இவை இரண்டும் நித்யதாதாத்மிய சம்பந்தம் கொண்டவைகளாக இருக்கின்றன. இதன் பொருள் குணம் திரவியத்தில் இருந்து தனியாக பிரிந்து இருக்க முடியாது என்பதாம். இதன் பொருள் மேலும் என்னவென்றால் எங்கு ஒரு குணம் இருக்கிறதோ அங்கேயே அந்த திரவியத்தின் மற்ற எல்லா குணங்களும் சேர்ந்தே இருக்கின்றன, அங்கேயே இருக்கின்றன என்பதுவும்தான். சாஸ்திரத்தில் **ஞானமாத்ர ஆன்மா** என்று ஒரே குண நோக்கில் சொல்லும்போது கூட ஆத்மாவின் அனந்த குணங்களும் அதனுடன் சேர்ந்தே இருக்கின்றன என்றே அறிய வேண்டும்.

இன்று நாம் குணத்தின் ஸ்வரூபம்-இயல்பு என்னவென்று தெரிந்து கொள்ளலாம். குணம் என்று எதை சொல்கின்றார்கள்? என்ற கேள்விக்கு பதில் இதுதான்-**எது திரவியத்தின் முழுபாகத்திலும் மற்றும் அதன் எல்லா அவஸ்தையிலும் அதாவது எல்லா கட்டத்திலும் இருக்கிறதோ அதை குணம் என்று சொல்கின்றனர்.** திரவியத்தில் எவ்வளவு அனந்த

குணங்கள் இருக்கின்றனவோ அவைகளில் ஒவ்வொரு குணமும் அந்த திரவியம் முழுவதும் பரவி இருக்கிறது, அதன் எல்லா இடத்திலும் ஊடுருவியுள்ளன. இதன் பொருள் என்னவெனில் திரவியம் எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவு பெரியதாகவே அந்த திரவியத்தின் ஒவ்வொரு குணமும் இருக்கிறது. தங்கம்-பொன் ஒரு திரவியம், அதை உதாரணமாக எடுத்துக்கொண்டு அதன் குணங்களை புரிந்து கொள்ளும்படி உங்களுக்கு சொல்கிறேன். அதில் மஞ்சள் நிற குணம், பளு குணம், பளபளப்பு குணம் முதலிய குணங்கள் இருக்கின்றன. மஞ்சள் நிற குணம் முழு தங்கத்திலும் இருக்கிறது, பளு குணம் கூட முழு தங்கத்திலும் இருக்கிறது, பளபளப்பு குணமும் கூட முழு தங்கத்திலும் இருக்கிறது.

சர்க்கரையில் இனிப்பு என்ற ஒரு குணம் சர்க்கரையின் முழு பாகத்திலும் இருக்கிறது, அதன் வெள்ளை நிற ஒரு குணம்கூட சர்க்கரையின் முழு பாகத்திலும் இருக்கறது, அதுபோலவே கடினமான தன்மை என்ற குணமும்கூட சர்க்கரையின் எல்லா பாகத்திலும் இருக்கிறது.

ஜீவ திரவியம் அசங்க்யாத பிரதேசம் கொண்டது. அதன் ஞான குணம் அதன் அசங்க்யாத பிரதேசத்திலும் இருக்கிறது. அதன் சுக குணம்கூட அசங்க்யாத பிரதேசத்திலும் இருக்கிறது, அதன் அஸ்தித்துவ-நிலைத்த தன்மை குணமும் அதன் அசங்க்யாத பிரதேசத்திலும் இருக்கிறது. நாம் தலையில் தான் ஞானம் இருக்கிறது, இதயத்தில் தான் சுகம் இருக்கிறது என்று நினைக்கிறோம், ஆனால் உண்மையில் அப்படியில்லை, அவை உயிரின் அசங்க்யாத பிரதேசத்திலும் இருக்கிறன.

ஒரே இடத்திலேயே இந்த எல்லா குணங்களும் இருக்கின்றன அதையே திரவியம் என்ற பெயர்ச்சொல்லால் குறிப்பிடுகிறோம். குணங்களின் மேல் எதையோ போர்த்தி ஒரு திரவியம் செய்யப்பட்டதாக இல்லை. ஒரு பையில் கோதுமை இருப்பது போலக்கூட திரவியத்தில் குணங்கள் இல்லை. திரவியத்தை குணங்களின் பிண்டம் அதாவது புஞ்சம்-mass என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி உஷ்ணம், அனல், பிரகாசம் முதலிய குணங்கள் எதில் இருக்கிறதோ அதை அக்னி-நெருப்பு என்று சொல்வது போல என அறிக. நெருப்பு தனியாகவும் உஷ்ணம் தனியாகவும் இல்லை அல்லவா! நெருப்பின் குறிப்பிட்ட பாகத்தில் உஷ்ணமும் மற்ற இடத்தில் பிரகாசமும் இருப்பதாகவும் இல்லை. அனந்த குணங்களின் புஞ்சம் அதாவது பிண்டத்தையே திரவியம் என்று ஒரே பெயரால் சொல்கிறோம். குணங்களின் சமூகம் ஆனதால் திரவியத்தை **குணி** என்ற சொல்லாலும் குறிப்பிடுவர்.

எப்போது அது வேறாக இல்லையோ பிறகு ஏன் வேறு வேறு பெயர்கள் கொடுத்து இருக்கிறார்கள்? என்று நீங்கள் கேட்கலாம். இதில் அனந்த குணங்கள் இருக்கின்றன என்று ஏன் சொல்ல வேண்டும்? வெருமனே திரவியத்தின் பெயரை மட்டும் சொன்னால் போதுமல்லவா. ஏனெனில் உயிர், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம் மற்றும் காலம் என்று தனித்தனியாக ஆறு பெயர்கள் இருக்கின்றன, இதன் பொருள் என்னவென்றால் அந்த திரவியங்களில் அதனதன் சிறப்பு, அதனதன் குணதர்மம் வேறுவேறாக இருக்கிறது. இல்லையென்றால் அவைகளை இவ்வாறு வகைபாடு செய்ய முடியாது. இந்த குணதர்மத்தையே குணம் என்று சொல்கிறோம். சக்தி, தர்மம், அந்தம், பாவம், அர்த்தம் எல்லாம் குணத்தின் வெவ்வேறு பெயர்களாகும்.

இதுவரை நாம் குணம் திரவியத்தின் முழுமையிலும் இருக்கிறது என்று குணத்தின் ஒரு பாதி வரையறையை மட்டுமே பார்த்திருக்கிறோம். இதை மட்டுமே சொன்னால் போதாது. அந்த வரையறையின் வேறு ஒரு பகுதி **குணம் திரவியத்தின் எல்லா அவஸ்தையிலும்-நிலையிலும் கூட இருக்கிறது** என்பதாகும். திரவியம் எந்த நிலையில் இருந்தால் என்ன,

அந்த நிலையிலும் அதன் அனந்த குணங்கள் எப்போதும் இருக்கின்றன. எப்படியெனில் தங்கத்தில் மஞ்சளாக இருத்தல், பளுவாக இருத்தல், பளபளப்பாக இருத்தல் ஆகிய குணங்கள் அதன் சம்பூரண பாகத்திலும் இருப்பதோடு மட்டுமல்லாமல் அந்த தங்கத்தாலான ஆரம், மோதிரம், வளையல் முதலான எல்லா பொருள்களின் வடிவ நிலையிலும் அந்த குணங்கள் எப்போதும் இருக்கவே செய்கின்றன.

நாம் நம்முடைய ஸ்வ திரவியத்தை அதாவது நம் உயிரை பற்றி இப்போது ஆரய்ந்து பார்க்கலாம். நான் ஒரு உயிர் பொருள்-ஜீவ திரவியம். என்னிடம் அனந்த குணங்கள் இருக்கின்றன. அவை என் அசங்யாத பிரதேசத்தில் இருக்கின்றன, முழுவதும் ஊடுறுவி இருக்கின்றன மேலும் நான் எந்த அவஸ்தையில்-பிறவியில் இருந்தாலும் அந்த அனந்த குணங்களே இருக்கின்றன. உயிர் எந்த அவஸ்தையில் இருந்தாலும் - அதிசூட்க்ஷம ஏகேந்திரிய பிறவியானாலும், மனிதனானாலும், சித்த அவஸ்தையானாலும் ஒவ்வொரு உயிரிலும் அனந்த குணங்கள் எப்போதும் நிலையாக இருக்கின்றன. குணங்களில் எண்ணிக்கை ஒன்று கூடி அதிகமாகவோ அல்லது ஏதாவது ஒன்று கழிந்து குறைவாகவோ எக்காலத்திலும் ஆவதில்லை. குணங்களின் இந்த வரையறையை தெரிந்து கொண்ட பிறகு நாம் எந்த கவலையும் இல்லாதவர்களாக ஆகிவிடுகிறோம்!

இன்றய வாழ்வில் குறிப்பாக மாணவ பருவத்தில் தேர்வில் மிக அதிக அளவு மதிப்பெண் எவ்வாறு கிடைக்கும் என்று அல்லும் பகலும் சிந்தனை செய்து கொண்டே இருக்கிறோம். சரியான வழியில் பயிற்சி செய்தோ அல்லது தவறான வழியில் காப்பி அடித்தோ அதிக மதிப்பெண் வாங்கவேண்டும் என்று பல வழிகளில் ஒவ்வொருவரும் மும்முரமான முயற்சியில் இருக்கிறார்கள், ஆனால் ஸ்வ திரவியம் பற்றி அதாவது தன் ஸ்வரூபம் பற்றி, அதன் குணங்களைப் பற்றி தெரிந்து கொள்ளக்கூட எந்த சிந்தனையோ, முயற்சியோ இல்லாமலே இருக்கிறோம். நம்முடைய செல்வத்தின் மீதும் அதே நிலைதான். நம்மிடம் கொஞ்சம் அதிகம் செல்வம் இருந்தால் இதை யாரும் திருடிவிடக்கூடதே என்ற கலவை எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. இதை மேலும் எவ்வாறு பெருக்கலாம்? இதை வங்கியில் போடலாமா அல்லது பங்குகள்-shares வாங்கலாமா? என்பது போன்ற சிந்தனையில் இறங்கி விடுகிறோம். ஆனால் ஒரு திரவியத்திலிருந்து அதன் குணத்தை யாரும் பிரித்து எடுத்துச் செல்ல முடியாது என்பதை பற்றியும் திரவியத்தில் குணங்களை கூட்ட முடியாது என்பது பற்றியும் தெரிந்து கொண்ட பிறகு நம்மிடம் எந்த கவலையும் இல்லாமல் போகிறது.

குணத்தை பற்றி தெரிந்து கொண்டதோடு இன்று நாம் **ஸ்வ சதுஷ்டயம்** என்ற புதிய விஷயத்தை பற்றியும் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு வஸ்துவுக்கும் அதாவது திரவியத்திற்கும் அதனதன் சதுஷ்டயம் அதாவது நான்மைகள் எப்போதும் இருக்கின்றன. அவைகளாவன **திரவியம், ஷேத்ரம், காலம், பாவம்(Bhavam)** என்பன. திரவியம் என்ற சொல்லின் பொருள் என்னவோ நமக்கு தெரியும். **ஷேத்ரம்** என்பதன் பொருள் திரவியம் எவ்வளவு இடத்தில் சூழ்ந்துள்ளது என்பதை குறிக்கிறது. இந்த காலத்தில் நாம் வீடு வாங்கும் போது அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்று பார்க்கிறோம். ஆனால் அதில் carpet area, built-up area, super built-up area இன்னும் இதுபோல என்னென்னவோ விஸ்தீரணங்களை பார்க்கிறோம். ஆனால் திரவியத்தின் ஷேத்ரம் என்று பார்க்கும்போது இது போன்ற எந்த குழப்பமும் இல்லை. **திரவியத்தின் அனந்த குணங்களும் எவ்வளவு இடத்தில் இருக்கிறதோ அந்த அளவே அந்த திரவியத்தின் ஷேத்ரமாகும்.** ஒரே வீட்டில் வசிக்கும் பல உறுப்பினர்களின் அறை தனித்தனியாக இருக்கிறது. ஆனால் திரவியத்தின் குணங்களுக்கு அப்படி தனித்தனி இடமில்லை. எவ்வளவு இடத்தில் ஒரு குணம் பரவி இருக்கிறதோ அதே இடத்தில் மற்ற குணங்களும் பரவி இருக்கின்றன அதாவது எல்லா-அனந்த குணங்களும் அதே இடத்தில் பரவியிருக்கின்றன. திரவியத்தின் ஷேத்ரம் எதுவோ அதுவே அதன் ஏல்லா

குணங்களின் ஷேத்ரமுமாகும். தங்கம் எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவு இடத்திலும் அதன் பொன் நிறம், பளபளப்பு, கெட்டித்தன்மை எல்லாம் இருப்பது போல என அறிக. ஸ்வசதுஷ்டயத்தில் திரவியம் மற்றும் ஷேத்ரம் பற்றி தெரிந்து கொண்ட பிறகு இப்போது நாம் காலம் மற்றும் பாவம் பற்றி தெரிந்து கொள்ளலாம். **காலம் என்ற சொல்லுக்கு இங்கு பரிணமன் அதாவது திரவியத்தின் குறிப்பிட்ட அவஸ்தை அல்லது பர்யாயம் என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.** இதைப்பற்றி விரிவான சர்ச்சையை அடுத்த கடிதத்தில் செய்யப் போகிறோம். **பாவம் என்றால் குணம்**, அதை பற்றிய சர்ச்சையைதான் நாம் இப்போது செய்து கொண்டு இருக்கிறோம்.

ஒவ்வொரு திரவியத்திற்கும் அதனதன் ஸ்வசதுஷ்டயம் இருக்கிறது. அதாவது ஒவ்வொரு திரவியத்திற்கும் அதன் திரவியம்-ஸ்வதிரவியம், அதன் ஷேத்ரம்-ஸ்வஷேத்ரம், அதன் பர்யாயம்/பரிணாமம்-ஸ்வகாலம் மற்றும் அதன் குணம்-ஸ்வபாவம் இருக்கிறது. குணத்தின் வரையறை அதன் ஸ்வசதுஷ்டயத்தை உறுதி செய்யக்கூடியதாக இருக்கிறது. குணத்தின் வரையறை இவ்வாறாக இருக்கிறது, **எது திரவியத்தின் எல்லா பாகத்திலும் மற்றும் அதன் எல்லா அவஸ்தையிலும் இருக்கிறதோ அதை குணம்** என்று சொல்கிறோம். இதிலிருந்துஒவ்வொரு திரவியத்தின் ஸ்வசதுஷ்டயமும் வேறுவேறாக இருக்கிறது அதாவது ஒவ்வொரு திரவியத்தின் அஸ்தித்துவம் தனித்தனியாகவும், சுதந்திரமாகவும் இருக்கிறது என்பதை உறுதி செய்ய முடியும். இந்த சித்தாந்தத்திலிருந்து **உயிர் கடைசியில் கலைக்கப்பட்டு முழுமுதற்கடவுளுடன் கலந்து விடுகிறது (merges with the Almighty or Paramathma) என்ற பிற மதத்தினரின் கற்பனையான நம்பிக்கை தவறு என்று கண்டனம் செய்ய முடிகிறது.** சித்த அவஸ்தையிலும் கூட ஒவ்வொரு ஜீவ திரவியமும் சுதந்திரமாகவே இருக்கிறது, முக்தி நிலையில் ஒவ்வொறு முக்தி உயிரின் திரவியம், ஷேத்ரம், காலம், பாவம் நான்கும் தனித்தனியாகவே இருக்கிறது என்ற ஜைனரின் நம்பிக்கை மிகவும் சரியானது என்று உறுதி செய்ய முடிகிறது.

இப்போது சர்க்கரை வைத்துள்ள டப்பாவை பார். அந்த டப்பாவின் ஸ்வதிரவியம் டப்பாவில் இருக்கிறது, அதன் ஸ்வஷேத்ரம் கூட அதே டப்பாவில் இருக்கிறது, அதனுடைய டப்பா அவத்தை (ஸ்வகாலம்) கூட டப்பாவில் இருக்கிறது, அதன் ஸ்வபாவம் கூட டப்பாவிலேயே இருக்கிறது. இதேபோல் சர்க்கரையின் ஸ்வதிரவ்யம் சர்க்கரையில், சர்க்கரையின் ஸ்வஷேத்ரம் சர்க்கரையில், சர்க்கரையின் ஸ்வகாலம் சர்க்கரையில் மற்றும் சர்க்கரையின் ஸ்வபாவம் சர்க்கரையில். இருக்கிறது. அதாவது டப்பாவின் ஸ்வசதுஷ்டயம் டப்பாவில் இருக்கிறது, சர்க்கரையின் ஸ்வசதுஷ்டம் சர்க்கரையில் இருக்கிறது. இன்று நான் உங்களுக்கு வீட்டுவேலை(home work) கொடுக்கிறேன். ஒவ்வொரு நாளும் 10-10 வஸ்துக்களின் ஸ்வசதுஷ்டயத்தின் தனித்தனியான நிலையை கண்டுபிடித்து எழுதுங்கள். உதாரணமாக இந்த கடித்தில் காகிதம் மற்றும் அதன்மேல் மைய்யால்(ink-ஆல்) எழுதப்பட்ட எழுத்துக்கள் உள்ளன. அதில் காகிதத்தின் ஸ்வசதுஷ்டம் தனியாக இருக்கிறது, மற்றும் மைய்யின் ஸ்வசதுஷ்டம் தனியாக இருக்கிறது. இப்படி செய்வதால் என்ன லாபம் என்று கேட்கிறீர்களா? அப்படி செய்வதால் உயிர் “தான் செய்பவன்” என்ற கர்த்ருத்துவ புத்தி எவ்வளவு தவறானது என்பதை தெரிந்து கொள்கிறோம். நான் எவ்வளவு அழகாக எழுதுகிறேன் என்ற எண்ணம் வருகிறது. ஆனால் தத்துவ பயிற்சியில் தெரிந்து கொண்டதை வைத்து பார்க்கும்போது காகிதத்தின் ஸ்வசதுஷ்டம் தனியாக இருக்கிறது, மைய்யின் ஸ்வசதுஷ்டயம் தனியாக இருக்கிறது, எழுதிய கையின் ஸ்வசதுஷ்டயம் தனியாக இருக்கிறது மற்றும் என்னுடைய-ஆத்மாவினுடைய ஸ்வசதுஷ்டம் வேறாக இருக்கிறது. இதனால் நான் அழகாக எழுதுகிறேன் என்ற தற்பெருமை இல்லாமல் போகிறது. சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் நான் செய்பவன் என்ற எண்ணத்திலிருந்து விடுபடுகிறோம். நம் **கர்த்ருத்வபுத்தி** அழிந்து விடுகிறது.

திரவ்யம், குணம், பர்யாயம் மற்றும் அதன் ஸ்வரூபம் மிகவும் ஒரு அழகான சித்தாந்த விஷயமாகும். ஆகமங்கள் மற்றும் உயிர் பற்றிய இரகசியங்கள் மற்றும் அது பற்றிய விளக்கங்கள் இந்த சித்தாந்தத்தின் அடிப்படையில் தான் விரிவு படுத்தப்பட்டு இருக்கின்றன. பள்ளியில் கணக்கு பாடத்தில் ஒரு சூத்திரத்தை தெரிந்து கொண்டு அது சம்பந்தமான கணக்குகளை போடும்போது நம் புத்தி கூர்மை வெளிப்படுகிறது அல்லவா, அதுபோலவேதான் தத்துவ சம்பந்த அடிப்படைகளை அறிந்த பிறகு ஆகமங்களை படிக்கும் போது அதுபோலவே நிகழ்கிறது. தத்துவம் ஆன்மீகம் பற்றிய மிகவும் ருசியான ஒரு விஷயமாகும். அதை தெரிந்து அனுபவிக்க வேண்டும் என்றால் முதலில் தத்துவ அடிப்படை சம்பந்தமான சித்தாந்தங்களை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த ஒவ்வொரு சித்தாந்தங்களை அடிப்படையாக கொண்டே மற்ற சித்தாந்தங்கள் எழுதப்பட்டு இருக்கின்றன, தர்கப்பூர்வமாக நிரூபணம் செய்யக்கூடியதாக இருக்கின்றன.

மகள்களே, உண்மையை சொல்ல வேண்டும் என்றால் இளைமையில் நாம் கல்வி கற்கும்போது புத்திக்கு அதிக சவாலாக இருக்கிறது. நாம் தினமும் புதிது புதிதாக படிக்கிறோம், மனதில் அவைகளை நிருத்துகிறோம். பிறகு வேலையில் சேர்ந்த பிறகு நம் புத்தியில் ஒரு மந்த தன்மை வந்து விடுகிறது. நம் வேலையில் குறைந்த அளவு புத்தியையே உபயோகப் படுத்துகிறோம். மீதம் உள்ள புத்தியை பணம் சம்பாதிப்பதிலும் மற்றும் அதிகாரத்தை பெரிது படுத்துவதிலும் செலவிடுகிறோம். ஆனாலும் நாம் அமைதியை இழந்தவர்களாகவே இருக்கிறோம். ஆகமம் மற்றும் அத்யாத்ம-உயிர் சம்பந்தமான விஷயம் உண்மையில் மிகவும் சுவாரசியமானதும் புத்திக்கு மிகவும் சவாலாகவும் இருப்பதோடல்லாமல் அதே சமயத்தில் மன அமைதியையும் பெருக்குவதாகவும் இருக்கிறது. நாம் நம்மையும், நம்மை சுற்றியுள்ள விஷயங்களையும், சொந்தங்களையும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட தத்துவ விஞ்ஞானம் மற்றும் தர்க நோக்கில் பார்க்கத் தொடங்கி விடுகிறோம்.

நான் ஷோலாபூரை சேர்ந்த டாக்டர். மிலிந்து ஷா அவர்களை சந்தித்தேன். அவர் சமண தத்துவங்களை அறிவதில் மிகவும் ஆர்வமுள்ளவராக இருந்தார். அவர் தத்துவ சம்மந்தமாக நான் எழுதும் கடிதங்களை ஆர்வமாக படிப்பதாகவும், மற்றவர்களையும் படிக்கும்படி ஊக்குவிப்பதாகவும் கூறினார். அதுவும் சரியான செயலாகவே இருக்கிறது. உண்மையில் தத்துவத்தின் மதிப்பையும், மஹிமையையும் தெரிந்தவர்கள், தங்களை போலவே மற்றவர்களும் படித்து பயனடைய வேண்டும் என்ற எண்ணம் கொள்வது இயல்பே. அப்படி செய்யவில்லை என்றால் நாம் காகத்தை விட இழிவானவர்களாகி விடுவோமல்லவா? ஏனெனில் கொஞ்சம் உணவு கிடைத்தாலும் கூட காகம் “கா, கா” என கரைந்து மற்ற காகங்களையும் கூப்பிட்டு தனக்கு கிடைத்த உணவை மற்ற காகங்களுடன் சேர்ந்து உண்ணுவதாகவே இருக்கிறது. காக்கை கதைகளை கேட்கும் பருவத்தை நீங்கள் தாண்டிவிட்டீர்கள் என்று எனக்கு தெரியும். அதனால் இந்த கடிதத்தை இத்துடன் முடிக்கிறேன். மற்றபடி எல்லாம் சுகம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா

கடிதம்-8 20-05-1994

பர்யாயத்தின் ஸ்வரூபம்

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கடிதத்தின் வழியாக ஒவ்வொரு மாதமும் ஒருமுறை உங்களுடன் தொடர்பு கொள்வது எனக்கு மிகவும் சந்தோஷமளிக்கிறது. அதேசமயம் நீங்கள் தினமும் ஜின பகவான் தரிசனமும், ஜினாகம ஸ்வாத்யாயமும் செய்வதை கண்டிப்பான ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இந்த பழக்க வழக்கத்தால் உங்களுக்கு ஸ்வாத்யாயத்தின் மேல் உள்ள ஆர்வம் அதிகரிக்கும், மேலும் அதில் கூறியுள்ள மர்மங்களை தெரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

1972-ல் நான் உன் தகப்பனாருடன் கும்போஜி-பாஹுபலி ஜினாலய புகைப்படங்கள் எடுக்கும் வேலை சம்பந்தமாக அங்கு சென்றிருந்தோம். அந்த சமயம் பூஜ்ய சமந்தபத்திர மஹராஜ் எங்களை ஜினாகமங்களை ஸ்வாத்யாம் செய்யும்படி தூண்டினார். மேலும் நான் வைத்தியசாலையில் வைத்தியம் பார்க்கும்போது ஓய்வு கிடைக்கும் நேரங்களில் ஸ்வாத்யாயம் செய்தால்கூட பரவாயில்லை என்று கூறினார். அவருடைய தூண்டுதலின் பலனால் இன்றய எங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றம் உண்டாகி விட்டது. இப்போது 4-5 மணி நேரம் ஜினாகம ஸ்வாத்யாயம் செய்தல், படிப்பவைகளை சர்ச்சை செய்தல், படித்தவைகளை சிந்தனையில் நினைவு கூறுதல் போக மீதம் கிடைக்கும் 1-2 மணி நேரம் மட்டுமே நான் வைத்தியம் பார்க்கும் வேலையை செய்கிறேன். நான் மாலையில் வைத்தியசாலை செல்லும் சமயத்தில் உங்கள் அப்பா ஜின தத்துவங்களை தெரிந்து கொள்ள விருப்பம் உள்ளவர்களுக்கு ஜினாகமம் சொல்லித்தந்து கொண்டே தானும் ஸ்வாத்யாயத்தில் ஈடுபடுகிறார். ஓய்வு கிடைக்கும்போது அவர் ஜினாகமங்களை மொழிபெயர்ப்பு செய்கிறார், அந்த சமயத்தில் நான் சமையல் வேலைகளை செய்து முடிக்கிறேன்.

கடந்த 2-3 கடிதங்களில் நாம் பிரபஞ்சம், திரவியம், குணம் இவைகளின் ஸ்வரூபம் பற்றிய அடிப்படை விஷயங்களை தெரிந்து கொண்டோம். திரவ்ய-குண-பர்யாயத்தின் ஸ்வரூபம் பற்றி நீங்கள் தொடர்ந்து படித்தல், கேட்டல், எண்ணத்தில் சிந்தித்தல் முதலியவைகளில் ஈடுபடுவது அவசியமாகும். வெருமனே திரவ்ய குண பர்யாயம் பற்றி கேள்வி பதில்களை படிப்பதால், அவைகளின் வரையறைகளை-definition-களை மனப்பாடம் செய்வதால் மட்டும் ஸ்வரூபத்தை-இயல்பை தெளிவாக தெரிந்து கொள்ள முடியாது. திரவ்ய, குண, பரயாயத்தின் இயல்பை தெளிவாக தெரிந்து கொள்ளமல் சமண தந்துவங்களை புரிந்து கொள்ள இயலாது. இப்போது நாம் பர்யாயம் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம். சென்ற கடிதத்தில் நாம் குணத்தின் வரையறையில் **எது திரவியத்தின் முழு பாகத்திலும் மற்றும் அதன் எல்லா அவஸ்தைகளிலும் இருக்கிறதோ அதை குணம் என்று சொல்கிறோம்** என்று பார்த்தோம். இந்த வரையறையில் வரும் அவஸ்தைகளைத்தான் பர்யாயம் என்று சொல்கிறோம். பர்யாயத்திற்கு அவஸ்தை, தசா, ஹாலத், அர்த்தம், பரிணாமம், பர்யாயம் என்று வெவ்வேறு பெயர்களும் உண்டு. பர்யாயத்தின் வரையறை- **குணத்தின் விஷேச காரியத்தை பர்யாயம் என்று சொல்கிறார்கள்.** ஒவ்வொரு குணமும் ஒவ்வொரு சமயமும் பரிணமித்ததுக் கொண்டே இருக்கிறது, அதாவது குணம் புதுப்புது அவஸ்தையை அடைந்த வண்ணம் இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் பழய அவஸ்தை அழிந்து புதிய அவஸ்தை உண்டாகிறது. பழய அவஸ்தை அழிந்து புதிய அவஸ்தை தோன்றுதலை பர்யாய மாற்றம் என்றும் சொல்கின்றனர். புதிய அவஸ்தை பழய அவஸ்தை போலவே இருக்கலாம் அல்லது வேறாகவும் இருக்கலாம்.

அதாவது பழய அவஸ்தை எப்படி இருந்ததோ ஆதே மாதிரியேயான அவஸ்தையாக புது அவஸ்தை இருக்கலாம் அனால் அந்த அவஸ்தையே இருப்பதில்லை. Similar but not the same.

திரவியம் அனந்த குணங்களை உடையது என்று நான் முன்னறே தெரியப் படுத்தினேன். அதன் ஒவ்வொரு குணத்திலும் சுதந்திரமான அவஸ்தை ஒவ்வொரு சமயமும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது, மாறிக்கொண்டே இருக்கிறது. குணம் அனாதிஅனந்தம் அதாவது முதலும் முடிவும் இல்லாதது, ஆனால் அதன் பர்யாயமோ ஒரு சமயம் மட்டுமே இருப்பது. இட-ஷேத்ர நோக்கில் பார்த்தால் குணத்தின் விஸ்தீரணம் எவ்வளவோ அவ்வளவே பர்யாயத்தின் விஸ்தீரணமு மாகும். குணத்தின் ஷேத்ரம் எவ்வளவு பெரியதோ, பர்யாய ஷேத்திரத்தின் விஸ்தீரணமும் அவ்வளவே. அதாவது குணத்தின் ஷேத்ர அளவே, பர்யாயத்தின் ஷேத்ர அளவாக இருக்கிறது. அதாவது குணம் பர்யாயம் இரண்டின் ஷேத்ரமும் ஒன்றாகவே இருக்கிறது. தங்கத்தில் நிற குணம் எவ்வளவு பெரியதோ அதே அளவே அதன் நிறகுணத்தின் பொன் நிற பர்யாய-அவஸ்தையினுடையதுமாக இருக்கிறது. புத்கல திரவியத்தின் அனந்த குணங்களில் நிற மற்றும் சுவை குணங்களை உதாரணமாக எடுத்துக்கொண்டு இப்போது நாம் பார்க்கலாம். நிற குணம் முதலும் முடிவுமின்றி எப்போதும் இருக்கிறது. அந்த குணம் ஒவ்வொரு சமயமும் ஏதாவது ஒரு மாற்றத்தை அடைந்த வண்ணம் இருக்கிறது. நிற குணத்தின் மஞ்சள், நீலம், வெள்ளை, பச்சை முதலிய வண்ணங்கள் அந்த நிற குணத்தின் வெவ்வேறு அவஸ்தைகள். மாங்காய்யின், raw mango-வின் நிற குணம் பச்சை அவஸ்தையில் இருக்கிறது. பச்சையாக இருக்கும் நிற குண பர்யாயம் அழிந்தே, மஞ்சள் நிற அவஸ்தையை அடைகிறது. அதாவது பச்சை நிறம்தான் மாற்றமடைந்து மஞ்சள் நிறமாகிறது. நிற குணம் எப்போதும் நிற குணமாகவே இருக்கிறது ஆனால் அதன் அவஸ்தை-வெளிப்பாடு தான் சமயந்தோரும் மாற்ற மடைகிறது. மாற்றத்தை நம்மால் எப்போது பார்க்க முடிகிறதோ அப்போதுதான் நிறம் மாற்றமடைந்ததாக நாம் அறிகிறோம். மாற்றம் நமக்கு தெரியும்வரை அது பச்சை நிறமாக 7-8 நாட்கள் இருப்பது போலவே நமக்கு தெரிகிறது. ஆனால் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் நிற மாற்றம் சமயந்தோரும் மாற்றமடைந்த வண்ணமே அதாவது கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் அடைந்து கொண்டே இருக்கிறது.

இப்போது சுவை குணம் பற்றி பார்க்கலாம். சுவை குணத்தின் புளிப்பு அவஸ்தை மாற்றமடைந்து இனிப்பாக அவஸ்தையாக மாறுகிறது. சுவை குணத்தின் காரியம்-பரிணமன்-பர்யாயம் ஒவ்வொரு சமயமும் இடைவிடாது நடந்து கொண்டே இருக்கிறது. எல்லா திரவியத்திலும் இருக்கும் பொது குணம் பற்றி நாம் படிக்கும்போது ஒவ்வொரு திரவியத்திலும் **த்ரௌவ்யத்வ** பெயர் கொண்ட பொது குணம் பற்றி நமக்கு தெரியவரும். அதன் காரணத்தால் திரவியத்தில் அதாவது திரவியத்தில் உள்ள அனந்த குணங்களிலும் நிரந்தரமாக மாற்றம் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. நிரந்தரமாக என்றால் ஒரு சமய நேரம் கூட மாற்றம் இல்லாமல் இல்லை. சுவை குணத்தின் காரியம்-பரிணமன் சுவை குணத்தில், நிற குணத்தின் பரிணமன் நிற குணத்தில், வாசனை குணத்தின் பரிணமன் வாசனை குணத்தில் மற்றும் ஸ்பர்ச குணத்தின் பரிணமன் ஸ்பர்ச குணத்தில் ஒவ்வொரு சமயமும் நிகழ்கிறது. இதிலிருந்து மஞ்சள் நிறத்தை மட்டும் பார்த்து மாம்பழம் வாங்கினால் அதன் சுவை புளிப்பாகக்கூட இருக்கலாம் என்பது நமக்கு தெரிகிறது. ஆகையால் மாம்பழம் வழங்கும்போது நாம் மஞ்சள் நிறம், பழ வாசனை, இனிப்பு சுவை மற்றும் மென்மை-ஸ்பர்சம் இவைகள் எல்லாவற்றையும் பார்த்துத்தான் வாங்குகிறோம். இதிலிருந்து ஒரு குணம் வேறொரு குணத்தின் காரியத்தை, பர்யாயத்தை செய்யாது என்னுமொரு பெரிய சித்தாந்தம் நமக்கு தெரிய வருகிறது.

ஒரே திரவியத்தில் இருக்கும் அனந்த குணங்களும் சுயமாகவே அதனதன் காரியங்களை செய்கின்றன, பரிணமிக்கின்றன. எப்போது ஒரே திரவியத்தில் உள்ள அனந்த குணங்கள் தங்களுக்குள் ஒன்றுக்கொன்றின் காரியத்தை செய்வதில்லையோ, பிறகு எப்படி ஒரு திரவியம் மற்றொரு திரவியத்தின் காரியத்தை செய்ய முடியும்? சமயசாரம் கிரந்தத்தில் கூட இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, **ய பரிணம்தி ச: கர்த்தி** இதன் பொருள் எது பரிணமிக்கிறதோ, எது அதுவாகவே சுயமாகவே மாற்றமடைகிறதோ அது கர்த்தா, மேலும் எந்த மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறதோ அது அதன் கர்மம் அதாவது காரியம். ஏந்த ஒரு குறிப்பிட்ட திரவியத்தின் பர்யாயமும் அந்த குறிப்பிட்ட திரவியத்திலேயே நிகழ்கிறது. எது திரவியம் இருக்கும் இடமோ அந்த இடமே பர்யாயத்தினுடைய இடமாகும். குணம் முழு திரவியத்திலும் ஊடுருவி (பரவி) இருக்கிறது, அது போலவே அதன் மாற்றமும் முழு திரவியத்தில் ஊடுருவி இருக்கிறது, பரவியிருக்கிறது, விரிந்து இருக்கிறது. எப்படி சர்க்கரையின் சுவை குணம் சர்க்கரை முழுவதும் பரவியிருக்கிறதோ, அதுபோலவே அந்த சுவை குணத்தின் இனிப்பு பர்யாயம் கூட சர்க்கரை முழுவதும் பரவியிருக்கிறது.

திரவியம், குணம், பர்யாயம் இவை எல்லாவற்றின் ஷேத்ரம்-விஸ்தீரணம் ஒன்றாகவே இருந்தும்கூட திரவியமும், குணமும் அனாதிஅனந்தம் எப்போதும் இருக்கும் நிலையாக-த்ருவமாக இருக்கிறது. ஆனால் அதில் தோன்றும் மாற்றம் என்னவோ ஒரு சமயம் மட்டுமே நிலைப்பதாக இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் புதுப்புது மாற்றத்தை அடைந்து கொண்டே இருக்கிறது. முன் பர்யாயத்தின் அழிவு, அடுத்த பர்யாயத்தின் தோற்றம் இரண்டும் ஒரே சமயத்தில் நிகழ்கிறது. எப்படியெனில் இருட்டின் அழிவும், பிரகாசத்தின் தோற்றமும் ஒரே சமயத்தில் நிகழ்வது போல என அறிக. இருட்டை முதலில் நீக்கிவிட்டு பிறகு வெளிச்சத்தை கொண்டுவர வேண்டும் என்பதில்லை. ஒரே சமயத்தில் முன் பர்யாயம் நாசமடைகிறது, அழிகிறது, அதே சமயத்தில் புதிய பர்யாயம் தோன்றுகிறது. இந்த அழிவும், தோற்றமும் ஒவ்வொரு சமயமும் நிகழ்ந்து கொண்டே இருந்தாலும், திரவியம் மற்றும் அதன் குணங்கள் எப்போதும் அந்த திரவியத்தில் நிலையாக இருக்கின்றன. இந்த நிலையான இருப்பை **திரவ்யம்** என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். திரவ்ய, குண, பர்யாயத்தை பற்றி பேசும்போதெல்லாம் நாம் தோற்றம், அழிவு, நிலைத்திருத்தல் ஆகிய மூன்றுடன் திரவ்யம் இருக்கிறது என்ற வஸ்த்து ஸ்வரூப (இயல்பான/இயற்கையான) நிலையை அதாவது முக்கிய அடிப்படையான ஜெயின சித்தாந்தத்தை தெரிந்து கொள்கிறோம். தத்வார்தஸூத்ரம் என்ற கிரந்தத்தில் **உத்பாத வ்யய த்ரவ்ய யுக்தம் சத், சத் த்ரவ்ய லக்ஷணம்** என்கின்ற ஸூத்திரங்கள் இருக்கின்றன, இதன் அர்த்தம் திரவியத்தின் லட்சணம் சத், மற்றும் இந்த சத் தோற்றம், அழிவு, நிலைத்திருத்தலுடன் இருக்கிறது என்பதாகும்.

திரவியத்தில் ஒரு பர்யாய வடிவின் தோற்றமும், வேறு பர்யாய வடிவின் அழிவும் ஒரே சமயத்தில் நிகழ்கிறது மற்றும் அதே சமயம் அந்த திரவியம் அழிவில்லாமல் நிலையாக இருக்கிறது. இதை தங்கத்தின் உதாரணம் மூலம் பார்க்கலாம் - தங்க வளையலை தங்க மோதிரமாக செய்யப்பட்டது. வளையல் பர்யாயம் அழிந்து, மோதிர பர்யாயம் தோன்றியது, ஆனாலும் இந்த இரண்டு நிலையிலும் தங்கம் தங்கமாகவே இருக்கிறது - இவை எல்லாம் ஒரே சமயத்தில் நிகழ்கிறது. வளையல் வடிவில் தங்கம் இருந்தது, அந்த தங்கமே மோதிர வடிவில் மாற்றமடைந்தது, அதாவது மோதிர வடிவம் அந்த தங்கத்திலேயே நிகழ்ந்தது. தங்கம் அதுவே மோதிர வடிவமானதால், மோதிரத்தின் கர்த்தா தங்கமேயாகும். இதிலிருந்து என்ன காரியம் நிகழ்ந்ததோ அது அந்த திரவியத்திலேயே நிகழ்ந்தது, திரவியத்துக்கு வெளியில் நிகழவில்லை மேலும் அந்த காரியத்தின் கர்த்தா அந்த திரவியமேயாகும், வேறு எந்த திரவியமுமில்லை. தன் பர்யாயத்தின் கர்த்தா ஸ்வயம் அந்த திரவியமேயாகும், வேறு எந்த அன்னிய திரவியமும் அதன் கர்த்தாவாக இல்லை.

ஜீவ திரவியத்தின் காரியம்-பர்யாயம் ஜீவ திரவியத்திலேயே நிகழ்கிறது. புத்கல திரவியத்தின் காரியம்-பர்யாயம் புத்கலத்திலேயே நிகழ்கிறது. அதுபோலவே பிற எல்லா திரவியங்களிலும்- தர்ம, அதர்ம, ஆகாச, கால திரவியங்களின் பரிணமன் அந்தந்த குறிப்பிட்ட திரவியத்திலேயே நிகழ்கிறது. அந்த திரவியமே அதன் மாற்றத்திற்கு கர்த்தா. உயிருக்கு என்ன மாற்றம் நிகழ்கிறதோ அதற்கு கர்த்தா உயிர், அஜீவ திரவியத்தில் என்ன பர்யாயம் நிகழ்கிறதோ அதற்கு கர்த்தா அஜீவ திரவியம். இந்த சித்தாந்தம் ஆறு திரவியங்களுக்கும் பொருந்தும். இந்த நியமத்திற்கு விதிவிலக்கு என்பதே இல்லை. நம் சுயதிரவியத்தில் அதாவது ஆன்மனில் இந்த சித்தாந்தத்தை பொருத்தி, நம்மைப்பற்றி நாமே மேலும் விரிவாக தெரிந்து கொள்ளவே, அறியவே இந்த அரிய முயற்சியாகும். ஜீவ திரவியத்தில் ஞானம், தர்சனம், சிரத்தை-நம்பிக்கை, ஒழுக்கம், வீர்யம்-சக்தி முதலான அனந்த குணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குணத்தின் பர்யாயமும் அந்தந்த குறிப்பிட்ட குணத்தில் நிகழ்கிறது. குறிப்பிட்ட பரயாயத்தின் கர்த்தா அந்த குறிப்பிட்ட குணமேயாகும். அறியும் காரியம் நிகழ்கிறது என்றால் அதற்கு கர்த்தா ஞான குணம். ஒழுக்க காரியம் நிகழ்கிறது என்றால் அதற்கு கர்த்தா சாரித்ர குணம். இந்த காரியங்கள் உயிர் திரவியத்திலேயே நிகழ்கின்றன, அந்த உயிர் திரவியத்தை விட்டு வெளியில் நிகழவில்லை. ஞானம், சுகம், சாரித்ரம் முதலானவைகளின் காரியம் அந்த உயிரிலேயே நிகழ்கிறது, உடல் முதலிய உடனிருக்கும் புத்கலத்தில் நிகழவில்லை.

ஆகம பயிற்சியின் மூலம் நாம் இந்த தத்துவ பார்வையை ஏற்றுக் கொள்ள வேண்டும், நமதாக்கிக் கொள்ள வேண்டும். நம்மிடம் இன்றுவரை இருக்கும் மூடநம்பிக்கையை விலக்கி வைத்துவிட்டு தத்துவ பயிற்சி செய்ய வேண்டும். இதுவரை நம்முடைய நோக்கம் எல்லாம் எப்போதும் வெளிப் பொருள்களிலேயே இருந்திருக்கிறது. இதனால் செல்வம் முதலான பிற பொருள்களால் நமக்கு சுகம் கிடைக்கிறது, குருவிடமிருந்து அல்லது ஆகமத்திலிருந்து ஞானம் கிடைக்கிறது என்பது போன்ற அசைக்க முடியாத நம்பிக்கை நம்மிடம் குடிகொண்டிருக்கிறது. எப்போது காரியம் நிகழ்கிறதோ அப்போது அங்கே இருக்கும் அனுகூலமான பிறதிரவியங்களுக்கு **நிமித்தம்** என்ற பெயர்ச்சொல் கொடுக்கபட்டிருக்கிறது. ஆனால் அந்த விஷயம் வேறாகும், அதைப்பற்றி விரிவான சர்ச்சை செய்யாமல் இருக்கும்வரை அதைப்பற்றிய குழப்பம் இருக்கவே செய்யும். ஆனால் அதை இப்போது விளக்கப் போவதில்லை, பின்னால் உகந்த சமயத்தில் அதை விரிவாக விளக்குகிறேன். பர்யாயம் அழியக்கூடியது, ஷ்ண நேரம் மட்டுமே இருப்பது, அதை நிலையாக வைக்க எவ்வளவு முயற்சி செய்தாலும் அது நிலைப்பதில்லை, ஆகையால் பர்யாயத்தின் பக்கம் மட்டுமே பார்ப்பவர்களுக்கு துன்பம் வராமல் இருக்காது. ஆனால் அந்த பர்யாயம் எதில் உற்பத்தியாகிறதோ அந்த நிலையான-த்ருவ திரவியத்தின் பக்கம் பார்வையை திருப்பினால் துன்பமற்ற நிலை-நிராகுலதா வருகிறது.

பாருங்கள், நம் போன்ற பெண்களின் பார்வை எப்போதும் பர்யாயத்தின் மேல்தான் அதாவது அலங்காரத்தின் மேல், நவீன வடிவத்தின் மேல் தான் இருக்கிறது, அதனால் தங்கத்தாலான ஒரு பொருளை அழித்து நமக்கு பிடித்த நவீன (morden) வடிவில் மாற்ற வேண்டும் என்றும் அது நிகழாதவரை நம்மில் நாமே கஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம். ஆனால் வீட்டில் உள்ள முதியவர்களின் பார்வை மாற்றமில்லாத தங்கத்தின் மேல் இருக்கிறது, அதனால் உன் விருப்பப்படி எந்த உருவில் வேண்டுமானாலும் மாற்றிக்கொள் என்று சொல்லி எந்த கஷ்டமுமின்றி இருக்கிறார்கள். தத்துவ ஞான பயிற்சியே கவலையற்ற நிலை பெற ஒரே விலைமதிப்பற்ற அருமருந்தாகும். என்னைப் போன்ற மருத்துவர்கள் தூக்கம் வராத நோயாளிகளுக்கு தூக்க மருந்து கொடுத்து தூக்கம் வரும்படி செய்கின்றனர், வலி தெரியாமலிருக்க மருந்து கொடுத்து சிகிச்சை அளிக்கின்றனர், ஆனால் அது சரியான சிகிச்சை இல்லை. தத்துவ ஞானமே நம்மை விழிப்படையச் செய்து வஸ்த்து ஸ்வரூபம் பற்றி

தெளிவு படுத்துகிறது, அதனால் நமக்கு துன்பம் மற்றும் கவலை இல்லாமல் போகிறது. இதுவே துன்பமில்லா நிலை அடையும் உண்மையான மார்கமாகும். நல்லது, மீதமுள்ள சர்ச்சையை அடுத்த கடிதத்தில் தொடரலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-9 25-07-1994

புத்கலத்தின் ஸ்வரூபம்

ப்ரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

இந்தமுறை கடிதம் எழுத தாமதமாகிவிட்டது; காரணம் உன் அன்பு பாட்டியின் அழைப்பு மற்றும் வலியுறுத்தலால் சித்தசக்ர விதான ஏற்பாடு செய்ய பூனா சென்றிருந்தேன். ஒரே சமயத்தில் இரண்டு விஷயங்கள் செய்ய முடியும்போது அதை யார்தான் தவற விடுவார்கள்! அங்கு விதானத்தில் பங்கு பெற்றதோடல்லாமல், மாலையில் ஆரத்திக்கு பிறகு சிறுவர்களுக்கு கதைகள் மூலம் "உண்மையான கடவுள் எப்படி இருக்கிறார்?, சாஸ்திரம் ஏன் படிக்க வேண்டும்?, நான் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏன்?, நான்கு கதிகள் எவை?, இந்திரியங்கள் எத்தனை? அவைகள் யாவை?, நான் யார் மற்றும் நான் செய்ய வேண்டிய காரியம் எது? முதலானவைகள் பற்றிய அறிவு பெற வகுப்புகள் நடத்தினேன். கதைகளை கேட்கும் ஆர்வமிகுதியால் சிறுவர்களின் கூட்டம் அதிகமாக இருந்தது, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதிலை அளித்தார்கள். "நான் ஜீவ திரவியம், உடல் புத்கல திரவியத்தால் ஆனது, நாம் இந்திரியங்களின் மூலம் என்னென்ன தெரிந்து கொள்கிறோமோ அவை எல்லாம் புத்கலத்தால் ஆனது, நான்கு கதிகளில் சுகம் எங்கேயும் இல்லை." இது போன்ற சரியான பதில்களை சிறுவர்கள் உற்சாகத்துடனும், உடனுக்குடனும் கூறினார்கள்.

சிறுவர்களுக்கு சுருக்கமாக கற்றுக் கொடுத்ததை உங்களுக்கு விரிவாக எழுதுகிறேன். பிரபஞ்சத்தில் ஆறு திரவியங்கள் இருக்கின்றன. அவைகளில் உயிர், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம் ஆகிய ஐந்து திரவியங்களை நம்மால் பார்க்க முடிவதில்லை, எந்த புலன்களாலும் இவைகளை நம்மால் அறிய முடியாது. இந்த திரவியங்களை **அரூபி** என்று சொல்கின்றனர். உருபெருக்கி கருவி-microscope அல்லது நிற பட்டையில் சிவப்பு நிறத்திற்கு அப்பால் கண்ணுக்கு தென்படாத ஒளிக்கதிர் புகைப்படம் infrared rays photography மூலமும் இவைகள் இருப்பதை உறுதி செய்ய முடியாது. புத்கலம் மட்டுமே **ரூபி**-உருவமுடைய திரவியமாகும். இதில் ஸ்பரிசம், சுவை, மணம்-வாசனை, நிறம் முதலிய குணங்கள் இருக்கின்றன. புத்கல திரவியத்தை மட்டும் புலன்களின் மூலம் நாம் தெரிந்து கொள்ள முடியும். அறியும் சக்தி உயிர் திரவியத்தில் மட்டுமே இருக்கிறது. எந்த புலன்வழி-இந்திரிய வழி உயிர் அறிந்து கொள்கிறதோ அந்த புலன்கள் கூட உடலின் ஒரு அங்கமே யாகையால் அதாவது புலன்கள் உடலின் அவையவங்களானதால் அவைகூட புத்கல திரவியம்தான். புத்கல திரவியத்தை **மூர்த்தம்** என்றும் மற்ற ஐந்து திரவியங்களை **அமூர்த்தம்** என்றும் கூட சொல்கின்றனர்.

உயிரில் ஸ்பரிசம், சுவை, மணம், நிறம், சப்தம் முதலிய குணங்கள் இல்லை, ஆனால் உயிர் தன்னையும் மற்ற பிற எல்லா பொருள்களையும் அறியும் சக்தி கொண்டது. இந்த ஞான, தர்சன சக்தி அதாவது பார்த்தல், அறிதல் சக்தி உயிர் திரவியத்தில் மட்டுமே இருக்கிறது, ஆகையால் உயிரை **சேதனம்** என்று சொல்கின்றனர். உயிர் தவிர மற்ற ஐந்து திரவியங்களை **அசேத்தனம்** என்று சொல்கின்றனர்.

ஆறு திரவியங்களுள் ஒவ்வொன்றும் மற்றவைகளுக்கு இருக்க இடம் கொடுக்கிறது என்பதை முன்னறே எழுதியிருக்கிறேன். எந்த ஷேத்திரத்தில் உயிர் பரவியிருக்கிறதோ, அந்த ஷேத்திரத்திலேயே வசிக்கும் உடலை உயிரே அறிகிறது. ஆனால் இதில் வியப்பும், எதிர்பாராததும் என்ன வென்றால் உயிர் தான்னால் அறியப்படும் உடலையே **தான்**-ஸ்வ

என்று கற்பனை செய்து கொள்கிறது. அறியும் சக்தி என்னவோ உயிரினுடையதுதான் என்றாலும், அந்த சக்தி உடலினுடையது தான் என்ற குழப்பத்தில் உயிர் இருக்கிறது. அறியும் தன்னையே அறியாமலிருப்பதைவிட பெரிய துரதிர்ஷ்டம் வேறு என்ன இருக்க முடியும்? உடலையே தான் என்று நம்புவதன் காரணத்தால், உடலுடன் சம்பந்தமான பொருள்கள் அனைத்தையும் தன்னுடையது என்று நம்புகிறது. புத்கலத்தின் ஸ்வரூபத்தை அறியாத காரணத்தால் இந்த எல்லா குழப்பமும், மிகப்பெரிய தவறும் நிகழ்கிறது.

புத்கலத்திலிருந்து உயிர்ப்பொருள் வேறுபட்டது என்பதால், உயிர் திரவியத்தை பற்றி மட்டுமே தெரிந்து கொண்டால் போதுமல்லவா, மற்ற திரவியங்களை பற்றி ஏன் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். தினமும் செத்துப்பிழைக்கும் இந்த வாழ்க்கையில் கூட நாம் எதிர்கொள்ளும் எல்லா பொருள்களை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். உதாரணமாக நாம் தங்கநகை வாங்கச் சென்றால் அதில் கலக்கப்படும் செப்பின் குணம் பற்றியும் தெரிந்திருந்தால் தான் நாம் ஏமாற்றப்படாமல் இருப்போம். வைர நகை வாங்க சென்றால் சாதாரண கல் பதித்ததை காட்டி ஏமாற்றலாம் அல்லவா. ஆகையால் சாதாரண கல் மற்றும் வைரம் பற்றிய அறிவு இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகையால் எல்லா பொருள்களைப் பற்றிய அறிவு பெறுவது அவசியம் என்பதை இதனால் அறிந்து கொள்ள முடிகிறது.

இதுபோலவே உயிர் மற்றும் உடல் முதலான புத்கலம் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமே. சாஸ்திரங்களில் புத்கலம் பற்றி விரிவான வர்ணனை செய்யப் பட்டிருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், உயிர் புத்கலத்தையே தான் என்று கற்பனை செய்து கொள்கிறது, அதிலேயே ஒன்றி ஒன்றோடொன்றாக ஆகிவிடுகிறது. புத்கலத்தை அறிந்து **நான் அதிலிருந்து வேறுபட்ட பொருள் ஆவேன், அது நான் இல்லை** என்று தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

புத்கலம் பரமாணு மற்றும் ஸ்கந்தம் என்று இரண்டு வகையாக இருக்கிறது. எது மேலும் பிரிக்க முடியாத மிகச் சிறிய புத்கல பகுதியோ அதை **பரமாணு** என்று சொல்கின்றனர். உண்மையை சொல்ல வேண்டுமென்றால் பரமாணுவே புத்கல திரவியமாகும். இரண்டு அல்லது அதற்கு அதிக பரமாணுக்கள் சேர்ந்த பிண்டத்தை **ஸ்கந்தம்** என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். ஸ்கந்தத்தில் இரண்டு முதல், அனேக, அசங்க்யாத அல்லது அனந்த பரமாணுக்கள் இருக்க முடியும். பெரியது-ஸ்தூலம் மற்றும் சிறியது-ஸூக்ஷமம் என்ற ஆதாரத்தில் ஸ்கந்தம் ஆறு விதமாக பிரிக்கப்பட்டுள்ளது. எப்படி கோதுமை மாவு மைதா, ரவா, ஆட்டா என்று பிரிக்கப்படுகிறதோ அதுபோல என அறியலாம்.

ஸ்கந்தங்களின் பிரிவுகள்:

1. பெரியதில்பெரியது-ஸ்தூலஸ்தூலம்: எந்த புத்கல ஸ்கந்தத்தை இரண்டாக உடைத்த பிறகு இரண்டையும் ஒன்று சேர்த்தால் முன்போல ஒன்றாக ஒட்டிக் கொளள்ளாதோ அந்த புத்கல ஸ்கந்தத்ததை ஸ்தூலஸ்தூலம் என்று சொல்கின்றனர். உதாரணம்: மலை, மரம், நிலக்கரி, முடி முதலியன.

2. பெரியது-ஸ்தூலம்: எந்தபுத்கல ஸ்கந்தத்தை இரண்டாக பிரித்த பிறகு இரண்டையும் ஒன்று சேர்த்தால் முன்பிருந்தது போலவே ஒன்றாகி விடுகிறதோ அந்த புத்கல ஸ்கந்தத்ததை ஸ்தூலம் என்று சொல்கின்றனர். உதாரணம்: தண்ணீர், எண்ணெய், பால் முதலியன.

3. பெரியதில்சிறியது-ஸ்தூலசூட்சமம்: எந்த புத்கல ஸ்கந்தத்தை கண்ணால் பார்க்க முடிகிறதோ, ஆனால் கையால் பிடிக்க முடியாதோ, எதை இரண்டு மற்றும் பலவாக உடைக்க முடியாதோ அந்த புத்கல ஸ்கந்தத்ததை ஸ்தூலசூட்சமம் என்று சொல்கின்றனர். உதாரணம்: வெளிச்சம், இருட்டு, நிழல் முதலியன.

4. சிறியதில்பெரியது-சூட்சம ஸ்தூலம்: எந்த புத்கல ஸ்கந்தத்தை கண்ணால் பார்க்க முடியாதோ ஆனால் மற்ற நான்கு புலன்களால் அறிய முடியுமோ அதை சூட்சமஸ்தூலம் என்று சொல்கின்றனர். உதாரணம்: காற்று, வாசனை, சுவை, சப்தம் முதலியன.

5. சிறியது-சூட்சமம்: எந்த புத்கல ஸ்கந்தத்தை எந்த புலன்களாலும் அறிய முடியாததோ அதை சூட்சமம் என்று சொல்கின்றனர். உதாரணம்: கார்மண வர்கணை. கார்மண வர்கணையால் செய்யப்படுவதை திரவ்ய கர்மம் அல்லது கார்மண உடல் என்றும் சொல்லப் படுகிறது.

6. சிறியதில்சிறியது-சூட்சமசூட்சமம்: சூட்சம ஸ்கந்தத்தை விட சிறியவை சூட்சமசூட்சம ஸ்கந்தமாகும். உதாரணம்: இரண்டு அல்லது அதிக பரமாணுக்களால் ஆனதும், நேரடியாக எந்தப்பொருளின் உற்பத்திக்கும் காரணமில்லாத்துமாகிய ஸ்கந்தம் இதிலடங்கும்.

பிரவசனத்தில் புத்கலங்களின் இந்த வகைப்பாடுகளை கேட்டு இந்திரஜித் உன் தாத்தாவிடம் இவ்வாறு கூறினார் **இந்த வர்ணனையை கேட்டு matter-ன் திட-solid, திரவிய-liquid மற்றும் வாயு-gas முதலிய நிலைகளை அல்லது அவஸ்தைகளை என்னால் சுலபமாக உறுதி செய்ய முடிகிறது. அதுபோல மற்ற வகைகளையும் சரிபார்க்க முடியும். விஞ்ஞான நோக்கில் இதை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இந்த வகைப்பாடுகள் மிகவும் பாராட்டத் தக்கதாக இருப்பதை நான் உணர்ந்தேன்.** ஔரங்காபாத்தை சேர்ந்த இந்திரஜித், சாதாராவை சேர்ந்த சிரீஷ், மும்பையை சேர்ந்த ராஜேஷ் இவர்கள் எல்லாம் பொறியியல் பட்டதாரிகள், மற்றும் ஜெயின் சித்தாந்தத்தை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வமுடைய இளைஞர்கள். இந்த சித்தாந்தம் ஒரு அற்புதமானதும் சர்வஞ்ஞரால் சொல்லப்பட்டால் சத்யமானது மாகும் .

ஸ்தூலசூட்சம வகைப்பாட்டிலிருந்து இந்த ஸ்கந்தங்களை வேறு விதமாகவும் பிரிக்கப் பட்டிருக்கிறது. **1.ஆஹார வர்கணை, 2. தேஜஸ்ச வர்கணை, 3. பாஷா வர்கணை, 4. மனோ வர்கணை, 5. கார்மண வர்கணை** முதலான 22 வர்கணை பேதங்கள் இருக்கின்றன. **[**பரமாணுவுடன் சேர்த்து புத்கலம் 23 விதமாக ஆகமங்களில் வர்ணனை செய்யப் பட்டிருக்கிறது.**]**

1. ஆஹார வர்கணை: இந்த வர்கணை எல்லாவற்றையும் விட பெரியது. இந்த புத்கல ஸ்கந்த்திலிருந்து ஔதாரிக, வைக்ரீயிக, ஆஹார உடல்கள் பெறப்படுகின்றன. விலங்கு, மனித, தேவ, நரக உயிர்களின் உடல் ஆஹார வர்கணையால் ஆனது. நம்மால் பார்க்கப்படும் எல்லா பொருள்களும் ஆஹார வர்கணையால் ஆனவைகளே. உதாரணம் - மண், கல், இரும்பு, மரம், ஆடை, மற்றும் நான்கு கதி பிறவி உயிர்களின் உடல்கள் முதலியன.

2. தேஜஸ்ச வர்கணை: இந்த வர்கணையிலிருந்து தேஜஸ உடல் பெறப்படுகிறது. இந்த தேஜஸ உடலின் காரணத்தால் உடலில் ஒருவித ஒளிர்வு shine மற்றும் உஷ்ணம் தொன்றுகின்றன.

3. பாஷா வர்கணை: இந்த வர்கணையின் காரணத்தால் ஒலி அதாவது த்வொணி-சப்தம் பெறப்படுகிறது. விஞ்ஞானத்தில் கூட ஒலி அலைகளைப் பற்றி சொல்ல பட்டிருப்பதை நாம்

பார்க்கிறோம், நாம் ஒலிக் கற்றைகளை வானொலி பெட்டி மூலம் ஈர்க்க செய்து, அதை முன்போல சப்த வடிவமாக மீண்டும் வெளிப்பட வைக்க முடிகிறது. அந்த ஒலி அலையின் நீளத்தை wavelength-ஐ கூட அளக்க முடிகிறது.

4. மனோ வர்கணை: இந்த புத்கல ஸ்கந்தத்தால் திரவ்ய மனத்தின் அமைப்பு செய்ய படுகிறது. திரவ்ய மனம் எட்டு இதழ் கொண்ட தாமரை வடிவில் மார்பு பகுதியில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அது சூட்சமமானதால் அறுவை சிகிச்சை செய்யும்போது கூட மார்பினுள் எங்கும் காண முடியாததாக இருக்கிறது. ஆலோசனை, தீர்மானம், மாற்றம், நினைவு, உபதேசத்தை ஏற்றல் முதலிய காரியங்கள் மனத்தின் மூலம் நடக்கிறது. அதை அறியும் காரியம் என்னவோ உயிரே செய்கிறது. என் மனதில் இவ்வாறு சிந்தனை வந்தது என்று கூட நாம் சொல்கிறோம் அல்லவா.

5. கார்மண வர்கணை: இந்த வர்கணையிலிருந்து கார்மண உடல் அமைகிறது. இதைவிட சூட்சம வர்கணைகள் கூட இருக்கின்றன. புத்கலத்தை பற்றி இவ்வளவு தெரிந்து கொண்ட பிறகு, பல விஷயங்களை நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. உடல் ஆஹார வர்கணையால் அமைகிறது, வாணி-சப்தம் பாஷா வர்கணையால், மனம் மனோ வர்கணையால் மற்றும் கர்மம் கார்மண வர்கணையால் அமைகின்றன. இவைகள் எல்லாம் புத்கலத்தின் பிரிவுகளாகையால் அசேதனமாகும். ஆனாலும் எந்த வர்கணையிலும் ஞான-தர்சனம் அதாவது சைதன்யம் இல்லை. ஞானம் உயிரின் குணதர்மமாகும்.

நான் சைதன்யம் மட்டுமே; மனம், வாணி, கர்மம் முதலியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டவன் என்று சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது. இதன் பொருளை நம்மால் சரியாக புரிந்து கொள்ள முடிகிறது. அதை பிரிக்க வேண்டியதில்லை, அவை உயரிலிருந்து வேறானது என்று அறிந்து கொண்டால் மட்டும் போதும். புத்கலத்தை அறிந்து கொள்ளுதலால் எந்த குற்றமும் இல்லை, ஆனால் அதை தனது என்று நம்புதல், அதுவே நான் என்ற புத்தி கொள்ளுதல் தான் மிகப்பெரிய குற்றமாகும். நம்மை நாம் அறிய பிறவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. **நம்மை அடையாளம் காண வேண்டும்** என்பதை மட்டும் எப்போதும் நம் எண்ணத்தில் நிறுத்தி அதே லட்சியத்துடன் சாஸ்திரப் பயிற்சி செய்ய வேண்டும். இரண்டு தினங்களில் நாங்கள் தத்துவ முகாமில் பங்கு கொள்ள ஜெய்ப்பூர் செல்லவிருக்கிறோம். அங்கிருந்து வந்த பின் மீண்டும் கடிதம் மூலம் சந்திக்கலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா

கடிதம்-10 27-08-1994

அஸ்தித்வ குணம்

ப்ரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபசாசீர்வாதம்.

இதுவரை நாம் பிரபஞ்சம், திரவ்யம், குணம், பர்யாயம் ஆகியவைகளின் இயல்பு பற்றி அறிந்து கொண்டோம், மற்றும் புத்கல திரவ்யம் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொண்டோம். நம் புலன்களால் என்னவெல்லாம் தெரிந்து கொள்கிறோமோ அவை எல்லாம் புத்கலமே யாகும் என்ற அறிவு பெற்ற பிறகு, ஜீவ திரவியம் எப்படி யிருக்கும்? அதை எப்படி தெரிந்து கொள்வது? என்ற கேள்விகள் எழுவது சகஜமே. ஜீவ திரவியத்தின் சிறப்புகளை தெரிந்து கொள்ளும் முன், அதன் பொதுவான லட்க்ஷணங்களை தெரிந்துகொள்ள வேண்டும். எல்லா திரவியங்களிலும் காணப்படும் குணங்களை **பொது குணங்கள்** என்று சொல்கிறோம் என்பது உங்களுக்கு தெரிந்த விஷயம்தான். அப்படிப்பட்ட பொது குணங்கள் அனந்தமாகும்; ஆனால் அனந்த குணங்களையும் பற்றி சர்ச்சை செய்வது இயலாத காரியமும், தேவையற்றதுமாகும். வஸ்த்துவின் பொது இயல்பை நினைத்துப் பார்க்க, அதன் பொதுவான இந்த ஆறு பண்புகளை மட்டும் தெரிந்து கொள்வது போதுமான தாகும். அந்த ஆறு குணங்களாவன: **அஸ்தித்வம், வஸ்த்துத்வம், த்ரவ்யத்வம், ப்ரமேயத்வம், அகுருலகுத்வம் மற்றும் ப்ரதேசத்வம்.**

அஸ்தித்வம் என்றால் **சத்** அதாவது **இருப்பு சக்தி** அல்லது உள்ளதாம் தன்மை எனலாம். திரவியம் எப்போதும் இருக்கிறது. திரவியத்தின் இருப்பு என்றென்றும் இருக்கிறது என்று தெரிந்து கொண்ட பிறகே திரவியம் எப்படி இருக்கிறது, அது என்ன காரியம் செய்கிறது? என்பதை அறிந்து கொள்ள முடியும். அஸ்தித்வ குணத்தின் வரையறை: **எந்த சக்தியின் காரணத்தால் திரவியம் எப்போதும் அழிவடையாதோ மற்றும் அதை யாராலும் உற்பத்தி செய்ய முடியாதோ அந்த சக்தியை அஸ்தித்துவ குணம்** என்று சொல்கிறோம்.

ஒவ்வொரு திரவியத்தின் உளதாம் தன்மை அனாதி காலமாக இருக்கிறது மற்றும் அந்த உளதாம் தன்மை எப்போதும் இருக்கும் உரிமை கொண்டது, மற்றும் யாராலும் திரவியத்தை புதிதாக உற்பத்தி செய்ய முடியாது என்பதை அஸ்தித்வ குணம் காட்டுகிறது. ஒவ்வொரு திரவியத்திலும் அதனதன் அஸ்தித்வ குணம் இருக்கிறது. இரண்டு அல்லது அதிக திரவியங்கள் ஒன்று சேர்ந்து வேறொரு சத்துடைய திரவியமாக ஆகாது, அவ்வாறு புதிய திரவியம் தோன்றி திரவியங்களின் எண்ணிக்கையும் கூட அதிக மாவதில்லை.

புத்கலத்தை பற்றி விஞ்ஞானிகள் இவ்வாறு உறுதி செய்துள்ளார்கள் Matter can neither be created nor be destroyed. It is only changing it's form. The total matter always remain constant. புத்கலத்தை-பரமாணுவை அழிக்கவோ, உற்பத்தி செய்யவோ முடியாது. அது தன் உருவத்தை தான் வெவ்வேறாக மாற்றிக்கொள்ளும். புத்கலம் பரமாணுக்களின் எண்ணிக்கையில் எப்போதும் மாற்றமின்றி அப்படியே இருக்கிறது. உண்மையில் சொல்ல வேண்டுமென்றால் ஆறு திரவியங்களுக்கும் இந்த விதி-சித்தாந்தம் பொருந்தும்; ஏனெனில் திரவியங்கள் எப்போதும் இருக்கின்றன, அதன் பர்யாயங்கள் மட்டுமே மாற்ற மடைகின்றன. விஞ்ஞானிகள் ஆய்வுக்கூடத்தில் புத்கலத்தை பற்றி மட்டுமே சோதனை செய்கின்றனர், ஆகையால் புத்கலத்தை பற்றி மட்டுமே அவர்களால் கொஞ்சம் அதிகமான தகவல் கொடுக்க முடிகிறது. ஆனால் ஆத்மா பற்றிய சோதனையை ஆத்மாவில் தான் நிகழ்த்த முடியும், ஆத்மாவின் மூலம் தான் ஆத்மாவை அறிய முடியும், ஆத்மாவின் சுய உணர்தலை ஆத்மாவே அடைய முடியம். இந்த பரிசோதனையை நம் ஆசார்யர்களே செய்திருக்கிறார்கள் மேலும்

அதன்படி, அவர் சாஸ்திரங்களை எழுதியுள்ளார்கள். இதுகூட விஞ்ஞானம் தான், இந்த விஞ்ஞானத்தின் பெயர் **வீதராக விஞ்ஞானம்.**

தத்வார்த்தசூத்திரம் என்ற கிரந்தத்தில் திரவியத்தின் அடையாளம் **சத்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. **சத் த்ரவ்ய லட்க்ஷணம்.** சத் என்றால் இருப்பு சக்தி அல்லது உளதாம் தன்மை. இந்த சத்தா எந்த காரணத்தால் இருக்கிறது? இதை கடவுள் உருவாக்கினாரா, கடவுள் இந்த சந்தாவை இருக்க செய்கிறாரா என்ன? இல்லை. ஒவ்வொரு திரவியத்தின் சத்தாவும் அதன் அஸ்தித்வ குணத்தின் காரணத்தால் இருக்கிறது. இந்த சத்தாவுக்கு, அஸ்தித்வத்திற்கு வேறு எந்த திரவியத்தின் உதவியோ அல்லது சகாயமோ அவசியமில்லை.

தகடு என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர் இருந்தார். அவரிடம் அவருடைய பிறந்த சான்றிதழ் birth certificate, அல்லது அவர் உயிர்வாழும் சான்றிதழ் survival certificate எதும் வைத்திருக்கவில்லை. அவர் ஒரு வேலையாக அரசாங்க அலுவலகம் சென்றார். அலுவலக அதிகாரி அவரிடம் நீங்கள் உயிரோடு இருப்பதற்கான ஆதாரம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டார். தகடு அதற்கு அந்த அதிகாரியிடம் ஐயா! நான் காட்சிப் பொருளாக உங்கள் முன் நிற்கிறேன், மேலும் நீங்கள், நான் உயிரோடு இருப்பதை பார்த்துக்கொண்டே என் அஸ்தித்வத்திற்கு ஆதாரம் எங்கே என்று கேட்கிறீர்கள்? என்றார். இன்று நம்முடைய நிலைமையும் இவ்வாறுதான் இருக்கிறது. அனைத்து உலகத்தையும் அறிபவர், அனைத்தையும் அறிந்து கொள்பவர், தீர்மானம் செய்பவர், அறிவு ஜீவியாகிய அப்படிப்பட்ட ஆத்மாதான் இப்படி கேட்கிறது, ஆத்மா இருக்கிறது என்பதற்கு ஆதாரம் எங்கே? உயிரின் சகவாசம் உடலுடன் இருக்கும் காரணத்தால், உடலும் உயிருடன் இருப்பதாக சொல்லப்படுகிறது, மேலும் உயிர் உடலை விட்டு சென்று விட்ட பிறகு அதை இறந்ததாக சொல்லப் படுகிறது. அந்த உயிரே இன்று தன் உடலை தான் என்று நிறுவிக்கொண்டதன் மூலம் சொல்கிறது ஆத்மா இருக்கிறது என்று நிரூபியுங்கள் இல்லையேல் நான் நம்பத் தயாராக இல்லை. இவ்வாறு முதன்முதலில் அஸ்தித்வத்தையே அஸ்தித்வம் என்று நிரூபணம் செய்யும் பொறுப்பு நம்மேலேயே வருகிறது. உயிரின் அஸ்தித்வம்-இருப்பு முன்பேகூட இருந்தது, நிகழ்காலத்தில் கூட இருக்கிறது மற்றும் இந்த மனித அவஸ்தைக்கு பிறகு, மரணமடைந்த பிறகு கூட எப்போதும் இருக்கும். அஸ்தித்வ குணத்தின் நிரூபணத்தை நாம் கீழ்கண்டவாறு செய்ய முடியும்.

1. ஒரு புல உயிர் முதல் ஐம்புல உயிர்கள் வரை அனேக உயிர்களை நம்மால் பார்க்க முடிகிறது. மனிதர்களில் கூட சிலர் ஏழை, சிலர் பணக்காரர், சிலர் குருடு, சிலர் முடம்-அங்கஹீனம் கொண்டவர்களாக இருப்பதை பார்க்கிறோம். ஒரே குடும்பத்தில் கூட ஒருவர் புத்திசாலியாகவும், ஒருவர் மந்தபுத்தி உடையவராகவும் இருப்பதை பார்க்க முடிகிறது. உயிர்களிடம் ஏன் இந்த வித்யாசம் காணப்படுகிறது? இந்த கேள்விக்கு பதில், அந்த உயிர் முற்பிறவியில் என்ன கர்மத்தை கட்டிக்கொண்டதோ, அதை இந்த பிறவியில் அனுபவிக்கிறது என்ற பதில் வருகிறது. இதிலிருந்து முற்பிறவியில் கர்மத்தை கட்டிக்கொண்ட உயிர் எதுவோ, அந்த உயிரே இந்த பிறவியில் அதன் பலனை அனுபவிக்கிறது என்று ஆகிறது. இதிலிருந்து அஸ்தித்வ குணம் இருக்கிறது என்று நிரூபணமாகிறது.

2. பூதம், பிசாசு பற்றிய பல கதைகளை நாம் கேட்டிருக்கிறோம். எந்த உயிர் முற்பிறவியில் மனிதப் பிறவியில் இருந்ததோ, அதுவே இந்த பிறவியில் பூதம், பிசாசாக ஆகியிருக்கிறது என்பதிலிருந்து உயிரின் அஸ்தித்வம் எப்போதும் இருக்கிறது என்பது நிரூபணம் ஆகிறது.

3. முன் ஜென்மம் பற்றி அனேக கதைகளை நிரூபித்திருக்கிறார்கள். முற்பிறவியில் இருந்த அந்த உயிர் இந்த பிறவியில் கூட அழிந்து விடாமல் நிலைத்து இருக்கிறது என்பது உறுதியாகிறது. ஜாதிஸ்மரணம்-முற்பிறவி நினைவு மூலம் கூட அஸ்தித்வம் உறுதியாகிறது.

4. பிரதமானுயோகத்தில் பல கதைகள் இருக்கின்றன. அக்கதைகளில் ஒரு உயிரின் பல பிறவிகள் பற்றிய வர்ணனை வருகிறது. பகவான் ஆதிநாதர் காலத்தில் மரீசி என்ற பெயர் கொண்ட ஒரு உயிர் இருந்தது, ஒரு கோடாகோடி வருடங்களுக்கு பிறகு அதே உயிர் சிங்கமாக பிறந்தது, மேலும் அதே உயிர் சிங்கப்பிறவிக்கு அடுத்த பத்தாவது பிறவியில் பகவான் மாஹாவீரரானது, நிகழ்காலத்தில் அந்த உயிர் சித்த அவஸ்தையில் இருக்கிறது.

5. குழந்தை பருவத்திலும், இளமை பருவத்திலும், முதுமை பருவத்திலும் இருப்பது அதே உயிராகும். உடலில் இவ்வளவு பெரிய மாற்றங்கள் வந்த பிறகுகூட உயிர் அதுவாகவே இருக்கிறது, அந்த உயிரின் இருப்பு எப்போதும் இருக்கிறது.

6. இருபத்தைந்து வருடங்களுக்கு முன் எனக்கு கோபம் வந்தது, அதைப்பற்றிய அறிவு எனக்கு இந்த சமயத்தில் வருகிறது. கோபம் போய்விட்டது, ஆனாலும்கூட அதை அறியும் உயிர் எப்போதும் இருக்கிறது.

7. பாம்பு கடித்த போது மந்திரத்தின் மூலம் ஒரு மனிதர் அந்த பாம்பு கடிபட்டவருக்கு முன் ஜென்ம எதிரியாக இருந்தது என்று சொல்கிறார்கள்.

8. தத்வார்தஸூத்திரத்தில் உமாஸ்வாமி ஆசார்யர் கூறுகிறார்-உத்பாதவ்யயத்ரவ்யயுக்தம் சத், சத் த்ரவ்யலட்க்ஷணம்.

இவ்வாறு அஸ்தித்துவத்தை நாம் பலவிதமாக உறுதி செய்து கொள்கிறோம்; ஆனால் அந்த அஸ்தித்துவத்தின் இருப்பு எப்படி இருக்கிறது என்பது பற்றி உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன். மேலே கூறியது போல அஸ்தித்துவத்தின் இருப்பு-சத் தோற்றம், மறைதல், நிலைத்திருத்தலுடன் இருக்கிறது. ஒவ்வொரு திரவியமும் அதன் குணங்கள் மற்றும் பர்யாயங்களுடன் இருக்கிறது. குணப்பர்யயவத் த்ரவ்யம். அதில் திரவியம் மற்றும் அதன் அனந்த குணங்கள் எப்போதும் இருக்கின்றன-த்ருவமாக அதாவது நிலைத்து இருக்கின்றன, அவைகள் எப்போதும் அழிவதில்லை, அதன் ஸ்வரூபம் மாறுவதில்லை, எப்படி இருக்கிறதோ அப்படியே எப்போதும் இருக்கிறது. பர்யாயம்-குணத்தின் வெளிப்பாடு ஒவ்வொரு சமயமும் புதிது-புதிதாக மறிக்கொண்டே இருக்கிறது, ஒவ்வொரு சமயமும் அதன் முன்சமய பர்யாயம் அழிகிறது, புதிய பர்யாயம் உற்பத்தியாகிறது. இத்த உற்பத்தி மற்றும் அழிவு (உத்பாதம் மற்றும் வினாசம்) பர்யாயங்களில் மட்டுமே நிகழ்கின்றன.

திரவியத்தில் ஒவ்வொரு சமயமும் மாற்றமடையும் பகுதி இருக்கிறது, அது அதன் அவஸ்தை-நிலை அதாவது பர்யாயம் ஆகும். அதே சமயத்தில் நிலையாக-த்ருவமாக இருக்கும், எப்போதும் மாற்ற மடையாத பகுதியும் அந்த பொருளிலேயே இருக்கிறது, அது திரவ்யம் அல்லது குணம்.

திரவியத்தின் அடையாளம் **சத்** என்று நாம் சொல்லும்போது அந்த சத் தோற்றம், அழிவு, நிலைத்திருத்தல் ஆகியவைகளுடன் இருக்கிறது. திரவியமும் சத்-எப்போதும் அழியாத பகுதி. பர்யாயம் கூட சத்-ஒரு சமயம் மட்டும் அழியாத பகுதி. ஒவ்வொரு சமயத்திலும் திரவியம் ஏதாவது ஒரு அவஸ்தையில் இருக்கிறது. திரவியம் தன் பர்யாயத்திலிருந்து வேறாக இல்லை. இந்த பர்யாயம் ஷணிக் - ஒரு சமயம் மட்டுமே இருக்கிறது. ஒவ்வொரு

சமயமும் புது பர்யாயம் தோன்றுவதும், பழய பர்யாயம் அழிவதுமாக இருக்கிறது; இந்த காரணத்தால் திரவியத்தையே ஷணிக்-ஒரு சமயம் மட்டுமே இருப்பது என்று நம்புதல் யோக்யமானதில்லை.

எப்போது நாம் **தங்கம்** என்ற பொருள் பற்றி ஆலோசனை செய்கிறோமோ அப்போது எது தங்கமாகவே எப்போதும் இருக்கிறதோ, அதை த்ருவ-நித்ய பகுதி, என்று சொல்கிறோம். மேலும் அதன் வடிவங்களான ஆரம், வளையல், மோதிரம் முதலான பர்யாயங்கள், தோன்றுதல், அழிதல் பகுதியாகும், அதை அநித்ய பகுதி என்றும் சொல்கிறோம்.

உயிர்கள் பர்யாய நோக்கில், மனித பர்யாயம், தேவ பர்யாயம், நரக பர்யாயம், விலங்கு பர்யாயம் முதலியவைகளில் பிறந்து, இறந்து கொண்டு இருக்கின்றன. பர்யாயத்தின் அழிவை திரவியத்தின் அழிவாக நம்புவதால் துக்கம் அடைகிறோம். ஆனால் ஒரு பர்யாயத்தின் அழிவுடன் அந்த ஷ்ணணமே புதிய பர்யாயம் உற்பத்தியாகிறது, அந்த திரவியம் எப்படி இருந்ததோ அப்படியே எப்போதும் இருக்கிறது என்ற ஞானம் வந்தவுடன் மரண சம்பந்தமான துக்கம், பயம், துன்பம் எல்லாம் நம்மிடம் இல்லாமல் போகிறது. இதுபோலவே இவ்வுலக பயம், பரலோக பயம், பாதுகாப்பு இல்லையே என்ற பயம் முதலியனவும் முடிவுக்கு வருகின்றன. திரவியத்தின் ஒரேவொரு அஸ்தித்வ குணம் பற்றி தெரிந்து கொள்வதால் நாம் கீழ்கண்ட அனேக லாபங்களை அடைகிறோம்.

1. நான் ஒரு உயிர் பொருள், என்னில் சத் இருப்பதால் அனாதி அனந்தமாக இருக்கிறேன். நான் அனாதி காலமாக இருக்கிறேன், அனந்த காலம்வரை எப்போதும் இருப்பேன்.
2. நான் முதலும், முடிவும் இல்லாதவன்.
3. என்னிடம் ஏழு விதமான பயங்களான இவ்வுலக பயம், பரலோக பயம், மரண பயம், வேதனா பயம், இரகிசியங்கள் வெளிப்பட்டுவிடுமோ என்ற பயம், அடைக்கலமின்மை என்ற பயம், எதிர்பாராத விபத்து நடந்துவிடுமோ என்ற பயம் எல்லாம் இல்லாமல் போகின்றன.
4. கடவுள் இந்த உலகத்தை உண்டுபண்ணுகிறார், காப்பாற்றுகிறார், அழிக்கிறார் என்ற விபரீத நம்பிக்கை இல்லாமல் போகிறது.
5. கர்மம் உயிரை தோற்றுவிக்கிறது, காப்பாற்றுகிறது, அல்லது அழிக்கிறது என்ற தவறான நம்பிக்கையும் இல்லாமல் போகிறது.
6. நான் பிறரை உண்டுபண்ணுபவன், அவர்களை காப்பாற்றுபவன், அல்லது அழிப்பவன் என்ற தவறான எண்ணம் நம்மை விட்டு அகல்கிறது.
7. வேறொருவர் என்னை தோற்றுவிக்கிறார், காப்பாற்றுகிறார், அழிக்கிறார் என்ற மூடநம்பிக்கை அழிந்து, நான் தாழ்வானவன் மற்றும் ஏழை என்ற inferiority complex-தாழ்வு மனப்பான்மை இல்லாமல் போகிறது.
8. நான் இருப்பதற்கு நானே காரணம் என்று அறிவதால், என் சுய இருப்பின்மேல் கவணத்தை திருப்பி, சம்யக்தர்சனம் அடையவும் தர்ம வழியில்-முக்திப் பாதையில் முன்னேறவும் முடிகிறது.

ஒரு அஸ்தித்துவ குணத்தை தெரிந்து கொண்டதால் நாம் எவ்வாறான பலவித லாபங்களை அடைகிறோம் என்று பாருங்கள், அழியாத கலையை நாம் கைவரப் பெறுகிறோம். நம் மூர்க்கத்தனத்தால், அஞ்ஞானத்தால் உடலின் தொடர்பையும் தொடர்பற்ற நிலையையும் நாம் நம்முடைய ஜென்ம-மரணம் என்று இதுவரை நம்பிக்கொண்டு வந்தோம், இந்த தவறான கற்பனையாலேயே துக்கம் அடைந்து வந்தோம். அஸ்தித்துவ குணத்தை தெரிந்து கொண்டதால் உயிர் எப்போதும் மரணமடைவதில்லை என்று புரிந்து கொள்ளும் உணர்வு நமக்கு வந்ததுவிட்டது.

இது இவ்வாறு சொல்லப்படுகிறது

கர்தா ஜெகத்கா மான்தா ஜோ கர்ம யா பகவான்கோ ।
வஹ் பூல்தா ஹை லோக்மே அஸ்தித்வகுண்கே ஞ்ஞான்கோ ।।
உத்பாத வ்யய யுத வஸ்த்து ஹை ஃபிர் பீ சதா துவதா தரே ।
அஸ்தித்வ குண கே யோக் சே கோயி நஹீ ஜக மே மரே ।।

வெறும் ஒரு அஸ்தித்வ குணத்தை மட்டுமே தெரிந்து கொண்டதால் இந்த எல்லா லாபமும் நமக்கு உண்டானதால் மற்ற பிற குணங்களைப் பற்றி சீக்கிரமாக தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உற்சாகம் வருவது இயல்பே. அடுத்த கடிதத்தில் அவைகளைப் பற்றி பேசலாம்.

வரும் தசலக்ஷண பருவத்தில் நிகழுப்போகும் பிரவசனங்களை நீங்கள் கேட்கும் லாபத்தை பெருங்கள். மோனா, ஔரங்காபாத்திற்கு பிரம்மசாரி ஸ்ரீ யஷ்பால் ஜீ ஜெயின் வரவிருக்கிறார். ரீனா, மலாடுக்கு பண்டிட். பிரதீப்ஜீ ஜன்ஜாரி வரவிருக்கிறார். அவர்களின் பிரவசனங்களை கேட்டு நீங்கள் இருவரும் லாபமடைய வேண்டும் என்று பாவனை செய்கிறேன்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-11 29-10-1994

வஸ்த்துத்வ குணம்

ப்ரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நாம் கடிதம் மூலம் ஸ்வாத்யாயம் செய்ய ஆரம்பித்து ஒன்றரை வருடம் ஓடிவிட்டது. இதில் ஒரு நல்ல விஷயம் நம்முடன் சேர்ந்து அதிக மக்கள் இதன் மூலம் லாபமடைகிறார்கள் என்பதுதான். தர்ம சம்பந்தமான மாதஇதழ் அல்லது புத்தகங்களை பார்த்ததும், இவைகள் நம் வீட்டில் உள்ள முதியவர்களுக்கான விஷயம், இதனால் நமக்கு எந்த பிரயோஜனமும் இல்லை என்று நினைக்கிறோம். இந்த காலத்தில் இம்மாதிரியான மனப்போக்கு பலரிடம் இருப்பதை காண முடிகிறது. ஆனால் இவைகள் ஒவ்வொருவரின் நலனுக்காகவே என்பதை இதுவரை நாம் பகிர்ந்து கொண்ட கடிதங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சென்ற கடிதத்தில் அஸ்தித்வ குணம் பற்றி சர்ச்சை செய்து திரவியம் சத்-அழிவில்லாமல் இருக்கிறது என்று தெரிந்து கொண்டோம். திரவியத்தின் அழிவின்மை சாஸ்வதமாகும்-எப்போதும் இருப்பதாகும். திரவியம் புதிதாக தோன்றுவதுமில்லை, இருக்கும் திரவியம் அழிவதுமில்லை. இந்த அழியாத்தன்மை தோற்றம், மறைதல், நிலைத்திருத்தல் ஆகியவைகளுடன் சேர்ந்தே இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் திரவியம் புதிய வெளிப்பாடு நிலையை-அவஸ்தையை அதாவது பர்யாயத்தை தோற்றுவிக்கிறது, மற்றும் பழய அல்லது முன் பர்யாயத்தை இல்லாமல் செய்து கொள்கிறது. திரவியத்தின் பரயாயத்தையே திரவியத்தின் காரியம் அதாவது க்ரியை என்று சொல்கிறோம். வஸ்த்துவில் நிகழும் இந்த க்ரியை அந்த வஸ்த்துவிலேயே இருக்கும் சக்தியின் காரணத்தால் நிகழ்கிறது. இந்த சக்தியையே **வஸ்த்துத்வ குணம்** என்று சொல்கின்றனர். இந்த வஸ்த்துத்வ குணம் பற்றி நாம் இன்று சர்ச்சை செய்யலாம். வஸ்த்துத்வ குணத்தின் சொற்பொருள் விளக்கம்: வரையறை -difinition **எந்த சக்தியின் காரணத்தால் திரவியத்தில் அர்த்தக்ரியா காரித்வம் நிகழ்கிறதோ அதாவது அதனதன் சொந்த நோக்கத்திற்கான-பயன்பாட்டிற்கான செயல் (ப்ரயோஜன் பூத் க்ரியா) நிகழ்கிறதோ அந்த சக்தியை வஸ்துத்வ குணம்** என்று சொல்கிறோம்.

இந்த வரையறையில் **அர்த்தக்ரியா காரித்வம்** என்ற வார்த்தை வருகிறது. அர்த்த என்றால் திரவியம், அர்த்தக்ரியா என்றால் திரவியத்தின் செயல்-திரவியத்தின் காரியம்-திரவியத்தின் பரிணமன்-திரவியத்தின் பர்யாயம். காரித்வம் என்றால் செய்யும் சக்தி. அர்த்தக்ரியா காரித்வம் என்றால் பரிணமிக்கும் சத்தி எதுவோ அது திரவியத்திலிருக்கும் வஸ்துத்துவ குணத்தின் காரணத்தாலாகும். ஒவ்வொரு திரவியத்திலும் அதன் காரியத்தை செய்யும் சக்தி அதற்கே சொந்தமானதாக இருக்கிறது. அதையே வஸ்த்துத்வ குணம் என்று சொல்கின்றனர். வஸ்த்துத்துவ குணம் திரவியத்தில் இருக்கும் காரணத்தால் திரவியத்திற்கு **வஸ்த்து** என்ற பெயர்ச்சொல் கொடுக்கப்பட்டது. திரவியம் அதன் குண பர்யாயங்களில் வசிக்கிறது, அதனால் திரவியத்தை வஸ்த்து என்று சொல்கின்றனர்.

ஒவ்வொரு திரவியமும் ஒவ்வொரு சமயத்திலும் பரிணமித்துக் கொண்டே இருக்கிறது, அது அந்த திரவியத்தின் வஸ்த்துத்துவ குணத்தின் காரணத்தாலாகும். இந்த பரிணாமம் வேறு பிற திரவியத்தின் காரணத்தாலோ, கடவுளின் காரணத்தாலோ, கர்மத்தின் காரணத்தாலோ, அல்லது ஒருவருடைய விருப்பத்தின் காரணத்தாலோ நிகழ்வதில்லை. எந்த ஒரு திரவியத்தினுடைய பர்யாயத்தின் இந்த தோற்றம்-அழிவு வடிவ செயல், மற்ற வேறு எந்த திரவியத்தின் காரணத்தாலும் நிகழ்வதில்லை. எந்த ஒரு திரவியமும் வேறு திரவியத்தின் செயலை அதாவது பர்யாயத்தை, தோற்றம்-அழிவு வடிவ அவஸ்தையை, செய்யவே முடியாது.

வஸ்த்து குணத்தின் வரையறையில் **ப்ரயோஜன் பூத் க்ரியா -**உபயோகமான காரியம் என்ற வார்த்தை வருகிறது. ப்ரயோஜன் என்பதன் பொருள் பலன்-உபயோகம். கண்ணால் என்ன பிரயோஞனம்? பார்த்தல். ஞான குணத்தின் பிரயோஞனம் அறிதல், ஸ்ரத்தா குணத்தின் பிரயோஞனம் நம்பிக்கை கொள்ளல். ஒவ்வொரு திரவியமும் மற்றும் ஒவ்வொரு குணமும் அதனதன் உபயோககரமான காரியத்தை செய்கின்றன.

உடலின் அவயவங்களை உதாரணமாக கொண்டு இதை தெரிந்து கொள்ளலாம். ஒரே உடலின் அவயவங்களாக இருந்த போதிலும் கண்கள் பார்க்கும் வேலையை மட்டுமே செய்கின்றன, காதுகள் கேட்க்கும் வேலையை மட்டுமே செய்கின்றன, மூக்கு வாசனையை அறியும் காரியத்தை மட்டுமே செய்கிறது. கண்கள் சிவந்து விட்டன ஆகையால் காதுகள் பார்க்கும் வேலையை கொஞ்சம் நேரம் செய்கின்றன அல்லது காதில் வலி வந்துவிட்டது ஆகையால் கண்கள் கொஞ்சம் நேரம் கேட்க்கும் வேலையை செய்கின்றன என்பது எப்போதும் நிகழ்வதில்லை. ஒவ்வொரு புலன்களும் உபயோகமான அதனதன் வேலையையே செய்கின்றன, வேறொன்றின் வேலையை மாற்றிக்கொள்வதில்லை, கையாள்வதில்லை, அவைகளின் எல்லையை மீராமல் அவைகளின் காரியங்களையே செய்கின்றன. பெரிய நிருவணங்களில் அல்லது பெரிய குடும்பங்களில் ஒவ்வொருவரும் அவரவர் எல்லைக்குள் செய்ய வேண்டிய காரியங்களை செய்தால் வாணிபம் சுமூகமாக நடைபெறுகிறது. ஆனால் இக்காலத்தில் சிறிய குடும்பங்களில் இருப்பவர்களிடம் வஸ்த்துத்வ குணத்தின் இரகசியத்தை தெரிந்து கொள்ளாததால் மன அழுத்தம், சன்டை சச்சரவுகள் மற்றும் குழப்பம் நிறைந்து காணப்படுகின்றன.

ஒரே திரவியத்தில் அனந்த குணங்கள் இருக்கின்றன, அவைகள் அதனதன் காரியங்களை அவைகளே செய்கின்றன. ஞான குணம், ஸ்ரத்தா குணத்தின் காரியத்தை செய்வதில்லை, ஸ்ரத்தா குணம், சாரித்ர குணத்தின் காரியத்தை செய்வதில்லை. யாருக்கு இது தெரியவில்லையோ அவர்களிடம் உள்ள அஞ்ஞானத்தால், இவ்வளவு தெரிந்திருக்கிறது ஆனால் ஏன் சம்யக்தரிசனம் வர வில்லை? அல்லது ஏன் முனி தீட்சை எடுக்கவில்லை? என்ற கேள்வி எழுகிறது. உங்களுக்கு ராஜா விரஷப தேவரின் கதை தெரியுமல்லவா? அவர் பிறவியிலேயே சம்யக்திருஷ்டியாக இருந்தார், அவருடைய ஸ்ரத்தா குணத்தில் நிர்மல பரிணாமம் பிறந்ததிலிருந்தே இருந்தது, அதாவது அவர் சம்யக்திருஷ்டியாகவும் சம்யக்ஞானியாகவும் இருந்தார். ஆனாலும் கூட அவர் 83 லட்சம் பூர்வ ஆண்டுகள் இராஜ்யத்தை ஆள்வதில் காலத்தை கடத்தினார். அந்தரங்கத்தில் ஆழ்ந்து (சாரித்ர குணத்தின் பர்யாயம்) முனிக்கு தகுதியான ஒழுக்கத்தை கைகொள்ள அவருக்கு இவ்வளவு காலம் தேவைப்பட்டது. ஏனெனில் ஒவ்வொரு குணத்தின் காரியமும் அதுவே சுயமாக செய்ய வேண்டியிருக்கிற காரணத்தால், அந்த குணம் அந்த வழியில் எப்போது செயல்படுகிறதோ போதுதான் அந்த காரியம் நிகழ்கிறது. இதனால் ஸ்ரத்தா குணம், சாரித்ர குணத்தின் காரியத்தை செய்வதில்லை என்பதை உறுதி செய்து கொள்ளலாம். இங்கு இந்த உதாரணம் உலகத்தில் நாம் எப்படி வேண்டுமானலும் சுதந்திரமாக வாழலாம் என்பதற்காக கொடுக்கப்படவில்லை, ஆனால் வஸ்த்துத்வ குணத்தின் ஸ்வரூபத்தை தெளிவு செய்வதற்காகவே கொடுக்கப்பட்டது.

ஜீவ திரவியம் அதன் பிரயோஞனமான காரியத்தை அதாவது பார்த்தல்-அறிதல் முதலான காரியத்தை செய்கிறது, ஆனால் பிற ஜீவன்களின் அல்லது புத்கலத்தின் காரியத்தை இந்த உயிர் செய்ய முடியாது. அஞ்ஞாத்தின் காரணத்தினால், உயிர் புத்கலத்தின் காரியத்தை செய்கிறேன், என் இச்சைக்கு உகந்தார்போல் பிற திரவியங்களை என்னால் மாற்ற முடியும் என்று நம்புகிறது. எப்போதாவது இச்சைக்கு உகந்தார்போல் காரியம் நிகழ்ந்து விட்டால், பிறகு கர்த்ருத்வபுத்தியால் அஹங்காரம் அடைகிறது ஆனால் காரியம் நினைத்தபடி

நிகழாவிட்டால் அமைதியின்மை, சஞ்சலம் மற்றும் துக்கம் கொள்கிறது. உயிர் பிற திரவியங்களில் ஒன்றி விடுவதால் பிறவற்றின் காரியங்களை செய்பவன் மற்றும் அனுபவிப்பவன் என்ற மூடத்தனமான குழப்பத்தை அடைகிறது. [நான் என் பிரயோஞனமான காரியத்தை அதாவது பார்த்தல்-அறிதல் முதலான காரியத்தை செய்கிறேன், ஆனால் பிற ஜீவன்களின் அல்லது புத்கலத்தின் காரியத்தை என்னால் செய்ய முடியாது. அஞ்ஞாத்தின் காரணத்தினால் நான் புத்கலத்தின் காரியத்தை செய்கிறேன், என் இச்சைக்கு உகந்தார்போல் பிற திரவியங்களை என்னால் மாற்ற முடியும் என்று நம்புகிறேன். எப்போதாவது என் இச்சைக்கு உகந்தார்போல் காரியம் நிகழ்ந்து விட்டால் பிறகு கர்த்ருத்வபுத்தியால் நான் மமதை கொள்கிறேன் ஆனால் நான் நினைத்தபடி காரியம் நிகழாவிட்டால் அமைதியின்மை, சஞ்சலம் மற்றும் துக்கமடைகிறேன், முடிந்தால் அதற்கு பிறர் மேல் பழி சுமர்த்துகிறேன். நான் பிற திரவியங்களில் அதாவது உடல், செல்வம், சொந்தம் முதலியவைகளில் ஒன்றி விடுவதால் அவைகளின் காரியங்களை செய்பவன் மற்றும் அவைகளை அனுபவிப்பவன் நான் என்ற மூடத்தனமான குழப்பத்தில் இருக்கிறேன்.]

இந்த உயிர் உடலை ஸ்வ-தான் என்று நம்புகிறது மற்றும் உடலின் செயலை நான் செய்கிறேன் என்று பயனற்ற பெருமை கொள்கிறது. உயிரின் விருப்பத்திற்கு ஏற்ப உடலில் அசைவு மற்றும் போக்கு நிகழும்போது, அதன் கர்த்ருத்ருவ புத்தி மேலும் அதிகரிக்கிறது. ஆனால் உடம்பு சரியில்லை என்றால், முதுமை வந்தால், தலைமுடி வெள்ளையானால் அல்லது முடி கொட்டி வழுக்கை விழுந்தால், உடல் பலவீனமானால் அதாவது தன் விருப்பத்திற்கு எதிராக உடலின் செயல்கள் நிகழ்ந்தால், இந்த உயிர் மிகுந்த துக்கமடைகிறது. எப்போது ஒருவர் ஆத்மாவை-தன்னை இவ்வாறு அறிந்து கொள்கிறாரோ அதாவது “நான் ஒரு உயிர் பொருள், என்னுடைய பார்த்தல், அறிதல் செயல் என்னிலேயே நிகழ்கிறது மற்றும் அது என் வஸ்த்துத்துவ குணத்தின் காரணத்தால் நிகழ்கிறது; மற்றும் உடல் அனந்த புத்கல பரமாணுக்களால் ஆனது அதில் ஒவ்வொரு பரமாணுவும் அதனதன் வஸ்த்துத்துவ குணத்தின் காரணத்தால் மாற்றங்களை அடைந்து கொண்டு இருக்கிறது.” அப்போது அவருடைய கர்த்ருத்வ புத்தி, கஷ்டம், துக்கம் எல்லாம் முடிவுக்கு வந்து விடுகிறது.

ஒவ்வொரு திரவியத்தின் அஸ்த்தித்வ குணத்தின் இருப்பும் தனித்தனி யாகும், இந்த சத்தா-இருப்பு பர்யாய நோக்கில் தோற்றம், மறைதலுடனும், திரவிய நோக்கில் நிலையாகவும் இருக்கிறது. ஆரம்பத்தில் குணத்தின் வரையறையை பார்த்த போது ஒவ்வொரு திரவியத்தின் ஸ்வசதுஷ்டயம்-தன்நான்மை-ஸ்வதிரவ்யம், ஸ்வஷேத்ரம், ஸ்வகாலம், மற்றும் ஸ்வபாவம் தனித்தனி என்றும், இப்போது ஒவ்வொரு திரவியத்திலும் வஸ்த்துத்துவ குணம் இருக்கிறது என்றும், அதனால் அந்த திரவியத்தில் தோற்றம் அழிவு வடிவ செயல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்றும் பார்க்கிறோம். இவைகளால் ஒவ்வொரு திரவியத்தின் சுதந்திரத்தன்மை நம் எண்ணத்தில் வருகிறது. நாட்டின் சுதந்திரத்திற்காக பல மக்கள் வாழ்க்கையை பணயமாக வைத்து போராடினர்கள். ஆனால் வஸ்த்துவின் சுதந்திரத்திற்காக எந்த போராட்டமும் செய்ய வேண்டிய அவசியமில்லை, ஆனால் வஸத்து இயல்பாகவே சுதந்திரமாக இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டால் மட்டுமே போதும்! அதன் சுதந்திர இயல்பை நாம் அவசியம் அறிந்து கொள்ளவேண்டும். இந்த அறிவு இல்லாததால் நாம் குழப்பமும், துக்கமும் அடைகிறோம். வஸ்த்துத்துவ ஸ்வரூபம் நம் அறிவுக்கு வந்தவுடன் எல்லா குழப்பங்களும், துக்கமும் நம்மை விட்டு ஓடி விடுகின்றன.

எப்போது ஒரு குறிப்பிட்ட காரியம் தன் சக்திக்கு-எல்லைக்கு அப்பால் இருக்கிறதோ அப்போது இந்த உயிர் கடவுளை செய்பவர் என்று நம்பி அவரிடம் ஓடுகிறது. உண்மையான கடவுளின் ஸ்வரூபத்தை அறியாத காரணத்தால், வீதராக பகவானுக்கு முன்னால் குழந்தை பாக்கியம், செல்வம், ஆரோக்யம் முதலியவைகளுக்காக வேண்டுதல் செய்கிறது. ஆசையுடன் பக்தி செய்கிறது அல்லது பிற மதத்தினர்களைப் போல ஆசையுடன் கூடிய தேவ தேவதை, குதேவர், குகுரு, குசாஸ்திரம் இவைகளின் வசம் அடைந்து கிரஹீத

மித்யாத்வத்தை வலுவாக்கிக் கொள்கிறது. ஒரு குறிப்பிட்ட காரியம் தன் விருப்பத்திற்கு உகந்தார்போல் நிகழ்ந்து விட்டால் அதன் கர்வம் தலைக்கேறி விடுகிறது மற்றும் அதன் விருப்பத்திற்கு எதிராக நிகழ்ந்து விட்டால் எல்லா பழியையும் கர்மத்தின் மேல் போட்டு விடுகிறது. ஒரு சிறு குழந்தைக்கு பயத்தை காட்டி உணவை ஊட்டுவதுபோல அல்லது பயிற்சி செய்ய வைப்பது போல, இந்த உயிர் கர்மத்தின்மேல் பயம் கொள்கிறது. கர்மம் புத்கலமாகும் மற்றும் அதன் செயல் அதன் வஸ்த்துத்துவ குணத்தால் அதன் சுயநான்மையில்-ஸ்வ சதுஷ்டயத்தில் நிகழ்கிறது. நான் ஒரு உயிர் பொருள், என்றுடைய மாற்றம் என்னுடைய வஸ்த்துத்துவ குணத்தால் என்னில் நிகழ்கிறது என்பதை இந்த உயிர் தெரிந்து கொள்ளவே யில்லை. ஒவ்வொரு குணத்தையும் தெரிந்து கொள்வதால் நமக்கு எவ்வளவு லாபம் என்று பாருங்கள். ஸ்வாத்யாயத்தால், தத்துவ சிந்தனையால் வஸ்த்து ஸ்வரூபம் பற்றிய உண்மையான அறிவு பெற்றதும், அதன் பலன் அப்போதே கிடைக்கிறது. இன்று புண்ணிய காரியம் செய்தால், கொஞ்சம் காலத்திற்கு பிறகு அதன் பலன் கிடைக்கும் என்ற வியாபாரம் போன்ற பதில் தத்துவ ஞானம் பெருவதில் இல்லை. இதுவரை நாம் வெருமனே எல்லா திரவியங்களின் பொது ஸ்வரூபம் பற்றியே தெரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு பிறகு ஜீவ திரவியத்தின் சிறப்பு ஸ்வரூபங்களை தெரிந்து கொள்ளும்போது மிகுந்த ஆனந்தமடைவோம் என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம். அதற்கு முன் மற்ற நான்கு பொது குணங்களைப் பற்றி இன்னும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வஸ்த்துத்வ குணத்தை தெரிந்து கொண்டதால் அடைந்த லாபத்தை இப்போது நாம் சுருக்கமாகப் பார்க்கலாம்.

1. ஒவ்வொரு திரவியமும் அதன் பிரயோஜமான காரியத்தை செய்கிறது ஆகையால் எந்த திரவியமும் பயனற்றதாக இல்லை.
2. ஒவ்வொரு திரவியமும் சுயமாகவே அதன் காரியத்தை செய்கிறது, பிற எந்த திரவியத்தின் காரியத்தையும் அது செய்வதில்லை.
3. ஒவ்வொரு திரவியத்தின் காரியமும் அதன் வஸ்த்துத்வ குணத்தின் காரணத்தால் நிகழ்கிறது. வேறு திரவியத்தின் காரணத்தால் நிகழ்வதில்லை.
4. நான் உயிர் திரவியம், அறிதல் என் காரியம், அதற்கு வேறு எந்த திரவியத்தின் உதவியும் எனக்கு அவசியமில்லை.
5. நான் பிற திரவியங்களின் காரியத்தை செய்ய முடியும் என்ற கர்த்ருத்வபுத்தி என்னிடம் இல்லாமல் போவதால், எனக்கு எந்த கஷ்டமும் இல்லாமல் போகிறது.
6. பிற திரவியங்களின் பரிணமன் அவைகளின் ஸ்வசதுஷ்டயத்தில் நிகழ்கின்றன என்பதை அறிந்ததால் பிற திரவியங்களின்மேல் எனக்கு விருப்பு, வெறுப்பு இல்லாமல் போகிறது.
7. என்னில் நிகழும் விருப்பு வெறுப்புக்களுக்கு நானே தான் காரணம், பிற திரவியங்கள் அல்ல என்பது உறுதியாகிறது.
8. சம்யக்தர்சனம் அடைந்து அபூர்வ அமைதியின் அனுபவம் எனக்கு உண்டாகிறது. வஸ்த்துத்வ குண ஸ்வரூபத்தை சொல்லும் ஒரு வாசகத்தை நாம் பார்க்கலாம்.

வஸ்துத்வ குண கே யோக சே, ஹோ த்ரவ்ய மே ஸ்வ-ஸ்வக்ரியா |
ஸ்வாதீன் குண-பர்யாய் கா ஹீ பான் த்ரவ்ய நே கிய ||
சாமான்ய ஒளர் விஷேசதா சே கர் ரஹே நிஜ பாம் கோ |
யோம் மான் கர் வஸ்துத்வ கோ பாஓ விமல் ஷிவதாமு கோ ||

வஸ்த்துத்வ குணத்தை தெரிந்து கொண்ட பிறகு நாம் த்ரவ்யத்வ குணம் பற்றிய சர்ச்சையை அடுத்த கடிதத்தில் செய்யலாம்.

அன்புடன்
உன் அம்மா.

கடிதம்-12 29-11-1994

திரவ்யத்வ குணம்

ப்ரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஜெயின் சித்தாந்தங்களில் பயிற்சி ஒவ்வொரு உயிருக்கும் நிலையான சுகத்தை அளிக்கவல்ல முக்திபாதையை காட்டுகிறது. நாம் அதை பயிலத் தொடங்கி விட்டால், நாம் அதில் முழுமனதுடன் ஈடுபாடு கொண்டவர்களாக ஆவதோடல்லாமல் அதை மேலும் மேலும் அறிய வேண்டும் என்ற ஆர்வமும், உற்சாகமும் பெருகுகிறது. இதை நாங்கள் பூனாவில் நடந்த தசலட்சண பருவத்தில் நேரடியாக உணர்ந்தோம். உங்கள் அப்பா அந்த 10 நாட்களும் மூன்று முறை பிரவசனம் செய்தார். இதற்கு டாக்டர்.கிரன் மற்றும் திருமதி.முக்தாதாஸ் ஏற்பாடு செய்திருந்தார்கள். எப்போதும்போல உங்கள் அப்பா **சமண தத்துவ அறிமுகம்** சம்பந்தமான பாடங்களை நடத்தினார். பயிற்சி பெற்றவர்கள் அனைவரும் அதில் ஆழ்ந்து விட்டதாலும், மேலும் அறிய வேண்டும் என்ற தூண்டுதலாலும் இது பற்றி மேலும் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யும்படி வேண்டினார்கள்.

ஆகையால் அடுத்த ஆஷ்டாணிக பருவத்தில் 8 நாட்கள், நவம்பர் 10-ஆம் தேதி முதல் 17-ஆம் தேதி வரை ஒரு கருத்தரங்கம் நடத்த திரு.விஜய்தோஷி மற்றும் திருமதி.மம்தாதோஷி அவர்களும் ஏற்பாடு செய்தார்கள். இந்த கருத்தரங்கில் உன் அப்பா மூன்று மணி நேரமும், நான் இரண்டு மணி நேரமும் தத்துவ வகுப்பு நடத்தினோம். அந்த சமயத்திலிருந்து அங்கு தினமும் வழக்கமாக ஸ்வாத்யாயம் நிகழ்ந்துகொண்டு இருக்கிறது. இதோடுமட்டு மல்லாமல் 20-4-1995 முதல் இன்னுமொரு 10 நாட்கள் பயிற்சி வகுப்பு நடத்த திரு.பிரங்ஞாதோஷி, திருமதி.பிரங்ஞாதோஷி தம்பதிகள் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள். அப்போது நாங்கள் இருவரும் தினமும் 8 மணி நேரம் பிரவசனம் செய்ய இருக்கிறோம். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் முதியவர்கள் எல்லாம் சேர்ந்து 100-125 பேர் மிக உற்சாகத்துடன் இதில் பங்கு கொள்ள இருக்கிறார்கள். தத்துவத்தின் பெருமை அப்படி ஒரு தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. புத்திசாலிகள் இதை சீக்கிறமாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். எல்லா திரவியங்களிலும் காணப்படும் பொது குணங்களை பற்றி சர்ச்சையை நாம் செய்து கொண்டு இருக்கிறோம். கடந்த இரண்டு கடிதங்களில் அஸ்தித்வம் மற்றும் வஸ்த்துத்துவ குணங்களின் இயல்பு பற்றி நாம் தெரிந்து கொண்டோம். ஆறு பொது குணங்களில் திரவ்யத்வ குணத்தின் இயல்பு பற்றி இன்று நாம் தெரிந்துகொள்ள விருக்கிறோம்.

திரவியம் அனாதிஅனந்த காலம் தோற்றமும் அழிவுமின்றி நிலையாக இருக்கிறது என்று **அஸ்தித்வ குணம்** சொல்கிறது. ஒவ்வொரு திரவியத்தின் காரியமும் அதாவது மாற்றமும் சுயமாகவே அதிலேயே வேறு எதன் உதவியுமின்றி நிகழ்கிறது என்று **வஸ்த்துத்வ குணம்** காட்டுகிறது. ஒவ்வொரு திரவியத்தின் இந்த மாற்றம் இடைவெளி யின்றி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை **திரவ்யத்வ குணம்** நிரூபிக்கிறது. ஒரு சமய நேரம்கூட ஓய்வின்றி ஒவ்வொரு திரவியமும், ஒவ்வொரு சமயமும் தன் காரியத்தை செய்து கொண்டு இருக்கிறது. திரவ்யத்வ குணத்தின் சொற்பொருள் விளக்கம்-வரையறை இவ்வாறு இருக்கிறது, **எந்த சக்தியின் காரணத்தால் திரவியத்தின் நிலை தொடர்சியாக மாற்ற மடைந்து கொண்டு இருக்கிறதோ அந்த சக்தியை திரவ்யத்வ குணம்** என்று சொல்கின்றனர். திரவியம் நிலையாக இருந்து கொண்டு அதன் நிலை-வெளிப்படும் விதம் மட்டும் தொடர்ந்து மாற்ற மடைகிறது. இந்த காரணத்தால் அழிவு மற்றும் தோற்றம் இடைவெளியின்றி பிரவாக வடிவில் எப்போதும் நடந்து கொண்டே இருக்கிறது. ஆனால் பர்யாயம் ஒரு சமயத்திற்கு மேல் நிலைப்பதில்லை. அதன் நிலை தொடர்ந்து இடைவெளியின்றி மாறும் இந்த குணம்

ஒவ்வொரு திரவியத்திலும் இல்லையென்றால், திரவியம் அசைவற்றதாக இருக்க வேண்டியநிலை உண்டாகும். திரவியம் எப்படி இருக்கிறதோ அதே நிலையில் எப்போதும் இருந்துவிடும். நோயாளி எப்போதும் நோயாளியாகவே இருப்பார், நோயிலிருந்து குணமடையவே மாட்டார். குழந்தை சிறியதாகவே இருக்கும், அதில் வளர்ச்சி எதுவுமின்றி இளமை பருவம் அடையாது. பிறவி சுழற்சி நிலையை அழித்து முக்தி நிலையை அடைய முடியாது.

பால் தயிராக மாறியது, மாங்காய் பழுத்து மாம்பழமானது, நோயாளி குணமடைந்து ஆரோக்கியமானார். இந்த எல்லா மாற்றமும் திரவ்யத்வ குணத்தால் தான் நிகழ்கிறது. ஒவ்வொரு திரவியத்திலும், திரவியத்தின் ஒவ்வொரு குணத்திலும் இடைவெளியின்றி மாற்றம் நிகழ அதன் திரவ்யத்வ குணமே காரணமாகும். இந்த மாற்றத்திற்கு காரணம் வேறு ஒரு திரவியம் என்று நாம் இதுவரை நினைத்துக் கொண்டு இருந்தோம். குருவால் நமக்கு அறிவு கிடைத்தது, மருத்துவரால் நோய் குணமானது என்று சொல்வதெல்லாம் நிமித்த நோக்கில் சொல்லப்பட்டதாகும், உபசாரமாக அவ்வாறு சொல்லப்படுகிறது; ஆனால் பொருளின் நிலை அவ்வாறு இல்லை என்பதை நாம் அறிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாங்காய் பச்சை நிறத்தில் இருந்தது, சுவையில் புளிப்பாக இருந்தது, தொடும்போது கடினமாக இருந்தது அந்த மாங்காயே சில நாட்களுக்குப் பிறகு மாற்ற மடைந்து மாம்பழமானது. மாம்பழம் நிறத்தில் மஞ்சளாகவும், சுவையில் இனிப்பாகவும் மற்றும் தொடும்போது மென்மையாகவும் மாற்றம் அடைந்திருக்கிறது. இந்த மாற்ற மடைந்த நிலை பத்து நாட்களுக்குப் பிறகு நமக்கு தெரிய வருகிறது. நாம் மாங்காயை சரியான முறையில் வைக்கோலில் மூடிவைத்து பழுக்க வைத்தோம் என்று நினைக்கிறோம். ஆனால் மாங்காய் பழுத்து பழமானது என்பதில் அதன் திரவ்யத்வ குணம் அந்தரங்க நிமித்தமாகும் மற்றும் கால திரவியம் பஹிரங்க நிமித்தமாகும். ஒவ்வொரு குணமும் சுதந்திரமாக பரிணமிக்கிறது. வர்ண குணத்தின் பச்சை நிலை மாறி மஞ்சளானது, அதன் கர்த்தா வர்ண குணமாகும். சுவை குணத்தின் புளிப்பு நிலை மாறி இனிப்பு நிலையை அடைந்தது, அதன் கர்த்தா சுவை குணமாகும். ஸ்பர்ச குணத்தின் கடினத்தன்மை மாறி மென்மையான பர்யாயமானது, அதன் கர்த்தா ஸ்பர்ச குணமாகும். வஸ்த்துவின் சுதந்திரத்தன்மையே அப்படித்தான் இருக்கிறது. ஒவ்வொரு குணமும் சுதந்திரமாக அதனதன் காரியத்தை செய்கிறது, அது மட்டுமல்ல, ஒவ்வொரு சமயத்தின் பர்யாயமும் கூட சுதந்திரமாக அந்த சமய தகுதிக்கு ஏற்ப உற்பத்தியாகிறது. நிகழ்கால பர்யாயம் கடந்தகால பர்யாயத்தின் காரணத்தால் ஆகவில்லை மற்றும் எதிர்கால பர்யாயத்தின் கார்த்தா நிகழ்கால பர்யாயமுமில்லை. முன் பர்யாயம் அழிந்தது, அதே சமயம் அடுத்த பர்யாயம் உற்பத்தியானது. எது தானே அழிவை அடைகிறதோ அது எப்படி வேறு ஒன்றை உற்பத்தி செய்ய முடியும்? கால திரவியம் தான் மாற்றத்தை செய்ததல்லவா? கால திரவியத்தை கர்த்தா என்று ஒத்துக் கொள்கிறீர்களா இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். அதறகு பதில் கால திரவியம் ஒரு நிமித்த மாகும் மற்றும் நிமித்தத்தால் காரியம் நிகழ்வதில்லை, அதாவது நிமித்தம் காரியத்தில் எதுவும் செய்வதில்லை என்பதுதான். இது எவ்வாறு சாத்தியம் என்று இப்போது பார்க்கலாம்.

ஒவ்வொரு திரவியமும் ஒவ்வொரு சமயமும் அதனதன் காரியத்தை செய்து கொண்டே இருக்கிறது. கால திரவியமும் அதன் திரவ்யத்வ குணத்தின் காரணத்தால் இடைவிடாது பரிணமித்துக் கொண்டு இருக்கிறது. அதன் ஒரு பர்யாயத்தை ஒரு சமயம் என்று சொல்கிறோம். அசங்க்யாத சமயங்கள் கொண்டது ஒரு செகண்ட், 60 செகண்ட் கொண்டது ஒரு நிமிடம். காலத்தை கணக்கிடும் மணி, நாள், மாதம், வருடம்... முதலியவைகளை வியவஹார காலம் என்று சொல்கின்றனர். ஒரு செகண்டில் கால திரவியம் அசங்க்யாத முறை மாற்றமடைகிறது, உதாரணத்திற்காக 100 முறை மாற்றமடைகிறது

என்று வைத்துக் கொள்வோம். அப்போது ஒவ்வொரு திரவியத்திலும் ஒரு செகண்டில் 100 முறை மாற்றம் நிகழ்கிறது. ஒவ்வொரு நிலையும் மாற்ற மடைந்து அவைகள் கூட 100 மாற்றங்களை அடைந்தன. இந்த மாற்றங்களுக்கு காரணம் அந்தந்த திரவியங்களியேயே உள்ள அதனதன் திரவ்யத்வ குணமே காரணம். முதல் பர்யாயத்திலிருந்து நூறாவது பர்யாயம் வரை நிகழ ஒரு செகண்ட் காலம் ஆனது. இன்னும் ஓர் உதாரணத்தை பார்ப்பதன் மூலம் இந்த குணத்தை பற்றி சீக்கிரம் புரிந்து கொள்ளலாம்.

ஒரு குழந்தை பிறந்திலிருந்து அதன் உடல் ஒவ்வொரு சமயமும் மாறிக்கொண்டே இருக்கிறது, ஒரு வருடத்திற்கு பிறகு ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை அடைகிறது. குழந்தை வளர்கிறது, அதன் உடல் பெரிய தாகிறது. அதன் வளர்ச்சி எவ்வாறு நிகழ்கிறது என்பதை பார்ப்பதற்கு நாம் அந்த குழந்தையின் உயரம், எடை, குழந்தையின் உடல் மற்றும் மன வளர்ச்சி நிலை முதலியவைகளை ஆய்வு செய்கிறோம். ஆனால் வேறு வேறு குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சி வேறு வேறாக இருக்கின்றன ஆகையால் இந்த வளர்ச்சி மாற்றம் நிகழ எவ்வளவு காலம் ஆனது அதாவது எத்தனை முறை அது மாற்றமடைந்தது என்பதை சொல்ல கால நோக்கில் ஒரு வருட குழந்தை என்று சொல்கிறோம். ஆனால் உடல் (புத்கல திரவியம்) மற்றும் கால திரவியம் இரண்டும் வெவ்வேறு திரவியங்களாகும் மற்றும் அதனதன் மாற்றங்களுக்கு அதுவதுவே கர்ததாவாகும்.

ஒரு மாணவன் தேர்வில் மூன்று மணி நேரம் உட்கார்ந்து தேர்வு எழுதுகிறான் என்றால் அந்த காரியத்தை மாணவனே செய்கிறாரா அல்லது மூன்று மணி நேர காலம் தேர்வு எழுதுவதை செய்கிறதா? ஒருவருக்கு கையில் தீப்புண் ஏற்பட்டுவிட்டது. டாக்டர் இந்த காயம் எப்போது சரியாகும்? என்று என்னிடம் கேட்டார். காயத்தின் அறிகுறிகளை பார்த்து, நான் இது சரியாக இன்னும் எட்டு நாட்கள் ஆகும் என்று கூறினேன். நான் கூறியபடி அவருடைய காயம் எட்டு நாட்களில் குணமாகி விட்டது. நோயாளியின் சுய சக்தியின் காரணத்தால் தான் அவர் குணமடைந்தார். இந்த சக்தியைத்தான் நாம் திரவ்யத்வ குணம் என்று சொல்கிறோம். காயம் குணமாகும் சக்தி அவரிடமே இருந்தது, அது ஒவ்வொரு சமயமும் அதன் வேலையை செய்து கொண்டிருந்தது. ஒவ்வொரு சமயமும் இது நிகழ்ந்து எட்டு தினங்களுக்கு பிறகு அவருடைய காயம் பூரணமாக குணமாகி அவர் காயமற்றவரானார். உடலில் இந்த நிலை உடலின் குணதர்மத்தால் நிகழ்ந்தது. உடலில் பல நிலைகள் மாறி குறிப்பிட்ட நிலையை அடைந்தது, இதை அளவிட கால திரவியத்தில் எத்தனை நிலைகள்-பர்யாயங்கள் நிகழ்ந்தது என்பதை கணக்கிட்டு எட்டு நாட்கள் ஆனது என்று நாம் சொல்கிறோம். காலதிரவியம் வெருமனே அதன் மாற்றத்தையே செய்தது, உடலில் எந்த மாற்றத்தையும் அது செய்யவில்லை. ஆனாலும் கூட உபசாரமாக இந்த காரியம் காலத்தால் நிகழ்ந்தது என்று கூறுகிறோம். இந்த உபசாரமாக சொல்லுதல் எந்த திரவியத்தின் மேல் விழுகிறதோ அதை நிமித்தம் என்று சொல்கிறோம். ஆனால் நிமித்தம் காரியத்தில் கொஞ்சம்கூட எதுவும் செய்யவில்லை என்பதை நாம் இப்போது தெரிந்து கொண்டோம் அல்லவா.

சமயம்-சமயம், ஷணம்-ஷணம் நகர்ந்து கொண்டே இருக்கும் காலத்தின் ஓட்டம் இடைவிடாது ஓடிக்கொண்டே இருக்கிறது. காலம் எப்போதும் நிற்பதில்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததுதான். காலம் ஒரு திரவியம், அதுவே மற்ற எல்லா திரவியங்களின் நிலைகளை இடைவிடாத பிரவாகமாக-ஓட்டமாக ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு பர்யாயம் என்ற வகையில், பர்யாய ஓட்டம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இது வெரும் பேச்சிக்காக சொல்லப்படவில்லை இதற்கு சாஸ்திர ஆதாரம் இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் குந்தகுந்த ஆசார்யர் **சமயசாரம்** எழுதினார், அதற்குப்பிறகு ஆயிரம் ஆண்டுகள் கழித்து ஆசார்யர் அமிர்த சந்திரர் இந்த நூலை மதிப்பீடு

செய்து **ஆத்மக்யாதி** என்ற தெளிவுரை நூலை எழுதினார். அதன் 65 ஆம் கலசத்தில் (கர்த்தா கர்ம அதிகாரத்தின் 20-ஆவது கலசத்தில்) இவ்வாறு கூறியிருக்கிறார்.

ஸ்திதேதி ஜீவஸ்ய நிரந்தராய ஸ்வபாவபூதா பரிணாம் சக்தி: |
தஸ்யா ஸ்திதாயம் ச கரோதி பாவம் ய ஸ்வஸ்ய தஸ்யைவ பவேத் ச கர்த்தா ||

இதன் பொருள்-சேதன திரவியத்தில்-ஜீவ திரவியத்தில் மாற்ற மடையும் சாமர்த்தியம் அனாதியாகவே இருக்கிறது இது திரவியத்தின் இயற்கையான இயல்பாகும். இந்த மாற்ற மடையும் சக்தி தடையின்றி அதாவது இடைவிடாது செயல்படுகிறது-ஒரு சமயம் கூட இது நிகழாமல் இருப்பதில்லை. இந்த மாற்றமடையும் சக்தியின் மூலம் அந்த உயிர் எந்த சுப அல்லது அசுப உணர்வு கொள்கிறதோ, அதற்கு கர்த்தா ஸ்வயம் அந்த உயிரே யாகும். நமக்கு எப்போதாவது கோபம் வந்தால், அந்த சமயம் நாம் வேறு ஒருவரே கோபத்திற்கு காரணம் என்று எண்ணுகிறோம், ஆனால் உண்மையில் இந்த கோபத்திற்கு காரணம் ஸ்வயம் நாமே யாவோம்.

திரவியத்தின் நிலை மாற்ற மடைந்தாலும் கூட திரவியம் நிரந்தரமாக இருக்கிறது. அதன் ஒவ்வொரு நிலையும் அழிந்தாலும் சமயத்தோரும் அது புதுப்புது நிலையுடன் அழியாமல் இருக்கிறது. இடைவிடாது மாற்றமடையும் பர்யாயத்துடன் கூடியது திரவியமேயாகும். இடைவிடாது மாற்ற மடைந்து கொண்டே முக்காலத்திலும் நிலையாக இருக்கும் இயல்பு கொண்டதும் அந்த திரவியமே யாகும். திரவியம் மாறிக்கொண்டே மாறாமலிருப்பது என்பது எப்படி சாத்தியமாகும்?

ஒருவர் பத்து வயது சிறுவனாக இருந்தபோது நமக்கு தெரியும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனை நாம் பத்து வருடம் கழித்து பார்த்தால், அவன் இப்போது 20 வயது இளைஞனாக இருக்கிறான், அவனிடம் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனாலும்கூட அவன் அந்த சிறுவனே என்ற அறிவு நமக்கு வருகிறது, நிலை வெகுவாக மாறியபிறகும் கூட இவன் அவனே என்பதை நம்மால் உணர முடிகிறது.

ஒரே சமயத்தில் திரவியம் நித்யமாகவும் இருக்கிறது அநித்யமாகவும் இருக்கிறது. நாம் ஒன்றை ஆதாரமாக கொள்ள வேண்டுமென்றால், நித்யம் எதுவோ அதையே ஆதாரமாக கொள்ள வேண்டும் மாற்றமடைவதை அல்ல. தன்னை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் ஒருவரின்மேல் நாம் நம்பிக்கை கொள்ளமாட்டோம் அல்லவா. எப்போதும் மாற்ற மடையும் பர்யாயத்தின் பக்கமே பார்த்துக்கொண்டு நாம் அதை அப்படியே எப்போதும் நிலையாக வைத்துக்கொள்ள விரும்புகிறோம், அல்லது நம் விருப்பம் எதுவோ அந்த குறிப்பிட்ட பர்யாயத்தை அடைய முயற்சி செய்கிறோம். அனால் அது வஸ்த்து ஸ்வரூப இயல்புக்கு எதிராக இருப்பதால் அவ்வாறு நிகழ்வ தில்லை, அதனால் நாம் துக்கமடைகிறோம். வஸ்த்து ஸ்வரூபம் பற்றிய சரியான அறிவு பெற்ற பின்னர் இந்த கஷ்டமும், துக்கமும் நம்மிடம் இல்லாமல் போகிறது. உடல் எப்போதும் இளமையாக இருக்க வேண்டும், தலைமுடி கருமை நிறத்திலிருந்து வெள்ளையாக ஆகக்கூடாது, பணம் அல்லது குடும்பத்தில் எல்லோரும் நம்மை விட்டகலாமல் இருக்க வேண்டும், என்பது போன்ற நிகழ்கால நிலையை எப்போதும் நிலையாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். அது எண்ணம்போல் நிகழவில்லை என்றால் துக்கமடைகிறோம். எப்போதாவது நம் எண்ணம்போல் ஒரு காரியம் நிகழ்ந்துவிட்டால் (குழந்தைகளின் படிப்பு முதலியன) பிறகு உண்மைக்குப் புறம்பான அஹங்காரம் கொண்டு காரியத்தை தான் சாதித்ததாக கர்வம் கொள்கிறோம். திரவ்யத்வ குணத்தை அறிந்து கொண்டதால் நமக்கு எவ்வளவு லாபம் கிடைத்தது, பார்த்தாயா? அவைகளில் முக்கியமானவைகள் இவ்வாறாக இருக்கின்றன:

1. ஒவ்வொரு திரவியமும் அனாதிஅனந்தம் நிலையாக இருந்துகொண்டே அதன் நிலை-பர்யாயம் இடைவிடாது மறிக்கொண்டே இருக்கிறது, இது அந்த திரவியத்தின் திரவ்யத்வ குணத்தின் காரணத்தாலாகும். இதில் பிற திரவியங்கள் அல்லது நிமித்தம் கொஞ்சம்கூட எதுவும் செய்ய முடியாது.

2. உயிரின் பர்யாயம் உடலின் காரணத்தால், கடவுளின் காரணத்தால், பிற உயிர்களின் காரணத்தால், உயிரற்றவைகளின் காரணத்தால் எந்தவித மாற்றமும் அடையாது.

3. வேறு எதன் பர்யாயத்தையும் என்னால் (என்னுடைய காரணத்தால்) மாற்ற முடியாது. இது நாள் வரை நாம் மற்றவைகளுக்கு கர்த்தா என்ற மூட(மூர்க)புத்தி இருந்தது, அது இப்போது அழிந்து விட்டது.

4. பர்யாயம் எதுவோ அதுவே நான் என்ற நம்பிக்கையின் காரணத்தால் நான் துக்கமடைந்து கொண்டு இருந்தேன், ஆனால் அநித்யத்தன்மை அதாவது மாறும் நிலை பர்யாயத்தினுடைய இயல்பாகும், நான் என்னவோ அனாதிஅனந்தம் நித்யமாவேன்-அழிவின்றி இருப்பவன் என்று அறிந்ததால் என்னிடம் இருந்த கஷ்டம் இல்லாமல் போய்விட்டது.

5. குறிப்பிட்ட ப்ரியமான ஒருவரின் மரணம் ஏன் நிகழ்ந்தது? வைபவத்துடன் இருந்தவருக்கு இப்போது ஏழ்மை ஏன் வந்தது? யாரோ ஒருவருக்கு இயலாமை ஏன் இருக்கிறது? ஏன் இப்படி ஒரு சம்பவம் நடந்தது? முதலான எண்ணங்கள் புயல் போல நம் மனதில் ஓடுகின்றன, நாம் கவலைப் படுகிறோம், வருத்த மடைகிறோம். திரவ்யத்வ குணத்தின் காரணத்தால் இந்த மாற்றம் அந்த குறிப்பிட்ட திரவியத்தில் நிகழ்கிறது என்பதை அறிந்த பிறகு நம் மனதில் அமைதி உண்டாகிறது.

6. நிகழ் காலத்தில் மித்யாத்வ நிலை இருக்கிறது அது மாற்ற மடைந்தது சம்யக்த்வம் அடையும் சக்தி ஒவ்வொரு உயிரிடமே இருக்கிறது. நற்காட்சி பெரும் இந்த காரியத்தை உயிர் அதுவே அதன்மேல் செய்ய முடியும். அரஹந்தரால், சாஸ்திரங்களை வாசிப்பதால், யாத்திரை-பூஜை செய்வதால் இது முதலான சுப காரியங்கள் சம்யக்தர்சனம் அடையும் காரியமாகாது. ஆனால் சிரத்தை குணத்தின் மித்யாத்வ அவஸ்தை மாறி அந்த ஸ்ரத்தை குணமே சம்யக்த்வ அவஸ்தை வடிவில் பரிணமிப்பதே சம்யக்தர்சனம் அடைவதாகும்.

இவ்வாறு நிகழ வலுவான தத்துவ நிர்ணயம் செய்தல் அவசியமாகும். அதற்காகவே நம்முடைய இந்த கடிதம் மூலம் ஸ்வாத்யாயம் செய்தல் நடந்து கொண்டு இருக்கிறது. இந்த கடிதங்களை புத்தக வடிவில் எப்போது கொடுப்பீர்கள்? என்ற கேள்வியை பல வாசகர்கள் கேட்கிறார்கள். அந்த கேள்விக்கு கூட இதுதான் பதில் - இதன் புத்தக வடிவ அவஸ்தை இதன் திரவ்யத்வ குணத்தின் காரணத்தால்தான் நிகழும். அது எப்போது நிகழவேண்டுமோ அப்போது நிகழும், அதை அறியும் காரியத்தைதான் நாம் செய்ய முடியும். மற்ற சர்ச்சைகளை நாம் அடுத்த கடிதத்தில் செய்யலாம்.
ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-13 10-01-1995

பிரமேயத்வ குணம்

ப்ரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

அஸ்தித்வ, வஸ்த்துத்வ, திரவ்யத்வ குணங்களை தெரிந்து கொண்டதால், வஸ்த்து ஸ்வரூபம் பற்றி ஓரளவு தெரிய வந்ததால், மேலும் அதிகமாக தெரிந்து கொள்வதில் ஆர்வம் எழுகிறது என்று நீங்கள் இருவரும் கூறியது எனக்கு அதிக ஆனந்தத்தை அளிக்கிறது. படிப்பவர்களின் தீவிரமான ஆர்வத்தை பார்த்து, சொல்லிக் கொடுப்பவர்களுக்கு கூட உற்சாகம் இரண்டு மடங்காகிறது, ஆகையால் வாசகர்களின் கருத்து பற்றிய கடிதங்கள் எப்பொழுதும் வரவேற்கப்படுகின்றன. சென்ற கடிதத்தில் நான் திரவ்யத்வ குணத்தின் ஜோடி கவிதையை ஏன் எழுதவில்லை என்று நீங்கள் கேட்டிருந்தீர்கள். இதோ அந்த கவிதை -

திரவ்யத்வ குண இஸ் வஸ்த்து கோ ஜக் மே பலட்தா ஹை சதா |
லேகின் கபீ பீ த்ரவ்ய தோ தஜ்தா ந லக்ஷண் சம்பதா ||
ஸ்வ-த்ரவ்ய மே மோஷார்தி ஹோ ஸ்வாதீன் சுக் லோ சர்வதா |
ஹோ நாஷ் ஜிஸ்சே ஆஜ் தக் கி துஃகதாயி பவ கதா ||

திரவ்யத்வ குணத்தின் சர்ச்சையில், சம்யக்தர்சன பர்யாயம் திரவ்யத்வ குணத்தின் காரணத்தால் ஸ்ரத்தா குணத்தில் நிகழ்கிறது. அரஹந்தரால், திவ்யத்தொனியால், ஸ்வாத்யாயத்தால், பூஜையால் மற்றும் வேறு எந்த செயலாலும் அது நிகழ்வதில்லை என்பதை படித்து ரீனா, நீ இவ்வாறு கேட்டிருக்கிறாய் -சாஸ்திரங்களில் புண்ணியம் விடத்தக்கது, ஹேயம் என்று சொல்லப்படுகிறது, ஆனாலும் அம்மா, நீங்களும், அப்பாவும் தினமும் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்தல், பூஜை, அர்ச்சனை, ஸ்வாத்யாயம் முதலியன செய்கிறீர்களே, இது ஏன்? இந்த கேள்வி மிகவும் வருந்தம் அளிக்கக்கூடிய கேள்வியாக இருக்கிறது.

இளமையில் நீங்கள் இருவரும் நீச்சல் கற்றுக்கொண்டது ஞாபகத்தில் இருக்கிறதா? ஆரம்பத்தில் மிதக்கும் சாதனத்தை முதுகில் கட்டிக்கொண்டு நீங்கள் நீச்சல் குளத்தில் இறங்குவீர்கள், பிறகு தண்ணீரில் கை கால்களை அசைக்க பயிற்சி செய்வீர்கள். பயிற்சியாளரின் வழிகாட்டுதலுடன் சரியான முறையில் தண்ணீரில் நீச்சல் அடிக்க கற்றுக்கொள்ளும்வரை தண்ணீரில் மிதக்க உங்களுக்கு முதுகில் மிதக்கும் சாதனத்தை கட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால் அப்போது உங்கள் முதுகில் மிதக்கும் சாதனத்தை கட்டிக்கொள்வதை சீக்கிறம் எடுத்துவிட வேண்டியது என்பது உங்களுக்கும், உங்கள் பயிற்சியாளருக்கும் கூட தெரியும் அல்லவா? மிதக்கும் சாதனத்தின் உதவியின்றி சுதந்திரமாக நீச்சல் அடிப்பதுதான் சரி என்றாலும், பயிற்சியின்போது மிதக்கும் சாதனங்களை எடுத்து விட்டு பதற்றத்தில் தண்ணீரில் மூழ்குதல் சரியான காரியம் இல்லை அல்லவா.

அதுபோலவே ஜினேந்திர பகவான் தர்சனம், ஜினபூஜை, சாஸ்திர ஸ்வாத்யாயம் முதலியவைகளை பின்பற்றுவதின் அடிப்படையில் நாம் தத்துவ நிர்ணயம் செய்து சுத்தாத்மானுபவம் செய்ய வேண்டும். இந்த எல்லாவற்றிற்கும் அடிப்படை நடுவில் ஏதாவது எங்காவது நின்று விடுவதற்காக அல்ல, ஆனால் ஆன்ம அனுபவம் நோக்கி நகர்வதற்குத்தானாகும். சமயசார கிரந்தத்தில் சுப பாவங்களை-புண்ணிய செயல்களை **அடையாளம்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேல் மாடிக்கு செல்ல படி ஏரும்போது கைபிடி

சுவரின் உதவியுடன் மேலே செல்கிறோம், ஆனால் மாடியில் கால் பதிக்கும்போது கைபிடி சுவரை விட்டுவிட்டுத்தான் மேலே முன்னேற வேண்டியிருக்கிறது. அதுபோல ஜினேந்திர பாகவானின் தர்சனம், அவரால் சொல்லப்பட்ட உபதேசத்தை கேட்டல், அவர் கூறியதை சிந்தித்தல் மற்றும் தத்துவ நிர்ணயம் செய்தல் முதலியவைகளை செய்யாமல் ஆத்ம அனுபவம் அடைய முடியாது, ஆனால் இவைகள் எல்லாம் ஆத்மானுபவம் அடைவதை நிறைவேற்ற பொருத்தமான செயல்களாகும்; ஆனாலும் ஆத்ம அனுபவம் செய்யும் சமயம் இவைகளின் ஆதாரம் தானாகவே விடுபட்டுப் போகிறது. இந்த செயல்களிலேயே விருப்பம் இருக்கும் வரை ஆத்மானுபவம் உண்டாவதில்லை. இதை மனதில் கொண்டு புண்ணியத்தை விடவேண்டியது-ஹேயம் என்று சொல்லப்படுகிறது.

புண்ணிய செயல்கள் முதலில் ஏற்கப்பட்டு பின்னர் விடப்படுகிறது. எப்படி கல்லூரியில் சேரவேண்டியபோது 10+2 படித்து முடித்து தேறிய பிறகு நாம் மேல்நிலை பள்ளியை விட்டுவிட வேண்டியிருக்கிறதல்லவா. யார் பள்ளிக்கே செல்லவில்லையோ அல்லது +2 செல்வதற்கு முன் மேற்படிப்புக்காக பள்ளியை விட்டு விடுகிறாரோ அவர் கல்லூரியில் சேரக்கூட தகுதி இல்லாதவராகிறார், அவரால் கல்லூரிக்கு போக முடியாது. அதுபோல சாஸ்திர ஸ்வாத்யாயத்தின் மூலம் வஸ்த்து ஸ்வரூபத்தின் அறிவு பெற்று, தத்துவங்களை உள்ளவாறு உறுதி செய்யாமல் ஆத்ம அனுபவம் அடைய முடியாது, ஆனால் எப்போது ஆத்ம அனுபவம் நிகழ்கிறதோ அந்த சமயத்தில் ஆத்மா சம்பந்தமான வேறுபாடுகள்-விகல்பங்கள்கூட இல்லாமல் போகிறது. வேறுபாடுகள் அற்ற-நிர்விகல்ப நிலை உண்டாகிறது.

இன்று நாம் தெரிந்து கொள்ளப்போகும் விஷயம் **பிரமேயத்வ குணம்** பற்றியதாகும். அதன் சொற்பொருள் விளக்கம்-வரையறை **எந்த சக்தியின் காரணத்தால் திரவியம் எந்த ஞானத்திற்காவது தன்னை வெளிப்படுத்துகிறதோ, அந்த சக்தியை பிரமேயத்வ குணம்** என்று சொல்கின்றனர். எளிய நடையில் சொல்ல வேண்டும் என்றால் ஒவ்வொரு திரவியத்திலும் அப்படிப்பட்ட ஒரு சக்தி இருக்கிறது, அதன் காரணத்தால் அந்த திரவியம் ஞானத்தில் ஒளிர்கிறது-பிரகாசிக்கிறது-அறியப்படுகிறது. எவ்வாறு உயிர் திரவியத்தில் இருக்கும் அறியும் சக்தியை ஞான குணம் என்று சொல்கிறோமோ அதுபோல, ஒவ்வொரு திரவியத்திலும் **ஞானத்தில் பிரகாசித்தல்**, **யாருடைய அறிவிற்காவது வெளிப்படும் சக்தி** இருக்கிறது, அந்த சக்தியை **பிரமேயத்வ குணம்** என்று சொல்கின்றனர். திரவியங்களில் இருப்பதாக சொல்லப்படும் இந்த பொதுகுணம் எல்லா திரவியங்களிலும் இருப்பதால், ஒவ்வொரு திரவியமும் ஞானத்தில் ஒளிர்கிறது, அறியப்படுகிறது. எனவே பிரபஞ்சத்தில் அறியப்படாத பொருள், ஞானத்தில் பிரகாசிக்காத பொருள் என்று எதுவுமே இல்லை. பிரபஞ்சத்தின் ஸ்வரூபம் அறியப்படாமலே இருக்க முடியாது, இரகசியமாக இருக்க முடியாது.

நம்மால் அறியப்படாத பல பொருள்கள் இருக்கின்றனவே என்று நீங்கள் கூறலாம். இங்கே பாருங்கள், ஒவ்வொரு திரவியமும் ஏதாவது ஒரு ஞானத்தில் ஒளிர்கிறது என்று பிரமேயத்வ குணம் நமக்கு சொல்கிறது. தொலைக்காட்சி பெட்டியில் நாம் கிரிக்கட் போட்டி பார்க்கிறோம், அப்போது யாராவது ஒரு ஆட்டக்காரர் அவுட் ஆகிவிட்டாரா, இல்லையா என்று இரண்டு நடுவர்களாலும் சொல்ல முடியவில்லை என்றால் மூன்றாவது நடுவர் உதவியை அவர்கள் நாடுகின்றனர். பல கோணங்களில் வைக்கப்பட்டுள்ள கேமராக்களின் பதிவுகளை கவனமாக ஆரய்ந்து குறிப்பிட்ட ஆட்டக்காரர் அவுட்டா இல்லையா என்று மூன்றாம் நடுவர் உறுதி செய்கிறார். ஏதாவது ஒரு அறிவில் பொருள் வருதல் அதாவது பிரகாசித்தல் என்றால் என்ன என்று இப்போது தெரிந்து கொண்டீர்கள் அல்லவா, இந்த குணத்தையே பிரமேயத்வ குணம் என்று சொல்கின்றனர்.

இப்போது வேறு ஒரு எளிய உதாரணம் மூலம் பார்க்கலாம். வாசனையை கண்ணால் பார்க்க முடியாது ஆனால் மூக்கினால் முகர்ந்து அறிய முடிகிறது, ஒலியை காது தவிற மற்ற புலன்களால் கேட்க முடியாது. புளிப்பு, இனிப்பு சுவைகளை கண்ணால் அல்லது காதால் அறிய முடியாது ஆனால் நாக்கால் சுவைக்க முடியும். எந்த பொருள் கண்ணால் காணப்படுகிறதோ அதை மற்ற புலன்களாலும் அறியமுடியும் என்பதில்லை. புத்கலத்தின் சொரசொரப்பு, மழமழப்பு, உஷ்ணம், குளிர்ச்சி, மென்மை, கடினம், லேசு, பளு முதலான தொடுஉணர்வு, சுவை, வாசனை, நிறம், ஒலி இவைகளை அறிவில் அறியப்பட வைக்கக்கூடிய பிரமேயத்வ பெயர் கொண்ட சக்தி புத்கலத்தில் இருக்கிறது. ஊசியில் நூல் கோக்கும்போது எனக்கு ஊசியின் காது சரியாக தெரிவதில்லை ஆனால் உனக்கு அது தெளிவாக தெரிகிறது. அதாவது எது என் அறிவில் வரவில்லையோ அது உன் அறிவில் வந்து விட்டது.

நாள்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர் தன் நோய்யை கண்டறியவும் மற்றும் சிகிச்சைக்காகவும் பல மருத்துவர்களை அனுகுகிறார். அவருடைய விருப்பம் ஏதாவது ஒருவருக்காவது தன் நோய் என்னவென்று தெரிந்து சரியான மருந்து கொடுத்து குணப்படுத்த மாட்டார்களா என்பதாக இருக்கிறது.

பிரமேயத்வ குணத்தின் காரணத்தால் திரவியம் ஏதாவது ஒரு ஞானத்திற்கு வெளிப்படுகிறது. அப்படி சொல்லும்போது ஞானதில் பலவகைகள் இருக்கின்றனவா? அது எத்தனை? மற்றும் அவைகள் யாவை? என்ற கேள்விகள் எழுகின்றன. இதற்கு பதில் ஞானகுணம் ஒன்றுதான், ஆனால் ஞானத்தின் காரியம் அதன் பர்யாயத்தில் நிகழ்கிறது. பர்யாய நோக்கில் ஞானத்தின் வகைகள் பேசப்படுகின்றன. அவை மதிஞானம், சுருத ஞானம், அவதி ஞானம், மனபர்யய ஞானம் மற்றும் கேவல ஞானம் என்பன. அவற்றில் விரிவாக போகாமல் சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால் அரஹந்தர், சித்தர் இவர்களை தவிர மற்ற எல்லா உயிர்களுக்கும் மதி ஞானம் மற்றும் சுருத ஞானம் இருக்கிறது. திரவ்ய, ஷேத்ர, கால, பாவ எல்லைக்கு உட்பட்டு அதாவது குறிப்பிட்ட இட எல்லையில், குறிப்பிட்ட கால எல்லையில் உள்ள உருவ பதார்த்தங்களை பற்றி அறியும் அறிவை அவதி ஞானம் என்று சொல்வர். குறிப்பிட்ட பாவலிங்கி முனிக்கு மற்றவர்களின் மன சிந்தனையில் உள்ள உருவ பதார்தங்களை அறியும் சக்தியை மனபர்யய ஞானம் என்று சொல்வர். கேவல ஞானம் என்றால் எல்லாவற்றையும் அறியக்கூடிய சக்தி. ஒரே சமயத்தில் ஒட்டுமொத்தமாக பிரபஞ்சத்தில் உள்ள அனந்தானந்த திரவியங்கள், ஒவ்வொரு திரவியத்தின் அனந்த குணங்கள், அந்த குணங்களின் ஒவ்வொன்றின் கடந்த-நிகழ்-எதிர் கால அனந்த பர்யாயங்கள், மேலும் பர்யாயத்தின் அனந்த அலகுகள்-நுணுக்கங்கள் (அவிபாக பிரதிசேத்) இவை எல்லாவற்றையும் நேரடியாக அறியும் அறிவு எதுவோ அதை கேவல ஞானம் என்று சொல்கின்றனர். யார் கேவல ஞானத்தை பெற்றிருக்கிறாரோ அவரை கேவலி என்று சொல்கிறோம். அரஹந்தர் மற்றும் சித்தர்கள் சர்வஞ்ஞர்கள் என்று நாம் முதல் இரண்டு கடிதங்களிலும் படித்தது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கம்.

உலகில் கேவல ஞானத்தால் அறியமுடியாத திரவியமோ, குணமோ, பர்யாயமோ ஒன்று கூட இல்லை என்பதை மேற்கூறியவைகளால் உறுதியாகிறது. கேவல ஞானத்திற்கு எல்லா விஷயங்களையும் அறியும் வலிமை இருக்கிறது அதேபோல ஒவ்வொரு திரவியத்திலும் எந்த ஞானத்திலாவது பிரகாசிக்கும் வலிமை இருக்கிறது. மற்ற நான்கு ஞானங்களில் வேண்டுமானால் பிரகாசிக்கிறதோ இல்லையோ, கேவல ஞானத்தில் என்னவோ எல்லா திரவியங்களும் பிரகாசிக்கவே செய்கின்றன.

பிரமேயத்வ குணத்தை தெரிந்து கொண்டதால் சர்வஞ்ஞரையும், க்ரமபத்தபர்யாயத்தையும் கூட உறுதி செய்ய முடிகிறது. கேவல ஞானத்தால் எல்லா திரவியங்களும் அறியப்படுகின்றன, அதன் அனந்த குணங்களும் பிரகாசிக்கின்றன, மேலும் ஒவ்வொரு குணத்தின் அனாதிஅனந்த கால எல்லா பர்யாயங்களும் பிரகாசிக்கின்றன. இதன் பொருள் எந்த பர்யாயம் எப்போது நிகழும், எந்த பர்யாயத்திற்கு பிறகு நிகழும், அந்த சமயத்தில் வேறு திரவியங்களின் நிலை என்னவாக இருக்கும், கால நோக்கில் எந்த காலமாக இருக்கும், நிமித்த வடிவில் எந்த திரவியம் அங்கு இருக்கும் என்ற எல்லா விஷயங்களைப் பறிய அறிவு அனந்த கேவலிகளின் ஞானத்தில் வந்தது, வந்து கொண்டிருக்கிறது, எதிர்காலத்திலும் வந்து கொண்டிருக்கும். இதன் பொருள் எல்லா விஷயங்களும், நிகழ்வுகளும் நிச்சயிக்கப்பட்டதாகும் என்பதாம்.

அடேயங்கப்பா! அப்படியென்றால் நாம் வீணாகத்தான் கடின உழைப்பு செய்து கொண்டு இருக்கிறோம். எப்போது என்ன நிகழ வேண்டுமோ அது நிகழும், பிறகு நாம் ஸ்வாத்யாயம் செய்ய வேண்டிய அவசியமில்லை-என்ற மனமகிழ்ச்சி கொண்டு யாரும் தப்பிக்க முயன்றால் அந்த உயிருக்கு ருசி எங்கு இருக்கிறது என்பது உறுதியாகிறது. யாருக்கு ஆத்மானுபவம் அதாவது சம்யக்தர்சன பர்யாயம் வெளிப்படுகிறதோ அதற்கு முன் பர்யாயங்கள்கூட கேவலியின் அறிவில் பிரகாசிக்கவே செய்கின்றன.

ஜினேந்திரரால் சொல்லப்பட்ட தத்வோபதேசம் முலமே தத்துவ நிர்ணயம், தத்துவ நிர்ணயம் மூலமே ஆத்மானுபூதி, ஆத்மானுபூதி மூலமே சம்யக்சாரித்ரம் மற்றும் முனி நிலை ஏற்றல் இவைகளே மோக்ஷமார்கத்தின் பர்யாய வரிசை என்பதுகூட கேவலிகளின் ஞானத்தில் வருகிறது. கேவல ஞானத்தால் அறியப்பட்ட இந்த விஷயமே திவ்யத்தொனி வடிவில் ஓம்கார சப்த வடிவமாக சமவசரணத்தில் வந்தது, அந்த திவ்யத்தொனியை கேட்டே கணதரர்கள் மற்றும் ஆசார்யர்கள் அவைகளை அனுபவம் செய்து மோக்ஷமார்கம் வாய் வழியாக சொல்லப்பட்டது, பின்னர் அவைகள் ஆகம வடிவில் எழுதப்பட்டு இன்றும் நமக்கு கிடைக்கின்றன என்பது நம்முடைய பாக்கயமே யாகும்.

பிரமேயத்வ குண ஸ்வரூபத்தை நாம் அறிந்த பிறகு நாம் என்ன செய்கிறோமோ அவை எல்லாம், அதாவது எல்லா காரியங்களும், எல்லா ஆலோசனைகளும், யாருடைய ஞானத்தில் வருகிறதோ இல்லையோ, கேவலிகளின் ஞானத்தில் அவசியம் வருகிறது என்ற எண்ணம் நமக்கு வருகிறது. வெறும் ஒரு கேவலிக்கு மட்டும் அல்ல, எல்லா அனந்த கேவலிகளுக்கும் வருகிறது. இவ்வாறு அறிந்த பிறகு, தீவிர பாபம் செய்யும் எண்ணம், திருட வேண்டும் என்ற எண்ணம், கலப்படம் செய்து விற்க வேண்டும் என்ற எண்ணம், பொய் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் உயிர்களுக்கு இருப்பதில்லை. யார் பிரமேயத்வ குணத்தை அறிந்துள்ளாரோ அவர் கேவலியின் ஸ்வரூபத்தையும் அறிந்திருக்கிறார் ஆகையால் அவர் அந்த கேவலிகளை சாக்ஷியாக வைத்துக்கொண்டு பாபச்செயல்களில் ஈடுபடமாட்டார். சாஸ்திர பயிற்சி செய்த பிறகுகூட அந்யாயம் மற்றும் அநீதியான நடத்தை உள்ளவர்கள் சிலரை நம்மால் சமுதாயத்தில் பார்க்க முடிகிறதே அது ஏன்? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். இப்படிப்படவர்கள் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட மர்மங்களை அறியவில்லை, கேவலிகளின் ஸ்வரூபத்தையும் அறியவில்லை என்பதுதான் அதற்கு பதில். அப்படிப்பட்டவர்கள் கேவலியின் அதாவது அரஹந்தர்-சித்தரின் ஸ்வரூபத்தையே அறியவில்லை என்றால் அவர்கள் நமோக்கார மந்திரம் ஜபித்தல், சாஸ்திரம் படித்தல் எல்லாம் வீணாகும், அவர்கள் உண்மையில் பகவானை வணங்கவே இல்லை, சாஸ்திரத்தில் கூறியிருப்பதை அறியவே யில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்டவர்களை பார்த்து நாம் சாஸ்திர ஸ்வாத்யாயத்தை நிறுத்தி விட்டால், நம்மை போல முட்டாள் வேறு

யாரும் இருக்க முடியாது, அப்படிப்பட்ட முட்டாள்களை தேடி கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை!

அந்த காலத்தில் எதுவும் இல்லை ஆனால் இந்த காலத்தில் விஞ்ஞானிகள் எத்தனையோ பல புதிய கண்டுபிடிப்புகளை செய்துள்ளனர் என்று நாம் கூறுகிறோம். அணு சக்தியை இக்கால விஞ்ஞானிகள் கண்டு பிடிப்பிடித்தனர். அரே! அணுவில் சக்தி இருக்கிறது என்று இந்த விஞ்ஞானிகளுக்கு இப்போதுதான் தெரிந்தது. அந்த விஞ்ஞானிகள் அணுவில் சக்தியை உருவாக்கவில்லை, அதில் சக்தி இருக்கிறது என்ற அறிவு அவர்களுக்கு இப்போது வந்தது அவ்வளவே. அணுவில் அதாவது புத்கலத்தில் பிரமேயத்வ சக்தி இருப்பதால் ஏதாவது ஒரு அறிவில் பிரகாசிக்கிறது. சர்வஞ்ஞரின் ஞானத்தில் இது முன்னறே தெரிந்திருந்தது, அந்த சமயத்தில் அவர் ஞானத்தில் இது எந்த காலத்தில், எந்த விஞ்ஞானியின் அறிவில் வரும் என்றும் அதாவது இந்த கண்டுபிடிப்பு எப்போது யாரால் நிகழும் என்றும் அவர் அறிந்திருந்தார்.

பிரமேயத்வ சக்தியை தெரிந்து கொண்ட பிறகு, எந்த ஒரு விஷயமும் அதிசயமாக இருப்பதில்லை. எந்த விஷயம் நமக்கு தெரியாதிருந்ததோ அது நமக்கு தெரியும்போது அது அதிசயமாக அல்லது ஆச்சர்யமாக தோன்றுகிறது. ஆனால் வஸ்த்து ஸ்வரூப நோக்கில் பார்க்கும்போது அற்புதமானதாக எதுவும் இருப்பதில்லை.

தந்துவ ஞானம் வெறும் தந்துவ ஞானத்தை பெறுவதற்கான லாபத்தை மட்டும் அளிக்கவில்லை, ஆனால் நம் அன்றாட வாழ்க்கையில் கூட பயனுள்ளதாக, உபயோகமானதாக இருக்கிறது. ஒரு பிரியமான நபர் இறந்துவிட்டால் சோகத்தில் மனிதர்கள் பையித்தியமாகி விடுகிறார்கள். ஆனால் அந்த சமயத்தில் அங்கு தத்துவத்தை அறிந்த நபர் இருந்தால் அவர் இவ்வாறு நினைப்பார்-**அந்த உயிர் இந்த உடலுடன் இருந்தது, இப்போது இந்த உடலை விட்டு இங்கிருந்து சென்றுவிட்டது, அதில் அஸ்தித்வ குணம் இருப்பதால் அது அழியவில்லை, அதனுடைய இருப்பு வேறு எங்கேயோ இருக்கிறது, அதில் பிரமேயத்வ குணம் இருப்பதால் ஏதாவது ஒரு ஞானத்திற்கு அது இப்போது எங்கே இருக்கிறது, எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிந்திருக்கும்.** தன்னுடைய மகன் தொலைந்து விட்டான் என்று தெரிந்த பிறகு ஒரு அம்மா துக்கப்படுவார், ஆனால் அவருக்கு அவர் மகன் சுகமாக அமெரிக்காவில் இருக்கிறான் என்று தெரிந்தால் அவருக்கு அவ்வளவு துக்கம் இருக்காது.

புத்கலம் வடிவம் உடைய திரவியம் ஆதலால் அது புலன்கள் மூலம் நம் அறிவுக்கு புலப்படுவதால் நாம் அதை நம்புகிறோம். உயிர், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம் இவைகள் உருவமற்ற திரவியங்கள் ஆகையால் நம் புலன்களால் அறியப்படுவதில்லை ஆகையால் அந்த திரவியங்களின் இருப்பை சிலர் மறுக்கின்றனர். ஆனால் அந்த திரவியங்களில் பிரமேயத்வ குணம் இருப்பதால் சர்வஞ்ஞரின் ஞானத்தில் இவைகள் வரவே செய்கின்றன. இவைகளில் உயிர் திரவியத்தில் மட்டும் உள்ள சிறப்பு என்னவெனில் அதில் பிரமேயத்வ குணமும் இருக்கிறது, ஞான குணமும் இருக்கிறது. உயிர் தன் ஞான குணம் மூலம் தன்னை அறியும் சக்தி கொண்டது மற்றும் அதன் பிரமேயத்வ குணத்தின் காரணத்தால் தன்னுடைய ஞானத்தால் அறியப்படுவதாகவும் இருக்கிறது. தன் சுத்த ஸ்வரூபத்தை, அதீந்திரிய ஆனந்த அனுபவம் அதாவது சுய வேதனை அவஸ்தை, அதன் அறிவுக்கு வருகிறது. சம்யக்தர்சனம் அடைந்த பிறகு அதற்கு அது தெரியவில்லை, ஆனால் கேவலஞானிகளின் அறிவில் மட்டுமே தெரிகிறது என்று நம்புதல் நியாயப்படுத்தப்படவில்லை, சாஸ்திர நோக்கிலும் நிச்சயமாக சரியில்லை. [சம்யக்தர்சனம் அடைந்த உயிருக்கு அது சம்யக்த்வம் அடைந்தது தெரியும் என அறியவும், அது வேறு யாரையும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. நாம் சுகமாக இருக்கிறோம்,

துன்பத்தில் இருக்கிறோம் என்பது நமக்கு நாமே தெரிந்து கொள்வதுபோல சம்யக்தர்சனம் பெற்ற ஆனந்த அனுபவமும் நம்மால் தெரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும்.]

ஞான குணத்தின் காரணத்தால் உயிரை **ஞாயக்**-அறிபவர் என்று சொல்கின்றனர் மற்றும் பிரமேயத்வ குணத்தின் காரணத்தால் **ஞேய**-அறியப்படுபடுவது என்று சொல்கின்றனர். உயிர் ஞாயக்-அறிபவர் மற்றும் பிற எல்லா திரவியங்களும் ஞேய-அறியப் படுபவைகள். இதன் பொருள் என்னவென்றால் இந்த பிரபஞ்சத்தில் எல்லா திரவியங்களுடனும் உயிருக்கு **ஞேயஞாயக** அறியப்படுதல்அறிதல் சம்பந்தம் இருக்கிறது. உயிர் சுதந்திரமானதால் ஞாயக்-அறிவதாகும் மற்ற திரவியங்களும் சுதந்திரமானதால் ப்ரமேயமாகும், ஞேயமாகும், அறியப்படுபவைகளாகும். ஆனால் பிற திரவியங்கள் தன்னால் அறியப்படுபவைகள் என்று எண்ணாமல் இந்த உயிர் அவைகளில் ஒன்றியதாக-அதுவே தானாக, அது தனதாக, அதை செய்பவனாக, அதை அனுபவிப்பவனாக எண்ணி துக்கம் அடைகிறது.

ஆத்மக்யாதி கிரந்தத்தில் மிக சிறந்த உதாரணம் மூலம் இது விளக்கப்பட்டுள்ளது. நிலவின் நிலவொளி பூமியில் விழுந்து பூமியை பிரகாசப் படுத்துகிறது. ஆனால் அந்த பூமி நிலவினதாக ஆகிவிடவில்லை. நிலாவுக்கு நிலவொளி மட்டுமே சொந்தமாக இருக்கிறது, பூமி பூமிக்கே சொந்தமாக இருக்கிறது. அதுபோல உயிர் திரவியம் ஞானத்தால் பிற திரவியங்களை அறிகிறது அதாவது அறிவு பிற திரவியங்களில் பிரகாசிக்கிறது ஆகையால் பிற திரவியங்கள் உயிரினுடையதாகாது. உயிரினுடையது அறிவு மட்டுமே, மற்ற திரவியங்கள் மற்ற திரவியங்களுடைய தேயாகும், பிரமேயத்வ குணத்தின் காரணத்தால் ஞானத்தில் வருகிறது, ஞானத்தில் பிரதிபலிக்கிறது, அறியப்படுகிறது, அது ஞானத்தில் பிரவேசிக்கவில்லை. ஞானம் கூட எல்லாவற்றையும் அறிகிறது ஆகையால் ஞானத்தை சர்வகத்-எல்லாவற்றிலும் இருக்கிறது என்று சொல்கின்றனர் ஆனால் அதுகூட பிற திரவியங்களில் பிரவேசிக்க வில்லை.

பிரமேயத்வ குணத்தை தெரிந்து கொண்டதால் முக்கியமாக என்ன லாபம் கிடைத்தது என்று மீண்டும் பார்க்கலாம்.

1. ஒவ்வொரு திரவியமும் அதன் பிரமேயத்வ குணத்தின் காரணத்தால் அறிவால் அறியப்படுகிறது, அறிவில் பிறகாசிக்கிறது.

2. பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லா அனந்த திரவியங்களும் அறியப்படுகின்றன, எந்த திரவியமும் அறியப்படாததாக இருக்க முடியாது.

3. எல்லா அனந்தானந்த திரவியங்களும் அறிவின் ஒரு சமய பர்யாயத்தில் பிரகாசிக்கின்றன, அந்த ஞானத்தை கேவலஞானம் என்று சொல்கின்றனர். இதனால் சர்வஞ்ஞர் இருக்கிறார் என்று நிரூபணம் ஆகிறது.

4. ஒவ்வொரு திரவியத்தின் அனாதிஅனந்த காலத்தின் எல்லா பர்யாயங்களும் ஒன்றாக கேவலஞானத்தில் பிரகாசிக்கின்றன, இந்த காரணத்தால் ஒவ்வொரு பர்யாயமும் க்ரமபத்தம்-வரிசையாக வருவது என்பது எண்ணத்தில் வருகிறது, அதாவது க்ரமபத்தபர்யாயம் நிரூபணம் ஆகிறது.

5. நம் ஒவ்வொரு காரியத்தையும் மற்றும் பரிணாமத்தையும் (உணர்வுகளையும்) சர்வஞ்ஞர் அதாவது அரஹந்தர்கள் மற்றும் சித்தர்கள் அறிகின்றனர் என்பதை தெரிந்து கொண்டதால் நாம் பாபம் செய்யும் பக்கம் போதல் குறைந்து விடுகிறது.

6. அருவமான திரவியங்களும் கூட அறியப்படுகின்றன என்பதும் நிரூபணம் ஆகிறது.

7. ஒவ்வொரு உயிரும் தன்னைத்தானே அறிந்து கொள்ள முடியும். தன்னை ஆத்மானுபவம் செய்ய முடியும், அதாவது தனக்கு சம்யக்தர்சனம் வந்துவிட்டது என்பதை அந்த உயிரே தெரிந்து கொள்கிறது என்பது இதனால் நிரூபணம் ஆகிறது.

8. பிற திரவியங்களுடன் எனக்கு வெரும் ஞேய-ஞாயக்(அறியப்படும்-அறியும்) சம்பந்தம் மட்டுமே இருக்கிறது. ஸ்வாமித்வம் (பார்க்கப்படும் பொருள் மேல் உரிமை கொண்டாடுதல்), கர்த்ருத்வம் (பார்க்கப்படும் பொருளுக்கு நான் எதாவது செய்தல்), போக்த்ருத்வம் (அறியப்படும் பொருளை நான் அனுபவித்தல்) முதலியன எதுவும் இல்லை என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

இங்கே சரியாக பாருங்கள், ஒவ்வொரு பொது குணமும் திரவியத்தின் சுதந்திரத்தை (தன்டோரா-தமுக்கு) அடித்து பிரகடனம் செய்கிறது. எவ்வளவு அதிகமாக சர்ச்சை செய்கிறோமோ அவ்வளவு அதிகமான மர்மங்களை அறிய முடிகிறது. பிரமேயத்வ குண சம்பந்தமான வசனத்தை எழுதி இன்றய சர்ச்சையை பூர்த்தி செய்கிறேன்.

சப் த்ரவ்ய-குண பிரமேய சே பன்தே விஷய ஹை ஞான் கோ,
ருக்தா ந சம்யக்ஞான் பர் சே ஜாநியோ தே த்யான் சே |
ஆத்மா அரூபி ஞேய நிஜ யஹ ஞான் உஸ்கோ ஜாந்தா,
ஹை ஸ்வ-பர சத்தா விஸ்வ மே சுத்ருஷ்ய உஸ்கோ ஜான்தா ||

மேலும் சிறப்பான விவாதத்தை அடுத்த கடிதத்தில் தொடரலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-14 07-02-1995

அகுருலகுத்வ குணம்

ப்ரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்,

நீங்கள் கடிதங்களை மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது ஒரு நல்ல விஷயம் தான். இவைகளிலிருந்து வஸ்த்து ஸ்வரூபம் மற்றும் ஆத்ம ஸ்வரூபம் பற்றி தெரிந்து கொள்வதில் உங்களுக்கு இருக்கும் தீவிரமான விருப்பம், ருசி, உற்சாகம் தெரிகிறது. சாஸ்திரத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது:

தத்ப்ரதி ப்ரீதிசித்தேன யேன வார்தாபி ஹீ ஸ்ரத்தா |
நிச்சித்த ச பவேத் பவ்யோ பாவிநிவாரண் பாஜனம் ||

இதன் பொருள்: ஆத்ம சம்பந்தமான சர்ச்சையை யார் விருப்பத்துடனும், உற்சாகத்துடனும் கேட்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக பவ்யர் ஆவார் மற்றும் அவர் எதிர்காலத்தில் நிர்வாணத்திற்கு-முக்திக்கு பாத்திரமாவார்.

ஆறு திரவியங்களிலும் இருக்கும் பொது குணங்கள் பற்றிய சர்ச்சையை நாம் செய்து கொண்டிருக்கிறோம். நாம் இதுவரை அஸ்தித்துவம், வஸ்த்துத்துவம், திரவ்யத்துவம், பிரமேயத்துவம் ஆகிய குணங்களின் ஸ்வரூபத்தை-இயல்பை-தன்மையை, மற்றும் அதன் காரியங்களை பார்த்தோம். இவைகளால் நாம் வஸ்த்து ஸ்வரூபம் பற்றி அதாவது திரவ்யங்களை பற்றி தெரிந்து கொள்கிறோம். ஒவ்வொரு வஸ்த்துவிலும் அனந்த குணங்கள் ஒன்றாக உள்ளன, ஒவ்வொரு சமயமும் இருக்கின்றன, எப்போதுமே இருக்கின்றன. பொருளின் இருப்பு ஒன்றுதான். வஸ்த்து ஒன்று தான், ஆனால் அந்த வஸ்த்து எப்படிப்பட்டது என்று சொல்லும் குணங்கள் அனந்தமாகும். அனந்தம் என்ற எண்ணிக்கை செல்லுதல் மற்றும் கேட்டல் எல்லைக்கு அப்பால் நம் சிற்றறிவுக்கு எட்டாத எல்லையில் இருக்கிறது ஆகையால் திரவியத்தின் ஸ்வரூபத்தை தெரிந்து கொள்ள அவசியமான ஆறு பொது குணங்களைப் பற்றியே சாஸ்திரங்களில் சர்ச்சை செய்யப் பட்டிருக்கிறது.

இன்று நாம் தெரிந்து கொள்ளப் போகும் விஷயம் **அகுருலகுத்வம்** என்ற பொது குணம் பற்றியதாகும். இத்த குணம் ஒரு வினோதமான குணமாகும், இது ஜைன சித்தாந்தத்தின் உயிர்நாடி-ப்ராணன் எனலாம், வஸ்த்து ஸ்வரூபத்தை தெரிந்து கொள்ள இது ஒரு பெரிய மந்திரமாகும். உண்மையை சொல்ல வேண்டும் என்றால் எந்த குணமும் பெரியதோ அல்லது சிறியதோ இல்லை, உயர்ந்ததோ அல்லது தாழ்ந்ததோ இல்லை; ஆனால் இதை தெரிந்து கொள்வதால் பொருள்களின் அமைப்பு நம் அறிவுக்கு நன்றாக தெரிய வருகிறது, எனவே இந்த குணத்தை மஹத்தான-பெரிய குணம் என்று சொல்லப்படுகிறது. அதனுடைய சொற்பொருள் விளக்கம்-பரிபாஷை:

எந்த சக்தியின் காரணத்தால் திரவியம் அதே திரவியமாக எப்போதும் இருக்கிறதோ அதாவது:

1. **ஒரு திரவியம் வேறொரு திரவியமாக ஆவதில்லையோ,**
2. **ஒரு குணம் வேறு குணமாக ஆவதில்லையோ,**
3. **திரவியத்தில் இருக்கும் அனந்த குணங்கள் பிரிந்து தனி தனியாகப் போவதில்லையோ**,

அந்த சக்தியை அகுருலகுத்வ குணம் என்று சொல்கின்றனர்.

அனாதி காலமாக அனந்த திரவியங்கள் நிலையாக இருக்கின்றன. ஒவ்வொரு திரவியத்தின் ஸ்வரூபமும் எப்படி இருந்ததோ அப்படியே எப்போதும் நீடித்து இருக்கிறது, ஒரு திரவியம் மாற்றம் அடைந்து வேறு திரவியமாக ஆவதில்லை. அனந்த குணங்களின் சமூகத்தை திரவியம் என்ற பெயர்ச்சொல்லால் குறிப்பிடுகிறோம். இந்த அனந்த குணங்களில் ஒரு குணம் கூட பிரிந்து வேளியே செல்லாமல் இருக்கக்கூடிய சக்தி அந்த திரவியத்திலேயே இருக்கிறது. ஏதாவது ஒரு குணம் ஒரு திரவியத்தை விட்டு வேறு திரவியத்தில் சேருமானால், அல்லது பிரிந்து அழிந்து விடுமானால் குணங்களின் சமூகம் என்பது கலைந்து போகும் அதாவது திரவியம் அழியும் சூழ்நிலை ஏற்படும். அப்படி ஒவ்வொரு திரவியமாக அழியுமானால் பிரபஞ்சமே அழியும் சூழ்நிலை உருவாகும். ஆனால் அவ்வாறு நிகழ முடியாது. ஒவ்வொரு திரவியத்திலும் அது வேறு திரவியமாக ஆகமுடியாத சக்தி இருக்கிறது, அனந்த குணங்களின் சமூகமாக எப்படி இருக்கிறதோ அப்படியே எப்போதும் இருக்கும் சக்தி இருக்கிறது, அந்த சக்தியையே அகுருலகுத்வ குணம் என்று சொல்கிறோம்.

அகுருலகு=அகுரு+அலகு. அ என்றால் இல்லை, **குரு** என்றால் பெரியது, **லகு** என்றால் சிறியது. இந்த சக்தி திரவியத்தை பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ ஆக விடுவதில்லை, எப்போதும் அப்படியே இருக்கச்செய்யும் அப்படிப்பட்ட சக்தி இது என்று புரிந்து கொண்டோம். ஆனால் எந்த ஆதாரத்தில் நாம் அப்படி நம்புகிறோம்? என்று நீங்கள் கேட்கலாம். இதுவரை கடிதங்களின் மூலம் எந்த சித்தாந்தத்தை நாம் படித்தோமோ, அதன் மூலமே நாம் இதை நிரூபணம் செய்யலாம். நான் எழுதிய குணங்களின் ஸ்வரூபம் என்ற ஏழாம் கடிதத்தை மீண்டும் ஒருமுறை எடுத்துப் படியுங்கள். அதில் ஒவ்வொரு திரவியத்தின் ஸ்வசதுஷ்டயம்-தன்நான்மை அதாவது ஸ்வதிரவ்யம், ஸ்வஷேத்ரம், ஸ்வகாலம், மற்றும் ஸ்வபாவம் இருக்கிறதே அதைப்பற்றி சர்ச்சையை அதில் செய்திருக்கிறோம்.

ஒவ்வொரு திரவியத்திறகும் அதன் சொந்த திரவியம் அதன் ஸ்வதிரவ்யமாகும், அந்த திரவியத்தின் விஸ்தீரணம் அதன் ஸ்வஷேத்ரமாகும், அந்த திரவியத்தின் பரிணாமம் அதன் ஸ்வகாலம் ஆகும், மற்றும் அதன் அனந்த குணம் அதன் ஸ்வபாவமாகும். பாவம் என்றால் குணம். இதை நாம் ஒரு உதாரணம் மூலம் பார்க்கலாம். A மற்றும் B என்று இரண்டு திரவியங்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். A ஒரு கண்ணாடி டம்பிளர் மற்றும் B தண்ணீர் என்று வைத்துக் கொள்வோம். A திரவியத்தின் சொந்த ஸ்வசதுஷ்டயம் Aவில் இருக்கிறது அதேபோல B திரவியத்தில் கூட அதன் சொந்த ஸ்வசதுஷ்டயம் Bயிலேயே இருக்கிறது. ஆனால் A திரவியத்தின் சதுஷ்டயத்திலிருந்து பார்த்தால் B திரவியத்தின் சதுஷ்டயம் பரசதுஷ்டயமாகும் அதாவது பரதிரவ்யம், பரஷேத்ரம், பரகாலம் மற்றும் பரபாவம் ஆகும். ஒரு திரவியத்தின் ஸ்வசதுஷ்டயம் பரசதுஷ்டயத்தில் நுழையவே முடியாது. அவைகளில் ஒன்று மற்றொன்றில் இல்லாமை-அபாவம் இருக்கிறது, இல்லை-நாஸ்தி இருக்கிறது. ஆகையால் A திரவியம் B திரவிய வடிவமாக ஆக முடியாது மற்றும் ஒரு திரவியம் வேறு திரவியத்தின் காரியத்தை செய்ய முடியாது.

A திரவியம்-கண்ணாடி டம்பிளர்:

- கண்ணாடியின் ஸ்வதிரவியம் கண்ணாடியில்
- கண்ணாடியின் ஸ்வஷேத்ரம் கண்ணாடியில்
- கண்ணாடியின் ஸ்வகாலம் கண்ணாடியில்
- கண்ணாடியின் ஸ்வபாவம் கண்ணாடியில்

B திரவியம்-தண்ணீர்:

- தண்ணீரின் ஸ்வதிரவியம் தண்ணீரில்
- தண்ணீரின் ஸ்வஷேத்ரம் தண்ணீரில்

- தண்ணீரின் ஸ்வகாலம் தண்ணீரில்
- தண்ணீரின் ஸ்வபாவம் தண்ணீரில்

ஒவ்வொரு திரவியத்தின் ஸ்வசதுஷ்டயம் அதாவது திரவியம், ஷேத்ரம், காலம், மற்றும் பாவம் வேறு வேறு ஆனதால் ஒரு திரவியம் வேறு திரவிய வடிவமாக ஆக முடியாது. இது அகுருலகுத்துவ குணத்தின் வரையறையின் முதல் பகுதி நிரூபணம் ஆகிவிட்டது. இப்போது இரண்டாம் பகுதியான ஒரு குணம் வேறு குணவடிவமாக ஆகாது என்பதை நிரூபணம் செய்யலாம். இப்போது கேள்வி இரண்டு திரவியங்களுக்கு இடையில் இல்லை, ஒரே திரவியத்தின் இரண்டு குணங்களை பற்றியதாகும். குணம் என்றால் பாவம். ஒரு திரவியத்தின் இரண்டு குணங்களின் திரவியமும் ஒன்றாகும், ஷேத்ரம் ஒன்றாகும், காலம் ஒன்றாகும் ஆனால் பாவம் வேறு வேறானதால் ஒரு குணம் வேறு குணவடிவம் ஆகாது. புத்கல திரவியத்தின் நிற மற்றும் சுவை ஆகிய இரண்டு குணங்களை மாங்காய் உதாரணம் மூலம் சர்ச்சை செய்து தெரிந்து கொள்ளலாம். மாங்காயின் நிறம் பச்சை, சுவை புளிப்பு இந்த இரண்டு குணங்களை பற்றி பார்க்கலாம்.

எந்த திரவியம் மாங்காய்யினுடையதோ அந்த திரவியமே நிற குணத்தினுடையதுமாகும். மற்றும் அதே திரவியம் சுவை குணத்தினுடையதுமாகும். எந்த ஷேத்ரம் மாங்காய்யினுடையதோ அதே ஷேத்ரமே வர்ண குணத்தினுடையதுமாகும் மற்றும் அதே ஷேத்ரம் சுவை குணத்தினுடையதுமாகும். அதன் பரிணாம காலம் மாங்கய்யினுடையதாகும். அந்த காலமே நிற குணத்தின் காலமுமாகும் மற்றும் அந்த காலமே சுவை குணத்தின் காலமுமாகும். ஆனால் பாவம் அதாவது நிறகுணம் பச்சை மற்றும் சுவைகுணம் புளிப்பு அதாவது அவை வேறு, வேறு, தனித்தனி அதாவது சுதந்திரமானதாகும். இந்த காரணத்தால் ஒரு குணம் வேறு குணவடிவமாகாது. ஒரு குணம் வேறு குணத்தின் காரியத்தை செய்வதில்லை.

உயிரின் ஸ்ரத்தை-நம்பிக்கை குணம் ஞான குணமாக அல்லது சாரித்ர-ஒழுக்க குணமாக ஆவதில்லை. ஸ்ரத்தை சம்யக்-நல்லதாக ஆன பிறகுகூட சாரித்ரத்தில்-ஒழுக்கத்தில் படிப்படியான ஏற்றமே காணப்படுகிறது. அது எவ்வாறு இருக்கிறது என்று பார்க்கலாம். நற்காட்சி அதாவது தன்னை தான் அறிந்த பிறகே நம்பிக்கை, அறிவு, ஒழுக்கம் முதலிய எல்லா குணங்களும் நல்லவைகளாக-சம்யக்காக ஆகின்றன. அதாவது அவைகளின் எதிர்மறையான நிலை, கெட்டநிலை, மூடநிலை அழிந்து விடுகிறது. ஆத்மாவை அனுபவித்தல்-ஆன்மா தான் நான் என்ற நம்பிக்கை, ஆத்மாவை-தன்னை பற்றிய அறிவு, ஆத்மாவில்-தன்னில் நிலைக்கும் தன்மை நிகழ்கிறது. அப்படி ஆன பிறகுகூட நம் ஆத்மாவில் நிலைக்கும் தன்மை மிகக் குறைந்த கால அளவே நீடிக்கிறது, அதாவது சாரித்ரம் முழுமை அடையவில்லை. ஆத்மாவில் நிலைக்கும் தன்மை படிப்படியாக முன்னேறி அது மேலும் மேலும் அதிகமாக அதிகமாக, ஒரு நிலையில் உயிரின் உபயோகம்-attention அதாவது அதன் எண்ணம்-concentration முழுவதும் நீண்டநேரம் ஆத்மாவிலேயே-தன்னிலேயே ஆழ்ந்து விடுகிறது, இதை யதாக்யாத சாரித்ரம் என்று சொல்கின்றனர். இந்த நிலையில் முழுமையான வீதராகத் தன்மை-விருப்பு வெறுப்பு அற்ற சமதாபாவ நிலை உண்டாகிறது. அந்த நிலையில் இதுவரை குறைந்த அபிவிருத்தி அடைந்திருந்த அறிவுகூட முழு அபிவிருத்தி அடைந்து விடுகிறது அதாவது அனந்த ஞானமாக-கேவல ஞானமாக வெளிப்பட்டு விடுகிறது.

அகுருலகுத்துவ குணத்தின் மூன்றாவது பரிபாஷையான திரவியத்தில் இருக்கும் அனந்த குணங்கள் பிரிந்து தனித்தனியாக ஆவதில்லை என்பதை இப்போது நீங்கள் சீக்கிரமாக அறிந்து கொள்வீர்கள். ஒரு குறிப்பிட்ட திரவியத்தின் மற்றும் அதன் அனந்த குணங்களின்

ஸ்வதிரவ்யம் மற்றும் ஸ்வஷேத்ரம் ஒன்றேயாகும். அதாவது எந்த ஸ்வதிரவியம் அந்த திரவியத்தினுடையதோ, அந்த ஸ்வதிரவியமே அதன் அனந்த குணங்களினுடையதுமாகும். எந்த ஸ்வஷேத்ரம் அந்த திரவியத்தினுடையதோ, அந்த ஸ்வஷேத்ரமே அதன் அந்த குணங்களினுடையது. அனந்த குணங்களில் ஒவ்வொரு குணத்தின் திரவியமும்கூட அதுவேயாகும், மற்றும் ஷேத்ரம் கூட அதுவேயாகும். ஆகையால் எல்லா அனந்த குணங்களும் அதன் ஸ்வதிரவியத்தையும், ஸ்வஷேத்ரத்தையும் விட்டுப் வெளியே போகமுடியாது. வேறு திரவியத்தில் அதாவது பரதிரவிய, பரஷேத்ர, பரகால, பரபாவத்தில் நுழைய முடியாது. உதாரணமாக, குருவின் அறிவு மாணவனின் அறிவில் நுழைய முடியாது.

ஒரு திரவியம் வேறு திரவியத்திற்கு எதுவும் செய்ய முடியாத காரணம் அகுருலகுத்துவ குணத்தினாலாகும். பிரபஞ்சத்தில் எவ்வளவு திரவியங்கள் இருக்கின்றதோ அவை அனைத்தும் எப்போதும் அப்படியே இருக்கின்றன, குறைவாகவோ, அதிகமாகவோ ஆகாமலிருக்கக் காரணம் கூட அகுருலகுத்துவ குணமாகும். சம்யக்தர்சனம் வந்துவிட்டது, ஆனால் ஏன் இன்னும் முனியாகவில்லை? நல்லொழுக்கம் ஏன் ஏற்கப்படவில்லை? இதற்கெல்லாம் காரணமும் அகுருலகுத்வ குணமேயாகும்.

பிரபஞ்சத்தில் உள்ள அனந்த திரவியங்களில் ஒவ்வொரு திரவியமும் சுதந்திரமானதாகும். ஒவ்வொரு திரவியத்தின் அனந்த குணங்களில் ஒவ்வொரு குணமும் சுதந்திரமானதாகும். ஒவ்வொரு குணத்தின் அனந்த பர்யாயங்களில் ஒவ்வொரு பர்யாயமும் சுதந்திரமானதாகும். நாம் சுதந்திரம் அடைய எதுவும் செய்ய வேண்டியதில்லை, நாம் சுதந்திரமாகத்தான் இருக்கிறோம் என்று தெரிந்து கொண்டாலே போதும். நாம் வேறொன்றின் பிடியில் இருப்பதாக தவறாக எண்ணம் கொண்டுதான் துக்கமடைகிறோம், ஆகையால் நம் மூடநம்பிக்கையைத் தான் சரி செய்ய வேண்டும். பொருளின் அமைப்பு எப்படி இருக்கிறதோ அப்படியே நம்பிக்கை வைப்பதால், நாம் சுகமடைகிறோம்; ஆனால் நமது தவறான நம்பிக்கை எப்படியோ அப்படியே வஸ்த்து அதாவது திரவியம் இருக்க வேண்டும் என்று நாம் வீணான முயற்சி செய்வதால் துக்கத்தையே அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறு சுதந்திரத்தை பற்றி அறிவு புகட்டுவதின் மூலம், மக்கள் உணர்ச்சி வசப்பட்டவர்களாக-மனக்கிளர்ச்சி அடைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள் என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். அவர்களுடைய இந்த குற்றச்சாட்டு-பயம் ஆதாரமற்றதாகும். பரசதுஷ்டயத்தில் நான் பிரவேசிக்கவே முடியாது மற்றும் அதில் நான் எதுவுமே செய்ய முடியாது என்று தெரிந்ததும், நம் பார்வை ஸ்வசதுஷ்டயத்தின் மேல்-தன்மேல் கவனம் செல்லும், ஸ்ரத்தை ஸ்வ-வை அதாவது தன்னை பிடித்துக் கொள்ளும், ஞானமும் ஸ்வ அதாவது தன்னை அறியும், மற்றும் சாரித்ரமும் ஸ்வ-வில் அதாவது தன்னில் ஆழும். இதுவே நம்முடைய குறிக்கோளாகும்.

இந்த பிரபஞ்சத்தில் அனந்த ஜீவ திரவியங்கள், அனந்தானந்த புத்கல திரவியங்கள், தர்ம, அதர்ம, ஆகாச மற்றும் கால திரவியங்கள் அனாதி காலமாக ஏகஷேத்ராவகாஹ சம்பந்தத்தால் ஒன்றாக இருந்து கொண்டு வருகின்றன. ஆனாலும்கூட ஒவ்வொரு திரவியமும் அதனதன் ஸ்வரூபத்தில் நீண்ட காலமாக நீடித்து இருக்கின்றன. ஒரு உயிர் வேறு உயிராக ஆகவில்லை அல்லது உயிர் புத்கலமாக ஆகவில்லை. உயிரின் குணம் புத்கலத்திற்கு செல்லவில்லை மற்றும் புத்கலத்தின் குணம் உயிரில் வந்து கலந்து விடவில்லை. ஞானம், தர்சனம், சாரித்ரம், சுகம், வீர்யம் முதலான உயிரின் அதாவது ஆத்மாவின் குணங்கள். ஸ்பர்சம், சுவை, வாசனை, நிறம் முதலியன உடலின் அதாவது புத்கலத்தின் குணங்கள். கடந்த ஐம்பது வருடங்களாக எனக்கும் இந்த உடலுக்கும் சம்பந்தம் இருக்கிறது. ஒரே இடத்தில் இரண்டும் ஒன்றாக இருந்தும் கூட இந்த உடல் அறிவு

பெறவில்லை, அறியும் சக்தியை அடையவில்லை என்னுள் ஸ்பர்ச, சுவை, மணம், நிறம் முதலியன நுழைய முடியவில்லை. மனிதர் உயிரோடு இருக்கும் நிலையில் கூட அறியும் செயலை உயிரே செய்கிறது, உடல் ஜடம், அசேதனம், உணர்வற்ற ப்ரேதம் போலவே இருக்கிறது. மனிதர் இறந்த பிறகு அந்த உடல் அறிவற்றது என்பதை நேரடியாக காண்கிறோம், உணர்கிறோம், ஆனால் உயிருடன் இருக்கும் நிலையிலும் உடலில் அறிவு இல்லை என்பதை எடுத்துக் கூறினாலும்கூட அனேகமாக பலரால் அதை ஏற்றுக்கொள்ள மனம் வருவதில்லை. உடலே உயிர்-என் உடலே நான் என்ற அனாதிகால மூடநம்பிக்கையே இதற்கு காரணமாகும்.

அகுருலகுத்வ குணத்தின் காரணத்தால் திரவியம் அந்த திரவியமாகவே எப்போதும் இருக்கிறது என்று பார்த்தோம். ஒரு திரவியம் வேறு திரவியமாக ஆக முடியாது என்பதையும் நாம் தெரிந்து கொண்டோம். அதுபோல திரவியம் குணமாகவும் ஆவதில்லை மற்றும் பர்யாயமாகவும் ஆவதில்லை என்பதையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். திரவியம் மற்றும் குணங்களின் இயல்பை பார்த்தபோது நாம் கற்றுக்கொண்டது என்னவென்றால் திரவியம் தனித்துவமானது-unique, பிரிக்க முடியாதது-indivisible, ஒட்டுமொத்தமானது-monolithic, நிலையானது-stable என்றும்; குணம் பலவாகவும்-infinite, வேவ்வேறாகவும்-separate-டாகவும் இருக்கிறது என்றும் பார்த்தோம். திரவியத்தின் இயல்பை தெரிந்து கொள்ளவே அதன் பல்வேறான குணங்களை நம் அறிவில் பிரித்துப் பார்த்து அறிந்து கொண்டோம், ஆனால் உண்மையில் திரவியம் துண்டுபண்ண முடியாத ஒட்டுமொத்தமான, தனித் தன்மையானதாகவே இருக்கிறது.

எப்படி பாரதம் என்பது ஒரு தேசம், அதில் தமிழ்நாடு, கர்நாடகம், மஹாராஷ்டிரா, குஜராத், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் முதலான மாநிலங்கள் இருப்பது போல எனலாம். பாரதத்தின் ஸ்வரூபத்தை-பரப்பை காட்ட அதை பிரித்து காட்டி தெரியவைக்கப்படுகிறது. ஆனால் பாரதம் ஒரு தேசம் என்று சொல்லும்போது மாநிலங்கள் இருப்பது நம் எண்ணத்தில் வருவதில்லை-நம் பார்வைக்கு வருவதில்லை-கௌணமாகிப் போகிறது. மாநிலங்கள் இருந்தாலும் பாரதம் என்று சொன்னதுமே அதை பல மாநிலங்களாக பார்க்கும் பார்வை மறந்து அதை ஒரு முழு நாடாக பார்க்கிறோம். ஆத்மானுபவத்திற்காக் கூட இந்த விதியைத்தான் கடைபிடிக்க வேண்டும். திரவியத்தை-ஆத்மாவை தெரிந்து கொள்ள அதன் குணங்களும் மற்றும் அதன் பர்யாயங்களும் விரிவாக சொல்லப்படுகிறது. ஆனால் எப்போது அபேத, அகண்ட, நித்ய பொருளான நான் ஒரு அறிவுடைய நிலையான பொருள் என்ற நோக்கில் அதாவது நம்பிக்கையில் பார்க்கும்போது குணம் மற்றும் பர்யாயம் முதலிய பிரிவுகள் கௌணமாகிப் போகின்றன, நம் அறிவில் அவை இல்லாமல் போகின்றன, நம் பார்வைக்கு அவைகள் வருவதில்லை. குணம் மற்றும் பர்யாயங்கள் என்று பிரித்து சொல்லுதலை சாஸ்திரத்தில் வியவஹாரம் என்ற பெயர்ச்சொல்லால் சொல்கின்றனர். முழு ஆத்மாவை பற்றி சொல்லும்போது பிரிவுகள் கௌணமாகி விடுகின்றன, இல்லாமல் போகின்றன, நம் பார்வைக்கு வருவதில்லை ஆகையால் வியவஹாரத்தை **அபூதார்த்தம்** அதாவது **இல்லை** என்று சொல்கின்றனர். எல்லா வியவஹாரங்களும் அபூதார்த்தம்-இல்லை-பொய் என்று சொல்வது சாஸ்திரத்தில் சொல்லப்படும் வழிமுறை என்று புரிந்து கொள்ள வேண்டும்.

திரவியம் குண வடிவமாவதில்லை அதேபோல திரவியம் பர்யாய வடிவமாகவும் ஆவதில்லை. இல்லையெனில் பர்யாயம் ஒரு சமயம் மட்டுமே இருந்து அழிவது போல திரவியமும் அழிகிறது என்ற சூழ்நிலை வந்துவிடும். திரவியம் அனாதிஅனந்தமானது, நிலையானது, முழுமையானது, எப்போதும் இருப்பது ஆனால் பர்யாயம் ஒவ்வொரு சமயமும் புதிது புதிதாக தோன்றுவது, தோற்றம் அழிவும் உடையது, ஒரு சமயம் மட்டுமே இருப்பது. திரவியம்

முக்காலத்திலும் திரவியமாகவே இருக்கிறது என்று ஏன் சொல்கிறோம் என்று சொல்வதன் பொருளை நீங்கள் இப்போது அறிந்து கொண்டிருப்பீர்கள். திரவியத்தில் கொஞ்சம் அதிகமாவதோ அல்லது குறைவதோ இல்லை, குணங்களும் குறைவதோ கூடுவதோ இல்லை, ஆனால் குணங்களை வளர்ச்சியடைய செய்யுங்கள், பிறரின் நல்ல குணங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று ஏன் சொல்லப்படுகிறது? என்று நீங்கள் கேட்கலாம். அரே! அது உபசாரமாக சொல்லப்படுவதாகும். திரவியத்தில் மற்றும் குணங்களில் கூடுதல் குறைதல் அல்லது சரிவு அல்லது அழிவு நிகழ்வதில்லை ஆனால் பர்யாயத்தின் சக்தியில் கூடுதல், குறைதல் நிகழ்கிறது. எவ்வாறெனில் சூட்சம உயிர்களின் அறிவு மிகக்குறைந்த அளவே பர்யாயத்தில் வெளிப்படுகிறது ஆனால் அரஹந்தர், சித்தர்களுக்கு அனந்த ஞானம் அதாவது மிக உயர்த்த கேவலஞானம் வெளிப்படுகிறது எனினும் ஞான குண நோக்கில் பார்க்கும் போது எல்லா உயிர்களின் ஞான குணம் சாமான சக்தி கொண்டதாகவே இருக்கிறது. குணங்களை வளர்ச்சி அடையச் செய்யுங்கள் என்று சொல்லும்போது குணத்தில் எவ்வளவு சக்தி இருக்கிறதோ அது முழுவதையும் பர்யாயத்தில் வெளிப்படுத்துங்கள்-கொண்டு வாருங்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். பிறரின் நல்ல குணங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லும்போது எதிரில் உள்ள உயிர் பர்யாயத்தில் எவ்வளவு வெளிப்படுத்தியிருக்கிறதோ அதேபோன்ற சக்தி உன்னிடமும் கூட இருக்கிறது அதை உன் பர்யாயத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று சொல்வதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

குருவின் ஞான குணத்தை என்னவோ சிஷ்யன் எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் சிஷ்யன் அவனுடைய ஞான குணத்தை அபிவிருத்தி செய்து அதை வெளிப்படுத்தும்போது சிஷ்யன் குருவிடமிருந்து அறிவை பெற்றான் என்று உபசாரமாக சொல்லப் படுகிறது. அகுருலகுத்துவ குணத்தை தெரிந்து கொண்டதால் நமக்கு கிடைத்த முக்கிய லாபங்களாவன:

1. ஒரு திரவியம் வேறு திரவியமாக ஆவதில்லை என்ற காரணத்தால் பிரபஞ்சத்தில் அனந்த திரவியங்களின் இருப்பு மற்றும் அவைகளின் எண்ணிக்கை எப்போதும் அப்படியே இருக்கிறது என்று தெரிந்து கொண்டோம்.

2. பிரபஞ்சத்தில் ஆறு திரவியங்கள் ஒரே இடத்தில் இருந்தாலும்கூட ஒவ்வொரு திரவியமும் அதனதன் குண தர்மத்துடனேயே எப்போதும் இருக்கிறது என்று தெரிந்து கொண்டோம்.

3. உயிரும் உடலும் ஒன்றாக இருந்தாலும் கூட உயிர் சுதந்திரமாக இருக்கிறது, புத்கலத்தாலான உடல் சுதந்திரமாக இருக்கிறது. அவைகளின் இடையில் திரவியம், குணம் அல்லது பர்யாயம் ஆகிய எந்த நோக்கிலும் ஒன்று மற்றொன்றில் பிரவேசிக்க முடியாது மற்றும் ஒன்றின் வேலையை மற்றவை செய்ய முடியாது என்பதை தெரிந்து கொண்டோம்.

4. ஒரு குணம் வேறு குணமாக ஆவதில்லை என்பதை தெரிந்து கொண்டதால் சிரத்தை-நம்பிக்கை குணம் முதலில் முழுத்தூய்மை அடைகிறது ஆனால் சாரித்ர-ஒழுக்க குணம் சுத்தமாதல் படிப்படியாக நிகழ்கிறது என்பது தெரிய வருகிறது.

5. அனந்த குணங்கள் பிரிந்து தனித்தனியாக ஆவதில்லை. அதனால் எங்கு திரவியத்தின் ஒரு குணம் இருக்கிறது என்று உறுதி செய்கிறோமோ அங்கேயே அந்த திரவியத்தின் அனந்த குணங்களும் இருக்கின்றன என்பது தெரியவருகிறது. உயிரின் ஞான குணம் நம் எண்ணத்தில் வரும்போது உயிரின் அனந்த குணங்களும் அங்கேயே இருக்கின்றன

என்பதையும் தெரிந்து கொண்டோம். அகுருலகுத்துவ குணத்தை வர்ணிக்கும் ஒரு வசனத்தை பார்ப்போம்.

யஹ் குண் அகுருலகுத்வ பீ சதா ரக்தா மஹத்தா ஹை மஹா,
குண திரவ்ய கோ பரரூப் யஹ் ஹோனே ந தேதா ஹை அஹா |
நிஜ குண பர்யாய ஸ்ர்வ ஹீ ரஹ்தே சதத நிஜ பாவ மே,
கர்த்தா ந ஹர்தா அன்ய கோயீ யோ லகோ ஸ்வ-ஸ்வபாவ் மே ||

அடுத்த கடிதத்தில் பிரதேசத்வ குணம் பற்றி சர்ச்சை செய்து தெரிந்து கொள்ளலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-15 08-03-1995

பிரதேசத்வ குணம்

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கடிதங்களை வாசிப்பதால் உங்களுக்கு ஜின தர்மத்தின் மீது ஆர்வம் அதிகரித்து வருகிறது என்பது ஒரு நல்ல விஷயம் தான். உண்மை என்னவென்றால் நீங்களே வாசிப்பதைவிட பிரவசனம் கேட்டல், ஆன்மீக விவாதங்களில் பங்கு கொள்ளுதல் மேலும் அதிக பயனுடையதாக இருக்கும். அப்படி ஒரு வாய்ப்புகூட உங்களுக்கு சீக்கிரமாகவே கிடைக்க விருக்கிறது. முடிந்தால், இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுங்கள். பூனாவில் ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை நாங்கள் இருவரும்-நானும் உன் அப்பாவும் பிரவசனம் செய்யவிருக்கிறோம். அப்போது தினமும் ஆறு மணி நேரம் ஸ்வாத்யாயம் நிகழும். அதேபோல இந்த வருடம் தேவலாலீயில்-நாசிக்கில் மே மாதம் 15 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை தத்துவ போதனை மற்றும் பயிற்சி முகாம் நடக்கவிருக்கிறது. அதில் 8-10 மணி நேரம் பல்வேறு விஷயங்கள் பற்றி பிரவசனம், வகுப்புகள், செய்முறை விளக்கங்கள் முதலிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற விஷயங்கள் உங்களுக்கு தெரிந்ததுதான்.

பொது குணங்கள் பற்றி சர்ச்சையில் பிரபஞ்சத்தில் உள்ள ஆறு திரவியங்களின் ஸ்வரூபம் பற்றி கொஞ்சம் அறிவு பெற்றோம். இன்று நாம் பார்ககப்போவது **பிரதேசத்வ குணம்** பற்றியதாகும். இந்த குணத்தின் சொற்பொருள் விளக்கம்-பரிபாஷை இவ்வாறு இருக்கிறது: **எந்த சக்தியின் காரணத்தால் திரவியத்திற்கு ஏதாவது ஒரு வடிவம் இருக்கிறதோ அந்த சக்தியை பிரதேசத்வ குணம்** என்று சொல்கின்றனர்.

உலகில் ஆறு திரவியங்கள் இருக்கின்றன, அவைகளில் புத்கல திரவியத்திற்கு மட்டுமே வடிவம் இருக்கிறது, மற்ற ஐந்து திரவியங்களுக்கு வடிவம்-ஆகாரம் இருந்தாலும் அவை அருவமாக இருக்கின்றன. உருவமுடைய திரவியத்தின்-புத்கலத்தாலான பொருள்களின் வடிவம் என்னவோ நமக்கு தெரிகிறது ஆனால் அரூபி திரவியத்தின் வடிவம் நம் புலன்களால் அறியப்படாததால் அது பற்றி நமக்கு சந்தேகம் எழுகிறது. திரவியத்தின் வடிவம் என்றால் அந்த திரவியத்தின் விஸ்தீரணம் அதாவது திரவியம் எடுத்துக்கொள்ளும் இடம், அந்த திரவியத்தின் நீள, அகல, உயர பரிமாணமாகும். உருவமுடைய திரவியத்தின் வடிவம் நம்மால் காணக்கூடிய உருவமாக இருக்கிறது, அருவ திரவியத்தின் வடிவம் நம்மால் காண முடியாததாக இருக்கிறது. ஒவ்வொரு திரவியத்தின் வடிவம் அதன் சுய பிரதேசத்வ குணத்தின் காரணத்தாலாகும், வேறு திரவியத்தின் காரணத்தால் அல்ல. எந்த திரவியமும் அல்லது எந்த ஒரு உயிரும் பிற பொருளின் வடிவத்தை செய்வதில்லை.

பலவிதமான மரங்கள் மற்றும் தாவரங்களையும், பல வடிவங்களிலான இலைகள், பூக்களையும், மாறுபட்ட வடிவங்களை உடைய மிருகங்கள் பறவைகளையும் நாம் பார்க்கிறோம். இவைகளின் வடிவத்தை யார் செய்தார்கள்? தாமரை மலரின் வடிவத்தை செய்தது யார்? அதிலேயே அந்த வடிவத்தை அடையும் சக்தி இருக்கிறது. யாருக்கு பிரதேசத்வ குணம் பற்றி தெரியவில்லையோ அவர் யாரோ ஒரு கடவுள் தான் இந்த வடிவத்தை உருவாக்கியவர் என்றும், அந்த கடவுள்தான் இந்த எல்லா பொருள்களுக்கும் வடிவத்தை கொடுக்கிறார் என்றும் நம்புகின்றனர். கடவுள் மற்றும் திரவியத்தின் இயல்பு பற்றி அவர்கள் அறியாததால் அவர்களுக்கு அப்படிப்பட்ட தவறாக யூகங்கள் ஏற்படுகின்றன.

அழகாக எழுதுவதும், பெரிதும் சிறிதுமாக கிருக்கலாக எழுதுவதும், மை-ink யின் பிரதேசத்வ குணத்தாலாகும். ஆனால் நாம் அழகாக எழுதியதாக நினைக்கிறோம். பல வண்ணப் பொருள்களிலிருந்து அழகிய மலரை செய்வது நம்முடைய திறைமை என்று நினைக்கிறோம். ஆனால் வண்ணப் பொருள்களின் பிரதேசத்வ குணமே இதற்கு காரணமாகும். நான் என்னுடைய செல்வத்தால் இவ்வளவு பெரிய அழகிய மாளிகையை கட்டினேன் என்று ஒரு செல்வந்தர் சொல்கிறார், ஆனால் செங்கல் சிமெண்ட்டினால் ஆன அந்த கட்டிடம் புத்கலத்தின் பிரதேசத்வ குணத்தின் காரியமாகும். அதே சமயம் அந்த வீடு அழகாக அமையவில்லை என்றால் அதற்கு வேலைக்காரரின் மேல் குற்றம் சொல்கிறார், அந்த வேலைக்காரரோ வீடு கட்ட கொடுக்கப்பட்ட பொருளின்மேல் குற்றம் சொல்கிறார்.

ஒரு சொம்பில் தண்ணீர் வைத்தால் அந்த தண்ணீர் சொம்பின் வடிவத்தை ஏற்கிறது, அந்த வடிவத்திற்கு தண்ணீரின் பிரதேசத்வ குணம் காரணமாகும், சொம்பின் வடிவம் காரணமல்ல. சொம்பால் தான் அந்த வடிவம் வந்ததென்றால் அந்த சொம்பில் ஒரு கல்லை வைத்து பாருங்கள், இப்போது அந்த கல் சொம்பின் வடிவமாகவா ஆகிறதா இல்லையா? என்று பாருங்கள். நான் ரொட்டி மாவை வட்டமாக வாட்டுகிறேன் என்று நினைக்கிறோம், அந்த கோதுமை மாவின் வடிவத்தை யார் செய்தது? கோதுமையின்-தானியத்தின் வடிவத்தை யார் செய்தது? இயற்கையின் முறைமையால் அதாவது அந்த தானியத்தின் பிரதேசத்வ குணத்தால் அது கோதுமை வடிவம் ஆனது. அதேபோல ரொட்டியும் அதன் பிரதேசத்வ குணத்தால் வட்டமாக ஆனது.

குயவன் பானை செய்தார் என்று நாம் சொல்கிறோம், ஆனால் பானையின் வடிவம் என்னவோ களிமண்ணின் பிரதேசத்வ குணத்தின் காரியமாகும். தட்டான் தான் தங்கத்தால் நெக்லஸ் செய்தேன் என்று சொல்கிறார். ஆனால் நெக்லஸின் வேலைப்பாடு-டிசைன்-வடிவம் தங்கத்தின் பிரதேசத்வ குணத்தின் செயலாகும். ஒரு பெண்மணி தன் குழந்தை தன்னைப்போல சிகப்பாக அழகாக இருப்பதாக பெருமை படுகிறார், என் அழகின் காரணத்தால் தான் குழந்தை அழகாக பிறந்திருக்கிறது என்று நினைக்கிறார். ஆனால் உண்மையில் உடலின் வடிவம் புத்கலத்தினுடைய பிரதேசத்வ குணத்தின் காரியமாகும்.

யானை ஒரு உயிர். அதன் உடலின் வடிவம் புத்கலத்தின்-நோகர்மத்தின் பிரதேசத்வ குணத்தால் ஆகிறது மற்றும் அதில் இருக்கும் உயிரின் அதே மாதிரியான வடிவம் உயிரின் பிரதேசத்வ குணத்தால் ஆகிறது. அங்கு அந்த புத்கலத்தால் ஆன உடலை, உயிரின் அந்த வடிவத்திற்கு நிமித்தம் என்று சொல்லப்படுகிறது. சித்த பகவானுக்கு புத்கலத்தால் ஆன உடல் இல்லை ஆகையால் உடலின் நிமித்தத்தால் ஆகும் வடிவமும் அவருக்கு இல்லை ஆகையால் சித்திரை நிராகார்-வடிவமற்றவர் என்று சொல்கிறோம். ஆனாலும் சித்தருக்கும் வடிவம் அவசியமாகும் ஏனென்றால் அவர் ஒரு உயிர் பொருள். எல்லா பொருளுக்கும் பிரதேசத்வ குணம் உண்டு, எனவே சித்த பகவானுக்கும் வடிவம் உண்டு.

ஒவ்வொரு குணமும் சுயமாகவே அதனதன் பிரயோஜனமான செயலை செய்கிறது-(வஸ்துத்வ குணம்) மற்றும் அந்த செயல் இடைவிடாது நடந்து கொண்டிருக்கிறது-(திரவ்யத்வ குணம்) என்று முன்னரே நாம் பார்த்தோம். ஆகையால் பிரதேசத்வ குணத்தின் திரவியத்தின் வடிவ காரியம் அதன் சுய காரணத்தால் இடைவிடாது நடந்து கொண்டு இருக்கிறது. வடிவம் என்பது பிரதேசத்வ குணத்தின் பர்யாயம். அது ஒவ்வொரு சமயமும் உற்பத்தி-மறைவு வடிவில் மாறிக்கொண்டே இருக்கிறது அதாவது ஒவ்வொரு சமயமும் புதுப்புது வடிவம் வந்து கொண்டே இருக்கிறது. பர்யாயம் அதாவது இந்த வடிவம் எப்படி இருந்ததோ அப்படியே இருக்க முடியும் அல்லது வேறாகக்கூட இருக்க முடியும்.

அம்மா வீட்டுக்கு வரும்போது எத்தனை வருடங்களாக இந்த மரச்சாமான்கள்-சோபா, நாற்காலி, மேஜை முதலியன எப்படி இருந்ததோ அப்படியே இருக்கிறது, தினம் தினம் இவை பழமை அடைந்து வருகின்றன, உங்களுக்கு சலிப்பு ஏற்படவில்லையா? அப்பாவிடம் கூறி இவைகளை எல்லாம் மாற்றி விடுங்கள் என்று சொல்கிறீர்கள். நம் விருப்பம் தினமும் புதிது புதிதாக தோன்றி நமக்கு துன்பம் உண்டாக காரணமாக இருக்கிறது. இங்கு மரசாமான்களை மாற்றுவது அவசியமில்லை ஆனால் நம் பார்வையை மாற்றுவது தான் அவசியமாகும். மரசாமன்களின் வடிவம் அதன் பிரதேசத்வ குணத்தின் காரணத்தால் ஒவ்வொரு சமயமும் புதிது புதிதாகத்தான் ஆகிக்கொண்டிருக்கிறது, அதன் வேறு குணங்களில்கூட அதன் மாற்றமடையும் பர்யாயம் ஒவ்வொரு சமயமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சரியான நோக்கில் பார்க்கும்போது ஒவ்வொரு சமயமும் புதுவடிவம் அடைந்து கொண்டுதான் இருக்கிறது. நாம் பிற திரவியங்களின் மற்றும் அதன் குணங்களின் காரியம் அதாவது பர்யாயம் நம் இச்சைக்கு உகந்தார்போல் மாற வேண்டும் என்று விரும்புகிறோம், ஆனால் வஸ்த்துக்களின் இயல்பு Nature of the substance அப்படி இல்லையாகையால், நாம் துக்கமடைகிறோம். நம் காரியம் என்னவோ நம் திரவியத்தில், நம் குணத்தில் தான் நிகழ்கிறது. அறிதலும், நம்புதலும்தான் நமது காரியம், ஆகையால் வஸ்த்துவின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறதோ அப்படியே அறிந்து அப்படியே நம்பினால், நம் சுக குணத்தின் துக்க வடிவ பர்யாயம் மாறி சுக வடிவ பர்யாயமாகும் அதாவது நாம் சுகமடைவோம்.

உயிரின் வடிவம் சிறிது-பெரிதாக ஆனாலும் அதாவது அது சுருங்கினாலும், விரிந்தாலும் உயிரின் அசங்யாத பிரதேசம் எப்போதும் அப்படியே இருக்கிறது. உதாரணமாக, அதிக பருத்தியை-பஞ்சியை ஒரு சிறிய தலையணையில் அடைத்து வைக்க முடிகிறது அல்லது பெரிய கடற்பஞ்சை-sponge ஐ கை முஷ்டியில் அழுத்தி பிடிக்க முடிகிறது. அதாவது பருத்தியோ, ஸ்பாஞ்சோ முதலில் எவ்வளவு இடத்தில் இருந்ததோ அதுவே இப்போது குறைந்த இடத்தை எடுத்துக் கொள்கிறது. இதன் பொருள் என்னவென்றால் உயிரின் வடிவம் மாற்றமடைந்தாலும் அதன் அசங்க்யாத பிரதேச இடம் எப்போதும் அப்படியே இருக்கிறது. உயிரின் வடிவம் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ ஆகும்போது அதாவது சுருங்கி விரியும் போது அதன் அசங்க்யாத பிரதேசம் ஒன்றாகவே ஐய்கியமாகி தங்களுக்குள் இருக்கும் இடத்தை பகிர்ந்து கொண்டு அப்படியே இருக்கிறது, அதன் அனந்த குணங்களும் கூட எப்போதும் அதிலேயே இருக்கிறது. சூக்ஷம உயிரில் இருந்து மிகப்பெரிய உடலுடைய பிராணிவரை-நிகோத உயிர் முதல் மஹாமத்ஸயம்வரை, உயிரின் வடிவம் காணப்படுகிறது ஆனாலும் அவை அனைத்தும் அசங்யாத பிரதேசத்தையும், அனந்த குணங்களையும் எப்போதும் கொண்டிருக்கிறது. அனந்த பிரதேச ஆகாசத்தில் அல்லது ஒரு பிரதேச காலாணுவில், மற்றும் ஒரு பிரதேச புத்கல பரமாணுவில் கூட ஒவ்வொன்றிலும் அதனதன் அனந்த குணங்கள் எப்போதும் இருக்கின்றன.

ஆதிநாத பகவான் 500 வில் உயரத்துடனும், மஹாவீர பகவான் ஏழு முழம் உயரத்துடனும் இப்போது சித்த நிலையில் இருக்கின்றனர். அவர்களின் வடிவங்களில் வேறுபாடு இருந்தாலும் மற்ற அனந்த குணங்களின் பர்யாயத்தில் எந்த வேறுபாடும் இல்லை. இருவரும் அனந்த சதுஷ்டயத்துடனேயே-அனந்த தர்சனம், அனந்த ஞானம், அனந்த சுகம், அனந்த வீர்யம் ஆகியவைகளுடனே இருக்கிறார்கள். அவர்களின் எல்லா அனந்த குணங்களின் சாமர்தியமும் பர்யாயத்தில் முழுமையாக வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆகையால் உருவத்தை வைத்து பகவான் மஹாவீரரைவிட அதிக சுகத்தையும், ஞானத்தையும் பகவான் ஆதிநாதர் அடைகிறார் என்பதில்லை. நம் அன்றாட வாழ்வில்கூட இந்த விஷயம் பழக்கமான ஒன்றுதான். புத்தி ஒருவரின் உயரத்தையோ அல்லது உடல் பருமனையோ வைத்து இருப்பதில்லை. ஆகையால் சிறய உருவமுடையவர் தன்னை

தாழ்தவராகவும் அல்லது பெரிய உருவமுடையவர் தன்னை சிறந்தவராகவும் எண்ணுதல் சரியில்லை. இங்கு வேறு ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன். சித்தருக்கு உடல் இல்லை ஆகையால் வடிவம் இல்லாதவராக hollow shape ஆக இருப்பார், ஒன்றும் இல்லாத சூன்ய சமானமாக எதுவுமில்லாத வெற்றிடமாக இருக்கிறார் என்ற குழப்பம் பலருக்கு இருக்கிறது. சித்த பகவானின் மூர்த்தியை-உருவத்தை உலோகத்தின் நடுவில் மனித வடிவில் எதுவும் இல்லாத நிலையில் செய்து வைத்திருப்பதை ஜினாலயங்களில் பார்த்து, அவ்வாறு ஒரு பிரம்மை நமக்கு வருகிறது. பகவானுக்கு முப்பரிமான-கண பரிமான அருவமான வடிவம் இருக்கிறது. ஆத்ம தத்துவத்தின் அறிவு வடிவம் என்று இதை சொல்கின்றனர். உயிரின் அனந்த குணங்களின் அம்சங்கள் முழுமையாக சிந்த வடிவில் குவிந்து இருக்கின்றன.

பிரதேசத்வ குணத்தில் ஒவ்வொரு சமயமும் புதிய பர்யாயம் நிகழ்கிறது. பிரதேசத்வ குணத்தின் இந்த விஷேச காரியத்தை **வியஞ்சன பர்யாயம்** என்று சொல்கின்றனர். ஒவ்வொரு திரவியத்திலும் அனந்த குணங்கள் இருக்கின்றன. இந்த எல்லா குணங்களின் பரிணாமங்கள் அதாவது பர்யாயங்கள் இடைவிடாது நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இவைகளில் பிரதேசத்வ குணத்தின் காரியத்தை-பர்யாயத்தை மட்டும் வியஞ்சன பர்யாயம் என்று சொல்கின்றனர், மற்ற அனந்த குணங்களின் காரியங்களை-பர்யாயங்களை **அர்த்த பர்யாயம்** என்று சொல்கின்றனர். இது ஒரு வேடிக்கையான விஷயமாகும். அவைகள் எப்படி இருக்கின்றன என்று பார்க்கலாம். வியஞ்சன பர்யாயம் மற்றும் அர்த்த பர்யாயம் இரண்டிற்கும் ஸ்வபாவம் விபாவம் என்று இரண்டு இரண்டு பிரிவுகள் இருக்கின்றன.

ஸ்வபாவ வியஞ்சன பர்யாயம்: பிற நிமித்த சம்பந்தம் எதுவும் இல்லாமல் எந்த வடிவம் திரவியத்திற்கு இருக்கிறதோ அதை ஸ்வபாவ வியஞ்சன பர்யாயம் என்று சொல்கின்றனர். உதாரணம்-உயிரின் சித்த வடிவம், புத்கலத்தின் பரமாணு வடிவம்.

விபாவ வியஞ்சன பர்யாயம்: பிற நிமித்த சம்பந்தத்தால் எந்த வடிவம் திரவியத்திற்கு இருக்கிறதோ அதை விபாவ வியஞ்சன பர்யாயம் என்று சொல்கின்றனர். உதாரணம்-உயிரின் மனித, தேவ, நரக, விலங்கு வடிவம், புத்கலத்தின் ஸ்கந்த வடிவம்.

ஸ்வபாவ அர்த்த பர்யாயம்: பிற நிமித்த சம்பந்தம் இல்லாமல் எந்த அர்த்த பர்யாயம் திரவியத்திற்கு இருக்கிறதோ அதை பிரதேசத்வ குணத்தை தவிர மற்ற குணங்களின் பர்யாயங்களை ஸ்வபாவ அர்த்த பர்யாயம் என்று சொல்கின்றனர். உதாரணம்-உயிரின் கேவலஞான பர்யாயம், புத்கலத்தின் வடிவத்தை தவிர்த்த மணம், சுவை முதலிய பரமாணு பர்யாயம்.

விபாவ அர்த்த பர்யாயம்: பிற நிமித்த சம்பந்தத்தால் எந்த அர்த்த பர்யாயம் திரவியத்திற்கு இருக்கிறதோ அதை விபாவ அர்த்த பர்யாயம் என்று சொல்கின்றனர். உதாரணம்-உயிரின் ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகள். புத்கல ஸ்கந்தத்தின் வடிவத்தை தவிர்த்த மணம், சுவை முதலிய பர்யாயங்கள்.

ஆறு திரவியங்களில் உயிர் மற்றும் புத்கலம் ஆகிய இரண்டு திரவியங்கள் மட்டுமே இயல்பு மற்றும் திரிபு பர்யாயங்களுடன் கூடியன. தர்ம, அதர்ம, ஆகாச மற்றும் காலம் ஆகிய இந்த நான்கு திரவியங்களிலும் ஸ்வபாவ அர்த்த பர்யாயம், மற்றும் ஸ்வபாவ வியஞ்சன பர்யாயம் என இரண்டு விதமான பர்யாயங்களே நிகழ்கின்றன. அவைகளில் விபாவ பர்யாயகள் நிகழ்வதில்லை.

உயிரின் பிறவி சுழற்சி-சம்சார நிலையில் எதுவரை கர்மம் மற்றும் உடலின் சம்பந்தம் இருக்கிறதோ அதுவரை விபாவ வியஞ்சன பர்யாயங்களே நிகழ்கின்றன. சித்த அவஸ்தையில்-முக்தி நிலையில் ஸ்பாவ வியஞ்சன பர்யாயம் ஆரம்பமாகி விடுகிறது, அதற்கு பிறகு அனந்த காலம்வரை ஸ்பாவ வியஞ்சன பர்யாயங்களே நிகழ்ந்து கொண்டிருக்கும். இதன் பொருள் என்னவென்றால் பிற மதத்தினர்களிடம் இருக்கும் நம்பிக்கை போல, முக்தி அடைந்த உயிர் மீண்டும் உடலை ஏற்று **அவதாரம்** எடுப்பதில்லை, அதாவது பிறவி சுழற்சிக்கு மீண்டும் வருவதில்லை. கொஞ்சம்கூட கர்மம் மற்றும் உடலுடன் தொடர்பு கொள்வதில்லை. அரஹந்த பகவானகளுக்கு கூட விபாவ வியஞ்சன பர்யாயமே நிகழ்கிறது, ஆனாலும் கூட மற்ற குணங்களின் ஸ்வபாவ பர்யாயம் நிகழ்வதால் ஸ்வபாவ அர்த்த பர்யாயங்கள் கூட நிகழ்கின்றன. அனந்த சுகம், அனந்த ஞானம் முதலானவை வெளிப்பட்டு இருக்கின்றன. பிரதேசத்வ குணத்தின் விபாவ பரிணாமத்தின் காரணத்தால், மற்ற குணங்களின் ஸ்வபாவ பரிணாமத்தில் தடைகள் எதுவும் வருவதில்லை. ஒருவேளை அதனால்தானோ என்னவோ இந்த ஒரு குணத்தின் பரிணாமத்திற்கு மட்டும் வேற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது போலும்.

உயிரின் சிரத்தை குணம் சம்யக்தரிசனத்துடன் தூய்மை அடைந்து விடுகிறது. அந்த சமயத்திலிருந்து அந்த குணத்தின் ஸ்வபாவ அர்த்த பர்யாயம் துவங்கி விடுகிறது. ஆனால் மற்ற எல்லா குணங்களின் பர்யாயங்களும் இப்போது சுத்மடையவில்லை ஆகையால் அந்த உயிருக்கு ஸ்வபாவ மற்றும் விபாவ அர்த்த பர்யாயங்கள் இரண்டும் நிகழ்கின்றன.

புத்கலத்தில் இவ்வாறு நிகழ்வதில்லை. பரமாணுவின் வடிவம் ஸ்வபாவ வியஞ்சன பர்யாயமாகும். எப்போது பரமாணு ஸ்கந்த வடிவமாக ஆகிவிடுகிறதோ அப்போது அதற்கு விபாவ வியஞ்சன பர்யாயம் தொடங்கி விடுகிறது. எப்போது ஸ்கந்தத்தை விட்டு விடுகிறதோ அப்போது அதாவது மீண்டும் பரமாணு வடிவத்தை ஏற்குமானால், அதன் பர்யாயம் ஸ்வபாவ வியஞ்சன பர்யாயமாக மாறிவிடுகிறது. அதாவது புத்கலத்தில் மட்டும் வியஞ்சன பர்யாயம் விபாவமாகவும், ஸ்வபாவமாகவும் மாற்ற மடையக்கூடியதாக இருக்கிறது. ஆனால் உயிரில் ஸ்வபாவ வியஞ்சன பர்யாயம் தோன்றி விட்டால் மீண்டும் அது எப்போதும் விபாவ வியஞ்சன பர்யாயமாக மாற்ற மடைவதில்லை.

உயிர் மற்றும் புத்கலத்தில் நிகழும் இந்த அர்த்த மற்றும் வியஞ்சன பர்யாயத்தில் மேலும் சில விசித்திரமான விஷயங்கள் இருக்கின்றன. உயிர் திரவியத்தில் சித்தர்களின் ஸ்வபாவ அர்த்த பர்யாயங்கள் எல்லாம் ஒரே மாதிரியாகவே இருக்கின்றனறன, ஆனால் ஸ்வபாவ வியஞ்சன பர்யாயம் எல்லோருக்கும் வெவ்வேறாக இருக்கின்றன. மாறாக புத்கலத்தில் ஸ்வபாவ அர்த்த பர்யாயங்கள் வெவ்வேறாகவும் மற்றும் ஸ்வபாவ வியஞ்சன பர்யாயங்கள் ஒரே மாதிரியாகவும் இருக்கின்றன. அதாவது பரமாணுக்களின் வடிவம் ஒரே மாதிரியாக

இருக்கிறது ஆனால் ஸ்பர்ச, ரச, கந்த, வர்ணம் ஆகிய குணங்களின் பர்யாயங்கள் எந்த மாதிரியான வேறுவேறு பர்யாயங்களாகவும் இருக்க முடியும்.

பிரதேசத்வ குணத்தை தெரிந்து கொண்டதால் முக்கியமாக பின்வரும் நன்மைகள் நமக்கு கிடைக்கின்றன.

1. ஒவ்வொரு திரவியத்திற்கும் ஏதாவது ஒரு வடிவம் இருக்கவே செய்கிறது. ஆகையால் உயிர், தர்ம, அதர்ம, ஆகாசம் மற்றும் காலம் ஆகிய அரூபி திரவியங்களுக்குக்கூட அதனதன் சுயமான வடிவம் இருக்கிறது.

2. ஒவ்வொரு திரவியத்தின் வடிவம் அதன் சுய பிரதேசத்வ குணத்தால் ஆகிறது. எந்த ஒரு கடவுளும் அல்லது வேறு பொருளும் அதன் வடிவத்திற்கு கர்த்தாவாக ஆக முடியாது.

3. பிறவி நிலையில் உயிரின் வடிவம், பெற்ற உடலின் வடிவத்திற்கு சமமாக இருந்தாலும்கூட அந்த வடிவம் அந்த உடலின் காரணத்தால் அல்ல ஆனால் உயிரின் பிரதேசத்வ குணத்தாலாகும்.

4. புத்கல திரவியத்தின் வடிவம் உருவமுடையது-புலன்களால் அறியக்கூடியது, மற்ற ஐந்து திரவியங்களின் வடிவம் அரூபி-புலன்களால் அறிய முடியாததாகும்.

5. உடலின் வடிவம் உடலை உண்டு பண்ணும் பரமாணுக்களின் வடிவமாகும், உயிர் அந்த வடிவத்தை செய்வதில்லை. உடலை அழகாக வைத்துக்கொள்ள எந்த செயலையும் உயிர் செய்ய முடியாது.

6. திரவியத்தின் வடிவத்தை சார்ந்து அதன் குணங்களின் எண்ணிக்கை இல்லை. அனந்த பிரதேச ஆகாச திரவியத்தில் எத்தனை அனந்த குணங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அனந்த குணங்களே ஒரு பிரதேச புத்கல பரமாணுவிலும், ஒரு காலாணுவிலும் அல்லது மற்ற திரவியங்களிலும் இருக்கின்றன.

7. உயிர் திரவியத்தின் வடிவம் சுருங்கி விரியும் தன்மை கொண்டிருந்தாலும் அதன் அசங்க்யாத பிரதேசம் எப்போதும் அதனுடன் இருக்கிறது, அதில் துண்டு விழுவதில்லை.

8. உயிர் திரவியத்தின் வடிவத்தை பொறுத்து அதன் அனந்த குணங்களின் காரியம் நிகழ்வதில்லை. ஆகையால் ஞானம், தர்சனம், ஒழுக்கம், சுகம் ஆகிய குணங்களின் பர்யாயம் உயிரின் வடிவத்தால் எந்த பாதிப்பும் அடைவதில்லை.

9. கிடைத்த உடலின் உருவத்தின் காரணத்தால் தன்னை தாழ்வானவனாகவோ அல்லது உயர்தவனாகவோ நினைத்தல் தவறாகும்.

பிரதேசத்வ குணத்தை வர்ணனை செய்யும் இரண்டு வரி கவிதை

பிரதேசத்வ குண கீ சக்தி சே ஆகார் திரவ்யோங்கா ரஹே,
நிஜஷேத்ர மே வியாபக் ரஹே ஆகார் பீ ஸ்வாதீன் ஹை |
ஆகார் ஹை சப்கே அலஹ் ஹோ லீன் அப்னே ஞான் மே,
ஜானோ இன்ஹே சாமான்ய குண் ரகியே சதா ஸ்ரத்தான் மே ||

அறிவில் ஆழ்ந்து விடுமாறு உபதேசம் கொடுக்கப்படுகிறது, அதாவது முக்கால, நிலையான, ஞானமய ஆத்ம திரவியத்தை தியானம் செய்ய உபதேசம் கொடுக்கபப்படுகிறது. வடிவம் ஒரு பர்யாயமாகையால் அது ஒரு சமயம் மட்டுமே இருப்பது, அழியக்கூடியது மற்றும் புதிது புதிதாக தோன்றுவது. அப்படிப்பட்ட நிலையற்ற பொருளின் மேல் தியானம் செய்ய முடியாது. இந்த காரணத்தால் அந்த பர்யாயத்தின்மேல் உள்ள லட்சியத்தை விலக்கி எப்போதும் நிலையாக இருக்கும் ஞான ஸ்வபாவத்தின் மேல் உபயோகத்தை நிலைநிறுத்தி ஒன்றி விடுவதால் ஸ்வபாவ அர்த்த பர்யாயம் தொடங்கி விடுகிறது அதாவது சம்யக்தர்சனம், ஆத்மானுபூதி உண்டாகிறது.

பொது குணங்களின் சர்ச்சை இன்று இத்துடன் முடிகிறது. அடுத்த கடிதத்தில் இருந்து புதிய விஷயம் ஆரம்பிக்க இருக்கிறது. எனவே இதுவரை எழுதிய எல்லா கடிதங்களையும் மீண்டும் படிக்கவும். அப்படி செய்வதால் திரவியம், குணம், மற்றும் பொது குணங்களின் ஸ்வரூபம் சரியாகவும் தெளிவாகவும் நினைவில் இருக்கும்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-16 02-04-1995

புத்கலத்தின் விஷேச குணங்கள் மற்றும் பர்யாயங்கள்

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

முன்னர் பல கடிதங்களின் மூலம் எல்லா திரவியங்களிலும் காணப்படும் பொது குணங்களில் முக்கியமான ஆறு பொது குணங்களின் இயல்பு-ஸ்வரூபம் பற்றி தெரிந்து கொண்டோம். இந்த சர்ச்சையினால் திரவியங்களின் பொது இயல்பு நமக்கு தெரியவந்தது, ஆனால் ஒவ்வொரு திரவியத்தின் தனித்தன்மை, சிறப்பு எந்த காரணத்தால் அமைகிறது என்பது பற்றி தெரிந்து கொள்ள அதனதன் சிறப்பு குணங்களை பற்றி தெரிந்து கொள்ள வேண்டியதுகூட அவசியமாகிறது. சிறப்பு குணங்களின் மூலமே குறிப்பிட்ட திரவியம் இன்னது என்பதை நாம் தெரிந்து கொள்ளமுடிகிறது. எப்படி என்றால் எந்த திரவியத்தில் ஸ்பர்சம்-தொட்டு அறிதல், ரசம்-சுவை, கந்தம்-வாசனை, வர்ணம்-நிறம் முதலான சிறப்பு குணங்கள் இருக்கிறதோ அது புத்கல திரவியமாகும். ஆகையால் நமது உடல், நமக்கு தெரியும் எல்லா பொருள்கள், மற்றும் ஐந்து புலன்களால் அறியும் பொருள்கள் ஆகியவை எல்லாம் புத்கலமே என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். எதில் அறியும் தகுதி இருக்கிறதோ, எதில் சுக, துக்க அனுபவம் உண்டாகிறதோ அது உயிர் பொருள் என்பது கூட நம் எண்ணத்தில் வருகிறது.

மேலும் நுட்பமாக ஆராயும்போது ஒன்று நமக்கு தெரியவருகிறது, அதாவது உண்மையில் திரவியமோ அல்லது அதன் குணமோ நம் அறிவுக்கு நேரடியாக வருவதில்லை ஆனால் அதன் பர்யாயங்கள்தான் நம் அறிவுக்கு உடனே தெரிகின்றன. எப்படி என்றால் நமக்கு வர்ண குணம் தெரிவதில்லை ஆனால் வர்ண குணத்தின் பர்யாயங்களான வெண்மை, சிகப்பு, நீலம் முதலான அவஸ்தைகள்- நிலைகள் அதாவது பர்யாயங்களே நமக்கு தெரிகிறது. ஆகையால் நமக்கு குணங்களின் அறிவு மட்டும் போதாது, குணங்களுடன் அதன் பர்யாயங்களின் அறிவும் அவசியமாகும். ஏனென்றால் பர்யாயம் தான் வெளிப்படுகிறது, குணம் வெளிப்படுவதில்லை, ஆனால் குணம் என்னவோ சக்தி வடிவில் திரவியத்தில் எப்போதும் இருக்கிறது. உயிர் திரவியம் மற்றும் அதன் ஞானம், சுகம் முதலான குணங்கள் கூட வெளிப்படுவதில்லை ஆனால் தெரிந்து கொள்ளுதல் ஒரு பர்யாயம்-கிரியை, மற்றும் சுக-துக்கத்தை அனுபவம் செய்தல் ஒரு பர்யாயம் ஆகிய அவஸ்தைகளே வெளிப்படையாக தெரிகின்றன. ஆகையால் இன்று நாம் சிறப்பு குணங்களின் பர்யாயங்கள்-மாற்றங்கள் பற்றி சர்ச்சை செய்யலாம். புத்கல திரவியத்தின் பர்யாயங்கள் நமக்கு எப்போதும் புலன்களின் மூலம் தெரிந்து கொண்டே இருக்கின்றன, அது நமக்கு பழக்கமான ஒன்றுதான் ஆகையால் முதன்முதலில் புத்கலத்தின் சிறப்பு குணங்களின் பர்யாயங்கள் பற்றிய தகவல்களை நாம் இப்போது தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு திரவியத்தின் சிறப்பு குணங்களின் சர்ச்சையை நாம் திரவியங்களின் ஸ்வரூபம் என்ற ஆறாவது கடிதத்தில் பார்த்தோம். ஆகையால் இப்போது முக்கியமாக புத்கலம் மற்றும் உயிர் இவைகளின் சிறப்பு குணங்களின் பர்யாயங்கள் சம்பந்தமாக மேலும் விரிவாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

புத்கலத்தில் ஸ்பர்சம்-தொடு உணர்வு, ரசம்-சுவை, கந்தம்-வாசனை, வர்ணம்-நிறம், க்ரியாவதி-இடம் விட்டு இடம் பெயரும் சக்தி முதலிய சிறப்பு குணங்கள் இருக்கின்றன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவைகளில் ஸ்பர்ச குணத்திற்கு எட்டு வகையான பர்யாயங்கள் உள்ளன. அவைகளாவன: லேசு-பளு, மென்மை-கடினம், பசை தன்மை-உலர்ந்த தன்மை, குளிர்சி-வெப்பம் என்று நான்கு ஜோடி பர்யாயங்கள் இருக்கின்றன. லேசு-பளுவில் ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு பர்யாயமே இருக்கிறது. அதுபோலவே ஒவ்வொரு

ஜோடியிலும் ஒரு சமயத்தில் ஒரு பர்யாயமே இருக்கிறது. ஆகையால் புத்கலத்தின் ஸ்பர்ச குணத்தில் ஒரு சமயத்தில் ஒன்றாக நான்கு பர்யாயங்கள் இருக்கின்றன. நியமசாரம், பஞ்சாஸ்திகாயம் ஆகிய நூல்களில் இந்த நான்கு பர்யாயங்கள் ஸ்கந்தத்திற்கு தான் இருக்கிறது மற்றும் பரமாணுவில் ஒரு சமயத்தில் ஒன்றாக இரண்டு பர்யாயங்கள் அதாவது பசை தன்மை-உலர்ந்த தன்மை, குளிர்சி-வெப்பம் என்ற ஜோடிகளின் ஒவ்வொன்று மட்டுமே ஒரு சமயத்தில் இருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது.

ஸ்பர்சகுணம் சம்பந்தமாக மேலும் ஒரு சுவாரஸ்யமான விஷயம் இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. புத்கலத்தில் அனந்த குணங்கள் இருந்த போதிலும் அதில் வெரும் ஸ்பர்ச குணத்தின் ஸ்நிக்த-பசை அல்லது ரூக்ஷ-உலர்ந்த பர்யாயமே இரண்டு அல்லது அதிக பரமாணுக்கள் ஒன்று சேர்ந்து ஒரு பொருளாக மாற்றமடைய காரணமாக இருக்கிறது. உயிர் பொருளில் கூட மோஹநீய கர்ம உதயத்தால் தோன்றும் மோஹ, இராக, த்வேஷ பரிணாமம் நிகழ்வது கூட புதிய கர்ம பந்தத்திற்கு காரணமாக ஆகிறது.

ரச குணத்திற்கு புளிப்பு, இனிப்பு, கசப்பு, கரிப்பு, துவர்ப்பு என ஐந்து பர்யாயங்கள் இருக்கின்றன. இந்த ஐந்து பர்யாயங்களில் ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு பர்யாயமே நிகழ்கிறது.

கந்த குணத்திற்கு சுகந்தம்-வாசனை, துர்கந்தம்-நாற்றம் என இரண்டு பர்யாயங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு பர்யாயங்களில் ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு பர்யாயமே நிகழ்கிறது.

வர்ண குணத்திற்கு வெள்ளை, சிகப்பு, கருப்பு, நீலம் மற்றும் மஞ்சள் என ஐந்து பர்யாயங்கள் இருக்கின்றன. இந்த ஐந்து பர்யாயங்களில் ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு பர்யாயமே நிகழ்கிறது. சப்தம் ஸ்கந்தத்தால் உண்டாகிறது. பாஷா வர்கணைதான் சப்த வடிவில் மாற்ற மடைகிறது ஆகையால் சப்தம் பாஷா வர்கணையின் ஒரு பர்யாயமாகும்; சப்தம் புதகலத்தின்-ஸ்கந்தத்தின்-பாஷா வர்கணையின் குணம் இல்லை, பர்யாயமாகும்.

க்ரியாவதி சக்தியின் காரணத்தால் இடம் பெயரும் பர்யாயம் அல்லது ஒரே இடத்தில் இருக்கும் பர்யாயம் நிகழ்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக முழுமையாக சிந்தனை செய்து பார்க்கும் போது ஸ்பர்ச, ரச, கந்த, வர்ண குணங்களின் பர்யாயங்கள் மற்றும் சப்தம் இவை எல்லாம் புத்கலத்தின் பர்யாயங்கள் தான் என்ற எண்ணம் நமக்கு வருகிறது. புத்கலம் சுயமாகவே-அதுவே அதன் பர்யாயங்களை அறிவதில்லை, அதன் குறிப்பிட்ட பர்யாயத்தின் காரணத்தால் புத்கலத்திற்கு கொஞ்சம் கூட சுகமோ, துக்கமோ நிகழ்வதில்லை ஆகையால் குறிப்பிட்ட பர்யாயம் நல்லது, அல்லது குறிப்பிட்ட பர்யாயம் கெட்டது என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை.

புத்கலத்தின் இந்த எல்லா பர்யாயங்களையும் தெரிந்து கொள்வது உயிராகும். ஆனால் அறியாமை-due to ignorance காரணத்தால் உடலின் வடிவத்தையே தன் வடிவமாக உயிர் கருதுகிறது, உடலின் பர்யாயங்களை-மாற்றங்களை தன்னுடைய மாற்றமாகவே உயிர் நம்புகிறது. உடலின் பர்யாயத்தை புத்கலத்தின் பர்யாயங்கள் என்று எண்ணாமல், அஞ்ஞானி உயிர், உடலின் மாற்றத்தை தன்னுடைய மாற்றமாகவே நம்புகிறது. நான் சிகப்பாக இருக்கிறேன், நான் ஒல்லியாக இருக்கிறேன், நான் குண்டாக இருக்கிறேன், என் சருமம் மென்மையாக இருக்கிறது, என் முடி வரட்சியாக இருக்கிறது என்பது போன்ற இன்னும் இது போன்ற பலவற்றில் அஞ்ஞானியாக இருக்கும் நாம் நம்பிக்கை கொள்கிறோம், மற்றும் அதில்

குறிப்பிட்ட சில மாற்றங்களை நல்லதாகவும், மற்றும் பல மாற்றங்களை கெட்டதாகவும் எண்ணி அவைகளின் மேல் விருப்பு, வெறுப்பு கொண்டு எந்த பிரயோஜமும் இன்றி சுகமோ, துக்கமோ அடைந்து கொண்டு இருக்கிறோம்.

ஸ்பர்சம், ரசம், மணம், வர்ணம் இவைகளின் மாற்றங்கள்-பர்யாயங்கள் மற்றும் சப்த பர்யாயம் எல்லாம் புத்கலத்தினுடையதாகும், இந்த பர்யாயங்களை-மாற்றங்களை செய்வது புத்கலமாகும், உயிர் இந்த மாற்றங்களை-பர்யாயங்களை அறிபவன் மட்டுமேயாகும். ஆனால் இந்த உயிர் இந்த மாற்றங்களை எல்லாம் செய்பவன் தானே என்று நம்புகிறது! நான் சுவையான உணவு சமைக்கிறேன், மென்மையான ரொட்டியை செய்கிறேன், அழகான சித்திரம் வரைகிறேன், வசீகரமான குரலில் பாடுகிறேன் என்றெல்லாம் இந்த உயிர் நம்புகிறது. உயிர் இந்திரியங்கள் மூலம் இந்த பர்யாயங்களை அறிவதை மட்டுமே செய்கிறது, ஆனால் அறிவதோடு மற்றுமின்றி அதில் சுகம், துக்கம் இருப்பதாக எண்ணி அந்த மாற்றங்களை அது அனுபவித்துக்கொண்டு இருக்கிறேன் என்று நம்பிக்கொண்டு அவைகளை அனுபவிக்க விரும்புகிறது. குலோப்ஜாமூன் சாப்பிடும்போது இனிப்பை, சுவை குணத்தின் பர்யாயத்தை நாம் அறிகிறோம், ஆனால் அதை சுவைப்பதில் சுகம் இருப்பதாக கற்பனை செய்து இந்த உயிர் அதில் லயித்து விடுகிறது. அதில் உண்மையாகவே சுகம் இருப்பதானால் 7-8 குலோப்ஜாமூன்கள் சாப்பிட்ட பிறகு நாம் அதை மேலும் சாப்பிடுவதை நிறுத்தி விடாமல் சாப்பிட்டுக்கொண்டே இருக்க வேண்டும் அல்லவா!

உடலில் துர்நாற்றம் வீசும்போது நன்றாக இல்லாததால் உடலின் மேல் வாசனை திரவியங்களை தெளித்து சிலர் சுகமடைகிறார்கள், தாங்களே நருமணம் அடைந்து விட்டதாக எண்ணுகிறார்கள். உண்மை என்ன வென்றால் உயிர் பொருளில் கந்த-மண குணம் என்பதே இல்லை, ஆகையால் உடலின் நாற்ற பர்யாயம் உயிரினுடையதல்ல, வாசனை திரவியத்தின் நருமண பர்யாயம்கூட உயிரினுடையதல்ல.

உயிர் ஐந்து இந்திரியங்களின்-புலன்களின் மூலம் இந்த பர்யாயங்களை அறிகிறது. ஸ்பர்சேந்திரியத்தின்-உடலின் தோல் மூலம் ஸ்பர்ச குணத்தின் பர்யாயங்களையும், ரசநேந்திரியத்தின்-நாக்கின் மூலம் சுவை குணத்தின் பர்யாயங்களையும், க்ராணேந்திரயத்தின்-மூக்கின் மூலம் கந்த குணத்தின் பர்யாயங்களையும், சக்ஷு இந்திரியத்தின்-கண்ணின் மூலம் வர்ண குணத்தின் பர்யாயங்களையும், கர்ணேந்திரியத்தின்-காதின் மூலம் பாஷா வர்கணையின் பர்யாயங்களையும் பற்றிய அறிவு உயிருக்கு உண்டாகிறது. அறிவது சுயம் உயிரேயாகும், இந்திரியங்கள் வெரும் நிமித்தம்-துணை காரணம் மட்டுமேயாகும், அறியப்படும் விஷயம் மற்றும் அறிபவர் இரண்டுக்கும் இடையில் இருக்கும் ஒரு பொருளாகும். எப்படி என்றால் ஜென்னலின் வழியாக நாம் வெளியே காணப்படும் பொருள்களை பார்க்கும்போது, நாம் தான் பார்க்கும் காரியத்தை செய்கிறோம், ஜன்னல் இல்லை என்பது போல எனலாம். அதேபோலவே இந்திரியங்கள் எல்லாம் புத்கலத்தால் ஆனது, அதில் அறியும் குணம் இல்லை. மூளை-brain அதாவது உடலின் பகுதியான நரம்பு கூட புத்கலம், அதில் அறியும் குணம் இல்லை, அறியும் செயலை செய்வது உயிர்பொருளேயாகும், அந்த பொருளே **நான்**.

உயிர் தொட்டு அறியும் செயலை-ஸ்பர்சத்தை செய்கிறது ஆனால் உயிரில் ஸ்பர்ச குணம் இல்லை, ஆகையால் உயிரை அஸ்பர்சஸ்வபாவி என்று சொல்லப் படுகிறது. அதுபோல ரசம், கந்தம், வர்ணம், சப்தம் முதலான பற்றி அறியும் செயலை செய்வது உயிராகும் ஆனால் உயிரில் இந்த குணங்கள் அல்லது அந்த குணங்களின் பர்யாயங்கள் இல்லை. ஆகையால் உயிரை அரசம், அகந்தம், அவர்ணம், அசப்தம் என்று சொல்லப் படுகிறது.

உயிர் இவைகளை அறிய இந்திரியங்களின் அவசியம் என்னவோ தேவைப்படுகிறது அல்லவா? என்று நீங்கள் கேட்கலாம். நிச்சயமாக இல்லை. அரஹந்தர், சித்தர் இந்திரியங்கள் மூலம் அறிவதில்லை, ஆனால் ஆத்மாவின் மூலமே நேரடியாக அறிகின்றார்கள். பிரபஞ்சத்தில் உள்ள எல்லா திரவியங்களையும், அவைகளின் குணங்களையும், மற்றும் அந்த குணங்களின் முக்கால மாற்றங்களையும்-பர்யாயங்களையும் அவர்கள் ஒட்டு மொத்தமாக நேரடியாக அறிகிறார்கள். அவதி, மனப்பர்யய அறிவில் கூட இந்திரியங்களின் அவசியம் தேவைப்படுவதில்லை. **அதுபோல ஆத்மா தன்னைத்தானே அறியும்போது, ஆத்மானுபூதி அடையும்போது இந்திரியங்களின் வழியாக பார்ப்பதை மூடிவிட்டு, அறிவின் மூலம் நேரடியாக உள்நோக்குவதை செய்து தன்னைத்தானே அறிகிறது.**

சாஸ்திரங்களில் புத்கலத்தை பற்றி மிக விரிவான வர்ணனை செய்யப்பட்டிருப்பது நாம் புத்கலத்தை பற்றி சரியாக தெரிந்து கொள்வதற்காக அல்ல, உண்மையில் புத்கலத்தின் குண-பர்யாயங்கள் எல்லாம் புத்கலத்தினுடையது, என்னுடையதல்ல, ஆத்மாவினுடையது அல்ல என்று எந்த குழப்பமும் இன்றி நாம் தெரிந்து கொள்ளவேயாகும். உடலிலிருந்து உயிரை பிரித்தறிய செய்வதற்காகவே, உடலின் லட்சணம் அதாவது உடலின் பர்யாயங்கள்-மாற்றங்கள் பற்றி விரிவான விளக்கங்கள் சாஸ்திரத்தில் வருகிறது.

இந்த எல்லா பர்யாயங்களும் **நான்** இல்லை என்று அறிவதால், நம்பிக்கை கொள்வதால் ஏகத்வ புத்தி-உடலே நான் என்ற நம்பிக்கை அழிகிறது. இந்த பர்யாயங்கள் என்னுடையதல்ல என்று தெரிந்து கொண்டதுமே மமத்வ-உடல் என்னுடையது என்ற புத்தி முடிவுக்கு வருகிறது. இந்த உடலின் மாற்றங்களை செய்வது புத்கலம் அதாவது இந்த மாற்றங்களுக்கு கர்த்தா புத்கலம், நான் இல்லை என்ற நிர்ணயம்-உறுதிப்பாடு ஆனதும் கர்த்ருத்வபுத்தி அதாவது உடலின் மாற்றங்களை செய்பவன் நான் என்ற புத்தி அழிகிறது. இந்த மாற்றங்களை நான் அறிபவனாவேன், அனுபவிப்பவன் இல்லை, இந்த பர்யாயங்கள் என்னுடைய சுக-துக்கத்திற்கு காரணமில்லை, நான் இவைகளில் சுக-துக்கம் இருப்பதாக கற்பனை செய்து கொண்டு இதுவரை இருந்து கொண்டு வந்திருக்கிறேன் என்ற அறிவு வந்ததும் போக்த்துருத்வ-அனுபவிப்பவன் புத்தி இல்லாமல் போகிறது.

புத்கலத்தின் பர்யாயங்கள் பற்றிய அறிவு நமக்கு வந்தவுடன் நம்மிடம் எவ்வளவு அமைதி மற்றும் துன்பமற்ற நிலை உண்டாகிறது என்று பாருங்கள். இந்த பர்யாயம் என்னுடையதில்லை என்று தெரிந்து கொண்ட அதே ஷணத்தில், என்னுடைய பர்யாயம் பிறகு எப்படி இருக்கிறது? என்ற கேள்வி நம் மனதில் எழுவது சகஜமே.

என்னை அழைத்துச் செல்வதற்காக நீங்கள் இரயில் நிலையத்திற்கு வந்திருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த சமயத்தில் உங்கள் கண்கள் முன்னால் அனேக பெண்கள் தெரிகிறார்கள். ஆனால் இது என் அம்மா இல்லை என்று தெரிந்தவுடன் அந்த சமயத்தில் உங்கள் பார்வை அந்த பெண்களிடம் இருந்து விலகி விடுகிறது மேலும் வேறு இடங்களில் உங்கள் அம்மாவை தேடுகிறீர்கள். எப்போது உங்கள் அம்மா உங்கள் பார்வையில் வருகிறாரகளோ அப்போது உங்கள் அம்மாவின் மேலேயே உங்கள் பார்வை நிலை கொள்கிறது. அதற்கு பிறகு இங்குமங்கும் தேடுதல் மற்றும் பார்ப்பதில் உங்களுக்கு எந்த விருப்பமும் இருப்பதில்லை. அம்மா இப்போது தூரத்தில் இருந்தாலும்கூட உங்களுக்கு அம்மா தெரிகிறார்கள் என்பதில் உறுதியாக நம்பிக்கை உண்டாகிறது, ஆகையால் மனம் அம்மாவின் பக்கத்தில் இருக்கிறது. அம்மாவை கட்டித்தழுவ இப்போது தீவிர ஆர்வம் உண்டாகிறது.

அதுபோல இந்த எல்லா பர்யாயங்களும் புத்கலத்தினுடையது என்பது தெரிய வந்தவுடன் நம் பார்வை அதன்மேல் ஒன்றுவதில்லை, அதில் நீடிப்பதில்லை. என்னுடைய பர்யாயம் எது என்பதை அறிந்து கொள்ள ஆர்வம் உண்டாகிறது. எப்போது உயிரின் பர்யாயங்கள், அதவது நம்முடைய பர்யாயங்கள் பற்றிய அறிவு உண்டாகும் போது புலன்கள் மூலம் புத்கலங்களின் பர்யாயங்களை அறிவதில் ஆர்வம் இருப்பதில்லை. நம்முடைய பர்யாயங்களை அறிந்து அந்த பர்யாயங்கள் **எதிலிருந்து** வெளிப்படுகின்றனவோ அதுவே முக்காலத்திலும் நிலையாக இருக்கும் **என்னில்** இருந்து என்ற அறிகுறிகள் மூலம் உணர்ந்தவுடன் நம் எண்ணம் அதிலேயே-**திரிகால சுத்தாமத்மாவிலேயே** நிலை கொண்டுவிடும், ஆழ்ந்துவிடும். மீண்டும் மீண்டும் உள்முகமடைந்து, அந்தர்முக் அடைந்து தன்னைத்தானே பார்த்துக் கொண்டு இருப்பதில், தன்னையே அனுபவிப்பதில் ஆர்வம் மிகுந்து கொண்டே இருக்கும்.

அதற்காக முதன்முதலில் உயிர் பொருளின், ஜீவ திரவியத்தின் சிறப்பு குணங்களின் பர்யாயங்களை பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். நம்முடைய ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளாமல், இந்த உயிரின் அஞ்ஞானம்-அறியாமை மற்றும் நான்கு கதிகளில் பிறந்து இறந்து அடையும் பிறவி சுழற்சி சீக்கிறம் முடிவுக்கு வராது. சுக உணர்வு உயிரின் சுக குணத்தின் பர்யாயமாகையால் உண்மையான சுகம் தன்னைத்தானே அறிவதாலேயே, அனுபவிப்பதாலேயே வெளிப்படும்.

இதைப்பற்றிய விரிவான சர்ச்சையை அடுத்த கடிதத்தில் நாம் செய்ய இருக்கிறோம். அதுவரை புத்கலத்தில் எந்தெந்த பர்யாயங்கள் நம் அறிவில் வருகின்றனவோ அவைகளில் நான் இல்லை, அவைகள் என்னுடையதில்லை, நான் அவைகளை செய்பவனுமில்லை, நான் அவைகளை அனுபவிப்பவனுமில்லை என்று நீங்கள் மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து கொண்டு இருங்கள். அடுத்த கடிதத்தில் சந்திக்கும் வரை,

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-17 10-04-1995

உயிரின் விஷேச குணங்கள் மற்றும் பர்யாயங்கள்.

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

உங்களுடைய சொந்த ஸ்வரூபத்தை-இயல்பை தெரிந்து கொள்ளுவதில் உங்களுக்கு இருக்கும் உற்சாகத்தை பார்த்து எட்டு தினங்களுக்குள்ளேயே இந்த கடிதத்தை எழுதுகிறேன். ஆத்மாவின் அதாவது நம் சுய ஸ்வரூபத்தின்-லட்சணத்தை அறிந்து கொள்வதில் தீவிர ஆர்வம்-ருசி கொள்பவர் தங்களை முக்தி அடைய தகுதியான ஒரு பவ்யஜீவன் என்பதை காட்டுகிறார்கள். அப்படிப்பட்ட உயிரே ஜினவாணியின் உபதேசத்தை தற்காலத்தில் கேட்டு அறிபவராகவும், அதை சந்தேகம் இன்றி ஏற்பவராகவும் இருக்கிறார். எந்த ஒரு குறிப்பிட்ட திரவியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்றாலும், அந்த திரவியத்தின் சிறப்பு குணங்களின் பர்யாயங்களில் வெளிப்படும் லட்சணத்தை கொண்டே அந்த லட்சியப் பொருளை-திரவியத்தை அறிய முடியும் என்று முன் கடிதத்தில் நாம் பார்த்தோம்.

ஒவ்வொரு ஜீவ திரவியத்திலும் சேதனம் அதாவது தர்சனம் மற்றும் ஞானம் அதாவது பார்த்தல், அறிதல், ஸ்ரத்தை-நம்பிக்கை, சாரித்ரம்-ஒழுக்கம், சுகம், வீர்யம்-பலம்-சக்தி, க்ரியாவதி-இடம் விட்டு இடம் பெயரும் சக்தி முதலான விஷேச-சிறப்பு குணங்கள் இருக்கின்றன. தர்சன குணத்தின் செயல் பதார்த்தத்தை-பொருளை பொதுவாக அறிதல்-முழுமையாக ஒரு பொருள் எப்படி இருக்கிறதோ அப்படியே பார்த்தல்-general perception ஆகும். ஞான குணத்தின் செயல் பதார்த்தத்தை சிறப்பாக அறிதல்-in depth perception ஆகும். எப்போது உயிரின் செயலை-காரியத்தை பார்த்தல் அறிதல் என்று நாம் சொல்கிறோமோ, அப்போது பார்த்தல் தர்சன குணத்தின் காரியம் என்றும் மற்றும் அறிதல் ஞான குணத்தின் காரியம் என்றும் கொள்ள வேண்டும். உயிரின் பயன்பாடு-உபயோகம்-பிரயோஜனம்-usefulness பதார்த்தத்தை பார்ப்பதில் செல்லும்போது அதை **தர்சனோப யோகம்** என்றும், உபயோகம் பதார்த்தத்தை அறிதலில் செல்லும்போது அதை **ஞானோப யோகம்** என்றும் சொல்கிறோம். பிறவி உயிர்களான நமக்கு அறியும் செயலுக்கு முன் அதாவது ஞானோப யோகத்திற்கு முன்னர் பதார்த்தத்தை பொதுவாக அறியும் தர்சன குணத்தின் காரியமான தர்சனோப யோகமே நிகழ்கிறது.

சக்ஷுதர்சனம், அசக்ஷுதர்சனம், அவதிதர்சனம், கேவலதர்சனம் என நான்கு பர்யாயங்கள் தர்சன குணத்தின் பர்யாயங்களாகும்.

1.சக்ஷுதர்சனம்: கண் புலத்தின் வழியாக எந்த மதி ஞானம் உன்டாகிறதோ அதற்கு முன்னர் நிகழும் பொதுவான பார்க்கும் (சாமான்ய அவலோகன்) நிகழ்வை சக்ஷுதர்சனம் என்று சொல்கிறோம்.

2.அசக்ஷுதர்சனம்: கண் புலத்தை தவிற மற்ற நான்கு புலன்கள் மற்றும் மனம் மூலம் எந்த மதிஞானம் உன்டாகிறதோ அதற்கு முன்னர் நிகழும் பொதுவான பார்க்கும் நிகழ்வை அசக்ஷுதர்சனம் என்று சொல்கிறோம்.

3.அவதிதர்சனம்: அவதி ஞானத்திற்கு முன் நிகழும் பொதுவான பார்க்கும் நிகழ்வை அவதிதர்சனம் என்று சொல்கிறோம்.

4.கேவலதர்சனம்: கேவலஞானத்துடன் சேர்ந்தே நிகழும் பொதுவக பார்த்தலை கேவலதர்சனம் என்று சொல்கிறோம்.

உயிரின் ஸ்வபாவம்-இயல்பு பார்த்தல், அறிதல் என்று சற்றுமுன் தெரிந்து கொண்டோம். உயிரை **ஞாதாதிருஷ்டா** என்றும் கூட சொல்லுவார்கள். இது பார்த்தல் தர்சன குணத்தின் காரியமும், அறிதல் ஞான குணத்தின் காரியமும் ஆகும். நம்மைப்போன்ற (பிறவி உயிர்களின்) உபயோகம் எப்போது பார்க்கும் பக்கம் இருக்கிறதோ அப்போது அறிதல் பக்கம் இருப்பதில்லை, மற்றும் எப்போது அறிதல் பக்கம் இருக்கிறதோ அப்போது பார்க்கும் பக்கம் இருப்பதில்லை. நமக்கு எந்த ஞானோபயோகம் நிகழ்கிறதோ அது தர்சனோபயோகம் மூலமே நிகழ்கிறது. [அதாவது நம்மை போன்ற பிறவி உயிர்களுக்கு தர்சனோபயோகம் ஏற்பட்ட பிறகே ஞானோபயோகம் ஏற்படுகிறது. அதாவது பொதுவாக ஒரு பதார்த்தத்தை பார்த்த பிறகே அதைப்பற்றிய சிறப்பாக அறிதல் உண்டாகிறது.] ஆனால் கேவலி பகவான்களுக்கு அதாவது அரஹந்தர்களுக்கும், சித்தர்களுக்கும் இரண்டு உபயோகமும் ஒரே சமயத்தில் ஒன்றாகவே உண்டாகிறது. தர்சனோபயோகமும், ஞானோபயோகமும் ஒருசேர ஒன்றாகவே உண்டாகிறது. அதாவது கேவலதர்சனமும், கேவலஞானமும் சேர்ந்தே-ஒன்றாகவே உண்டாகிறது.

ஞான-அறிவு குணத்திற்கு எட்டு பர்யாயங்கள் ஆகும். அவைகளில் மித்யா-கெட்ட அறிவுக்கு மூன்று பர்யாயங்கள். அவைகளாவன-**குமதிஞானம், குசுருதஞானம், குஅவதிஞானம்** என்பனவாகும். குஅவதிஞானத்தை **விபங்கஞானம்** என்றும் கூட சொல்லப்படுகிறது. ஆத்மஞானம் இல்லாத (தன்னைப்பற்றிய அறிவு இல்லாத) ஜினவாணியின் அறிவுகூட மித்யாஞானம்-கெட்டஞானம்-குஞானம் என்று சாஸ்திரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மஞானம் (தன்னைப் பற்றிய அறிவு) வந்த பிறகே, எல்லா ஞானமும் ஆத்ம சம்பந்த ஞானமும், மற்றும் அன்னிய பதார்த்தங்களில் சம்பந்த ஞானமும் **சம்யக்ஞான** மாக ஆகிவிடுகிறது. மித்யாதிருஷ்டியின்- மூடநம்பிக்கை உடையவரின் சரித்திரம், பூகோளம், கணிதம் முதலான உலகியல் அறிவும் மித்யாஞானம் என்றே சொல்லப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். அந்த உயிருக்கு சம்யக்தர்சனம் (தன்னை-ஆத்மாவை அறிந்து நம்பிக்கை) வந்த பிறகு அவருடைய சரித்திரம், பூகோளம், கணிதம் முதலான உலகியல் அறிவும் கூட சம்யக்ஞானம் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் அப்போதுதான் அந்த உயிருக்கு வஸ்த்து ஸ்வரூபம்-பொருளின் இயல்பு பற்றிய அறிவு இருக்கிறது, தான் யார், பிற பொருள்கள் யாவை என்று பிரித்தறியும் பேதவிஞ்ஞானம் இருக்கிறது, சுயத்தை-தன்னை நேரடியாக அனுபவித்ததாக அந்த உயிர் இருக்கிறது. [தத்துவ அறிவில்லாத உலகியல் அறிவு கெட்ட அறிவு, தத்ததுவ அறிவுடன் கூடிய உலகியல் அறிவு நல்லறிவு என தெரிந்து கொள்ளுங்கள். பொருள்களை பிரித்தறியும் அறிவு நன்ஞானம், பொருள்களை பிரித்து அறிய முடியாத எல்லா அறிவும் மித்யா ஞானமாகும். அது சாஸ்திர அறிவாக இருந்தாலும்கூட தன்னையும் பிற பொருள்களையும் பிரித்தறியும் அறிவு இல்லாவிடில் மித்யா ஞானமே!]

சம்யக்ஞானத்தின்-நல்லறிவின் ஐந்து பர்யாயங்களாவன-**சுமதி ஞானம், சுசுருத ஞானம், சுஅவதி ஞானம், மனப்பர்யய ஞானம் மற்றும் கேவல ஞானம்** என்பன. எதுவரை கேவலஞானம் அடையவில்லையோ அதுவரை எல்லா சம்சார-பிறவி உயிர்களுக்கும், அதாவது ஒரு புல உயிர் முதல் ஐந்து புல உயிர் வரை உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் மதி மற்றும் சுருதம் ஆகிய இரண்டு ஞானங்களே (ஞானத்தின் பர்யாயங்களே) இருக்கின்றன. இந்த இரண்டு பர்யாய ஞானமும் முழுமையாக இல்லாத நிலை-fully absent என்பது எப்போதும் இருப்பதில்லை. சூக்ஷ்ம ஏகேந்திரிய உயிருக்குக்கூட ஞானத்தின் பகுதி கொஞ்சமாவது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. எந்த உயிரும் எப்போதும் ஞானம் இல்லாமல் இருக்கவே முடியாது. பர்யாயத்தில் ஞானத்தின் மறைப்பு அதாவது வெளிப்படும் அறிவில் கூடுதல் குறைதலாக இருக்க முடியும். ஞானத்தை கெட்ட அல்லது நல்ல (மித்யா அல்லது சம்யக்) என்று பிரிக்காமல் ஞானத்தின் ஐந்து பர்யாயங்களான அதாவது மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பர்யயஞானம் மற்றும் கேவலஞானம் ஆகியவைகளின் ஸ்வரூபம் பற்றி இப்போது தெரிந்து கொள்ளலாம்.

மதிஞானம்: புலன்கள் மற்றும் மனம் இவைகளின் நிமித்தத்தால் பதார்த்தங்களை அறியும் செயலை-பர்யாயத்தை மதிஞானம் என்று சொல்கின்றனர். இது பிற பதார்த்தங்களை புலனயோ-இந்திரியத்தையோ மனதையோ சார்ந்து அறியும்-பரோக்ஷ அறிவாகும். இதை பொறியறிவு என்றும் சொல்லுவார்கள். ஆனால் எப்போது உயிர் நிஜ ஆத்மாவை-தன்னை அறிகிறதோ அப்போது புலன்கள் மற்றும் மனம் இவைகளின் பக்கம் தன் உபயோகத்தை நீக்கி, நேரடியாக ஞானம் உள்நோக்கும் செயலை செய்து, ஞான உபயோகத்தை தன்பக்கம் திருப்புகிறது. அந்த சமயம் நிஜ ஆத்மாவைப்பற்றி எந்த அறிவு உண்டாகிறதோ அதை மதிஞானம் என்று சொல்கின்றனர். **இது பித்யக்ஷ ஞானம் ஆகும்**. [சுய அனுபவம் பிரத்யக்ஷம்-உயிர் தன்னை தானே நேராகவே புலன்கள் மற்றும் மனம் இவைகளில் எதன் உதவியுமின்றி அறிதல் நேரடி அறிவாகும்.]

ஸ்ருதஞானம்: மதி ஞானத்தால் அறிந்த பதார்த்தத்தின் சம்பந்தமான மற்ற பதார்த்தத்தை அல்லது பொருளை அறியும் அறிவை ஸ்ருதஞானம் என்று சொல்கின்றனர். எப்படி என்றால் சர்க்கரை என்ற சப்தத்தை கேட்டபோது அல்லது படித்தபோது அந்த சப்தம் மூலம் எந்த பொருள் நம் அறிவுக்கு வருகிறதோ அது மதிஞானம் மற்றும் அந்த சப்தத்தின் மூலம் அறிந்த பொருள் இதுதான் என்ற தகவலை தரும் சர்க்கரை (வெளியில் சர்க்கரையை பார்த்து) இந்த பதார்த்தம்தான் என்று அறிதல் ஸ்ருதஞானம். இப்போது உங்கள் மூளையில் என்ன கேள்வி எழுகிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். இதுதானே அந்த கேள்வி, எந்த உயிருக்கு வெரும் ஒன்று அல்லது இரண்டு புலன்கள் மட்டும் இருக்கிறதோ அந்த உயிர்களுக்கு ஸ்ருதஞானம் எப்படி உண்டாகிறது? அதற்கு பதில் இதுதான்-ஏகேந்திரிய உயிருக்கு ஸ்பர்சன இந்திரியத்தின் (தொடு புலனின்) நிமித்தமாக தொடு அறிவு உண்டாவது மதிஞானம் மற்றும் இந்த தொடுதல் அறிவால் உண்டாகும் அனுபவம் அதாவது இது துக்கமா அல்லது சுகமா என்று அறிதல் ஸ்ருதஞானம் ஆகும்.

ஆத்மாவின் சுத்த, அனுபவ வடிவ ஸ்ருதஞானத்தை **பாவஸ்ருதஞானம்** என்று சொல்கின்றனர். அந்த ஆத்மா சம்பந்தமான விசாரணை, சர்ச்சை, லக்ஷணம், ஆத்மானுபவம் செய்யும் வழி (உபாயம்) முதலியன எந்தெந்த சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கிறதோ அந்த எல்லா ஆகமங்களையும்-அதாவது ஜினவாணியை **த்ரவ்யஸ்ருதம்** என்று சொல்கின்றனர். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன வென்றால் த்ரவ்யஸ்ருதம் அதாவது திவ்யத்தொணி கூட சப்தத்தினால் உண்டானதாகும், வாணி-சப்த வடிவமாகும், ஞானத்தின் பரயாயமில்லை. இப்போது யாராவது சாஸ்திரத்தில் ஞானம் இல்லை, திவ்யத்தொணியில் ஞானம் இல்லை என்று கூறினால் உங்களுக்கு ஆச்சர்யம் உண்டாகாது, எந்த நோக்கில் இப்படி சொல்கிறார்கள் என்பது உங்கள் கவனத்தில் வரும்.

அவதிஞானம்: எந்த அறிவு திரவ்ய, ஷேத்ர, கால, பாவ-bhava எல்லைக்கு உட்பட்டு உருவ பதார்த்தத்தை புலன்கள் மற்றும் மனதின் உதவியின்றி நேரடியாக தெளிவாக அறியும் அறிவின் பர்யாயத்தை அவதிஞானம் என்று சொல்கிறோம். தேவ கதியில் இருக்கும் தேவகதி உயிர்களுக்கும், நரக கதியில் இருக்கும் நாரகி உயிர்களுக்கும் இந்த அவதிஞானம் பிறவியின் ஆரம்பத்திலிருந்தே இருக்கிறது. ஆகையால் நரக தேவ கதி உயிர்களின் இந்த அறிவை **பவபிரத்யய அவதிஞானம்** என்று சொல்கின்றனர். சில மனமுடைய பஞ்சேந்திரிய விலங்குகதி உயிர்களுக்கும் சில மனித உயிர்களுக்கும் கூட அவதிஞானம் இருக்க முடியும். இந்த ஞானத்தின் மூலம் கடந்தகால, எதிர்கால மற்றும் வேறு இடங்களில் நிகழ்காலத்தில் நிகழும் நிகழ்வுகளை இந்த உயிர்கள் நேரடியாக அறிய முடியும். இந்த அவதிஞானத்தை **குணப்பிரத்யய அவதிஞானம்** என்று கூறுகின்றனர். இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. குஅவதி ஞானத்தின்-விபங்கஞானத்தின் மூலம் கூட இந்த விஷயங்களை அறிகிறார்கள்.

இந்த அறிவின் காரணத்தால் குறிப்பிட்ட சில நபர்கள் தங்களை முக்காலத்தையும், மூவுலகத்தையும் அறிபவர் என்றும், அதிசயங்களை செய்து காட்டக்கூடிய முனிவர்-தபஸ்வி என்றும் கூறிக்கொண்டு உலகத்தை ஏமாற்றுபவர்களாக இருக்கிறார்கள், அவர்களுடைய மாயாஜாலத்தில் சிக்கிக்கொண்டு தங்கள் பொருளை இழப்பவர்களும் உண்டு. மூட நம்பிக்கை உள்ளவர்கள் இவர்களை கடவுளாகவே கற்கனை செய்து கொண்டு வணங்கவும் செய்கிறார்கள். அவதி ஞானத்தின் இயல்பு பற்றி தெரிந்தவர்கள் இப்படிப்பட்ட மாயாண்டிகளையும் அவர்கள் செய்யும் மாயாசாரங்களையும் கண்டு ஆச்சர்ய மடைவதில்லை. நற்காட்சி உடைய உயிர்களிடம் இருக்கும் அவதி ஞானத்தை **சுஅவதிஞானம்** என்று சொல்கின்றனர்.

மனப்பர்யயஞானம்: இந்த ஞானம் சில பாவலிங்கி முனிகளுக்கு இருக்கிறது. நிர்வாண-ஆடைகள் அணியாத திகம்பர-திக்கையே ஆடையாக கொண்ட பாவலிங்கி முனிவர்களைத்தவிற மற்றவர்களுக்கு இந்த ஞானம் இருப்பதில்லை. எந்த ஞானம் திரவ்ய, ஷேத்ர, கால, பாவ எல்லைக்குட்பட்டு பிறருடைய மனதில் இருக்கும் உருவமுடைய பதார்த்தங்களை நேரடியாக, தெளிவாக அறிகிறதோ அதை மனப்பர்யயஞானம் என்று சொல்கின்றனர்.

கேவலஞானம்: எந்த ஞானம் முக்காலத்தின் (கடந்த, நிகழ், எதிர்) மற்றும் அலோகாகாசம் மற்றும் லோகாகாசத்தின் மூன்று லோகங்களிலும் உள்ள எல்லா திரவிய-குண-பர்யாயங்களையும் ஒரே சமயத்தில், ஒன்றாகவும், தெளிவாகவும், நேரடியாகவும் அறிகிறதோ அதை கேவலஞானம் என்று சொல்கின்றனர். கேவலஞானத்தின் சிறப்பு என்னவென்றால் கேவலி பகவான் எல்லா பதார்தங்களையும் அவைகளின் பக்கம் பார்த்து தெரிந்து கொள்கிறார் என்பதே இல்லை, அவர் தன் நிஜ ஆத்மாவில் முழுமையாக ஆழ்ந்திருக்கிறார். அவர் தன் ஆத்மாவின் முழுவடிவத்தையும் அறிகிறார். அவரிடம் அனந்த ஞானம் வெளிப்பட்டிருக்கிறது மற்றும் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா இடம் பெயரும் மற்றும் நிலையாக இருக்கும் உருவமுடைய மற்றும் உருவமற்ற வஸ்துக்கள்-பதார்த்தங்கள் எல்லாம் அவருடைய ஞானத்தில் ஒவ்வொரு சமயமும் பிரதிபலிக்கின்றன. [கேவலி பகவானின் அசங்யாத பிரதேசமும் அறியும் திறைமை கொண்டதாக ஆகிவிடுகிறது. பிறவி நிலையில் தான் கொண்ட உடலளவு அசங்க்யாத பிரதேசம் தொடு அறிவையும், மற்ற நான்கு திரவிய புலன்கள் மற்றும் திரவிய மன அளவு இருக்கும் உயிர் பிரதேசங்கள் மட்டுமே அந்தந்த புல சம்பந்தமான அறிவை ஏற்ற இறக்கங்களுடன் அறியும் திறைமையை கொண்டதாக இருக்கின்றன. ஆனால் கேவலி பகவானின் எல்லா பிரதேசமும் எல்லாவற்றையும் (பிரபஞ்சத்தையே) பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி போல ஆகிவிடுகிறது. அந்த பிரதிபிம்பங்களை தன் ஆன்மாவில் ஆழ்ந்த வண்ணமே நேரடியாக பார்த்து பிரபஞ்சத்தின் எல்லா பொருள்களின் (திரவ்ய-குண-பர்யாயங்களின்) முக்காலத்தையும் முழுமையாக ஒவ்வொரு சமயமும் உள்ளது உள்ளபடியே கேவலி பகவான் அறிகிறார்.] லோக அலோகாகாசத்தில் உள்ள அனந்த வஸ்த்துக்களின் அனாதியிலிருந்து அனந்த காலம் வரை பற்றிய அறிவு அவருக்கு நிகழ்காலத்தில் ஒட்டு மொத்தமாக ஒன்றாக இருப்பது போலவே அவர் தன் கேவல ஞானத்தில் பார்த்து அறிகிறார். கேவலஞானம் என்னவோ ஸ்வபர பிரகாசக்-தன்னையும், பிற பொருள்களையும் பிரகாசப்படுத்திக் காட்டும் மஹிமை கொண்டது, உன்னதமானது. (kevalgyan is known for it’s nobility, Greatness.)

கேவலஞானத்தால் க்ரம்பத்தபர்யாயம் நிரூபணம் ஆகிறது என்பதை நாம் ப்ரமேயத்வ குணத்தை பற்றி சர்ச்சை செய்யும்போது பார்த்தோம். கேவலி எதிர்காலத்தில் நிகழவிருக்கின்ற பர்யாயங்களை அறியக்கூடியவராக இருக்கிறார் ஏனெனில் அது அவரிடம் உள்ள கேவலஞானத்தின் திறைமையாகும், தகுதியாகும், சாமர்த்தியமாகும். ஆனால் எந்த ஒரு பர்யாயமும் இமியளவுகூட மாற்றம் அடைய முடியாததாக, முன் பின் நிகழுமாறு செய்ய முடியாததாக, சிறிதளவுகூட மாற்றம் செய்ய முடியாததாக இருக்கிறது. ஒவ்வொரு

திரவியத்தின் ஒவ்வொரு பர்யாயமும் சுதந்திரமானதாகவும் மற்றும் நிச்சயிக்கப்பட்டதாகவும் இருக்கிறது என்ற திடமான முடிவுக்கு வருவதே உண்மையான புருஷார்த்தமாகும்; ஏனென்றால் அப்படி முடிவு செய்த பிறகே நம்முடைய பார்வை-நோக்கு பிறவற்றின் மீதும் மற்றும் நம் பர்யாயத்தின் மீதுமிருந்தும் விலகி; நம் முக்கால, எப்போதும் நிலையாக இருக்கக்கூடிய த்ரவ்ய இயல்பின் பக்கம் நிலை கொள்கிறது. ஆகையால் ஞான பர்யாயங்களின் இயல்பை அறிந்து க்ரம்பத்தபரயாயத்தை உள்ளது உள்ளபடியே நிர்ணயம் செய்வதே நாம் செய்யக்கூடிய தகுதியான காரியமாகும். "பர்யாயம் ஒன்றன்பின் ஒன்றாக குறிப்பிட்ட வரிசைக்ரமத்தில்-க்ரமபத்தமாக நிகழ்கிறது என்றால் நம்முடைய புருஷார்த்தத்தில் என்ன இருக்கிறது? போன்ற விபரீதமான முடிவுக்கு வருதல் தகுதியான செயல் அல்ல.

ஒரு சமயத்தில் ஒரு உயிரிடம் ஞான குணத்தின் ஒரு பர்யாயம் மட்டுமே உபயோகத்தில் இருக்கிறது. ஆனால் ஒரு உயிருக்கு எந்தெந்த ஞானபர்யாயங்கள் (ஒரே சமயத்தில் உபயோகத்திலோ அல்லது உபயோகத்துக்கு வராமலோ சத்தாவிலோ) இருக்கமுடியும் என்பதை இப்போது பார்க்கலாம். குறைந்த பட்சம் ஒரு ஞானம் இருக்கும் என்றால் அது கேவலஞானமாகவே இருக்க முடியும். கேவலஞானம் அடைந்த பிறகு மற்ற பிற ஞானங்களால் என்ன பிரயோஜனம் இருக்கிறது, இல்லையா? யாருக்காவது இரண்டு ஞானம் இருக்குமென்றால் மதிஞானம் மற்றும் சுருதஞானம் இரண்டும்தான் இருக்கும். இந்த இரண்டுமே மித்யா ஞானமாகவோ அல்லது அல்லது இரண்டுமே சம்யக்ஞானமாகவோ தான் இருக்கும். யாருக்காவது மூன்று ஞானம் இருக்குமென்றால் அது இவ்வாறு இருக்கலாம். 1. மதிஞானம், சுருதஞானம் மற்றும் அவதி ஞானம்-மூன்றும் மித்யாவாகவோ அல்லது மூன்றும் சம்யக்காகவோ இருக்கும். அல்லது 2. சுமதிஞானம், சுசுருதஞானம் மற்றும் மனப்பர்யயஞானம் ஆகிய மூன்றும் இருக்கலாம். யாருக்காவது நான்கு ஞானம் இருக்குமென்றால் சுமதி, சுசுருத, சுஅவதி மற்றும் மனப்பர்யய ஞானம் என்ற நான்கு ஞானங்கள் இருக்க முடியும். [எத்தனை ஞானங்கள் இருந்தாலும் ஒரு சமயத்தில் ஒரு ஞானத்தையே உயிர் உபயோகம் செய்ய முடியும்.]

உயிரின் சிரத்தை-நம்பிக்கை குணத்தில் முக்கியமாக இரண்டு பர்யாயங்கள் இருக்கின்றன. அவை மித்யாதர்சன்-மூடநம்பிக்கை மற்றும் சம்யக்தர்சன்- நன்னம்பிக்கை என்பன.

மூடநம்பிக்கை-மித்யாதர்சனம்: தத்துவம் அல்லாதவறில் நம்பிக்கையை (அதத்வ ஸ்ரத்தானத்தை) மூடநம்பிக்கை என்று சொல்கின்றனர். அப்படிப்பட்ட உயிர்களுக்கு ஸ்வ தத்துவத்தில் நம்பிக்கை இருப்பதில்லை. உயிர் முதலான ஏழு தத்துவங்கள் பற்றி எதிர்மறையான நம்பிக்கையே இருக்கிறது. உடலை தான் என்றும், விருப்பு, வெறுப்பு உணர்வை தான் செய்கிறேன், அனுபவிக்கிறேன் என்றும், பிற பொருள்கள் தன்னுடையது என்றும், அதற்கு உறியவன் தானே என்றும், புண்ணியத்தை நல்லது என்றும், பாபத்தை கெட்டது என்றும், புண்ணியம் செய்து கொண்டேயிருந்ததால் மோக்ஷம் கிடைத்துவிடும் என்பது முதலான விபரீதமான நம்பிக்கைகளை-அவைகளின் மேல் இருக்கும் ஈடுபாட்டை-சிரத்தையை மூடநம்பிக்கை-மித்யாதர்சனம் என்று சொல்கின்றனர். இந்த நம்பிக்கை பிறவியிலிருந்தே இருக்குமானால் அதை **அக்ரஹீத மித்யாத்வம்**-உயிரிலேயே படித்திருக்கும் மூடநம்பிக்கை என்று சொல்கின்றனர். குதேவர், குகுரு, குசாஸ்திரங்கள் முதலியவைகளை நுகர்வதால் ஏற்கனவே உயிரில் படிந்திருக்கும் இருக்கும் மூடநம்பிக்கை மேலும் உறுதியாவதோடல்லாமல் புதிய புதிய கற்பனையான மூடநம்பிக்கைகள் தோன்றுவதை **கிரஹீத மித்யாத்வம்**-சேர்த்துக் கொண்ட மூடநம்பிக்கை என்று சொல்கின்றனர்.

நன்நம்பிக்கை-சம்யக்தர்சனம்: எந்த உயிர் வீதராக சர்வஞ்ஞரால் சொல்லப்பட்ட உபதேசத்தை கேட்டு உயிர் முதலான ஏழு தத்துவங்கள் உண்மையானதே என்ற முடிவு செய்து, உண்மயான தேவ-குரு-சாஸ்திரங்களின் இயல்பை-லட்சணத்தை அறிந்து இவைகளே நுகர்வதற்கு உகந்தவை என்று உறுதி செய்து, மோக்ஷமார்கத்தை இவ்வாறே இருக்கிறது என்று உண்மையான முக்திப்பாதையை உறுதி செய்து, ஸ்வதத்துவம் மற்றும் பிறதத்துவங்களை உள்ளது உள்ளபோல அறிந்து, உறுதி செய்து, தன்னையும் பிறபொருள்களையம் பேதவிஞ்ஞானத்தின் (பிரிவு படுத்தி பார்க்கும் அறிவின்) மூலம் வேறுபடுத்தி பார்த்து மற்றும் உள்முகம் கொண்டு தன்னையே சிந்தித்து, தியானித்து ஆத்ம அனுபவத்தை அடையும்போது அந்த உயிருக்கு சிரத்தை குணத்தின் சம்யக்தர்சன-நன்நம்பிக்கை-நற்காட்சி பர்யாயம் வெளிப்படுகிறது.

சம்யக்தர்சன பர்யாயம் வெளிப்பட்ட அதே சமயத்தில் ஞான குணத்தின் பர்யாயம் கூட சம்யக்ஞானமாகவும்-அறிவு நல்லறிவாகவும், மேலும் சாரித்ர-ஒழுக்க குணத்தின் பர்யாயமும் சம்யக்சாரித்ரமாகவும்-நல்லொழுக்கமாகவும் நிகழத் துவங்கி விடுகின்றன. இந்த மூன்று குணங்களின் பர்யாயங்கள் மட்டுமல்ல, உயிரின் எல்லா அனந்த குணங்களும் ஸ்வபாவ வடிவில்-இயல்பில் பரிணமிக்கத் தொடங்கி விடுகின்றன. ஆத்மாவில் ஆழ்ந்து இருப்பதால் அதாவது சுத்தோபயோகத்தால் அதீந்திரியசுகத்தை நேரடியான அனுபவம் செய்தல் நிகழ்கிறது. எவ்வளவு கஷாயங்கள் இல்லாமல் போகிறதோ அவ்வளவு அகஷாய வடிவ சாந்தி-அமைதி கிடைக்கிறது.

உயிர் சாரித்ர குணத்தின் பர்யாயம் சுத்தோபயோகத்திலிருந்து சுபோபயோகத்திற்கோ அல்லது அசுபோபயோகத்திற்கோ வந்த பிறகும்கூட இப்போதும் சிரத்தை குணத்தின் சம்யக்தர்சன பர்யாயம் செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது. மீண்டும் மீண்டும் சுத்தோபயோகம் செய்வதால் அதன் சம்யக் ஸ்ரத்தை மேலும் திடமாகிக்கொண்டே இருக்கிறது. யாராவது சிலர், சில சமயம் சம்யக்தரிசனத்திலிருந்து இழிந்து மூடநம்பிக்கையை அடையவும் செய்கிறார்கள். ஆனால் பிறகு மீண்டும் நன்முயற்சி-நல்புருஷார்த்தம் செய்து நற்காட்சியை அடைய அவர்களால் முடியும். கரணானுயோக நோக்கில் ஸ்ரத்தா குணத்தின் சாசாதனம் மற்றும் மிஸ்ரம் என்ற இரண்டு அவஸ்தைகள்-நிலைகள்-பர்யாயங்கள்-குணஸ்தானங்கள் சம்யக்துவத்திலிருந்து விழும் உயிர்களிடம் நிகழ்கிறது என்றாலும் இந்த பர்யாயங்கள் மிக அல்ப காலமே (மிக குறைந்த காலமே) நிகழ்கிறது, இது பற்றிய வர்ணனையை இப்போது நாம் இங்கு பார்க்கப் போவதில்லை.

சாரித்ர குணத்தின் பர்யாயங்கள் பற்றி விரிவாக தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால் அடுத்த கடிதத்தில் அதைப்பற்றி முழுமையாக எழுதுகிறேன். சம்யக் தர்சனத்துடன் சம்யக் சாரித்ர-நல்லொழுக்க குணத்தின் பர்யாயதை அடைந்த பிறகுகூட அந்த சாரித்ர பர்யாயத்தில் ஆசையுடன் கூடிய நிலையும், ஆசையற்ற நிலையும் அதாவது **சராகதாவும்** மற்றும் **வீதராகதாவும்** ஒன்றாக ஒரே நேரத்தில் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக க்ரமமாக ஆசையுடன் கூடிய தன்மை குறைந்து கொண்டே போகிறது மற்றும் வீதராக தன்மை வளர்ந்து கொண்டே போகிறது. கஷாயங்கள் முழுவதும் அழிந்த நிலையில் பூரண வீதராக தன்மை உண்டாகிறது, அதற்குப்பிறகே ஞானத்தின் மதி ஸ்ருத பர்யாயங்கள் அழிந்து கேவலஞான பர்யாயம் உண்டாகிறது.

ஞானம், தர்சனம், ஸ்ரத்தை, ஒழுக்கம் இவைகளுக்கு சமமாக சுகம் மற்றும் வீர்யம் கூட உயிரின் சிறப்பு குணங்களாகும். சுக குணத்தின் அதீந்திரிய-புலன்களுக்கு அப்பாற்பட்ட சுகம் இயல்பான பர்யாயமாகும். நாம் உலக வாழ்வில் எதை சுகம் என்று நம்புகிறோமோ அந்த புலன்கள் மூலம் உண்டாகும் சுகம் மற்றும் துக்கம் இரண்டுமே சுக குணத்தின் விபாவ-

திரிபு பர்யாயமாகும். ஆத்மானுபூதி அடையும்போது அதே சமயத்தில் அதீந்திரிய ஞானமும், அதீந்திரிய சுகமும் கிடைக்கிறது. எந்த அளவு ஆத்மாவில் ஆழ்தல் அதிகமாகிறதோ அந்த அளவு அதிக சுகம் கிடைக்கிறது. முழு வீதராக தன்மை அடைந்தவுடன் முழு சுகமும் கிடைக்கப்பெறுகிறோம், மற்றும் கேவல ஞானம் அடைந்தவுடன்தான் அனந்த சுகத்தை அனுபவத்தில் உணர முடிகிறது.

வீர்யம் கூட உயிரின் சிறப்பு குணமாகும். வீர்யம் என்றால் பலம். உடலின் பலம் உயிரின் வீர்ய குணத்தின் பர்யாயம் இல்லை. வீர்ய குணத்தின் பர்யாயத்தைதான் **புருஷார்த்தம்** என்ற பெயரால் குறிப்பிடுகிறார்கள். பர்யாயத்தில் ஸ்வபாவத்தை-இயல்பை உருவாக்குதல் இந்த வீர்ய குணத்தின் செயலாகும். மோக்ஷத்தின் பக்கம் நம்மை எடுத்துச் செல்லும் இந்த பர்யாயமே உண்மையான புருஷார்த்தமாகும். நாம் லௌகிக வாழ்க்கையில் செய்யும் புருஷாரத்தம்- முயற்சிகள் எல்லாம் விபாவ-திரிபு புருஷார்த்தமாகும், ஏனென்றால் அதனால் சம்சாரம் அதாவது பிறவி சுழற்சிதான் வளர்ச்சியடைகிறது. ஆத்மாவின் ஸ்வபாவம்-இயல்பு என்னவோ அனாதி காலமாக இருக்கிறது, நம்மிடமே சக்தி வடிவில் எப்போதும் இருக்கிறது ஆனால் அந்த ஸ்வபாவம் நம்மிடமே இருப்பதை உறுதி செய்தல், நம் பார்வையை அதன் பக்கம் கொண்டு செல்லுதல், ஸ்வபாவத்தின் மேல் நம்பிக்கை கொள்ளுதல், ஸ்வபாவத்தில் நிலைத்தல் எல்லாம் வீர்ய குணத்தின் காரியமாகும், இதையே உண்மையான புருஷார்த்தம் என்று சொல்கின்றனர்.

க்ரியாவதி சக்தி கூட உயிரின் ஒரு சிறப்பு குணமாகும். அதற்கு இடம் பெயரும் செயல் மற்றும் ஒரே இடத்தில் இருக்கும் செயல் என இரண்டு பர்யாயங்கள் இருக்கின்றன. உயிர் இடம் பெயர்தலும் ஒரே இடத்தில் நிலைத்தலும் உயிரின் க்ரியாவதி சக்தியின் காரியமாகும் மற்றும் புத்கலம்-உடல் இடம் பெயர்தலும் ஒரே இடத்தில் நிலைத்தலும் புத்கலத்தின் க்ரியாவதி சக்தியின் காரியமாகும். உயிரும் உடலும் ஒரே காலத்தில் (ஒன்றாக) ஒரே செயலை செய்யும்போது உடலின் போதல் வருதல் காரியத்தை தானே (ஆத்மாவே) செய்வது போன்ற பிரம்மை-குழப்பம் உயிருக்கு உண்டாகிறது. [உண்மையில் இவை இரண்டும் ஒன்றுபோல செயல்படும் இரண்டு பொருள்களின் தனித்தனி செயல்களாகும் என அறிதல் வேண்டும்.]

எத்த பர்யாயம் புத்கலதினது மற்றும் எது என்னுடையது அதாவது ஆத்மாவினுடையது என்பது அறிந்து கொண்ட பிறகு அவைகளின் அடையாளங்களை-லட்சணங்களை வைத்து ஆத்மாவும் உடலும் வேறு வேறு என்று அறிந்து கொள்ளுதல் இப்போது சுலபமாக ஆகிவிட்டது. தன்னைத்தான் அறிதல் நமக்கு உபயோகமானதாகையால் சிறப்பு குணங்கள் பற்றிய இந்த பயிற்சி நமக்கு ஒரு நிர்வாகியாக-செயல்திறன் கொண்டதாக இருக்கும். உயிர் மற்றும் புத்கலம் தவிர்த்த மற்ற நான்கு திரவியங்கள்-தர்மம், அதர்மம், ஆகாசம், காலம் ஆகியவைகளின் சிறப்பு குணங்கள் பற்றி திரவியத்தின் இயல்பு-ஸ்வரூபம் பெயர் கொண்ட கடிதத்தில் முன்னரே நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஒழுக்க-சாரித்ர குணத்தின் சிறப்புகள் பற்றிய கடிதத்தை சீக்கிரமாகவே அனுப்புகிறேன்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-18 16-04-1995

உயிரின் ஒழுக்க-சாரித்ர குணமும் அதன் பர்யாயங்களும்.

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதங்கள்.

இதுவரை நாம் கடிதங்கள் மூலம் சீக்கிரமாகவும், சுலபமாகவும் பிரபஞ்சம், திரவியம், குணம், பர்யாயம், பொது குணங்கள், சிறப்பு குணங்கள் மற்றும் இன்னும் சில விஷயங்கள் பற்றி தெரிந்து கொண்டோம். உண்மையில் நாம் சமண தத்ததுவத்தை தெரிந்து கொள்ள தேவையான அடிப்படை விஷயங்களை **ஓம் நம: சித்தேப்பிய:** போட்டு கற்க ஆரம்பித்துவிட்டோம் என்றே சொல்லலாம். அந்த காலத்தில் குழந்தையை பள்ளியில் சோர்க்கும்போது குழந்தையின் கைவிரலை பிடித்து அவன் முன் பரப்பியுள்ள தானியத்தில் ஓம் நம: சித்தேப்பிய: என்று எழுதி படிப்பு சொல்லிக் கொடுக்க ஆரம்பிப்பார்கள். இதிலிருந்து எந்த சுபச்செயலை செய்ய துவங்கும்போதும் **ஓம்** என்ற எழுத்துடன் துவங்குவது பரவலாக பழக்கத்தில் உள்ளது.

தொடக்கத்தில் நாம் பொது குணங்களின் இயல்பை, ஸ்வரூபத்தை தெரிந்து கொண்டோம். ஆறு திரவியங்களிலும் இந்த குணங்கள் காணப்படுகின்றன, ஆகையால் இந்த பண்புகள் எங்கு இருக்கிறதோ அது ஒரு **திரவியம்** என்பதை நாம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஆறு திரவியங்களில் இது இன்ன திரவியம் என்று உறுதி செய்ய, அதன் சிறப்பு குணங்களை தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். அந்த சிறப்பு குணங்களின் விரிவான சர்ச்சையைத்தான் நாம் செய்து கொண்டு வருகிறோம். குணம் என்னவோ சக்தி வடிவமாகும் இந்த capacity என்னவோ அனாதியிலிருந்து அனந்த காலம் வரை எப்போதும் இருக்கும் திறனாகும். அந்த திறன் தன்னை ஒவ்வொரு சமயமும் வெளிப்படுத்தும் காரியம் கொண்டதாகும், அவஸ்தை உடையதாகும், வெளியில் தெரியும் வடிவமாக இருப்பதாகும், அதையே நாம் பர்யாயம் என்று சொல்கிறோம். அந்த வெளிப்படும் பர்யாயத்தின் மூலமே நாம் குணத்தை பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது. ஆகையால் இந்த சிறப்பு குணங்களின் பர்யாயங்களை பற்றி நாம் இப்போது தெரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். புத்கலத்தின் சிறப்பு குணங்கள் மற்றும் அவைகளின் பர்யாயங்கள் பற்றிய சர்ச்சைக்குப் பிறகு சென்ற கடிதத்தில் உயிர் பொருளின் சிறப்பு குணங்கள் மற்றும் அதன் பர்யாயங்கள் பற்றி சர்ச்சை செய்தோம். அவைகளில் ஒன்றான ஒழுக்க-சாரித்ர குணத்தை பற்றிய சர்ச்சையை இன்று செய்யலாம்.

உயிர் பொருள் அதன் சைதன்ய இயல்பால் அதாவது ஞானம் தர்சனம்-பார்த்தல் அறிதல் குணங்களின் காரணத்தால் மற்ற திரவியங்களிலிருத்து வேறானதாகும். தத்வார்தஸூத்திரம் என்ற நூலில் **உபயோஹோ லட்சணம்** என்று உயிரின் லட்சணமாக-அடையாளமாக சொல்லப் பட்டிருக்கிறது. அந்த உபயோகத்தில் இரண்டு பிரிவுகளாக ஞானோபயோகம் மற்றும் தர்சனோபயோகம் அதாவது பார்த்தல் மற்றும் அறிதல் என இரண்டாக இருக்கிறது. உபயோகம் எப்போது தன்னை அறிவதில் இருக்கிறதோ அதை **சுத்தோபயோகம்** என்று சொல்கின்றனர். உபயோகம் பிற பொருள்களை-பர பதார்த்தங்களை அறிந்து கொண்டிருக்கும்போது சுப உணர்வு வந்தால் அந்த அறியும் உபயோகத்தை **சுபோபயோகம்** என்று சொல்கின்றனர். மற்றும் உபயோகம் பிற பொருள்களை-பர பதார்த்தங்களை அறிந்து கொண்டிருக்கும்போது அசுப உணர்வு வந்தால் அந்த அறியும் உபயோகத்தை **அசுபோபயோகம்** என்று சொல்கின்றனர். இந்த சுப-அசுப உணர்வை அதாவது விருப்பு வெறுப்பை **கஷாயம்** அல்லது **துவர்ப்பு உணர்வுகள்** என்று சொல்கின்றனர்.

இப்போது நீங்களே சொல்லுங்கள், இந்த கஷாயம் என்பது என்ன? திரவியமா? குணமா? அல்லது அதன் பர்யாயமா? அது என்னவோ திரவியமாக இருக்க முடியாது ஏனென்றால் ஆறு திரவியங்களின் பெயர்கள்தான் நமக்கு தெரியுமல்லவா. கஷாயம் உயிர் பொருளில் மட்டுமே இருக்கிறது என்றாலும் எல்லா உயிர்களிடம் இது இல்லை. அரஹந்தர், சித்தர்களிடம் கஷாயம் இருப்பதில்லை, இந்த காரணத்தால் கஷாயம் குணமாகவும் இருக்க முடியாது. இதிலிருந்து கஷாயம் பரயாயமாகத்தான் இருக்க முடியும் என்று தெரிகிறது. அதையே உயிரின் சாரித்ர-ஒழுக்க குணத்தின் பர்யாயம் என்கிறார்கள். ஆனால் அது ஸ்வபாவ பர்யாயம் இல்லை, இயல்பு பர்யாயம் இல்லை, அசுத்த பர்யாயமாகும், விபாவ பர்யாயமாகும். ஒழுக்க குணத்தின் சுத்த பர்யாயத்தை **வீதராகத்துவம்**-விருப்புவெறுப்பற்ற நிலை என்றும் அசுத்த பர்யாயத்தை **சராகத்வம்**-கஷாயத்துவம்-விருப்பு வெறுப்புடன் கூடிய நிலை என்று கூறுகின்றனர். பிற குணங்களைப் பார்க்கும்போது சாரித்ர-ஒழுக்க குணத்தில் ஒரு சிறப்பு இருக்கிறது. அது என்னவென்றால் இந்த குணம் மற்ற குணங்களைப்போல ஒரே மாற்றத்தில் தாடாலடியாக முழுத்தூய்மை அடைவதில்லை, படிப்படியாகவே ஒழுக்கத்தில் சுத்தத்தன்மை-தூய்மையின் நிலை அதிகரித்துக்கொண்டே போகிறது, அதற்கு உகந்தார்போல் அசுத்தத்தன்மையும் குறைந்து கொண்டே போகிறது. சிரத்தை குணம் தீக்கட்சியிலிருந்து நற்காட்சியாக மாற்றமடைந்த பிறகு ஒழுக்க குணத்தில் ஒரு பகுதி வீதராக தன்மையாகவும் மற்ற பகுதி சராக தன்மையாகவும் என இரண்டு பிரவாஹங்கள்-இரண்டு ஓட்டங்கள் ஒன்றாக நிகழ்து கொண்டே இருக்கின்றன.

மூடநம்பிக்கை நிலையில் ஒழுக்க குணத்தில் வெறும் விருப்பு வெறுப்பு உணர்வே உண்டாகிறது, அதையே கஷாயம் என்று சொல்கின்றனர். கஷாயம் நமக்கு மிகவும் பழக்கமானதுதான் ஏனெனில் இரவு பகல் எந்நேரமும் நாம் கஷாயத்தை தானே செய்து கொண்டு இருக்கிறோம். எது நம்மை இறுக்கமாக இருக்க வைக்கிறதோ, எது நமக்கு துக்கத்தை தருகின்றதோ அதையே கஷாயம் என்று சொல்கின்றனர். அதாவது எதனால் பிறவி சுழற்சி தொடர்கிறதோ அதையே கஸ்+ஆய கஷாயம் என்று சொல்கிறோம். கஷாயம் என்பதை இரண்டு சொற்களால் சொல்ல வேண்டும் என்றால் விருப்பு-இராகம் மற்றும் வெறுப்பு-த்வேஷம் என்று சொல்லலாம். கஷாயத்தை நான்கு சொற்களால் சொல்ல வேண்டும் என்றால் கோபம், அகந்தை, கபடம், மிகுபற்று அதாவது க்ரோத, மான, மாயா, லோபம் என்று கூறலாம். எல்லா கஷாயங்களையும் 25 பெயர்களாக பிரித்தும் சொல்லவும் முடியும்.

1,2,3,4-அனந்தானுபந்தி க்ரோதம், மானம், மாயை, லோபம் (நான்கு கஷாயங்களின் முதல் பாகம்)

5,6,7,8-அப்ரத்யாக்யான க்ரோதம், மானம், மாயை, லோபம் (நான்கு கஷாயங்களின் இரண்டாம் பாகம்)

9,10,11,12-ப்ரத்யாக்யான க்ரோதம், மானம், மாயை, லோபம் (நான்கு கஷாயங்களின் மூன்றாம் பாகம்)

13,14,15,16-சஞ்சுவலன க்ரோதம், மானம், மாயை, லோபம் (நான்கு கஷாயங்களின் நான்காம் பாகம்)

ஒன்பது நோகஷாயங்கள்- 17 ஹாஸ்யம், 18 ரதி, 19 அரதி, 20 சோகம், 21 பயம், 22 ஜுகுப்சை, 23 ஸ்திரி வேதம், 24 புருஷ-பும் வேதம், மற்றும் 25 நபும்சக வேதம் என ஒன்பதும் சேர்ந்து மொத்தம் கஷாயத்தின் 25 பிரிவுகளாகும்.

எப்போது உயிருக்கு க்ரோத கஷாயம் உற்பத்தியாகிறதோ அப்போது பிறரை மோசம் செய்ய வேண்டும் என்ற தீவிர ஆசையும், பிறரை அவமதிக்கவும், தூற்றவும், அடி, உதை மற்றும் கொலை முதலான செய்ய வேண்டும் என்ற முடிவுக்கும் வரும்.

எப்போது உயிருக்கு மான கஷாயம் உற்பத்தியாகிறதோ அப்போது பிறரை தாழ்வானவர்களாகவும், தன்னை உயர்ந்தவராகவும் பார்க்க அதிக ஆசை உண்டாகும் மற்றும் அதற்கான வழிமுறைகளை யோசிகும்.

எப்போது உயிருக்கு மாயா கஷாயம் உற்பத்தியாகிறதோ அப்போது வஞ்சகமான செயலை செய்யவும், பிறரை ஏமாற்றும் காரியத்தை செய்யவும் தீவிர விருப்பம் கொள்ளும்.

எப்போது உயிருக்கு லோப கஷாயம் உற்பத்தியாகிறதோ அப்போது இஷ்ட பதாரதங்களை அடைய வேண்டும் என்ற விருப்பத்தால் என்ன செய்தால் அந்த எண்ணம் நிறைவேறும் என்று பல வழிகளில் யோசனை செய்யும். இதைப்பற்றிய மேலும் விரிவான வர்ணனையை நீங்கள் **மோக்ஷமார்க பிரகாசம்** என்ற நூலில் மூன்றாம் அதிகாரத்தில் **சாரிதரத்தால் வரும் துக்கம்** என்ற பகுதியை அவசியம் வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த கஷாயங்களுடன் நோகஷாயமும் இத்தகைய உணர்வுகளுக்கு துணையாக இருக்கின்றன. ஹாஸ்யத்தால் குறிப்பிட்ட பேச்சில் தவறான கற்பனை செய்து சந்தோஷமடைந்து சிரிக்கும் செயலை செய்யும். ரதியால் விரும்பும் பொருள்களின் மேல் அதிக நேசம் உண்டாகும். அரதியால் வெறுக்கும் பொருள்களின் சேர்க்கையால் அதிக துன்படையும். சோக நோகஷாயம் உதயமானல் விரும்பிய பொருளை இழக்க நேரும்போதும், விரும்பாத பொருள் வந்து சேரும்போதும் அதிக துன்பம் அடைந்து எரிச்சலுடன் அழும், பெயர் சொல்லிச்சொல்லி ஒப்பாரி வைத்து அதிக துக்கத்தை வெளிப்படுத்தும். பய கஷாயத்தால் இஷ்ட பொருளை கைவிட்டு போவதையும், இஷ்டமில்லாத பொருள் வந்து சேர்வதையும் அறிந்து பயப்படும், அந்த இடத்தை விட்டு ஓடிவிட நினைக்கும் அல்லது பிறர் கண்ணில் படாமல் மறைந்து கொள்ளும். ஜுகுப்சா நோகஷாய உற்பத்தியால் விருப்ப மற்ற பொருளின்மேல் வெறுப்பு கொள்ளும். மூன்று வேத கஷாயத்தால் காம உணர்வு விழித்துக் கொள்ளும், பாலியல் உறவு கொள்ள இச்சை உண்டாகும்.

இந்த எல்லா கஷாயமும் துக்க வடிவமாகும் ஏனென்றால் அதனால் உயிருக்கு துன்பம்தான் உண்டாகிறது. மேலும் இதனால் உயிர் புதிய கர்மங்களை கட்டிக் கொள்வதால் இனிவரும் துக்கங்களுக்குக்கூட காரணமாகிறது. யாருக்கு எல்லா கஷாயங்களும், எல்லா இச்சைகளும் இல்லாமல் போகிறதோ அவர்களுக்கே உண்மையா சுகம் கிடைக்கிறது. அதாவது அரஹந்தர் மற்றும் சித்தர்கள் பூரண வீதராகிகளாகையால் அவர்களே அனந்த சுகமுடையவர்களாவர்கள். சர்வஞ்ஞ தன்மையால் அவருடைய கேவல ஞானத்தில் சம்பூரண லோகாலோகத்தின் முக்காலத்தையும் பற்றிய அறிவு ஒரே சமயத்தில் பிரதிபலிக்கின்றது-ஜொலிக்கின்றது, ஆனாலும்கூட அவர்களிடம் வீதராக தன்மை, விருப்பு வெறுப்பு அற்ற நிலை இருப்பதால் அவர்களுக்கு பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றையும் அறிந்தும் அதில் எதன் மீதும் விருப்போ வெறுப்போ தோன்றுவதில்லை. இதற்கு விபரீதமாக, நம்முடைய அறிவு மிகவும் அல்பமாக இருந்த போதிலும், நாம் ஆசையுடன் அதாவது கஷாயத்துடன் கூடி இருப்பதால் நாம் துக்கமே அடைகிறோம். உதாரணமாக நாம் ஒரு மாம்பழத்தை பார்த்ததும் அதை அறியம் காரியத்தை நம் ஞான குணம் செய்கிறது, அதே சமயம் நம் ஒழுக்க குணம் கூட அதன் பரிணாமத்தை செய்கிறது, அது ராக வடிவமாக பரிணமிக்கிறது. இந்த மாம்பழம் எனக்கு கிடைக்க வேண்டும், நான் இதை சாப்பிட வேண்டும் என்ற இச்சை உண்டாகிறது.

எதுவரை அந்த இச்சை பூர்த்தி அடையவில்லையோ அதுவரை துக்கம் இருந்து கொண்டே இருக்கிறது. எல்லாவற்றையும் பார்க்கும்போது நம்முடைய துக்கம் நம் இச்சையால் தான் உண்டாகிறது, கஷாயத்தினால் அல்ல, ஆனால் நாம் பிற பொருள்களே நம் சுக-துக்கங்களுக்கு காரணம் என்று தவறாக நம்பி எப்போதும் பிற பொருள்கள் மீது விருப்பு-வெறுப்பு அடைந்து கொண்டு இருக்கிறோம்.

முன்னர் நாம் அனந்தானுபந்தி முதலான நான்கு பகுதியாக கஷாயங்களின் பெயர்களை பார்த்தோம். இப்போது நாம் சுருக்கமாக அவைகளின் ஸ்வரூபத்தை பார்க்கலாம். கஷாயங்களின் தீவிர அல்லது மந்த தன்மையை வைத்து இந்த கஷாயம் நான்கு பகுதிகளாக பிரிக்கப் படவில்லை, அந்தந்த பிரிவு கஷாயங்களின் ஜாதியே-தரமே வெவ்வேறாகும்.

மூடநம்பிக்கையுடன் இருக்கும் நிலையில் உயிருக்கு அனந்தானுபந்தி முதலான நான்கு கஷாய பகுதிகளும்(எல்லா ஜாதி கஷாயங்களும்) அதனிடம் இருக்கிறது. அனந்தானுபந்தி கஷாயத்தின் காரணத்தால் அதத்வ சிரத்தானம் (தத்துவம் அல்லாதவற்றில் நம்பிக்கை) இருக்கிறது. அதாவது யார் அனந்தானுபந்தி அதாவது தீவிர கஷாயியோ அவருக்கு உண்மையான தத்துவத்தின் மேல் நம்பிக்கை வரவே வராது, ஆத்மா மற்றும் தர்ம சர்ச்சை இவைகளில் கொஞ்சம் கூட ருசி இருக்காது, அதன்மேல் அதிகமான வெறுப்புணர்வே இருக்கும் மற்றும் அதைப்பற்றி பேசுபவர்களை கண்டாலே அதற்கு கொஞ்சம் கூட பிடிக்காது. அப்படிப்பட்ட உயிர்கள் குதேவர், குகுரு, குசாஸ்திரம் ஆகியவைகளில் மிகுந்த ஈடுபாடும் மற்றும் அதையே விரும்பி அவைகளுக்கு சேவை செய்பவர்களாகவும் இருப்பார்கள் அதில் சந்தோஷமுமடைவார்கள். மூடநம்பிக்கையும், அனந்தானுபந்தி கஷாயமும் ஒன்றோடொன்று கைகோர்த்து செல்பவைகளாகும், இந்த இரண்டும் இணை பிரியாத தோழமை உடையவை எனலாம், அதாவது ஒன்று இருந்தால் மற்றொன்றும் அவசியம் அங்கு இருக்கும், ஒன்று இல்லை என்றால் மற்றதும் அங்கு இருக்காது.

உண்மையான தேவ, சாஸ்திர, குருக்களின் குணங்களை தெரிந்து கொண்டு அந்த குணங்களின்மேல் பக்தி-ஈடுபாடு கொள்ளுவதால், உபயோகமான தத்துவங்கள் பற்றிய சிந்தனை, தியானம் செய்வதால் இந்த வகை கஷாயம் மற்றும் மோஹம்-மித்யாத்வம் மந்தமடைகிறது மற்றும் அந்த உயிர் சம்யக்துவம்-நற்காட்சி பெற பாத்திரமாகிறது. அப்படிப்பட்ட உயிர் ஆத்மாவில்-தன்னில் ஆழும் புருஷார்த்தத்தை எப்போது செய்கிறதோ அப்போது அதற்கு ஆத்மானுபவம் கிடைக்கிறது அதாவது சம்யத்துவத்தை அடைகிறது, அதே சமயம் அனந்தானுபந்தி கஷாயமும் அதனிடம் இல்லாமல் போகிறது. அப்போது அந்த ஒழுக்க-சாரித்ர குணத்தின் பர்யாயத்தை **ஸ்வரூபாசரண சாரித்ரம்** என்று சொல்கின்றனர். இதையே **சம்யக்த்வாசரண சாரித்ரம்** என்று கூட சாஸ்திரங்களில் சொல்லப் படுவதை பார்க்க முடிகிறது.

அப்படிப்பட்ட சம்யக்த்வ உயிருக்கு இப்போது கடைசி மூன்று கஷாய பகுதிகளின் உணர்வுகள் இருக்கின்றது. அப்பிரத்யாக்யன கஷாயத்தின் காரணத்தால் கொஞ்சம் கூட தியாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணமோ அல்லது விரதம் ஏற்க வேண்டும் என்ற எண்ணமோ வருவதில்லை. பிரத்யாக்யானம் என்பதன் பொருள் தியாகம் செய்தல் என்பதாகும். **எந்த கஷாயம் கொஞ்சம் கூட தியாகம் செய்ய விடுவதில்லையோ அது அபரத்யாக்யன கஷாயமாகும்.** இந்த உயிர் எப்போது சம்யக்த்வாசரண சாரித்ரத்தை விட அதிகமாக ஆத்மாவில் தோய்கிறதோ அப்போது அபரத்யாக்யன கஷாயம் கூட இல்லாமல் போகிறது. இந்த அவஸ்தையை-நிலையை **தேச சாரித்ரம்** என்று சொல்கின்றனர். அது முதலிரண்டு கஷாய பகுதிகளின் செயல் இல்லாமையும், கடைசி இரண்டு கஷாய பகுதிகளின் செயல் இருப்பதுமாகும். இப்படிப்பட்ட உயிரை **விரதி ஸ்ராவகர்** என்ற ஒரு அடையாள

பெயர் சொல்லியும் அழைப்பர். பிரத்யாக்யன கஷாய உணர்வுகள் இருப்பதால் முழுமையாக அந்தரங்க மற்றும் பகிரங்க அதாவது உள் மற்றும் வெளி தியாகத்தை செய்ய விடுவதில்லை, முனி அளவுக்கு அந்தரங்கத்தில்-ஆத்மாவில் தோய்தல் இருப்பதில்லை.

முதல் மூன்று கஷாய பகுதிகள் செயல் இல்லாமல் இருக்கும் நிலையை **சகல சாரித்ரம்** என்று சொல்கின்றனர். இந்த நிலையில் கடைசி சஞ்சுவலன கஷாய பகுதி மட்டும் இருக்கிறது. அந்த காரணத்தால் அந்தரங்கத்தில்-ஆன்மாவில் முழுமையாக தோய்தல் மற்றும் முழு வீதராக தன்மை அடையம் செயலை செய்ய முடிவதில்லை. முனி நிலையில் 28 மூல குணங்களை கைகொள்ளவேண்டும் என்ற ஆசை-ராக பாவம் இருக்கிறது, அதற்கு இந்த சஞ்சுவலன கஷாய பகுதியின் செயலே காரணமாகும்.

அந்தரங்கத்தில் தோய்தல் அதிகரிக்க அதிகரிக்க உயிர் எப்போது முழுமையாக ஆன்மாவில் ஆழ்ந்து விடுகிறதோ, முழுமையான வீதராகம் அடைகிறதோ அப்போது சஞ்சுவலன கஷாய பகுதி கூட முழுமையாக இல்லாமல்போக **யதாக்யாத சாரித்ரம்** என்ற நிலையை அடைகிறது.

கஷாயம்-ராகம் செய்து செய்து வீதராகத்தை அடையமுடியாது, ஆனால் கஷாயங்களை இல்லாமல் செய்தே வீதராகத்தை அடைய முடியம் என்பது மேலே கூறிய எல்லா விளக்கங்களிலுமிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம். சுப ராகம்-புண்ணியம் மற்றும் அசுப ராகம்-பாபம் இரண்டுமே கஷாயம் என்ற சொல்லால்தான் சொல்லப்படுகிறது. சுப ராகத்தை-புண்ணியத்தை செய்து செய்தே வீதராத்தை அடைய முடியாது என்பதில் முழுமையான உறுதியும், முழு விஸ்வாசமும், திடமான நம்பிக்கையும் முதன்முதலில் இருக்க வேண்டியது அவசியமாகும். **சுபராகத்தை-புண்ணியம் செய்வதை என்னவோ நாமாகவே விடுவதில்லை ஆனால் வீதராக தன்மை பெருகிக்கொண்டே போகப்போக தானகவே அதற்கு உகந்த அளவு சுபராக தன்மையின் செயலும் குறைந்து கொண்டே போகிறது.** ஒழுக்க குணத்தின் பர்யாயங்கள் பற்றி இப்போது கீழ்க்கண்டவாறு சுருக்கமாக மீண்டும் ஒருமுறை பார்க்கலாம்.

மித்யா சாரித்ரம்: அனந்தானுபந்தி, அப்பிரத்யாக்கியானம், பிரத்யாக்யானம், சஞ்சுவலனம் ஆகிய எல்லா நான்கு கஷாய பகுதிகளின் செயல்களும் காணப்படும் ஒழுக்கமாகும். இது மித்யாதிருஷ்டி என்னும் மூடநம்பிக்கை ஒழுக்க நிலையாகும்.

ஸ்வரூபாசரண சாரித்ரம்: அனந்தானுபந்தி கஷாய பகுதி சம்பந்தமான செயல்கள் வெளிப்படாமலும் மற்ற மூன்று அப்பிரத்யாக்கியானம், பிரத்யாக்யானம், சஞ்சுவலனம் ஆகிய கஷாய பகுதிகளின் செயல்கள் வெளிப்படும் ஒழுக்கமாகும். இது நற்காட்சி, சம்யக்தர்சனம் அடைந்த ஒழுக்க நிலையாகும்.

தேச சாரித்ரம்: அனந்தானுபந்தி, அப்பிரத்யாக்கியானம் ஆகிய இரண்டு கஷாய பகுதிகள் சம்பந்தமான செயல்கள் வெளிப்படாமலும் மற்ற இரண்டு பிரத்யாக்யானம், சஞ்சுவலனம் ஆகிய கஷாய பகுதிகளின் செயல்கள் வெளிப்படும் ஒழுக்க மாகும். இது விரதி ஸ்ராவக ஒழுக்க நிலையாகும்.

சகல சாரித்ரம்: அனந்தானுபந்தி, அப்பிரத்யாக்கியானம் மற்றும் பிரத்யாக்யானம் அகிய மூன்று கஷாய பகுதிகள் சம்பந்தமான செயல்கள் வெளிப்படாமலும், கடைசி சஞ்சுவலன கஷாய பகுதியின் செயல்கள் மட்டும் வெளிப்படும் ஒழுக்க மாகும். இது திகம்பர முனிவரின் ஒழுக்க நிலையாகும்.

யதாக்யாத சாரித்ரம்: நான்கு கஷாய பகுதிகளும் மற்றும் எல்லா நோகஷாயங்களும் முழுவதும் இல்லாத நிலையில் முழு வீதராகத்துவம் பெறப்படுகிறது. ஹாஸ்யம் முதலான நோகஷாயங்கள் வரிசையாக மந்த மடைந்து கொண்டே வந்து அவைகளும் இல்லாமல் போகின்றன. அவைகள் வரிசையாக இல்லாமல் போவது பற்றி எழுதினால் கடிதம் பெரிதாகி விடுமாகையால் இங்கு எழுத வில்லை. அந்த விஷயம் இப்போது உங்களுக்கு புரிந்து கொள்ள கொஞ்சம் கடினமாகக் கூட இருக்கலாம், ஆனால் பிறகு கர்மம், குணஸ்தானம் முதலானவைகள் பற்றி படிக்கும்போது உங்களுக்கு சுலபமாக இருக்கும்.

மேலே கூறிய விளக்கங்களை தெரிந்து கொண்ட பிறகு மித்யாத்வ நிலையில் எவ்வளவு விரதங்களை கைகொண்டாலும், வெளிப் பொருள்களை தியாகம் செய்தாலும் அனந்தானுபந்தி முதலான கஷாயங்களை இல்லாமல் செய்ய முடியாது என்பது விளங்கும். இதன் பொருள் என்னவென்றால் சம்யக்தர்சனம் அடைந்து, ஆத்மாவில் நிலைப்பதையும், வீதராக தன்மையை மேலும் மேலும் அதிகப் படுத்துவதுமே கஷாயங்களை படிப்படியாக அழிக்கும் ஒரே வழியாகும்.

தத்வார்த்த ஸ்ரத்தானம் சம்யக்தர்சனம் என்பது சம்யக்தர்சனத்தின் வரையறை-definition ஆகும். இந்த பிரயோஞனமான தத்துவத்தின் இயல்பு யாது மற்றும் அதில் நம்பிக்கை வைத்தல் என்றால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். இதுவரை கடிதத்தின் மூலம் படித்து தெரிந்து கொண்டதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் அவைகளை பற்றி எனக்கு தெரியப்படுத்துங்கள். அதற்கான விளக்கங்களையும் எதிர்வரும் கடிதங்களில் தெளிவு படுத்துகிறேன்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-19 11-5-1995

உபயோகமுள்ள தத்துவம்

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ரீனா, பூனாவில் நடந்த 10 நாட்கள் தத்துவ முகாமில் நீ கலந்து கொண்டு, சில நாட்களில் அதிக தத்துவ விஷயங்களை தெரிந்து கொள்ள முடிந்தது உன்னுடைய புண்ணியம் என்றுதான் சொல்ல வேண்டும். தினமும் நீ ஏழு மணி நேரம் தத்துவ வகுப்புகளில் கலந்து கொண்டு பத்து நாட்களில் 70 மணி நேரம் சமண தத்துவம் பற்றி தெரிந்து கொட்டாய். நீ ஒரு மாதம் மும்பையில் எங்களுடன் தங்கியிருந்தால் கூட இவ்வளவு விஷயங்களை தெரிந்து கொண்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் நீ தத்துவ வகுப்பில் என் மகள் போல அல்ல, ஒரு தத்துவம் பயிலும் மாணவர் போல வந்து ஆர்வமாக கற்றுக்கொண்டாய்.

மோனா, உணக்காக நான் வருத்தப்படுகிறேன். நீ உன் மருத்துவமனை திறப்பதில் உன் முழு நேரத்தையும் அப்போது செலவிட நேர்ந்ததால் உன்னால் அந்த தத்துவ பயிற்சி முகாமில் பங்கு கொள்ள முடியவில்லை. மோனா, உன்னால் யூகிக்க முடிகிறதா? ரீனா கூட தினமும் 30 நிமிடங்கள் குழந்தைகளுக்காக தத்துவ பயிற்சி வகுப்பு நடத்தினாள். தினமும் உங்கள் அப்பா 4 மணி நேரமும், நான் 3 மணி நேரமும், திரு.டோக்கர் குருஜீ ஒரு மணி நேரமும், ரீனா 30 நிமிடமும், ஆக தினமும் எட்டரை மணி நேரம் வகுப்புகள் நடத்தினோம். இருந்தாலும் நீ கவலைப்பட வேண்டியதில்லை. ஆரம்பத்தில் மருத்துவ மனையில் உணக்கு ஓய்வு நேரம் கிடைக்கும், அப்போதெல்லாம் நீ அந்த நேரத்தை சமண தத்துவங்களை படித்து தெரிந்து கொள்ளலாம்.

ரீனா-மோனா, சென்ற கடிதத்தில் நாம் ஒழுக்க குணத்தை பற்றி சர்ச்சை செய்தோம். திரவ்யம், குணம், பர்யாயம் இவைகளைப் பற்றி நாம் முன்னர் பார்த்த போது, குணம் திரவியத்தின் முழு பாகத்திலும் இருக்கிறது என்று பார்த்தோம். இதன் பொருள் என்னவென்றால் உயிர் பொருளின் அறிவு குணம் உயிரின் முழுவதும் இருக்கிறது, சிரத்தை-நம்பிக்கை குணமும் உயிரின் முழுவதும் இருக்கிறது, அதுபோல ஒழுக்க குணமும் கூட உயிரின் முழு பாகத்திலும் இருக்கிறது. அதாவது எவ்வளவு உயிரின் பிரதேசமோ-ஷேத்ரமோ அவ்வளவு பிரதேசத்திலும்-ஷேத்ரத்திலும் ஒவ்வொரு குணமும் இருக்கிறது மற்றும் குணத்துக்கு எவ்வளவு ஷேத்ரமோ அந்த ஷேத்ரமே குணத்தின் பரயாயத்திற்குமாகும். இதன் பொருள் என்னவெனில் எது உயிர் திரவியத்தின் ஷேத்ரமோ, அதுவே உயிரின் ஒழுக்க குணத்தின் ஷேத்ரமும் மற்றும் அதுவே ஒழுக்க குண பரயாயத்தின் ஷேத்ரமுமாகும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் எந்த திரவிய குணத்தின் பர்யாயமும் அதாவது திரவியத்தின் பரயாயமும் அந்த குறிப்பிட்ட ஷேத்ரம் வரையே அதன் எல்லையாகும், திரவியத்தை விட்டு திரவியத்திற்கு வெளியே பர்யாயம் செல்ல முடியாது, திரவியத்தின் ஷேத்திரத்துக்கு அப்பால் விரிவடைய முடியாது.

உயிரின் ஒழுக்க குணத்தின் விபாவ பர்யாயமோ அதாவது கஷாயமோ (கோபமோ, மானமோ, மாயையோ, லோபமோ) அல்லது ஸ்வபாவ பர்யாயமான வீதராகமோ அந்த பரயாயத்தின் ஷேத்ரம் உயிர் திரவியத்தின் வெளியில் நிகழ்வதில்லை. உயிர் திரவியத்தின் முழு பாகத்திலும் இந்த பர்யாயம் பரவியிருக்கிறது, உயிர் பொருளை விட்டு வெளியில் பிற திரவியங்களில் பரவுவதில்லை. ஆகையால் **ஒழுக்க குணத்தின் பர்யாயம் உடலில் இல்லை, உயிர் திரவியத்தில் தான் இருக்கிறது.**

நிகழ்காலத்தில் நமக்கு மனித பர்யாயம் கிடைத்திருக்கிறதே அதாவது இந்த மனித அவஸ்தை இருக்கிறதே அது அசமான ஜாதி திரவ்ய பர்யாயமாகும். அதாவது ஒரு உயிர் பொருள் மற்றும் பிற புத்கல பரமாணுக்கள் (ஆஹார வர்கணை, தேஜஸ் வர்கணை, மனோ வர்கணை, கார்மண வர்கணை) முதலிய பிற வேறு வேறு ஜாதியின் திரவியங்கள் ஒரே பந்தவடிவில்-உடன்-ஒரே ஷேத்ரத்தில் இருப்பைவைகளான நிலையாகும். இந்த உடனிருக்கும் நிலையில் உள்ள உயிர் அதனுடன் இருக்கும் புதகலத்தை அதாவது உடலையே **தான்** என்று எண்ணுகிறது. உடல் சம்பந்தமான கிரியைகளை-செயல்களை, ஒழுக்கங்களை-behaviour-ஐ தன்னுடைய ஒழுக்கமாகவே அதாவது சாரித்ரமாகவே எப்போது நம்புகிறதோ அப்போதே குழப்பம், ஊழல் ஆரம்பமாகி விடுகிறது.

உயிரின் ஒழுக்க குணத்தில் சகல சாரித்ரம் நிகழும்போது-மூன்று கஷாய பகுதிகள் இல்லாமை மற்றும் சஞ்சுவலன கஷாயம் மற்றும் அதற்கு உகந்த வீதராகத்தன்மை இருக்கும்போது அந்த மனிதருக்கு-முனிவருக்கு வெளி ஒழுக்கங்கள்-28 மூல குணங்களை பாலித்தல் கூட அதற்கு அனுகூலமாக-சாதகமாக இருக்கின்றன. இதன் வர்ணனை சரணானுயோகத்தின் பல்வேறு கிரந்தங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. உடலின் இந்த செயல்களை உபசாரமாக சாரித்ரம் என்று சொல்லப் படுகிறது. அப்படி சொல்லுவது நூறு சதவிகிதம் உண்மையாக இருந்தாலும் அப்படியே நம்புதல் அதாவது **வெறும் வெளி கிரியைகளை மட்டுமே** சாரித்ரம் என்று நம்புதல் நூறு சதவிகிதம் தவறாகும். எவ்வாறெனில் **நெய்குடம்** என்று நாம் சொல்லும்போது நம் நம்பிக்கை **எந்த குடத்தில் நெய் வைக்கப்பட்டு இருக்கிறதோ அந்த குடம்** என்று யதார்த்தமாக நம்புகிறோம். அதேபோல உடலின் ஒழுக்கத்தை சாரித்தரம் என்று செல்லுவதில் தவறில்லை ஆனால் அந்த சமயத்தில் நம்பிக்கை **எந்த உடலுடைய உயிருக்கு சாரித்ர குணத்தின் சகல சாரித்ரம் சம்பந்தமான வீதராக பர்யாயம் இருக்கிறதோ அந்த உடலின் கிரியைகளை** என்று யதார்த்தமாக எடுத்து கொள்ள வேண்டும், அப்படியானால் தான் அது யதார்த்தமாக செல்லப் பட்ட தாகும்.

பொருட்களின் அமைப்பு அதாவது தத்துவங்களின் உண்மையான ஸ்வரூபம் தெரியாததால் உயிர் பிற பதார்த்தங்களை அதாவது உடன் இருப்பவைகளை விரும்புகிறது அல்லது வெறுக்கிறது. எதை விரும்பப்படும் பொருளாக எண்ணுகிறதோ அதன்மேல் பாசம் தோன்றுவதால் அந்த பதார்தங்களை அடைய முயற்சி செய்கிறது. எந்த பொருளை வெறுக்கிறதோ அதன்மேல் வெறுப்பு உண்டாவதால் அந்த பதார்தங்களை தன்னிடமிருந்து விலக்க முயற்சி செய்கிறது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவெனில் பிற பதார்த்தங்கள் அல்லது உடனிருப்பவைகள் நம்மிடம் விருப்பு, வெறுப்பு உண்டாக காரணமில்லை, ஆனால் நம்முடைய மித்யாத்வத்தால்-தத்துவமல்லாதவற்றில் நம்பிக்கை கொள்வதால் கஷாயங்கள்-துவர்ப்பு உணர்வுகள் உண்டாகின்றன. தத்துவத்தில் விபரீதமான-எதிர்மறையான நம்பிக்கை, விபரீத அறிவு-குஅறிவு மற்றும் அதன் காரணமாக உண்டாகும் விபரீத நடத்தை இவைகளையே மித்யாதர்சனம், மித்யாஞானம், மித்யா சரித்ரம், மூடநம்பிக்கை, கெட்டஅறிவு, தீயொழுக்கம் என்று சொல்கின்றனர். அனாதி காலமாக இது நம்மிடம் இருப்பதால் இந்த மித்யாத்வம் சகஜமாகவே அதாவது நாம் பிறந்ததிலிருந்தே தவிர்க்க முடியாததாக தானகவே யாரும் கற்றுக்கொடுக்காமலேயே நம்மிடம் இருக்கிறது, இந்த மூடநம்பிக்கையை **அகிரஹீத மித்யாத்வம்** என்று சொல்கின்றனர். ஆனால் குதேவர், குகுரு, குசாஸ்திரம் இவைகளின் உபதேசத்தால் புதிதாக நாம் சேர்த்துக் கொள்ளும் மூடநம்பிக்கைகளை **கிரஹீத மித்யாத்வம்** என்று சொல்கின்றனர்.

பசு, பறவை முதலான விலங்கினங்களுக்கு வெறும் அகிரஹீத மித்யாத்வமே இருக்கிறது. ஆனால் நம்மை போன்ற மனித உயிர்கள் இங்குகூட தங்களது ஆதிக்கத்தை காட்டுகின்றன. புதிது புதிதாக மூட நம்பிக்கைகளை சேர்த்துக் கொள்கின்றன. அகிரஹீத மித்யாத்வம்

என்னவோ அனாதி காலமாக இருக்கவே இருக்கிறது, அதற்கு மேல் கிரஹீத மித்யாத்வத்தை அங்கீகாரம் செய்து நாம் மேலும் தீவிர மூடநம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறோம்.

உண்மை என்னவெனில் இந்த மனித பிறவியில் செய்யத் தகுதியான ஒரே காரியம் சம்யக்தர்சனத்தை அடைவதும், வீதராக உணர்வை வளர்த்துக் கொள்வதுமே யாகும்**.** ஒவ்வொரு சமண சாஸ்திரங்களிலும் இதுவே உபதேசமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஸ்ராவகாசாரம் என்ற நூலில் கூட எல்லாவற்றுக்கும் முதல் சம்யக்தர்சன் அதிகாரம் இருக்கிறது ஏனெனில் ஸ்ராவகரின் முதன்மையான கடமை சம்யக்தர்சனத்தை அடைவதே யாகும். நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் இவைகளையே மோக்ஷமார்கம் என்று சொல்லப்படுகிறது. ஆசார்ய உமாஸ்வாமி தத்வார்தஸூத்ரம் என்ற நூலில் முதன்முதலில் இவ்வாறு கூறுகிறார்-

சம்யக்தர்சனஞானசாரித்ராணி மோக்ஷமார்க: |
தத்வார்தஸரத்தானம் சம்யக்தர்சனம் |

தத்துவங்களில் நம்பிக்கையை சம்யக்தர்சனம் என்று சொல்கின்றனர். மற்றும் ஆசார்ய சமந்தபத்திரர் இரத்னகரண்ட சிராவகாசாரத்தில் கூறுகிறார் **சத்திருஷ்டஞானவிருத்தானி தர்ம தர்மேஷ்வரா: விது:** மற்றும் **ஸ்ரத்தானம் பரமார்தானம் ஆப்த ஆகம் தபோப்ருதாம்** உண்மையான தேவ, குரு, சாஸ்திரங்களின் மேல் உள்ள நம்பிக்கையை சம்யக்தர்சனம் என்று சொல்கின்றனர்.

தந்துவங்களில் மேல் நம்பிக்கை வடிவ சம்யக்தர்சனம் செய்ய வேண்டுமா அல்லது உண்மையான தேவ, குரு, சாஸ்திரங்களில் நம்பிக்கை வடிவ சம்யக்தர்சனம் செய்வேண்டுமா? என்ற குழப்பம் சில சமயம் உங்களுக்கு வரலாம். ஹேய்! இரண்டுமே ஒன்றுதான். தத்துவங்களின் இயல்பை தெரிந்து கொண்ட பிறகு தானாகவே இது பற்றி உங்களுக்கு தெரிய வரும்.

இந்த தத்துவங்கள் அரஹந்தர்களால்-ஜிநேந்திரர்களால் சொல்லப்பட்ட தத்துவங்களாக இருக்க வேண்டியது முதன்மையான, அவசியமான விதியாகும். ஏனென்றால் பிற மதங்களில் கூட அவரவர்களுடைய கடவுளர்களால் சொல்லப்பட்ட தத்துவங்கள் இருக்கின்றன என்றும், அவைகளில் நம்பிக்கை வைத்து கடைப்பிடித்தால் அதுவும் முக்தி அளிக்க வல்லவைகளாக இருக்கின்றன என்றும் பிற மதத்தினர்கள் வாதிடுகின்றனர். மோக்ஷமார்க பிரகாசம் என்ற நூலில் **இதர மதங்களின் ஆய்வு** பெயர் கொண்ட ஐந்தாவது அத்யாயத்தைப் படித்து இவைகளை பற்றி மேலும் விரிவான விளக்கங்களை பெறலாம். அதனால்தான் **ஜின பகவானால் சொல்லப்பட்ட தத்துவத்தை அவசியம் பயிற்சி செய்யுங்கள்** என்று சஹ்டாலாவில் கூறப் பட்டுள்ளது.

அவைகள் உபயோகமான-பிரயோஜனமுடைய ஏழு தத்துவங்களாகும். இப்போது, தத்துவம் என்றால் என்ன? உபயோகம்-பிரயோஜனம் என்றால் என்ன? பிரயோஜனமுடைய தத்துவம் என்றால் என்ன? அவை ஏன் ஏழாக இருக்கின்றன? அவைகளின் பெயர் யாது? என்பன போன்ற பல கேள்விகள் உங்கள் மனதில் எழுவதை என்னால் உணர முடிகிறது.

தத்துவம் என்றால் **தத்+த்வ=தத்துவம்**. அது அதுவாக இருத்தல், அதாவது பொருளின் இயல்பை தத்துவம் என்று சொல்கின்றனர். பொருள் இயற்கையாக எப்படி இருக்கிறதோ அப்படியே அதை விளங்க வைப்பதை-தெரியப் படுத்துவதை தத்துவம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். உதாரணமாக வயது என்பது எவ்வளவு ஆண்டுகள் முதியவர் என்று

காட்டுவது போல. தாய்மை என்பது ஒரு குழந்தைக்கு அம்மாவாக இருப்பதை காட்டுவது போல என அறிக.

பிரயோசனம்-உபயோகம் என்றால் உத்தேசம், எண்ணம், நோக்கம், லட்சியம், காரணம் எனலாம். எந்த ஒரு மாணவனிடமாவது நீ படிப்பதனால் என்ன பிரயோஜம் என்று கேட்டால் அப்போது அவன் நான் டாக்டராக வேண்டும் அதற்கு இந்த படிப்பு பிரயோஜமாகும் என்று கூறுவான். வியாபாரம் செய்வதன் நோக்கம் பணம் சம்பாதித்து செல்லவந்தராவதற்காகும். சாப்பிடுவதன் காரணம் பசியை போக்குவதற்காகும். ஒவ்வொரு உயிரின் உத்தேசமும் துக்கத்தை போக்குவதற்கும், சுகத்தை அடைவதற்குமாகும். எந்த அறிவு பெற்று மேலும் எதில் திட நம்பிக்கை கொண்டு-எதை உறுதி செய்து, இவைகள் எல்லாம் இப்படித்தான் இருக்கின்றன வேறு விதமாக இல்லை என்ற திடமான நம்பிக்கையுடன் ஒரு முடிவுக்கு வராமல் நம்முடைய துக்கம் நம்மைவிட்டு அகலாதோ மேலும் சுகம் அடைய முடியாதோ அதையே பிரயோஜமான தத்துவம் என்று சொல்கின்றனர்.

பிரயோஜனமல்லாதவற்றை எப்படி இருக்கிறதோ அப்படியே அறிந்து நம்புவதாலோ அல்லது வேறு விதமாக அறிந்து நம்புவதாலோ மூடநம்பிக்கை-மித்யாதர்சனம் உண்டாவதில்லை. ஆனால் பிரயோஜனமான தத்துவங்களை வேறு விதமாக அறிந்து நம்புவதால் மூடநம்பிக்கை உண்டாகிறது. சஹடாலாவில் பண்டிட் தௌலத்ராம் கூறுகிறார் **ஜீவாதி ப்ரயோஜனபூத் தத்துவ, சர்தௌன் தின்மாஹி விபர்யயத்வ** இதன் பொருள் உயிர் முதலான உபயோகமான தத்துவங்களில் தவறான நம்பிக்கையே மித்யாதர்சனம் என்பதாம்.

நம்முடைய இந்த மனித பிறவியின் பிரயோஜம் யாது? துக்கத்தை விலக்குவது. யாருடைய துக்கத்தை? ஸ்வ துக்கத்தை அதாவது என்னுடைய துக்கத்தை விலக்குவதே எனக்கு பிரயோஜமாகும். அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?

1. எல்லாவற்றிர்க்கும் முன் **ஸ்வ** என்பது யார்?-அதாவது நான் யார் என்பதை தெரிந்து கொள்ளாமல் **ஸ்வ-**வின் துக்கத்தை எப்படி இல்லாமல் செய்ய முடியும்? **ஸ்வ-**வை தெரிந்து கொள்ள, ஸ்வ மற்றும் ஸ்வ தவிற பிறவற்றையும் அறிதல் அவசியமாகும்.
2. **ஸ்வ** மற்றும் பிற இவைகள் இரண்டும் ஒன்றே என்று தவறாக அறிந்து பிறவற்றிர்க்கு சேவை செய்வதால் ஸ்வ-வின் துக்கம் எப்படி விலகும்?
3. **ஸ்வ-**விலிருந்து பிற வேறாகுமாகையால் பிறவற்றை தான் என்று எண்ணுவதால் தனக்கு துக்கம் தான் வரும்.
4 .**ஸ்வ** மற்றும் பிற பற்றி அறிவு வருவதாலேயே துக்கம் விலகும்.

தத்துவங்களில் ஸ்வதத்துவம் ஜீவதத்துவமாகும். பிற தத்துவம் அஜீவ தத்துவமாகும். உயிரல்லாதன முதலான தத்துவங்களில் நாம் இதுவரை ஏகத்துவம்-நான் என்னும் அகங்காரமும், மமத்துவம்-என்னுடையது என்ற மமகாரமும் கொண்டு அவைகளின் மேல் அன்பு செலுத்தி வருகிறோம், அதனால் துக்கமடைந்து கொண்டிருக்கிறோம். உயிரல்லாதன தத்துவம் என்னுடையது அல்லவானால் அவைகளை நான் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். இதற்கு பதில் பிறவற்றை தெரிந்து கொள்வதால் எந்த தவறும் இல்லை, பிறவற்றை தான் அல்லது தனது என்று நம்புவதுதான் தவறாகும், அதனால் நமக்குத்தான் இழப்பாகும். அறிவதால் இழப்போ, சேதமோ, நஷ்டமோ உண்டாகுமெனில், கேவலஞானி லோகாலோகத்தில் உள்ள எல்லாவற்றையும் அறிகிறார், ஆனாலும் கூட அவர் அனந்த சுகம் உடையவராகவே இருக்கிறார். ஸ்வ தத்துவத்தை-ஜீவ தத்துவத்தை இதுதான் **நான்** என்று அறிய வேண்டும், பிற தத்துவத்தை-அஜீவ முதலான தத்துவங்கள் **நான் இல்லை** என்று அறிய வேண்டும்.

சுகமடைவதே நமக்கு பிரயோஜமாகும். மோக்ஷத்தில் தான் அனந்த சுகம் கிடைக்கிறது ஆகையால் மோக்ஷதத்துவ ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்பதை தெரிந்து கொள்வது அவசியமாகும். மோக்ஷம் எங்கே இருக்கிறது? சொல்லுங்கள் பார்க்கலாம். சொர்க்கத்தின் மேலா அல்லது கீழா? தலை சுற்றுகிதா? ஹேய்! எங்கு பந்தம் இருக்கிறதோ அங்கே தான் மோக்ஷம் இருக்கிறது. பந்தம் உயிரில் நிகழ்கிறது ஆகையால் மோக்ஷம் கூட உயிரில்தான் நிகழ்ந்தாக வேண்டும். பந்தமும் மோக்ஷமும் உயிரினுடை அவஸ்தைகள்-நிலைகள் தான். ஜீவ தத்துவம் மற்றும் அஜீவ தத்துவம் இரண்டும் திரவ்ய தத்துவங்களாகும், மற்ற தத்துவங்கள் அவை இரண்டின் அவஸ்தைகள்-பர்யாய தத்துவங்களாகும். பந்தம் இல்லாமல் போவதால் மோக்ஷம் நிகழ்கிறது ஆகையால் பந்த தத்துவம் மற்றும் மோக்ஷ தத்துவத்தையும் அறிதல் அவசியமாகும். பந்தத்திற்கு காரணம் ஆஸ்ரவ தத்துவமாகும் ஆகையால் அதையும் தெரிந்து கொள்வது கூட அவசியமாகும். மோக்ஷத்துக்கு காரணம் அதாவது மோக்ஷமடையும் வழி சம்வரை மற்றும் நிர்ஜரை தத்துவமாகும் ஆகையால் அவைகள் எப்படி இருக்கிறதோ அப்படியே-யாதார்தமாக அறிதலும் அவசியமாகும்.

இவ்விதமாக ஏழு தத்துவங்கள் இருக்கின்றன, இவைகளை யதார்த்தமாக அறிந்து நம்புதல் எல்லாவற்றிர்க்கும் முதலில் செய்ய வேண்டிய அவசியமான செயலாகும். இந்த தத்துவங்களின் பெயரை வரிசையாக இப்போது பார்க்கலாம்-**ஜீவ தத்துவம், அஜீவ தத்துவம், ஆஸ்ரவ தத்துவம், பந்த தத்துவம், சம்வர தத்துவம், நிர்ஜரா தத்துவம், மோக்ஷ தத்துவம்.** எவ்வளவு எளிதாக இருக்கிறது அல்லவா? இந்த பெயர்கள் சீக்கிரம் நம் நினைவில் வந்துவிடும். ரீனா, பூனா தத்துவ முகாமில் மூன்று வயது சானிகா, ஐந்து வயது நதாஷா, ஏழு வயது ரௌணக், பியூஷ், சுநய், ஆகாஷ் முதலிய சிறு சிறு குழந்தைகள் கூட ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள் இவைகளின் பெயர்களை சரியாக படபட வென்று சொல்வதை பார்த்தாய் அல்லவா!

சென்ற கடிதத்தில் ஒழுக்க குணத்தின் சர்ச்சையில் எந்த வகை கஷாயங்கள் இல்லாததால் எந்தெந்த சாரித்ரங்கள் நிகழ்கின்றன என்று பார்த்தோம். இவைகளின் பெயர்கள் கூட 4-5 வது வகுப்பு முதல் டாக்டர், இஞ்சினியரிங் படிக்கும் பெரிய மாணவர்களுக்கு ஞாபகத்தில் இருந்ததை முகாமில் பார்க்க முடிந்தது. இவர்கள் ஒர் இரண்டு முகாம்களிலேயே இவ்வளவு ஆர்வமாக படித்து இந்த விஷயங்களை தெரிந்து கொள்கிறார்கள் என்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய தாகும். ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களாக இருந்தும் கூட தினமும் 7-8 மணி நேரம் முகமிலும், பிரவசனங்களிலும் சோர்வின்றி கலந்து கொண்டனர். அவர்கள் மாலை 6 மணிக்குள் உணவு உண்டு, பிறகு நீ நடத்திய வகுப்பிலும் வந்து பங்கு கொண்டார்கள். **இந்த காலத்து குழந்தைகளுக்கு பாடங்களை கிரகிக்கும் சக்தி-grasping power அதிகமாக இருக்கிறது.** இன்று பிரயோஜமான தத்துவங்கள் சம்பந்தமாக கொஞ்சம் தெரிந்து கொண்டோம். அடுத்த சில கடிதங்களில் இவைகளைப்பற்றி மேலும் விரிவாக சர்ச்சை செய்யவிருக்கிறோம். கிழே கொடுக்கப்பட்டுள்ளவைகளை பற்றி கொஞ்சம் ஆலோசனை செய்யுங்கள்.

தத்துவம் என்று எதை சொல்கிறோம்? பிரயோஜமான தத்துவங்கள் எவை மற்றும் எத்தனை? தத்துவங்களின் பெயர்கள் மற்றும் அவைகளின் லக்ஷணங்கள் பற்றி விரிவான சர்ச்சை, பிரயோஜனமான தத்துவங்கள் பற்றி உயிருக்கு அனாதி காலமாக இருக்கும் விபரீதமான நம்பிக்கைகள் ஏழு தத்துவங்களில் ஹேய, ஞேய, உபாதேய **விட வேண்டிய, தெரிந்து கொள்ள வேண்டிய, ஏற்க வேண்டிய தத்துவங்கள்** யாவை? ஏழு தத்துவங்களை தெரிந்து கொண்டு அவைகளில் ஒளிந்திருக்கும் ஆத்ம ஜோதியை எப்படி தெரிந்து கொள்வது? அதாவது தான்-பிற பற்றிய பேதவிஞ்ஞானத்தை-பிரித்தறியும் செயலை எப்படி

செய்ய வேண்டும்? ஏனெனில் நாம் சாஸ்திர ஸ்வாதயாயம் செய்கிறோம், கேட்கிறோம், வாசிக்கிறோம், அது சப்த அறிவு பெருவதற்காக மட்டும் அல்ல ஆனால் ஆத்மா பற்றி தெரிந்து கொள்வதற்கே யாகும்.

நாங்கள் மே 14 முதல் 31 வரை தேவலாலியில் தத்துவ பயிற்சி வகுப்பு நடத்த செல்கிறோம். அங்கிருந்து வந்த பிறகு அடுத்த கடிதத்தில் இது பற்றி மேலும் அதிக சர்ச்சை செய்யலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-20 10-6-1995

ஏழு தத்துவங்களின் ஸ்வரூபம்-1

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஜினேந்திரரால் சொல்லப்பட்ட தத்துவங்களை பயிற்சி செய்வதில் உங்களுக்கு பெருகிவரும் ஆர்வத்தைப் பார்த்து நான் ஆனந்தமடைகிறேன். தத்துவமே ஞாயமானதும், அறிவார்ந்ததுமாகும். அதை முறையாக பயிற்சி செய்வதால் அவைகளை நாம் சுலபமாகவே புரிந்து கொள்ள முடியும்.

ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், நன்கு அபாவங்கள், ஆறு காரணிகள், ஐந்து பாவங்கள், நிமித்த உபாதானம் முதலியவைகளில் அடிப்படை அறிவு வந்த பிறகு சாஸ்திரங்களில் சொல்லப்படுபவைகளின் பொருள்களை சுலபமாக புரிந்து கொள்ள முடியும். மேலும் அதில் மறைந்து கிடக்கும் மர்மங்களை தெரிந்து கொள்வதால் அந்த விஷயங்களில் ஈடுபாடு அதிகமாகிறது, மேலும் அவைகளின் நுட்பங்களை தெரிந்து கொள்வதில் ஆர்வமும் பெருகுகிறது.

ஆறு திரவியங்கள் பற்றி நாம் முன்னரே பயின்றிருக்கிறோம். இந்த பிரபஞ்சம் ஆறு திரவியங்களின் சமூகத்தால் ஆனது என்று முன்னரே நாம் பார்த்திருக்கிறோம். ஒவ்வொரு திரவியத்தின் பொது மற்றும் சிறப்பு குணங்களைப்பற்றி கூட சர்ச்சை செய்திருக்கிறோம். ஒவ்வொரு திரவியத்தின் நிலைத்த தன்மை-அஸ்தித்துவம் தனித்தனியாகும், ஒவ்வொரு திரவியத்தின் நிலைப்பும் அதனதன் திரவ்ய, ஷேத்ர, கால, பாவத்தின் எல்லைகளுக்குள்ளேயே இருக்கிறது. திரவியம் தோற்றம், மறைவு, நிலைத்தலுடன்-உத்பாத, வ்யய, த்ருவத்துடன் இருக்கிறது. அதாவது திரவியம் தோற்றம், மறைதல், நிலைத்திருத்தல் தன்மையை தன்னில் கொண்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு சமயமும் புதிய பர்யாயம் தோன்றுதல், பழைய பர்யாயம் அழிதல் நிகழ்ந்த வண்ணம் இருந்தாலும், திரவியம் நிலைத்த தன்மையுடன் எப்போதும் இருக்கிறது. இவைகளைப் பற்றி எல்லாம் நாம் முன்னரே பார்த்திருக்கிறோம்.

இவைகளை படிக்கும்போது ஒன்றை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அது என்ன வென்றால், இந்த ஆறு திரவியங்களில் என்னுடைய இடம் எது? நான் யார் என்று தன்னை அடையாளம் காண வேண்டும்? இதற்கு பதில் நான் ஒரு சுதந்திரமான உயிர் பொருள், ஜீவ திரவியம் என்பதாகும். என்னுடைய நிலைப்பு என்னுடைய திரவ்ய, ஷேத்ர, கால, பாவத்தில், என்னுடைய ஸ்வ சதுஷ்டயத்தில் இருக்கிறது. மேலும் நான் குண பர்யாயங்களை உடையனவாக இருக்கிறேன். இந்த பர்யாயங்கள் சமயந்தோரும் மாற்ற மடைந்தாலும் நான் த்ருவமாக, ஒரு கம்பம் போல, எப்போதும் நிலையாக இருக்கிறேன். பொருளின் அமைப்பு இப்படி இருந்த போதிலும் நான் ஒரு உயிர் பொருள்+அனந்த புத்கல பரமாணு ஆகிய அனேக திரவியங்களின் அசமானஜாதி திரவ்ய பர்யாயத்தை-அதாவது ஆன்மாவும் உடலும் கலந்த உருவத்தை அதாவது மனித பர்யாயத்தை நான் ஸ்வ என்று நம்புகிறேன், அதனால் நான் சுகமடைய செய்யும் எல்லா காரியங்களும் பலனில்லாமல் போகின்றன, அந்த செயல்கள் வீண் என்று நிரூபணமாகிறது.

திரவியங்கள் பற்றி தெரிந்து கொண்ட பிறகு, இப்போது நாம் உபயோகமான தத்துவங்களை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். திரவியங்களை பற்றி தெரிந்து கொள்வதற்கும் தத்துவங்களை பற்றி தெரிந்து கொள்வதற்கும் வித்யாசம் என்ன?

புகைப்படம்-photo உதாரணத்தின் மூலம் நீங்கள் இதை சீக்கிரமாக புரிந்து கொள்ள முடியும். உன்னுடைய திருமணத்தின் போது பெரிய குரூப் போட்டோ எடுத்தது ஞாபகம் இருக்கிறதா? 20-25 பேர்களுடன் பெரிய கூட்டமாக நம்மை நிற்க வைத்து ஒரு குரூப் போட்டோ எடுத்ததில் நாம் எல்லாம் ஒரு எறும்பு போல சிறிதாக தெரிகிறோம் அல்லவா. ஆனால் ஒரே நபரை அருகில் அதாவது உன்னை மட்டும் close-up-ல் எடுத்த போட்டோவில் உன்னுடைய மூக்கு, கண்கள், நீ அணிந்திருந்த நகைகள், ஆடைகள் எல்லாம் தெளிவாக தெரிகிறதல்லவா. **திரவியங்களை பற்றி நாம் தெரிந்து கொண்டது குரூப் போட்டோவை பார்ப்பது போலவும், தத்துவங்களை பற்றி தெரிந்து கொள்வது close-up போட்டோவை பார்ப்பது போலவுமாகும்.**

சென்ற கடிதத்தில் பிரயோஜமானது என்று எதை சொல்கிறோம், பிரயோஜமானது என்று சொல்வதன் பொருள்-தாத்பர்யம் என்ன, தத்துவம் என்பதன் பொருள் யாது என்பது பற்றி யெல்லாம் பார்த்தோம். என்னுடைய லட்சியம் சுகம் அடைய வேண்டும் என்றால் அப்போது அந்த சுகத்தை அடைய சில விஷயங்களைப் பற்றிய அறிவு பெருதல் மிகவும் அவசியமானதாகும். எந்த அறிவை பெறாமல் நம் துக்கம் விலகாதோ, மற்றும் சுகமடைய முடியாதோ அதையே பிரயோஜனமான-உபயோகமான தத்துவம் என்று சொல்கின்றனர்.

ஜீவ தத்துவம், அஜீவ தத்துவம், ஆஸ்ரவ தத்துவம், பந்த தத்துவம், சம்வர தத்துவம், நிர்ஜரா தத்துவம் மற்றம் மோக்ஷ தத்துவம் என தத்துவங்கள் ஏழாகும். ஜீவன் மற்றும் அஜீவன் இரண்டும் திரவ்ய தத்வங்களாகும். மற்ற ஐந்தும் பர்யாய தத்துவங்களாகும். அதாவது உயிர் மற்றும் கர்மம் இவைகளின் அவஸ்தைகள்-நிலைகளாகும். முதலில் நாம் சரளமான, சாதாரணமான வரையறையை பார்க்கலாம், பிறகு அவைகளை நுட்பமாக பார்க்கலாம்.

ஜீவ தத்துவம்-எதில் பார்த்தல், அறிதல், ஆனந்தம் இருக்கிறதோ அந்த ஞானானந்த ஸ்வபாவி ஆத்மா ஜீவ தத்துவமாகும். அஜீவ தத்துவம்-எதில் பார்த்தல், அறிதல், ஆனந்தம் இல்லையோ அப்படிப்பட்ட புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம் மற்றும் காலம் அஜீவ தத்துவமாகும். இது உயிர் மற்றும் உயிரல்லன தத்துவங்களின் பொதுவன வரையறையாகும்-ஆகம மொழியில் எழுதப்பட்டதாகும். தத்துவங்களின் வழியே நாம் நம்மைபற்றி-ஸ்வயம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமாகையால், வரையறையை கொஞ்சம் சீர்திருத்தி அத்யாத்ம மொழியில் எழுதி இருப்பதை பார்க்கலாம். அத்யாத்ம மொழியில் இந்த இரண்டு தத்துவங்களும் இவ்வாறே சொல்லப்பட்டு இருக்கிறது.

1. ஜீவ தத்துவம்: எதில் என்னுடைய ஞானம், தர்சனம், சுகம் இருக்கிறதோ அது ஜீவ தத்துவமாகும்.

2. அஜீவ தத்துவம்: எதில் என்னுடைய ஞானம், தர்சனம், சுகம் இல்லையோ அப்படி பட்ட என்னை தவிர மற்ற அனந்த உயிர்கள், புத்கலங்கள், தர்மம், அதர்மம், ஆகாசம், மற்றும் காலம் ஆகிய இவைகள் எல்லாம் அஜீவ தத்துவத்தில் அடங்குகின்றன. கவணமாக பாருங்கள், நோக்கம் மாறியவுடன் சொல்வது கூட மாறிவிடுகிறது. என்னுடைய நோக்கில் பிற எல்லா உயிர்களும் கூட அஜீவ தத்துவத்தில் சேர்ந்து விடுகின்றன. என்ன? அரஹந்தர்கள் மற்றும் சித்தர்கள் கூட அஜீவ தத்துவமா? இதை கேட்ட உடனேயே பெரிய பதட்டமும், கொந்தளிப்பும் உண்டாகிறது. இதை கேட்ட என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரன் அவிநாஷ், **அக்கா, எனக்கு இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை! அரஹந்தரும், சித்தரும் அஜீவ தத்துவத்திலா வருகிறார்கள்?!**என்று கூறினான். ஒரு தத்துவத்தின் ஸ்வரூபத்தை கேட்டே தூக்கம் வரவில்லை என்றால், ஏழு தத்துவங்களையும் உள்ளது உள்ளபடியே யதார்த்தமாக தெரிந்து கொண்டால், நம்மிடம் அனாதி காலமாக இருக்கும்

மோஹ நித்திரை பறந்து விடும், சம்யக்த்துவம் அடைந்து விடுவோம் என்பதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது.

3. ஆஸ்ரவ தத்துவம்: சுபாசுப விகார உணர்வுகள் உண்டாதல் ஆஸ்ரவ தத்துவமாகும். இது பொதுவாக சொல்லப்பட்ட வரையறையாகும். விரிவாக பார்த்தால் மித்யாத்வம், அவிரதம்-விரதம் ஏறக்கும் உணர்வில்லாமை, பிரமாதம்-சோம்பல்-புறக்கணிப்பு-அசட்டை, கஷாயம்-துவர்ப்பு உணர்வுகள் மற்றும் யோகம் ஆகிய உயிரின் உணர்வுகள் ஆஸ்ரவமாகும். இதை **பாவ+ஆஸ்ரவம்=பாவாஸ்ரவம்** என்கிறோம். இது உயிரின் அவஸ்தை-நிலை-உணர்வாகும். கர்மத்தின் நோக்கில் பார்க்கும்போது அந்த சமயத்தில் புதிய கர்மங்கள் வருதலை **திரவ்ய+ஆஸ்ரவ=திரவ்யாஸ்ரவம்** என்று சொல்கிறோம். அதாவது கர்மங்கள் உயிரடன் ஒன்றுவதை திரவ்யாஸ்ரவம் என்று சொல்கிறோம். இதையே ஆஸ்ரவ தத்துவம் என்றும் கூறுகிறோம்.

4. பந்த தத்துவம்: இதில் கூட பாவ பந்தம் மற்றும் திரவ்ய பந்தம் என்று உயிர் மற்றும் கர்ம நோக்கில் இரண்டு விதமாகும். சுபாசுப விகார பாவத்தில்-மோஹ ரக த்வேஷத்தில் சிக்கிக்கொள்ளுதல் பாவ பந்தமாகும். புதிய கர்மங்கள் பழய கர்மங்களுடன் வந்து சேர்தல் திரவ்ய பந்தமாகும். கர்மங்கள் பந்தமாவதை திரவ்ய பந்தம் என்றும் சொல்கின்றனர். இதையே பந்த தத்துவம் என்றும் கூறுகிறோம்.

5. சம்வர தத்துவம் : ஆஸ்ரவம் நின்று போதலை சம்வரை என்று சொல்கின்றனர். ஆத்மானுபவத்தில் ஆழ்ந்த பிறகு, அதாவது சுத்தோபயோகத்தில் நிகழும் போது உயிரில் மோஹம், ராகம், த்வேஷம் முதலிய கஷாய உணர்வுகள் **உற்பத்தியாவதில்லை** ஆகையால் அப்படிப்பட்ட உயிருக்கு ஆஸ்ரவமும், பந்தமும் நிகழ்வதில்லை. ஆஸ்ரவம் நின்று போவதையே சம்வரை என்று சொல்கின்றனர். பாவ சம்வரையை சுபாசுப உணர்வுகள் தோன்றாத நிலை என்று கூறுவது என்னவோ இல்லாததை வைத்து சொல்வதாகும். இருப்பதை வைத்துச் சொல்ல வேண்டு மென்றால் உயிரில் **வீதராகத்தன்மை இருப்பதை** அதாவது **சுத்தநிலை தோன்றுவதை** பாவ சம்வரை என்று சொல்லலாம். திரவ்ய சம்வரை என்பது புதிய கர்மங்கள் வருவது நின்றுபோதல். இதுவரை சம்வரை தத்துவத்தை மேலோட்டமாகப் பார்த்தோம். இதையே நுட்பமாக நோக்கும்போது மித்யாத்வம் தோன்றாத நிலையில் பிற ஆஸ்ரவ சம்பந்தமான விரதமில்லாமை முதலியன இருந்து கொண்டிருக்கும் அதேசமயம் வீதராக தன்மை வளர்ச்சியடைய அடைய விரதமில்லாமை முதலியன கூட குறைந்து கொண்டே போகும்.

6. நிர்ஜரா தத்துவம்: சுத்தத்தின் வளர்ச்சியை பாவ நிர்ஜரை என்று சொல்கின்றனர். பாவ நிர்ஜரையின்போது கஷாயங்கள் மேலும் மேலும் குறைந்து கொண்டே போகும் அதேசமயம் வீதராக தன்மையும் வளர்ச்சியடையும். கர்மத்தை வைத்து சொல்ல வேண்டு மென்றால் முன்னால் கட்டிக்கொண்ட கர்மம் உயிரின் வீதராக உணர்வின் காரணத்தால் அதிக அளவில் விழுந்து கொண்டே போகும். சம்வரை என்றால் புதிய கர்மங்கள் வராமை, நிர்ஜரை என்றால் முன்னர் கட்டிக் கொண்ட கர்மங்கள் அதிக அளவில் நீங்குதல்-விழுந்து விடுதல் எனலாம். ஆகையால் சம்வரை மற்றும் நிர்ஜரையின் காரணத்தால் முன்னர் உயிர் கட்டிக் கொண்ட கர்மங்கள் அதிக அளவில் குறைந்து கொண்டே போகிறது.

7. மோக்ஷ தத்துவம்: பூரண வீதராகத்தன்மையும், பூரண சுத்த நிலையும் வெளிப்படுதல் பாவ மோக்ஷமாகும். கர்மங்கள் முழுமையாக இல்லாமல் போதல் திரவ்ய மோக்ஷமாகும். மித்யாத்வம், விரதமின்மை, பிரமாதம், கஷாயம் மற்றும் யோகம் ஆகிய ஆஸ்ரவ, பத்த

காரணங்கள் முழுமையாக அழிதலும் முன்னர் கட்டிக் கொண்ட கர்மங்கள் முழுவதும் இல்லாமல் போதலும் ஆகிய நிலையை மோக்ஷம் என்று சொல்கின்றனர்.

மேலே குறிப்பிட்டதிலிருந்து ஆஸ்ரவ, பந்த, சம்வர, நிர்ஜரா மற்றும் மோக்ஷ தத்துவங்கள், உயிர் மற்றும் கர்மத்தின் அவஸ்தைகள்-பர்யாயங்கள் என்று நாம் தெரிந்து கொள்ளலாம். ஜீவதிரவியம் பற்றி பேசும்போது பர்யாயங்களுடன் கூடிய முழுமையான திரவியம் பற்றிய எண்ணம் நம் அறிவில் வருகிறது. ஆனால் ஜீவ தத்துவம் பற்றி பேசும்போது பர்யாயங்களின் சுதந்திர தன்மையை பார்த்து அதை வேறு விதமாக சொல்லப்படுகிறது. ஸ்வ தத்துவம் அதாவது ஜீவ தத்துவத்தை மட்டும் ஒரு பக்கத்தில் வைத்து பிரபஞ்சத்தில் உள்ள மற்ற எல்லாவற்றையும் பிற தத்துவங்களில்-அஜீவ முதலான தத்துவங்களில் வைத்து பேசப்படுகிறது.

உனக்கு ராஜா ஹரிச்சந்திரனின் கதை தெரியுமல்லவா. ஒருமுறை ராஜா ஹரிச்சந்திரனின் நாடகம் நடந்து கொண்டிருந்தது. ஹரிச்சந்திரனுக்கு வரும் துயரங்களை பார்த்து நாடகத்தை பார்த்து கொண்டிருந்தவர்கள் எல்லோரின் கண்களும் கண்ணீரில் மூழ்கின. அப்போது ஒரு பெண்மணி மட்டும் எந்த கலக்கமுமின்றி நாடகக் காட்சியை பார்த்துக் அமைதியாக ரசித்துக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் அமர்ந்திருந்த பெண்மணி அழுதுகொண்டே எப்படி நீ கல் நெஞ்சக்காரியாக இருக்கிறாய்? உனக்கு ஏன் கொஞ்சம் கூட துக்கம் வரவில்லை? என்று கேட்டாள். அப்போது அந்த பெண்மணி இவ்வாறு பதில் கூறினாள், அடி பயித்தியமே! அந்த நடிகர் என் கணவர். ஹரிச்சந்திரனின் பாத்திரத்தில் ஒன்றி எவ்வளவு அழகாக நடித்துக் கொண்டு இருக்கிறார் என்பதை பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறேன். அவர் எவ்வளவு தான் நடித்தாலும் அவர் உள்மனதில் அவருக்கு கொஞ்சம் கூட துயரம் இல்லை.

அதேபோல இந்த ஏழு தத்துவங்களும் தனித்தனியாகும். உயிரின் அவஸ்தைகளாக இருந்தபோதிலும் இவைகளிலிருந்து ஜீவ தத்துவம்-ஸ்வ தத்துவம் மாறுபட்ட தத்துவமாகும். இந்த உயிர் உடலுடன் இருந்தாலும் கூட உடலிலிருந்து அதாவது அஜீவ தத்துவத்திலிருந்து வேறாகும். இந்த உயிர் கோபத்தோடு இருப்பது போல நேரடியாக தெரிந்தாலும் கூட ஜீவ தத்துவம் வேறாகும், ராகம் முதலான ஆஸ்ரவ தத்துவம் வேறாகும்.

நாம் ஒரு அழுக்கான துணியை பார்க்கிறோம். அந்த அழுக்கு அவஸ்தையில்-நிலையில் கூட துணி, வேறு அழுக்கு வேறாகும். இரண்டின் அவஸ்தைகளும் தனித்தனி, இரண்டின் அடையாளமும்-ஸ்வரூபமும் வேவ்வேறாகும். இதன் காரணமாகத்தான் அவை தனித்தனியாக ஆக முடிகிறது. தொலைகாட்சியில் சோப்பு விளம்பரத்தில் கூட இதையே சொல்கின்றனர். இதில் வித்யாசம் என்னவென்றால் அவர்களுடைய பார்வை பணத்தின் மேல் இருக்கிறது, நாம் திரவியத்தின் மேல் பார்வையை செலுத்த வேண்டும் அதாவது பார்வையை என்றால் அறிவு மற்றும் நம்பிக்கையை திரவியத்தின் மேல் அதவது **ஸ்வ** தத்துவத்தின் மேல் கவனத்தை வைக்க வேண்டும் என்பதேயாகும். மூடநம்பிக்கை, விருப்பு வெறுப்புகளுடன் கூடிய அழுக்கு அவஸ்தையில்-நிலையில் கூட ஜீவ திரவியம் தனி, த்ரிகால சுத்த சைதன்யமய ஒரே வடிவமாகும் மற்றும் மோஹ, ரக, த்வேஷ அழுக்குகள் உயிரினின்றும் வேறாகும்.

துணி அழுக்கான பிறகுகூட துணி சுத்தமாகவே இருக்கிறது என்ற முழு நம்பிக்கை இருந்தால்தான் அழுக்கை அகற்ற வேண்டும் என்ற எண்ணமும் அதை செய்வதற்கான காரியத்தையும் பற்றி நாம் ஒரு முடிவுக்கு வருவோம். அதுபோல மூடநம்பிக்கை, கஷாயங்களுடன் கூடிய உயிரில் கூட உயிர் எப்போதும் முழு தூய்மையாக, அழுக்கற்றதாக,

நிலையானதாக-த்ருவமாக சைதன்யமயமாகவே இருக்கிறது என்ற முழு நம்பிக்கை வராமல் மித்யாத்வ வடிவ அழுக்கை நீக்க வேண்டும் என்று எண்ணம் வரமுடியாது. பார், இப்போது கொஞ்சம் கவனமாகப் பார். உயிரின் அவஸ்தை அழுக்காக இருக்கிறது என்ற அறிவு வரும்போது அதேசமயம் நம்பிக்கையில் உயிரின் இயல்பு சுத்தமே என்ற நம்பிக்கை வந்தால்தான், அழுக்கு நிலையை அகற்ற முயற்சி எடுக்க முடியும். ஆனால் அழுக்கு நிலை பற்றிய அறிவே இல்லை என்றால் பிறகு அழுக்கு நிலையை அகற்ற மாற்று நடவடிக்கைகளை ஏன் எடுக்கப் போகிறோம்? மேலும் அழுக்குதான்-மித்யாத்வம், மோஹ, ராக த்வேஷம் தான் நம்முடைய ஸ்வரூபம் என்ற நம்பிக்கை கொண்டிருந்தால் அந்த அழுக்கை விலக்க முயற்சி எப்படி செய்வோம்?

அவஸ்தையுடன் கூடிய அதாவது பரயாயத்துடன் கூடிய திரவியத்தில் பர்யாயத்துடன் கூடிய அந்த பகுதி-திரவ்ய பகுதி இருக்கிறது என்ற சிந்தனை எப்படி செய்ய வேண்டும் என்பதை பற்றி நாம் பிறகு பார்க்கலாம். இந்த ஏழு தத்துவங்களைப் பற்றி மேலும் நுணுக்கமாக பயிற்சி செய்வது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் எல்லா அத்யாத்ம சாஸ்திரங்களும்-ஆன்மா பற்றி விளக்கும் நூல்களும் இந்த தத்துவங்களைஆதாரமாகக் கொண்டவை, தத்துவ மொழியில் சொல்லப்பட்ட வைகளாகும். தத்துவ சம்பதமாக நம் நம்பிக்கை விபரீதமாக-எதிர்மாறாக இருந்தால் அத்யாத்ம சாஸ்திரங்களை எவ்வளவுதான் படித்திருந்தாலும் கூட நமக்கு அதனால் எந்த லாபமும் ஏறபடப் போவதில்லை. ஏழு தத்துவகள் சம்பந்தமாக மேலும் விரிவாக அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-21 8-7-1995

ஏழு தத்துவங்களின் ஸ்வரூபம் - 2

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஏழு தத்துவங்கள் பற்றிய பொதுவான ஸ்வரூபம் பற்றி சென்ற கடிதத்தில் நாம் பார்த்தோம். இன்று ஜீவ தத்துவம்-அஜீவ தத்துவம் ஆகிய இரண்டு தத்துவங்களை பற்றி அதிகமாக தெரிந்து கொள்ளவிருக்கிறோம். நான் ஸ்வயம் ஜீவ தத்துவமாவேன், ஆகையால் என்னை பற்றி நான் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அஜீவ தத்துவத்தை பற்றியும் நான் தெரிந்து கொள்வது அவசியம் ஏனெனில் அது நான் இல்லை என்று தெரிந்து கொள்ளவதற்காகவே; ஏனென்றால் நாம் அனாதி காலமாக உயிரல்லாதனவற்றை உயிர் என்று நம்பிக்கொண்டு இருக்கிறோம், உயிர் மற்றும் உயிரல்லாதன இரண்டும் ஒன்றே என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். ஜீவ தத்துவம் எது என்று முதலில் நாம் பார்க்கலாம்.

சஹடாலாவில் பண்டிட் தௌலத்ராம் எழுதியிருக்கிறார், **சேதன் கோ ஹை உபயோக ரூப், பின்மூரத சின்மூரத அனூப்.** சமயசாரம் கிரந்தத்தில் ஆசார்ய குந்தகுந்தர் சொல்கிறார், **அஹமேக்கோ கலு சுத்தோ தம்சணணாணமயிஓ சதாரூவி.** இதன் பொருள் நான் ஒரு, சுத்த, சதா காலமும் உருவமில்லாத, ஞான தர்சனமய மாவேன், வேறு எதுவும்-ஒரு பரமாணு அளவுகூட என்னுடையதில்லை. சமயசார நாடக் என்ற நூலில் பண்டிட் பனார்சிதாஸ் கூறுகிறார், **சேதனரூப அனுப அமூர்த, சித்த சமான் சதா பத மேரோ.** தத்வார்தஸூத்ரத்தில் ஆசார்ய உமாஸ்வாமி **உபயோகோ லட்க்ஷணம்** என்று உயிரின் இயல்பு-ஸ்வரூபம் பற்றி கூறியிருக்கிறார். மோக்ஷமார்க பிரகாசம் என்ற நூலில் பண்டிட் தோடர்மல்ஜீ எழுதியிருக்கிறார், **அமூர்த்திக் பிரதேசோ கா புஞ்ச, பிரசித்த ஞானாதி குணோ கீ தாரீ, அனாதிநிதன் வஸ்த்து ஆப் ஹை, ஔர் மூர்த்திக் புத்கல திரவ்யோ கா பிண்ட, பிரசித்த ஞானாதிகோ சே ரஹித், ஜின்கா நவீன் சய்யோக் ஹுவா ஹை ஐசே சரீராதிக் புத்கல் பர ஹை.** ஆத்மசித்தி சாஸ்திரத்தில் ஸ்ரீமத் ராய்சந்திரர் கூறுகிறார், **சுத்த புத்த சைதன்யகஃன் ஸ்வயம் ஞ்யோதி சுக தாம்.**

மேலே கூறியவைகள் எல்லாம் மாறுபட்டவைகளாக-வெவ்வேறு வார்த்தைகளாக இருந்த போதிலும் எல்லாவற்றிற்கும் பொருள் ஒன்றேயாகும். உயிர் தத்துவம் பற்றிய வர்ணனையே ஆகும். சர்வஞ்ஞ பகவானால் அறியப்பட்ட மற்றும் கூறிய உயிரின் ஸ்வரூபத்தை புனிதர்கள் சுயமாகவே தன் அனுபவத்தில் அறிந்து பிறகு சாஸ்திரங்களில் கூறியிருக்கிறார்கள். நாம் கூட ஸ்வயம்-நம்மை அனுபவம் செய்ய வேண்டும்.

இப்போது நாம் முதலில் ஜீவ திரவியம் பற்றி சிந்தனை செய்யலாம். திரவியம் குண பரயாயங்களுடன் கூடியதாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஒவ்வொரு சமயமும் ஏதாவது ஒரு பர்யாயம் இருந்து கொண்டே உள்ளது, இதன் பொருள் என்னவென்றால் திரவியம் பர்யாயங்களுடன் கூடியதாகவே இருக்கிறது, ஆனால் பர்யாயங்களிலிருந்து திரவியம் தனியாக ஆக முடியாது. பர்யாயவடிவில் ஒவ்வொரு சமயமும் மாற்ற மடைந்தாலும்கூட திரவிய வடிவில் தொடர்ந்து அப்படியே அதுவாகவே இருக்கிறது. ஒவ்வொரு திரவியமும்-ஒவ்வொரு வஸ்த்துவும் நமக்கு இரண்டு அம்சமாக-விதமாக தோன்றுகிறது. ஒன்று நித்யமாக-தீர்கமாக-நிச்சயிக்கப்பட்டதாக, நீடித்து இருப்பதான த்ருவ அம்சம். இரண்டாவது ஒவ்வொரு சமயமும் தோன்றுவதும், அழிவதுமான பர்யாய அம்சம். நிலையாக இருக்கும் த்ருவ அம்சத்தை **திரவ்யாம்சம்** என்றும், நிலை யில்லாததாக இருக்கும் அம்சத்தை **பர்யாயாம்சம்** என்று சொல்கிறோம். திரவ்யாம்சம் அதாவது நித்யாம்சம்

நிலையாக இருப்பதால் அனாதிகாலம் முதல் அனந்த காலம் வரை அதே வடிவில் நீடித்து இருப்பதால் அதில் எந்த மாற்றமோ அல்லது அழிவோ நிகழ முடியாது. அது அதுவாகவே-ஒரே வடிவமாகவே உள்ள திரவ்யாம்சத்தையே திரிகால, த்ருவ, பரம்பாரிணாமிக, ஒன்றான, சுத்த பாவம் என்று சொல்கிறோம்.

நோக்கு	வஸ்த்து	திரவ்ய அம்சம்	பர்யாய அம்சம்
திரவ்ய	பொதுவும் சிறப்பும்	பொது	சிறப்பு
க்ஷேத்ர	பேதமும் அபேதமும்	அபேதம்	பேதம்
கால	நித்யமும் அநித்யமும்	நித்யம்	அநித்யம்
பாவ	ஏகம் அனேகம்	ஏகம்	அனேகம்

மேலே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தின் மூலம் வஸ்த்துவின் திரவ்ய அம்சம் பொதுவான-சாமான்ய, பிரிவில்லத-அபேத, நிலையான-நித்ய மற்றும் ஏக-ஒரே பொருளாகும் என்று நம் எண்ணத்தில்-அறிவில் வருகிறது. அது முழுமை அடைய வெளியிலிருந்து புதிதாக எதையும் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை, அது எப்போதும் முழுமையாகவே இருக்கிறது. வஸ்த்துவின் பர்யாயாம்சம் விஷேசமானதும், வெவ்வேறு வடிவமானதும், நிலையற்றதும், பலவடிவங்கள் கொண்டதாகவும் இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் மாற்றமடையக் கூடியதாக இருக்கிறது. திரவ்யாம்ச நோக்கில் பார்க்கும்போது எல்லா உயிர்களும் சமமாகவே இருக்கின்றன, ஆனால் பர்யாயாம்ச நோக்கில் பார்க்கும்போது பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எப்படி என்றால் பிறவி உயிர், முக்த உயிர் என்ற பேதம் உடல் மற்றும் கர்மங்கள் உடன் இருப்பதன் நோக்கிலும், அல்பக்ஞானி, சர்வஞ்ஞர் என்ற பேதம் ஞான குணத்தின் பர்யாய நோக்கிலும், ஸ்ராவகர், முனி என்ற பேதம் ஒழுக்க குணத்தின் குறிப்பிட்ட பர்யாயத்தின் காரணத்தாலும், ஏகேந்திரியம், இரண்டு இந்திரியம் முதலான பேதம் உடனிருக்கும் உடல் மற்றும் ஞானத்தின் வெளிப்பாடு காரணத்தாலும் பலவிதமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. பர்யாயாம்ச நோக்கில் பார்க்கும் போது எல்லா வேறுபாடுகளும் இருப்பது காணப்படுகின்றன. இது உண்மையான நிலைமையாகும், ஆனாலும் கூட பர்யாய அம்சத்தின் பக்கம் நாம் நம் பார்வையை-எண்ணத்தை செலுத்தாவிட்டால் அதாவது நம் அறிவில் பர்யாய அம்சத்தை கௌணத்தில் கொண்டு, அதாவது அது இருக்கிறது ஆனாலும் அதில் பாரமுகமாக இருந்து, திரவிய அம்சத்தின் பக்கம் நம் அறிவின் உபயோகத்தை செலுத்தும்போது, இந்த திரவ்ய அம்சம்-த்ருவ அம்சம் எப்போதும் இருக்கிது அதன் வடிவம் ஞானதர்சனமயமாகும் என்பதை அறியலாம். ஒவ்வொரு உயிருக்கும் இந்த திரவ்யாம்சம் சமமாக இருக்கிறது. எப்படி அனாதி காலத்தில் இருந்ததோ அப்படியே இன்றும் கூட இருக்கிறது.

எது த்ருவமோ-நிலையானதோ, நித்யமோ-தீர்கமானதோ, ஞானமய திரவ்ய அம்சமோ அதுவே ஜீவ தத்துவமாகும். நமக்கு பிரயோஜனமான-உபயோகமான ஸ்வ தத்துவமாகும். ஆகையால் இந்த **ஞானமய, நித்ய, த்ருவமாக இருக்கிற நானே ஸ்வ தத்துவம் அதாவது ஜீவ தத்துவமாவேன் என்று தன்னைத்தானே அடையாளம் காண வேண்டும்.** ஜீவ திரவ்யம் மற்றும் ஜீவ தத்துவத்தில் என்ன வேறுபாடு என்பது இப்போது உங்களுக்கு தெளிவாகி யிருக்கும் என்று நினைக்கிறேன். திரவியம் என்று சொன்ன உடனே **உத்பாதவ்யயத்ரவ்யயுக்தம் சத். சத் த்ரவ்ய லட்ஷணம்** என்பது நம்முடைய கவனத்தில் வருகிறது. இதில் உத்பாதவ்யயம் பர்பாய

அம்சம் மற்றும் த்ருவ அதாவது நிலைத்த தன்மை திரவ்ய அம்சமாகும். ஜீவ தத்துவம் என்று சொன்ன உடன் சுத்த அசுத்த பர்யாங்களிலிருந்தும் வேறான திரிகால சுத்த ஸ்வரூபம் அதாவது உத்பாதவ்யயத்தை கௌணத்தில் (அதன் பக்கம் நம் கவனத்தை வைக்காமல்) கொண்டு வெரும் த்ருவ தத்துவமான-பரமபாரிணாமிக பாவம் மட்டுமே நம் கவனத்திற்கு வர வேண்டும். பர்யாயத்தை என்னவோ எப்போதும் திரவியத்திலிருந்து பௌதீக ரீதியாக பிரிக்க முடியாது, வேறுபடுத்த முடியாது. ஆனாலும்கூட இந்த பிரித்து பார்க்கும் முயற்சியை நம்முடைய அறிவிலே, சிரத்தையிலே செய்ய வேண்டும்.

[ஜீவ தத்துவத்தை ஒரு நாணயத்தின் இரண்டு பக்கமாக பார்க்க வேண்டும். நாணயத்தின் ஒரு பக்கத்தை உத்பாதவ்யயத்தையும் மறுபக்கம் த்ருவத்தையும் கற்பனை செய்யுங்கள். நம் பார்வை எப்போதும் எவ்வளவு மதிப்பு உடைய நாணயம் என்பதன் பக்கம்-பர்யாயத்தின் பக்கம் தான் போகும். நாணயத்தின் அடுத்த பக்கத்தில் இந்திய ரிசர்வ் வங்கி என்று போட்டிருக்கும் பக்கம் நம் கவணம் பொதுவாக செல்வதில்லை. அதேபோல ஸ்வ தத்துவத்தை சரியாக புரிந்து கொள்ள நமக்கு வெளிப்படையாக தெரியும் பர்யாய அம்சத்தின் பக்கம் பார்க்காமல் நம் கவணம் பொதுவாக செல்லாத பக்கம் அதாவது வெளிப்படையாக தெரியாத திரவ்ய அம்சத்தின் பக்கம் நம் அறிவை திருப்ப வேண்டும் என்று உபதேசம் செய்யப்படுகிறது என அறியவும்.]

எவ்வாறு தங்கத்தினாலான நகைகள் வளையல், நெக்லெஸ், ஜிமிக்கி, மோதிரம் முதலிய பலவிதமான வடிவங்களில் இருந்தாலும் எப்போது நாம் வெறும் தங்கத்தின் பக்கம் நோக்கத்தை செலுத்தும்போது அதன் வடிவங்களை நம் எண்ணத்தில் கொள்ளாமல் (கௌணமாக்கி) தங்கம் எவ்வளவு இருக்கிறது என்று பார்க்கிறோம். அல்லது எவ்வாறு அமெரிக்கன், இந்தியன், ஜெப்பானி, ஆஃபிரிக்கன் முதலான மனிதர்களின் உடல் அமைப்பு, நிறம், உயரம், முடி இவைகளில் பல விதமாக இருந்தாலும், மனிதர் என்ற நோக்கில் எல்லோரும் சமமே, எல்லோரும் மனிதர்களே. அதேபோல பர்யாயங்களின் நோக்கில் உயிர்கள் வெவ்வேறாக காணப்பட்டாலும், ஜீவ தத்துவம் என்ற நோக்கில் த்ருவ-திரவ்ய அம்ச நோக்கில் எல்லா உயிர்களும் சமமாகவே இருக்கின்றன. இதனால்தான் என்னுடைய ஸ்வரூபம் சித்தருக்கு சமானம் என்று சொல்கின்றனர். ஆனாலும் ஒருவர் பர்யாய அம்சத்தில் தன்னை சித்தருக்கு சமானம் என்று நம்பினால் அவருடைய நம்பிக்கை தவறாகும், மூடநம்பிக்கையாகும்.

சித்த பகவானிடம் திரவ்ய அம்சம் எப்படி இருக்கிறதோ, அதேபோன்ற பரிபூரண வலிமை அவருடைய பர்யாயத்திலும் பூர்ணமாக வெளிப்பட்டிருக்கிறது. எப்படி திரவ்ய அம்சம் இருக்கிறதோ அப்படியே வெளிப்படும் அவஸ்தையிலும்-பர்யாயம்திலும் இருக்கிறது. அந்த வெளிப்பட்ட அவஸ்தையை நாம் தெரிந்து கொண்டு அவருடைய திரவ்ய அம்சம் கூட அவ்வாறே இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். மேலும் என்னுடைய திரவ்ய அம்சம் கூட சித்தரின் திரவ்ய அம்சம், பர்யாய அம்சத்திற்கு சமமாக இருக்கிறது என்ற அறிவு நமக்கு வருகிறது. கணிதத்தில் நீங்கள் படித்ததை நினைவு கூறுங்கள், அதாவது A=B, B=C Therefore A=Cஅதாவது சித்தரின் பர்யாய அம்சம் = சித்தரின் திரவ்ய அம்சம் [சித்த நிலையில் சித்த பர்யாயமும் உயிரின் முழு சக்தியும் சமமாக இருக்கிறது, அதாவது குணங்களின் முழு சக்தியும் ஒவ்வொரு சமயமும் வெளிப்படுகிறது என அறியவம்.] சித்தரின் திரவ்ய அம்சம்=என்னுடைய திரவ்ய அம்சம் (திரவ்ய நோக்கில் எல்லா உயிர்களும் சமம்), எனவே சித்தரின் பர்யாய அம்சம் = என்னுடைய திரவ்ய அம்சம். [என்னுடைய ஸ்வரூபம் சித்தருக்கு சமானம்.]

ஆகையால் ஜிநேந்திர பகவானை தரிசித்தல்-காணுதல்-வணங்குதல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாம் ஜினபகவானின் தர்சனத்தில் நம் நிஜ தர்சனத்தை-நம் திரிகால சுத்த ஆத்ம தர்சனத்தை பெற வேண்டும். அவருடைய திரவ்ய மற்றும் பர்யாய அம்சத்திற்கு சமமாகவே நான் இருக்கிறேன், அதாவது என்னுடைய திரவ்ய அம்சமும் இருக்கிறது என்ற

அறிவு பெற்றதும் நம் நோக்கம் நம் திரவ்ய அம்சத்தின் (ஸ்வ சன்முக்-அந்தர்முக்) பக்கம் திரும்புகிறது. ஆகையால் பிரவசனசாரம் கிரந்தத்தில் ஆசார்ய குந்தகுந்தர் **யார் அரஹந்தரை த்ரவ்ய வடிவில், குண வடிவில் மற்றும் பர்யாய வடிவில் அறிகிறாரோ அவருக்கு மோஹம்-மித்யாத்வம் அழிந்து போகிறது** என்று கூறியிருக்கிறார்.

என் பர்யாயத்திலிருந்தும் வேறான என் திரவ்ய அம்சம் எதுவோ அதுவே நான், அதுவே ஜீவ தத்துவமாகும். இந்த சூத்திரம் அறிவில்-எண்ணத்தில் வந்தவுடன் ஏழு தத்துவங்களில் ஆஸ்ரவ, பந்த, சம்வர, நிர்ஜரா மற்றும் மோக்ஷம் ஆகிய பர்யாயங்களிலிருந்தும் வேறான நான் தான் ஜீவ தத்துவம்- த்ருவ-திரவ்ய அம்சம் என்று தெரிந்து கொள்வது இப்போது கடினமாக இருக்காது. பர்யாயத்தில் ஆஸ்ரவம் (ராகம், கஷாயம்) மற்றும் பந்தம் இருந்த போதிலும், இதிலிருந்து வேறான நான் நித்ய, த்ரிகால த்ருவ அம்சமாவேன் என்று தெரிந்து கொள்ள அதிக நேரம் ஆகாது. நம்முடைய பர்யாயங்களிலிருந்து, அதாவது நிகழ்காலத்தில் நம்முடைய பர்யாயத்தின் பக்கம் பார்க்காமல் நம்முடைய திரவ்ய அம்சத்தை மட்டுமே நாம் தனியாக பார்த்துக் கொண்டு இருப்போமானால், பிற திரவியங்கள் பக்கம் நம்முடைய எண்ணம் எப்படி செல்லும்? பிற திரவியங்களுடன் சம்பந்தம் எப்படி இருக்கும்? ஆகையால் அந்த அஜீவ தத்துவம் பிற திரவியமாகும், அதிலிருந்து ஜீவ தத்துவம் வேறாகும் என்று தெரிந்து கொள்ளுதல் இப்போது சுலபமாக இருக்கும். திரவ்ய அம்சத்தை அதாவது ஜீவ தத்துவத்தை பார்ப்பதற்கு பர்யாயங்களை தூக்கி வெளியே போடவேண்டும் என்பதில்லை, அதனுடைய அடையாளத்தை அழிக்க வேண்டியதில்லை-அப்படி செய்வது முடியாத காரியமாகும். வெருமனே நம்முடைய பார்வையை மட்டும் பர்யாயத்திலிருந்து நீக்கி, எப்போதும் நிலையாக இருக்கக்கூடிய த்ருவ அம்சத்தில் நிலைக்கச் செய்ய வேண்டும், அதில் அடைக்கலம் அடைய வேண்டும். அதுவே **நானாவேன்** என்று நிலை நாட்டியதும்-உறுதி செய்ததும் உபயோகம் தானாகவே நம் பக்கம் திரும்பி விடும்.

மும்பாய் சயானில் நம் வீட்டுக்கு முன்னால் பிரதான சாலை இருப்பதால் பத்துவழி சாலையில் கார் மற்றும் கனரக வாகனங்கள் சென்ற வண்ணம் இருக்கின்றன. போக்குவரத்துகளின் சத்தம் இடைவிடாது நம் காதுகளில் விழுகிறது. ஆனாலும்கூட நம்முடைய கார் ஹாரனின் ஒலியை கேட்டு, இது நம்முடைய கார் ஹாரன் ஒலி என்று நீ சீக்கிரமாகவே அடையாளம் கண்டு கொள்கிறாய் அல்லவா. அது போல ஜீவ தத்துவம் என்பது நாம் பார்க்கும் நோக்கில் இருக்கிறது. ஒரு பொருளை அம்பால் குறி பார்த்து அடிக்கும்போது நம் பார்வை, நாம் குறி வைக்கும் அந்த பொருளின் மேல் நிலைகொண்டு இருக்கிறது. அந்த சமயத்தில் பல பொருள்கள் அங்கு இருக்கின்றன ஆனாலும் நம் பார்வை அவைகளின் பக்கம் போவதில்லை, ஏனெனில் நம் பார்வை நம் இலக்கான அந்த ஒரே பொருளில் மற்றும் நிலைகொண்டு இருக்கிறது. அதேபோல பர்யாயத்தில் நிலையில்லாமையும், பலவாகவும், முழுமையற்றதகவும், அழுக்காகவும் இருந்தாலும், நம் பார்வை-நோக்கம் எல்லாவற்றையும் பர்யாயத்தின் பக்கம் கௌணம் செய்து, வெறும் த்ருவமான-நிலையான அம்சத்தின் பக்கம் பார்வையை நிலை நிறுத்திவதால் **இதுவே நான்** என்று **ஸ்வயம் நானாவேன்** என்று ஸ்தாபிப்பதால் ஜீவ தத்துவம்-ஸ்வ தத்துவம் தனியாக நம் அனுபவத்திற்கு வருகிறது.

இதைத்தான் செய்ய வேண்டும் என்றால் அஜீவ தத்துவத்தை நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். ஏனென்றால் நாம் அனாதி காலமாக அஜீவ தத்துவத்தில் அஹம்புத்தி-இதுதான் நான் என்ற எண்ணத்தில் இருக்கிறோம். பிற உயிர்கள் மற்றும் பிற பொருள்கள் எல்லாம் அஜீவ தத்துவமாகும், நம் நம்பிக்கையில் அவைகளுக்கு இடமில்லை. அதற்காக எல்லா அஜீவ திரவியங்களையும் மற்றும் பிற உயிர்களையும் அறிந்து கொண்டேயிருக்க அவசியமில்லைதான் என்றாலும் அவைகள் எல்லாம் அஜீவ தத்துவங்கள்

என்று தெரிந்து கொண்டு **அஜீவ தத்துவம் நான் இல்லை** என்று தெரிந்து கொள்ள வேண்டு மல்லவா! முக்கியமாக உடலிலிருந்து நான் வேறு என்று அறிதல் வேண்டும். ஏனென்றால் நம்முடைய ஏகத்துவ புத்தி-இதுவே நான் என்ற எண்ணம் ஹிமாலய மலையில் மீதோ அல்லது உலகில் உள்ள மற்ற பதார்த்தங்களுடனோ இல்லை, ஆனால் நமக்கு இந்த பிறவியில் உடனிருக்கும் உடலுடன் மற்றும் சொந்த பந்தம், சொத்து சுகங்களுடன் தான் இருக்கிறது.

நாம் உடலையே நான்-என்னுடையது என்று கொள்வதோடு மட்டும் நின்று விடுவதில்லை, கோபம் முதலான கஷாயங்களில் கூட ஏகத்துவம், மமத்துவத்தை நிறுவி அவைகளையும் நமதாக்கிக் கொள்கிறோம். நான் தாயாவான், இன்னார் கோபி, பலானவர் தற்பெருமை கொண்டவர் என்று ராக உணர்வுகளைடன் அதாவது ஆஸ்ரவத்துடன் நாம் ஒன்றி அவைகளே நம்முடைய இயல்பு என்று நம்புகிறோம். ஆகையால்தான் ஏழு தத்துவங்களில் இந்த பர்யாய தத்துவங்களை தனியாக கூறியிருக்கிறார்கள். இந்த ஏழு தத்துவங்களின் இயல்பை பார்த்து நாம் இன்றுவரை அந்த தத்துவங்களைப் பற்றி என்னென்ன குழப்பங்கள்-கற்பனைகள்-நம்பிக்கைகள் செய்து கொண்டு வருகிறோம் என்பது பற்றி நாம் அடுத்த கடிதத்தில் பார்க்க விருக்கிறோம். இந்த தத்துவங்களில் விடவேடிய, தெரிந்து கொள்ள வேண்டிய, ஏற்க வேண்டிய (ஹேய, ஞேய, உபாதேய) தத்துவங்கள் எது எது என்று கூட நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த ஏழு தந்துவங்களுடன் பாபம், புண்ணியம் ஆகிய பர்யாயங்களும் சேர்ந்ததாகும். ஆஸ்ரவத்தில் புண்ணியாஸ்ரவமும், பாபாஸ்ரவமும் மற்றும் பந்தத்தில் புண்ணியபந்தமும், பாபபந்தமும் சேர்ந்ததாகும். ஜினாகமங்களில் சில இடங்களில் புண்ணியம், பாபம் இரண்டையும் தனியாக கூறி ஏழு தத்துவங்களின் இடத்தில் ஒன்பது பதார்த்தங்கள் அல்லது தத்துவங்கள் என்று கூட கூறுவதை பார்க்கிறோம். ஏழு தத்துவம் என்று சொன்னாலும், ஒன்பது பதார்த்தம் என்று சொன்னாலும், ஒன்பது தத்துவம் என்று சொன்னாலும் மூன்றும் ஒன்றுதான். அவைகளை மேலும் தெளிவாக நாம் தெரிந்து கொள்வதற்காகவே தனித்தனியாக எடுத்து சொல்லப்படுகிறது. மேலும் தத்துவ சம்பந்தமான விபரங்களை அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-22 15-09-1995

ஏழு தத்துவங்கள் பற்றிய தவறான நம்பிக்கை -1

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கடந்த சில கடிதங்கள் வழியாக நாம் ஏழு தத்துவங்கள் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டோம். ஜிநேந்திர பகவானால் சொல்லப்பட்ட இந்த தத்துவங்களை சரியாக தெரிந்து கொண்டு, அவைகளை உள்ளவாறே நம்பி, பிறகு ஸ்வ தத்துவத்தை அடையாளம் கண்டு அதை அனுபவம் செய்தாலன்றி நற்காட்சி பெற முடியாது. நற்காட்சி பெறாமல் உண்மையான சுகத்தின் அனுபவம் தொடங்காது. உண்மையான தேவ, குரு, சாஸ்திரங்களை தவிற வேறு எங்கும் இந்த உண்மையான உபதேசத்தை பெற முடியாது. குதேவ, குகுரு, குசாஸ்திரங்கள் மூலம், உயிர் தவறான உபதேசங்களை பெற்று, கிரஹீத மித்யாத்வி யாகிறது. குதேவ, குகுரு, குசாஸ்திரங்கள் மூலம் பெரும் தவறான உபதேசத்தை விட்டுவிட்டு, எப்போது இந்த உயிர் உண்மையான உபதேசத்தை ஏற்கிறதோ, அப்போதுதான் இந்த உயிருக்கு அதத்துவங்களின்-தத்துவங்களல்லாதவைகளின் மேல் இருக்கும் மோஹம் அதாவது மூடநம்பிக்கை அழிகிறது. எழு தத்துவங்கள் தொடர்பான தவறான நம்பிக்கையே மித்யாத்வமாகும்-மூட நம்பிக்கையாகும்.

ஏழு தத்துவங்களை அறியாமை அதாவது உயிருக்கு ஏழு தத்துவங்கள் சம்பந்தமான அறிவு இல்லாமல் இருப்பதையே மித்யாத்வம் என்கின்றனர். ஏனெனில் தந்துவங்கள் என்னவோ எப்படி இருக்கின்றனவோ அப்படியே எப்போதும் இருக்கின்றன, ஆனால் உயிர் அது சம்பந்தமான நம்பிக்கையில் தவறு செய்கிறது. ஏழு தத்துவங்கள் வஸ்த்துக்களின் நிலையாகும். இந்த வஸ்த்துக்களின் நிலையை தவிற மற்ற எல்லா நம்பிக்கைகளும் கற்பனையால் உதித்த குழப்பங்களாகும். அஞ்ஞானியின் நம்பிக்கைக்கு உகந்தார்போல் பிரபஞ்சத்தில் திரவியங்களின் செயல்பாடு அமைவதில்ல, ஆகையால் அவர் துக்க மடைகிறார். இந்த துக்கத்தை அழிக்க கற்பனையால் உதித்த குழப்பங்களை அகற்றுவது ஒன்றே வழியாகும்.

ஏழு தத்துவங்கள் சம்பந்தமான தவறான நம்பிக்கை என்பதன் பொருள், தத்துவங்கள் எப்படி இருக்கின்றனவோ அப்படியே நம்பாமல், வேறு விதமாக நம்புவதாகும். ஒவ்வொரு உயிரும் அனாதி காலமாகவே அப்படி தவறான நம்பிக்கையை செய்து கொண்டு வந்திருக்கிறது ஆகையால் ஏழு தத்துவங்களை அவர் தெரிந்தவராக இருக்க முடியாது. ஆனாலும் தத்துவ சம்பந்தமான தவறான நம்பிக்கைகளில் அந்த உயிர் பழக்கப்பட்டதாகவே இருக்கிறது. ஒருவேளை அதனால்தானோ என்னவோ பண்டிட் தௌலத்ராம்ஜீ சஹடாலாவிலும், பண்டிட் தோடர்மல்ஜீ மோக்ஷமார்க பிரகாசத்திலும் முதலில் இந்த தவறான நம்பிக்கைகள் பற்றி விளக்கம் செய்திருக்கிறார்கள். அதற்கு பிறகு அந்த தத்துவங்களின் உண்மையான ஸ்வரூபம் பற்றி விளக்கிக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறியிருப்பது சரிதான்! யார் பிறவியிலிருந்தே வியதியஸ்தரோ அவருக்கு, அதாவது எது அவருக்கு தினமும் அனுபவத்தில் இருக்கிறதோத, அந்த வியாதியின் லட்சணத்தை கூறி, அதற்குப்பின் வியாதியில்லா நிலையை பற்றி விளக்கி, மேலும் அந்த வியாதியிலிருந்து குணமடையும் வழியைக் கூறினால் அந்த நோயாளிக்கு நம்பிக்கை பிறக்கும், மற்றும் அவர் குணமடைய அந்த வழியை பின்பற்றுவார் அல்லவா!

உயிர்-உயிரல்லன தத்துவ சம்பந்தமான தவறான நம்பிக்கை: இந்த இரண்டு தத்துவங்கள் சம்பந்தமான தவறான நம்பிக்கையை ஒன்றாக செல்லும் நோக்கம் இதுவாகும். மூடநம்பிக்கை கொண்ட உயிர் -

1. உயிர் மற்றும் உயிரற்றவைகளையும் ஒன்றே என நம்புகிறது, அல்லது
2. உயிரற்றவைகளை உயிர் என்று நம்புகிறது, அல்லது
3. உயிரை உயிரற்றது என்று நம்புகிறது.

அதாவது உடல் மற்றும் ஆத்மா இரண்டும் சேர்ந்ததே உயிர் என்று நம்புகிறது, அல்லது உடலையே உயிர் என்று நம்புகிறது அல்லது ஆத்மாவை உடல் என்று நம்புகிறது. இதன் பொருள் இந்த இரண்டின் வெவ்வேறு இயல்பு பற்றிய அறிவு அதற்கு வரவில்லை.

ஒரு சிறுவனை கடைக்கு அனுப்பி எலுமிச்சம்பழம் வாங்கிவரச் சொன்னால் அவன் வெள்ளரிக்காய் வாங்கிக்கொண்டு வந்தானானால், அதன் பொருள் அந்த சிறுவனுக்கு எலிமிச்சம்பழமும் எது என்று தெரியவில்லை வெள்ளரிக்காயும் எது என்று தெரியவில்லை என்பதாகும்.

ஜீவ தத்துவம் பற்றிய விளக்கம் சஹடாலாவில் **சேதன கோ ஹை உபயோகரூப்** அதாவது உயிரின் லட்சணம் பார்த்தல் அறிதல் என்ற சொல்லப்பட்டிகிறது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன வென்றால் நான் உபயோக வடிவமாவேன், நீயும் உபயோக வடிவமாவாய், நிகோத உயிரும் உபயோக வடிவமாகும், சித்தர்களும் உபயோக வடிவமாகும், எல்லா உயிர்களும் உபயோக வடிவமாகும். ஆனால் உயிர் பார்த்தல் அறிதலை தன் வடிவம் என்று நம்பாமல், பெற்ற உடலையே தன் வடிவம் என்று நம்புகிறது.

இங்கே பாருங்கள், காலையில் எழுந்தவுடன் நாம் கண்ணாடியின் முன் நின்று கொண்டு நம்(?) வடிவத்தை காண்கிறோம், நம் உடலின் போட்டோவை பார்த்து இது நம்முடைய போட்டோ என்று சந்தோஷமடைகிறோம். உடல் அழகாக இருந்தால், நாம் அழகாக இருப்பதாக நினைத்து பெருமைப்படுகிறோம். உடல் நோயுற்றிருந்தால், நான் நோயாளி என்று நம்பி துக்கப்படுகிறோம். புதிய உடலை பெற்றவுடன் நான் பிறந்தேன் என்றும், உடலை விட்டு பிரிந்ததும் நான் இறந்தேன் என்றும் நம்புகிறோம். கொஞ்சம் அமைதியான மனதுடன் என்னுடைய நம்பிக்கைகள் இப்படித்தான் இருக்கிறதா இல்லையா? என்று எண்ணிப் பாருங்கள்.

தன் உபஜத் அப்னி உபஜ், தன் நஷத் ஆப் கோ நாஷ் மான் என்று ஹிந்தியில் சொல்ல பட்டிருக்கிறது. இதன் பொருள் உடலின் பிறப்பை நம்முடைய பிறப்பாகவும், உடலின் அழிவை நம் அழிவாகவும் நம்புகிறோம். இங்கு முதல் நிலையான பிறப்பும், கடைசி நிலையான இறப்பும் ஆகிய இரண்டு நிலைகளே கூறப்பட்டுள்ளன என்றாலும் இந்த இரண்டு அவஸ்தைகளுக்கு மிடையிலுள்ள எல்லா அவஸ்தைகளும் கூட எடுத்துக் கொள்ள வேண்டும். பிறவி முதல் இறப்புவரை உள்ள எல்லா அவஸ்தைகளையும் நம்முடைய அவஸ்தைகள் என்று நம்பிக்கொண்டு வருகிறோம். எப்படி என்றால் உடல் சிகப்பாக இருந்தால் நான் சிகப்பாக இருக்கிறேன் என்றும், உடல் உயரமாக இருந்தால் நான் உயரமானவன் என்றும், உடல் வளர்ந்து இருந்தால் நான் வளர்ந்திருக்கிறேன் என்றும், உடல் அருவருப்பாக இருந்தால் நான் அழகற்றவனாக இருக்கிறேன் என்றும் உடல் நொண்டியாக இருந்தால் நான் நொண்டி என்றும் நம்பிக்கொண்டு இருக்கிறோம்.

வெரும் உடலுடன் மட்டும் தன்னை ஒருங்கிணைப்பதோடு இந்த உயிர் நின்று விடுவதில்லை. பணம் சொத்துக்கள், குழந்தைகள், குடும்பம், வீடு, வாகனங்கள் முதலான எல்லா அஜீவ தத்துவமான பிற பலவகையான உலகப் பொருள்களிலும் தன்னை பிணைத்துக்கொண்டு அவைகளுடன் இருப்பதால் நான் சுகவான், நான் துக்கவான், நான் ஏழை, நான் வாரிசுகளை-மகன், மகள்களை பெற்றவன், நான் ஆதரவற்றவன், நான் தாழ்வானவன் என்பனவான பல கற்பனைகளை செய்கிறது. இந்த கற்பனைகளின் காரணத்தால் தினசரி வாழ்க்கையில் மனித உயிர்கள் துக்கப் படுவதை நம்மால் காணமுடிகிறது. சிலருக்கு திருமணம் நடக்கவில்லை என்பதனால் துக்கம், சிலருக்கோ திருமணமாகி பலவருடங்களாகியும் குழந்தை பிறக்கவில்லை என்பதால் தங்கள் திருமண வாழ்க்கை முழுமை அடையவில்லையே என்று எண்ணி துக்கம் அல்லது சிலரோ விதவையானதால் தன்னை பாக்கியமில்லாதவர்களாக எண்ணி துக்கம் என தினசரி வாழ்கையில் துக்கமடைபவர்கள் இருப்பதை இந்த சமூகத்தில் காண்கிறோம். உடலே நான் என்ற தவறான நம்பிக்கை இருப்பதால், மேலும் உடலை ஆதாரமாக கொண்ட மற்ற எல்லா பொருள்களின் மேலும் தவறான நம்பிக்கை இருப்பதில் என்ன ஆச்சர்யம் இருக்க முடியும்?

அனாதி காலமாக இந்த உயிர் நான்கு-நரக, விலங்கு, மனித, தேவ கதிகளிலும் சுற்றிக்கொண்டு இருக்கிறது. ஸ்வயம் நானாகிய ஒரே உயிரே அதாவது ஆத்மாவாகிய நானே மற்ற புத்கல பரமாணுக்களால் ஆக்கப்பட்ட உடலில் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டும், அந்த உடலின் தொடர்பை துண்டித்து கொண்டும் வேறு வேறு புதிய கதிகளில் சுற்றுலா செய்து கொண்டு இருக்கிறேன். மூடநம்பிக்கையின் காரணத்தால், உயிர் எவ்வாறெல்லாம் மூடநம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை பார்க்கலாம். மோக்ஷமார்க பிரகாசத்தில் இவ்வாறு வர்ணனை வருகிறது.

1. இது நானாவேன்-ஏகத்வ புத்தி: ஆத்மாவின் ஸ்வபாவமான பார்த்தல் அறிதல் முதலானதும் மற்றும் விபாவமான கோபம் முதலானதும் மற்றும் புதகலத்தின் ஸ்பர்சம் முதலானதும் சேர்ந்த இதுவே நான், அதுவே என்னுடைய ஸ்வரூபம் என்று நம்புகிறது. இதன் பொருள் உடல் நானாவேன் மற்றும் அறிவு பெருவதும் மற்றும் கோபம் கொள்வதும் ஸ்வயம் நானேயாவேன் என்று நம்புகிறது, அவைகளில் ஏகத்துவ புத்தி கொள்கிறது.

2. இவைகள் என்னுடையது-ஸ்வாமித்வ புத்தி: இவைகளுக்கு நான் தலைவன் என்ற எண்ணம் கொள்ளுகிறது. ஆத்மா மற்றும் புத்கலம் இவைகளின் அவஸ்தைகள் எல்லாம் என்னுடைய அவஸ்தைகளாகும் என்று நம்புகிறது. அதாவது ஞான குணத்தின் அவஸ்தையையும், குறைந்த மற்றும் அதிக கோபம் அடைதல் முதலான விபாவ அவஸ்தைகளையும் மற்றும் புத்கலத்தின் நிற, ஸ்பர்ச மற்றும் பிற குணங்களின் அவஸ்தைகளையும் தன்னுடைய சுய அவஸ்தைகள் என்று நம்புகிறது.

3. நான் இவைகளை செய்பவன் - கர்த்துருத்வ புத்தி: உயிர் மற்றும் உடல் இவைகளுக்கு இடையில் நிமித்த நைமித்திக சம்பந்தம் அதிகமாக இருக்கிறது. அந்த காரணத்தால் எப்போது சில சமயம் உயிர் விரும்புகிறதோ அப்போது உடலின் செயல் உடலின் காரணத்தால் உடலில் நிகழ்கிறது, ஆனால் உயிர் அப்போது அந்த செயலை தன்னுடைய செயல் என்று நம்புகிறது. உதாரணமாக நான் பேசுகிறேன், நான் நடக்கிறேன் என்று உடலின் செயல்களை தன் சுய ஆத்மாவின் செயலாக நம்புகிறது, உடலின் செயல் மேல் கர்ததுருத்வ புத்தி கொள்கிறது.

4. நான் இவைகளை அனுபவிப்பவன்-போக்த்ருத்வ புத்தி: உடலில் குளிரால் நடுக்கம், வெப்பத்தால் வியர்த்தல், பசி எடுத்தல், தாகம் எடுத்தல் முதலிய அவஸ்தைகள் உண்டாகின்றன. மோஹத்தின்-மித்யாத்வத்தின் காரணத்தால் இந்த ஆத்மா தானே அந்த அவஸ்தைகளால் சுகமோ, துக்கமோ அடைவதாக நம்புகிறது. இந்த அவஸ்தைகள் எல்லாம் தன்னுடைய அவஸ்தைகள் என்று நம்பி குளிரால் நடுக்கமடைவதாகவும், வெப்பத்தால் காய்ச்சல் வந்ததாகவும், பசியால் சாப்பிட வேண்டும் என்ற எண்ணமும், தாகத்தால் தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற உணர்வும் கொண்டு தான் துக்கப்படுவதாக எண்ணுகிறது. உடலின் அவஸ்தைகளை தான் அனுபவிப்பதாக நம்புகிறது-போக்த்ருத்வ புத்தி கொள்கிறது.

இவ்வாறு இந்த உயிர் எந்தெந்த பிறவிகளை-மனித பர்யாயம், தேவ பர்யாயம் முதலிய பர்யாயங்களை ஏற்கிறதோ அந்தந்த பர்யாயங்களில் அகம்புத்தி கொள்கிறது. இதன் காரணம் என்ன வென்று பண்டிட் தோடர்மலஜீ எழுதி யிருக்கிறார், இந்த ஆத்மா அனாதியாகவே புலன்வழி அறிவு-இந்திரிய ஞானம் கொண்டதாகவே இருந்து வருகிறது, அதனால் ஸ்வயம் ஆத்மா உருவமில்லாததால்-அமூர்த்தமானதால் புலன்வழி அறிவுக்கு **ஆத்மா** அனுபவத்திற்கு வருவதில்லை; ஆனால் உடல் உருவமுடையது-மூர்த்தம் அதனால் அதுவே புலன்றிவுக்கு அனுபவத்தில் வருகிறது. அதனால் அனுபவத்திற்கு வரும் உடலையே தன்வடிவம் என்று அறிந்து அது மட்டுமே நான் என்று அஹம்புத்தி கொள்கிறது. எதுவரை அந்த உயிர் தன்னை தனியாக ஸ்வயம் யார் என்று தனிமை படுத்தி உணரவில்லையோ அதுவரை சமுதாய வடிவில் அதனுடன் காணப்படும் உடலையே தான் என்று நம்புகிறது-அஹம்புத்தி கொள்கிறது. மேலும் தனக்கும் உடலுக்கும் நிமித்த நைமித்திக சம்பந்தம் அதிகமாக இருப்பதால் அதன் தனித்தன்மை அதன் அனுபவத்திற்கு வருவதில்லை. ஆனால் எப்போது புதிய யோசனை மூலம் தான் வேறு ,உடல் வேறு என்ற அனுபவம் அடைகிறதோ அப்போது அதனிடம் மூடநம்பிக்கையின் உந்துதல் இருக்க முடியாதாகையால் மித்யாதிருஷ்டி பர்யாயங்களின், அதாவது மூடநம்பிக்கையுடன் கூடிய மனித, நரக, விலங்கு, தேவ கதி பிறவிகளில் தான் அஹம்புத்தி காணப்படுகிறது.

ஜீவ-அஜீவ சம்பந்தமாக எதிர்மாறான-விபரீதமான நம்பிக்கைகள் எப்படி எப்படி யெல்லாம் இருக்கின்றன என்பது பற்றி தெரிந்து கொண்ட பிறகு, இப்போது ஆஸ்ரவ தத்துவ-ஊற்று சம்பந்தமான எதிர்மாறான நம்பிக்கை எப்படியெல்லாம் இருக்கின்றன என்று பார்க்கலாம்.

ஆஸ்ரவ தத்துவ சம்பந்தமான விபரீத நம்பிக்கை: ஆஸ்ரவம் என்பதன் பொருள் என்னவென்று சென்ற கடிதத்தில் தெரிந்து கொண்டோம். ஆசை, வெகுளி, மயக்கம்-மோஹ, ராக, த்வேஷம் அதாவது மூடநம்பிக்கை மற்றும் துவர்ப்பு உணர்வுகள் ஆஸ்ரவமாகும், அது விபாவமாகும். ஸ்வபாவத்திற்கு-இயல்புக்கு எதிரான உணர்வை விபாவம் என்று சொல்கின்றனர். உதாரணமாக தண்ணீரின் இயல்பு குளிர்ச்சி, வெப்பமாக-சூடாக இருத்தல் தண்ணீரின் விபாவமாகும். பிற நிமித்தத்தால் நிகழ்வது விபாவம், அந்த நிமித்தம் இல்லாத சமயத்தில் எவ்வாறு இருக்கிறதோ அது ஸ்வபாவம். [தண்ணீர், நெருப்பு இரண்டின் தொடர்பையும், தொடர்பின்மையையும் இங்கு ஒப்பு நோக்குக.] ஞானம், ஆனந்தம் ஆத்மாவின் ஸ்வபாவ குணம். ஆசை, வெகுளி, மயக்கம் ஆத்மாவின் விபாவ குணம். ஆனாலும்கூட மூடநம்பிக்கை கொண்ட உயிர் விபாவங்களை அதன் இயல்பாகவே-ஸ்வபாவமாகவே நம்புகிறது. ஆஸ்ரவம் துக்கவடிவம், மித்யாதிருஷ்டி உயிர் அதை சுகவடிவம் என்று நம்புகிறது. ராகம் சுபமானாலும் (புண்ணிய சம்பந்தமானாலும்) அல்லது அசுபமானாலும் (பாப சம்பந்தமானாலும்) நிகழ்காலத்தில் கஷ்டத்தை கொடுப்பதாகும். மேலும் அதனால் கர்மபந்தம் நிகழ்கிறது ஆகையால் எதிர்காலத்தில் கூட துக்கத்தையே கொடுப்பதாகும். **ஆஸ்ரவ துக்ககார் கனே ரே, புதிவந்த தின் ஹே நிர்வேரே** என்று கூட ஆஸ்வத்தை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. துக்கத்துக்கு காரணம் ஆசை, வெகுளி, மயக்க மாகும், ஆனால் அஞ்ஞானி உடனிருப்பவைகளே, பிற திரவியங்களே துக்கத்துக்கு காரணம் என்று நம்பிக்கொண்டு ஆசை வெகுளி, மயக்கங்களை தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறது. ஆஸ்ரவ தத்துவ சம்பந்தமான தவறுகளை சுருக்கமாக மீண்டும் ஒருமுறை பார்க்கலாம்.

1. ஆசை, வெகுளி, மயக்கம்-ஆஸ்ரவம் எல்லாம் திரிபு உணர்வுகள்-விபாவங்க ளாகும். அவைகளை தன் இயல்பு உணர்வு- ஸ்வபாவம் என்று நம்புதல்.
2. ஆசை முதலியவைகளும் ஆத்மாவும் தனித்தனியானதாகும் ஆனால் ஆசை முதலான கஷாயங்களும், அறிவும்-தானும் ஒன்றே என்று நம்புதல்.
3. திரிபு உணர்வுகளான ஆஸ்ரவம் துக்கவடிவம், பந்த காரணம் மற்றும் எதிர்காலத்தில் கூட துக்கத்தையே கொடுப்பது, ஆனால் இவைகளை சுகவடிவம் என்று நம்புதல்.
4. உடனிருப்பவைகளால் எனக்கு துன்பம் வருகிறது, சாதகமற்றவைகள் எனக்கு கோபத்தை உண்டு பண்ணுகின்றன என்று நம்புதல்.
5. துக்கத்திற்கு காரணம் ஆஸ்ரவ மாகும் என்பதை தெரிந்து கொள்வதேயில்லை.

ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகள் இயற்கையாகவே என்னுடையதே என்று எண்ணுவது தவறு என்று எப்படி சொல்ல முடியும்? மூடநம்பிக்கை கொண்டவர் சுப ராகம் தனக்கு சுகத்தையே கொடுப்பது என்று பலமாக நம்புகிறார். அதனால் சொர்க்கம் முதலான சுகங்கள் கிடைக்குமாகையால் சுபராகம் அவர்களுக்கு நல்லதாக தோன்றுகிறது. ஆனால் அதனால் புண்ணிய கர்மத்துடன் காதி கர்மங்களையும் கட்டிக் கொள்வதால் அது எப்படி சுகம் தரக்கூடியதாக முடியும்? இந்த விபரீத நம்பிக்கையின் வர்ணனை சஹடாலாவில் **ராகாதி பிரகட் யே துக்தேன தின்ஹி கோ சேவத் கினத் சைன்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பொருள் திரிபு உணர்வுகள் தெளிவாகவே-வெளிப்படையாகவே துன்பத்தை தரக்கூடியவை ஆனால் மூடநம்பிக்கையுடைய உயிர் திரிபு உணர்வுகள் கொண்டுள்ளதையே சந்தோஷம் என்று எடுத்துக்கொண்டு அவ்வாறே செயல் படுகிறது.

பந்ததத்துவ சம்பந்தமான விபரீத நம்பிக்கை: பந்த தத்துவ சம்பந்தமான ஒழுங்கு முறையற்ற வாதங்களை, தவறான நம்பிக்கைகளை பற்றி சஹடாலாவில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது-**சுப-அசுப பந்த கே ஃபல் மஜார், ரதி-அரதி கரே நிஜபத விசார்**

இதன் பொருள் உயிர் முன்னர் கட்டி கொண்ட கர்மங்களின் பலனாக நிகழ்காலத்தில் அந்த உயிருக்கு அனுகூலமான மற்றும் பிரதிகூலமான பொருள்கள் இரண்டுமே கிடைக்கின்றன. ஆனால் அது அனுகூலமான பொருள்களை மட்டுமே விரும்புகிறது, பிரதிகூலமான பொருள்களை விரும்புவதில்லை. இத்த சிக்கலில் மாட்டிக்கொண்ட உயிர் தன் உண்மையான இயல்பை மறந்துவிடுகிறது அல்லது அதன் பக்கம் தன் பார்வையை செலுத்தக் கூட நேரமில்லாததாக இருக்கிறது.

உயிருக்கு அனுகூலமான பொருள்கள் புண்ணிய கர்ம உதயத்தாலும், பிரதிகூலமான பொருள்கள் பாப கர்ம உதயத்தாலும் கிடைக்கின்றன. எந்த உயிர் கர்மத்தின் உதயத்தை சுகம் என்று எண்ணுகிறதோ அது, புண்ணிய பந்தம் நல்லது என்று நம்புகிறது. யாருக்கு புண்ணிய கர்மபலன் மேல் ருசி-ஆர்வம் இருக்கிறதோ அவர் புண்ணிய கர்மத்தை கட்டிக் கொள்ளவே விரும்புகிறார். யாருக்கு கர்ம பந்தத்தில், அது புண்ணியமாகவே இருத்தாலும் விருப்பம் இருக்கிறதோ அவருக்கு நம்பிக்கை விபரீதமாக இருக்கிறது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை.

நிகழ்காலத்தில் நம்மிடம் இருக்கும் பொருள்கள் எல்லாம் பிற பொருள்கள் ஆகும். அவைகளில் சில இஷ்டமானது, சில இஷ்டமில்லாதது என்ற கற்பனை செய்வது நம் மூடநம்பிக்கை யாகும். ஆஸ்ரவத்தால் கர்ம பந்தம் நிகழ்கிறது. இந்த கர்மம் உதயத்திற்கு வரும்போது அதன் பலனாக ஆத்மாவின் ஞான, தர்சன, வீர்ய குணத்தின் பர்யாயத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன, ஆசை, வெகுளி, மயக்க பரிணாமங்களும் அவ்வாறே ஏற்ற இறக்கத்தோடு நிகழ்கின்றன, சுக துக்கத்தை கொடுக்கக்கூடிய பொருள்கள், குறிப்பிட்ட உடலமைப்பு முதலியவைகள் அமைவதும் கர்ம உதயத்தாலேயே கிடைக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் மூல காரணம் கர்மமாகும் ஆனால் அந்த கர்மம் என்னவோ சூக்ஷ்மமாக இருக்கிறது, வெளிப்படையாக தெரிவதில்லை. ஆகையால் இந்த உயிருக்கு தனக்கு கிடைத்த பொருள்களே தெரிகின்றன. ஏனவே தனக்கு கிடைத்த பொருள்கள் கடவுளால் கிடைத்தது அல்லது என் விதி-பவிதவ்யம் அப்படி இருக்கிறது என்று நம்பி பந்த தந்துவத்தை தவறாக எடுத்துக் கொள்கிறது, விபரீத நம்பிக்கை கொள்கிறது.

இங்கே பாருங்கள்! யாருக்கு ஒரு தத்துவத்தில் தவறான நம்பிக்கை இருக்கிறதோ அவருக்கு ஏழு தத்துவங்களிலும் தவறான நம்பிக்கையே இருக்கிறது. சம்வரை, நிர்ஜரை, மற்றும் மோக்ஷ தத்துவ சம்பந்தமான விபரீத நம்பிக்கைகள் பற்றி அடுத்த கடிதத்தில் நாம் சர்ச்சை செய்யலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

ஏழு தத்துவங்கள் பற்றிய தவறான நம்பிக்கை -2

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

தன்னை அடையாளம் கண்டு தனக்கு சுகமளித்தலே நம்முடைய இலக்காகும். உண்மையாக சொல்லவேண்டும் என்றால் நான் இயல்பாகவே-ஸ்வபாவமாகவே ஞானம் மற்றும் ஆனந்தத்தில் பரிபூரணமாக இருக்கிறேன் என்று அறிய வேண்டும். ஏனென்றால் சுகம் வெளியிலிருந்து பெறப்படுவதில்லை. ஆனால் சுகமய ஸ்வ-வை தெரிந்து கொண்டதுமே சுகானுபவம் நிகழ்கிறது. இன்றுவரை தவறான கற்பனைகளையே சுக துக்கங்கள் என்று நம்பிக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த தவறான கற்பனைகள் அதாவது விபரீதமான நம்பிக்கைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நாம் சென்ற கடிதத்திலிருந்து பார்த்துக்கொண்டு வருகிறோம்.

உயிர், உயிரல்லன, ஆஸ்ரவம், பந்தம், சம்வரை, நிர்ஜரை மற்றும் மோக்ஷம் இந்த ஏழும் பிரயோஜமான ஏழு தத்துவங்களாகும். இந்த தத்துவங்களில் யதார்த்தமான அதாவது உண்மையான நம்பிக்கை கொள்வதால் நம் துக்கம் விலகி உண்மையான சாஸ்வதமான-நித்யமான-தடையில்லாத சுகம் கைவரப் பெறுகிறோம்-ப்ராப்தியாகிறது. ஆனால் அனாதியாகவே உயிர் இந்த ஏழு தத்துவங்களில் தவறான-விபரீத நம்பிக்கையே கொண்டிருக்கிறது.

சம்வரை தந்துவ சம்பந்தமான தவறான நம்பிக்கை: ஆஸ்ரவம் இல்லாமையே சம்வரை யாகும். அதாவது ஆசை, வெகுளி, மயக்கங்கள் தோன்றாமை சம்வரை யாகும். அல்லது கர்மங்கள் வருகை தடைபடுதல் சம்வரை. இது இல்லாமை நோக்கில் சொல்லப்பட்டதாகும். இருப்பது நோக்கில் சொல்ல வேண்டுமென்றால் சுத்தத்தன்மை அதாவது வீதராகத்தன்மை உண்டாதல் சம்வரை யாகும். அந்த சமயம் அதீந்திரிய-இந்திரிய சம்பந்தமற்ற ஞானம் மற்றும் அதீந்திரிய ஆனந்தம் அடையப் பெருகிறோம். இதன் பொருள் என்னவென்றால் சம்வரையில் ஆத்மசுக அனுபவம் உண்டாகிறது ஏனென்றால் அதீந்திரிய ஞானம் மற்றும் அதீந்திரிய ஆனந்தத்திற்கும் இடையில் அவினாபாவி சம்பந்தம் இருக்கிறது. உள்பக்கம்-அந்தர்முக் அதாவது ஆத்மாவில் ஆழ்ந்திருக்கும் பாவலிங்கி துறவி, ஆத்மாவின் வளமான ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டு இருக்கிறார். ஆனால் அரேரே! இந்த கொடுத்து வைக்காதவர்-unblessed, உடலில் துணிகூட இல்லாமல் குளிரிலும், வெய்யலிலும், மழையிலும் எவ்வளவு கஷ்டத்தை சஹித்துக்கொண்டு இருக்கிறார் என்று சிலர் நினைக்கக்கூடும். இப்படிப் படவர்களுக்கு சம்வரை தத்துவ சம்பந்தமான விபரீத நம்பிக்கை இருக்கிறது.

யார் சம்வரையை கஷ்டம் கொடுப்பது, மன வேதனையை அளிப்பது என்று நம்புகிறாரோ அவர், எப்படி சம்வரை தத்துவத்தை வெளிக்கொண்டு வருவார்? ஆஸ்ரவ தத்துவம் அவருக்கு ஹிதமளிப்பதாக நம்புவதால் அவர் ஆஸ்ரவம் இல்லாமையை அதாவது சம்வரை தத்துவத்தை ஹிதமளிக்காதது என்றுதான் நம்புவார், ஆகையால் ஆஸ்ரவத்தை அவர் இல்லாமல் செய்யவும் விரும்ப மாட்டார். ஆஸ்ரவம் செய்வதால் சம்வரை நிகழ்கிறது என்ற ஒரு பெரிய தவறான நம்புதலை பெரும்பாலும் மக்கள் கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. சுபராகம் ஆஸ்ரவமாகும். விரதம், தபம் முதலியன சுபராகம். மஹா விரதம்-முனி விரதம் கூட சுப ராகமாகும். ஆனால் அதையே சம்வரை அதாவது சம்வரைக்கு காரணம் என்று நம்புதல் தகுதி யானதல்ல. எந்த காரணத்தால் ஆஸ்ரவமும், பந்தமும் நிகழ்கிறதோ அதே காரணத்தால் சம்வரையும் ஆகிறது என்று நம்புதல் முற்றிலும் தவறாகும்.

சுத்தோபயோகம் அதாவது ஆன்மாவில் ஆழ்தலே சம்வரையை வெளிப்படுத்த அதாவது ஆஸ்ரவங்களை தடுக்க ஒரே வழியாகும். ஆனால் இன்றுவரை இந்த உயிர் சம்வரையின் ஸ்வரூபம் தெரியாததால் மற்றும் சம்வரை ஆனந்த மயமானது என்ற அனுபவம் இல்லாததால் இந்த மூடநம்பிக்கை கொண்ட ஆத்மா சம்வரையை, கஷ்டம் கொடுப்பதாக நம்புகிறது அதாவது ஆஸ்வத்தை புண்ணிய உணர்வை-சுபராகம்தை செய்வதால் சம்வரை நிகழ்கிறது என்று நம்புகிறது.

நிர்ஜரை தந்துவ சம்பந்த விபரீத நம்பிக்கை: இச்சா நிரோத: தப: மற்றும் **தபசா நிர்ஜராச்ச** என்று தத்துவார்த்த ஸூத்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இதன் பொருள் இச்சைகள் தடைபடுதல் அதாவது இச்சை இல்லாமை அதாவது இச்சைகள் தோன்றுவதே இல்லாமை நிர்ஜரை யாகும், மேலும் அது சுகமயமாகும். இச்சை தோன்றுவதே துக்கமயமாகும், கஷ்டமாகும், நம்மை தொந்தரவு செய்வதாகும். எப்போது உயிர் பிற பொருள்களை இஷ்டமானது, இஷ்டமில்லாதது என்று நம்பும்போது அவைகளை ஏற்கவும், விலக்கவும் இச்சை கொள்கிறது. பிற பொருள்கள் என்னவோ இஷ்டமானதாகவோ, இஷ்டமில்லாததாகவோ இருப்பதில்லை, ஆனால் மூடநம்பிக்கையின் காரணத்தால் இந்த உயிர் அவைகளில் வேண்டியது, வேண்டாதது என்று நம்புகிறது. பிற பொருள்கள் இவர் விருப்பம் போல செயல்படுவதில்லை ஏனெனில் அவைகள் சுதந்திரமானவை. எப்போதாவது இவருடைய ஏதாவது ஒரு இச்சை பூர்த்தியானாலும் கூட இடைவிடாது புதிய புதிய இச்சைகள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன, அதனால் இந்த உயிர் இடைவிடாது கஷ்டத்தை அனுபவித்த வண்ணம் இருக்கிறது.

ஐந்து விதமான இந்திரிய விஷயங்களின் இச்சைகளுக்கு மூல காரணம் மூடநம்பிக்கை யாகும். நான்கு விதமான திரிபு உணர்வுகளுக்கு-கஷாயத்திற்கு-கோபம், கெர்வம், கபடம், பிற பொருள் மேல் பற்று கொள்வதற்கு மூல காரணம் மூடநம்பிக்கை யாகும். வெளிப் பொருள்களில் இஷ்டமானது, இஷ்டமில்லாதது என்ற கற்பனைக்கு காரணம் மூடநம்பிக்கை யாகும்.

மூல காரணமான மூடநம்பிக்கை இருக்கும் வரை அதன் காரிய வடிவ பலன்களான இச்சை, துவர்ப்பு உணர்வுகள்-கஷாயம், பொருள்களின் மேல் விருப்பு, வெறுப்பு ஆகியவைகள் இருக்கவே செய்யும். மனதில் இருக்கும் இச்சையும், கஷாயமும் வெளியில் தெரியாமல் இருக்கும்படி கபடம் செய்யலாம், ஆனால் அதை வெளியில் தெரியாமல் மூடி மறைப்பது அதை அழிக்கும் பரிகாரமாகாது-வழியாகாது. எனவே இச்சையும், கஷாயமும் மனதில் தோன்றாமலிருக்க வழி செய்வதே உண்மையான பரிகாரமாகும். அதாவது மூல காரணமான மூடநம்பிக்கையை அழிப்பதே உண்மையான பரிகாரமாகும்.

கர்ம நோக்கில் சொல்ல வேண்டுமென்றால் ஓரளவு, ஏக தேசம்-கொஞ்சம் பந்தம் இல்லாதிருத்தலையே நிர்ஜரை என்று சொல்கின்றனர். யார் பந்த தத்துவத்தின் ஸ்வரூபத்தை தவறாக தெரிந்து கொள்கிறாரோ அவர் நிர்ஜரை தத்துவ ஸ்வரூபத்தை எப்படி சரியாக தெரிந்து கொள்ள முடியும்? யாருக்கு புண்ணிய பந்தத்தில் சுகபுத்தி இருக்கிறதோ, அவர் நிர்ஜரைக்கான உபாயத்தை-வழியை துக்க வடிவமாகவே நம்புகிறார். உயிர் முன்னர் கட்டிக்கொண்ட கர்மங்களின் பலனால் துக்கமடைகிறது ஆனால் அது பிற பொருள்களே தன் துக்கத்துக்கு காரணம் என்று நம்பி அந்த பொருள்களை அழிக்க வழி தேடுகிறது, ஆனால் அதன் மூல காரணமான செயலை விட என்ன வழி என்று தேடுவதில்லை. இவ்வாறு நிர்ஜரை தந்துவ சம்பந்தமாக விபரீத நம்பிக்கையால் உயிர் துக்கத்திலேயே உழள்கிறது.

மோக்ஷ தத்துவ சம்பந்தமான விபரீத நம்பிக்கை: முழுமையான கஷ்டமே இல்லாத சுக அனுபவம், அனந்த சுகம் அடைதல், கர்மம் முழுமையாக இல்லாமல் போதல், ஆத்மாவின் பரிபூரண சுத்த நிலையை மோக்ஷம் என்கின்றனர். ஆத்மா அனந்த குண மயமாகும், அந்த எல்லா குணங்களின் சாமர்த்தியத்தையும் முழுமையாக பர்யாயத்தில் வெளிப்படுத்துதலையே மோக்ஷம் என்று சொல்கின்றனர்.

மித்யாதிருஷ்டி உயிருக்கு உன்மையான சுகம் பற்றிய அறிமுகம் இல்லாததால், ஐந்து இந்திரியங்கள் மற்றும் மனம் மூலம் பொருள்களை அனுபவிப்பதையே சுகம் என்று நம்புகிறது. உண்மையில் பல பதார்தங்களை அனுபவிக்க ஆர்வமும்-இச்சையும் கொள்கிறது. ஆத்மா அந்த பதார்த்தங்களை அறிந்து கொள்ளதான் முடியும், அதை ஏற்கவோ அல்லது தியாகம் செய்யவோ முடியாது. அஞ்ஞானி அவைகளை இடைவிடாது ஏற்கவும், தியாகம் செய்யவும் இச்சை-ஆர்வம் கொண்டு இடைவிடாது கஷ்டமடைகிறது, துக்கமடைகிறது. வேண்டிய விருப்பம் பூர்த்தியானால் அதை சுகம் என்று நம்புகிறது ஆனால் அதே சமயம் புதிய இச்சையும் தோன்றுவதால் அகுலம்-துக்கம் என்னவோ இருந்து கொண்டே இருக்கிறது. வீதராகம் அதாவது இச்சை இல்லாத நிலையே நிராகுல மயமாகும்-ஆனந்த மயமாகும்.

அஞ்ஞானி புலன்வழி கிடைக்கும் போக சம்பந்தமான சுகத்தையே உண்மையான சுகம் என்று நம்புகிறது; அது போன்ற சுகமே மோக்ஷத்தில் கிடைக்கும் என்று கற்பனை செய்கிறது, இதுவே அஞ்ஞானியின் மோக்ஷ சம்பந்தமான விபரீதமான நம்பிக்கையாகும். பலர் நம்மிடம் இவ்வாறு கேள்வி கேட்கின்றனர் **அடடா! மோக்ஷமடைந்த பிறகு அங்கு என்ன செய்ய வேண்டும்? அங்கு செய்ய வேண்டியது எதுவும் இல்லையெனில் அங்கு செல்வதில் என்ன கேளிக்கை இருக்கிறது-என்ன சந்தோஷம் இருக்கிறது?**

இந்த உயிர் பந்த தத்துவத்தின் ஸ்வரூபத்தை தெரிந்து கொள்ளவில்லை. துக்கம் கர்ம பந்தத்தால் ஆகிறது, கர்மம் முழுவதும் இல்லாமல் போவதாலேயே முழுமையான சுகத்தை அடைந்தவராவோம் என்று தெரியாததால், அதாவது மோக்ஷ சம்பந்த விபரீத நம்பிக்கையின் காரணத்தால், பிற பதார்த்தங்களும் மற்றும் தான் விரும்பாத சேர்க்கைகளும் துக்கத்திற்கு காரணம் என்று நம்பி பிற பதார்தங்களையும், விரும்பாத சேர்க்கைகளையும் அழிக்க, இல்லாமல் செய்ய இச்சை கொள்கிறது அதானால் மேலும் புதிய கர்மங்களை கட்டிக் கொண்டே இருக்கிறது.

இவ்வாறெல்லாம் விரிவாக பார்த்த பிறகு ஒன்று நமக்கு தெரியவருகிறது, அது என்னவெனில் யார் தன்னை-ஆத்மாவை தெரிந்து கொள்வதில் தவறு செய்கிறாரோ அவர் ஏழு தத்துவங்களையும் தெரிந்து கொள்வதில் தவறே செய்கிறார். ஏழு தத்துவங்களின் யதார்த்த அறிவு, அந்த ஏழு தத்துவங்களை தெரிந்து கொள்வதற்காக அல்ல; ஆனால் தன் சுய ஆத்மாவை அதாவது ஸ்வயம் யார் என்று தெரிந்து கொள்வதற்குத் தானாகும்.

இந்த ஏழு தத்துவங்களிலும் புண்ணிய மற்றும் பாப ஆஸ்ரவ, பந்தங்களாகிய இரண்டும் சேர்த்து விடுகின்றன. ஆனாலும் சில இடங்களில் ஆசார்யர்கள் இவைகளை தனியாக எடுத்துக்கூறி நவ பதார்த்தங்கள் என்று சொல்வதையும் நவ தத்துவங்கள் என்று சொல்வதையும் பார்க்க முடிகிறது. ஏழு தத்துவமென்று சொன்னாலும், நவ பதார்த்தமென்று சொன்னாலும், நவ தத்துவம் என்று சொன்னாலும் எல்லாம் ஒரே அர்த்தத்தில் தான் சொல்லப்படுகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையை சொல்ல வேண்டுமென்றால் புண்ணியம், பாபம் இரண்டுமே கர்மத்தின் பெயர்களாகும். இரண்டும் கர்மம் எனவே இரண்டின் ஜாதியும் ஒன்றே யாகும். இரண்டுமே துக்கத்தை உற்பத்தி செய்பவையாகையால் கெட்டவைகளே யாகும். ஆனால் மூடநம்பிக்கை கொண்ட உயிர், புண்ணியத்தை நல்லது என்றும் பாபத்தை கெட்டது என்று நம்புகிறது. புண்ணிய கர்மத்தின் உதயம் இருக்கும்போது தன் விருப்பத்திற்கு இணங்க காரியம் நிகழ்கிறது எனவே புண்ணியம் நல்லது என்றும், பாப கர்ம உதயம் இருக்கும்போது தன் விருப்பத்திற்கு இணங்க காரியம் நிகழ்வதில்லை எனவே பாபம் கெட்டது என்று நம்புகிறது.

உண்மை என்னவென்றால் உயிருக்கு சுக-துக்கம் அதன் மூடநம்பிக்கையால் நிகழ்கிறது. உடலே நான் என்று எண்ணிக் கொண்டு, உடலில் நோய் இல்லாமல் இருந்தால் நான் சுகமாக இருக்கிறேன் என்று நம்பும் காரணத்தால், எந்த புண்ணிய கர்ம உதயத்தில் அனுகூலமான பொருள்கள் கிடைக்கின்றனவோ அந்த புண்ணியத்தின் உதயத்தை நல்லது என்று நம்புகிறது, பா!பத்தின் உதயத்தை கெட்டது என்று நம்புகிறது. இதுவே அதனுடைய விபரீத நம்பிக்கையே யாகும்-பந்த தத்துவ சம்பந்தமான தவறான எண்ணமாகும். யார் புண்ணிய உதயத்தை நல்லது என்று நம்புகிறாரோ, அதாவது யார் கர்ம பந்தத்தை நல்லது என்று நம்புகிறாரோ அவர் பந்தங்கள் அற்ற மோக்ஷ வடிவத்தை நல்லது என்று எப்படி நம்புவார்?

யார் புண்ணிய பந்தத்தை தனக்கு நல்லது என நம்புகிறாரோ, அவர் பந்தத்துக்கு காரணமான சுபாஸ்ரவ்வத்தை அதாவது சுபராகத்தை நல்லது என்று நம்புகிறார் மற்றும் அசுப ராகத்தை கெட்டது என்று நம்புகிறார். யார் ஆஸ்ரவத்தை நல்லது என்று நம்புகிறாரோ, அதாவது சுப ராகம் செய்ய தகுதியானது என்று நம்புகிறாரோ அவர் ஆஸரவமே இல்லாத சம்வரையை அறியவுமில்லை, அதை நல்லது என்று நம்புவதுமில்லை. யார் ஆஸ்ரவ, பந்தங்களை நல்லது என்று நம்புகிறாரோ அவர் சம்வரை, நிர்ஜரை, மோக்ஷத்தை நல்லது என்று நம்ப மாட்டார்.

இங்கே பாருங்கள்! ஒரு தவறான நம்பிக்கையின் காரணத்தால் பல தவறான நம்பிக்கைகளின் தொடர் ஆரம்பமாகி விடுகிறது. குயவன் இப்போது குடங்களை அடுக்கி வைக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலில் கீழே வைக்கும் குடத்தை மேல் பக்கத்தை கீழ் பக்கமாக திருப்பி வைத்து விட்டாரானால் மற்ற எல்லா குடங்களையும் அவ்வாறே வைக்க வேண்டியிருக்கும் அல்லவா! அதேபோல ஒரு தத்துவத்தில் தவறான நம்பிக்கை கொள்வதால் ஏழு தத்துவ சம்பந்தமாகவும் தவறுகள் நிறைந்த நம்பிக்கையின் பரம்பரை-தொடர்ச்சி ஆரம்பமாகி விடுகிறது.

சாஸ்திரங்களை கேட்பவர்களுக்கு இப்போது நாம் என்னதான் செய்ய வேண்டும்? நம் நடத்தை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? என்ற கேள்விகள் எழுகின்றன. கவணமாகப் பாருங்கள்! கேள்வியில் கூட கர்த்ருத்வ புத்தி தான் காணப்படுகிறது! முன் இரண்டு கடிதங்களில் நாம் தவறான நம்பிக்கைகள் பற்றி பார்த்தோம், ஆனாலும் கூட நம்பிக்கையில் நம் தவறுகளை திருத்தி ஆன்ம நலனில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற சரியான பாதை, நம் அறிவுக்கு தெரிவதில்லை, ஆனால் இந்த மனித பர்யாயமே நான், நான் மனிதன் என்று மட்டுமே நம்பி அதன் நிகழ்கால நடவடிக்கைகளை சீர் செய்ய வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. எனவே அத்தகைய உயிர்களுக்கு ஜீவ, அஜீவ, ஆஸ்ரவம் முதலான ஏழு தத்துவங்களில் நம்பிக்கை தவறானதாகவே-விபரீதமானதாகவே காணப்படுகிறது.

ஒரு மனிதர் தரையில் குனிந்து ஏதோ சேஷ்டை செய்து கொண்டு இருந்தார். அவருடைய நன்பர் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர் என்னுடைய நிழல் கோணல் மாணலாக இருக்கிறது அதை சரி செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறினார். நீங்கள் இதை கேட்டு ஏன் சிரிக்கிறீர்கள்? பிறருடைய முட்டாள் தனத்தை பார்த்த மாத்திரத்திலேயே நமக்கு உடனே சிரிப்பு வருகிறது அல்லவா? அவருடைய நன்பர் **நீ உன் நிழலை சரி செய்ய எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை, நீ நேராக நின்றாலே போதும் உன் நிழல் தானாகவே நேராகி விடும்** என்று அவருக்கு அறிவுரை கூறினார்.

நாம் கூட நம் பர்யாயத்துடன், உடலுடன் ஒன்றி மனித சேஷ்டைகளை, நம் நடவடிக்கைகளை-ஒழுக்கங்களை சரி செய்ய முயற்சி செய்கிறோம். அந்த சமயத்தில் நமக்கு முடிவான வழிகாட்டிகளாக-ultimate guides ஆக இருக்கிற தேவ, குரு, சாஸ்திரம் நமக்கு சொல்வது **ஹே பவ்யனே! நீ உன்னை தெரிந்து கொள், உன்னை அடையாளம் கண்டு கொள். பர்யாயத்தின் பக்கம் பார்த்துப் பார்தது அதில் ஏற்படும் விபாவம் மற்றும் ரக த்வேஷத்தை விலக்க முயற்சி செய்வதை விட்டு விடு. நீ ஸ்வயம் உன்னை இயல்பு-ஸ்வபாவ வடிவமாக நம்பு. உன்னையே உன்னில் ஸ்தாபனை செய், நிலை நிறுத்து. அப்போது உன்னுடைய பர்யாயம் தானாகவே உன் பக்கம் திரும்பி ஸ்வசன்முக் அடைந்து இயல்பு வடிவில் அதுவாகவே பரிணமிக்க தொடங்கி விடும்.** [உன் இயல்பான தூய குணங்களின் நிஜவடிவமே, உன் நிகழ் கால பர்யாயத்தில் வெளிப்பட ஆரம்பிக்கும்.]

அனாதி கால பழக்க தோஷத்தால் விபரீதமான நம்பிக்கைகள் தோன்றுகின்றன, அதற்காக நாம் பயப்பட வேண்டியதில்லை. ஏழு தத்துவங்களின் இயல்பை-ஸ்வரூபத்தை சரியான முறையில்-உள்ளது உள்ளபடியே அறிந்து ஸ்வவில்-தன்னில் முக்காலத்திலும் தூய்மையாக உள்ள தன்னிலேயே-ஆன்மாவிலேயே ஆழ்ந்து விடுவதே இந்த தவறுகளை அழிக்கும் ஒரே தீர்வாகும்.

இந்த ஏழு தத்துவங்களில் **ஞேயோ கா த்யோ ஸ்ரத்தான்** என்று சொல்ப்படுகிறது. அதனால் வாழ்வாதார நம்பிக்கைகளில் ஹேய-விடவேண்டியது, ஞ்ஞேய-அறிய வேண்டியது, உபாதேய-ஏற்க வேண்டியது இவைகளின் ஸ்வரூபம் பற்றி அடுத்த கடிதத்தில் விரிவாக சர்ச்சை செய்யவிருக்கிறோம். இங்கு எல்லாம் சுபமே. உங்கள் வீட்டில் எல்லோருக்கும் என் வணக்கங்களை கூறி அவர்கள் அனைவரையும் விசாரித்ததாக சொல்லவும்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-24 22-11-1995

ஏழு தத்துவங்களில் உண்மையான நம்பிக்கை-1

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஏழு தத்துவங்கள் சம்பந்தமான விஷயங்கள் மிகவும் சுவாரசிய மானதாகும். அதைப் பற்றி எந்த அளவுக்கு அதிகமாக சிந்தித்தாலும் அதை பற்றி மிகவும் சிறிதளவே தெரிந்து கொண்டது போலவே தோன்றுகிறது. ஏழு தத்துவங்களின் ஸ்வரூபத்தை தெரிந்து கொண்ட பிறகே நமக்கு சமயசாரம் முதலான கிரந்தங்களில் ஆசார்யர்கள் ஆத்மாவின் ஸ்வரூபத்தை எப்படி வர்ணனை செய்துள்ளார்கள் என்பது பற்றி நம் எண்ணத்தில் கொஞ்சம் தெளிவு வருகிறது. ஏழு தத்துவங்கள் சம்பந்தமாக இது ஐந்தாவது கடிதமாகும். எந்த விஷயத்தில் நமக்கு ருசி இருக்கிறதோ அந்த விஷயம் பற்றி எவ்வளவுதான் சர்ச்சை செய்தாலும் நமக்கு சோர்வோ, திகட்டுதலோ வருவதில்லை, மாறாக இந்த விஷயத்தில் மேலும் ஆழமாக சென்று அதனுடைய ஸ்வரூபத்தை மேலும் தெளிவாக தெரிந்து கொள்ளவே ஆர்வமும், ருசியும் உண்டாகிறது.

பிரயோஜமான ஏழு தத்துவங்களின் வரையறைகளை நாம் பார்த்தோம், அவைகளைப்பற்றி சுருக்கமாகவும் தெரிந்து கொண்டோம். அஞ்ஞானி மித்யாதிருஷ்டி, ஜீவ தத்துவத்தை எவ்வாறு விபரீதமாக எடுத்து கொள்கிறது என்பது பற்றிகூட இரண்டு கடிதங்கள் மூலமாக பார்த்தோம். இந்த அளவு தெரிந்து கொள்வதால் மட்டுமே நம் காரியம் நிறைவேறிவிடாது. ஒரு உதாரணம் மூலம் இதை பார்க்கலாம்.

ஒரு கிராமத்தில் பல வீடுகள் இருக்கின்றன, அந்த ஊருக்கு செல்ல பல பாதைகள் இருக்கின்றன. அந்த வழிகள் எல்லாம் குண்டும், குழியுமாகவும், கறடுமுறடாகவும் இருக்கின்றன. ஆனால் எல்லா வீடுகளும் எல்லா வசதிகளும் நிறைந்ததாகவும், அங்கு வாழ்பவர்களுக்கு எல்லா இன்பத்தையும் தரவல்லதாகவும் இருக்கின்றன.

அந்த வீடுகள் நான் நுழைய முடியாதாக இருக்கின்றன. ஆனால் அதில் ஒருவீடு மட்டும் என்னுடையது, அதில் நான் நுழைவதை யாரும் தடுக்க முடியாது, வேறு யாரும் அதனுள் நுழையவும் முடியாது. என்வீடு கூட எல்லா வசதிகளும் நிறைந்ததாக இருக்கிறது. அந்த சரியில்லாத பாதைகளை தவிற சுத்தமாகவும், நேர்த்தியாகவும் ஒரு வழி என் வீட்டுப் பக்கம் செல்கிறது. அதன் வழியாக சென்று என் வீட்டில் நான் பிரவேசிக்க முடியும். இவ்வாறு வெருமனே எல்லா தகவல்களையும் தெரிந்து கொள்வதால் மட்டுமே நாம் சுகத்தை அடைய முடியது, அந்த அறிவுவும் உண்மையான அறிவாகாது. பிறருடைய வீட்டையும் மற்றும் அங்கு அவர்கள் பெரும் சுகங்களை பார்த்தும்-கேட்டும் நாம் சுகமடைய முடியாது. விபத்துகள் நிறைந்த அந்த பாதைகளில் சென்றாலும் சுகம் என்னவோ கிடைக்கப் போவதில்லை, துயரமும், கஷ்டமுமே மிஞ்சும்.

எனக்கு சுகம் என்னுடைய வீட்டிற்குள் சென்றால்தான் கிடைக்கும் என்று அறிவதே அந்த கிராமத்தை பற்றி உண்மையாக அறிந்ததாகும். பிற வீடுகளில் பிறர் அடையும் சுகங்களை பார்த்து எனக்கு எந்த லாபமும் இல்லை. கறடுமுறடான பாதைகளை தவிர்த்து, சுத்தமாகவும், நேர்த்தியாக உள்ள என் வீட்டுக்கு செல்லும் பாதையை தேர்ந்தெடுத்து அங்கு எப்படி செல்ல வேண்டும் என்ற அறிவு பெற வேண்டும். அந்த வழி பற்றி பூரண நம்பிக்கை வந்த பிறகு, அந்த வழியில் அடியெடுத்து வைத்து முன்னேறுவதே உண்மையான நம்பிக்கையும், அறிவும் பெற்றதாகும். எப்போது அந்த வீட்டில் நுழைந்து அங்கு கிடைக்கும் சுகத்தை அனுபவம்

செய்கிறோமோ அப்போதுதான் அந்த கிராமத்தின் மேல் கொண்ட நம்பிக்கையும், அறிவும், அங்கு செல்ல எடுத்துக்கொண்ட முயற்சியும் முழுமை அடைந்ததாகும்.

இப்போது இந்த உதாரணத்தை ஏழு தத்துவ சம்பந்த சித்தாந்தத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இந்த உலகத்தில் உயிர், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், மற்றும் காலம் என அனந்த திரவியங்கள் இருக்கின்றன. இந்த எல்லா திரவியங்கள் அனைத்தும் தாமாகவே பரிபூரணமாக இருக்கின்றன-அனந்த குணங்களை தன்னகத்தே கொண்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு திரவியமும் அதனதன் ஸ்வ சதுஷ்டயமான-த்ரவ்ய, ஷேத்ர, கால, பாவத்துடன் இருப்பதால் என்னால் அந்த திரவியங்களில் நுழைய முடியாது. நானும் ஒரு திரவியம், அனந்த குணங்களுடன் பரிபூரணமாக இருக்கிறேன், நான் என்னுடைய த்ரவ்ய, ஷேத்ர, கால, பாவத்துடன் இருக்கிறேன், என்னுடைய ஸ்வ சதுஷ்டயத்தில் வேறு யாரும் நுழைய முடியாது. நான்கு கதிகளிலும் சுற்றுவது சம்சார மார்கமாகும், அது பிறப்பு, இறப்பு முதலான அனேக விபத்துகள் நிறைந்ததாகும். இதை தவிர்த்த மோக்ஷ மார்கம் என்ற வழி ஒன்று இருக்கிறது, அந்த வழியில் சென்று நான் மோக்ஷ மாளிகையில் நுழைய முடியும். அந்த வழியில் சென்று அங்கு அடைந்ததும் அந்த வழியில் பயணிப்பதை விட்டு என்னுடைய வீட்டிற்குள் சென்று அங்கு வசிக்க முடியும். சாஸ்திரங்களின் மூலம் மோக்ஷ மார்கத்தை அறிந்து எப்போது என்னுடைய வீடான-ஸ்வ த்ரவ்யத்தின் பக்கம் முதல் அடி எடுத்து வைத்து, மோக்ஷ மார்கத்தில் வந்தால் அதாவது சம்யத்துவத்தை அடைந்தால் அப்போதிலிருந்து நம்பிக்கை, அறிவு மற்றும் ஒழுக்கம் உண்மையானதாகி விடும். இந்த மோக்ஷ மார்கத்தில் சென்று எப்போது மோக்ஷ மஹாலில் நுழைந்து அங்கேயே தங்கி-பரிபூரண சுகத்தை நுகரும்போது நம்பிக்கை, அறிவு, ஒழுக்கம் எல்லாம் முழுமையடையும்.

நான் ஒரு சுதந்திரமான நிலையாக இருக்கும் பரமாத்மாவாவேன். என்னைத் தவிற மற்ற எல்லா அனந்த உயிர்களும் மற்றும் பிற எல்லா ஐந்து திரவியங்களும் அஜீவ தத்துவமாகும். அவைகள் எல்லாம் என்னால் அறியப்படும் **ஞ்யேய தத்துவமாகும்**. ஞ்யேய என்பதன் பொருள் அறியத் தகுந்தது-அதை பற்றிய அறிவு எனக்கு வருகிறது, அவ்வளவே! எனக்கும் அதற்கும் உள்ள சம்பந்தம் அவை அறியப்படும் பொருள், நான் அறிபவன், அவ்வளவே. ஞ்யேய தத்துவமாகையால் அதையே தெரிந்து கொண்டு இருத்தலே என்னுடைய விருப்பமாக இருக்கிறது என்று யாராவது கற்பனை செய்வாரானால் அது தவறான தாகும். அஜீவ தத்துவத்தை வெருமனே தெரிந்து கொள்ளுதல் மட்டுமே அதை தெரிந்து கொள்வதாகாது, அஜீவ தத்துவத்தில் நான் பிரவேசிக்க முடியாது, என்னில் எனக்கும் அஜீவ தத்துவத்திற்கும் இடையில் எந்த சம்பந்தமும் இல்லை, அதனுடன் கொடுக்கல்-வாங்கல், அதனால் சுக-துக்க மடைதல் முதலானவை எதுவும் இல்லை என்று அறிதலே அதை சரியாக-யதார்த்தமாக அறிந்ததாகும். அஜீவ தத்துவம் பிறவாகும், **ஸ்வ-நான்** இல்லை என்று அறிதலே நமக்கு பிரயோஜமாகும், அப்படி அறிந்தால் தான் நம்முடைய காரியம் நிறைவேறும்.

பிறருடைய வீட்டை பார்த்துக் கொண்டே குழியில் விழுதல் முட்டாள் தனமாகும், அதுபோல அஜீவ தத்துவத்தை **ஞ்யேய தத்துவம்** என்று நினைத்து கொண்டு அதையே அறிந்து கொண்டு இருந்தால் நமக்கு நல்லதாக இருக்கும், தர்மத்தில் ருசி உண்டாகும் என்று அவைகளையே அறிந்து கொண்டு இருந்தால் அது அவைகளை உண்மையாக அறிந்ததாகாது. பூஜையில் கூட **ஹே ஷாந்த் ஞ்யேயநிஷ்டா மேரி** என்று நாம் சொல்கிறோம். இதன் பொருள் **பிற பொருள்களை அறிவதில் எனக்குள்ள ஆர்வம் குறைய வேண்டும்** என்பதாகும்.

இன்றுவரை இந்த உயிர் அஜீவ தத்துவத்தையே பெருமைக்குறியதாக எண்ணிக் கொண்டு வந்து கொண்டு இருகிறது. பார்க்கும் பொருள்களிலேயே ஆழ்ந்து போய் அதையே பார்த்துக்

கொண்டு இந்த உயிர் அனந்த பிறவிகள் எடுத்து விட்டது. ஆனால் இந்த எல்லாவற்றையும் அறிபவன் நான்-பார்ப்பவன் நான், **ஞாயக் ஸ்வபாவம் ஸ்வயம் என்னுடையது**, என்ற தன் மஹிமை அதற்கு வரவில்லை. ஒவ்வொரு திரவியத்தின் பர்யாயமும் அந்தந்த திரவியத்திலேயே நிகழ்கிறது. கண்ணாடியில் தெரியும் நெருப்பின் பிரதிபிம்பம் கண்ணாடியின் பர்யாயமாகும்-அவஸ்தையாகும். அது கண்ணாடியின் தூய்மையை வெளிப்படுத்துகிறது. அதுபோல எல்லா பதார்த்தங்களையும் அறியும் ஞானத்தின் பர்யாயம் ஸ்வயம் ஆத்மாவினுடையதாகும், அது ஞான குணத்தை வெளிப்படுத்துகிறது. பிரதிபிம்பத்தை பார்த்து யார் அதிலேயே மூழ்கிவிடுகிறாரோ அவருக்கு கண்ணாடியின் தூய்மை பற்றிய விழிப்புணர்வு இல்லை, அதனால் அந்த கண்ணாடியின் தூய்மை அழிந்து விடவில்லை! அப்படி ஆகுமென்றால் பிரதிபிம்பத்தையே கண்ணாடியில் காண முடியாமல் போகும். கண்ணாடியின் தூய்மை அவருடைய கவனத்தில் ஈர்க்கப் படவில்லை அவ்வளவே. அதுபோல ஞானத்தில்-ஞானக் கண்ணாடியில் பதார்த்தங்கள் ஜொலிக்கின்றன, பதார்தங்களின் பிரதிபிம்பம் உண்டாகின்றன, அப்போது அந்த பிரதிபிம்பங்களை பார்த்துக் கொண்டிருப்பதிலேயே அந்த உயிர் சிக்கிக்கொள்கிறது, அதிலேயே ஆழ்ந்து விடுகிறது, அதற்கு தன் சுய அறிவை பற்றி அதாவது அறியும் தன்மையை உடைய ஆத்மா பற்றி-தான் பார்ப்பவன் என்பது பற்றி அதற்கு எந்த விழிப்புணர்வும் உண்டாவதில்லை.

ரீனா, மோனா, இன்றுவரை நீங்கள் கண்ணாடியில் உங்கள் முகத்தைத்தான் கவனமாக பார்த்தீர்கள் அல்லவா, இப்போது கண்ணாடியின் தூய்மையை பார்க்க முயற்சி செய்யுங்கள். நாம் இங்கே என்ன சர்ச்சை செய்கிறோம் என்பது பற்றி உங்களுக்கு கொஞ்சம் பயிற்சியும் அவசியம் அல்லவா?

இந்த உயிர் ஞ்யேய தத்துவத்தை-தெரிந்து கொள்ள வேண்டிய தத்துவத்தை ஞ்யேயம்-தெரிந்து கொள்ள வேண்டியது என்று மட்டுமே நம்பாமல் அதை ஏற்கவும், தியாகம் செய்யவும் எண்ணம் கொள்கிறது. சிலர் நாம் பணம், பொருள்கள், வீடு இவைகளை தியாகம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படி நினைப்பவர்கள் அஜீவ தத்துவத்தை பற்றி உண்மையாக சரியான முறையில்-யதார்த்தமாக அறியவில்லை. எது இதுநாள்வரை அஜீவ தத்துவத்தில் பிரவேசிக்கவே இல்லையோ அதை தியாகம் செய்யும் புத்தி கேலிக்குரியதாகும். ரீனா, மோனா, நான் அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையையும், ஆக்ராவில் உள்ள தாஜ்மஹாலையும் தியாகம் செய்யவிருக்கிறேன் என்று கூறினால், எனக்கு மன நோய்-பையித்தியம் பிடித்திருக்கிறது என்று எண்ணி என்னை மனநோய் மருத்துவரிடம் கொண்டு செல்வீர்கள் அல்லவா! அஜீவ தத்துவத்தை ஞ்யேய என்று நம்பாமல் ஹேய-விடத்தக்கது அல்லது உபாதேய-ஏற்கத்தக்கது என்று நம்புதல் ஒரு பெரிய தவறாகும். தத்துவ அறிவு வடிவ சிகிச்சை அவர்களுக்கு மிகவும் அவசியமாகும்.

1. ஞ்யேய என்றால் அறிந்து கொள்ள தகுதியானது-அது அஜீவ தத்துவம்.
2. ஹேய என்றால் விடத்தகுதியானது-அவை ஆஸ்ரவ-பந்த தத்துவம்.
3. உபாதேய என்ற சொல்லுக்கு மூன்று உட்பிரிவுகள் இருக்கின்றன.

அ) அடைக்கலம் அடைய தகுதியான உபாதேயம்-அது ஜீவ தத்துவம்.

ஆ) ஏகதேச-ஓரளவு வெளிப்படுத்த தகுதியான உபாதேயம்-அவை சம்வரை-நிர்ஜரை தத்துவம்

இ) முழுமையாக வெளிப்படுத்த தகுதியான உபாதேயம்-அது மோக்ஷ தத்துவம்.

கடிதத்தின் ஆரம்பத்தில் நாம் ஒரு உதாரணம் மூலம் எவ்வாறு பிறருடைய வீடுகளை பார்த்துக்கொண்டே இருந்தால் சுகம் கிடைப்பதில்லை ஆனால் அந்த வீடுகள் என்னுடையதில்லை என்று அறிவதால் மட்டுமே நம் காரியம் நிறைவேறும் என்று பார்த்தோம்.

அவை என்னால் அறியப்படுபவைகளே யாகும். அந்த வீடுகளை நான் தியாகம் செய்ய வேண்டும் என்று நம்புதல் தவறாகும், ஏனென்றால் அந்த வீடுகள் என்னுடையதே இல்லை அப்படியிருக்க அவைகளை ஹேய-விடத்தக்கது என்று நம்புதல் எவ்வாறு சாத்தியமாகும், அது குழப்ப நிலையாகும்-பையித்தியக்கார தனமாகும். அதுபோல பிறருடைய வீடுகளிலிருந்து சுகமடைவேன் என்று நம்புதல் அதாவது அவை ஏற்கத்தக்கவை என்று நம்புதல் கூட குழப்பத்தையே உண்டு பண்ணும் ஏனென்றால் அந்த வீடுகளில் நான் பிரவேசிக்கவே முடியாது. அந்த வீடுகள் பிறருடையது, என்னுடைய தல்ல, எனக்கு சுகம் என்னுடைய வீட்டில் தான் இருக்கிறது என்று அறிதல் யதார்த்தமாக-உண்மையாக அறிதலாகும். இவ்வாறு அறிந்த பிறகே பிற வீடுகளை பற்றியும் உண்மையாக அறிந்த தாகும் என்று சொல்லலாம். இது ஒரு உதாரணம், இப்போது இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய சித்தாந்தத்தை பார்க்கலாம். உதாரணத்தில் பார்த்தபடி அஜீவ தத்துவம் வெறுமனே தெரிந்து கொள்ள வேண்டிய தத்துவமாகும், அது ஸ்வ தத்துவமில்லை, பர-பிற தத்துவமாகும். என்னுடைய சுகம் ஸ்வ தத்துவத்தில் இருக்கிறது, பிற தத்துவங்களில் இல்லை. மற்றும் அஜீவ தத்துவம் ஹேயம் என்று எண்ணுதல் கூட சரியில்லை-விடத்தக்கது என்று எண்ணுதல் கூட சரியில்லை ஏனெனில் அதில் ஏற்கனவே நான் இல்லை அதனால் நான் அதை எவ்வாறு தியாகம் செய்ய முடியும்-விட முடியும்? அஜீவ தத்துவம் உபாதேயம் கூட அல்ல-ஏற்க வேண்டியது கூட அல்ல ஏனெனில் அதில் என்னுடைய பிரவேசம் இல்லை-அதில் நான் நுழையவே முடியாது. இவ்வாறாக அஜீவ தத்துவத்தை அறிந்து கொள்வதே யதார்த்தமாக-உண்மையாக அறிந்ததாகும்.

என்னுடைய வைபவமும், என்னுடைய ஸ்வபாவமும் கூட அரஹந்தர், சித்தர்களுக்கு இருப்பது போலவே இருக்கிறது என்று தெரிந்து கொள்ளவே நாம் அவர்களின் பிரதிபிம்பங்களை பார்க்கிறோம். ஸ்வபாவத்தில் ஆழ்ந்து அனந்த சுகத்தை பெறமுடியும் என்பதன் உண்மையான மிகச்சரியான உதாரணம் அரஹந்தர், சித்தர் வடிவில் தற்போது நமக்கு காணக் கிடைக்கிறது. அவர்கள் இந்த சுகத்தை எந்த வழியில், எந்த விதி முறையில் அடைந்தார்கள் என்று அறிவதற்காக, அரஹந்தரின் வாணியை-ஜினவாணியை நாம் கேட்கிறோம், முனிவர்கள் என்னவோ சக்ஷாத்-நேரடியாக அந்த மோக்ஷ மார்கத்தை ஏற்றிருக்கிறார்கள், ஆகையால் தேவ-குரு-சாஸ்திரம் வணங்கத் தகுந்தவை, பூஜிக்கத் தகுந்தவைகளாகும். ஆனால் இந்த உயிர், தேவ-குரு-சாஸ்திரத்தையே ஏற்க வேண்டியது என்று நம்புகிறது. உண்மை என்னவெனில் இவைகள் எல்லாம் அஜீவ தத்துவமாகும், அறிய வேண்டிய-ஞ்யேய தத்துவமாகும் ஆனால் அவைகளை அடைக்கலமடைய தகுதியான உபாதேய தத்துவம் என்று நம்புகிறது. அவைகளை தெரிந்து கொண்டு, உபதேசங்களை கேட்டு அடைக்கலம் அடைய வேண்டியது என்னவோ ஸ்வ தத்துவத்தில்-ஜீவ தத்துவத்தில் ஆகும். ஆனால் அப்படி செய்யாமல் வெறுமனே தேவபூஜை, குருவுக்கு சேவை செய்தல், சாஸ்திரம் கேட்டல் இவைகளிலேயே இந்த உயிர் மகிழ்ச்சி அடைந்து அங்கேயே நிலைகொண்டு விடுகிறது. இந்த சுபபாவமும் மற்றும் அதனால் உண்டாகும் பந்தமும் ஆஸ்ரவ-பந்த தத்துவமாகும். இதன் சாராம்சம் என்னவெனில் வெரும் அஜீவ தத்துவத்தையே, அதாவது தேவ-குரு-சாஸ்திரத்தையே உபாதேயம்-ஏற்க வேண்டியது என்று நம்புவதோடு இந்த உயிர் நிற்கவில்லை, மேலும் ஆஸ்ரவ-பந்த தத்துவ்வத்தை அதாவது தேவ-குரு-சாஸ்திர பக்தியை கூட உபாதேயம்-ஏற்க வேண்டியது என்று நம்புகிறது, அவைகளே நமக்கு அடைக்கலம் என்று நம்புகிறது.

சம்யக்திருஷ்டி உயிர்களுக்குக் கூட தேவ-குரு-சாஸ்திரங்களின் மேல் உயர்ந்த மதிப்பீடு, வந்தனை, பூஜை செய்யும் எண்ணம் வருகிறது, அவைகளால் ராக-சுப-அசுப பாவம் அதாவது ஆஸ்ரவம் மற்றும் அதனால் உண்டாகும் பந்தம் கூட நிகழ்கிறது. ஆனால் நம்பிக்கையில் அது ஆஸ்ரவ, பந்தங்களை ஹேயம்-விடவேண்டியதே என்று நம்புகிறது, தியாகம் செய்ய

தகுதியானதே என்று நம்புகிறது, உபாதேயம்-ஏற்க வேண்டியது என்று நம்புவதில்லை. தேவ, குரு, சாஸ்திரங்களை அது ஞ்யேய தத்துவம்-அறிய வேண்டிய தத்துவம் என்றே நம்புகிறது. மீண்டும்மீண்டும் ஸ்வசன்முக்-உள் நோக்கம் கொண்டு அதாவது ஜீவ தத்துவத்தின் பக்கம் தன் பார்வையை நிலைநிறுத்தி அது சுய ஆத்மாவின் பக்கம் திரும்பி அதிலேயே ஆழும் சாதனையில்-முயற்சிகளில் ஈடுபடுகிறது. அப்படிப்பட்ட உண்மையான யதார்த்தமான நம்பிக்கை வந்தால்தான் அதற்கு தேவ-குரு-சாஸ்திரங்களில் மேல் சிரத்தை இருக்கிறது என்று சொல்ல முடியும்.

நாங்கள் உண்மையான தேவ-குரு-சாஸ்திரங்களுக்கு நமஸ்காரம் செய்கிறோம், ஏழு தத்துவங்களின் பெயர் மற்றும் அதன் அடையாளங்கள் எங்களுக்கு நன்றாகத் தெரியும், அதாவது எங்களுக்கு ஏழு தத்துவங்களில் நம்பிக்கை இருக்கிறது என்று சிலர் சொல்கின்றனர். ஆனால் அவர்களின் நம்பிக்கையில் அந்த தத்துவங்களில் ஹேய, ஞ்யேய, உபாதேயம் அதாவது விடவேண்டியவை, அறிந்து கொள்ள வேண்டியவை, ஏற்க வேண்டியவை எவையெவை என்பது பற்றிய சரியான நம்பிக்கை எப்படி இருக்க வேண்டியது அவசியமோ அப்படி இல்லாததால், அதாவது உள்ளதை உள்ளவாறே அறிந்து நம்பாததால் அவர்களின் இந்த நம்பிக்கை விபரீதமானதே என்று சாஸ்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

நிகழ்காலத்தில் உடலையே **நான்** என்று நம்பிக் கொண்டு மக்கள் அதையே பரம உபாதேயம்-இறுதியாக ஏற்க வேண்டியது என்று நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். ஸ்வயம் தான்-ஆத்மா இருப்பதையே உயிர் மறந்து விட்டதோடு மட்டுமல்லாமல், உடலினின்றும் ஆத்மா வேறானது என்று சொல்பவரையே முட்டாள் என்று சொல்கின்றனர். யாராவது தன்னுடைய பிரிய நபர் புத்தி ஸ்வாதீனம் இழந்துவிட்டால் அவர் யார்? அவர் பெயர் என்ன? அவருடைய ஊர் எது? என்பதை எல்லாம் அவர் மறந்து விடுகிறார், அவருக்கு மறதி வந்து விட்டதால் நாம் துக்க மடைகிறோம், நம் கண்களில் கண்ணீர் வருகிறது. **ஆனால் நாம் அனாதி காலமாக அறிவு கெட்டவர்களாக-ஸ்வாதீன மில்லாதவர்களாக, தன்னைத்தானே மறந்து, ஒவ்வொரு கதியிலும்-பிறவியிலும் எந்தெந்த உடல் கிடைத்ததோ அதையே நான் என்று நம்பிக்கொண்டு பைய்தியக்காரன் போல சுற்றிக்கொண்டு இருக்கிறோம், துக்க மடைந்து கொண்டு இருக்கிறோம், ஆனால் அதைப்பற்றி நாம் கொஞ்சம் கூட தெரிந்து கொள்ளவே யில்லை.**

ஐய்யஹோ! நான் உயிர் என்பது உண்மைதான், ஆனால் உயிர் இருக்க உடல் அவசியமான தேவை இல்லையா? உடலில்லாமல் உயிர் பூமிக்கும் ஆகாயத்திற்கு மிடையில் எங்கே இருக்க முடியும்? என்று சிலர் நினைக்கின்றனர். அவர்களுக்கு ஒவ்வொரு திரவியமும் சுதந்திரமானது என்பது பற்றி தெரியவில்லை. ஜீவ தத்துவத்தையும், அஜீவ தத்துவத்தையும் அவைகளின் இயல்பையும் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. அதோடு மட்டுமல்ல, அவர்கள் பல வருடங்களாக சித்த பகவானுக்கு நமஸ்காரம் செய்து கொண்டு இருந்தாலும் கூட, சித்த பகவான் ஒரு உயிர், அவர் அசரீரி, உடலில்லாதவர். அதேபோல நான் கூட ஒரு உயிர், மற்றும் நான் என்று நம்பிக் கொண்டிருக்கும் உடல் புத்கலத்தாலானது, என்னிலிருந்தும் அது முற்றிலும் வேறு ஒரு பொருள் என்பது பற்றி கூட அவர்கள் அறிந்திருக்க வில்லை.

உபவாசம் செய்வதால் நான் லேசாக ஆனதுபோல உணர்கிறேன், நமோக்கார மந்திரத்தை ஜபிப்பதால் என் நுரையீரல் பயனடைகிறது, **ஓம்** என்று சொல்வதால் உடலுக்கு பலான லாபம் கிடைக்கிறது, **ஹ்ரீம்** சொல்வதால் உடலுக்கு குறிப்பிட்ட லாபம் கிடைக்கிறது என்று உடலின் அவஸ்தைகளில் லாபத்தை தேடுதல் மற்றும் அதில் மஹத்துவம் இருக்கிறது என்று நம்புதல் விபரீதமான காரியமாகும். அந்த உயிர் இப்போதுகூட உடலுடன் ஏகத்துவ

புத்தியையும், உடல் என்னுடையது என்ற மமத்துவ புத்தியையும் விடவில்லை. இந்த உடலால் நாம் தேவ பூஜை மற்றும் விரதம் இருத்தல் முதலான வேலைகளை வாங்குகிறோம் என்று எண்ணுதல் கூட ஒரு பெரிய தவறாகும், ஏனென்றால் உடலின் அதாவது புத்கலத்தின் காரியத்தை உயிர் செய்வதாக எண்ணிக்கொண்டு கர்த்ருத்வபுத்தி வடிவ மித்யாத்வத்தையே அந்த உயிர் போஷாக்கு செய்து கொள்கிறது.

பூதத்திற்கு வேலையை கொடுத்தது போல, உடலிடம் வேலை வாங்கினால் ஒரு வேலை முடிந்ததும் இன்றும் வேறு ஒரு வேலை என்று செய்து கொண்டுதான் இருப்போம், இது போன்ற முட்டாள் தனத்திற்கு முடிவே இருக்காது. இது போன்ற குழப்பமான கற்பனைகள் பிறர்களிடம்தான் இருக்கின்றன என்று எண்ணிக் கொண்டு, பிறரின் பக்கம் பார்க்கும் பழக்கத்தை விட்டு, இந்த முட்டாள் தனம் ஏன் என்னிடம் இருக்கிறது? என்று சிந்தனை செய்ய வேண்டியது அவசியமாகும். நான் ஒருவேளை இன்றுவரை இவ்வாறு முட்டாள் தனம் செய்யாமல் இருந்திருந்தால், எப்போதோ சம்யக்த்வம் அடைந்து சித்தாலயத்தில் சித்த பகவானாக ஆகி என்னுடைய சுதந்திரமான பூரண சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பேன். போனது போகட்டும், இதுவரை எப்படி இருந்தோம் என்பதைப்பற்றி கவலை கொள்வதால் ஒன்றும் ஆகப்போவதில்லை. நம்முடைய முட்டாள் தனத்தை இப்போதாவது தெரிந்துகொண்டு, அறிவு நுட்பமுடையவராகி அந்த தவறான பாதையிலிருந்து விலகி உண்மையான முக்திப்பதையின் பக்கம் திரும்புவதே மோக்ஷ மார்கத்தில் முதலடி எடுத்து வைத்ததாகும்.

இன்று ஞ்ஞேய தத்துவ, அதாவது அஜீவ தத்துவ சம்பந்தமான சர்ச்சையை மட்டும்தான் செய்தோம். மற்ற தத்துவங்கள் சம்பந்தமான சர்ச்சையை அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-25 20-12-1995

ஏழு தத்துவங்களில் உண்மையான நம்பிக்கை -2

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஏழு தத்துவங்களை பற்றி பயிற்சி செய்யும்போது முதன்முதலில் **நான் ஸ்வயம் ஜீவ தத்துவமாவேன்** என்பதை நினைவில் கொண்டு மற்ற தத்துவங்களின் ஸ்வரூபம், இயல்பு பற்றி புரிந்து கொள்ள முயல வேண்டும். இராமாயணம் முழுவதையும் ஒருவர் கேட்ட பிறகு **சீதை இராமருக்கு என்ன உறவு?** என்று கதையை கூறியவரிடமே கேட்பாரானால், கதையை கூறியவர் **இது என் தலையெழுத்து** என்றுதான் நினைப்பார். அதுபோல ஜீவ-அஜீவ தத்துவங்களின் ஸ்வரூபம், அதன் லக்ஷணம்-அடையாளம், அவை சம்பந்தமாக உண்டாகும் விபரீதமான மற்றும் யதார்த்தமான நம்பிக்கைகள் பற்றி எல்லாம் பயிற்சி செய்ய பிறகு ஒருவர் **நாம் இவ்வளவு எல்லா விஷயங்களையும் படித்து விட்டோம் ஆனால் இப்போது இதை சொல்லுங்கள், சமுதாயத்தில் வாழும் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? நம் குழந்தைகளை காப்பாற்ற வேண்டுமா, இல்லையா? பிறருக்கு உதவி செய்ய வேண்டுமா, கூடாதா?** என்று கேட்பதற்கு சமமாகும்.

இப்படிப்பட்ட கேள்விகள் எழ ஒரே காரணம் அவர் தன்னை ஜீவ தத்துவம் என்று நம்பாமல், மனித பர்யாயமே நான் என்று நம்புவதே யாகும். ஆத்மாவும், உடலும் சேர்ந்ததே நான் என்று ஜீவ மற்றும் அஜீவ தத்துவங்கள் இரண்டும் ஒன்றே என்று நம்பும் காரணத்தால் அந்த நபருக்கு அப்படிப்பட்ட கேள்விகள் எழுகின்றன. கிடைத்த பர்யாயத்தின்-பிறவியின் தகுதிக்கு உகந்தார்போல் அதுபோன்ற உணர்வுகள் வருகின்றன, ஆனால் அந்த நேரத்தில் **அந்த உணர்வுகளை-அந்த எண்ணங்களை யார் அறிகிறாரோ அவரே நான், நான் என் உணர்வுகளை அறிந்து கொள்ளவே முடியும், அறிவதை தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்ற அறிவும், நம்பிக்கையும் வந்தால்தான் அவர் ஜீவ-அஜீவ தத்துவங்களை பற்றிய சரியான, யதார்த்தமான நம்பிக்கை கொண்டவர்** என்று சொல்ல முடியும்.

இந்த பிரபஞ்சத்தில் அனந்த ஜீவ திரவியங்கள், அனந்தானந்த புத்கல திரவியங்கள், ஒரு தர்ம திரவியம், ஒரு அதர்ம திரவியம், ஒரு ஆகாச திரவியம் மற்றும் அசங்க்யாத கால திரவியங்கள் இருக்கின்றன. இவைகளில் நான் ஒரு மாறுபட்ட சுதந்திர திரவியமாவேன். நான் ஸ்வயம் என்வடிவில் இருக்கிறேன், பிற வடிவில் இல்லை. பிற எல்லா திரவியங்கள் நானும், என்னில் பிற திரவியங்களும் இல்லை என்று புரிந்த கொண்ட அதே ஷணத்தில் நம் பார்வை எல்லா பிற திரவியங்களிலும் இருந்து விலகி, ஸ்வ திரவயத்தின் பக்கம் திரும்புகிறது. திரவியம் என்னவோ உத்பாதம்-வ்யயம்-த்ருவத்தை அதாவது தோற்றம்-மறைதல்-நிலைத்திருத்தல் கொண்டதாக இருக்கிறது. த்ரவ்ய அம்சம்-பகுதி அதாவது எப்போதும் ஒரே வடிவில் முக்காலத்திலும் ஒரே மாதிரியாக நிலையாக இருக்கும் த்ருவ பகுதி மற்றும் பர்யாய அம்சம்-பகுதி அதாவது ஒவ்வொரு சமயமும் மாற்றமடையும் நிலையற்ற பகுதி என திரவியத்தில் இரண்டு பகுதிகள்-அம்சங்கள் அறிவில் வந்த பிறகு; எந்த த்ருவ பகுதி, எப்போதும் மாறாத, எப்போதும் ஒரே மாதிரியாக, எப்படி இருக்கிறதோ அப்படியே, அதுவாகவே இருக்கும் அந்த இயல்பு-ஸ்வபாவம் மாற்றமடையாத அபரிணாம உணர்வு எதுவோ அதுவே நான் என்பது புரிய வருகிறது. இந்த **என்னில்** அதாவது ஜீவ தத்துவத்தில் நாம் அடைக்கலம் அடைய வேண்டும் அதாவது பர்யாய பகுதியில் நான் இல்லை என்று பர்யாயத்தை கௌணத்தில் (பர்யாய பகுதி இருந்தாலும் அதை கவனத்தில் கொள்ளாமல்) வைத்து பர்யாயத்தின் மேல் லட்சியம் கொள்ளாமல் ஜீவ தத்துவத்தில் அடைக்கலம் அடைய வேண்டும். இதன் பொருள் என்னவென்றால் ஜீவ தத்துவம் உபாதேயமாகும், அடைக்கலம்

அடைய தகுதியான உபாதேய மாகும், அதாவது பரம உபாதேய மாகும். எனவேதான் ஜிநேந்திர பகவான் பர்யாய தத்துவங்களின் சுதந்திர இயல்பை கூறி ஆஸ்ரவ, பந்த, சம்வரை, நிர்ஜரை மற்றும் மோக்ஷ பர்யாயங்களின் பிரிவுகளை கூறியுள்ளார். பர்யாயங்களின் பக்கம் லட்சியத்தை (திருஷ்டியை-பார்வையை-கவனத்தை) விடாமல், ஜீவ தத்துவத்தில் அடைக்கலமடைய முடியாது. முதன் முதலில் என்னிலிருந்து மற்ற எல்லா தத்துவங்களும் வேறாகும், மற்றும் நான் வேறாவேன் ஏனென்றால் என்னுடைய லட்சணம் வேறாகும் மற்ற தத்துவங்களின் லட்சணம் வேறுவேறாகும் என்று அறிய வேண்டும். இந்த எல்லா தத்துவங்களிலும் மஹத்துவம் வாய்ந்த அப்படிப்பட்ட நான் ஜீவ தத்துவமாவேன் இவ்வாறு ஸ்வ பற்றி அதாவது தன்னை பற்றிய மஹத்துவத்தை உணராமல் இருக்கும்வரை நம் பார்வை, நோக்கம், உபயோகம், எண்ணம் நம் பக்கம் திரும்பாது.

எதுவரை சம்யக்தர்சனத்தில் சம்வரை-நிர்ஜரையில் அல்லது மோக்ஷத்தில் ஸ்வ-வைவிட அதாவது திரிகால சுத்த ஆத்மாவை விட அதிக மஹிமை உணர்வு இருக்கிறதோ; அதுவரை உபயோகம் ஸ்வ பக்கம் திரும்பாது. உபயோகம் ஸ்வ-வில், திரிகால சுத்த ஆத்மாவில் ஆழாமல் சம்யக்தர்சனம் அடைய முடியாது. அதாவது சம்யக்தர்சனத்தின் பக்கம் நோக்கம் வைப்பதால் அதாவது சம்யக்தர்சனம் பெற வேண்டும் என்று நினைப்பதால் மட்டுமே சம்யக்தர்சனம் அடைய முடியாது, ஆனால் அந்த பர்யாயங்களின் மேல் நோக்கத்தை விட்டு, தன் சுத்த ஆத்மா-ஸ்வ பக்கம் நோக்கத்தை நிலை நிறுத்தினால் சம்யக்தர்சனத்தை பெற முடியும். ஏனென்றால் எதன்மேல் நமக்கு மஹிமை இருப்பதாக நாம் உணர்கிறோமோ அந்த பக்கம் தான் நம் உபயோகம் அடிக்கடிச் செல்லும்.

ஆனால் பர்யாயங்களின் பக்கம் இருந்து உபயோகத்தை எப்படி விலக்க வேண்டும் என்ற செயல்முறையை தெரிந்து கொள்ளும் முன்னால் அந்த ஐந்து பர்யாய தத்துவங்கள் இருக்கின்றனவே அதைப்பற்றி உண்மையான-யதார்த்தமான அறிவையும், நம்பிக்கையையும் பெருவது அவசியமாகும். அனாதி காலமாக மூடநம்பிக்கையில் இருக்கும் உயிர் ஆஸ்ரவ, பந்தங்களையே செய்து கொண்டு வந்திருக்கிறது, அது சம்யக்த்வத்தை அதாவது மோக்ஷ மார்கத்தை, அதாவது சம்வரை-நிர்ஜரையை வெளிப்படுத்த வேண்டும், மேலும் அந்த மோக்ஷ மார்கத்தில் முன்னேறி மோக்ஷத்தை வெளிப்படுத்த வேண்டும். இதன் பொருள் என்னவென்றால் சம்வரை-நிர்ஜரை ஆகிய இரண்டு தத்துவங்களும் ஓரளவு வெளிப்படுத்த தகுதியானதாகும்-ஓரளவு உபாதேயமாகும் மற்றும் மோக்ஷ தத்துவம் முழுவதும் வெளிப்படுத்த தகுதியானதாகும்-பூரண உபாதேயமாகும்.

இந்த இரண்டுக்கும் உள்ள வித்யாசம் உங்களுக்கு தெரிகிறதா? ஜீவ தத்துவத்தை அடைக்கலமடைய தகுதியான உபாதேயம் என்று சொல்லப்படுகிறது. மோக்ஷ தத்துவம் வெளிப்படுத்த தகுதியான உபாதேயம் என்று சொல்லப் படுகிறது. இங்கு மோக்ஷ தத்துவத்தை அடைக்கலமாக அடைய உபதேசம் செய்யப்படவில்லை, மோக்ஷத்தை வெளிப்படுத்துவதாலேயே நமக்கு நல்லது நடக்கும் என்று சொல்லப் படுகிறது. மோக்ஷ பர்யாயத்தின் பக்கம் பார்த்துப்பார்த்தே மோக்ஷம் அடைய முடியாது ஆனால் தன்பக்கம்-தன் திரிகால சுத்த ஆத்ம பகுதியின் பக்கம் பார்த்துக் கொண்டே இருந்தால் அதாவது ஆத்ம அனுபவத்தில் ஆழ்ந்து கொண்டே இருந்தால் மோக்ஷ பர்யாயம் தானாகவே வெளிப்படும்.

சம்வரை, நிர்ஜரை தத்துவங்களை ஏகதேச அதாவது ஓரளவு வெளிப்படுத்த தகுதியான உபாதேயம் என்று ஏன் சொல்கிறார்கள்? இதைப்பற்றி நாம் இப்போது சிந்தனை செய்யலாம். சம்வரை-நிர்ஜரை என்றால் மோக்ஷ மார்கம். முன்னர் நாம் பார்த்த உதாரணத்தை நினைவு கூறுங்கள். நாம் நம் வீட்டின் பக்கம் செல்லும் வழியில் சென்று நம் வீடு இருக்கும் இடம்வரை வந்து விட்டோமென்றாலும், நம் வீட்டில் பிரவேசம் செய்ய, நாம்

வந்த வழியை விட வேண்டும். அந்த வழியிலேயே மேலும் செல்வதை விட்டுவிட்டு, நம் காலடியை நம் வீட்டில் வைக்க வேண்டும். அதுபோல சம்வரை-நிர்ஜரை வடிவ மோக்ஷமார்கத்தை கடைபிடித்து நாம் மோக்ஷம் பக்கம் நம்மால் செல்ல முடியும் ஆனால் மோக்ஷ பர்யாயம் உண்டாகும்போது சம்வரை-நிர்ஜரை வடிவ மோக்ஷமார்க பர்யாயம் இல்லாமல் போதல்-அழிதல் அடைந்தே மோக்ஷ பர்யாயம் உண்டாகும். இதைத்தவிர இன்னும் ஒரு விஷேசம் என்னவென்றால் நம்முடைய கடைசி இலக்கு-லட்சியம் என்னவென்று நிச்சயம் செய்யாமல் இருக்கும்வரை உயிர் அந்த மார்கத்திலேயே திருப்தி அடைந்து அதிலேயே நிலைத்து இருந்து விடும். வெறுமனே சம்வரை-நிர்ஜரை வெளிப்பட்டு விட்டது அதாவது சம்யக்தர்சனம் அடைய வேண்டியதே நான் செய்ய வேண்டியது என்று நம்பிக்கொண்டு, யார் திருப்தி அடைகிறாரோ அவருடைய நம்பிக்கை விபரீதமானதால் ஒன்று அவர் சம்யக்தர்சனம் அடையாமலேயே இருப்பார், அல்லது ஒருவேளை அவர் முன்னரே சம்யக்தர்சனம் அடைந்திருந்தாலும், அதை இழந்து மீண்டும் மித்யாதிருஷ்டியாகவே ஆகி விடுவார்.

சம்வரையும் நிர்ஜரையும் மோக்ஷம் அடையும் வழியாகும்-மோக்ஷமார்கமாகும். ஆஸ்ரவம்-பந்த உணர்வுகள் அழிந்தே, சம்வரை-நிர்ஜரை உணர்வுகள் வெளிப்படுகிறது. சம்வரையும் நிர்ஜரையும் வெளிப்படுத்த தகுதியானது என்ற நம்பிக்கை வந்ததும், ஆஸ்ரவ பந்தம் இல்லாமல் செய்யும் தகுதி, அழிய செய்யும் தகுதி விடத்தகுந்தது அதாவது ஆஸ்ரவம் பந்தம் இரண்டும் ஹேய-விடத் தகுதியான தத்துவமாகும் என்ற எண்ணம் வருகிறது. சுப-அசுப ராகம் மற்றும் அதன் காரணத்தால் உண்டாகும் பந்தம், தியாகம் செய்யத் தக்கதாகும். சம்வரையும் நிர்ஜரையும் சுத்த பாவமாகும்-வீதராக உணர்வாகும். ஆஸ்ரவ பந்தம் அசுப உணர்வாகும், ராக பாவமாகும். அசுப உணர்வை எப்போதும் வைத்துக் கொண்டு, யாராவது சுத்த உணர்வை வெளிப்படுத்த விரும்புவாரானால் அதாவது ராகம் செய்து செய்து வீதராக தன்மை தானாகவே வெளிப்பட்டுவிடும் என்று யாராவது நம்பினால் அது அவருடைய குற்றமாகும், விபரீத நம்பிக்கையாகும், அதாவது மூடநம்பிக்கை யாகும்.

ஜின தர்மத்தை தவிற மற்ற எல்லா தர்மங்களிலும் புண்ணியம் நல்லது என்றும், சுப உணர்வு கொள்ள வேண்டும் என்றும், அசுப உணர்வு கொள்ளக்கூடாது என்றும் உபதேசம் செய்யப்படுகிறது. சுப உணர்வு, அசுப உணர்வு இரண்டையும் தவிர்த்து, சுத்த உணர்வே ஒன்றையே வெளிப்படுத்த தகுதியானதாகும், அதுவே நம்முடைய முதன்மையான செய்யத்தகுந்த காரியமாகும் என்று ஜின தர்மத்தில் ஜிநேந்திர பகவானால் உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. தத்துவங்களில் பயிற்சி மற்றும் யதார்த்தமான நம்பிக்கை கொள்ளும்போது சுப பாவம் விடத்தக்கதாகும், ஹேய மாகும், என்று சரியான நம்பிக்கை கொள்ளுதல் அவசியமாகும். சுபம் நல்லது என்ற விபரீத நம்பிக்கை மிகவும் ஆழமாக இருப்பதால் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி சுபச்செயல் நல்லது என்ற நம்பிக்கையை உயிர் எப்போதும் வைத்துக்கொள்ள விரும்புகிறது. அய்யோஹோ, சுத்தத்திற்கு செல்ல வேண்டும் என்றால் முதலில் சுபத்திற்கு வருவது அவசியம் அல்லவா? என்று சொல்லிக் கொண்டு **வேண்டும்** என்ற இந்த அழுத்தமான வார்த்தையை **சுபத்தின் மேல் போட்டு** அந்த உயிர் சுபத்திற்கு மஹத்துவம் கொடுத்து ஆஸ்ரவ-பந்தத்தை விடவேண்டியவை என்று நம்பாமல் ஏற்க வேண்டியது என்றே நம்புகிறது, மேலும் தத்துவ சம்பந்தமாக விபரீத நம்பிக்கையை திடப்படுத்திக் கொண்டு மித்யாத்வத்தையே ஊட்டப்படுத்திக் கொள்கிறது.

எதுவரை சுத்த உணர்வு வெளிப்படவில்லையோ அதாவது சம்யக்தர்சனம் அடையவில்லையோ, அல்லது உயிரில் சுத்தோபயோகம் நிகழாதவரை உயிர் சுப உணர்விலிருந்து அசுப உணர்விலும்; அசுப உணர்விலிருந்து சுப உணர்விலும் எப்போதும் மாற்றமடைந்து கொண்டே இருக்கும். சுப உணர்வோ அசுப உணர்வோ எதுவானாலும்

அதிக பட்ச காலம் அந்தர் முஹூர்த்த காலாமாகும். அதாவது சுப உணர்விலோ அல்லது அசுப உணர்விலோ அது மிக அதிக பட்சமாக அந்தர் முஹூர்த காலம் வரையே நீடித்து இருக்க முடியும். ஆமாம், ஆமாம்! அந்தர் முஹூர்தம் என்றால் எவ்வளவு நேரம் என்று இப்போது பார்க்கலாம். முஹூர்தத்தின் இடைப்பட்ட காலம் எதுவோ அதையே அந்தர் முஹூர்த காலம்-நேரம் என்று சொல்கின்றனர். முஹூர்தம் என்பது 48 நிமிட நேரமாகும். 24 நிமிடங்கள் கொண்டது ஒரு நாழிகை, இரண்டு நாழிகை கொண்டது ஒரு முஹூர்தம். ஒரு சமயம் என்பது எவ்வளவு சூட்ஷம்மானது நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். அசங்யாத சமயங்கள் கொண்டது ஒரு ஆவளி யாகும். அந்தர் முஹூர்தம் என்பதன் பொருள் ஒரு சமயம் கூடிய ஒரு ஆவளியிலிருந்து, இரண்டு நாழிகையில்-ஒரு முஹூர்தத்தில் ஒரு சமயம் குறைந்த இடைப்பட்ட எல்லா காலங்களுமாகும். ஒரு செகண்டு-மணித்துளி என்பதில் அசங்க்யாத-எண்ணிலடங்காத சமயங்கள் இருக்கின்றன. சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் “ஒரு அவளிக்கு அதிகமாகவும், 48 நிமிடத்துக்கும் குறைந்த இடைப்பட்ட நேரத்தை-காலத்தை அந்தர்முஹூர்தம்” என்று சொல்லலாம்.

இவ்வாறு எப்போது அசுப உணர்வு மாற்றமடைந்து சுப உணர்வு தானாகவே உங்கள் விருப்பம் இல்லாமலேயே வருகிறதோ அப்போது சுபத்தில் இருக்க வேண்டியதே அவசியம் என்று சொல்லிக் கொண்டு இந்த உயிர் சுபஉணர்வில் திருப்தி அடைவதிலேயே நம்பிக்கையை எப்போதும் வைத்துக் கொண்டுள்ளது. அதற்கு ஆஸ்ரவம்-சுப உணர்வு செய்யத் தகுதியானது, செய்ய வேண்டியது என்ற நம்பிக்கை இருக்கிறது. ராகம் செய்து கொண்டே இருந்தால் வீதராகியாக ஆகிவிடுவேன் என்று நம்புகிறது. சுப உணர்வு செய்து கொண்டே இருந்தால் சுத்த உணர்வு தானாகவே வெளிப்படும் என்று நம்புகிறது. இந்த எல்லா நம்பிக்கைகளும் விபரீதமானதாகும் மேலும் இந்த விபரீத நம்பிக்கையையே மித்யாத்வம்-மூடநம்பிக்கை என்று சொல்கின்றனர்.

இந்த விபரீத நம்பிக்கையின் காரணத்தால் அதற்கு தகுந்தாற்போல உண்டாகும் அறிவும், ஒழுக்கமும் கூட விபரீதமாகவே இருக்கிறது. ஒவ்வொரு நபரும் ஒழுக்கத்தில் முன்னேற்றம் அடையும் முயற்சிகளை அதாவது அதிகமாக கஷ்டங்களை சகித்து காரியங்களை செய்கின்றனர் ஆனால் நம்பிக்கை விபரீதமாக இருக்கும்வரை அவர்களுடைய ஞானமும், ஒழுக்கமும் எந்த காலத்திலும் நன்ஞானமாகவும், நல்லொழுக்கமாகவும் ஆக முடியாது. உண்மை என்ன வென்றால் சம்யக்தர்சனம் அடையும் வழி மிகவும் சுலபமானதும் எளிதானதுமாகும், அவ்வளவே!

உண்மையான தேவ, குரு, சாஸ்திரத்தில் மற்றும் ஏழு தத்துவங்களில் யதார்தமான-உண்மையான நம்பிக்கையையே சம்யக்தர்சனம் என்று சொல்கின்றனர். உண்மையில் இரண்டும் ஒன்றேயாகும். இரண்டும் ஒன்றே என்று எவ்வாறு சொல்ல முடியும் என்று பார்க்கலாம். மோக்ஷ தத்துவ நம்பிக்கையில் உண்மையான கடவுளின் நம்பிக்கை அடங்கி விடுகிறது. சம்வரை, நிர்ஜரை தத்துவங்களின் நம்பிக்கையில் உண்மையான குருவின் நம்பிக்கை அடங்கி விடுகிறது. ஏழு தத்துவங்களின்மேல் உள்ள உண்மையான நம்பிக்கையில் உண்மையான சாஸ்திரங்களிளின் மேல் உள்ள நம்பிக்கை அடங்கி விடுகிறது. ஏனெனில் சாஸ்திரங்களின் பிரயோஜனமே ஏழு தத்துவங்களின் இயல்பை கூறி, பேதவிஞ்ஞானம் செய்யும் கலையை கற்பித்து, வீதராகத்தை எப்படி அடைய வேண்டும் என்பது பற்றி உபதேசம் கொடுப்பதாகும்.

இன்றுவரை ஆஸ்ரவ-பந்தங்களையே விடத்தக்கது என்று நம்பாமல் ஏற்க வேண்டியது என்று நம்பிக்கை கொண்டிருந்ததே நம்முடைய பெரிய முட்டாள் தனமாகும். நாம் ஆஸ்ரவம் முதலான பர்யாய தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் திரவ மற்றும் பாவ என இரண்டு-இரண்டு

பிரிவுகள் இருப்பதை முன்னரே பார்த்தோம். திரவ்யாஸ்ரவம், திரவ்யபந்தம், திரவ்யசம்வரை, திரவ்யநிர்ஜரை, திரவ்யமோக்ஷம் ஆகியவெல்லாம் கர்மத்தின் அவஸ்தைகள்-நிலைகளாகும். கர்மம் கார்மண வர்கணைகளால் ஆனதாகும், கார்மண வர்கணைகள் புத்கலமாகும், புத்கலம் என்னிலிருந்தும் வேறான பர-பிற திரவியமாகும். அஜீவ தத்துவம் பற்றி பயிற்சி செய்தபோது நாம் பர-பிற திரவியங்களை ஞ்யேய-அறிய வேண்டிய தத்துவத்தில் அடக்கினோம். ஆனால் அப்படி நம்பாமல், நான் பலான கர்மத்தை அழிக்க வேண்டும், தர்சனமோஹநீய கர்மம் எனக்கு சம்யக்தர்சனம் அடைய தடையாக இருக்கிறது, இல்லையென்றால் நான் எப்போதோ சம்யக்தர்சனத்தை அடைந்து இருப்பேன், நான் கர்மத்தை செய்பவன், அதாவது கர்மம் என்னில் உணர்வுகளை உண்டாக்குகிறது என்ற எல்லா நம்பிக்கைகளும் விபரீதமானதே யாகும்.

நீங்கள் ஆஸ்ரவ-பந்தங்களை ஹேயம்-விடவேண்டும் என்று கூறுகிறீர்கள், சுப உணர்வு ஹேயம்-விட வேண்டும் அதாவது சுப உணர்வு கொள்ளக்கூடாது என்று உபதேசம் செய்கிறீர்கள், அந்த உபதேசத்தை கேட்ட உயிர்களின் நிலை கசப்பு பொருளின் மேல் வேப்ப எண்ணய்யை ஊற்றினார்போல, ஏற்கனவே குரங்கு இயல்பு உடையவரை கள் குடிக்க வைத்தது போல ஆகிவிட்டது. அப்படிப்பட்ட உபதேசத்தால் உயிர்கள் சுப செயல்கள் செய்வதை விட்டுவிட்டு அசுப செயல்களிலேயே ஆழ்ந்து விடுவார்கள் என்று பலர் குற்றச்சாட்டுகளை வைக்கின்றனர். அவர்களுடைய இந்த குற்றச்சாட்டும், பயமும் ஆதாரமற்றதாகும். ஏனெனில் சுபச்செயல் நல்லது, செய்து கொண்டே இருக்க வேண்டிய ஒன்று என்ற நம்பிக்கையை தான் விடவேண்டும் என்று சொல்லப் படுகிறதே ஒழிய, சுப செயலை விடவேண்டும் என்று எங்கே உபதேசம் செய்யப்படுகிறது? இங்கே ஸ்வாத்யாம் நடந்து கொண்டு இருக்கிறதே இதில் நம்பிக்கையில் உள்ள விபரீத தன்மை பற்றிய பேசப்படுகிறதே அது சுப உணர்வா?அல்லது அசுப உணர்வா? ஸ்வாத்யாயம் கூட சுப உணர்வுதான். மேலும் ஒருவர் சுப உணர்வு கொள்ள யாருடைய உபதேசமாவது தேவைப்படுகிறதா என்ன? சூட்ஷும ஏகேந்திரிய உயிர்கள் முதல் மனமுடைய பஞ்சேந்திரிய நான்கு கதிகளில் இருக்கும் எல்லா உயிர்களும், ஏன் ஒரு ஸ்வாசோச்வாச நேரத்தில் 18 முறை இறந்து, பிறக்கும் நிகோத உயிர்களும் கூட சுப, அசுப உணர்வுகளை தானாகவே ஒவ்வொரு அந்தர் முகூர்தத்திலும் மாற்றி மாற்றி செய்து கொண்டுதானே இருக்கின்றன. [சுப அசுப உணர்வுகள் எந்த விருப்பமும் அல்லது உபதேசமும், மேலும் சொல்லப் போனால் எந்த முயற்சியும் இன்றியே அந்தர் முகூர்த நேர இடைவெளியில் தானாகவே மாறி மாறி உண்டாகின்றன என அறியவும்.]

நீங்கள் இருவரும் பெண்கள் ஆகையால் பெண்களின் உதாரணத்தை கொண்டே உங்களுக்கு இதை புரிய வைக்கிறேன். ஒரு பெண் குழந்தை பிறக்கும்போதே அந்த குழந்தையின் அப்பா-அம்மாவுக்கு இவள் வேறு குடும்பத்தில் சென்று வாழ்க்கை பட வேண்டியவள், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் அவளை நாம் விட வேண்டியவர்களே என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும்கூட அவள் திருமணம் செய்து கொண்டு அவளுடைய புருஷன் வீட்டுக்கு செல்லும்வரை அவளை சீராட்டி, முழு அன்பும் செலுத்தி, ஊட்டச்சத்துள்ள உணவுகள் கொடுத்து, நல்ல கல்வி அறிவு கொடுத்து, நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்து, அவள் தன் சொந்த காலில் நின்று பணம் சம்பாதிக்கும் அளவுக்கு அவளை ஆளாக்குவதுவரை அவளுடைய பெற்றோர்கள் எந்த குறையும் வைப்பதில்லை. திருமணமான பிறகு கூட பெண்கள் ஆரம்பத்தில் அடிக்கடி தாய் வீட்டுக்கு வர விரும்புகிறார்கள், ஆனால் கொஞ்ச காலத்தில் மாமியார் வீட்டில் ஒன்றுகலந்து விடுகிறார்கள், அங்கு வாழ்வதிலேயே ஆனந்த மடைகிறார்கள், அம்மா வீட்டுக்கு வந்தால்கூட சீக்கிரமாகவே மாமியார் வீட்டுக்கு திரும்பிவிடவே விரும்புகிறார்கள். ஆஸ்ரவ சம்பந்தமான நிலைமை கூட அப்படி பட்டது தான். அதை விடவேண்டியது என்று நம்பினாலும், நம்பிக்கையில் தியாகம் செய்ய தகுதியானது என்று நம்பினாலும் கூட

எதுவரை ஆஸ்ரவத்தை விட்டு, சுத்த பாவத்தில் (தன் தூய ஆன்மாவில்) ஆழ முடியாதவரை அதிகமாக உயர்ந்த வகை சுப உணர்வுகள் வந்து கொண்டுதான் இருக்கும். சுத்த பாவம் வெளிப்பட்ட பிறகும்கூட மீண்டும் மீண்டும் ஆஸ்ரவம் உணர்வு வந்து கொண்டே இருக்கும். சுத்த பாவம் அதிகரிக்க அதிகரிக்க ஆஸ்ரவம் முற்றிலும் இல்லாமல் போவதில்லை; ஆனால் நான் என் சுத்த ஸ்வபாவத்திற்கே செல்ல வேண்டும் என்ற எண்ணமே இடைவிடாது இருந்து கொண்டிருக்கும், ஒரு சமயத்தில் ஆஸ்ரவம் முழுமையாக இல்லாமல்போக, மோக்ஷ நிலை, பூரண சுத்த நிலை வெளிப்படும். இது ஒரே சமயத்தில் நிகழக்கூடிய காரியமில்லை, தொடர்ந்து மூன்னேற்றமடையும் காரியமாகும்.

மகளின் நலத்தில் அக்கரையுள்ள அம்மா, உன் அம்மா வீடு உன்னுடையதல்ல, உன் மாமியார் வீடுதான் உன்னுடைய வீடு என்று மகளுக்கு அறிவுரை செய்து கொண்டே இருப்பாள். ஜினவாணி அம்மாவுக்கு கூட நம் நலனில் அக்கரை உள்ளதால் அது கூறுவது யாதெனில் **அனாதி காலமாக நீ ஆஸ்ரவத்தையும்-பந்தத்தையும் தான் செய்து கொண்டே வந்திருக்கிறாய், ஆனால் அது விடத் தகுந்த தத்துவமாகும், அதை விட்டு நிஜ தத்துவத்தில் அதாவது ஸ்வ ஜீவதத்துவத்தில் அடைக்கலம் அடை, அப்போதுதான் சம்வரை- நிர்ஜரை மூலம், மோக்ஷ வடிவ சுகம் உனக்கு கிடைக்கும்.** சம்வரை-நிர்ஜரை வெளிப்பட்ட பிறகுகூட ஆரம்பத்தில் அதனுடன் கொஞ்சம் குறைந்த ஆஸ்ரவ-பந்தம் சில காலம் வரை இருந்து கொண்டு இருக்கும் ஆனால் பின்னர் அது முழுவதும் இல்லாமல் போய் பூரண சுக வடிவ, அனந்த சுகம் வடிவ மோக்ஷம் வெளிப்படும். மேலும் இதுபற்றி அதிகமான சர்ச்சையை அடுத்த கடிதத்தில் செய்யலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-26 15-1-1996

ஏழு தத்துவங்கள்-பேதவிஞ்ஞானம்

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

எல்லா கடிதங்களையும் ஒன்றாக சேர்த்து ஜராக்ஸ் நகல் எடுத்து நீங்கள் இருவரும் மீண்டும் ஒருமுறை படித்தீர்கள் என்று சொன்னதைக் கேட்டு எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. மோனா, மகேஷ்ஜீ இந்த கடிதங்களை படித்து விட்டு ஸ்டார் ட்ரெளக் டீவீ தொடரை பார்ப்பது போல, அற்புதமாகவும், வியப்புக்குரியதாகவும் இருக்கிறது என்று சொன்னதாக கூறினாய். ஒருவேளை அவருக்கு இவைகள் சாத்தியமில்லாத்தாகவும், நம்ப முடியாததாகவும் கூட இருந்திருக்கலாம். அற்புதமான இதிஹாசங்களையும் மற்றும் அதிசயிக்கத் தக்க கதைகளையும் நாம் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் படிக்கிறோம், அதுபோல உங்களைப்போன்ற இளைஞர்கள் இந்த கடிதங்களையும் படிப்பார்களானால் நான் இவைகளை எழுதியதின் நோக்கம் வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்வேன். இந்த கடிதங்களை புத்தக வடிவில் கொண்டு வாருங்கள் என்று கேட்பவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது. அந்த நோக்கில் பலரின் விருப்பத்தை பூர்த்தி செய்ய முயற்சி மேற்கொள்ள ஆரம்பிக்கிறேன். ஆகையால் இதுவரை எழுதியதில் எந்த விஷயமாவது புரியவில்லை என்றாலோ, புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது என்றாலோ அல்லது வேறு சில கேள்விகளுக்கு பதில் கிடைக்காமல் இருந்தாலோ, எனக்கு அவசியம் தெரியப் படுத்துங்கள். உங்களிடம் இருந்து வரும் கருத்துக்களை மனதில் கொண்டு புத்தக வடிவில் வரும்போது அவைகளை மேலும் எளிமையாக்கி, விளக்கங்களை சேர்த்து கொண்டுவர உதவியாக இருக்கும்.

நல்லது, இப்போது நம்முடைய சர்ச்சை ஏழு தத்துவங்கள்-கொள்கைகள் பற்றி நடந்து கொண்டு இருக்கிறது. இதுவரை ஏழு தத்துவங்களின் இயல்பு பற்றியும் அது சம்பந்தமான விளக்கங்களையும் பார்த்தோம். தத்துவங்களின் பெயர்கள், அவைகளின் ஸ்வரூபம்-இயல்பு, அவைகள் எண்ணிக்கையில் ஏன் ஏழாகவே இருக்கின்றன, அது சம்பந்தமாக உயிர்களிடம் இருக்கும் விபரீத நம்பிக்கைகள், தத்துவங்களில் ஹேய-ஞ்யேய-உபாதேயங்களை எப்படி பொருத்திதப் பார்க்க வேண்டும் போன்ற விபரங்களை எல்லாம் விரிவாக இதுவரை பார்த்தோம். **தத்துவார்த்த சிரத்தானம் சம்யக்தர்சனம்** என்பதை தெரிந்து கொண்டோம். ஆஹா! இவ்வளவு விஷயங்களை நாம் தெரிந்து கொண்டதால், இப்போது நாம் சம்யக்தர்சனம் அடைந்து விட்டோம் என்று நீங்கள் கூறலாம். ஹா! இவ்வளவு சீக்கிரமாக அவ்வாறு எண்ணம் கொள்ள வேண்டாம், நான் சொல்வதை கவனமாக கேளுங்கள். இதுவரை நமக்கு ஏழு தத்துவங்கள் பற்றிய எந்த அறிவு வந்திருக்கிறதோ, அது புத்தக அறிவு-சாஸ்திர அறிவு-வாய்மொழியாக சொல்லும் அறிவு மட்டுமேயாகும். இப்போது உங்களுக்கு ஆத்ம அறிவு எங்கே ஏற்பட்டது? இந்த ஏழு தத்துவங்களில் மறைந்துள்ள ஆத்மஜோதி இந்த சமயம்வரை எங்கே உங்கள் அனுபவத்தில் வந்தது?

இப்போது நீங்கள் கொஞ்சம் சாஸ்திர மொழியை கற்றுக் கொண்டுள்ளீர்கள் ஆகையால் குறைந்த பட்சம் வியவஹார சம்யக்தர்சனமாவது அடைந்திருக்கிறோம் அல்லவா? என்று நீங்கள் கூறலாம். அவ்வாறு உங்களுக்கு தோன்றுமானால் நீங்கள் குழப்பத்தில் இருக்கிறீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அரைகுறை அறிவு ஆபத்தானது என்று சொல்லப் படுகிறது, அதுவே இப்போதைய உங்கள் நிலைமை என்றால் மிகையாகாது. இந்த ஏழு தத்துவங்களை பற்றி படித்தறிந்து, அவைகளில் ஒன்றான ஸ்வ சைதன்ய ஸ்வரூபத்தை அடையாளம் கண்டு, அதன்மேல் விழிப்புணர்வு கொண்டு, அதில் ஆழ்ந்து அனுபவித்தவரே

உண்மையில் நிச்சய சம்யக்தர்சனத்தை அடைந்தவராவார். அப்படிப்பட்ட நிச்சய சம்யக்தர்சனத்தை அடைந்த பிறகே அந்த உயிருக்கு ஏழு தத்துவ சம்பந்தமாக உண்டாகும் யதார்த்த நம்பிக்கையை வியவஹார சம்யக்தர்சனம் என்று சொல்ல முடியும். உபசாரமாக சொல்வதையே வியவஹாரம் என்று சொல்வதன் பொருளாகும். ஆகையால் எந்த உயிர் நிச்சய சம்யக்தர்சத்தை அடைந்துள்ளதோ அந்த உயிரே வியவஹார சம்யக்தர்சனத்தை கொண்டதாக கருதப்படும்.

ஸ்வ ஆத்மாவைத்தானே அனுபவம் செய்ய வேண்டும், பிறகு ஏன் ஏழு தத்துவங்களை பற்றி சொல்கிறீர்கள்? என்று நீங்கள் கேட்கலாம். ஏனெனில் நான் சுத்தமானவன், சைதன்ய ஸ்வரூபமானவன் என்று சொல்வதால் மட்டுமே உணர்வு பூர்வமாக ஸ்வாத்ம அனுபவம் உண்டாகாது. சர்வஞ்ஞ பகவான் அவருடைய வாணியில் எப்படி சுத்த ஆத்மாவின் ஸ்வரூபம் இருக்கிறது என்று கூறினாரோ அப்படியே நம்பிக்கை உண்டானால்தான் ஸ்வாத்மானுபவம் உண்டாகும். அதற்கு ஆகமப் பயிற்சி மற்றும் குருவின் உபதேசம் மூலம் யதார்த்த தத்துவ நிர்ணயம் செய்ய வேண்டும், அந்தர்முக்- உள்முகம் கொண்டு சிந்திக்க வேண்டும், அதாவது **நம் நிகழ்கால அறிவின் பர்யாயம் முழுவதையும் நம் த்ருவ சுத்தாத்ம வடிவின் பக்கம் திருப்பி அந்த சுத்தாத்மாவின் அபூர்வ சக்திகளை பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.**

சமயசாரம் காதை 12-ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, ஏழு தத்துவங்களில் (பாபம் புண்ணியத்தையும் சேர்த்து ஒன்பது தத்துவங்களில்) ஆத்மா ஒன்றே பிரகாசமானதாக இருக்கிறது, அதன் இருப்பே மற்ற தத்துவங்களால் உறுதி படுத்தப் படுகிறது. மேலும் உயிர் மற்ற தத்துவ வடிவமாக ஆனாலும் அது தன் சுத்த ஸ்பாவத்தை எப்போதும் விட்டுவிட வில்லை. இந்த ஏழு தத்துவங்களில் சில சுத்த உணர்வாகவும், சில அசுத்த உணர்வாகவும் சில இரண்டும் கலந்த உணர்வாகவும் இருக்கின்றன, ஆனாலும் சேதன ஸ்வபாவ உணர்வு என்னவோ அவைகளிலிருந்து தனித்து அனுபவத்திற்கு வரக்கூடியதாக இருக்கிறது.

இதை விளக்க சாஸ்திரங்களில் நெருப்பை உதாரணமாக காட்டுகின்றனர். எவ்வாறு எரிகின்ற கட்டை, தர்பை(புல்), அல்லது சாணியாலன எருமட்டை இவைகளை பார்க்கும் போது நெருப்பு கூட கட்டை, தர்பை, எருமட்டை வடிவம் கொண்டதாக தெரிகிறது, ஆனாலும் நெருப்பின் உண்மையான எரிக்கும் சக்தியை பார்க்கும் போது அது கட்டை, தர்பை, எருமட்டை இவைகளை எரிப்பதாகவே இருக்கிறது, நெருப்பு கட்டை, தர்பை, எருமட்டை வடிவமாக ஆகவில்லை என்பது நம் அறிவுக்கு வருகிறது. நாம் ஆத்மானுபவம் அடைய வேண்டுமானால் கீழ் கொடுக்கப்பட்ட நான்கும் அவசியமாகும்.

1. உண்மையான தேவ, குரு, சாஸ்திரங்களின் யதார்த்த ஸ்வருபத்தை அறிந்து திடமான நம்பிக்கை கொள்ளல்: ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட உபதேசத்தாலேயே உயிர்களுக்கு சம்யக்தர்சனம் உண்டாகும் என்று மேலே கூறப்பட்ட விளக்கத்தில் நாம் பார்த்தோம். அதற்கு ஜினேந்திர பகவானின் இயல்பு, அவரால் கூறப்பட்ட உபதேசம்- சத்சாஸ்திரம் மற்றும் அந்த உபதேசத்தை அங்கீகாரம் செய்து ஆத்மானுபவம் அடைந்த பாவலிங்கி திகம்பர முனி இவைகள் அனைத்தையும் உறுதி செய்த பிறகே நமக்கு உண்மையான உபதேசம் கிடைக்கும். உபதேசம் பெற தேவபூஜை, குருசேவை, ஸ்வாத்யாயம் அதாவது பகவானுக்கு வெறுமனே பூஜை செய்வதால், குருவுக்கு ஆகாரம், வையாவிருத்யம் முதலான சேவை செய்வதால், மற்றும் சாஸ்திரங்களை படித்தலால் சம்யக்தர்சனம் கிடைக்கும் என்ற அர்த்தத்தில் இங்கே சொல்லப்படவில்லை. இவர்களால் கூறிய, காட்டப்பட்ட மார்க்கத்தில் செல்வதாலேயே நாம் சம்யக்தர்சனத்தை அடைய முடியும். அதுவே நாம் அவர்களுக்கு செய்யும் உண்மையான பக்தியும், வழிபாடுமாகும்.

2. ஏழு தத்துவங்களை உண்மையாக உணர்ந்து நம்புதல்: ஏழு தத்துவங்களில் விபரீத நம்பிக்கைகளை விட்டு, தத்துவங்களின் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்து, அவைகளில் ஹேய, ஞ்யேய, உபாதேய அதாவது விடவேண்டிய, தெரிந்து கொள்ள வேண்டிய, ஏற்றுக்கொள்ள வேண்டிய தத்துவங்களை அடையாளம் கண்டு நம்பிக்கை கொள்வதால், அவைகளை மீண்டும் மீண்டும் சிந்தனை செய்து இந்த தத்துவங்கள் உண்மையில் இவ்வாறே இருக்கின்றன என்று தேர்வு செய்து உறுதி படுத்துவதே உண்மையான உணர்வுப் பூர்வமான நம்பிக்கையாகும்.

3. ஸ்வ-பர பேதவிஞ்ஞான்: நான் யார், பிற-பர எவை என்பதை அறிந்து தன்னை-ஸ்வவை மட்டுமே தான்-ஸ்வ என்று அறிந்து மேலும் அதில் நம்பிக்கை கொள்ளுதல். மேலும் பிறவற்றை பிற என அறிந்து அவ்வாறே நம்பிக்கை கொள்ளுதல். ஏழு தத்துவங்களில் ஸ்வ-பர பேதவிஞ்ஞானம் செய்தல் அதாவது அவைகளில் ஸ்வதத்துவம் எது பரதத்துவங்கள் எது என்று அடையாளம் கணுதல்.

4. ஆத்மானுபூதி: ஸ்வயம் யார் என்பதை தெரிந்து கொண்ட பிறகு, உணர்வால்-அனுபவத்தால் அடையாளம் கண்டு இதுவே ஸ்வயம் நான் என்று முழு நம்பிக்கை கொள்ளுதல். பிறகு திரும்பத்திரும்ப உள்நோக்கி ஸ்வவை நிகழ்கால அறிவின் பர்யாயத்தால் அனுபவிக்க பயிற்சி செய்தல். இதையே ஆகமங்களில் ஆத்மானுபூதி என்று சொல்கின்றனர். ஆத்மா-ஆத்மாவின் இயல்பு எப்படி இருக்கிறது மற்றும் அதை எந்த விதிமுறையின் படி அனுபவம் செய்ய வேண்டும் என்பதை பற்றிய உபதேசத்தை அரஹந்த பகவான் சமவசரணத்தில் திவ்யத்தொணியில் கூறியிருக்கிறார். அந்த விதிமுறைகள்படி நடந்து பல உயிர்கள் ஆத்ம அனுபவத்தை அடைந்திருக்கிறார்கள். பல ஆசார்யர்கள் சக உயிர்களின்மேல் கருணை கொண்டு அந்த விதிமுறைகளை நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள். நாங்கள் ஸ்வவை-எங்களை அடையாளம் கண்டு உண்மையான சிறப்புகளின்-நிஜவைபவ மகிழ்ச்சியில்-ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டு இருக்கிறோம், நீ கூட உன்னுடைய உண்மையான சிறப்புகளை-நிஜ வைபவங்களை அறிந்து கொள், பிறகு அதை மீண்டும் மீண்டும் அனுபவம்-உபபோகம் செய் என்று உபதேசம் செய்துள்ளார்கள்.

மேலே கூறிய நான்கு விஷயங்களில் முதல் இரண்டு விஷயங்கள் பற்றி நாம் இன்றுவரை விரிவான சர்ச்சை செய்திருக்கிறோம். இன்று நாம் பார்க்கப்போகும் விஷயம் மூன்றாவதான பேதவிஞ்ஞான மாகும். பேதவிஞ்ஞானம் என்றால் ஏதேனும் இரண்டு பொருள்களில் வித்தியாசம் காணுதல் என்ற பொருளில் இங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் ஒரு பக்கத்தின் ஸ்வயம் நான், எதிர் பக்கம் அன்னிய பிற பொருள்கள்; இவைகளின் அடையாளங்களை-லட்சணங்களை அறிந்து அந்த லட்சணங்களை வைத்து இரண்டாக பிரித்துப் பார்த்தல் என்ற பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும். வேறுபடுத்திப் பார்க்கும் அறிவியல்-பேதவிஞ்ஞானம் என்னவோ எளிதாகவே நிகழ்கிறது. சிறு குழந்தை கூட இது என்னுடைய அம்மா என்று தெரிந்து கொள்கிறது. தன் அம்மா வேறு குழந்தையை தூக்கினால் அந்த குழந்தைக்கு கோபம் வருகிறது, அழ ஆரம்பிக்கிறது.

சற்றுமுன் மேலே கூறிய வழிமுறையின் படி பேதவிஞ்ஞானம் மூலம் இரண்டு பிரிவாக, இரண்டு அணிகளாக பிரிக்க வேண்டும். அவைகளில் ஒரு பிரிவு-அணி **சுயம் நானாக** இருக்க வேண்டியது அவசியமாகும். இரண்டாவது பிரிவில்-அணியில் பிற எல்லாவற்றையும் அடக்க வேண்டும். இரண்டு தனித்தனி பொருள்களை-இரண்டு பிரிவாக-அணியாக பிரிப்பது பேதவிஞ்ஞானம் என்று சொல்லப் படுவதில்லை.

இப்போது கிரிக்கட் போட்டி நடந்து கொண்டிருக்கும் சமயம். இந்த போட்டியில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஸ்ரீலங்கா முதலான அணிகள் விளையாடும்போது, அந்த போட்டியில் யார் வெற்றியடையப் போகிறார்கள், யார் தோல்வியை தழுவப் போகிறார்கள் என்பதில் நமக்கு அதிக கவலை இருப்பதில்லை. ஆனால் இந்தியா, பாகிஸ்தான் இடையே போட்டி நடந்தபோது, கோடிக் கணக்கான இந்திய மக்களின் முழு கவனமும் தொலைக்காட்சி பெட்டியில் அந்த விளையாட்டு ஒளி பரப்பில் தான் இருந்தது. ஒவ்வொரு நிமிடமும் மூச்சை பிடித்துக்கொண்டு யார் வெற்றிபெறப் போகிறார்கள் என்பதில்தான் எல்லோருடைய கவனமும் இருந்தது, ஏனெனில் அந்த விளையாட்டில் ஒரு அணியில் நாம் இருந்தோம்.

அங்கு மைதானத்தில் 11-11 விளையாட்டு வீரர்கள் இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளாக விளையாடினார்கள். முழு இந்தியாவின் பிரதிநிதியாக விளையாடிய 11 வீரர்களின் அணியை யாரும் சொல்லிக் கொடுக்காமலே, யாரும் கற்றுக்கொடுக்காமலே, தாமாகவே எல்லா இந்தியர்களும் அவரவர்கள் மனதில் இந்த அணி நம்முடையது என்ற உறுதிப்பாட்டுக்கு வந்தார்கள், இது இயல்பாகவே அறிந்து ஏற்றுக்கொண்டதாகும், அறிந்ததாகும். நம்முடைய அணி வெற்றி பெற்றதும், முழு இந்தியாவும் இந்த வெற்றி தங்கள் ஒவ்வொருவரின் வெற்றியாக ஏற்று முழு குதூகலத்துடன் கொண்டாடினோம்.

அதேபோல ஸ்வயம் ஆத்மாவே நான் என்ற தன்முனைப்பு-அஹம்பாவம்-நான் என்ற உறுதியான முடிவு ஏற்படும்போது, இரண்டாவது அணியில் உடல், கர்மம், விருப்பு-வெறுப்பு இன்னும் பிறவெல்லா பதார்தங்களும் இருக்கும். எல்லா உயிர்களுக்கும் பிரதிநிதியாக எந்த ஆத்மாவாவது-உயிராவது இந்த இரண்டாவது அணியை தோற்கடித்து பூரண சுத்த வடிவை அடைந்தால், அதாவது சித்த பரமேஷ்டியானால், எப்போதும் நிலையான முக்த நிலையை அடைந்தால், அந்த சமயத்தில் நம் எல்லோருக்கும் ஆனந்தத்தின் குதூகலமும் உண்டகவில்லை என்றால்தான் ஆச்சர்யமான விஷயமாகும். அதேபோலவே யார் அரஹந்த நிலையை அடைந்தார்களோ அவர்களின் மேல் நம் மனதில் தீவிர பக்தியும், மிகுந்த மரியாதையும், மகிழ்ச்சியும் நிறைந்திருத்தல் ஒரு சகஜமான-எளிதான விஷயமாகும். அதேபோல முக்தி மார்கத்தை தன்னில் வெளிப்படுத்தும் ஆசார்யர், உபாத்யாயர், முனி அவர்களை பார்த்து அல்லது அவர்களுடைய குணங்கள் நினைவுக்கு வந்தவுடன் நம்மிடம் அவர்களின்மேல் பக்தி உணர்வு விழித்துக் கொள்வது கூட சகஜமாகவே நிகழ்கிறது. இது போல பக்தியும், ஆனந்தமும் உண்டாகவில்லை என்றால்தான் அது ஒரு ஆச்சரியமான விஷயமாகும்.

இந்த மோக்ஷ மார்கத்தை கடைபிடித்து யார் அரஹந்தர் மற்றும் குருவானார்களோ அவர்கள் அந்த மார்கத்தை பற்றிய உபதேசத்தை அகில உலகத்திற்கும் கொடுத்திருக்கிறார்கள், எந்த பாரபட்சமுமின்றி உலகத்திலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் இந்த உபதேசத்தை கொடுத்திருக்கிறார்கள். இந்த உபதேசத்தின் மேல், அதாவது கேவலி பகவானால் சொல்லப் பட்ட தர்மத்தின் மேல், அதாவது சத்சாஸ்திரத்தின் மேல் பக்தி உணர்வு உறுதியாதல் சகஜமாகவே நிகழ்கிறது; அதற்காக யாராவது சொல்ல வேண்டும், அதற்கு முக்கியத்துவம் கொடுத்து கட்டாயப் படுத்த வேண்டும் என்ற அவசியமே இல்லை.

நான் யார் என்று புரிந்தவுடன், நம் அணி பற்றிய எண்ணம் மனதில் வருகிறது, மற்ற எல்லாம் சகஜமாகவே-சுலபமாகவே நிகழ்கிறது. ஆனால் எல்லா குழப்பமும், தவறும் இங்குதான் நிகழ்கிறது, அசல் எது என்பது அதாவது **நான்** யார் என்பது மறக்கப்பட்டதாக இருக்கிறது. ஸ்வயம் தன்னை அடையாளம் கண்டு புரிந்து கொள்வதில் தவறு ஏற்பட்டு

விடுவதால் எதிர் அணியையே தன் அணி என்று தவறாக புரிந்து கொண்ட காரணத்தால், அதை ஊக்கப்படுத்துவதில், cheer-up செய்வதில், நாம் இன்றுவரை காலத்தை தொலைத்திருக்கிறோம், முட்டாள் தனம் செய்து கொண்டு வந்திருக்கிறோம்.

இத்த நான் அதாவது ஸ்வ-வின், அதாவது ஆத்மாவின் ஸ்வரூபம் என்ன என்பது பற்றி கேளுங்கள். கேட்ட பிறகு அது சரியா அல்லது தவறா என்ற நிர்ணயம் செய்தல் என்னவோ உங்களிடம் தான் இருக்கிறது. ஆனால் ஆத்மாவை பற்றி கேட்பதையே, ஆத்மா எது என்று புரிந்து கொள்வதையே தேவையற்ற விஷயம் என்று எண்ணி உங்களுக்கு நீங்களே தடைபோட்டுக் கொள்ளாதீர்கள். உலகிலுள்ள எல்லா பொருள்களும் இந்த ஏழு தத்துவங்களில் அடங்கி விடுகின்றன. இதில் நான் ஒரு அணி மற்றும் அன்னிய பிற எல்லா பொருள்களும் இரண்டாவது அணியாகும். நான் அதாவது நான் மட்டும் அதாவது ஜீவ தத்துவம்-எதில் என்னுடைய பார்த்தல் அறிதல் இருக்கிறதோ அதுவே நான் என்ற முதல் அணி. இரண்டாவது அணியில் அஜீவ தத்துவம், ஆஸ்ரவ தத்துவம், பந்த தத்துவம், சம்வர தத்துவம், நிர்ஜரை தத்துவம் மற்றும் மோக்ஷ தத்துவம் எல்லாம் அடங்கி விடுகின்றன.

இங்கே பாருங்கள், தராசின் இரண்டு தட்டுகளில் ஒரு தட்டில் ஸ்வயம் நான்-ஞான தர்சன மய ஜீவ தத்துவத்தை வைத்து, இரண்டாம் தட்டில் பிரபஞ்சத்தில் உள்ள அசையும் மற்றும் அசையா பொருள்களையும்-பிற அனந்த உயிர்கள், புத்கலங்கள், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம், பணம், சொத்துகள், உலகில் உள்ள எல்லா வைபவங்கள், நிலம், வீடு, தாரைகள், நட்சத்திரங்கள், ஸ்வர்கம், நரகம் ஆகியவைகளோடு மட்டுமல்லாமல், விருப்பு வெறுப்பு விகார பர்யாயங்கள் மற்றும் சம்வரை, நிர்ஜரை, மோக்ஷ வடிவ சுத்த பர்யாயங்கள் எல்லாவற்றையும் வைத்தாலும் கூட **நான்** மட்டுமே உள்ள தராசு தட்டே அதிக கனமானதாக இருக்கும். பிரபஞ்சத்தில் உள்ள எல்லா தத்துவங்களிலுமிருந்து **நான்** தனித்தே இருக்கிறேன், எல்லாவற்றையும் விட சிறந்ததாகவும் கூட ஸ்வயம் நானே இருக்கிறேன். பிரபஞ்சத்திலுள்ள எல்லா பொருள்களையும் ஒரே சமயத்தில் பார்க்கக் கூடியது என்னுடைய ஞானத்தினுடைய சக்தியாகும். இந்த ஆத்மா மற்ற திரவியங்களைக் காட்டிலும் ஞான ஸ்வபாவம்-பார்த்தல் அறிதல் இயல்பு இருப்பதால் மதிப்பில் அதிகமானதாகவும், மிகச் சிறந்ததாகவும் இருக்கிறது என்று சமயசாரம் கிரந்தம் 31-ஆம் காதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த காதையின் பொருள் **யார் இந்திரியங்களை வென்று ஞான ஸ்வபாவத்தின் மூலம் மற்ற திரவியங்களை அறிவதைவிட ஸ்வயம் ஆத்மாவை அறிகிறாரோ, அந்த நிச்சய நயத்தில் ஆழ்ந்துள்ள சாதுவே-திகம்பர பவாலிங்கி முனியே உண்மையில் ஜிதேந்திரியர்-புலன்களை வென்றவர் என்று சொல்கிறார்கள்** என்பதாம். இங்கு மனித பர்யாயம் பற்றியோ அதாவது நிகழ்காலத்தில் வெளிப்படும் ஞானம் பற்றியோ இங்கு சர்ச்சை செய்யப் படவில்லை ஆனால் **நான்** என்று சொன்ன உடனே முக்கால சுத்த கேவல ஞான சக்தி மய அனந்த குணங்களின் சமூக வடிவமான அந்த ஒரு அதாவது **ஸ்வ** திரவியம் பற்றியே நாம் சர்ச்சை செய்து கொண்டிருக்கிறோம். மேலும் அப்படிப்பட்ட **நான்** பற்றிய அனுபவமே நமக்கு வரவேண்டும்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பேசும்போது நாம் **நான்** என்ற சொல்லை உபயோகித்து உடலுடன் உடைய மனித பர்யாயத்தை பற்றிய தகவல் சொல்லவே உபயோகப் படுத்துகிறோம். அப்படி சொல்வது தகுதியானதாகவே இருந்தாலும் கூட அது உபசாரமாக சொல்லப் படுவதாகும். உபசாரம் என்பது சொல்வதற்கு மட்டுமே யாகும், ஆனால் அவ்வாறே நம்புவது தவறாகும்.

எப்படியென்றால் அம்மா என்று சொன்ன உடனே தன்னை பெற்றெடுத்த தன்னுடைய அம்மாவை பற்றிய எண்ணம் தான் எல்லோர் மனதில் வரும். ஒவ்வொருவருக்கும் அவர்களை

பெற்றெடுத்த அம்மா ஒருவர் இருக்கிறார், அவர் ஒருவராகவே இருக்கிறார்கள். அனால் உபசாரமாக மாமியாரைக்கூட அம்மா என்று சொல்கிறார்கள், சின்னம்மா, பெரியம்மா, இரண்டாம் தாரமாக தன் அப்பாவை திருமணம் செய்து கொண்டவரையும் கூட அம்மா என்று கூறுகிறார்கள். கூட்டத்தில் ஒருவர் பேசும்போது இங்கே குழுமுயுள்ள அம்மாக்களே, சகோதரிகளே என்று ஆயிரக்கணக்கான மகளிரை அம்மா என்று சொல்லப்படுவதை பார்க்கிறோம். ஆனால் அவைகள் எல்லாம் உபசாரமாக சொல்லப்பட்டதாகும், சொல்வதற்கு மட்டுமே யாகும். உங்கள் இருவரையும் உங்களுடைய அம்மா யார்? என்று கேட்டால் நீங்கள் என்னை மட்டுமே காட்டுவீர்கள் அல்லவா. அப்போது அங்கு இருக்கும் மற்ற பெண்கள் எல்லாம் அம்மா இல்லையா என்ன? ஆமாம், அவர்கள் எல்லாம் அம்மாவாக இருந்தாலும் கூட அவர்களில் யாரும் உங்களுடைய அம்மா இல்லை அல்லவா!

அதுபோல **என்னுடைய ஞான தர்சனம் எதில் இருக்கிறதோ அதுவே ஜீவ தத்துவம் என்று சொன்னதுமே, பிரபஞ்சத்தில் உள்ள மற்ற உயிர்கள் ஏன் ஜீவ தத்துவத்தில் வரவில்லை?** என்ற கேள்வி எழுவது சகஜமே. அதற்கு பதில், **அவைகள் எல்லாம் உயிர்களாகவே இருந்தாலும், அவை என்னுடைய உயிராக, ஸ்வ உயிராக இல்லை என்பதுதான். என்னுடைய உயிர்தன்மை, மற்ற எந்த உயிரிலும் இல்லை ஆகையால் என்னுடைய நோக்கில் என்னைத்தவிர மற்ற எல்லா உயிர்களும் ஆகமத்தில் அஜீவ தத்துவம்** என்று சொல்லப்படுகிறது.

என்னுடைய ஜீவ தத்துவ நோக்கில் மற்ற எல்லா உயிர்களும்-அம்மா, அப்பா, மகன், மகள், சொந்தபந்தங்கள், பகவான், குரு மற்றும் பிற எல்லா உயிர்களும் அஜீவ தத்துவத்தில் அடங்குகின்றன. அரஹந்தர், சித்தர்களை அஜீவ தத்துவம் என்று சொன்ன உடனே மக்களுக்கு தொண்டை அடைக்கிறது, பலருக்கு பதட்டம் உண்டாகிறது, இவ்வாறு சொல்வதில் அவர்களுக்கு விருப்பம் இல்லாத தோடல்லாமல் அவ்வாறு சொல்லக்கூட அவர்களுக்கு வாய் வர மறுக்கிறது.

ஷோலாபூரில் இந்திரத்வஜ விதானத்துடன் ஒரு தத்துவப்பயிற்சி முகாம் நடந்தது. அங்கு நடந்த ஒரு சம்பவத்தை பற்றி இப்போது சொல்கிறேன். நான் சஹடாலாவில் இரண்டாம் அத்யாயத்தில் அஜீவ தத்துவத்தின் ஸ்வரூபம் பற்றி வகுப்பு நடத்தினேன். அப்போது அரஹந்தர், சித்தர்கள் கூட அஜீவ தத்துவத்தில் வருகிறார்கள் என்று நான் சொல்லக் கேட்டவுடனே, பல மகளிர் எதிர்ப்பு தெரிவித்தார்கள், வகுப்பில் பதட்டம் ஏற்பட்டது. மீண்டும் மீண்டும் எந்த நோக்கில் அப்படி சொல்லப்படுகிறது என்று புரியும்படி விரிவாக எடுத்துச் சொல்லியும் கூட, ஒரு பெண்மணி **அஹோ! அவ்வாறு சொல்வதை, அரஹந்தர், சித்தர்கள் அஜீவ தத்துவம் என்று சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, அவ்வாறு அவர்களை கூறுவது எனக்கு அருவருப்பாக இருக்கிறது** என்று கூறினார்கள். மற்ற எல்லா மகளிரும் **ஆமாம், ஆமாம்** என்று பெரும் கோஷமிட்டனர். இப்போது அவர்களுக்கு அரஹந்தர், சித்தர்களை அஜீவ தத்துவம் என்று சொல்லக் கூட மிகவும் கஷ்டமாக இருக்கும்போது அவர்கள் அந்த உண்மையை எப்போது அவ்வாறே நம்பத் தயாராகப் போகிறார்கள்?

அஜீவ தத்துவம் மற்றும் எல்லா ஏழு தத்துவங்களின் ஸ்வரூபம் பற்றியும் முன்னரே நாம் பார்த்திருக்கிறோம், ஆகையால் மீண்டும் அவைகளைப் பற்றி எழுத அவசியமில்லை. நீங்கள் உங்களை அதாவது **ஸ்வ-**வை அடையாளம் காணுங்கள் என்று கூறுகிறீர்கள். நம்மை நாம் எவ்வாறு அடையாளம் காண வேண்டும்? என்பதுதான் இப்போதய உங்கள் கேள்வியாகும். ஆசார்ய குந்தகுந்தர் இந்த கேள்விக்கு பதில் கொடுத்திருக்கிறார். அவர் கூறுகிறார், **அரே! இந்த ஆத்மா என்னவோ ஆபால் கோபால் அதாவது சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை**

எல்லோருக்கும் எப்போதும் அனுபவத்திற்கு வந்து கொண்டுதான் இருக்கிறது!. ஆசாரியர் என்ன சொல்கிறார்? என்று நீங்கள் ஆசர்யப் படுகிறீர்கள் அல்லவா? நம்முடைய இந்த அற்புதமான ஆத்ம அனுபவம் பெரும் இரகசியத்தை பற்றி அடுத்த கடிதத்தில் சர்ச்சை செய்யலாம்.

ஜெய் ஜினேந்திரா!

அன்புடன்,
உங்கள் அம்மா.

கடிதம்-27 26-2-1996

ஏழு தத்துவங்கள்-ஆத்மானுபூதி

அன்பு ரீனா,மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நீங்கள் இருவரும் ஆரவத்துடனும், ஒரு வகையான பதட்டத்துடனும் இந்த கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக கூறினீர்கள். சஸ்த்திர ஸ்வாத்யாயம் செய்வதன் பிரயோஜமே வீதராக-விருப்பு, வெறுப்பற்ற தன்மையை அதாவது ஆத்ம அனுபவத்தை பெருவதற்கேயாகும். முக்தி அதாவது பிறப்பு, இறப்பு இன்றி அளவில்லாத ஆனந்த நிலையை அடைய விரும்பும் உயிர்களுக்கு ஆத்மானுபவம் பெருவதில் தீவிர ஆர்வம் இருக்கவே செய்கிறது. அவர்களின் இந்த தீவிர ஆர்வமே அவர்களின் அறிவின் செயலை-உபயோகத்தை ஸ்வ ஆத்மாவின் பக்கம் கொண்டு செல்ல உதவியாக இருக்கிறது.

ஏழு தத்துவங்களில் ஒரே சைதன்ய மய ஜோதிவடிவ ஆத்மாவே பிரகாசமானதாக இருக்கிறது, மேலும் அது தீர்கமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது, இடைவிடாது எல்லா உயிர்களின் அனுபவத்திற்கும் வந்த வண்ணம் இருக்கிறது, என்று ஆசார்ய அமிர்தசந்திரர் கூறியிருக்கிறார். பிறகு அந்த ஆத்மா நம்முடைய அனுபவத்திற்கு மட்டும் ஏன் வரவில்லை? என்ற கேள்வி எழுகிறது.

இங்கே பாருங்கள், அந்த ஆத்மா என்று கூறிக்கொண்டு நாம் நம்மை தனியாகவும் ஆத்மாவை, வேறு ஏதோ ஒன்றாகவும் நம் எண்ணத்தில், நம்பிக்கையில் கொண்டிருக்கிறோம். இந்த அறியாமையிலிருந்து விலக வேண்டுமானால் அடிக்கடி சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்ய வேண்டியதும், ஸ்வாத்யாயத்தில் தெரிந்து கொண்டதை அவ்வப்போது சிந்திப்பதும் அவசியமாகும். திரவியம், குணம், பர்யாயம், பொது மற்றும் சிறப்பு குணங்கள், ஆறு திரவியங்களின் இயல்பு-ஸ்வரூபம், ஏழு தத்துவங்களின் இயல்பு-ஸ்வரூபம் முதலியவைகளைப் பற்றி இப்போது உங்களுக்கு ஓரளவு தெளிவு வந்திருக்கிறது. எனவே நீங்கள் மேலும் சாஸ்த்திர மற்றும் தர்ம சம்பந்தமான நூல்களை நீங்களாகவே படித்துத் தெரிந்துகொள்ள முயல வேண்டும். எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் தத்துவ சர்ச்சை, ஆன்மீக கல்வி சம்பந்தமான முகாம்கள், கருத்தரங்குகள், பிரவசனங்கள் ஆகியவைகளில் பங்கு கொண்டு மேலும் ஆழமாக தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளில் பங்கு பெருவதால் நமக்கு எதுவும் புரியப்போவதில்லை என்று அலட்சியமும், கவலையும் கொள்ள வேண்டாம். நீங்கள் இன்னும் நான்கு இல்லாமைகள்-அபாவங்கள், ஆறு காரணிகள், நிமித்த-உபாதானம், நிச்சயம்-வியவஹாரம், லட்சணம்-லட்சணாபாசம், கர்மம், குணஸ்தானம் முதலிய பல விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் இருக்கிறது. இவைகளையும் தெரிந்து கொண்ட பிறகுதான் பொருளின் இயல்பை-வஸ்த்து ஸ்வரூபத்தை உறுதி செய்வது மேலும் சுலபமாக இருக்கம்.

ஏழு தத்துவங்களில் நான் தனியானவன் என்பதை மட்டும் தெரிந்து கொண்டு **ஸ்வ-**வை பற்றிய புரிந்து கொள்ளுதல் முடியாத ஒன்றாகும். ஆகையால் இப்போது இந்த **ஸ்வ** பற்றி மேலும் அதிகமாக தெரிந்து கொள்ள முயற்சி செய்யலாம்.

நான் ஞானதர்சன-சேத்ன மயமாக இருக்கிறேன், மேலும் என்னுடைய செயல் தெரிந்து கொள்வது, தெரிந்து கொள்வது, தெரிந்து கொள்வது என்பது இடைவிடாது ஒவ்வொரு சமயமும் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. இரவும், பகலும் இந்த அறிதல் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இந்த அறிதல் காரியத்தை நான், என்னுடைய அறிவின்-ஞானத்தின்,

ஞானகுணத்தின் அந்தசமய பர்யாயத்தின் மூலம் செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் நம்முடைய முழுகவனமும், எண்ணமும், லட்சியமும் தெரிந்து கொள்ளப்படும் பொருளின் மேல், அதாவது ஞேய பதார்த்தங்களின் மேல் அதாவது எந்த பொருள் பாரக்கப்படுகிறதோ அந்த பொருளின் மேல் மட்டுமே நிலை கொண்டிருக்கிறது. யார் அறிகிறாரோ அவர் ஞாயக்-பார்ப்பவர். எது அறியப்படுகிறதோ அது ஞ்ஞேய-பார்க்கப்படும் வஸ்த்து.

இப்போது நான் எழுதும் சமயத்தில் எனக்கு காகிதம் தெரிகிறது, அந்த காகிதத்தின் நிலைத்த தன்மையில் என்னுடைய முழு கவனமும் இருக்கிறது, மின்விசிறியிலிருந்து குளிர்ந்த காற்று வீசுகிறது என்பதையும் அறிகிறேன், போக்குவரத்தின் இரைச்சல் கூட என் அறிவுக்கு வருகிறது, அருகில் உள்ள வண்ணம் பூசப்படும் வீட்டிலிருந்து வர்ணத்தின் நாற்றம் வருவது கூட எனக்கு தெரிகிறது. இந்த எல்லா விஷயங்களும் அதாவது ஞேயங்களும், அறியப்படும் பொருள்களும் என்னுடைய அறிவில் வருகின்றன. இந்த எல்லா விஷயங்களும் எனக்கு தெரிந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் இந்த எல்லாவற்றையும் தெரிந்து கொள்வது நான். நான் என்னுடைய ஞானத்தின் வழியாக இந்த எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறேன் என்ற அனுபவம்-என்ற அறிவு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயமும் நிகழ்கிறது ஆனாலும் கூட இன்றுவரை நாம் அதன் பக்கம் எப்போதும் கவனம் செலுத்தியதே யில்லை.

புத்தகத்தில் எழுத்துக்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன ஆனால் புத்தகத்தில் ஞான குணம் இல்லாததால் அந்த எழுத்துக்கள் பற்றிய அறிவு அந்த புத்தகத்திற்கு வருவதில்லை, மற்றும் அந்த எழுத்துக்கள் மூலம் எந்த பொருள் பற்றி விளக்கிச் சொல்லப்படுகிறதோ அது பற்றிய அறிவு கூட புத்தகத்திற்கு வருவதில்லை. நான் ஞானமயமாக இருக்கிறேன் எனவே அந்த ஞான குணத்தின் மூலம் பிற விஷயங்களை அறிந்து கொள்கிறேன். புத்தகத்தில் உள்ள எழுத்துகளை மற்றும் அதன் பொருளை பற்றியும் அறிந்து கொள்பவன் நான். ஞாயக்-அறிபவன் நானாக இருக்கிறேன். மற்றும் அவைகளை நான் தெரிந்து கொள்கிறேன் ஆகையால் அவைகள் எல்லாம் ஞ்ஞேயவாகும், என்னால் அறியப்படும் பொருள்களாகும்.

பிற அறியப்படும் பொருள்களை அறிந்து கொள்வதில் என்னவோ நாம் மிகவும் புத்திசாலிகளாகவே இருக்கிறோம். கேள்வி என்னவென்றால் **ஸ்வ-**வை அதாவது அறிபவராக இருக்கும் **தன்னை எப்போதாவது அறிந்தோமா?** என்பதுதான். ஒவ்வொரு சமயமும் நம்முடைய அறியும் காரியம் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது அது அறியப்படும் பொருள்களை மட்டுமே பிரபலப் படுத்துவதில்லை, அறிபவரையும் கூட பிரபலப் படுத்துகிறது.

மோனா, நீ எங்களை எல்லோரா குகைகளை பார்க்க கூட்டிக் கொண்டு போனாய். அப்போது அங்கு குகைகளில் இருள் சூழ்ந்திருத்த காரணத்தால் எதுவுமே தெரியவில்லை. அந்த சமயத்தில் வழி காட்டுபவர்-guide வந்து விளக்கை போட்டவுடன் அங்கு இருந்த சிற்பங்கள், உருவங்கள் முதலிய எல்லாவற்றையும் நம்மால் பார்க்க முடிந்தது. அப்போது எல்லோரும் வா! வா!! என்று சிற்பங்களின் மற்றும் உருவங்களின் அழகை பாராட்ட ஆரம்பித்தார்கள். அந்த சிற்பங்களும், உருவங்களும் முன்னரே அங்கு இருந்தன, ஆனால் வெளிச்சம் வந்தவுடன் தான் அவைகளின் அழகை நம்மால் பார்க்க முடிந்தது. அந்த சிற்பங்கள் அவைகளின் அழகை மட்டுமே பிரபலப்படுத்தினதோடு மட்டுமல்லாமல் அதனுடன் அந்த பிரகாசத்தையும்-வெளிச்சத்தையும்கூட பிரபலம் செய்யவில்லையா என்ன? அதாவது அந்த சிற்பங்கள் வெளிச்சம் இருப்பதை கூட நமக்கு தெரியப்படுத்துகின்றன அல்லவா! ஆனால் அந்த வெளிச்சத்தின் பக்கம் நம்முடைய கவனம் செல்லவே யில்லை.

சுத்தமாகவும், நிலையாகவும் இருக்கும் தண்ணீரில் தெரியும் பிரதிபிம்பம் தண்ணீரின் தூய்மையை வெளிப்படுத்துகிறது. நிலைகண்ணாடியில் தெரியும் பிரதிபிம்பம் நிலைகண்ணாடியின் தூய்மையை பிரபலப்படுத்துகிறது. நாம் சுவற்றின் முன் நிற்காமல், கண்ணாடியின் முன் நின்று நம்முடைய பிரதிபிம்பத்தை பார்க்கிறோம்; ஏனென்றால் பொருள்களின் பிரதிபிம்பத்தை காட்டும் குணம் கண்ணாடியில் தான் இருக்கிறது, சுவற்றில் இல்லை. கண்ணாடியில் புத்கலத்தின் வண்ணம் மற்றும் வடிவம் மட்டுமே பிரதிபலிக்கிறது. ஆனால் அறிவு கண்ணாடியின் சிறப்பு என்னவென்றால் உருவப் பொருள்களின் ஸ்பர்ச, ரச, கந்த-வாசனை, வர்ணம், சப்தம் முதலிவைகளை ஜொலிக்கச் செய்வதோடு மட்டுமல்லாமல், அருவ பொருள்கள்-புத்கலத்தை தவிர மற்ற ஐந்து திரவியங்கள், சூட்சமான கர்மம் முதலான பொருள்கள், தொலைவில் உள்ள பொருள்கள், அசங்யாத தீப சமுத்திரங்கள், ஸ்வர்கம், நரகம் முதலியன மற்றும் எல்லா திரவியங்களின் கடந்த, நிகழ், எதிர்கால பர்யாயங்கள் மேலும் ஸ்வயம் தன்னுடைய அனந்த குண பர்யாயங்கள் ஆகிய இந்த எல்லாவற்றையும் ஒருங்கே ஒரே சமயத்தில் தெரிந்து கொள்ளும் திறைமை அந்த அறிவுக் கண்ணாடியில் இருக்கிறது.

அறிவு தன்னையும் பிற பொருள்களையும் பிரித்தறியும் தன்மை கொண்டது என்பதே இதன் பொருளாகும். அதாவது பல்வேறு விஷயங்களை அவைகளின் அறிகுறிகளை-அடையாளங்களைக் கொண்டு வெவ்வேறாக அடையாளம் கணுதல் அறிவின் சாமர்த்தியமாகும். அறிவு ஸ்வவை-ஆத்மாவை அதாவது தன்னை வெளிப்படுத்தும் தெளிவான அறிகுறியாகும்-அடையாளமாகும்-லட்சணமாகும்; ஆனால் என்னால் பார்த்தல் நிகழவில்லை, அவைகள் எல்லாம் பிற பொருள்களால் நிகழ்கின்றன என்ற எண்ணமே நம்மிடம் இருக்கிறது. என்ன சொல்கிறேன் என்று புரிகிறதா? நாம் இதுவரை கண், மூக்கு, காது முதலிய உறுப்புகளே-இந்திரியங்கள் அறியும் செயலை செய்கின்றன, உடலுக்கு அறிவு இருக்கிறது என்று நம்பிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் இப்போது இத்தனை நாட்கள் செய்த தத்துவப் பயிற்சியினால் உடல் புத்கலத்தால் ஆனது ஏனென்றால் அதில் ஸ்பர்ச, ரச, கந்த, வர்ணம் முதலிய புத்கலத்தினுடைய குணங்களே இருக்கின்றன, ஆனால் ஞானம் என்ற பெயர் கொண்ட குணம் உடலில் இல்லவே யில்லை என்ற விஷயம் தெரிய வருகிறது. என்னுடைய ஞானத்தின் லட்சணம் அதாவது என் அறியும் தன்மை எதில் இருக்கிறதோ அதுவே நான்-ஸ்வ என்ற தெளிவு பெருகிறோம்.

ஒவ்வொரு சமயத்திலும் எது அறியப்படுகிறதோ அது ஞேயம், எது அறிகிறதோ அது ஞாதா, ஞானத்தின் மூலம் அறிகிறோம் ஆகையால் ஞானம்-அறிவு ஒரு கருவி-சாதனம், மேலும் அறியும் செயல் என்ற நிகழ்வு என நான்கு விஷயங்கள் அறியும்போது இருக்கின்றன. அதாவது நான்(1), ஞானத்தின் மூலம்(2), ஞ்ஞேய பொருள்களை(3) அறிகிறேன்(4) என்ற நான்கு விஷயங்களும் நம்முடைய அறிவுக்கு வருகிறது, நம் அனுபவத்திற்கு வருகிறது. அதாவது எங்கெங்கு அறியும் செயல் நிகழ்கிறதோ அங்கங்கெல்லாம் ஞேயம்-அறியப்படும் பொருள், ஞாதா-அறிபவர், ஞானம்-அறிவு, அறியும் காரியம்-அறியும் செயல் இந்த நான்கும் நம் எண்ணத்தில் வருகிறது. அறியும் பர்யாயம் இடைவிடாது நிகழ்து கொண்டிருக்கிறது ஆகையால் இந்த நான்கு விஷயங்களும் இடைவிடாது நமது எண்ணத்தில் வந்த வண்ணம் இருக்கிறது.

இந்த நான்கு விஷயங்களும் இருந்த போதிலும்கூட, மேலும் இந்த நான்கும் நம்முடைய அறிவில் வந்த பிறகும் கூட, நம்முடைய முழு கவனமும் பார்க்கப்படும் பொருளின்-ஞேயத்தின் மேல் மட்டுமே செல்கிறது. அதாவது பார்க்கப்படும் பொருளின் மேல் 100% கவனமும் செல்கிறது. தொலைகாட்சி-TV பார்க்கும்போது தொலைகாட்சி-TV பார்க்கப்படும் பொருள்-ஞேயம், யார் பார்க்கிறாரோ அவர் பார்ப்பவர்-ஞாதா, எதன் மூலம்

பார்க்கப்படுகிறதோ அது அறிவு-ஞானம், பார்த்தல் அது காரியம் என நான்கு விஷயங்களும் நம் அனுபவத்திற்கு வருகிறது. அப்படி வந்த பிறகும் கூட, யாரிடமாவது யார் பார்க்கிறாரோ அவரே ஆத்மா, அதுவே நீங்கள் என்று கூறினால் அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில் இதுவாகத்தான் இருக்கும் இந்த ஆத்மா கீத்மா எல்லாம் எங்களுக்கு தெரியாது, அப்படி ஏதாவது இருந்தால் ஏன் அது எனக்கு வெளிப்படையாக தெரியவில்லை? நீங்கள் கூறுவது உண்மையானால் ஏதாவது ஒரு ஆத்மா இருக்கலாம்.

ஸ்வ-பர என பிரித்தறிதலும், ஆத்மானுபவமும் நேரடியாக அவரவரே செய்வதால் நிகழும் விஷயமாகும், நேரடியாக என்றால் practical-லாக அதாவது சுயமாகவே சோதனை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். நான், நீங்கள் எல்லோரும் அறியும் செயலை இரவும் பகலும் செய்து கொண்டுதான் இருக்கிறோம். இந்த பார்க்கும் காரியம் நிகழ்ந்து கொண்டு இருக்கும்போதே பார்த்தலில் நிகழும் நான்கு விதமான பகுப்பாய்வை நாம் நம் மனதில் செய்து கொண்டே இருக்க வேண்டும். சாப்பிடும் போதும், சமையல் செய்யும் போதும், TV பார்க்கும்போதும், ஒவ்வொரு சமயமும் எந்த அறியும் காரியம் நிகழ்கிறதோ அதில் அறிவது நான், என் அறிவின் மூலம் அறிகிறேன், எது என் அறிவில் வருகிறதோ அது ஞேயம்-அறியப்படும் பொருள் என மனதில் பகுத்து அறிதலும் நிகழ வேண்டும். அவ்வாறு பயிற்சி-practice செய்ய வேண்டும். அடிக்கடி இப்படி பயிற்சி செய்வதால் ஸ்வ பக்கம் உள்நோக்கி பார்க்க, தன்பக்கம் உபயோகத்தை கொண்டு செல்ல-திருப்ப practice-பழக்கம் உண்டாகும். தன்னை தானே பார்க்கும் கலை அதாவது தன் அறிவை உட்கிரகித்து தன்மயமாதல் நிகழும்.

அவ்வளவு தானே, இதைத்தான் செய்ய வேண்டுமா? அப்படி செய்தால் நமக்கு பிரித்தறிதல்-பேதவிஞ்ஞான் மற்றும் ஆத்மானுபூதி நிகழ்ந்து விடுமா? இதில் என்ன பெரிய விஷயம் இருக்கிறது? அறிபவன் நான், அறியப்படுபவை எல்லாம் பிற! அவ்வளவு தான், முடிந்தது நம் காரியம்! என்று நீங்கள் சொல்லலாம்.

ஆஹா! அடி பயித்தியமே! கொஞ்சம் கேள், சர்வஞ்ஞ பகவான் கூட தன்னையும் மற்றும் சம்பூரண-பிரபஞ்சத்திலுள்ள எல்லா பிறவையும் அறிகிறார், ஆனால் நாம் அறிவதற்கும், சர்வஞ்ஞர் அறிவதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருந்தாலும், சர்வஞ்ஞரிடத்தில் ஒரு அணுவளவுகூட மோஹ, ராக, த்வேஷங்கள்-ஆசை, வெகுளி, மயக்கங்கள் இருப்பதில்லை, அவர் பூரண வீதராகியாக-ஆசையை முழுமையாக வென்றவராக இருக்கிறார். அதனால் அவைகளை பார்ப்பதால் அவரிடம் வேறு எந்த பாதிப்பும் உண்டாவதில்லை. ஆனால் சராகியாகிய நாம், ஞேய வஸ்த்துக்களை அதாவது அறியப்படும் பொருள்களை பார்க்கும் போதே, நம் அறிவுடன் ஆசை, வெகுளி, மயக்கங்களும் கலந்தே நிகழ்கின்றன. அதனால் நாம் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிறோம்.

அறியப்படுபம் வஸ்த்துவை அறியும்போது, நான் அறிபவன் மட்டுமே என்றும் நம்மால் அந்த அறியப் படும் பொருளே நான் என்றோ, அல்லது அந்த அறியும் பொருள் என்னுடையது என்றோ, நான் அந்த அறியும் பொருளை செய்பவன் அல்லது அதில் மாற்றங்களை கொண்டு வருபவன் என்றோ அல்லது அந்த பொருளை அனுபவிப்பவன் என்றோ விபரீத நம்பிக்கைகள் கொள்ளும் காரணத்தால், அறிதல் சம்பந்தமான அந்த அறிவு கூட சிதைந்து கொண்டிருக்கிறது. உடல் அறிப்படும் பொருள், ஆனால் அந்த உடலையே நான் என்று இன்றுவரை இந்த உயிர் நம்பிக் கொண்டிருக்கிறது, உடலின் மேல் ஏகத்துவபுத்தி கொண்டிருக்கிறது. பணம், சொத்துகள் எல்லாம் அறியப்படும் பொருள்கள், ஆனால் அவை எல்லாம் என்னுடையது என்று நம்பிக்கொண்டு அதன்மேல் மமத்துவபுத்தி கொண்டிருக்கிறது. குழந்தைகள் பெரியவராகும் போதும், பணமும், செல்வமும் சேரும்போதும், அவைகள் அறியப் படுபவைகளாகவே இருந்தாலும் இந்த உயிர், நான்

குழந்தைகளை வளர்ந்தேன், நான் பணம் சம்பாதித்தேன் என கர்த்ருத்வபுத்தி கொண்டிருக்கிறது. அதேபோல பிற பொருள்கள் தம்முடன் சேரும்போது தான் சுகமடைந்ததாகவும், பிற பொருள் தன்னை விட்டு விலகும்போது தான் துக்கமடைந்ததாகவும் நம்பி பிற பொருள்களினால் சுக துக்கங்களை அனுபவிப்பவனாக போக்த்ருத்துவபுத்தி கொண்டிருக்கிறது. இவ்வாறு ஏகத்வ, மமத்வ, கர்த்ருத்வ, போக்த்ருத்துவ நம்பிக்கைகளை உடைய காரணத்தால், இந்த உயிரில் அறியும் காரியத்தை செய்யும் அறிவுகூட விபரீதமாக இருந்து கொண்டிருக்கிறது.

பிற பொருள்கள் என்னுடையதே என்று நம்புவதோடு மட்டுமே இந்த உயிர் நின்று விடவில்லை, மேலும் அந்த பிற பொருள்களை அடைய வேண்டும் என்ற ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகள் கூட அதன் அறிவில் உண்டாவதால் ஆசை, வெகுளி, மயக்கம் கூட என்னுடைய இயல்பு-என்னுடைய ஸ்வபாவம் என்றும் இந்த உயிர் நம்புகிறது. ஆனால் ஆசை, வெகுளி, மயக்கம் என்பது ஆஸ்ரவ மற்றும் பந்தத்தை உண்டு பண்ணும் விகார உணர்வுகளாகும்.

இதன் பொருள் என்னவென்றால் அறிவில் பார்க்கப்படும் பிற பொருள்கள் மட்டுமே அறியப்படவில்லை, ஸ்வ-ஆத்மா அதாவது ஞாதா- பார்ப்பவர் கூட அறியப்படுகிறது, பிற பொருள்களும் அறியப்படுகின்றன, ஆன்மாவில் நிகழும் விகார மற்றும் விகாரமில்லாத உணர்வுகள் கூட அறியப்படுகின்றன, பாப புண்ணியங்கள் கூட அறியப்படுகின்றன. **இந்த எல்லா பதார்த்தங்களும் அறிவில் வந்த பிறகும்கூட நான் என்ற தன்னை மட்டுமே முழு கவனத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தால், பிற எல்லா விஷயங்களில் நான், என்னுடையது, என்னால் செய்யப்பட்டது, என்னால் அனுபவிக்கப்படுவது முதாலன தொந்தரவு செய்யும் எண்ணங்கள் நம்மிடம் தோன்றாது; அப்படி செய்வதால் தானாகவே ஸ்வானுபூதி-ஆத்மானுபவம் தோன்றும்.** பிற பொருள்கள் அல்லது நம்மிலேயே உண்டாகும் விருப்பு, வெறுப்பு-ராக, த்வேஷம் இவைகளை அறிய வேண்டுமே ஒழிய, அறியப்படும் பிற பொருள்களின் மேல் நம் சிந்தனையை செலுத்தாமல், தன்னையும், பிறவற்றையும் அறியும் நம் ஆன்மாவின் பக்கம் சிந்தனையை நிலைநிறுத்த வேண்டும். அப்படி செய்தால் பிற பொருள்களை அறிவதால் நம்மில் எந்த விகார மாற்றமும் அதாவது ஆஸ்ரவ-பந்த உணர்வுகளும் ஏற்படாது. ஆனால் அந்த அறியப்பட்ட பிற பொருள்கள் நிஜமாக என்னுடையதே என்று நம்புவதாலேயே மூடநம்பிக்கை உண்டாகிறது. அவைகளை பிற பொருள்களாகவே அறிந்து, நம்புவதாலும் மற்றும் தான் மட்டுமே நிஜம் என்று அறிந்து, நம்புவதாலும் நமக்கு லாபமே உண்டாகும்.

இந்த உயிருக்கு பிற பொருள்களை அதாவது பிற அறியப்படும் பொருள்களை அறியும்போது விருப்பு, வெறுப்பு உண்டாகிறது ஆகையால் தான், பிற என்று பேதவிஞ்ஞானம் செய்யும்போது அதாவது பிரித்தறியும் போது விருப்பு வெறுப்புகள் பிறவற்றின் பக்கம் சேர்ந்து விடுகிறது. அதனால் அதை புத்கலம் என்று சொல்லப் படுகிறது, பிற பொருள் என்று சொல்லப் படுகிறது, பிற உணர்வு என்று சொல்லப் படுகிறது, சைதன்யம் விகாரம் அடையும்போது அதைகூட ஜடம் என்று சொல்லப் படுகிறது. நாம் நம்முடைய சுத்த ஸ்வரூபத்தை அனுபவம் செய்ய வேண்டுமாகையால், விருப்பு வெறுப்பையும் புத்கலம்-ஜடம் என்று கூறி அவகைகளிலிருந்து நம்முடைய ஸ்வாமித்வம் மீட்டெடுக்கப்படுகிறது. நோக்கத்தின் எதிர்பார்ப்புகள் சரியாக பரிசீலிக்கப்பட வேண்டும். பையனுக்கு திருமணமான பிறகு பையன் தன் மனைவிக்கு அடிமையானால், அப்போது அம்மா பையன் இப்போது மருமகளினுடையவனாக ஆகிவிட்டான் என்று கூறுகிறார்கள். பையன் அம்மாவினுடையவனா அல்லது மருமகளுடையவனா? **அதுபோல விருப்பு வெறுப்புகளை புத்கலம் என்று சொல்வது நம்பிக்கையில்-சிரத்தையில் மட்டுமே எடுத்துக் கொள்ள**

வேண்டியதாகும். விருப்பு வெறுப்பு உயிரினுடையது என்றே அறிவில் வருகிறது, அந்த விகார அவஸ்தை உயிரினுடையதே என்று அறிவதில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் ஹுக்கும்சந் ஃபாரில் எழுதிய **சமயசார அனுசீலன்** என்ற புத்தகம் பாகம்-1, பக்கம் 208, 209 தில் கீழ்கண்டவாறு இதைப்பற்றி விரிவாக விளக்கியிருப்பதை படியுங்கள். அவர் கூறுகிறார், **அனுபவ வடிவ பகவான் ஆத்மா இடைவிடாது உங்களுடைய அறிவில் வந்துகொண்டு இருந்தாலும் கூட அதையே உண்மையில் நான் என்று நீங்கள் அறியவில்லை, அதுவே நான் என்று அதை அடையாளம் காணவில்லை. ஆனால் அதே சமயத்தில் அறிவில் வரும் விருப்பு, வெறுப்புகளையே நான் என்று அடையாளம் காண்கின்றீர்கள், பிற பொருள்களையே நீங்கள் என்று உறுதி படுத்திக் கொள்கிறீர்கள்; இதனால் தான் உங்களுக்கு உங்களுடைய ஆத்மா இருப்பதே தெரியாமலிருக்கிறது. உங்களுடைய இந்த தவறின் காரணத்தால் நீங்கள் பிறவி சுழற்சியில் சிக்கிக்கொண்டு அலைகிறீர்கள். நீங்கள் இந்த தவற்றை திருத்திக் கொண்டால், நீங்கள் பிறவி சுழற்சியிலிருந்து விடுபட-முக்தியடைய அதிக காலம் பிடிக்காது.**

அதே பக்கத்தில் ஸ்வாமிஜீ இவ்வாறு கூறுகிறார், **அனுபூதி வடிவ பகவான் ஆத்மா எப்போதும் உள்ளேயே அமர்ந்திருக்கிறார், இடைவிடாது அனுபவத்திற்குக் கூட வந்து கொண்டிருக்கிறார்; ஆனால் இதில் குறை என்னவென்றால், எந்த அறியம் வடிவில் இருந்து அறிவு வந்து கொண்டிருக்கிறதோ, அதுவே நான் என்ற அப்படிப்பட்ட வெளிப்படையான, தெளிவான ஆத்ம அறிவு இதுவரை நம்மிடம் எழவில்லை.**

பார்தீர்களா! ஞானிகளுக்கு நம்மேல் எந்த அளவு அனந்த உபகாரம் இருகிறது! அவர்கள் பல ஆண்டுகள் செய்த தத்துவப் பயிற்சியின் மூலம் நம் ஆன்மா பற்றிய இந்த விஷயத்தை அவர்கள் மிகவும் எளிமையாக நம்மால் புரிந்துக்கொள்ளும் படியான சரளமான மொழியில் நம் முன்னே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

நம்மை அறிகிறோமோ அல்லது பிறவற்றை அறிகிறோமோ, நாம் அறிவதைத்தானே செய்து கொண்டிருக்கிறோம், இதில் ஆபத்து அல்லது இழப்பு என்ன இருக்கிறது? மேலும் "ஸ்வ" வை அறிவதால் மட்டுமே என்ன லாபம் வரப்போகிறது? என்று நீங்கள் கேட்கலாம்.

நீங்கள் கேட்டது மிகவும் நுட்பமான மற்றும் முக்கியமாக ஜின தர்மத்தின் மர்மத்தை பற்றிய கேள்வியாகும். ஞானம், தர்சனம், சுகம், வீர்யம் முதலான அனந்த குணங்களின் ஒரே பிண்டமாக ஆத்மா இருக்கிறது. எங்கு ஞான குணம் இருக்கிறதோ அங்கேயே அதிலிருந்து பிரிக்க முடியாத-அவினாபாவி சம்பந்தம் இருப்பதால் மற்ற எல்லா அனந்த குணங்களும் அங்கேயே in the same space இருக்கின்றன. ஞானம் எப்போது ஸ்வ-வை அதாவது ஸ்வய ஆத்மாவை அறிகிறதோ அந்த சமயத்தில் ஆத்மாவின் எல்லா அனந்த குணங்களின் அனுபவமும்-வேதனையும் ஸவ-வுக்கே உண்டாகிறது, இந்த அனுபவமே **அதீந்திரிய ஆனந்த மாகும்,** புலன்கள் சாராத ஆனந்த அனுபவ மாகும். அதீந்திரிய அறிவு, அதீந்திரிய சுகத்துடன் பொருந்தி யிருக்கிறது, இரண்டும் இணைபிரியாமல் இருப்பதால் இரண்டும் ஒன்றாகவே அனுபவத்திற்கு வருகின்றன. ஞானமும், ஆனந்தமும் பிரிக்க முடியாததாக இருக்கின்றன. சாஸ்திரங்களில் வெவ்வேறு குணங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்தந்த குறிப்பிட்ட குணங்களின் நோக்கில் ஆத்மாவை **சித்ஃகண்-சைதன்ய கண வடிவம், விஞ்ஞானஃகண், ஆனந்தஃகண், வீர்யஃகண்** என்று சொல்லப் படுகிறது. இந்த அதீந்திரிய சுகம் ஸ்வாதீனமானது-பிற எதன் உதவியையும் சாராமல் தன்னையே சார்ந்திருப்பது, நிரபேக்ஷா-எந்த நோக்கமும் இல்லாதது, பாதாரஹித்-எந்த வலியும் இல்லாதது, நிராகுல்- எந்த கஷ்டமும் இல்லாதது.

நாம் பிறவற்றை அறியும்போது கூட நமக்கு சுகம் கிடைக்கிறது அல்லவா? பணம் சம்பாதிக்கும்போது, TV பார்க்கும் போது, இனிப்புகள் உண்ணும்போது நமக்கு சுகமாகத்தானே இருக்கிறது? என்று நீங்கள் கேட்கலாம். மகளே! இந்த இந்திரிய சுகம் பிறவற்றை சார்ந்து இருக்கிறது, பிற பொருள்களின் அவசியம் அங்கு இருக்கவே செய்கிறது. இந்திரியங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும், பணம்-செல்வம், TV இருப்பது அவசியமாகிறது, மின்சாரம் தடையில்லாமல் இருக்க வேண்டியது அவசியமாகிறது. சரியா, இவை எல்லாம் இருந்தாலும் கூட உடலில் நோய் அல்லது வேதனை இருந்தால் இந்த எல்லா விஷயங்களாலும் சுகம் அனுபவிக்க முடியாமல் போகிறது, இந்த சுகம் எதுவரை இருக்கும் என்று உறுதியாக சொல்ல முடியாதாக இருக்கிறது, இவ்வாறு இந்த சுகம் பல கஷ்டங்களுடன் கூடியதாக இருக்கிறது. இந்த சுகத்தை அடையவும், தக்கவைத்துக் கொள்ளவும் கவலை, பயம் மற்றும் மன அழுத்தம்-tension ஆகிய கஷ்டங்கள் இருக்கவே செய்கின்றன. **அப்படி இருக்கும்போது இதை சுகம் என்று எப்படிச் சொல்ல முடியும்? இது சுகாபாசமே யாகும்-கற்பனையான சுகமாகும், இதில் கொஞ்சம்கூட உண்மையான சுகம் இல்லை, துக்கமேயாகும்.**

ஆத்மாவை அறிய வேண்டுமென்றால், அதனுடைய ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால், ஆத்மாவை எங்கும் தேட ஓட வேண்டிய அவசியமில்லை. கோயிலில், தீர்த்த ஷேத்ரத்தில் அது கிடைப்பதில்லை. நானே ஸ்வயம் ஆத்மா வாவேன். எந்த ஞானம் என்ற சாதனத்தின் வழி அதை அறிய வேண்டுமோ அந்த ஞானமே என்னுடைய இயல்பாகும். நான் ஸ்வயம் ஞான மயமாக இருக்கிறேன். மேலும் எந்த செயலின் மூலம் அறிய வேண்டுமோ அந்த அறியும் செயல் இடைவிடாது என்னில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இது ஒரு எளிய செயலாகும். எந்த ஞானம் பிற பொருளின் பக்கம்-பர சன்முக் சென்று கொண்டு இருக்கிறதோ, அந்த ஞானத்தை தன் பக்கம்-ஸ்வ சன்முக் திருப்ப வேண்டும். உண்மையில் சொல்ல வேண்டுமென்றால் **திருப்ப வேண்டும்** என்ற சொல் கூட தேவையற்றதாகும். **"ஸ்வ" பற்றி ருசி மற்றும் மகிமை விழிப்படைந்த உடனேயே ஞானம் (அறிவின் உபயோகம்) அடிக்கடி ஸ்வ பக்கம் தானாகவே திரும்பி விடுகிறது.** இந்த ஆத்மானுபூதிக்கு எதிராக எந்த கர்மமும் குறுக்கே வரமுடியாது, எந்த உடனிருப்பவைகளும் இதில் தடைபோட முடியாது, ஐந்தாம் காலம் இதற்கு பாதகமாக இல்லை. யாருக்கு ஆத்ம அனுபவத்தில் விருப்பம் மற்றும் பேரார்வம் இல்லையோ அவர்களே கர்மம், உடனிருப்பவைகள் அல்லது ஐந்தாம் காலம் முதலியவைகளின் மேல் நொண்டிச்சாக்கு சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். ஏனெனில் அனாதி காலமாக நாம் வேலை-அனுபவித்தல்-பிணைப்பு கதைகளை சொல்லக் கேட்டு அவைகளே நமக்கு சுகமாகவும் சுலபமாகவும் இருப்பதாக நம்புகிறோம், இதையே ஒருவருக்கொருவர் உபதேசமும் செய்து கொள்கிறோம். ஆனால் ஆத்மாவின் கதை மிகவும் எளிதாகவும், சுலபமாக புரிந்து கொள்ளும்படியாக இருந்தபோதிலும், நாம் எப்போதும் அதன் கதையை கேட்டதில்லை, கேட்டிருந்தாலும் கூட அதில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆத்மானுபூதி என்ற வலையில் நாம் ஏன் சிக்கிக்கொள்ள வேண்டும்? என்று எண்ணிக் கொண்டு அதற்காக இந்த பூமியில் கிடைக்கும் இன்பத்தையும், புலனின்பங்களை நுகர்வதையும் இழக்க தயாராக இல்லை.

ஆனால் இந்த உலகியல் சுகங்கள் அடுத்த பவத்திற்கு-பிறவிக்கு உடன் வருவதில்லை. சில தினங்களுக்கு முன், நாம் வசிக்கும் இந்த சயான் னில், உங்கள் பள்ளிக்கு கொஞ்சம் தூரத்தில் இருந்த ஐந்தடுக்கு மாளிகை ஒரு சில நொடிகளில் இடிந்து தரை மட்டமானதை பார்ததீர்கள் அல்லவா! ஆயுள் முழுவதும் சம்பாதிக்த சொத்து என்ன வேலை செய்தது? இரண்டரை ஆண்டுகளுக்கு முன் லாத்தூரில் நடந்த பயங்கர பூகம்பத்தில்

ஆயிரக்கணக்கான மக்கள் சில ஷ்ண நேரத்தில் மரண மடைந்தனர், வீடுகள், செல்வம் எல்லாம் நாசமடைந்தன, எல்லாம் மண்ணுக்கு அடியில் சென்றுவிட்டன. வாழ்க்கையும் நம்பிக்கையானதாக இல்லை, சொத்தும் நம்பிக்கையாதாக இல்லை. அதீத்திரிய ஞானம் மற்றும் ஆனந்தம் என்னவோ அடுத்த பிறவிக்குகூட உடன் வருகிறது. ஒருமுறை அதை அனுபவம் செய்த பிறகு படிப்படியாக அது வளர்ந்து கொண்டே போகிறது, மேலும் அது முழுமையடைந்தும் கேவல ஞானமும் அனந்த சுகமும் அடையப் பெறுகிறோம்.

ஆத்மானுபவமே ஜினசாசனமாகும். ஜினபகவான் ஆத்மானுபவத்தையே நமக்கு கற்பித்தார், இதுவே அவருடைய எல்லா பிரவசனங்களின் சாறகும்-பிழிவாகும்-ரசமாகும். ஆத்மானுபவத்தின் ஸ்வரூபத்தை அறிந்ததும், அதை வெளிப்படுத்தி நாமும் முழுமையான, நிலையான, உண்மையான சுகமடைய வேண்டும் என்று எந்த புத்திசாலி மற்றும் விவேகி உயிருக்கும் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை! நீங்களும் இந்த ஆன்மநல மார்கத்தை அவசியம் அங்கீகாரம் செய்து, பிறவி சுழற்சியிலிருந்து விடுதலை அடைவீர்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. நல்லது, இந்த அற உபதேசத்திலுருந்து நான் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்.

கல்யாணமஸ்து !

அன்புடன்,
உங்கள் அம்மா.

ॐ